# தேவனுடைய பொருளாட்சி

WITNESS LEE

# தேவனுடைய பொருளாட்சி

விட்னெஸ் லீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

*Living Stream Ministry*
Anaheim, California • www.lsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
**THE ECONOMY OF GOD**
© 1968 Living Stream Ministry

தேவனுடைய பொருளாட்சி
(Tamil)

By
WITNESS LEE

First Edition, 2006
Mass Distribution Edition, 2010

ISBN: **978-0-7363-4478-4**

Translated in India by
*Amana Literature [Pvt] Ltd.*
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
*Living Stream Ministry*
2431 W. La palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121,Anaheim, CA 92814 U.S.A.

## பொருளடக்கம்

*அத்தியாயம்* *பக்கம்*


| | | |
|---|---|---|
| | முகவுரை | 5 |
| *1* | மூவொரு தேவனுடைய பொருளாட்சி | 7 |
| *2* | சகலத்திற்கும் போதுமான ஆவியானவர் | 19 |
| *3* | தெய்வீக ஆவியின் உறைவிடம் | 31 |
| *4* | உள்வசிக்கும் ஆவியானவருக்குரிய திறவுகோல் | 41 |
| *5* | தேவனுடைய நபர்களும், மனிதனுடைய பகுதிகளும் | 52 |
| *6* | உள்ளான மற்றும் மறைவான பகுதிகள் | 65 |
| *7* | உள்ளான மற்றும் மறைவான பகுதிகளின் செயல்பாடு | 77 |
| *8* | இருதயத்தோடும், ஆவியோடும் இடைப்படுதல் | 91 |
| *9* | ஆத்துமாவுடன் இடைப்படுதல் | 103 |
| *10* | உள்ளான, மறைவான பகுதிகளைத் தோண்டுதல் | 113 |
| *11* | ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணர்தல் | 123 |
| *12* | மனிதனும் இரண்டு விருட்சங்களும் | 135 |
| *13* | சிலுவையும் ஆத்தும வாழ்வும் | 147 |
| *14* | சிலுவையின் கோட்பாடு | 159 |
| *15* | உயிர்த்தெழுதலின் கோட்பாடு | 167 |
| *16* | உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்கள் | 177 |
| *17* | ஜீவனின் ஐக்கியமும், ஜீவனின் உணர்வும் | 187 |
| *18* | ஆவியை இயக்குவதும், ஆவிக்குள் நுழைவதும் | 197 |
| *19* | நம் ஆவியில் உள்ள மறைவான கிறிஸ்து | 209 |
| *20* | முப்பகுதி மனிதனும், சபையும் | 221 |
| *21* | தேவனுடைய வாசஸ்தலம் கட்டப்படுதல் | 233 |
| *22* | தேவனுடைய கட்டிடத்தின் மூடுதிரை | 247 |
| *23* | சபை - மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன் | 257 |
| *24* | தேவனுடைய பொருளாட்சியின் குறியைப்பற்றிய -தரிசனம் | 269 |

# முகவுரை

பின்வரும் அதிகாரங்கள், லாஸ் ஏஞ்செலஸ் நகரத்தில், 1964-ஆம் ஆண்டு நடந்த கோடைகால மாநாட்டில் கொடுக்கப்பட்ட செய்திகளாகும். எல்லா வாசகர்களும் மொழியைக் கவனிப்பதைவிட, இந்தச் செய்திகளில் அறிவிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய உண்மையைக் கவனிக்க வேண்டும் என்று நான் ஆசையாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் புத்தகத்தின் தலைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள "பொருளாட்சி" என்ற சொல் வாசகருக்குச் சற்று நூதனமாகத் தோன்றலாம். கிரேக்க மூலபாடத்தின்படி "தேவனுடைய பொருளாட்சி" என்பது 1 தீமோத்தேயு 1:3-ன் மேற்கோளாகும். "ஒயிகோனோமியா" (oikonomia) என்ற கிரேக்க வார்த்தைதான் "பொருளாட்சி." இந்த வார்த்தை பிரதானமாக (செல்வம், சொத்து, விவகாரங்கள் போன்றவற்றின்) வீட்டுமேலாண்மை, வீட்டுநிர்வாகம், ஒழுங்கமைவு மற்றும் விநியோகம் அல்லது பகிர்ந்தளித்தல் என்பதைக் குறிக்கிறது. தம்மைத்தாமே மனிதனுக்குள் விநியோகிக்க வேண்டும் அல்லது பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய தெய்வீக வியாபாரத்தின் குவிமையம். இதை வலியுறுத்திச்சொல்ல வேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்த வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது.

தேவனுடைய பொருளாட்சிக்காகவே, தெய்வீகப் பகிர்ந்தளித்தலுக்காகவே, பரிசுத்த பங்கிடுதலுக்காகவே தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்களும் இருக்கிறார்கள். பிதா ஊற்றாகக் குமாரனில் ஊனுருக்கொண்டிருக்கிறார். குமாரன் வாய்க்காலாக இருக்கிறார். இவர் ஆவியில் கடத்துதலாக உணர்ந்தறியப்படுகிறார். பிதாவாகிய தேவன் ஆவியாக இருக்கிறார் (யோவான் 4:24). குமாரனாகிய தேவன் கடைசி ஆதாமாக ஜீவன்-தரும் ஆவியானார் (1 கொரி. 15:45). எல்லாமே ஆவியாகிய தேவனில், அதாவது புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ள பரிசுத்த ஆவியில்தான், இருக்கிறது. இன்று இந்தப் பரிசுத்த ஆவி, குமாரனுடைய ஐசுவரியத்தில், பிதாவின் நிறைவோடு, நம் மனித ஆவிக்குள் வந்திருக்கிறார். தேவன் என்னவாக இருக்கிறாரோ, அவையனைத்தையும் நம் ஆள்தத்துவத்துக்குள் உட்செலுத்த வேண்டும் என்பதற்காகவே அவர் அங்கே வாசம்பண்ணுகிறார். இதுதான் தேவனுடைய பொருளாட்சி, தெய்வீகப் பகிர்ந்தளித்தல். தேவன் கிறிஸ்துவில் என்னவாக இருக்கிறாரோ, அவையனைத்தும் நம் ஆள்தத்துவத்துக்குள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே தேவனுடைய பரிசுத்த ஆவி நம் மனித ஆவியில்

வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறார்; இந்த ஆவியே மூவொரு தேவனுடைய மறைபொருளான பகிர்ந்தளித்தலின் குறி மற்றும் குவிமையம். இதுவே ஆவிக்குரிய யுத்தத்தின் யுத்தகளம். தந்திரமான எதிரி தேவனுடைய பரிசுத்தவான்களை, தேவனைத் தேடும் இருதயம் உள்ளவர்களைக்கூட, பல நன்மையான காரியங்களால், சொல்லப்போனால் வேதத்துக்கடுத்த காரியங்க ளால்கூட, தேவனுடைய பொருளாட்சியின் இலக்கிலிருந்து எவ்வளவாய் வழிவிலகச்செய்துகொண்டே இருக்கிறான். தீமோத்தேயுவுக்கு நிருபங்கள் எழுதப்பட்ட காலத்தில் இருந்ததுபோன்ற, இப்பேர்ப்பட்ட குழப்பமான காலத்தில் வாழும் நாம், தெய்வீகப் பொருளாட்சியின் குறியைத் தவறவிட்டு விடாதபடிக்கு நம் ஆவியிலுள்ள சகலத்தையும் உள்ளடக்கிய தெய்வீக ஆவிக்கு நம் கவனத்தை நேராக்கி, அதில் நிலைகுத்திவிட வேண்டும். ஆகையால் தேவனுடைய ஆவியைத் தெளிவாக உணர்ந்துகொள்ள, நம் ஆவிக்குத் திரும்புவதும், அதில் நிலைத்திருப்பதும், அதைப் பயிற்சிசெய்வதும் இன்று அடிப்படை அவசியமாயிருக்கிறது. இப்படிச் செய்வதினால்தான் கிறிஸ்துவின் ஆராயமுடியாத ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்ந்து, தேவனுடைய சகல சம்பூரணத்திலும் நாம் பங்குபெறலாம். இதை உணர்ந்துகொள்ளவும், நம் அன்றாட வாழ்விலும், நாம் செய்யும் எல்லாவற்றிலும் இதை நடைமுறைப்படுத்தவும், கர்த்தர்தாமே நமக்குக் கிருபை அருள்வாராக.

நேர்த்தியாகச் செயல்படுத்துவதற்கும், நல்ல பலன்பெறு வதற்கும், இந்தப் புத்தகத்திலுள்ள எல்லாச் செய்திகளையும் ஜெப ஆவியுடன் வாசிக்கவேண்டியது அவசியம். ஒவ்வொரு அதிகாரத் திலும் மேற்கோள் காட்டப்பட்டுள்ள எல்லா வேதவாக்கியங்க ளையும் ஜெபித்து வாசிப்பதும், எப்போதும் வாசிக்கும்போது ஜெபமும் இணைந்து செல்வதும் மிகுந்த நன்மை பயக்கும். வாசகர்கள் இந்தச் செய்திகளையெல்லாம் ஆவியில் வாசிக்கும் போது, கர்த்தருடைய பிரசன்னத்தை அவருடைய இனிமையான அபிஷேகத்தோடுகூட உள்ளே உணர்ந்துகொள்வார்களாக.

*விட்னெஸ் லீ*
*லாஸ் ஏஞ்செலஸ், கலிபோர்னியா, அ. ஐ. நா.*
*ஜனவரி 11, 1968*

## அத்தியாயம் ஒன்று

# மூவொரு தேவனுடைய பொருளாட்சி

தேவனுடைய பொருளாட்சியைப்பற்றி சில காரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதே நான் இங்கே கொடுத்துக் கொண்டிருக்கும் செய்திகளில் என் பாரமாகும். *1 தீமோத்தேயு முதல் அதிகாரத்தில் 3-ஆம் வசனத்திலிருந்து 7-ஆம் வசனம்வரை* நாம் வாசிப்போம்: "வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும், விசுவாசத்தினால் விளங்கும் தெய்வீக பக்திவிருத்திக்கு ஏதுவாயிராமல், தர்க்கங்களுக்கு ஏதுவாயிருக்கிற கட்டுக்கதைகளையும், முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும், நீ சிலருக்குக் கட்டளையிடும்பொருட்டாக... (தெய்வீக பக்திவிருத்தி என்பது பொதுமொழிபெயர்ப்பில் *'கடவுளின் திட்டம்'* எனவும், கிரேக்க மொழியில் *'தேவனுடைய பொருளாட்சி'* எனவும் உள்ளது)... கற்பனையின் பொருள் என்னவெனில் சுத்தமான இருதயத்திலும், நல்மனச்சாட்சியிலும், மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே. இவைகளைச் சிலர் நோக்காமல் (கிரேக்க மொழியில், *'குறியைத் தவறவிட்டு'* என உள்ளது) வீண்பேச்சுக்கு இடங்கொடுத்து, விலகிப்போனார்கள்... தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள்..."

புதிய ஏற்பாட்டின் மூலபாஷையான கிரேக்க மொழியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுபோல, இந்த வசனங்களில் இரண்டு மிக முக்கியமான சொற்றொடர்கள் அடங்கியுள்ளன; ஒன்று "தேவனுடைய பொருளாட்சி," மற்றொன்று "குறியைத் தவறவிடுதல்." அப்போஸ்தலனாகிய பவுல், தேவனுடைய பொருளாட்சிக்கான பொறுப்பைச் சுமக்குமாறுத் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். அவர் தன் ஆவிக்குரிய மகனாகிய தீமோத்தேயுவை இந்தப் பொருளாட்சியில் பயிற்றுவித்தார். அநேகக் கிறிஸ்தவர்கள், மூலவழியை விட்டுவிலகி அலைமோதிக் கொண்டிருந்த காலத்தில்தான் பவுல் இந்த நிருபத்தைத் தீமோத்தேயுவுக்கு எழுதினார் என்பது உன்னிப்பாகக் கவனிக்கத் தக்கது. அவர்கள் தேவனுடைய பொருளாட்சியின் மையக்குறியைத் தவறவிட்டு விட்டு, வேறு எதிலோ கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள்.

## தேவனுடைய பொருளாட்சியிலிருந்து திசைதிருப்பங்கள்

வரலாற்றின்படி மேலோங்கிநின்ற இரண்டு கொள்கைகள், ஆதிக் கிறிஸ்தவர்களின் கவனத்தைச் சரியான பாதையிலிருந்து திசைதிருப்பின; ஒன்று யூதமதம், மற்றொன்று தத்துவவாதம். கிறிஸ்தவர்கள் தேவனுடைய பொருளாட்சியின் வழிப்பாதையில் கர்த்தரைப் பின்பற்றிச்செல்லாதபடி யூதமதவாதிகள் தங்கள் சமய உபதேசங்களாலும், சடங்காச்சாரங்களாலும், தத்துவவாதிகள் தங்கள் தத்துவங்களாலும், தடுத்துப் பின்னடையச்செய்தார்கள். யூதமதத்திலும், தத்துவவாதத்திலும் இருந்த நல்ல காரியங்களே ஆதிக் கிறிஸ்தவர்களைப் பக்கவழிக்குத் திருப்பினதாகத் தோன்றுகிறது. மற்ற காரியங்களுடன் ஒப்பிடும்போது, இந்தக் காரியங்கள் நல்லவைகளாக இல்லாதிருந்தால் விசுவாசிகள் தேவனுடைய பொருளாட்சியின் குறியைத் தவறவிடச்செய்யும் அளவுக்கு அவை மேலோங்கியிருந்திருக்கமுடியாது. எடுத்துக் காட்டாக, யூதமவாதிகள் பழைய ஏற்பாட்டிலுள்ள மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஆணித்தரமாக வலியுறுத்தினார்கள். நிச்சயமாக நியாயப்பிரமாணத்தில் தவறு ஏதுமில்லை. மாறாக எந்தக் கேள்விக்கும் இடமில்லாமல் அது சரியானதுதான், நல்லதுதான், தேவனாலேயே நேரடியாகக் கொடுக்கப்பட்டதுதான். ஆனாலும் நியாயப்பிரமாணம் தன்னில்தானே தேவனுடைய பொருளாட்சியின் குறியோடு தொடர்புடையது அல்ல. மனிதனுடைய கண்ணோட்டத்தில் தத்துவவாதம்கூட நல்ல அடிப்படைக் கோட்பாடுகளை உடையதுதான். உண்மையில் மனித நாகரிகத்தின் மிகச்சிறந்த கண்டுபிடிப்புகளில் தத்துவவாதமும் ஒன்று; இது தேவனை அறியாத அஞ்ஞானிகளுக்கு ஒருவகையில் உதவியாகவே இருந்தது. ஆனால் தத்துவவாதிகள் தங்கள் தத்துவத்தைச் சபைக்குள் கொண்டுவந்து ஆதிக் கிறிஸ்தவர்களின் கவனத்தைத் தேவனுடைய பொருளாட்சியின் குறியிலிருந்து திசைதிருப்ப முயன்றார்கள்.

இன்று நம்மைக் குழப்புவதற்கு யூதமதவாதிகளோ, தத்துவவாதிகளோ நம்மிடையே இல்லை. ஆனால் நம் கவனத்தைத் திருப்புவதற்கு அதிகமான காரியங்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. விசுவாசிகள் சரியான தடத்தில் கர்த்தரைப் பின்பற்றுவதிலிருந்து தங்கள் கவனத்தை வேறு வழியில் திருப்புவதற்கு நன்மையாய்த் தோன்றுகிற காரியங்களையே தந்திரக்காரனாகிய சாத்தான் சுமார் 20 நூற்றாண்டுகளாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறான். இதை அவன் ஒருபோதும் நிறுத்தவேயில்லை. கர்த்தருடைய பிள்ளைகளைத் தேவனுடைய பொருளாட்சியின் குறியிலிருந்து வேறு பலதிசைகளிலும் இழுப்பதற்குக் கிறிஸ்தவத்திலுள்ள நன்மையான காரியங்களைக்

கூடப் பயன்படுத்துவதில் எதிரி உறுதியாக இருக்கிறான். இதை தேவனோடு கொஞ்சநேரம் செலவழித்தால் நாம் உணர்ந்து கொள்வோம். தேவனைத் தேடுகிற கிறிஸ்தவர்களைக்கூட தேவனுடைய பொருளாட்சியின் வழியிலிருந்து வழிவிலகச்செய்யும் அளவுக்கு அவன் அவர்கள்மேல் ஆதிக்கம்செலுத்துகிறான். இதற்காக மதசம்பந்தமான காரியங்களையும், வேதத்துக்கடுத்த காரியங்களையும்கூட இந்தத் தந்திரக்கார எதிரி பயன்படுத்துகிறான். இந்த விஷயத்தைக் கடந்த சிலவருடங்களில் இந்தத் தேசத்திலுள்ள பல மாவட்டங்கள் வழியாக நான் பயணம்செய்த போது உணர்ந்துகொண்டேன்.

## தேவனுடைய பொருளாட்சியின் வரையறை

தேவனுடைய பொருளாட்சி என்றால் என்ன? அறுபத்தாறு புத்தகங்கள் அடங்கிய வேதாகமத்தில் பலவிதமான போதகங்கள் அடங்கியுள்ளன. ஆனால் வேதவாக்கியங்களை ஆவிக்குரிய தீர்க்கமான கண்ணுடன் முழுமையாகவும், கவனமாகவும் ஆராய்ந்துபார்த்தால் *தம்மையே மனுஷிகத்துக்குள் பகிர்ந்தளிக்க வேண்டும்* என்ற தேவனுடைய திட்டம்தான் தேவனுடைய பொருளாட்சி என்று நாம் உணர்ந்துகொள்வோம். தேவனுடைய பொருளாட்சி என்பது தேவனுடைய பகிர்ந்தளித்தலாகும். அதன் பொருள், தேவன் தம்மைத்தாமே மனுக்குலத்துக்குள் பகிர்ந்தளிப்பதே. 'dispensation' (பகிர்ந்தளித்தல்) என்ற வார்த்தை கிறிஸ்தவத்தில் தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது வருந்தத்தக்கது. இதன் வரையறை சற்றேக்குறைய 'economy' (பொருளாட்சி) என்ற கிரேக்க வார்த்தைதான். நிர்வாக ஒழுங்குமுறை, அரசாங்கத்துக்குரிய மேலாண்மை, தேவதிட்டத்தைப் பகிர்ந்தளிக்கிற, விநியோகிக்கிற உக்கிராணவிசாரிப்பு. இதுவே அதன் பொருள். இந்தத் தெய்வீகப் பங்கிடுதலில் சர்வவல்லமையுள்ள, சகலத்தையும் உள்ளடக்கிய தேவன் *தம்மைத்தவிர* வேறொன்றையும் நமக்குள் பகிர்ந்தளிக்க விரும்பவில்லை. இதை நம்மில் ஆழமாகப் பதியச்செய்வதற்காக இந்தக் காரியத்தைப் பலதடவை திரும்பத்திரும்பச் சொல்லவேண்டியது அவசியமாகும்.

தேவன் மிகப்பெரிய செல்வந்தர். இவர் ஏராளமான மூலதனம் வைத்துள்ள ஒரு வெற்றிகரமான தொழிலதிபரைப் போன்றவர். தேவனுக்கு இப்பிரபஞ்சத்தில் ஒரு தொழில் உண்டு. அவருடைய பரந்துவிரிந்த செல்வம்தான் அவருடைய மூலதனம். அவரிடத்தில் எண்ணமுடியாத நூறு கோடிகள், எத்தனை நூறு கோடிகள், உள்ளன என்று நம்மால் உணர்ந்துகொள்ள முடியாது. *அவரேதாம்* அவருடைய மூலதனம். இந்த மூலதனத்தை வைத்து 'மாபெரும் உற்பத்தி' என்ற அளவில் அவர் *தம்மையே* "உற்பத்திசெய்ய"

உத்தேசித்துள்ளார். அவரே தொழிலதிபர், மூலதனம் மற்றும் உற்பத்திப்பொருள். மாபெரும் அளவில் உற்பத்திசெய்து, அநேக மக்களுக்குத் தம்மையே இலவசமாய்ப் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதுதான் அவருடைய நோக்கம். ஆகையால் தம்மைத்தாமே மனுஷிகத்துக்குள் கொண்டுவருவதற்கு, தேவனுக்கு இப்பேர்ப்பட்ட தெய்வீக ஒழுங்குமுறை, தெய்வீக நிர்வாகம், தெய்வீகப் பகிர்ந்தளித்தல், தெய்வீகப் பொருளாட்சி, தேவைப்படுகிறது.

நாம் இதைப்பற்றி இன்னும் அதிகத் திட்டவட்டமாகப் பேசலாம். தம்மையே நமக்குள் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கம் என்று நாம் இப்போது அறிந்திருக்கிறோம். தேவன் எதைப் பகிர்ந்தளிக்கிறார் என்று தெரிந்துகொள்ள வேண்டுமானால், அவர் என்னவாக இருக்கிறார் என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், தேவனுடைய சாராம்சம் என்ன? ஒரு தொழிலதிபர் ஒரு பொருளை உற்பத்திசெய்யத் திட்டமிடும்போது, முதன்முதலாக, தாம் உற்பத்திசெய்யப்போகிற பொருளின் சாராம்சத்தை அல்லது அதின் அடிப்படை ஆக்கக்கூறுகளைப்பற்றித் தெளிவாக இருக்க வேண்டும். தேவனுடைய சாராம்சம் ஆவி (யோவான் 4:24). சர்வவல்லமையுள்ள, சகலத்தையும் உள்ளடக்கிய, உலகளாவிய தேவனின் சாரம் ஆவிதான். தேவனே உற்பத்தியாளர்; மேலும் அவர் தம்மையே 'உற்பத்திப்பொருளாக' மறுஉற்பத்திசெய்ய உத்தேசித்துள்ளார்; ஆகையால் அவர் எதை மறுஉற்பத்திசெய்தாலும், அதுவும் அவருடைய உண்மையான சாராம்சமாகிய ஆவியாகத்தான் இருக்கவேண்டும்.

## தேவனுடைய பொருளாட்சியின் படிகள்

தேவனுடைய நோக்கத்தையும், அவர் எதைப் பகிர்ந்தளிக்கிறார் என்றும் நாம் பார்த்தோம். தேவன் தம் பொருளாட்சியின்மூலம் எப்படிப் பகிர்ந்தளிக்கப்படுகிறார் என்று இப்போது நாம் அறிந்துகொள்ள வேண்டும். வேறுவார்த்தைகளில் சொல்வதானால், ஆவியானவரையே தேவன் மனிதனுக்குள் பகிர்ந்தளிக்கிறார். ஆனால் எந்த வகையில் அவர் இதைச்செய்கிறார் என்று நாம் இப்போது பார்க்க வேண்டும். திரியேகத்துவத்தின்மூலமாகத்தான் அவர் இதைச் செய்கிறார். மூவொரு தேவனாகிய பிதா குமாரன் பரிசுத்த ஆவியே தேவத்துவத்தின் மெய்யான பொருளாட்சி. கிறிஸ்தவத்தில் கடந்த நூற்றாண்டுகளில், திரியேகத்துவத்தைப் பற்றிப் பலவிதமான போதனைகள் இருந்திருக்கின்றன. ஆனால் திரியேகத்துவத்தைத் தெய்வீகப் பொருளாட்சியுடன் தொடர்புபடுத்தாவிட்டால், அதைப் போதுமான அளவுக்கு நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ள இயலாது. தேவனுடைய பொருளாட்சி

யின் அபிவிருத்திக்குத் தேவத்துவத்தின் மூன்று நபர்களும் ஏன் தேவைப்படுகிறார்கள்? பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூன்று வித்தியாசமான தேவர்கள் அல்லரென்றும், மாறாக ஒரே தேவன் மூன்று நபர்களில் வெளியாக்கப்படுகிறார் என்றும் நாம் அறிவோம். எனினும் தேவத்துவத்தில் மூன்று நபர்கள் இருப்பதற்கு என்ன நோக்கம்? ஏன் பிதாவாகிய தேவன்? ஏன் குமாரனாகிய தேவன்? ஏன் பரிசுத்த ஆவியாகிய தேவன்? ஏனெனில் தேவனுடைய ஆவியை நமக்குள் பகிர்ந்தளிக்கத் தேவையான முக்கியமான வழிமுறைகள் திரியேகத்துவத்தின்மூலமாகத்தான் கொடுக்கப்பட முடியும்.

*2 கொரிந்தியர் 13:14* திரியேகத்துவத்திலுள்ள தேவனுடைய பொருளாட்சியின் படிகளைக் காண்பிக்கிறது. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக." இங்கே குமாரனின் கிருபையும், பிதாவின் அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் இருக்கின்றன. இவை என்ன? மூன்று வெவ்வேறான தேவர்களா? அன்பு, கிருபை, ஐக்கியம் ஆகியவை மூன்று வெவ்வேறான காரியங்களா? இல்லை. அன்பு, கிருபை, ஐக்கியம் ஆகியவை மூன்று நிலைகளில் இருக்கிற ஒரே மூலப்பொருளே; அன்பு ஊற்று; கிருபை அன்பின் வெளியாக்கம்; ஐக்கியம் கிருபையிலுள்ள இந்த அன்பின் கடத்துதல். இதுபோல பிதாவும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும் மூன்று நபர்களில் வெளியாக்கப்பட்டுள்ள ஒரே தேவன். பிதா 'ஊற்று'; கிறிஸ்து தேவனின் 'வெளியாக்கம்.' பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்துவிலுள்ள தேவனை, மனிதனுக்குள் கொண்டுவருகிற 'கடத்துதல்.' இவ்வாறு திரியேகத்துவத்திலுள்ள மூன்று நபர்களும் தேவனுடைய பொருளாட்சியின் போக்கில் அடுத்தடுத்துள்ள மூன்று படிகளாக மாறிவிடுகிறார்கள். இந்த மூன்று நிலைகளும் இல்லாமல் தேவனுடைய 'சாரம்' மனிதனுக்குள் ஒருபோதும் பகிர்ந்தளிக்கப்பட முடியாது. தேவனுடைய பொருளாட்சி பிதாவினிடத்திலிருந்து, குமாரனில், பரிசுத்த ஆவியின்மூலம் வளர்ந்து முன்னேறுகிறது.

## (1) பிதாவிலிருந்து

பிதாவாகிய தேவனே காரியங்களனைத்திற்கும் உலகளாவிய ஊற்று. இவர் காணமுடியாதவரும், சேரமுடியாதவருமாயிருக்கிறார். சேரமுடியாத ஒளியில் வாசம்பண்ணும் பிதாவாகிய தேவன் நமக்குள்ளே எப்படி இருக்க முடியும்? *(1 தீமோ. 6:16).* காணமுடியாத பிதாவை நாம் எப்படிப் பார்க்கமுடியும்? தேவன் பிதாவாக மட்டும் இருந்திருந்தால் இவர் அணுகமுடியாதவரும், மனிதனுக்குள் பகிர்ந்தளிக்கப்பட முடியாதவருமாகவே இருந்திருப்

பார். ஆனால் அவர் தேவனுடைய பொருளாட்சியின் தெய்வீக ஏற்பாட்டின்மூலம் மனிதனுக்குச் சுலபமாக கிடைக்கும் வகையில் தம்மையே கொடுக்கத் திரியேகத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தம் குமாரனுக்குள் தம்மை வைத்தார். பிதாவின் சகல பரிபூரணமும் குமாரனில் வாசமாயிருக்கிறது (கொலோ. 1:19; 2:9), குமாரன்மூலமாகவே வெளியாக்கப்படுகிறது (யோவான் 1:18). பிதா, எல்லாவற்றுக்கும் வற்றாத ஊற்றாகக் குமாரனில் ஊனுருக்கொண்டிருக்கிறார். அறிவுக்கெட்டாத தேவன், தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவில் இப்போது வெளியாக்கப்படுகிறார் (யோவான் 1:1). அதரிசனமான தேவன் தேவனுடைய தற்சுரூபமாகிய கிறிஸ்துவில்தான் வெளிப்படுத்தப் படுகிறார் (கொலோ. 1:15). எனவே குமாரனும் பிதாவும் ஒன்றாகவே இருக்கிறார்கள் (யோவான் 10:30). மேலும் குமாரனே பிதா என அழைக்கப்படுகிறார் (ஏசா. 9:6).

முன்பு பிதாவைத் தொடர்புகொள்வது மனிதனுக்குச் சாத்தியமற்றதாக இருந்தது. அவர் தனித்தன்மைவாய்ந்த தேவனாக இருந்தார். அவருடைய சுபாவமும் தனித்தன்மைவாய்ந்த தெய்வீக மாகவே இருந்தது. தேவனுக்கும் மனிதனுக்குமிடையே இருந்த இடைவெளியை இணைப்பதற்குப் பிதாவினிடத்தில் எதுவுமே இருந்ததில்லை. ஆனால் இப்போதோ அவர் குமாரனுக்குள் ஊனுருக்கொண்டதோடு மட்டுமின்றி, மனித சுபாவத்திலேயே அவதரித்துவிட்டார். குமாரனில் தம் தெய்வீகத்தை மனுஷிகத்தோடு இணைப்பதும் பிதாவுக்குப் பிரியமாக இருந்தது. நெருங்கமுடியாத பிதா, குமாரனுடைய மனிதமாம்சமாகுதல்மூலம், இப்போது மனிதன் நெருங்கத்தக்கவராக மாறிவிடுகிறார். இதனால் மனிதன் இப்போது குமாரன்மூலம் பிதாவைப் பார்க்கமுடியும்; பிதாவைத் தொட முடியும்; பிதாவுடன் ஐக்கியம்கொள்ள முடியும்.

ஒரு வெள்ளைக் கைக்குட்டையை நீலச் சாயத்துக்குள் தோய்ப்பதின்மூலம் இந்த உறவை விளக்கிக்காட்டலாம். பிதாவின் தெய்வீகத்தை இந்த வெள்ளைக் கைக்குட்டைக்கு ஒப்பிடலாம். நீலச் சாயத்துக்குள் தோய்த்து எடுக்கப்பட்ட இந்த வெள்ளைக் கைக்குட்டை, மனுஷிகத்தில் மாம்சவுருவெடுத்த குமாரனிலுள்ள பிதாவுக்கு அடையாளம். இந்த வெள்ளைக் கைக்குட்டை இப்போது நீல நிறமாகிவிட்டது. கைக்குட்டைக்கு நீலநிறம் சேர்க்கப்பட்டது போலவே, தெய்வீக சுபாவத்துடன் மனித சுபாவமும் சேர்க்கப் பட்டது. இவ்வாறு ஒரு காலத்தில் தனித்தனியாகயிருந்த சுபாவங் கள் இப்போது ஒன்றாகிவிட்டன. ஆகையால் தாமே ஒரு மனிதனாகக் குமாரனில் ஊனுருக்கொண்டதும், மனிதமாம்ச மானதுமே, தேவன் தம்மையே மனிதனுக்குள் பகிர்ந்தளிப்பதின் முதல் கட்டமாகும். இவ்வாறு மனிதனில் அவர் தம்மையே

மறுஉற்பத்தி செய்துவிட்டார்.

## (2) குமாரனில்

திரியேகத்துவத்தின் இரண்டாம் ஆளாகிய தேவனுடைய குமாரன்மூலம் தேவனை மனிதனுக்குள் கொண்டுவருவதே இரண்டாவது படி. தேவனுடைய பொருளாட்சியின் இரண்டாவது கட்டத்தைப் புரிந்துகொள்ள வேண்டுமானால், கிறிஸ்து என்னவாக இருக்கிறார் என்று நாம் தெரிந்துகொண்டாக வேண்டும். கிறிஸ்துவில் என்னென்ன மூலப்பொருட்கள் இருக்கின்றன? கிறிஸ்துவைக் கட்டியமைக்க என்னென்ன தனிப்பொருட்கள் சேர்க்கப்பட்டுள்ளன?

இந்த அதிசயமான நபருக்குள் ஏழு அடிப்படை மூலப்பொருட்கள் நுழைந்துள்ளன. அவை யாவும் அவருடைய வரலாற்றின்மூலம் சேர்க்கப்பட்டன. முதலாவது, கிறிஸ்து தேவனுடைய தெய்வீக ஊனுருவாக இருக்கிறார். கிறிஸ்துவிலுள்ள இந்த முதல் மூலப்பொருள், தேவனுடைய தெய்வீக சாரமும், சுபாவமும் ஆகும்.

இரண்டாவது மூலப்பொருளாகிய அவருடைய மனிதமாம்சமாகுதல் என்பது அவருடைய தெய்வசுபாவம் மனிதசுபாவத்துடன் ஒன்றாகக் கலந்திணைவதாகும். அவர் தம் மனிதமாம்சமாகுதல் மூலம், தேவனை மனிதனுக்குள் கொண்டுவந்து, தேவனுடைய தெய்வீக சாரத்தை மனுஷிகத்தோடு கலந்திணைத்துவிட்டார். கிறிஸ்துவில் தேவன் மட்டுமின்றி, மனிதனும் இருக்கிறார்.

அவருடைய தெய்வீக சுபாவத்தோடும், மனித சுபாவத்தோடும் சேர்க்கப்பட்ட மூன்றாவது மூலப்பொருள் அவருடைய மனித வாழ்க்கை. இந்த மகிமையான தேவ-மனிதர். இந்தப் பூமியில் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்தார். நாம் நம் அன்றாட மனித வாழ்க்கையில் அனுபவிக்கிற, பொதுவான சாதாரணமான காரியங்கள் அனைத்தையும் அவரும் அனுபவித்தார். அவர் தேவனுடைய குமாரன் என்று வலியுறுத்திக்கூறும் யோவானுடைய சுவிசேஷமே, அவர்களைப்பாயிருந்தார், பசியாயிருந்தார், தாகமாயிருந்தார், அழுதார் என்றும் கூறுகிறது. அவருடைய மானிடப் பாடுகள் அவருடைய அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாகவே இருந்தன. அவருடைய வாழ்வில் பூமிக்குரிய அநேகப் பிரச்சினைகள், துன்பங்கள், பாடுகள், உபத்திரவங்கள் இருந்தன.

அவருடைய மரண அனுபவம்தான் நான்காவது மூலப்பொருள். அவர் மரணத்துக்குள் சென்றார். ஆனால் அவர் மரணத்துக்குள் காலடி வைத்தது மட்டுமல்ல, மேலும் மரணத்தினூடாய்க் கடந்துசென்றார். இது மிகவும் வீரியமுள்ள ஒரு மரணத்தை

விளைவித்தது. ஆதாமின் மரணம் பயங்கரமானது. மிகவும் குழப்பமானது. ஆனால் கிறிஸ்துவின் மரணமோ அதிசயமானது. வீரியமுள்ளது. ஆதாமின் மரணம் நம்மை மரணத்துக்கு அடிமையாக்கிற்று. இப்படியிருக்கக் கிறிஸ்துவின் மரணமோ, மரணத்திலிருந்து நம்மை விடுதலையாக்கிற்று. ஆதாமின் வீழ்ச்சி நமக்குள் பலதீமையான மூலக்கூறுகளைக் கொண்டுவந்தது. ஆனால் கிறிஸ்துவின் வல்லமையான மரணம், ஆதாமுடைய சுபாவத்தின் சகல மூலக்கூறுகளையும் கொலைசெய்வதற்குக் "கொல்லும் வல்லமையாக" நமக்குள் இருக்கிறது.

ஆகையால் கிறிஸ்துவில், தெய்வீக சுபாவம், மனித சுபாவம், பாடுகளோடுகூடிய அன்றாட மனித வாழ்க்கை, வீரியமுள்ள அவருடைய மரணம் ஆகிய அனைத்தும் இருக்கின்றன. இது மட்டுமல்ல. கிறிஸ்துவில், கூடுதலாக மேலும் மூன்று மூலப் பொருட்கள் உள்ளன. ஐந்தாவது மூலப்பொருள் அவருடைய உயிர்த்தெழுதல். கிறிஸ்து தம் உயிர்த்தெழுதலுக்குப்பின், மறுபடியும் தேவனாக மாறிவிடுவதற்காகத் தம் மனிதத்துவத்தைத் தள்ளிவிடவில்லை. கிறிஸ்து இன்னும் மனிதனாக இருக்கிறார்! மனிதன் என்றமுறையில், அவருடைய மனுஷிகத்துடன் கலந்திணைந்த உயிர்த்தெழுந்த ஜீவன் அவரிடம் இன்னொரு மூலப்பொருளாக இருக்கிறது.

கிறிஸ்துவிலுள்ள அவருடைய ஆறாவது மூலப்பொருள், அவருடைய 'பரமேறுதல்.' அவர் பரலோகத்துக்கு ஏறிச்சென்றதால் சகல எதிரிகள், துரைத்தனங்கள், வல்லமைகள், ஆளுகைகள், அதிகாரங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும்மேலே ஏறிச்சென்று அவைகளின்மேல் வெற்றிசிறந்தார். எல்லாமே அவருடைய பாதங்களின்கீழ் இருக்கின்றன. ஆகையால் அவருடைய பரமேறுதலின் எல்லைகடந்த வல்லமையும் அவருடன் கலந்திணைந்திருக்கிறது.

கடைசியாக, கிறிஸ்துவிலுள்ள ஏழாவது மூலப்பொருள் அவர் சிங்காசனத்திலமர்தல். தெய்வீக சுபாவத்தையுடைய மனிதராகிய கிறிஸ்து, அண்ட சராசரங்களனைத்துக்கும் தலையாக உயர்த்தப்பட்டு, மூன்றாம் வானத்தில் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அவர் கர்த்தாதி கர்த்தாவும், ராஜாதி ராஜாவுமாகப் பரலோகங்களில் வீற்றிருக்கிறார்.

கிறிஸ்துவிலுள்ள அதிசயமான ஏழு மூலப்பொருட்களையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தெய்வீக சுபாவம், மனித சுபாவம், பூமிக்குரிய பாடுகளோடுகூடிய அன்றாட மனித வாழ்க்கை, அவருடைய மரணத்தின் வீரியம், உயிர்த்தெழுதலின் வல்லமை, அவருடைய பரமேறுதலின் எல்லைகடந்த வல்லமை, சிங்காசனத்திலமர்தல். இந்த மூலப்பொருட்களனைத்தும் இந்த

அற்புதமான கிறிஸ்துவுக்குள் கலந்திணைந்திருக்கின்றன.

### (3) ஆவியானவர்மூலம்

ஆயினும், தேவன் குமாரன்மூலம் நமக்குள் வரமுடியாது. அவருடைய பொருளாட்சியின் முதல் கட்டத்தில் பிதா தம்மைக் குமாரனில் வைத்தார். குமாரன் ஏழு மூலப்பொருட்களைத் தமக்குள்ளே கலந்திணைத்திருக்கிறார். ஆனால் தேவன் தம்மைத்தாமே மனிதனுக்குள் பகிர்ந்தளிக்க, மூன்றாவதும் முடிவானதுமான வேறொரு நிலை நமக்கு இன்னும் தேவைப்படுகிறது. முதல்படி, பிதா குமாரனில் தமக்கு ஊனுருக்கொண்டார்; இரண்டாவதுபடி, அதிசயமான ஏழு மூலப்பொருட்களைத் தமக்குள்ளே கலந்திணைத்துக்கொள்ள, குமாரன் மனிதனாக மாம்சமானார்; மூன்றாவதுபடி, பிதாவும் குமாரனும் இப்போது ஆவியானவரில் இருக்கிறார்கள். பிதாவில் இருக்கும் அனைத்தும் குமாரனில் இருக்கின்றன; கிறிஸ்துவிலுள்ள எல்லா மூலப்பொருட்களை உள்ளடக்கிய பிதாவும் குமாரனும் ஆவியானவருக்குள் கொண்டுவரப்படுகிறார்கள்.

கர்த்தருடைய பரமேறுதலுக்குப்பின், பரிசுத்த ஆவியானவர் பழைய ஏற்பாட்டுக் காலங்களிலிருந்த தேவ ஆவியைப் போன்றவரல்லர். பழையஏற்பாட்டிலுள்ள தேவ ஆவியானவரிடம் ஒரேவொரு மூலப்பொருள்தான் இருந்தது. அது தேவனுடைய தெய்வீக சுபாவம். அவர் தெய்வீக ஆவியாக இருந்தபோது, அவரிடம் மனித சுபாவம், அன்றாட மனித வாழ்க்கை, மரணத்தின் வீரியம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், சிங்காசனத்திலமர்தல் ஆகிய மூலப்பொருட்கள் இருக்கவில்லை. ஆனால் இன்று புதிய ஏற்பாட்டுப் பொருளாட்சியின்கீழ், கிறிஸ்துவின் ஏழு மூலப்பொருட்களும் ஆவியானவரில் வைக்கப்பட்டுள்ளன. இப்படியிருப்பதால் சகலத்தையும் உள்ளடக்கிய ஆவியானவர் நமக்குள்ளும் நம்மேலும் வந்துவிட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அவர் நம்மில் இருக்கிறார்; நாம் அவரில் இருக்கிறோம். இதுதான் தேவன் மனிதனுடன் உண்மையாகவே கலந்திணைவதாகும். இதை நாம் எந்த நேரத்திலும் அனுபவிக்கலாம். நாம் உள்ளும் புறமும் பரிசுத்த ஆவியான வருடன் கலந்திணைந்திருக்கிறோம்.

பரிசுத்த ஆவி என்றால் என்ன? அவர் சத்திய ஆவியானவர் (யோவான் 15:26). ஆனால் சத்தியம் என்றால் என்ன? ‘நிஜம்’ என்பதுதான் ‘சத்தியம்’ என்ற கிரேக்க வார்த்தையின் பொருள். ஆகையால் பரிசுத்த ஆவி, நிஜத்தின் ஆவியாக இருக்கிறார்; அவரே கிறிஸ்துவின் முழுமையான நிஜம். தேவன் கிறிஸ்துவில் ஊனுருக்கொண்டுள்ளதைப்போலவே, கிறிஸ்துவும் பரிசுத்த

ஆவியாகிய அதிசயமான நபரில் உணர்ந்துகொள்ளப்படுகிறார். கிறிஸ்து தேவனிலிருந்து பிரிந்திருக்கவில்லை. அப்படியே ஆவியானவரும் கிறிஸ்துவிலிருந்து பிரிந்திருக்கவில்லை. கிறிஸ்து வெளியாக்கப்பட்ட தேவன்; ஆவியானவர் நிஜத்தில் உணரப்படும் கிறிஸ்து.

"இப்போது கர்த்தரே ஆவியானவர்" *(2 கொரி. 3:17)*. பரிசுத்த ஆவி கிறிஸ்துவிலிருந்து பிரிந்திருக்கவில்லை என்பதையே இந்த வசனம் நிரூபிக்கிறது. கிறிஸ்துவே கர்த்தராயிருக்கிறார்; அவரே ஆவியானவர் என்றும் குறிப்பிடப்படுகிறார். "கடைசி ஆதாம் ஜீவன்-தருகிற ஆவியானார்" *(1 கொரி. 15:45)*. கடைசி ஆதாமாகிய கிறிஸ்துவே ஆவியானவர் என்று வேதவாக்கியங்கள் மறுபடியும் சுட்டிக்காட்டுகின்றன. இந்த ஜீவன்-தருகிற ஆவியானவர் பரிசுத்த ஆவியே என்பதை நாம் ஒப்புக்கொண்டாக வேண்டும்.

மேலும் பிதாவாகிய தேவனும் ஆவியாகத்தானிருக்கிறார் *(யோவான் 4:24)*. ஆகையால் தேவத்துவத்தின் மூன்று நபர்களுமே ஆவியாக இருக்கிறார்கள். பிதாவாகிய தேவன் ஆவியாக இல்லையென்றால், அவர் நம்மில் எப்படி இருக்கமுடியும்? நாம் எப்படி அவரைத் தொடர்புகொள்ள முடியும்? மேலும் குமாரனாகிய தேவனும் ஆவியாக இல்லையென்றால், அவர் எப்படி நம்மில் இருக்க முடியும்? அவரை நாம் எப்படி அனுபவிக்க முடியும்? பிதாவும் குமாரனும் ஆவியாகயிருப்பதால் நாம் பிதாவைச் சுலபமாகத் தொடர்புகொள்ளலாம்; கிறிஸ்துவை எளிதாக அனுபவிக்கலாம்.

பின்வரும் வசனங்களைக் கவனியுங்கள்: "எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு... எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" *(எபே. 4:6)*. "இயேசுகிறிஸ்து உங்களுக்குள்ளே இருக்கிறார்" *(2 கொரி. 13:5)*. "அவருடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறது" *(ரோமர் 8:11)*. இந்த மூன்று வசனங்களும் பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய தேவன் நம்மில் இருக்கிறார் என்று வெளிப்படுத்து கின்றன. அப்படியானால் நம்மில் எத்தனை நபர்கள் இருக்கிறார் கள்? மூன்றா, ஒன்றா? மூன்று வெவ்வேறான நபர்கள் நம்மில் இருக்கின்றனர் என்று நாம் சொல்லக்கூடாது; ஒரேவொரு நபர்தான் நம்மில் இருக்கிறார் என்றும் நாம் சொல்லக்கூடாது. ஆனால் 'ஒன்றில் மூன்று' நம்மில் இருக்கிறார். தேவத்துவத்தின் மூன்று நபர்களும் மூன்று ஆவிகளல்ல, மாறாக ஒரே ஆவி. பிதா குமாரனில் இருக்கிறார்; குமாரன் தம் அதிசயமான ஏழு மூலப்பொருட்களுடன் ஆவியானவரில் இருக்கிறார். இந்த அதிசயமான பரிசுத்த ஆவி நமக்குள் வரும்போது தேவத்துவமே நமக்குள் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மூன்று நபர்களும் ஒரே ஆவியில் இருப்பதால் பிதா குமாரன் பரிசுத்த ஆவியை நாம்

நமக்குள் கொண்டிருக்கிறோம். இந்த மூவொரு தேவன், நம் ஆவிக்குரிய உள்ளான ஜீவனாக இருப்பதற்காக, நம் மனித ஆவியில் இருக்கிறார் என்பதைப் பின்னர் நாம் பார்ப்போம். இதுதான் தேவனுடைய பொருளாட்சியின் முக்கியமான குறி. இந்த முறையில்தான் தேவத்துவம் நமக்குள் பகிர்ந்தளிக்கப் படுகிறது. ஒரே ஆவியிலுள்ள மூவொரு தேவனை நம் மனித ஆவிக்குள் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதுதான் தெய்வீகப் பொருளாட்சியின் இலக்கு. எனவே நம் மனித ஆவியில் வாசம்பண்ணும் மூவொரு தேவனால் வாழ்வதிலேயே நம் முழுக் கவனத்தையும் இப்போது செலுத்தவேண்டும். வேறு காரியங்கள் எவ்வளவுதான் நல்லவைகளாகவும், வேதவாக்கியங்களின்படி சரியாகவும் இருந்தாலும்கூட, இந்த இலக்கிலிருந்து நாம் திசைதிருப்பப்படுவோமானால், தேவனுடைய பொருளாட்சியின் குறியை நாம் நிச்சயமாகத் தவறவிட்டுவிடுவோம். இன்று கர்த்தர் தம் பிள்ளைகள் தம் தெய்வீகப் பொருளாட்சியின் குறியையே மையமாகக் கொள்ளுமாறு அவர்களை மீட்டுத்திருப்பிக் கொண்டிருக்கிறார்.

கர்த்தாவே, என்னில் ஜீவனாய்,
எல்லாமுமாய் உள்ளீர்!
நான் உணர்ந்தறிய, அனுபவிக்க,
எளிதாய்க் கிடைக்கின்றீர்!

கர்த்தாவே, ஆவியானீர்!
இவ்வளவு அருகிலே,
அற்புதமாகக் கிடைக்கின்றீர்!
உம்மைப் போற்றுகின்றேன்!

என் பெரிய சிறிய தேவைக்கெல்லாம்
நீரே நிரப்பீடு;
நான் பயன்படுத்தக் கைவசமாய்,
நிறைவாய் இருக்கின்றீர்.

பலவீனத்தில் உமது வல்ல
அபிஷேகம் தாங்கும்;
உம் ஆற்றலால் என் பலத்தை நிரப்பிப்
பேணிக்காக்கின்றீர்.

உம் ஜீவ விதி என் இதயம் உறைந்தென்

நடையைச் சீராக்கும்;
உம் நிஜத்தின் செல்வம் என்னைப்
பூர்த்தியாய் நிரப்புதே.

நீர் என்னுடன் இணைந்து என்றும்
ஒன்றாய் இருக்கின்றீர்!
எந்நாளும் பொழுதும் என்னுடன்
ஓர் ஆவியாய் உள்ளீர்!

## அத்தியாயம் இரண்டு

# சகலத்திற்கும் போதுமான ஆவியானவர்

### ஆவியானவர் தேவனுடைய கடத்துதல்

தேவத்துவத்திலுள்ள மூன்று நபர்கள்மூலம் தேவன் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி என்று முதல் அத்தியாயத்தில் பார்த்தோம். திரியேகத்துவத்தின் பொருளாட்சியை விளக்கிக்காட்டுவதற்கு, நாம் மின்சாரத்தை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தலாம். இதில் மின்உற்பத்தி, மின்னோட்டம், மின்கடத்துதல் ஆகியவை அடங்கியிருக்கின்றன. இவை மின்சாரத்தின் வித்தியாசமான மூன்று வகைகளாகத் தோன்றுகின்றன. ஆனால் உண்மையில் இவையெல்லாம் ஒன்றுதான். உற்பத்தி, ஓட்டம், கடத்துதல் எல்லாமே மின்சாரம்தான். மின்சாரம் இல்லையென்றால் உற்பத்தியும் இல்லை, ஓட்டமும் இல்லை, கடத்துதலும் இல்லை; இருக்கவும் முடியாது. எப்படி ஒரே மின்சாரம் மூன்று வித்தியாசமான நிலைகளில் இருக்கிறதோ, அப்படியே ஒரே தேவனும் மூன்று நபர்களுடன் இருக்கிறார். ஒரு முனையிலே மின்சாரஉற்பத்தி அல்லது சேமிப்பு உள்ளது. மறுமுனையிலோ மின்சாரம் நம் வீடுகளுக்குள் கடத்திவரப் படுகிறது. இந்த இரண்டு முனைகளுக்குமிடையே மின்னோட்டம் இருக்கிறது. இது ஒரே காரியத்தின் மூன்று நிலைகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு. பிதாவாக தேவன் ஊற்றாக இருக்கிறார்; குமாரனாக தேவன் பாய்ந்தோடுதலாகவும், பிதாவின் வெளியாக்கமாகவும் இருக்கிறார். மேலும் ஆவியானவராகிய தேவன் தேவனை மனிதனுக்குள் கொண்டுவரும் கடத்துதலாக இருக்கிறார். ஆகையால் பிதா ஆவியாயிருக்கிறார்; குமாரனும் ஆவியாயிருக்கிறார்; ஆவியானவரும் சந்தேகமேயில்லாமல் ஆவியாகத்தானிருக்கிறார். பிதா குமாரனில் இருக்கிறார்; குமாரன் ஆவியானவரில் இருக்கிறார்; ஆவியானவர், தேவனுடைய உண்மையான கடத்துதலாக நம்மில் இருந்து, கிறிஸ்துவில் தேவன் என்னவாக இருக்கிறாரோ, எதையெல்லாம் உடையவராக இருக்கிறாரோ, அவையெல்லாவற்றையும் நமக்குள்ளே தொடர்ந்து கடத்திக்கொண்டே இருக்கிறார்.

### ஆவியானவர் சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளைமருந்து (Dose)

இந்த நவீன யுகத்தில் மனிதன் மருத்துவத்துறையில் அநேக

மருந்துகளைச் செய்வதில் கைதேர்ந்துவிட்டான். ஒரேவேளை மருந்திலேயே பகிர்ந்தளிக்கத்தக்கதாக சில மருந்துகள் பலவிதமான மூலப்பொருட்களைச் சேர்த்து உருவாக்கப்படுகின்றன. அந்த ஒரேவேளைமருந்திலேயே ஒருசில மூலப்பொருட்களால் நோய்க்கிருமிகளை அழிக்கமுடியும்; வேறுசில மூலப்பொருட்களால் நரம்புகளை இளைப்பாற்ற முடியும். இன்னும் சில மூலப் பொருட்களால் சரீரத்தைப் போஷித்து, களைப்பாற்றி, புத்துணர்ச்சி தரமுடியும். இது சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளைமருந்து. இந்த அகில உலகத்திலும், பரிசுத்த ஆவியே மிகச்சிறந்த "ஒரேவேளைமருந்து" என்று நாம் எப்போதாவது உணர்ந்திருக்கி றோமா? நம் எல்லாத் தேவைகளையும் நிறைவுசெய்ய இந்த ஒரேவேளைமருந்து போதும். பிதாவும் குமாரனும் என்னவாக இருக்கிறார்களோ, அவர்களிடத்தில் என்னவெல்லாம் இருக்கிறதோ, அவையெல்லாம் இந்த அதிசயமான ஆவியானவரில் இருக்கின்றன. இந்த ஒரேவேளைமருந்துக்குள் எத்தனை மூலப்பொருட்கள் உள்ளன என்று ஆழமாகச் சிந்தித்துப்பாருங்கள்; தேவனுடைய தெய்வீக சுபாவம், அவருடைய மனிதசுபாவம், பூமிக்குரிய துன்பங்களோடுகூடிய அவருடைய மனிதவாழ்க்கை, அவருடைய மரணத்தின் அதிசயமான வீரியம், அவருடைய உயிர்த்தெழுதல், அவருடைய பரமேறுதல், அவருடைய சிங்காசனத்திலமர்தல். ஆ! இது எப்பேர்ப்பட்ட ஒரேவேளைமருந்து என்று நம்மால் கற்பனைகூட செய்யமுடியாது! எனினும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஒவ்வொருநாளும் நாம் இந்த மருந்தைச் சுவைத்து அனுபவிக்கலாம். இந்த உலகத்திலுள்ள எந்த விஞ்ஞானியாலும், எந்த மருத்துவராலும் இந்த அதிசயமான ஒரேவேளைமருந்தைப் பகுத்து ஆராயமுடியாது. இதுவே தேவனுடைய பொருளாட்சி. இது தேவன் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதைத்தவிர வேறொன்றுமில்லை.

இது ஏதோ உபதேசங்களைக் கற்றுக்கொள்கிற காரியமில்லை. நான் வாலிபனாக இருந்தபோது வெவ்வேறு 'dispensations' (காலகட்டங்கள்)களைப்பற்றிய சகல உபதேசங்களையும் கற்றுக்கொண்டேன். குறைந்தது ஏழு 'dispensations' (காலகட்டங்கள்) உள்ளன என்று போதிக்கப்பட்டேன். ஆனால் திட்டவட்டமாகப் பேசுவதானால், நமக்குத் தேவையானதெல்லாம் ஒரேவொரு 'dispensation' (பகிர்ந்தளித்தல்) தான். அது தேவன் தம்மையே பகிர்ந்துகொடுப்பதுதான். வேதத்தின் அறுபத்தாறு புத்தகங்களும் இந்த ஒரேவொரு பகிர்ந்தளித்தலின், அதாவது தேவன் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதின், முழுமையான பதிவேடாகவே இருக்கின்றன. ஆ! இந்த அதிசயமான ஆவியானவரை சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளைமருந்தாக

நாம் நாளெல்லாம் அனுபவிப்போமாக! நாம் காலகட்டங்களைப் பற்றிய இந்த உபதேசங்களை அல்ல, தேவனையே அனுபவித்து மகிழ்வோமாக.

நீ பலவீனமான ஒரு சகோதரனா? தெய்வீக வல்லமையும், சத்துவமும் தந்து உன்னைப் பலப்படுத்த இதோ இங்கே உண்டு ஒரேவேளைமருந்து, அதிசயமான ஒரேவேளைமருந்து. நீ சஞ்சலமுள்ள ஒரு சகோதரனா? இதற்கும் நிவாரணம் இந்த மருந்தில் உண்டு. பரிசுத்த ஆவியின் ஒரேவேளைமருந்து உன் சஞ்சலங்களையெல்லாம் நிவிர்த்தியாக்கிவிடும்.

நாம் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையில் அறையப்பட்டோம் என்றும், ஆகையால் நான் என்னை மரித்தவனாக எண்ணிக் கொள்ளவேண்டும் என்றும் நான் வாலிபனாக இருந்தபோது போதிக்கப்பட்டேன். எனவே காலையிலிருந்து மாலைவரை என்னை மரித்தவனாக எண்ணிக்கொள்வதற்கு நான் மிகவும் விழிப்புடன் இருந்தேன். ஆனால் எவ்வளவு அதிகமாக இப்படிச் செய்தேனோ அவ்வளவு அதிகமாக நான் வாழ்கிறவனானேன். இந்த வழிமுறை வேலைசெய்யவில்லை. ஏனென்றால் இது ஒரு தவறான வழிமுறை. பல வருடங்களுக்குப்பிறகு ஒருநாள், அவருடைய மரணத்தின் நிஜம் என்னை மரித்தவனாக எண்ணிக்கொள்வதில் இல்லை, மாறாக பரிசுத்த ஆவியை அனுபவித்துமகிழ்வதில்தான் இருக்கிறது என்பதைக் காண்பதற்குக் கர்த்தர் என் கண்களைத் திறந்தார். இது ரோமர் 8ஆம் அதிகாரத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ரோமர் 6ஆம் அதிகாரம் கிறிஸ்துவினுடைய மரணத்தின் வரையறையை மட்டும்தான் தருகிறது. ஆனால் ரோமர் 8ஆம் அதிகாரம் கிறிஸ்துவினுடைய மரணத்தின் நிஜத்தைத் தருகிறது. ஏனென்றால் கிறிஸ்துவினுடைய மரணத்தின் வீரியம் பரிசுத்த ஆவியில்தான் இருக்கிறது. நாம் எவ்வளவு அதிகமாக பரிசுத்த ஆவியிலுள்ள கிறிஸ்துவோடு ஐக்கியம்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கொல்லப்பட்டுவிடுவோம். சகலத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த ஆவியாகிய ஒரேவேளைமருந்துக்குள் கொல்லும் மூலப்பொருள் அடங்கியிருக்கிறது. நாம் பரிசுத்த ஆவியில் இருக்கும்போது நம்மை நாமே மரித்தவர்களாக எண்ணிக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் நாம் தேவனை இந்த அதிசயமான ஒரேவேளைமருந்தாக அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருக்கிறோம். நமக்குள் இருக்கும் பலவிதமான கிருமிகள் எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே கொல்லப்பட்டுவிடும்.

முன்பெல்லாம் நான் ஒரு சகோதரனை வெறுத்தபோது, "வெறுக்கும் நான்" சிலுவையில் அறையப்பட்டுவிட்டதாகவும், வெறுப்பதற்குப் பதிலாக அவனை நேசிக்கவேண்டும் என்றும்

சொல்லிக்கொடுத்தார்கள். எனவே நான் என்னை மரித்தவனாக எண்ணிக்கொள்ள முயன்றேன். ஆனால் அது பலன் கொடுக்க வில்லை. எவ்வளவு அதிகமாக நான் என்னை மரித்தவனாக எண்ணினேனோ, அவ்வளவு அதிகமாக நான் அவனை வெறுத்தேன். அதன்பின் ஒருநாள், கர்த்தருடன் உறவாடிக் கொண்டிருக்கையில், நான் அவருடைய பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டேன், ஆ! கண்ணீர் எப்படி ஓடியது! என் வெறுப்பையும், என் பெருமையையும் கொல்லக்கூடிய "கொல்லும் வல்லமை" எனக்குள் இருப்பதை நான் அறிந்தேன். எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே இந்தச் சகோதரன்மேல் கண்ணீர் கலந்த அன்பு என் இருதயத்திலிருந்து பொங்கிற்று. இது என்ன? இதுதான் இந்த அதிசயமான ஒரேவேளைமருந்தில் இருக்கிற கொல்லும் மூலப்பொருள், அதாவது ஆவியானவரிலுள்ள கிறிஸ்து வினுடைய மரணத்தின் வீரியம்.

இயேசுவின் இந்த ஆவிக்குள், சகலத்திற்கும் போதுமான நிரப்பீடு (supply) இருக்கிறது. பிலிப்பியர் *1:19*-ல் உள்ள "உதவி" என்ற வார்த்தைக்கு "உதாரத்துவமான அல்லது சகலத்தையும் உள்ளடக்கிய நிரப்பீடு" என்று பொருள். இது ஒரு விசேஷமான கிரேக்க வார்த்தையாகும். இயேசுவின் ஆவி நம் எல்லாத் தேவைக ளையும் நிரப்புகிற, சகலத்தையும் உள்ளடக்கிய ஒரு நிரப்பீடு. நமக்கு என்ன தேவை? ஆறுதல் தேவையா? நம் பிள்ளைகளோ, பெற்றோரோ, அன்பு மனைவியோ யாருமே நமக்கு மெய்யான ஆறுதலைத் தரமுடியாது. நிஜமான ஆறுதல் நம்முள் வாசமாயிருக்கிற இயேசுவின் ஆவியிடமிருந்தே வருகிறது. இந்த ஆவியானவரிலுள்ள இயேசுவோடு நாம் கலந்துறவாடும்போது, இந்த அதிசயமான ஆவியானவரில் நாம் வாழும்போது, நாம் உள்ளான ஆறுதலைத் தானாகவே அடைகிறோம். வெளிப்புறச் சூழ்நிலை எப்படியிருந்தாலும், உள்ளே இளைப்பாறுதலும் ஆறுதலும் இருக்கின்றன.

"என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. வழிகாட்டுதலும், வழிநடத்துதலும் எனக்குத் தேவைப்படுகின்றன," என்று நாம் கூறலாம். ஜீவனுள்ள வழிநடத்துதல் பரிசுத்த ஆவியில் இருக்கிறது. கர்த்தருடன் நாம் கலந்துறவாடும்போது, பரிசுத்த ஆவியில் நாம் நடக்கும்போது, வழிநடத்துதலுக்கான உள்ளான வெளிச்சத்தை எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே நாம் பெற்றுக்கொள்வோம். வழிநடத்துதல் உட்பட சகலமும் பரிசுத்த ஆவியில் இருக்கிறது. இன்று அவர் சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளைமருந்தாக நம்மில் இருக்கிறார். நாம் கேட்கவோ. கதறவோ வேண்டிய அவசியமில்லை. நாம் அவரை எடுத்துக்கொள்ளவேண்டும், அனுபவித்துமகிழவேண்டும்,

துதிக்கவேண்டும், அவ்வளவுதான்.

எடுத்துக்காட்டாக, ஒரு சகோதரி ஒரு பிரச்சினையில் இருக்கிறாள். என்ன செய்யவேண்டுமென்று அவளுக்குத் தெரியவில்லை. அவளுக்குத் தெளிவான வழிநடத்துதல் இல்லாதிருந்தபோதும், அவள் கர்த்தரிடத்தில் சென்று, "கர்த்தாவே, எனக்கு எந்தவிதமான வழிநடத்துதலும் இல்லை. அதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன். என்ன செய்யவேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை. அதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன். நான் இருளில் இருக்கிறேன். அதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன்," என்று கூறினாள். என்ன நடந்தது? எவ்வளவு அதிகமாக அவள் துதித்தாளோ, அவ்வளவு அதிகமாக அவள் வெளிச்சத்தைப் பெற்றாள். நாமும் அதே காரியத்தைச் செய்வோமாக. நாம் பலவீனமாக இருக்கும்போது, கர்த்தரிடத்தில் போய், "கர்த்தாவே, இந்த நிலையில் நான் பலவீனமாக இருக்கிறேன். இதற்காக நான் உம்மைத் துதிக்கிறேன்," என்று சொல்வோமாக. இப்படி நாம் அவரைத் தொடர்புகொள்வதின்மூலம், உதாரத்துவமான சகலத்திற்கும் போதுமான நிரப்பீடாக நமக்குள் வாசம்பண்ணுகிற அவர், எப்பேர்ப்பட்ட அதிசயமான ஆவியானவர் என்று நாம் கண்டுகொள்வோம்.

கிறிஸ்தவத்தில் அளவுக்கு அதிகமான உபதேசங்கள் கர்த்தருடைய மக்களைக் கர்த்தரிடமிருந்து வெவ்வேறு திசைகளிலே திருப்பிக்கொண்டுபோகின்றன, இதனால் அவர்கள் தேவனுடைய பொருளாட்சியின் குறியைத் தவறவிட்டு விடுகிறார்கள். இந்தக் குறி என்ன? நம் மனித ஆவியில் வாசம்பண்ணுகிற, சகலத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த ஆவியே இந்தக் குறி. நாள்முழுவதும் பரிசுத்த ஆவியை எப்படித் தொடர்புகொள்வது என்றும், எப்படிப் பின்பற்றுவது என்றும் கற்றுக்கொள். அவருடன் எப்படிக் கூடிகலந்துறவாடுவது என்றும், எப்படி இடைப்படுவது என்றும் கற்றுக்கொள். வெளித்தோற்றங்களோடும், ஒழுங்குமுறைமைகளோடும், உபதேசங்களோடும் இடைப்படுவதற்குத்தான் கிறிஸ்தவம் நமக்குக் கற்றுத்தருகிறது. வேதத்தையும்கூட தவறான முறையில்தான் வாசிக்கிறோம். ஏனென்றால் பரிசுத்த ஆவியோடு எந்தத் தொடர்பும் கொள்ளாமல் வேதத்தை வாசிக்கிறோம். அப்படியே தொடர்புகொண்டாலும் மிகக் கொஞ்சமாகத்தான் தொடர்புகொள்கிறோம். கருப்பு வெள்ளை எழுத்துகளில் வெறும் உபதேசங்களை மட்டும் நாம் கற்றுக்கொள்கிறோம். நம் கண்களைப் பயன்படுத்தி வெறும் வார்த்தைகளைப் பார்ப்பதற்கும், நம் மனங்களைப் பயன்படுத்தி வெறும் உபதேசங்களைப் புரிந்துகொள்வதற்கும் வேதத்தை வாசிக்கக்கூடாது. நம் ஆவியை இயக்கி பரிசுத்த ஆவியைத்

தொடர்புகொள்வதற்காகவே வேதத்தை வாசிக்கவேண்டும். நம்மில் வாசம்பண்ணுகிறவர் கர்த்தராகிய இயேசுவின் உதாரத்துவமான நிரப்பீடாக இருப்பதால், காலைமுதல் மாலைவரை நாம் அவருடன்தான் இடைப்படவேண்டும்.

## ஆவியானவர் பரஸ்பர வாசஸ்தலம்

பிதாவும் கர்த்தரும் நம்மிடத்தில் வந்து நம்முடன் வாசம்பண்ணுவார்கள் என்று யோவான் *14:23* கூறுகிறது. இதன் பொருள் என்ன? பிதாவும் குமாரனும் உங்களிடத்தில் வந்து உங்களிடத்தில் வாசம்பண்ணுவதை நீங்கள் எப்போதாவது அனுபவித்திருக்கிறீர்களா? இதுவே நாம் பார்த்துக்கொண்டிருக்கும் தேவனுடைய பொருளாட்சியின் குறி. இந்த வாசஸ்தலத்திற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. பிதாவும் குமாரனும் நம் வாசஸ்தல மாகிவிடுவார்கள். நாம் அவர்களுடைய வாசஸ்தலமாகிவிடுவோம். இது ஒரு *பரஸ்பர* வாசஸ்தலம். இந்தப் பரஸ்பர வாசஸ்தலம் எப்படி சாத்தியமாகும்? பிதாவும் குமாரனும் ஆவியானவரில் இருப்பதைப்போலவே, நாமும் ஆவியானவரில் இருப்பதால்தான், இந்தப் பரஸ்பர வாசம்பண்ணுதலை நம்மால் அனுபவிக்கமுடியும். நாம் ஆவியானவரில் இருக்கும்போது பிதாவிலும் குமாரனிலும் வாசம்பண்ணுகிறோம். அதே நேரத்தில் அவர்களும் நம்மில் வாசம்பண்ணுகிறார்கள். அப்போது மட்டுமே நாம் பிதாவோடும் குமாரனோடும் மிகநெருக்கமான ஐக்கியமும், கலந்துறவாடுதலும் கொண்டிருப்போம். நமக்கு ஓர் உள்ளான "உரையாடல்" இருக்கும். நாம் கர்த்தருடன் பேசுவோம்; கர்த்தர் நம்முடன் பேசுவார். இவையே பரஸ்பர வாசஸ்தலத்தின் நடைமுறை அனுபவங்களாகும்.

## ஆவியானவர் உள்ளான ஜீவனும், புறம்பான ஆடையும்

கர்த்தரே நம்மை இளைப்பாற்றுகிறார், பலப்படுத்துகிறார், உள்ளான ஜீவனால் நிரப்புகிற தண்ணீராக நமக்குள்ளே ஜீவ ஆவியாக இருக்கிறார் (யோவான் *7:37-39*).

கர்த்தர் பரிசுத்த ஆவியாக ஆடை தரிப்பதற்கும் ஒப்பிடப்படுகிறார் (லூக். *24:49*). ஆடை தரிப்பது வல்லமையையும், அதிகாரத்தையும் சுட்டிக்காட்டுகிறது. இன்று யாராவது ஒருவர் பொறுப்பான ஓர் அலுவலக வேலையைச் செய்யும்போது அவருக்குச் சீருடை தேவைப்படுகிறது. தெருவில் ஒரு போலீஸ்காரர் சீருடை தரிக்காமல் சாதாரண உடையில் நின்றுகொண்டிருப்பதாக வைத்துக்கொள்வோம். யாருமே அவரைப் போலீஸ்காரராக மதிக்கமாட்டார்கள். அவர் தன் சீருடையைத் தரிக்காததால் அதிகாரத்தை இழந்துவிட்டார். நாம் வண்டி

ஓட்டும்போது ஒரு போலீஸ்காரரைச் சீருடையில் பார்த்தால், உடனே ஜாக்கிரதையாகிவிடுகிறோம். அவர் சீருடையைத் தரித்திருக்கும்போது, அதிகாரத்தைத் தரித்திருக்கிறார். பரிசுத்த ஆவி உள்ளே ஜீவனின் நிரப்பீடாகவும், வெளியே அதிகாரத்தின் சீருடையாகவும் இருக்கிறார். நாம் அவரால் தரிப்பிக்கப்படும்போது, இப்பிரபஞ்சத்திலேயே மிக உயர்ந்த அதிகாரத்தைப் பெறுகிறோம்.

கர்த்தர் உயிர்த்தெழுந்தபின் சீடர்களிடத்தில் வந்து அவர்கள்மேல் சுவாசத்தை ஊதினார் (யோவான் 20:21, 22). அவர் அந்த சுவாசத்தைப் "பரிசுத்த ஆவி" என அழைத்தார். ஏனென்றால் அவரே பரிசுத்த ஆவி. அவரிடமிருந்து புறப்பட்டுவரும் எதுவுமே பரிசுத்த ஆவியாகத்தானிருக்க வேண்டும். சுவாசம் என்பது சற்றேறக்குறைய ஜீவனுடைய, ஜீவனுக்கேதுவான காரியம் என்று நாம் அறிந்திருக்கிறோம். கர்த்தர் பரிசுத்த ஆவியை சீடர்களுக்குள் ஊதியது அவர் தம் ஜீவ ஆவியையே அவர்களுக்குள் உட்செலுத்தினதாகும். அந்த உயிர்த்தெழுந்த நாளிலிருந்து சீடர்கள் எல்லாரும் அவர்களுக்குள் ஜீவ ஆவியைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்கள் ஜீவத்தண்ணீராகிய உள்ளான பானத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

ஆயினும் அந்த நேரத்தில் அவர்கள் வல்லமையற்றவர்களாக இருந்தார்கள். சீருடை இன்னும் கொடுக்கப்படவில்லை. ஆகையால் அவர் வானங்களுக்கு ஏறிச்சென்று இந்தப் பிரபஞ்சத்தின் தலையாகவும், அதிகாரமாகவும் சிங்காசனத்தில் அமர்த்தப்படும் வரைக்கும் அவர்கள் காத்திருக்கவேண்டும் என்று கர்த்தர் அவர்களுக்குக் கூறினார் (லூக். 24:49). அவர் பரத்திற்கு ஏறிச்சென்று சிங்காசனத்தில் அமர்ந்ததால்தான், தம்மையே பரிசுத்த ஆவியில் அதிகாரமாக ஊற்றுவதற்கான நிலையை அடைந்தார். பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவி கீழே இறங்கினார் - ஜீவனாக அல்ல, மாறாக வல்லமையாக (அப். 1:8).

ஆகையால் ஜீவனின் நாளாகிய உயிர்த்தெழுந்த நாளில், பரிசுத்த ஆவி கர்த்தரிடமிருந்து புறப்பட்டு வந்து ஜீவ சுவாசமாக சீடர்களுக்குள் நுழைந்தார். ஆனால் வல்லமையின் நாளாகிய பெந்தெகொஸ்தே நாளில், பரமேறி சிங்காசனத்தில் அமர்ந்திருந்த தலையிலிருந்து பரிசுத்த ஆவி புறப்பட்டு வந்து சீடர்களை ஊழியத்துக்குத் தேவையான அதிகாரத்தால் தரிப்பித்தார். இதுவே சீருடையான வல்லமையின் பரிசுத்த ஆவி.

ஒரு போலீஸ்காரர் தன் கடமையைச் செய்ய ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் வழக்கமாகத் தன் வேலையைத் தொடங்குவதற்குமுன் என்ன செய்கிறார்? அதிகாலையில் ஏதாவது ஒரு பானத்தை (பல கோப்பைகள்) அருந்தி தனக்குப் புத்துணர்ச்சியூட்டி, தன்னைப்

பலப்படுத்திக்கொள்கிறார். ஆனால் இந்தப் பானத்தைப் பருகித் தன்னை நிரப்பிக்கொள்வதினால் போலீஸ்காரர் என்ற முறையில் அவர் தன் கடமையைச் செய்யத் தகுதியுடையவராகிவிடுவாரா? சீருடை இல்லாமல் வெறுமனே வெளியேபோய் தெருவில் நின்று, "நான் நிரம்பியிருக்கிறேன். இப்போது நான் ஒரு போலீஸ்காரர்" என்று அவர் சத்தமிட்டாலும், ஒருவனும் அவரை மதிக்கமாட்டான். "அவன் புத்திபேதலித்தவன்," என்றுதான் அவர்கள் சொல்வார்கள். அவர் உண்மையிலேயே போலீஸ்காரராக இருந்தாலும், சீருடை இல்லாவிட்டால் அவரிடம் அதிகாரம் இல்லை. ஆனால் அவர் சீருடையை அணிந்துகொள்ளும்போது அதிகாரத்தின் வல்லமையால் தரிப்பிக்கப்படுகிறார். அப்போது அவர் தெருவில் போகும்போது, உள்ளூர் போலீஸ்காரருக்குரிய அதிகாரமுடைய ஒரு மனிதன் என்றமுறையில் எல்லாரும் அவரை மதிப்பார்கள். இந்தச் சீருடையை நாம் அற்பமாக எண்ணமுடியாது. இந்தச் சீருடை அரசாங்கத்தின் அதிகாரத்தைக் குறிக்கிறது. மாறாக இந்தப் போலீஸ்காரர் காலையில் ஒன்றுமே குடிக்கவில்லையென்றால், அவர் பலவீனமாக இருப்பார். அவர் தன் சீருடையை அணிந்திருக்கலாம்; தன் அதிகாரத்தையும், பதவியையும் கூடப் பயன்படுத்தலாம். ஆனால் அவரிடம் உள்ளான பலமோ, தெம்போ இருக்காது.

உள்ளே நிரப்பப்பட்டிருக்கும் சில கிறிஸ்தவர்கள் வெளியே சீருடை இல்லாமல் இருக்கிறார்கள்; அதே நேரத்தில் சரியான சீருடை அணிந்திருக்கும் சில கிறிஸ்தவர்கள் உள்ளே வெறுமையாக இருக்கிறார்கள். நமக்கு உள்ளான நிரப்புதலும், புறம்பான தரிப்பித்தலுமாகிய இரண்டுமே தேவை. உயிர்த்தெழுந்த நாளின் பரிசுத்த ஆவி "நமக்குள்" ஜீவனாகவும், பெந்தெகொஸ்தே நாளின் பரிசுத்த ஆவி "நம்மேல்" வல்லமையாகவும் நமக்குத் தேவை. உள்ளே பரிசுத்த ஆவியின் நிரப்புதல் நமக்கு அவசியம். வெளியே பரிசுத்த ஆவியின் தரிப்பித்தல் அவசியம். இந்த இரண்டு பக்கங்களும் நம்மிடம் இருக்குமானால் பரிசுத்த ஆவியின் பாக்கியமான கலந்திணைதலை உள்ளும் புறமும் நாம் அனுபவிப்போம். ஆவியானவர் யார்? ஆவியானவரே மூவொரு தேவனின் மெய்யான நிஜம் என்பதை நினைவில்கொள்ளுங்கள். நாம் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தரிப்பிக்கப்படும்போது, மூவொரு தேவனுடன் கலந்திணைந்துவிடுகிறோம். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி.

ஆ! வெறும் உபதேசத்துக்கன்று, தேவனுடைய பொருளாட்சியின் இந்த இலக்குக்கே நம் கவனத்தைச் செலுத்துவோமாக! சிலர் உபதேசங்களைப்பற்றி

வாக்குவாதம்செய்ய முயல்கிறார்கள். “எடுத்துக்கொள்ளப் படுதலைப்பற்றி என்ன?” என்று அவர்கள் கேட்கிறார்கள். பிந்தைய-எடுத்துக்கொள்ளப்படுதல், முந்தைய-எடுத்துக்கொள்ளப்படுதல், பகுதி-எடுத்துக்கொள்ளப்படுதல், அல்லது வேறு ஏதாவது காரியத்தைப்பற்றி அநேகக் கிறிஸ்தவர்கள் குழம்புகிறார்கள். ஒருமுறை ஓர் அன்பான சகோதரனிடம், “நீ கர்த்தரை நேசித்து, அவரால் பிழைத்தால் போதும், அவர் திரும்பிவரும்போது, நீ எடுத்துக்கொள்ளப்படுவாய், அதுபோதும்” என்று கூறினேன். உபதேசங்களை மறப்போம். அவரை நேசிக்கக் கற்றுக்கொள்வோம். அவருடைய பொருளாட்சியின் இலக்கையே குறிவை. பரிசுத்த ஆவியில் ஜீவிக்கிற கிறிஸ்துவுடன் இடைப்படு; அவரால் நிரப்பப்படு, அவரால் தரிப்பிக்கப்படு.

சிலர் நித்தியப் பாதுகாப்பைப்பற்றி வாக்குவாதம்பண்ணு கிறார்கள். ஆனால் மெய்யான பாதுகாப்பு நித்தியப் பாதுகாப் பைப்பற்றிய போதகமன்று, கிறிஸ்துவே மெய்யான பாதுகாப்பு. நம்மிடத்தில் கிறிஸ்து இல்லையென்றால், நமக்குப் பாதுகாப்பு இல்லை. நித்தியப் பாதுகாப்பைப்பற்றிய உபதேசம் கிறிஸ்துவன்று. உபதேசம் கர்த்தருடைய பிள்ளைகளுக்குள் பிரிவினைகளைத்தான் உண்டாக்குகிறது. நாம் கிறிஸ்துவை நேசித்து, ஜீவிக்கிற ஆவியானவரின்படி நடந்து, உபதேசங்களை அதிக முக்கியப்படுத்தாமலிருந்தால், பரிசுத்தவான்களெல்லாரோடும் நாம் ஒன்றாயிருப்போம். எவ்வளவு அதிகமாக நாம் உபதேசங்களைப் பற்றிப் பேசுகிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் சண்டைபோடுவோம். இன்று அற்புதமான ஒரேவேளைமருந்தாகிய பரிசுத்த ஆவியைப்பற்றி நாம் பேசும்போது, நாமெல்லாரும் “ஆமென், அல்லேலூயா!” என்று கூறுகிறோம். ஆனால் நாளைக்கே நாம் நித்தியப் பாதுகாப்பைப்பற்றிப் பேசினால், சிலர், “மன்னிக்கணும். என்னால் ஒப்புக்கொள்ளமுடியாது,” என்று கூறுவார்கள். உடனே நாம் பிரிந்துவிடுவோம். நாம் இலக்கைத் தவறவிட்டுவிட்டோம் என்பதே இதன் பொருள். தேவனுடைய பொருளாட்சியின் இலக்கின்மேல் நம் முழுக் கவனத்தையும் பதிப்பதை விட்டுவிட்டு, தர்க்கங்களை எழுப்புகிற காரியங்களையே நாம் போதித்துக்கொண்டிருக்கிறோம். குறி என்ன? பிதா குமாரனிலும், குமாரன் பரிசுத்த ஆவியிலும், பரிசுத்த ஆவி நம்மிலும் இருப்பதே குறி.

மற்றவர்கள் ஞானஸ்நானத்தைப்பற்றி வாக்குவாதம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, சிலர் தெளிப்பு ஞானஸ்நானத்தை வற்புறுத்திப் பேசி, மற்றவர்களை நம்பவைக்க முயல்கிறார்கள். இது மறுபடியும், ஜீவிக்கிற கிறிஸ்துவின் ஆவியைப்பற்றிய காரியம் இல்லை, மாறாக இது உபதேசத்தைப்

பற்றிய காரியம். ஒரேவொரு காரியத்தையே இறுகப் பற்றிப்பிடிக்கவும், ஒரேவொரு காரியத்தினாலேயே இறுகப் பற்றிப்பிடிக்கப்படவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். அந்த ஒரே காரியம் கிறிஸ்துவே. பரிசுத்த ஆவியிலுள்ள கிறிஸ்துவை எப்படி இறுகப் பற்றிப்பிடிப்பது, பரிசுத்த ஆவியினால் எப்படி இறுகப் பற்றிப்பிடிக்கப்படுவது என்று நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நிச்சயமாக நமக்கு உபதேசம் உதவமுடியும் என்றாலும், உபதேசம், தேவனுடைய பொருளாட்சியின் பிரதானமான மையம் இல்லை. மாறாக பரிசுத்த ஆவியில் ஜீவிக்கிறவர்தான் தேவனுடைய பொருளாட்சியின் குறி.

## ஆவியானவர் ஜீவன்தருகிற, விடுதலையாக்குகிற, மறுரூபமாக்குகிற ஆவியானவராயிருக்கிறார்

இந்த அதிசயமான பரிசுத்த ஆவியில் இருக்கிற ஜீவிக்கிறவரை நாம் நாள்முழுவதும் தொடர்புகொண்டால், நமக்குள் மூன்று காரியங்கள் நிகழும். முதலாவது, ஜீவன்தரும் ஆவியானவர், ஜீவனைப் பகிர்ந்தளிப்பார் (2 கொரி. 3:6). இந்த அதிசயமான ஆவியானவரை நாம் தொடர்புகொள்ளும்போதெல்லாம் உள்ளான இளைப்பாறுதல், உள்ளான பெலன், உள்ளான திருப்தி, உள்ளான வெளிச்சம் ஆகியவைகளை நாம் பெறுவோம். கிறிஸ்து ஜீவனாக நமக்குள் மென்மேலும் பகிர்ந்தளிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார் என்பதற்கு இவை அடையாளங்களாகும். ஒருவேளை நாம் எண்பது ஆண்டுகளுக்கும் மேலாகக் கிறிஸ்தவர்களாக இருக்கலாம். இருப்பினும் தம்மைத்தாமே நமக்குள் பகிர்ந்தளித்து நம்மை இளைப்பாற்றுகிற, பலப்படுத்துகிற, திருப்தியாக்குகிற, பிரகாசிப்பிக்கிற, நிரப்புகிற, ஜீவன்தருகிற ஆவியாகத் தேவனுடைய கிறிஸ்து நமக்கு இன்னும் தேவைப்படுகிறார். இந்த அதிசயமான ஆவியானவர் கிறிஸ்துவை நம் உதாரத்துவமான நிரப்பீடாகப் பகிர்ந்தளிக்க நமக்குள்ளேயே இருக்கிறார்.

அடுத்தபடியாக, பரிசுத்த ஆவி நம்மைத் தொடர்ந்து விடுதலையாக்குவார் (2 கொரி. 3:17). ஒவ்வொருநாளும் பல அழுத்தங்களும் மனச்சோர்வுகளும் நம்மைப் பலவீனப்படுத்த ஏதுவாயிருக்கின்றன. சிலவேளைகளில் ஒருவனுடைய தொங்கின முகம் நம்மைச் சோர்வடையச்செய்கிறது. சில சமயங்களில், உன் மனைவி சுகவீனமாக இருக்கலாம். நீ உன் வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பிவரும்போது அவள் உன்னை சந்தோஷமாக வரவேற்காமல் போகக்கூடும். சிறிது நேரத்திற்குப்பின், நீ ஒரு கூட்டத்திற்குப் போகவேண்டியதிருந்தால், தொங்கின முகத்தோடு காணப்படுவாய். "என்ன நடந்தது, சகோதரனே?" என்று கேட்பார்கள். நீ, "ஒன்றுமில்லை," என்று சொல்வாய். உன் மனைவி

தன் நடத்தையினால் உன்னைப் பெரிதும் பாதித்துவிட்டாள் என்று அவர்களிடம் சொல்ல உனக்குத் துணிவில்லை. இப்பேர்ப்பட்ட ஓர் அற்பகாரியம் உன்னை அமுக்கி, சோர்வடையச் செய்யமுடியும். ஆயினும் உனக்குள்ளிருக்கிற ஜீவிக்கிற கிறிஸ்துவை நீ தொடர்புகொண்டால் அவர் உன்னை உடனே விடுதலையாக்குவார். உன் மனைவி உன்னைப் பாதிக்கமுடியாத, மனித வரம்புகளுக்கு அப்பாற்பட்ட உயர்ந்த இடத்தில் நீ இருப்பாய். எல்லாச் சோர்வுகளும் உன் காலின் கீழிருக்கும். நீ விடுதலையாக்கப்பட்டு, மூன்றாம் வானத்திலுள்ள சிங்காசனத்திலிருப்பாய். பல சமயங்களில், ஒரு கூட்டத்துக்குப் போக நான் ஆயத்தமாகும் போது ஏதாவது நடந்துவிடும்! ஆனால் நான் பாடத்தைக் கற்றுக்கொண்டேன். "ஆண்டவரே, நான் வானங்களில் இருக்கிறேன். இந்தக் காரியங்களெல்லாம் என் அமைதியைக் குலைக்காது," என்று நான் கூறினேன். நாம் பரிசுத்த ஆவியில் இருந்தால், மனித வரம்புகளைக் கடந்த நிலையில் இருப்போம். ஏனென்றால் இந்த அதிசயமான ஆவியானவரில்தான், பரமேறுதல், மனித வரம்புகடந்த நிலை ஆகியவைகளின் மூலப்பொருட்கள் இருக்கின்றன. நாம் அவரில் இருக்கும்போது, ஆவியானவரிலுள்ள இந்த மூலப்பொருட்கள் நாள்முழுவதும் நம்மை விடுதலையாக்கும்.

கடைசியாக, பரிசுத்த ஆவி நமக்கு ஜீவனைப் பகிர்ந்தளித்து, நம்மை விடுதலையாக்குகிற அதே வேளையில், நம்மை மறுரூபமாக்கவும்செய்கிறார். 2 கொரிந்தியர் 3:18 சரியான மொழியாக்கத்தின்படி, "நாமெல்லாரும் முக்காடில்லாத முகத்தினராய், கர்த்தருடைய மகிமையை ஒரு கண்ணாடியைப் போலக் கண்டு பிரதிபலித்து, ஆவியாயிருக்கிற கர்த்தரால் மகிமையின்மேல் மகிமையடைந்து, அதே சாயலுக்கு மறுரூபமாக்கப்படுகிறோம்." கிரேக்க மொழியில், "உங்கள் மனம் புதிதாகிறதினாலே *மறுரூபமாகுங்கள்,"* என்று ரோமர் 12:2-ல் பயன்படுத்தப்பட்டுள்ள அதே வார்த்தைதான் இங்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மறுரூபமாக்கப்படுதல், வெறுமனே வெளியே ஏற்படும் மாற்றத்தைக் குறிக்கவில்லை. மாறாக அது உள்ளே சுபாவத்திலும், வெளியே உருவத்திலும் ஏற்படும் மாற்றத்தையே குறிக்கிறது. நாம் ஒரு கண்ணாடியைப்போல கர்த்தருடைய மகிமையைக் கண்டு பிரதிபலிக்கும்போது மகிமையின் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறி கர்த்தருடைய சாயலுக்கு நாம் மறுரூபமாக்கப்படுகிறோம். ஒரு கண்ணாடி எதைக் காண்கிறதோ அதையே பிரதிபலிக்கும். ஆனால் கண்ணாடிக்குத் திரைபோட்டுவிட்டால், அதன் திறந்த முகம் மூடப்பட்டுவிடுகிறது; இப்போது அது ஒரு பொருளைக் கண்டாலும் அந்தப் பொருளைப் பிரதிபலிக்கமுடியாது. நாமும்

ஒரு திறந்த கண்ணாடியாக இருந்தால், கிறிஸ்துவைக் கண்டு, அவரைப் பிரதிபலிப்போம். இதுவே மறுரூபமாக்கப்படுவதற்கான வழிமுறையாகும். கர்த்தரே நம்மை உள்ளாக மறுரூபமாக்குகிற ஆவியானவர். நம்மிடம் எவ்வளவோ ஜென்மசுபாவமும், பாவமும் இருந்தபோதும், ஆவியானவர் நம் ஜென்மசுபாவமான சாயலை அவருடைய மகிமையின் சாயலுக்கு மறுரூபமாக்குகிறார். நாள்முழுவதும் நாம் ஆவியில் வாழ்ந்தால், அவர் நம் மனதையும் உணர்ச்சியையும் சித்தத்தையும் புதிதாக்கி நம்மை மறுரூபமாக்குவார். நம் மனதையும், உணர்ச்சியையும், சித்தத்தையும், தம்மைக்கொண்டு முழுமையாய் நிரப்பி, நம் உள்ளான பகுதிகள் அனைத்தையும் அவர் ஆக்கிரமித்துக் கொள்வார். நம் அன்பு, நம் வெறுப்பு, நம் விருப்பங்கள், நம் தெரிந்தெடுத்தல், நம் தீர்மானங்கள் ஆகியவையெல்லாம் அவருடைய சாயலைப் பெற்றுவிடும்; மகிமையின்மேல் மகிமையடைந்து நாம் அவருடைய சாயலுக்கு மறுரூபமாக்கப் படுகிறோம்; நாளைக்கு மகிமையின் இரண்டாம் நிலைக்கு மறுரூபமாக்கப்படுவோம்; அடுத்த நாள் மூன்றாம் நிலைக்கு, ஒவ்வொரு நாளும் மகிமையானது பெருகிக்கொண்டே போகும்.

தேவன் தம்மையே நமக்குள் பகிர்ந்தளித்து, அவருடைய மகிமையில் அவருடனே நம்மை கலந்திணைத்துவிடப்போகிறார் என்பதுதான் தேவனுடைய பொருளாட்சியும், அவருடைய பொருளாட்சியின் குறிக்கோளுமாகும். அப்போது நம்மால் அவரை வெளியாக்கமுடியும். இந்தக் குறிக்கோளுக்கு நாம் உண்மையுள்ளவர்களாக இருப்போமாக! இந்தக் குறியை நாம் இறுகப் பற்றிப்பிடித்துக்கொள்வோமாக! இந்த இலக்கை அடைய நாம் முனைந்துசெல்வோமாக!

## அத்தியாயம் மூன்று

# தெய்வீக ஆவியின் உறைவிடம்

யோவான் 3:6-ல் "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்," என்று நாம் வாசிக்கிறோம். இந்த வசனம் வேறுபட்ட இரண்டு "ஆவிகளைப்" பற்றிப் பேசுகிறது: முதலில் வரும் ஆவி தேவனுடைய பரிசுத்த ஆவியையும், இரண்டாவது வரும் ஆவி மனிதனுடைய மனுஷிக ஆவியையும் குறிக்கின்றன. பரிசுத்த ஆவியினால் பிறப்பது மனித ஆவியாகும். இந்த இரண்டு "ஆவிகளையும்" சுட்டிக்காட்டுகிற இன்னொரு வசனம் யோவான் 4:24: "தேவன் ஆவியாயிருக்கிறார்; அவரைத் தொழுதுகொள்ளுகிற வர்கள் ஆவியிலும், உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும்." ஆவியாக இருக்கும் தேவனை நாம் நம் மனித ஆவியில் தொழுதுகொள்ளவேண்டும். இரண்டு "ஆவிகள்" இருப்பதை ரோமர் 8:16 மேலும் உறுதிப்படுத்துகிறது: "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்." "நம்முடைய" என்ற பிரதிபெயர்ச்சொல் நிச்சயமாக மனுஷிக ஆவியைத்தான் சுட்டிக்காட்டுகிறது. இது, தெய்வீக ஆவி, மனுஷிக ஆவி என்ற இந்த இரண்டு 'ஆவிகளின்' நிச்சயத்தை சந்தேகிக்கக்கூடிய எந்த ஆதாரத்தையும் அகற்றிவிடுகிறது.

ரோமர் 8:9, 10-ல் "...தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்... மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால், சரீரமானது... மரித்ததாயிருந்தாலும், ஆவியானது... ஜீவனுள்ளதாயுமிருக்கும்," என்று நாம் வாசிக்கிறோம். நாம் ஏன் இதைச் சுட்டிக்காட்டுகிறோம்? ஏனென்றால் மனிதனுடைய ஆவியைப்பற்றி மிகக் குறைவான அறிவே கிறிஸ்தவர்களிடத்தில் இருக்கிறது. பரிசுத்த ஆவிக்கு அதிகக் கவனம்கொடுக்கப்படுகிறது. ஆனால் பரிசுத்த ஆவியின் உறைவிடமும், வாசஸ்தலமுமாகிய மனித ஆவி ஏறக்குறைய முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படுகிறது. ஒருவர் என்னைச் சந்திக்க விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். முதலாவது நான் எங்கே வாழ்கிறேன் என்று அவர் கண்டுபிடித்தாக வேண்டும். என் வீட்டை அவரால் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அவர் என்னை வந்து சந்திப்பதைக் கைவிட்டுவிட வேண்டியதுதான். பரிசுத்த ஆவியைப்பற்றி அதிகமான பேச்சு இருந்தபோதும், அவர் எங்கு வாசம்பண்ணுகிறார் என்று நமக்குத் தெரியாது. ரோமர் 8:9 சந்தேகமேயின்றி பரிசுத்த ஆவியையே

குறிக்கிறது. ஆனால் பத்தாம் வசனம் மனித ஆவியைப்பற்றிப் பேசுகிறது. "*...சரீரமானது...மரித்ததாயிருந்தாலும், ஆவியானது... ஜீவனுள்ளதாயும் இருக்கும்.*" நிச்சயமாகப் பரிசுத்த ஆவியை நம் சரீரத்தோடு ஒப்பிடமுடியாது. மனித சரீரத்தை மனித ஆவியோடுதான் ஒப்பிடமுடியுமே தவிர, மனித சரீரத்தைப் பரிசுத்த ஆவியோடு ஒப்பிடமுடியாது.

அப்போஸ்தலராகிய பவுல் ரோமர் 1:9-ல் "தமது குமாரனுடைய சுவிசேஷத்தினாலே என் ஆவியில் நான் சேவிக்கிற தேவன் எனக்குச் சாட்சியாயிருக்கிறார்," என்று கூறுகிறார். பரிசுத்த ஆவியில் நாம் தேவனைச் சேவிக்கிறோம் என்பதுதான் நம் வழக்கமான எண்ணம். ஆனால் நம் மனித ஆவியில் தேவனைச் சேவிக்கிறோம் என்று இதோ இங்கே ஒரு வசனம் தெரிவிக்கிறது. கலாத்தியர் 5:16-ல் உள்ள "ஆவிக்கேற்றபடி (ஆவியில்) நடந்துகொள்ளுங்கள்," என்ற சொற்றொடருக்கு பரிசுத்த ஆவியில் நடப்பதுதான் அர்த்தம் என்று அநேகக் கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால் கிரேக்க பாடத்தின்படி, நம் ஆவியில் நடப்பதுதான் இதற்கு அர்த்தம். (சரியான அர்த்தத்தைக் கண்டுபிடிக்க பல மொழிபெயர்ப்புகளை ஒப்பிட்டுப்பார்ப்பது நமக்குப் பிரயோஜனமாயிருக்கும்). அநேக வசனங்களில் "ஆவி" என்ற வார்த்தை பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கக்கூடாது.

சில வேதபகுதிகளில் "ஆவி" என்பது பரிசுத்த ஆவியைக் குறிக்கிறதா அல்லது மனிதஆவியைக் குறிக்கிறதா என்று தீர்மானிக்க இயலாமல் வேதமொழிபெயர்ப்பாளர்களேகூடக் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். பரிசுத்த ஆவியும், மனித ஆவியும் விசுவாசிக்குள் கலந்திணைந்து ஒரே ஆவியாக இருப்பதே இந்தக் கஷ்டத்துக்குக் காரணம். "கர்த்தரோடு இணைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" (1 கொரி. 6:17). நாம் கர்த்தருடன் ஒரே ஆவியாயிருக்கிறோம். இப்பேர்ப்பட்ட கலந்திணைந்த ஆவி பரிசுத்த ஆவியா அல்லது மனித ஆவியா என்று சொல்வது யாருக்குமே கடினம்தான். இருவருமே கலந்திணைந்து ஒன்றாகிவிட்டனர். இதைப் பரிசுத்த ஆவி என்றும் சொல்லலாம் அல்லது பரிசுத்தவான்களுடைய மனித ஆவி என்றும் சொல்லலாம். சிலசமயங்களில் அன்னாச்சிப்பழச் சாற்றையும், திராட்சைப்பழச் சாற்றையும் ஒன்றாகக் கலந்து ஒரு பானத்தைத் தயாரிக்கிறோம். இதைக் கலக்கியபின்பு, இது எந்த வகையான பழச்சாறு என்று சொல்வது கடினம். இது அன்னாச்சிப்பழச்சாறா அல்லது திராட்சைப்பழச்சாறா? இதை அன்னாச்சிப்பழ-திராட்சைப்பழச்சாறு என்றுதான் அழைத்தாகவேண்டும். புதிய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவி நம் ஆவியுடன் கலந்திணைந்து, இரண்டு ஆவிகளும் ஒரே ஆவியாக இருப்பதைப் பார்க்கும்போது

அதிசயமாக இருக்கிறது.

## மனுஷீக ஆவியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தல்

பிதாவாகிய தேவன் நம்மில் இருக்கிறார் (எபே. 4:6), கிறிஸ்து நம்மில் இருக்கிறார் (2 கொரி. 13:5), பரிசுத்த ஆவி நம்மில் இருக்கிறார் (ரோமர் 8:11) என்று முதல் அத்தியாயத்தில் நாம் பார்த்தோம். மூவொரு தேவனுடைய மூன்று நபர்களுமே நம்மில் இருக்கிறார்கள். ஆனால் இந்த மூவொரு தேவன் நமக்குள் எங்கே இருக்கிறார்? எந்தப் பகுதியில்? கிறிஸ்து இன்று நம் ஆவியில் இருக்கிறார் என்பது எந்தவிதமான தர்க்கத்துக்கும் இடமேயில்லாமல் மிகத் தெளிவாக இருக்கிறது. இந்த உண்மையை உறுதிப்படுத்துகிற வேதவாக்கியங்கள் இருக்கின்றன. "ஆ! கர்த்தர் உன்னிலும் இருக்கிறார், கர்த்தர் என்னிலும் இருக்கிறார்," என்று கூறுகிற அநேகரைப்போல நாம் தெளிவற்றவர்களாக இருக்கக்கூடாது. கிறிஸ்து நம் ஆவியில்தான் இருக்கிறார் என்பதை 2 தீமோத்தேயுவின் கடைசி வசனம் உறுதியாகக் கூறுகிறது. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக" (2 தீமோ. 4:22). கிறிஸ்து நம் ஆவியில் இருக்கவேண்டுமானால் முதலாவது அவர் ஆவியாக இருக்கவேண்டும். அடுத்து நமக்கும் ஓர் ஆவி இருக்கவேண்டும். கடைசியாக இந்த இரண்டு ஆவிகளும் ஒரே ஆவியாக கலந்திணைந்திருக்கவேண்டும். கர்த்தர் ஆவியாக இல்லையென்றால் அவர் நம் ஆவியில் எப்படி இருக்கமுடியும்? மேலும் நாம் அவருடன் எப்படி ஒரே ஆவியாக இருக்கமுடியும்?

மனித ஆவியின் இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆவியிலிருந்து ஆத்துமாவை நாம் பிரித்தாகவேண்டும். "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிற தாயும் இருக்கிறது" (எபி. 4:12). தேவனுடைய வார்த்தையானது நம் ஆள்தத்துவத்தை ஊடுருவக்குத்தி, நம் ஆவியிலிருந்து நம் ஆத்துமாவைப் பிரிக்கிற கூர்மையான பட்டயமாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, "நாமே தேவனுடைய ஆலயம்" என்று 1 கொரிந்தியர் 3-ஆம் அத்தியாயம் கூறுகிறது. பழைய ஏற்பாட்டின்படி தேவனுடைய ஆலயம், மூன்று பகுதிகளாக விளக்கி வருணிக்கப்படுகிறது: முதலாவது வெளிப்பிரகாரம், இரண்டாவது பரிசுத்த ஸ்தலம், மூன்றாவது மகாபரிசுத்த ஸ்தலம்.




தேவன் தம் ஆலயத்தில் இருந்தார் என்று நமக்குத் தெரியும். ஆனால் ஆலயத்தின் எந்தப் பகுதியில் இருந்தார்? வெளிப்பிரகாரத்தில் இருந்தாரா? இல்லை; பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தாரா? இல்லை; அவர் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார். தேவனுடைய ஷெக்கினா பிரசன்னம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வாசமாயிருந்தது. சிலுவையின் முன்னடையாளமாகிய பலிபீடம் *வெளிப்பிரகாரத்தில்* இருந்தது. பரிசுத்த ஆவியின் கிரியைக்கு முன்னடையாளமாகிய கழுவும் தொட்டி பலிபீடத்திற்கு நேரே பின்னாக இருந்தது. *பரிசுத்த ஸ்தலத்தில்* சமுகத்து அப்ப மேஜையும், குத்துவிளக்கும், தூபபீடமும் இருந்தன. ஆனால் *மகா பரிசுத்த ஸ்தலத்தில்* என்ன இருந்தது? கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான பெட்டி இருந்தது. ஆகையால் கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார். தேவனுடைய ஷெக்கினா மகிமையான தேவ பிரசன்னமும் அங்கேதான் இருந்தது.

நாம் ஆலயமாயிருக்கிறோம் என்று வேதவாக்கியங்கள் சுட்டிக்காட்டுகின்றன (1 கொரி. 3:16). நாமும் முப்பகுதி மனிதர்கள் என்ற வகையில் சரீரம், ஆத்துமா, ஆவி என்னும் மூன்று பகுதிகளால் ஆக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் நம் ஆள்தத்துவத்தின் எந்தப் பகுதியில் மூவொரு தேவன் வாசம்பண்ணுகிறார்? கர்த்தர் நம் ஆவியில்தான் இருக்கிறார் என்று 2 தீமோத்தேயு 4:22 தெளிவாகக் கூறுகிறது. நம் ஆவியே மெய்யான மகா பரிசுத்த ஸ்தலம். பழைய ஏற்பாட்டு ஆலயத்தின் முன்னடையாளம் மிகத் தெளிவான ஒரு சித்திரத்தை வழங்குகிறது. கிறிஸ்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறார். தேவ பிரசன்னமும் அங்கேதான் இருக்கிறது. இன்று தேவாலயத்தின் இந்த முன்னடையாளம் நம்மில் நிறைவேறியிருக்கிறது. நாம் மூன்று

பகுதிகளைக் கொண்டிருக்கிறோம்; நம் சரீரம் வெளிப்பிரகாரத்துக்கும், நம் ஆத்துமா பரிசுத்த ஸ்தலத்துக்கும், நம் மனித ஆவி மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஒத்திருக்கின்றன. இந்த மகா பரிசுத்த ஸ்தலமே கிறிஸ்துவுக்கும், தேவனுடைய பிரசன்னத்திற்கும் மெய்யான உறைவிடம். இது பின்வரும் வடைபடத்தில் விளக்கப்படுகிறது




"ஆகையால் சகோதரரே நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு...இயேசுவின் இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினால்..." (எபி. 10:19, 20). நாம் இங்கு பூமியில் இருக்கும்போது நாம் இன்று நுழைவதற்கான "மகா பரிசுத்த ஸ்தலம்" எது? வரைபடத்தைப் பாருங்கள். நம் மனித ஆவியே தேவனுடைய உறைவிடமாகிய மகா பரிசுத்த ஸ்தலம்; இதுவே தேவனும் கிறிஸ்துவுமானவர் வாசம்பண்ணுகிற மெய்யான அறை. நாம் தேவனையும் கிறிஸ்துவையும் கண்டுபிடிக்க விரும்பினால் பரலோகத்திற்குப் போகவேண்டிய அவசியம் இல்லை. கிறிஸ்துவில் தேவன் மிகச் சுலபமாகக் கிடைக்கிறார். ஏனெனில் அவர் நம் ஆவியில் இருக்கிறார்.

## மனித ஆவியிலிருந்து ஆத்துமாவைப் பிரித்தல்

இந்தக் காரணத்திற்காகத்தான் நாம் நம் ஆவியிலிருந்து நம் ஆத்துமாவைப் பிரித்தாகவேண்டும் (எபி. 4:12). ஆவியிலிருந்து ஆத்துமாவை நம்மால் பிரிக்கமுடியவில்லையென்றால் நாம் கர்த்தரைத் தொடர்புகொள்ளவேமுடியாது. படத்தைப் பாருங்கள். பிரதான ஆசாரியனால் மகா பரிசுத்த ஸ்தலத்தைக் கண்டுபிடிக்கமுடியவில்லையென்றால் தேவனைத் தொடர்புகொள்ள

அவன் எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியில்தான் முடிந்திருக்கும். முதலாவது அவன் வெளிப்பிரகாரத்துக்குள் நுழையவேண்டும்; கடைசியாக, பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையவேண்டும். அங்கே அவன் தேவனைச் சந்தித்து தேவ பிரசன்னத்தின் ஷெக்கினா மகிமையைக் காண்பான்.

நம் ஆத்துமாவிலிருந்து நம் ஆவியைப் பகுத்தறிய நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எலும்புகள் ஊனை முழுவதும் மறைத்திருப்பதைப்போல, ஆத்துமா ஆவியை முழுவதும் மறைத்து மூடியிருக்கிறது. எலும்புகளைப் பார்ப்பது எளிது. ஆனால் உள்ளே மறைந்திருக்கும் ஊனைப் பார்ப்பது எளிதன்று. நாம் ஊனைப் பெறவேண்டுமானால் எலும்புகளை உடைத்தாக வேண்டும். சில சமயங்களில் ஊனை எலும்புகளிலிருந்து சுரண்டி எடுக்க வேண்டியிருக்கிறது. ஆ! நம் ஆவி நம் ஆத்துமாவுடன் எவ்வளவாய் ஒட்டிக்கொண்டிருக்கிறது! நம் ஆவி ஆத்துமாவுக்குள் முழுவதும் ஒளித்து மறைக்கப்பட்டிருக்கிறது. ஆத்துமாவை இனங்கண்டுகொள்வது எளிது. ஆனால் ஆவியை அறிந்துகொள்வது கடினம். பரிசுத்த ஆவியைப்பற்றி நாம் ஏதோ சிறிதளவு அறிந்திருக்கிறோம். ஆனால் மனித ஆவியை நாம் அறிந்துகொள்ளவில்லை. ஏன்? ஏனென்றால் மனித ஆவி, ஆத்துமாவில் மூடி மறைக்கப்பட்டிருக்கிறது. இதற்காகத்தான் ஆத்துமா உடைக்கப்பட்டாக வேண்டும். மூட்டுகள் எலும்புகளின் மிகப் பலமான பகுதிகளாக இருப்பதைப்போலவே நம் ஆத்துமாவும் மிகப் பலமுள்ளதாக இருக்கிறது. நமக்கு ஓர் ஆவி உண்டு. ஆனால் நம் ஆத்துமா அதை மூடிக்கொண்டிருக்கிறது. நம் ஆத்துமாவை ஆவியிலிருந்து உடைத்தெடுக்க, தேவனுடைய வார்த்தையானது கூர்மையான பட்டயத்தைப்போல ஆத்துமாவை உருவக்குத்தவேண்டும்.

"ஆகையால் தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாய் இருக்கிறது. ஆகையால் அந்தத் திருஷ்டாந்தத்தின்படி ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாய் இருக்கக்கடவோம்" *(எபி. 4:9, 11)*. இது என்ன இளைப்பாறுதல்? இதன் அர்த்தத்தைக் கண்டுபிடிப்பதற்கு நாம் பழைய ஏற்பாட்டிலுள்ள வேறொரு முன்னடையாளத்தைப் பார்க்கவேண்டும். இஸ்ரவேலர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டபின் வனாந்தரத்திற்குக் கொண்டுவரப்பட்டார்கள். அவர்கள் முன்னேறிச்சென்று கானான் தேசத்துக்குள் போகவேண்டும் என்பதுதான் அதின் நோக்கம். கானான் தேசம்தான் அவர்களுடைய இளைப்பாறுதலின் தேசம்.

இந்தத் தேசம் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்கு ஒரு முன்னடையாளம். கிறிஸ்துவே நல்ல கானான் தேசம். அவரே நம் இளைப்பாறுதல். நாம் இளைப்பாறுதலுக்குள் நுழையவேண்டுமென்றால் கிறிஸ்துவுக்குள் நுழைந்தாக வேண்டும். ஆனால் இன்று கிறிஸ்து எங்கே இருக்கிறார்? அவர் நம் ஆவியில் இருக்கிறார் என்று நாங்கள் பதில் கூறுகிறோம். எகிப்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேலர் முன்னேறிச்சென்று கானானுக்குள் நுழைவதற்குப்பதிலாக, பல வருடங்களாக வனாந்தரத்திலேயே அலைந்துதிரிந்தார்கள். இது எதைக் காட்டுகிறது? அநேகக் கிறிஸ்தவர்கள் இரட்சிக்கப்பட்டபின் வெறுமனே ஆத்துமாவிலேயே அலைந்து திரிந்துகொண்டிருப்பதைத்தான் இது குறிக்கிறது. எபிரேயக் கிறிஸ்தவர்கள் அநேகர் இரட்சிக்கப்பட்டிருந்தாலும்கூட, அவர்கள் தங்கள் ஆத்துமாவிலேயே அலைந்து திரிந்துகொண்டிருந்தார்கள் என்பதுதான் இந்தப் புத்தகம் எபிரேயர்களுக்கு எழுதப்பட்டதற்குக் காரணம். அவர்கள் வனாந்தரத்திலிருந்து நல்ல தேசத்திற்குள் நுழையுமாறு முனைந்து முன்னேறிச் செல்லவில்லை. அதாவது அவர்கள் ஆவியில் வாசம்பண்ணின கிறிஸ்துவுக்குள் நுழையவில்லை. நாம் நம் ஆத்துமாவிலேயே அலைந்து திரிந்துகொண்டிருக்கக்கூடாது. மாறாகக் கிறிஸ்து நம் இளைப்பாறுதலாக இருக்கிற நம் ஆவிக்குள் நுழைய நாம் முனைந்து முன்னேறிச்செல்லவேண்டும்.

பின்வரும் வரைபடத்தின்மூலம் இதை நாம் மேலும் விளக்கிக்கூறலாம்.



பழைய காலங்களில், வெளிப்பிரகாரத்துக்குள் நுழைவதற்கு இஸ்ரவேல் மக்கள் எல்லோருக்குமே உரிமை இருந்தது. ஆனால் ஆசாரியர்கள் மட்டுமே பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையமுடியும். மேலும் பிரதான ஆசாரியன் மட்டுமே மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள், அதுவும் வருடத்திற்கு ஒருமுறை மட்டுமே, நுழையமுடியும். இதுவுமன்றி இரட்சிக்கப்பட்டு எகிப்திலிருந்து வனாந்தரத்திற்குக் கொண்டுவரப்பட்ட இஸ்ரவேலர்களில் ஒரு சிலரே நல்ல தேசமாகிய கானானுக்குள் சென்றார்கள்.

நாம் இரட்சிக்கப்பட்டு பல வருடங்களானபோதும் தற்போது நாம் எங்கு வாழ்ந்துகொண்டிருக்கிற கிறிஸ்தவன் என்று நம்மையே நாம் கேட்டுப்பார்க்க வேண்டும் - சரீரத்திலா, ஆத்துமாவிலா, ஆவியிலா? நாம் இப்போது எகிப்திலா, வனாந்தரத்திலா, நல்ல தேசமாகிய கானானிலா - எங்கு இருக்கிறோம்? நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று தெளிவாகத் தெரிந்துகொள்ள கர்த்தரிடம் கேளுங்கள், உங்களையே ஆராய்ந்து பாருங்கள். வெளிப்படையாகச் சொல்வதானால், அநேகக் கிறிஸ்தவர்கள் நாள்முழுவதும் ஆத்துமாவிலேயே, அதாவது வனாந்தரத்திலேயே, அலைந்துகொண்டிருக்கிறார்கள். காலையில் அவர்கள் சிரித்த முகத்துடன் இருக்கிறார்கள். ஆனால் மத்தியானத்துக்குள் துயரம் நிறைந்து தொங்கின முகத்துடன் காணப்படுகிறார்கள். நேற்று அவர்கள் பரலோகங்களில் இருந்ததுபோல் தோன்றினார்கள். ஆனால் இன்று படுபாதாளத்தில் இருக்கிறார்கள். இளைப்பாறுதலின்றி, வழக்கமான அதே பழைய தடத்திலேயே தினந்தோறும் சுற்றிச்சுற்றி வந்து வனாந்தரமான ஆத்துமாவிலேயே அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் இருபது ஆண்டுகளாகக் கர்த்தரைப் பின்பற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் எந்தவிதமான முன்னேற்றமோ வளர்ச்சியோ இல்லாமல், முப்பத்தெட்டு வருடங்களாக அலைந்துதிரிந்த இஸ்ரவேல் மக்களைப்போல இவர்கள் இன்னும் வட்டங்களிலேயே சுற்றிவந்துகொண்டிருக்கிறார்கள். ஏன்? ஏனென்றால் அவர்கள் ஆத்துமாவில் இருக்கிறார்கள். நாம் ஆத்துமாவில் இருக்கும்போது வனாந்தரத்தில் இருக்கிறோம். இதனால்தான் எபிரேயர்களுக்கு நிருபத்தை எழுதியவர் ஆவியிலிருந்து ஆத்துமாவைப் பிரிக்கவேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துகிறார். தேவனுடைய வார்த்தையானது நம்மை உருவக்குத்தவேண்டும். அப்போதுதான் ஆத்துமாவிலிருந்து, மகா பரிசுத்த ஸ்தலமும் நல்ல தேசமுமாகிய நம் மனித ஆவிக்குள் முனைந்துசெல்வது எப்படி என்பதை நாம் தெரிந்துகொள்ளலாம். ஆத்மீக விசுவாசி ஆத்துமா என்னும் வனாந்தரத்திலேயே அலைந்துகொண்டிருக்கிறவன். அங்கு இளைப்பாறுதலில்லை.

பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவதற்கு

ஒரு திரையின் வழியாகக் கடந்துசெல்ல வேண்டியிருந்தது; எனவே மாம்சத்துக்கு முன்னடையாளமான திரை (எபி. 10:19) கிழிக்கப்பட்டு, உடைக்கப்படவேண்டும். அன்றியும் இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்திற்குள் நுழைவதற்கு யோர்தான் நதியைக் கடக்கவேண்டியிருந்தது. இஸ்ரவேலரின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் அடையாளமாக அவர்கள் பன்னிரண்டு கற்களை யோர்தானின் தண்ணீரில் புதைத்தார்கள். மேலும் உயிரோடு எழுப்பப்பட்ட இஸ்ரவேலருக்கு அடையாளமாக வேறு பன்னிரண்டு கற்களைக் கானான் தேசத்துக்குள் கொண்டுவந்தார்கள். இஸ்ரவேலரின் பழைய தலைமுறை யோர்தான் நதியின் மரணத்தண்ணீரில் அடக்கம்பண்ணப்பட்டது. ஜென்மசுபாவமான மனிதன், ஆத்மீக ஜீவன், அல்லது பழைய சுபாவம், திரையைப் போலக் கிழிக்கப்பட்டு, பழைய மனுஷனைப்போல அடக்கம் பண்ணப்படவேண்டும் என்று இவையெல்லாம் திருஷ்டாந்தப் படுத்துகின்றன. அப்போது கிறிஸ்துவை நம் இளைப்பாறுதலாக அனுபவிப்பதற்கு மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள், நல்ல தேசத்திற்குள், நாம் நுழையமுடியும்.

## மனித ஆவியிலிருந்து திசைதிருப்பங்கள்

மூவொரு தேவன் நம் மனித ஆவியில் இருப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி என்பதை நாம் உணர்ந்துகொள்ள இந்தப் படங்கள் நமக்கு உதவுகின்றன. ஒரே ஆவியானவரில் இருக்கும் இந்த மூவொரு தேவன் நம் ஆவியைத் தம் உறைவிடமாகவும், வாசஸ்தலமாகவும் எடுத்திருக்கிறார். எனவே நம் ஆத்துமாவிலிருந்து நம் ஆவியைப் பகுத்துணர நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவர்களாகிய நாம் அநேக ஜென்மசுபாவமான சிந்தனைகளால் நிறைந்திருக்கிறோம் என்பதுதான் பிரச்சினை. நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, நல்லவர்களாக இருக்கவேண்டும், நன்மைசெய்யவேண்டும் என்று நாம் நினைக்கிறோம். ஆனால் தேவனோ தம் பொருளாட்சியில், தம்மையே நம் ஜீவனாகவும், நமக்கு எல்லாமுமாகவும் நமக்குள் உருவாக்க உத்தேசித்துள்ளார். நாம் மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்டு, நம் ஆவியில் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவின் மேலேயே நம் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும். நமக்குள் வாசம்பண்ணுகிற இந்தக் கிறிஸ்துவாகிய குறியிலும், குறிக்கோளிலுமிருந்து நம் கவனம் திசைதிருப்பப்படக்கூடாது. நல்லவனாக இருப்பதைப்பற்றியும், நல்ல கிரியைகளைச் செய்வதைப்பற்றியும் மறந்துவிடுங்கள். அந்த நல்ல காரியங்களையெல்லாம் கீழேபோட்டுவிட்டு, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைந்துவிடுங்கள். அநேகக் கிறிஸ்தவர்கள்

## அத்தியாயம் நான்கு

## உள்வசிக்கும் ஆவியானவருக்குரிய திறவுகோல்

இருபதுக்கும் மேற்பட்ட புதிய ஏற்பாட்டு ஆங்கில மொழிபெயர்ப்புகளில் "ஆவி" (spirit) என்ற வார்த்தை வித்தியாசமான விதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. சில மொழிபெயர்ப்புகளில், சில குறிப்பிட்ட இடங்களில், அந்த வார்த்தை பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும் வகையில் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மற்ற மொழிபெயர்ப்புகளில் அதே இடங்களில் அது பெரிய எழுத்தில் எழுதப்படவில்லை. எடுத்துக்காட்டாக King James Version என்ற ஆங்கில மொழிபெயர்ப்பில் ரோமர் *8:2*-லுள்ள "ஆவியின் பிரமாணம்" என்பதிலுள்ள "ஆவி" என்ற வார்த்தை பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வசனத்திலுள்ள "ஆவி" என்ற அதே வார்த்தையை, ஒரு கிரேக்க வரிபிளப்புப் பாடம் (Greek Interlinear Text) *பெரிய எழுத்தில் எழுதவில்லை.* K.J.V மொழிபெயர்ப்பில், ரோமர் *8:4*-ல் உள்ள "ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில்" என்பதில் வரும் "ஆவி" என்ற வார்த்தையும் பெரிய எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் கிரேக்க வரிபிளப்புப் பாடம் இதையும் *பெரிய எழுத்தில் எழுதவில்லை.* மறுபடியும், ஐந்தாம் வசனத்திலுள்ள "ஆவியின்படி நடக்கிறவர்கள்" என்பதில் வரும் "ஆவி" என்ற வார்த்தையை K.J.V பெரிய எழுத்தில் எழுதியிருக்கிறது. ஆனால் கிரேக்க வரிபிளப்புப் பாடம் இந்த வார்த்தையைப் பெரிய எழுத்தில் எழுதவில்லை.

இப்படி வித்தியாசமான மொழிபெயர்ப்புகளுக்குக் காரணம் என்ன? இப்படிப்பட்ட பகுதிகளில் வரும் "ஆவி" பரிசுத்த ஆவியைக் குறிக்கிறதா அல்லது மனித ஆவியைக் குறிக்கிறதா என்று தீர்மானிப்பது எந்த மொழிபெயர்ப்பாளருக்குமே கடினம்தான். நம் ஆவி பரிசுத்த ஆவியுடன் கலந்திணைந்திருப்பதால், இரண்டு ஆவிகளும் ஓர் ஆவியாக ஒன்றித்திருக்கின்றனர் *(1 கொரி. 6:17)*. ஆகையால் இந்த ஆவி மனித ஆவிதான் என்று ஒருவர் வலியுறுத்தும்போது, வேறொருவர் இந்த ஆவி பரிசுத்த ஆவிதாம் என்றும் கூறலாம். நிச்சயமாக, சில பகுதிகளின் இடஅமைப்பு அதில் வரும் ஆவி பரிசுத்த ஆவியையே குறிக்கிறது என்று தெளிவாக்குகிறது. அதுபோல மற்ற பகுதிகளின் இடஅமைப்பு அதில் வரும் ஆவி மனித

ஆவியையே குறிக்கிறது என்று தெளிவாக்குகிறது.

"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாக இருந்தாலும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்" (ரோமர் 8:10). இந்த வசனத்தின் இடஅமைப்பு இங்கே வரும் ஆவி பரிசுத்த ஆவி இல்லை என்று தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. ஏனென்றால் இங்கே ஆவி சரீரத்துடன் ஒப்பிடப்படுகிறது. பரிசுத்த ஆவியை நம் சரீரத்துடன் ஒப்பிடமுடியாது. நம் மனித ஆவியைத்தான் நம் சரீரத்துடன் அப்போஸ்தலர் ஒப்பிடுகிறார். இந்த வசனத்தின் அர்த்தம் என்ன? ஆரம்பத்தில் நம் சரீரம் பாவத்தினிமித்தம் மரித்ததாயிருந்தது. இப்போது கிறிஸ்து நம்மில் இருக்கிறார். நம் பாவ சரீரமானது பாவத்தினிமித்தம் இன்னும் மரித்ததாக இருந்தபோதும், நம் ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும், ஜீவனால் நிரம்பியதாகவும் இருக்கிறது. எனவே இந்த வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "ஆவி" பரிசுத்த ஆவியல்ல, மாறாக மனித சரீரத்துடன் ஒப்பிடப்படுகிற மனித ஆவியே.

இன்னொரு வசனமான ரோமர் 8:11-ல் வரும் ஆவி தேவனுடைய ஆவியையே குறிக்கிறது என்பது வெளிப்படை. "எழுப்பினவருடைய ஆவி" என்ற சொற்றொடர் அது யாருடைய ஆவி என்பதை வரையறுக்கிறது. "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்." கிறிஸ்து நம்மில் இருந்தபோதும், நம் சரீரமானது பாவத்தினிமித்தம் இன்னும் மரித்ததாகவே இருக்கிறது என்று 10-ஆம் வசனம் கூறுகிறது. இருந்தபோதும், கிறிஸ்து நம்முள் வாசம்செய்வதால், நம் பலவீனமான சாவுக்கேதுவான சரீரங்கள் உயிர்ப்பிக்கப்படும், புத்துயிரூட்டப்படும், பலப்படுத்தப்படும் என்று 11-ஆம் வசனம் தெரிவிக்கிறது. கிறிஸ்து நம்மில் வாழ்ந்துகொண்டிருப்பதால், பாவத்தினிமித்தம் மரித்துப்போன சாவுக்கேதுவான நம் சரீரங்களும்கூட நம் ஆவிக்குள் வாசம்பண்ணிக்கொண்டிருக்கும் தெய்வீக ஆவியால் உயிர்ப்பிக்கப்படவும், புத்துயிரூட்டப்படவும் முடியும். உள்வசிக்கும் ஆவியானவர் நம்மை நம் ஆவியில் மட்டும் ஜீவனுள்ளவராக்காமல், இறுதியில் நம் சரீரத்திலும்கூட நம்மை ஜீவனுள்ளவராக்குவார்.

## மனித ஆவியே திறவுகோல்

பரிசுத்த ஆவிக்கும் மனித ஆவிக்குமிடையேயுள்ள வேற்றுமையை நாம் ஏன் வலியுறுத்துகிறோம்? ஏனென்றால்,

உள்வசிக்கும் ஆவியையும் நாம் அறிந்துகொள்ளவில்லை; மனித ஆவிதான் பரிசுத்த ஆவியின் மெய்யான வாசஸ்தலம் என்பதையும் நாம் உணர்ந்துகொள்ளவில்லை. இதுவே நம் பெரிய பிரச்சினை. இந்த இரண்டு ஆவிகளும் ஒரே ஆவியாக கலந்திணைந்துகொண்டேயிருக்கின்றனர் என்பதையும் நாம் அறியவில்லை. இது ஒரு பரிதாபம்! இதுதான் தேவனுடைய பொருளாட்சியின் குறி. அநேகக் கிறிஸ்தவர்கள் இந்தக் குறியைத் தவறவிட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது திறவுகோல் தொலைந்துபோனதால் நுழையமுடியாத ஒரு வீட்டைப்போல இருக்கிறது. அந்த வீட்டிலுள்ள எல்லாவற்றையும் அனுபவித்துமகிழ்வதற்குத் திறவுகோல் மட்டுமே வீட்டை நமக்குத் திறந்துகொடுக்கும். பல நூற்றாண்டுகளாக எதிரி திறவுகோலை மறைத்துவிட்டான். திறவுகோல் எது? *நம் மனித ஆவியே பரிசுத்த ஆவியின் வாசஸ்தலம் என்பதும், நம் மனித ஆவி இந்த அதிசயமான பரிசுத்த ஆவியுடன் ஒரே ஆவியாயிருக்கிறது என்பதுமே அந்தத் திறவுகோல்.*

தேவனுடைய வார்த்தையானது ஜீவிக்கிறதாயும், கூர்மையானதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் அதிகக் கூர்மையானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயுமிருக்கிறது. இந்த வசனம் ஏன் எழுதப்பட்டது என்றும், அதுவும் எபிரேயர் 4-ஆம் அதிகாரத்தில் ஏன் எழுதப்பட்டது என்றும் புரிந்துகொள்ள கடந்த முப்பது ஆண்டுகளுக்கும்மேலாக நான் முயன்றேன். கர்த்தர் காரணத்தை வெளிப்படுத்திவிட்டார். வனாந்தரத்திலிருந்து நல்ல தேசத்திற்கும், அலைந்துதிரிந்துகொண்டிருக்கும் நிலையிலிருந்து சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவில் இளைப்பாறுகிற நிலைக்கும் நாம் முனைந்து முன்னேறிச்செல்லும்படி, எபிரேயரின் புத்தகம் நம்மை ஊக்குவிக்கிறது. அந்தக் காலகட்டத்தில் எபிரேய கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவை விட்டுவிட்டு யூதமதத்துக்கு இழுத்துச் செல்லப்படக்கூடிய அபாயத்தில் இருந்தார்கள். இது எகிப்து தேசத்திற்கே திரும்பிப்போவதற்கு ஒப்பாகும். யூதமதத்திலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டு, இளைப்பாறுதல் நிறைந்த நல்ல தேசத்துக்குள் நுழைய உத்தேசித்திருந்தார்கள். ஆனால் யூதமதத்துக்கும் கிறிஸ்துவுக்குமிடையே நடுவழியில் அவர்கள் அலைந்துதிரிந்துகொண்டிருந்தார்கள். அலைந்துகொண்டிருந்த நிலையைக் கடந்து, கிறிஸ்துவை சகலத்தையும் உள்ளடக்கிய ஜீவனாகவும், இளைப்பாறுதலாகவும் தங்களுக்கு எடுத்துக்கொண்டு முனைந்து முன்னேறிச்செல்லவேண்டும் என்று அவர்களை ஊக்குவிப்பதற்காகவே இந்த நிருபம் எபிரேயருக்கு எழுதப்பட்டது.

எபிரேயர் நிருபம் மகா பரிசுத்த ஸ்தலத்தையும்கூடக்

குறிப்பிடுகிறது. மகா பரிசுத்த ஸ்தலம் என்பது என்னவென்று பல வருடங்களாக என்னால் புரிந்துகொள்ளமுடியவில்லை. ஒருவகையில் மகா பரிசுத்த ஸ்தலம் நம் ஆவிதான் என்று உணர்ந்துகொள்ள இறுதியில் கர்த்தர் எனக்கு உதவிசெய்தார். இன்று நம் மனித ஆவியே மகா பரிசுத்த ஸ்தலம். ஆலயத்தின் மூன்று பகுதிகளும் மனிதனின் மூன்று பகுதிகளாகிய ஆவி, ஆத்துமா, சரீரத்துக்கு ஒத்திருக்கின்றன. ஆலயத்தின் மிக உள்ளார்ந்த பகுதியாகிய மகா பரிசுத்த ஸ்தலம் மனிதனின் மிக உள்ளார்ந்த பகுதியாகிய மனித ஆவியைச் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான உடன்படிக்கைப்பெட்டி மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்ததைப்போலவே, இன்று கிறிஸ்து நம் ஆவியில் இருக்கிறார். ஆகவே நம் மனித ஆவியே நாம் தேவனைத் தொடர்புகொள்ளக்கூடிய மகா பரிசுத்த ஸ்தலம். நம் ஆவியை நம்மால் பகுத்துணரமுடியாவிட்டால், மகா பரிசுத்த ஸ்தலம் இருக்கும் இடத்தை நம்மால் கண்டுபிடிக்க இயலாது.

இதுவுமன்றி, இன்று மூவொரு தேவன் சிருஷ்டிப்பு, மனிதமாம்சமாகுதல், பூமியில் அவருடைய வாழ்க்கை மற்றும் பாடுகள் ஆகிய அனைத்தையும் நிறைவேற்றிவிட்டார் என்பதில் நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும்; அவர் மரணத்திற்குள் சென்று மரணத்தினூடாய்க் கடந்துசென்றிருக்கிறார்; அவர் உயிர்த்தெழுந்திருக்கிறார்; பரலோகத்திற்கு ஏறிச்சென்றிருக்கிறார்; சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டிருக்கிறார். அதிசயமான மூவொரு தேவன் சகலத்தையும் அடைந்துவிட்டார். இந்த நிஜங்களெல்லாம் நமக்குள் வந்திருக்கும் பரிசுத்த ஆவியில் இருக்கின்றன. முக்கியமான காரியம் என்னவென்றால், இந்தப் பரிசுத்த ஆவி இப்போது தேவனுடைய உறைவிடமாகிய நம் மனித ஆவிக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறார். நம் ஆவியே தேவனைப் பெற்றுக்கொண்டு அவரைத் தன்னுள் அடக்கிக்கொள்ளக்கூடிய உறுப்பாக இருக்கிறது. இந்த அதிசயமான ஆவியைத் தொடர்புகொள்ள வேண்டுமென்றால் நாம் நம் ஆவியை அறிந்தாகவேண்டும். நீங்கள் என்னைத் தொடர்புகொள்ள முற்படுவீர்கள் என்றால் நான் எங்கே வாழ்கிறேன் என்று நீங்கள் அறிந்தாகவேண்டும். எபிரேயர் *4:12* மகா பரிசுத்த ஸ்தலமாகிய நம் ஆவிக்குள் நாம் முனைந்து முன்னேறிச்செல்லவேண்டும் என்று நம்மை ஊக்குவிப்பதற்காக எழுதப்பட்டது. நம் ஆவியைப் பகுத்துணர்வது எப்படி என்று நமக்குத் தெரியாவிட்டால், கர்த்தர் இன்று வாசம்பண்ணுகிற இடமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தை நாம் கண்டுபிடிக்கமுடியாது. தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி. தேவன் தம்மைப் பகிர்ந்தளிக்கும் மெய்யான இடம் நம் ஆவியே. நம் ஆவியை

நம்மால் பகுத்துணரமுடியும்போதும், நம் ஆவியை இயக்கிக் கர்த்தரைத் தொடர்புகொள்ள இயலும்போதும், கர்த்தர் நம்மில் பரவி வியாபித்து, நம்மைப் பூரிதமாய் நிரப்பி, அவருடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்குவார்.

## திறவுகோலிலிருந்து திசைதிருப்பங்கள்

### (1) நன்மைகள்

நம் ஆவியை நாம் பகுத்துணர்ந்துவிடாதவாறு நம்மை முறியடிக்க எதிரி முயல்கிறான். நாம் இரட்சிக்கப்பட்டவுடனேயே அவன் இதைச் செய்கிறான். நன்மைசெய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை எடுக்க அவன் நமக்கு உதவிசெய்வதின்மூலம் இதைச் செய்கிறான். இந்தத் தந்திரமான ஆலோசனைக்கு யாருமே விதிவிலக்கு இல்லை. இன்று காலையில்கூட ஒரு சிலர், "கர்த்தாவே, நான் உம் சித்தத்தைச் செய்ய விரும்புகிறேன்; உம்மைத் திருப்திப்படுத்தக்கூடிய காரியங்களைச் செய்ய என்னால் இயன்றமட்டும் முயல்வேன்," என்று ஜெபித்திருப்பார்கள். இது நல்ல ஜெபம்போல்தான் தோன்றுகிறது. ஆனால் இது கர்த்தரிடமிருந்து வந்த ஜெபமல்ல. இது எதிரியிடமிருந்து வருகிறது. எப்போதெல்லாம் இப்படிப்பட்ட நல்ல சிந்தனைகள் நம்மிடத்தில் எழுகிறதோ, அப்போதெல்லாம் நாம் குதித்தெழுந்து, நம்மைவிட்டு அப்பாலே போகும்படிச் சாத்தானிடம் முழங்கவேண்டும். என் கிறிஸ்தவ அகராதியில் "தீமை" என்ற வார்த்தையில்லை, "நன்மை" என்ற வார்த்தையும் இல்லை! தொடக்கம்முதல் முடிவுவரை என் கிறிஸ்தவ அகராதியில் "கிறிஸ்து" என்ற ஒரேவொரு வார்த்தைதான் இருக்கிறது. எனக்கு நன்மையோ, தீமையோ புரியவில்லை. நன்மைசெய்வதற்கு எனக்கு உதவியும் வேண்டாம்; கிறிஸ்து மட்டுமே எனக்கு வேண்டும்.

"என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். ஒருவன் என்னிலும், நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்," என்ற கர்த்தருடைய வார்த்தைகளை இப்போது நீங்கள் புரிந்துகொள்ளமுடியும். இங்கே சுயமுயற்சிக்கு இடமேயில்லை. உள்வசிப்பவரில் நாம் நிலைத்திருக்கவேண்டும்: நம்மில் நிலைத்திருக்க அவரை அனுமதிக்கவேண்டும். இதுவே காரியம். அப்போது கிறிஸ்துவினுடைய சகல ஐசுவரியங்களும் நமக்குள் உருவாக்கப்பட்டு, நம்மூலம் வெளிப்படும். கனிகொடுத்தல் என்பது உள்வசிக்கும் கிறிஸ்துவினுடைய செயல். "எனக்கு இதையும் தெரியாது; அதையும் தெரியாது; ஒன்றே ஒன்றுதான் எனக்குத் தெரியும். நான் ஒரு கிளை. அவரே திராட்சைச்செடி.

நான் அவரில் நிலைத்திருக்கவேண்டும். அவர் என்னில் நிலைத்திருக்கவேண்டும்," என்று நாம் கூறவேண்டும். எந்தவிதமான புறத்தூண்டுதலுமின்றி தானாகவே நாம் கனிகொடுப்போம். இதுதான் தொலைந்துபோன திறவுகோல். நன்மைசெய்ய முயல்வது என்பது உண்மையாகவே ஒரு சோதனையாகவும், கிறிஸ்துவை அனுபவிப்பதிலிருந்து நம் கவனத்தைத் திசைதிருப்புவதாகவும், இருக்கிறது.

## (2) **உபதேசங்கள்**

தேவனைத் தேடும் இருதயம் உள்ளவர்களையும்கூடக் கிறிஸ்துவிடமிருந்து திசைதிருப்ப எதிரி பயன்படுத்துகிற இன்னொரு தந்திரம் 'உபதேசங்கள்.' கிறிஸ்தவர்களை ஜீவிக்கும் கிறிஸ்துவைவிட்டுத் திசைதிருப்புவதற்கு நித்தியப் பாதுகாப்பு, காலகட்டங்கள், முன்குறித்தல், சம்பூரண கிருபை போன்ற பல உபதேசங்களை, எதிரி பல நூற்றாண்டுகளாக அதிகமாகப் பயன்படுத்தி வருகிறான். வேதத்தில் மிகுந்த பரிச்சயமுள்ள சில கிறிஸ்தவர்களை நான் அறிவேன். அவர்களில் ஒருவர் "நடமாடும் ஒத்தவாக்கியநூல்" என்றுகூட அழைக்கப்பட்டார். வேதத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை உங்களால் கண்டுபிடிக்க முடியாவிட்டால், அது இருக்கிற புத்தகம், அதிகாரம், வசனம் எல்லாவற்றையும் உடனே அவர்களால் கூறமுடியும். ஆனால் கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனாகத் தொடர்புகொள்வதைப்பற்றி அவர்களுக்குக் 'கடுகளவே' தெரியும் என்று என்னால் சாட்சிகூறமுடியும். வேத அறிவைப் பெற்றிருப்பது என்பது ஒரு காரியம். ஆனால் வேதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஜீவிக்கிறவரை அறிந்துகொள்வது என்பது முற்றிலும் வேறொரு காரியம். வேதவாக்கியங்கள்மூலம் கிறிஸ்துவைத் தொடர்புகொள்ளவேண்டும். ஆனால் ஏராளமான கிறிஸ்தவர்கள் வேதத்தைத் தங்கள் கரத்திலும், தங்கள் நினைவிலும் மட்டுமே வைத்துக்கொண்டு, மிகக் குறைவான கிறிஸ்துவையே தங்கள் ஆவியில் வைத்திருப்பது வருந்தத்தக்கது. மோசேயின் நியாயப்பிரமாணம் மக்களைக் கிறிஸ்துவினிடத்தில் கொண்டுவரவும், அவர்களைக் கிறிஸ்துவுக்காகக் காவல்பண்ணவுமே கொடுக்கப்பட்டது. மக்கள் கிறிஸ்துவை அறிந்துகொள்ள உதவவே அது கொடுக்கப்பட்டது. ஆனால் அநேகர் வெறுமனே நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடித்துவிட்டு, கிறிஸ்துவையோ அலட்சியப்படுத்திவிட்டார்கள். ஆகவே நியாயப்பிரமாணம் தவறாகப் பயன்படுத்தப்பட்டது. இன்றும்கூட இந்தப் பிரச்சினை மாறாமல் அப்படியே இருக்கிறது. இதே அடிப்படைக் கோட்பாடு வேதத்திலுள்ள எல்லாப் போதனைகளுக்கும், உபதேசங்களுக்கும் பொருந்தும்.

உபதேசங்கள் கிறிஸ்துவை அனுபவிப்பதற்கான வழிகளே. ஆனால் கிறிஸ்தவர்களோ கிறிஸ்து இருக்கவேண்டிய இடத்தில் உபதேசங்களையும் அறிவையும் வைத்துக்கொண்டு, இவைகளைப் பயன்படுத்தி அவரை இடமாற்றம்செய்துவிடுகிறார்கள்.

### (3) வரங்கள்

எதிரி பயன்படுத்துகிற இன்னொரு காரியம் ஆவிக்குரிய வரங்களைப்பற்றிய விஷயமாகும். வரங்கள் தேவனுடைய பொருளாட்சியுடன் எவ்வாறு சம்பந்தப்பட்டுள்ளன என்பதைப் பார்ப்பதற்கு வரங்களைப்பற்றிய சரியான அறிவு தேவை. இது எல்லா வரங்களுக்கும் பொருந்தும். வரம்பெற்ற அநேகர் தங்கள் வரங்களுக்கு அளவுக்கதிகமான கவனத்தைச் செலுத்துகிறார்கள்; ஆனால் உள்வசிக்கும் கிறிஸ்துவை ஏறக்குறைய அசட்டைசெய்கிறார்கள். உள்வசிக்கும் கிறிஸ்துவே தேவனுடைய பொருளாட்சியின் குறி. வரங்களெல்லாம் இதற்காகத்தான். பலருக்கு அந்நிய பாஷையில் பேசுவது எப்படி என்றும், சுகத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி என்றும் தெரியும். ஆனால் ஆவியைப் பகுத்துணர்வது எப்படி என்றும், கிறிஸ்துவைத் தொடர்புகொள்வது எப்படி என்றும் அவர்களுக்குத் தெரியாது. நான் எந்த வரத்திற்கும் எதிராகப் பேசவில்லை; ஆனால் ஒரு காரியத்துக்கு எதிராக இருக்கிறேன். அதாவது வரங்களுக்கு முழுக் கவனத்தையும் செலுத்திவிட்டு, கிறிஸ்துவைத் தொடர்புகொள்வதற்கு அவசியமான “ஆவியைப்” பகுத்துணர்வதை அலட்சியம் செய்வதற்கு நான் விரோதி. இது நிச்சயமாகத் தவறு.

ரோமர் புத்தகம் வரங்களுக்கு மிகக் குறைவான இடத்தைத்தான் ஒதுக்குகிறது. ரோமர் புத்தகம் கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் நடத்தையின் பொதுவான மாதிரிச் சித்திரம். இப்படிப்பட்ட மாதிரிப் படத்தில் வரங்களைப்பற்றி அதிகமான குறிப்புகள் காணப்படவில்லை. மொத்தமுள்ள பதினாறு அதிகாரங்களில், பன்னிரண்டாவது அதிகாரம் மட்டுமே வரங்களைப்பற்றிக் கொஞ்சம் பேசுகிறது. பன்னிரண்டாம் அதிகாரம் முழுவதையும் வாசித்துப்பார்த்தால் தீர்க்கதரிசன வரம் மட்டுமின்றி, இரக்கம்பாராட்டுகிற வரமும், உலகப்பிரகாரமான பொருட்களைப் பகிர்ந்துகொடுக்கிற வரமும்கூடக் குறிப்பிடப்பட்டுள்ளன என்று நாம் காணலாம் (ரோமர் 12:5-8). இங்கே குறிப்பிடப்பட்டுள்ள வரங்கள் ஒவ்வொரு விசுவாசியும் ஜீவிக்கிற கிறிஸ்துவை கிருபையாக அனுபவிப்பதால் விளைகின்றன. கிறிஸ்தவர்கள் எல்லாரிடத்திலும் தீர்க்கதரிசன வரம் இல்லை. அநேக வரங்களுள் இதுவும் ஒன்று, அவ்வளவே. எந்த வரத்தையும் எதிர்ப்பதற்கு நாம் முயலவில்லை. எனினும் ஒவ்வொரு வரத்திற்கும் நாம்

ஏற்ற விகிதத்தைக் கொடுக்கவேண்டும். இல்லையென்றால் நாம் சமநிலையற்றவர்களாகிவிடுவோம்.

1 கொரிந்தியர் 12, 14-ஆம் அதிகாரங்களிலும் வரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. கொரிந்து விசுவாசிகளிடத்தில் எல்லா வரங்களும் இருந்தன. அவர்கள் யாதொரு வரத்திலும் குறைவற்றவர்களாக இருந்தார்கள் (1 கொரி. 1:7). கொரிந்தியர்களிடத்தில் எல்லா வரங்களும் இருந்தபோதும் அவர்களுடைய ஆவிக்குரிய நிலைமையோ 'மாம்சத்துக்குரியது என்றும், முதிர்ச்சியடையாததென்றும்' விவரிக்கப்படுகிறது (1 கொரி. 3:1). நமக்கு வரங்கள் இருக்கலாம். ஆனாலும் தொடர்ந்து நாம் குழந்தைகளாகவும், மாம்சத்துக்குரியவர்களாகவும் இருக்கமுடியும். இந்த வரங்களிலிருந்து நாம் உதவியைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆனால் இன்னும் அதிகமான காரியங்களை நாம் கற்றுக்கொண்டாக வேண்டும். அடையாளங்களும், ஞானமும் வரங்கள் (1 கொரி. 1:22). ஆனால் அப்போஸ்தலனோ "சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்து"வையும், "தேவபெலனும் தேவஞானமுமான கிறிஸ்து"வையும் பிரசங்கித்தார். கிறிஸ்துவையே பெலனும், ஞானமுமாகக் கொடுக்கவேண்டும் என்பதுதான் அப்போஸ்தலனுடைய ஒரே நோக்கமேயல்லாமல், வரங்கள் மற்றும் அடையாளங்களின் செயல்பாடுகளைக் காட்டவேண்டும் என்பது அவருடைய நோக்கமல்ல. வரங்கள் உதவியாக இருக்கின்றன. ஆனால் இலக்கும் குறியும் அவைகளல்ல. உள்வசிக்கும் கிறிஸ்துவே குறி. இந்தக் குறியை உணர்ந்துகொள்ள மட்டுமே வரங்கள் நமக்கு உதவிசெய்யவேண்டும்.

1 கொரிந்தியர் 12 அந்நிய பாஷை உட்பட பல ஆவிக்குரிய வரங்களைக் குறிப்பிடுகிறது. ஆனால் அந்த அதிகாரத்தின் முடிவில், பவுல், "இன்னும் மேன்மையான வழியைக்" குறிப்பிடுகிறார். கிரேக்க மூலபாடல் "மிகவும் மேன்மையான வழி" என்று இதை இன்னும் அழுத்தமாக உரைக்கிறது. எது மிகவும் மேன்மையான வழி? 13-ஆம் அதிகாரம் இந்த வசனத்தின் தொடர்ச்சி. மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் நாம் பேசினாலும் அன்பு நமக்கிராவிட்டால் நாம் சத்தமிடுகிற வெறும் வெண்கலம்போலவே இருப்போம். நாம் வெறும் சத்தத்தை மட்டுமே கேட்கிறோம். ஆனால் ஜீவனைப் பார்க்கவில்லை. அன்பே ஜீவனின் வெளியாக்கம். திட்டவட்டமாகப் பேசுவதானால், பாஷைகள் ஜீவனுக்கடுத்த விஷயமல்ல என்பதையே இது நிரூபிக்கிறது. ஜீவனைக் கருத்தில் கொள்ளாமல் வெறுமனே பாஷையில் பேசுவது சத்தமிடுகிற வெண்கலத்திற்கு ஒப்பாகும். அடிக்கடி பாஷையில் பேசுகிற அநேக மக்கள், தங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் மிகவும்

மேலெழுந்தவாரியானவர்களாகவும், முதிர்ச்சியடையாதவர்களுமாக இருக்கிறார்கள்.

மாறாக 14-ஆம் அதிகாரத்தில் அப்போஸ்தலர், சபையின் ஆவிக்குரிய இலாபத்திற்காக நம் ஆவியை இயக்கவேண்டும் என்று நம்மை உற்சாகப்படுத்துகிறார். முழு அதிகாரத்தின் முடிவான தீர்மானம் இதுதான். பாஷைகளில் பேசுகிறதில் மற்ற அனைவரையும்விடப் பவுல் மிஞ்சினவராயிருந்தாலும், கூட்டங்களில் அந்நிய பாஷைகளில் 10,000 வார்த்தைகளைப் பேசுவதைவிட, கருத்தோடு ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே அதிகமாக விரும்பினார் (வசனம் 18, 19). அப்போஸ்தலர் இந்த அதிகாரங்களில், பாஷைகளில் பேசுவதைப் பொறுத்தவரையில் கொஞ்சம் எதிர்மறையான மனநிலையைத்தான் வெளிப்படுத்துகிறார். வரங்களைப் பயன்படுத்துவதற்கு அவர்களை உற்சாகப்படுத்துவதைப்பார்க்கிலும், பிழைகளைச் சீர்செய்யக்கூடிய சில புத்திமதிகளைக் கொடுத்து, கொரிந்தியர்களைச் சரிசெய்கிறார். ஆகையால் வரங்களனைத்தும் கிறிஸ்துவை அனுபவிப்பதற்காகவே என்றும், அவைகள் ஏற்ற விகிதத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் நாம் முடிவுசெய்யவேண்டும்.

கிறிஸ்து எல்லாமுமாக நம் ஆவிக்குள் உருவாக்கப்படுவதுதான் தேவனுடைய பொருளாட்சியின் திறவுகோல். இந்தக் குறியை அடைவதற்கு, குறிப்பிட்ட சில போதனைகளும், குறிப்பிட்ட சில வரங்களும் நிச்சயமாக நமக்குத் தேவைப்படுகின்றன. ஆனால் இந்தக் குறியின் இடத்தை உபதேசங்களும், வரங்களும் எடுத்துக்கொள்ள நாம் அனுமதிக்கக்கூடாது. போதகங்களோ, வரங்களோ குறி அல்ல. நம் ஆவிக்குள் வாசம்பண்ணுகிற ஜீவிக்கும் ஆவியாகிய கிறிஸ்துவே குறி; சிலர் இந்தக் குறியை அடைவதற்கு அவர்களுக்கு உதவியாக ஒருவேளை ஒரு வரம் தேவைப்படலாம். அனைவருக்கும் ஒரேவிதமான வரம் தேவைப்படுவதில்லை. சிலருக்குத் தீர்க்கதரிசன வரம் தேவைப்படலாம், வேறு சிலருக்குப் பாஷைகளில் பேசும் வரம் தேவைப்படலாம், சிலருக்குக் குணமாக்கும் வரம் தேவைப்படலாம், வேறு சிலருக்குக் குறிப்பிட்ட சில உபதேசங்கள் தேவைப்படலாம். அநேக மக்கள் குறிப்பிட்ட சில போதனைகள்மூலம் கிறிஸ்துவிடம் ஈர்க்கப்படுகிறார்கள். ஆனால் நம் ஆவியில் உள்வசிக்கும் கிறிஸ்துவே தேவனுடைய பொருளாட்சியின் திறவுகோல் என்பதில் நாம் மிகத் தெளிவாக இருப்போமாக. நம் முழுக் கவனத்தையும் இந்தத் திறவுகோலுக்கே நாம் செலுத்தவேண்டும். உள்வசிக்கும் கிறிஸ்துவை நாம் நம் ஆவியில் ஏற்கெனவே உணர்ந்திருந்தால், உண்மையாகவே

எந்தவிதமான போதனைக்கோ, வரத்துக்கோ பிரத்தியேகமான கவனத்தைச் செலுத்தவேண்டிய அவசியம் இல்லை.

ஆபிரகாம், ஈசாக்குக்கு ஒரு மனைவியைக் கொள்ளுமாறு தன் வயதான வேலைக்காரனை அநேகப் பரிசுப் பொருட்களுடன் அனுப்பினான். ரெபெக்காள் ஈசாக்கைச் சந்திக்கப் புறப்பட்டுப் போகவேண்டும் என்று உணர்ந்துகொள்ள இந்தப் பரிசுப் பொருட்களெல்லாம் அவளுக்கு உதவிசெய்தன. இதுவே வரங்களின் உண்மையான இடம். ரெபெக்காள் பரிசுப் பொருட்களைப் (வரங்களை) பெற்றுக்கொண்டபின் அவைகளை அவள் மறந்துவிட்டாள்போல் தோன்றுகிறது. அவள், "நான் ஈசாக்கினிடத்தில் போவேன்! இந்தப் பரிசுப் பொருட்களை அனுபவித்துமகிழ்ந்துகொண்டு இங்கேயே தங்கிவிடுவதில் நான் திருப்தியடையமாட்டேன். இவைகளை அனுபவித்துமகிழ்ந்துவிட்டு ஈசாக்கை மறந்துவிடுவதா! என் மணவாளனைச் சந்திக்க நான் புறப்பட்டுப்போவேன்," என்று கூறினாள். ரெபெக்காள் ஈசாக்கைத் திருமணம்செய்தபின் இந்தப் பரிசுப் பொருட்களைப்பற்றிய எந்தக் குறிப்பும் அங்கே இல்லை. ஈசாக்குடன் வாழ்வதை ரெபெக்காள் தினம்தினம் அனுபவித்துமகிழ்ந்தாள். பாஷைகளில் பேசுவதைவிட கிறிஸ்து மிகச் சிறந்தவர்; தீர்க்கதரிசனத்தைவிட அவர் மிகச் சிறந்தவர்; மற்ற எல்லாக் காரியங்களையும்விட அவர் மிகச் சிறந்தவர்.

என் கையில் திறவுகோல் இருக்கும்போது, எல்லாக் கதவுகளையும் திறந்து, முழு வீட்டையும் நான் அனுபவித்துமகிழமுடியும். என்னிடத்தில் திறவுகோல் இல்லையென்றால், நான் பூட்டு-ஆசாரியைப் பார்க்கவேண்டும்; ஆனால் என்னிடம் ஒரு திறவுகோல் இருந்தால், பூட்டு-ஆசாரியனுடைய சேவை தேவையில்லை. மெய்யான தேவை திறவுகோல்தான், பூட்டு-ஆசாரி இல்லை. என்னிடம் திறவுகோல் இருக்கும்போது, பூட்டு-ஆசாரி தேவையில்லாததுபோல, நம் ஆவியில் உள்வசிக்கும் கிறிஸ்துவை நாம் உணர்ந்தறியும்போது, வரங்களும், உபதேசங்களும் தேவையில்லை.

திறவுகோலைக் கண்டுபிடிப்பதற்கு ஒருசில வரங்களும், உபதேசங்களும் சிலருக்குத் தேவைப்படலாம்; ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம், கிறிஸ்துவை உணர்ந்தறிய நம் கையில் திறவுகோல் இருக்கிறவரை, போதனைகளையும், வரங்களையும் நாம் மறந்துவிடுவோமாக. நம் ஆவியைப் பகுத்துணர்வதற்கும், ஜீவிக்கிற கிறிஸ்துவைத் தொடர்புகொள்வதற்கும், ஐக்கியங்கொள்வதற்கும், நாம் முழுக் கவனம்செலுத்துவோமாக. நாம் திறவுகோலை பெறுவதற்காகவே தேவன் குறிப்பிட்ட சில போதனைகளையும், வரங்களையும் ஏற்ற விகிதத்தில்

பகிர்ந்தளித்திருக்கிறார். இந்த இரக்கத்திற்காக நாம் கர்த்தரைத் துதிக்கலாம். ஆனால் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். பூட்டு-ஆசாரியை ஒவ்வொருநாளும் தேடிப்போகும் அளவுக்கு நாம் பூட்டு-ஆசாரிக்கு அதிக கவனத்தைக் கொடுக்கக்கூடாது. திறவுகோலைப் பெற்றுக்கொண்டோமா! பூட்டு-ஆசாரிக்கு நன்றிசொல்லி அவரை விட்டுவிடுங்கள்! மாளிகைக்குள் வந்து அதின் ஐசுவரியங்களைக் கண்டுபிடிப்பதற்குத் திறவுகோலைப் பயன்படுத்துங்கள். இப்போது நம் ஆவியில் இருக்கிற இந்த அதிசயமான மூவொரு தேவனை, ஆராய்ந்துபார்க்கமுடியாத கிறிஸ்து, சகலத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த ஆவியை அறிந்துகொள்ள தினம்தினம் கற்றுக்கொள்ளுங்கள். நாம் நம் ஆவியைப் பகுத்துணரும்போது நம்மிடம் திறவுகோல் இருக்கிறது! ஆம்! நம்மிடம் திறவுகோல் இருக்கிறது! கிறிஸ்துவிடமிருந்து நமக்கு என்னென்ன தேவைப்பட்டாலும் அவரைத் தொடர்புகொள்ள நம் ஆவியைப் பயிற்சிசெய்வதின்மூலம் நாம் அதைப் பெறுகிறோம். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி. கர்த்தர் நமக்குப் போதனைகளையும், வரங்களையும் அருளினபோதும் சம்பூரணமானவரும், சகலத்தையும் உள்ளடக்கியவருமான அவரே இலக்கு. அவருக்குக் குறைந்த வேறெதிலும் நாம் திருப்திப்பட்டு நின்றுவிடாதிருப்போமாக; சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து நம் ஆவிக்குள் வாசம்பண்ணுவதே தேவனுடைய பொருளாட்சியின் இலக்கு. நம் ஆவிக்குத் திரும்பிவரவும், நம் ஆவியைப் பகுத்துணரவும், கிறிஸ்துவை எல்லாமுமாகத் தொடர்புகொள்ளவும் நாம் நாள்முழுவதும் நாடவேண்டும். அப்போது நேர்த்தியான, சரியான கிறிஸ்தவ வாழ்க்கைக்கான திறவுகோல் நம்மிடத்தில் இருக்கும்.

## அத்தியாயம் ஐந்து

# தேவனுடைய நபர்களும், மனிதனுடைய பகுதிகளும்

"எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாய் இராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" *(2 கொரி. 4:3-7).*

"கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி" அவிசுவாசிகளுக்குப் பிரகாசமாயிராதவாறு இப்பிரபஞ்சத்தின் தேவனாகிய சாத்தான் அவர்களுடைய மனக்கண்களைக் குருடாக்குகிறான் என்று இந்த வசனங்கள் கூறுகின்றன. இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவின் "மகிமையான சுவிசேஷத்தின்" பிரகாசத்துக்கு எதிரி பயப்படுகிறான். 4-ஆம் வசனத்திலுள்ள "கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷம்," 6-ஆம் வசனத்திலுள்ள "தேவனுடைய மகிமையின் அறிவு"க்கு ஒத்திருக்கிறது. மண்பாண்டங்களாகிய நமக்குள் பிரகாசித்திருக்கிற கிறிஸ்துவிலுள்ள தேவனே அந்தப் "பொக்கிஷம்."

நாம் தேவனுடைய பொருளாட்சியையும், அவருடைய பொருளாட்சியின் குறியையும் பார்த்திருக்கிறோம். தேவன் தம்மையே நமக்குள் உருவாக்க விரும்புகிறார். இதுவே தேவனுடைய பொருளாட்சியிலுள்ள பிரதானமான காரியம் என்று நாம் சுட்டிக்காட்டியிருக்கிறோம். தேவன் தம்முடைய வெவ்வேறு நபர்கள்மூலம் நம்முடைய வெவ்வேறு பகுதிகளுக்குள் தம்மையே உருவாக்கிக்கொண்டிருக்கிறார். வேதவாக்கியங்களை நாம் கவனமாக வாசித்தால், இதுவே பிரதானமான காரியம் என்று நாம் உணர்ந்துகொள்வோம். தம்மையே மனிதனுக்குள் உண்டாக்க வேண்டும் என்பதைத்தவிர "முழுப் பிரபஞ்சத்திலும்

தேவனுக்கு வேறே விருப்பம் இல்லை," என்று கர்த்தருடைய பிள்ளைகளிடத்தில் நூற்றுக்கணக்கான தடவை, ஆம், ஆயிரக் கணக்கான தடவை கூறவேண்டும் என்ற பாரம் எனக்கு இருக்கிறது.

தேவன் மனிதனை என்ன நோக்கத்திற்காகச் சிருஷ்டித்தார்? மனிதன் தேவனுடைய கொள்கலமாக இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் சிருஷ்டித்தார். "கொள்கலம்" என்ற வார்த்தையை நான் பயன்படுத்த விரும்புகிறேன். ஏனென்றால் இது "பாண்டம்" என்ற வார்த்தையைவிடத் தெளிவாக இருக்கிறது. தேவனை உள்ளடக்கிக்கொள்ளக்கூடிய அவருடைய கொள்கலங்களாக நாம் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் அவர் நம்மைச் சிருஷ்டித்தார் என்று ரோமர் *9:21, 23* மற்றும் *2* கொரிந்தியர் *4:7*-ல் தெளிவாகக் காண்கிறோம். நாம் வெறும் காலியான கொள்கலங்களாக மட்டுமே இருக்கிறோம்; தேவன் மட்டுமே நம் உள்ளடக்கமாக இருக்க விரும்புகிறார். இதை விளக்கிச்சொல்ல புட்டிகளையும், மின்விளக்குகளையும் எடுத்துக்கொள்வோம். பானங்களை அடக்கிக்கொள்ள மின்விளக்குகள் தேவைப்படுகின்றன. பானங்களுக்காகவே உண்டாக்கப்பட்ட புட்டிகளையும், மின்சாரத்துக்காகவே உண்டாக்கப்பட்ட மின்விளக்குகளையும் நோக்கும்போது இந்த "விசித்திரமான" கொள்கலங்கள் மிகவும் பிரத்தியேகமான பொருட்கள் என்று நாம் உணர்ந்துகொள்வோம்; அவை ஒரு குறிப்பிட்ட உபயோகத்திற்காகவே உண்டாக்கப்பட்டுள்ளன. மக்களாகிய நாமும்கூட "விசித்திரமான" கொள்கலங்களே. ஏனென்றால் நாமும் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே உண்டாக்கப்பட்டோம். மின்விளக்குகள் ஒருமுறை உருவாக்கப்பட்டுவிட்டால், அவை இப்போது மின்சாரத்தைத் தம்முள் அடக்கிக்கொள்ளவேண்டும்; இல்லையென்றால் அவைகளுக்கு அர்த்தமும் இல்லை, எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. அதுபோல புட்டிகளுக்குள் ஒருபோதும் பானங்கள் இல்லையென்றால் அவைகளும்கூட அர்த்தமற்றவைகளாகிவிடும், மனிதன் தேவனைத் தன்னுள் கொண்டிருக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே உண்டாக்கப்பட்டான். நாம் தேவனை நம்முள் கொண்டிருக்காமலும், நம் உள்ளடக்கமாக அவரை அறியாமலும் இருந்தால் நாம் ஓர் அறிவற்ற முரண்பாடாக இருப்போம்.

நாம் எவ்வளவுதான் கல்வி கற்றாலும், என்னதான் உயர்ந்த அந்தஸ்து நமக்கிருந்தாலும் அல்லது எவ்வளவுதான் செல்வம் உடையவர்களாயிருந்தாலும், நாம் இன்னும் அர்த்தமற்றவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் நம் ஒரே உள்ளடக்கமாகத் தேவனையே நமக்குள் அடக்கிவைத்துக்கொள்ளக்கூடிய கொள்கலமாக

இருக்கவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் நாம் உண்டாக்கப்பட்டோம். கொள்கலங்கள் என்ற வகையில், நாம் நம் ஆள்தத்துவத்துக்குள் தேவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும். "கொள்கலம்" என்ற இந்த வார்த்தை எளிமையாகத் தோன்றினாலும்கூட, இதுவே முழு வேதாகமத்தின் முக்கியக் கருத்தைச் சுட்டிக்காட்டத் தேவைப்படும் மிகச் சரியான வார்த்தையாகும். "தேவனே மெய்யான உள்ளடக்கம். நாம் இந்த உட்பொருளைப் பெற்றுக்கொள்ள உண்டாக்கப்பட்ட கொள்கலங்கள். நாம் தேவனை நம்முள் கொண்டு தேவனால் நிரப்பப்படவேண்டும்." இதுவே முழு வேதாகமத்தின் அடிப்படைப் போதனை.

## பிதா, குமாரன், ஆவியானவர்

தேவன் தம்மையே நம் உட்பொருளாக நமக்குள் வைக்கவேண்டுமானால், அவர் மூன்று நபர்களில் இருக்கவேண்டும். தேவனுடைய மூன்று நபர்களைப்பற்றிய பரமஇரகசியத்தை போதுமான அளவுக்கு நம்மால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாது. தேவன் ஒருவரே, ஒரேவொருவர் என்று வேதத்தின் பல பகுதிகளில் மிகத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. *1 கொரிந்தியர் 8:4, 6, 1 தீமோத்தேயு 2:5* ஆகியவை இதைத் தெரிவிக்கின்றன. ஆனால் ஆதியாகமத்தின் முதல் அதிகாரத்தில், தேவனுக்காக "நான்" என்ற ஒருமைச்சொல் பயன்படுத்தப்படாமல், "நாம்" என்ற பன்மைப் பிரதிபெயர்ச்சொல்லே பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆதியாகமம் *1:26, 27*-ஐ நாம் வாசிப்போம்: "*நமது* சாயலாகவும் *நமது* ரூபத்தின்படியேயும் *நாம்* மனுஷனை உண்டாக்குவோமாக...தேவன் *தம்முடைய* சாயலாகவே மனுஷனைச் சிருஷ்டித்தார்." *26*-ஆம் வசனம் "*நமது* சாயலாக" என்று கூறுகிறது. அதே நேரத்தில் *27*-ஆம் வசனம் "*அவர்* சாயலாக" என்கிறது. தயவுசெய்து சொல்லுங்கள். தேவன் ஒருமையா, பன்மையா? யாரால் இதை விளக்கமுடியும்? தேவனே தமக்குப் பன்மைப் பிரதிபெயர்ச்சொல்லைப் பயன்படுத்துகிறார். "*நாம் நமது* சாயலாக...மனுஷனை உண்டாக்குவோமாக." தேவன் ஒன்றுக்கும் மேற்பட்டவர் என்று நீங்கள் கூறினால் அது சமயபேதகம். ஏனென்றால் தேவன் ஒரே ஒருவர்தாம் என்று வேதம் கூறுகிறது. முழுப் பிரபஞ்சத்திலும் ஒன்றுக்கு மேற்பட்ட தேவன் இல்லவே இல்லை. தேவன் ஒரே ஒருவர்தாம் என்றால் பின்னர் ஏன் பன்மைப் பிரதிபெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது?

எபிரேய மொழியில் பரிச்சயமுடைய ஒவ்வொருவரும், ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் தேவனைக் குறிக்கும் சொல்

பன்மையில் இருக்கிறது என்று கூறுவார்கள். "ஆதியிலே தேவன்...சிருஷ்டித்தார்," என்பதில் தேவனைக் குறிக்கும் எபிரேய வார்த்தை *ஏலோஹிம்* (Elohim) ஆகும். இது பன்மைச் சொல். ஆயினும் "சிருஷ்டித்தார்" என்ற வினைச்சொல் ஒருமையிலிருக்கிறது. இது மிகவும் விசித்திரமாக இருக்கிறது. இந்த வசனத்தின் இலக்கண அமைப்பின்படி, எழுவாய் பன்மையில் இருக்கிறது. ஆனால் வினைச்சொல் ஒருமையில் இருக்கிறது. இதைப்பற்றி யாருமே வாக்குவாதம்பண்ண முடியாது. இதை எபிரேய மொழி நிரூபிக்கிறது. அப்படியானால் நான் ஒன்று கேட்கிறேன், தேவன் ஒருவரா அல்லது மூவரா?

நாம் இப்போது ஏசாயா 9:6-ஐ வாசிப்போம்: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார், நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்...அவர் நாமம்...வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா." இந்த வசனம் வல்லமையுள்ள மனிதன் என்று கூறாமல், வல்லமையுள்ள தேவன் என்று கூறுகிறது. ஒரு சின்னப் பாலகன் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுகிறார். கிறிஸ்தவர்கள் அனைவரும் இந்த வசனத்தின் தீர்க்கதரிசனத்தை ஒப்புக்கொள்கின்றனர். இங்கே குறிப்பிடப்பட்டுள்ள பாலகன், பெத்லேகேமில் முன்னணையில் பிறந்த பாலகனே. இவர் வல்லமையுள்ள தேவன் என்று மட்டுமின்றி, நித்திய பிதா என்றும் பெயரிடப்பட்டுள்ளார். நமக்காகப் பிறந்த பாலகன் என்ற முறையில் அவர் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுகிறார். நமக்காகக் கொடுக்கப்பட்ட குமாரன் என்ற முறையில் அவர் நித்திய பிதா (அல்லது நித்தியத்தின் பிதா) என்றும் அழைக்கப்படுகிறார். இது மிகவும் விநோதமாக இருக்கிறது. பாலகன் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படும்போது, அவர் பாலகனா அல்லது தேவனா? குமாரன் நித்திய பிதா என்று அழைக்கப்படும்போது அவர் குமாரனா அல்லது பிதாவா? நீங்கள் இதை விளக்கிக்காட்ட முயன்றால் அது உங்களால் முடியாது. நீங்கள் வேதத்தை விசுவாசித்தால், இதை உண்மை என்று எடுத்துக்கொண்டேயாகவேண்டும். நீங்கள் வேதவாக்கியங்களின் அதிகாரத்தை விசுவாசித்தால், பாலகன் வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படுவதால் பாலகன் வல்லமையுள்ள தேவனே என்றும், குமாரன் நித்திய பிதா என்று அழைக்கப்படுவதால் குமாரன் பிதாவே என்ற உண்மையை நீங்கள் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். பாலகன் வல்லமையுள்ள தேவன் இல்லையென்றால், பாலகன் எப்படி வல்லமையுள்ள தேவன் என்று அழைக்கப்படமுடியும்? குமாரன் பிதா இல்லையென்றால், குமாரன் எப்படி பிதா என்று அழைக்கப்படமுடியும்? அப்படியானால் நமக்கு எத்தனை தேவர்கள்? நமக்கு ஒரேவொரு தேவன்தாம் இருக்கிறார். ஏனென்றால் பாலகன் இயேசுவே வல்லமையுள்ள தேவன்,

குமாரனே நித்திய பிதா.

இதுவுமன்றி 2 கொரிந்தியர் 3:17, "இப்போது கர்த்தரே ஆவியானவர்," என்று கூறுகிறது. நாம் புரிந்துகொண்டிருப்பதற்கேற்ப கர்த்தர் யார்? இயேசுகிறிஸ்துவே கர்த்தர் என்று நாமெல்லாரும் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் கர்த்தரே ஆவியானவர் என்றல்லவா இந்த வசனம் கூறுகிறது? ஆவியானவர் யார்? இந்த ஆவி பரிசுத்த ஆவிதாம் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகையால் குமாரன் பிதா என்று அழைக்கப்படுகிறார்; மேலும் மெய்யாகவே கர்த்தராயிருக்கிற குமாரனே ஆவியாகவும் இருக்கிறார். பிதாவும் குமாரனும் ஆவியும் ஒன்றேதாம் என்பதே இதன் பொருள். நாம் ஏன் இந்தக் காரியத்தை வலியுறுத்துகிறோம் என்றால் தேவன் தம் வெவ்வேறு நபர்கள்மூலமாகவே தம் பொருளாட்சியை நிறைவேற்றுகிறார். பிதாவாகிய நபர், குமாரனாகிய நபர், ஆவியாகிய நபர் என்ற வெவ்வேறு நபர்கள் இல்லாமல் தேவன் தம்மை ஒருபோதும் நமக்குள் கொண்டுவரவே முடியாது.

மத்தேயு 28:19, "ஆகையால், நீங்கள் புறப்பட்டுப் போய்...இப்போது (இந்த வார்த்தை தமிழ் மொழிபெயர்ப்பில் விடுபட்டுள்ளது) பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்," என்று கூறுகிறது. ஏதாவது ஒரேவொரு தெய்வீக நபரின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுங்கள் என்று இந்த வசனம் கூறவில்லை. "நாமங்களில்" என்றும் கூறவில்லை. மாறாக, "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே," (ஒருமை) என்கிறது. நாம் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்துக்குள் ஞானஸ்நானம்பண்ணப்பட வேண்டியதின் அவசியம் என்ன? இதுவுமன்றி தமிழில் பயன்படுத்தப்பட்டுள்ள "இல்" என்ற முன்னிடைச்சொல் கிரேக்க மூலபாடத்தில் "க்கு" அல்லது "க்குள்" (eis) என்று இருக்கிறது. எனவே "நாமத்தில்" அல்ல, "நாமத்துக்குள்" ஞானஸ்நானம் பண்ணப்படுதல் என்றே வருகிறது. இதே வார்த்தைதான் ரோமர் 6:3-லும் பயன்படுத்தப்பட்டுள்ளது, "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்," இதுதான் சரியான மொழிபெயர்ப்பு. இவைகளுக்கு அர்த்தம் என்ன?

இதை நான் பின்வருமாறு விளக்குகிறேன்: நீங்கள் ஒரு தர்ப்பூசணிப்பழத்தை வாங்கினால், இந்தப் பழத்தைச் சாப்பிட்டு ஜீரணிப்பதுதான் உங்கள் நோக்கம். அதாவது இந்தத் தர்ப்பூசணிப்பழத்தைச் சிறிது சிறிதாக உங்களுக்குள் கொண்டுபோய்விடவேண்டும் என்பதுதான் உங்கள் நோக்கம். இதை எப்படிச் செய்யமுடியும்? முதலாவது நீங்கள் ஒரு முழு தர்ப்பூசணிப்பழத்தை வாங்குகிறீர்கள்; இரண்டாவது, அதைத்

துண்டு துண்டாக வெட்டுகிறீர்கள். மூன்றாவது, இந்தத் தர்ப்பூசணிப்பழம் உங்கள் வயிற்றுக்குள் போவதற்குமுன் அது சாறாக மாறும்வரை வாயில்போட்டு மெல்லுகிறீர்கள். இதன் வரிசைக்கிரமம்: தர்ப்பூசணிப்பழம், துண்டுகள், கடைசியாக, சாறு. இவை மூன்றும் வித்தியாசமான காரியங்களா அல்லது ஒன்றேதானா? திரியேகத்துவத்துக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு இதுதான் என்று நான் விசுவாசிக்கிறேன். பெரும்பாலான தர்ப்பூசணிப்பழங்கள் உங்கள் வயிற்றைவிட பெரிதாகவே இருக்கின்றன. உங்கள் வயிறு இவ்வளவு சிறியதாகவும், உங்கள் தொண்டை இவ்வளவு மெல்லியதாகவும் இருக்கும்போது, ஒரு பெரிய தர்ப்பூசணிப்பழத்தை நீங்கள் எப்படி விழுங்கமுடியும்? நீங்கள் சாப்பிடுவதற்கேற்ற சரியான அளவுக்கு வருகிறவரை அதைச் சிறுசிறு துண்டுகளாக வெட்டவேண்டும். பிறகு அதை மென்று சாப்பிட்டதும், அது சாறாக மாறிவிடுகிறது. சிறு துண்டுகள் தர்ப்பூசணிப்பழம் இல்லையா? இந்தச் சாறும்கூட தர்ப்பூசணிப்பழம் இல்லையா? அவை தர்ப்பூசணிப்பழம் இல்லையென்று சொல்வோமென்றால் நாம் சுத்தமாக அறிவேயில்லாதவர்கள் என்றுதான் அர்த்தம்.

இந்த எடுத்துக்காட்டில் பிதா முழு தர்ப்பூசணிப்பழம்; குமாரன் துண்டுகள்; கடைசியாக ஆவியானவர் சாறு. இப்போது நீங்கள் இந்த முக்கியமான காரியத்தைப் பார்க்கிறீர்களா? பிதா, பிதா மாத்திரமல்ல, குமாரனாகவும் இருக்கிறார். குமாரன், குமாரன் மாத்திரமல்ல, அவர் ஆவியாகவும் இருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் இந்த தர்ப்பூசணிப்பழமே சாப்பிடுவதற்கான துண்டுகளாகவும், நமக்குள் இருக்கும் சாறாகவும் இருக்கிறது. தர்ப்பூசணிப்பழத்தைச் சாப்பிட்டு முடித்தபிறகு தர்ப்பூசணிப்பழம் மறைந்துவிடுகிறது. ஆரம்பத்தில் தர்ப்பூசணிப்பழம் மேஜையின்மேல் இருந்தது. ஆனால் சாப்பிட்டு முடித்தபிறகு அந்த தர்ப்பூசணிப்பழம் முழுக் குடும்பத்துக்குள்ளும் இருக்கிறது.

யோவான் சுவிசேஷத்தின் முதல் அதிகாரங்களில் பிதா இருக்கிறார்; தொடர்ந்து வருகிற அதிகாரங்களில் பிதாவின் வெளியாக்கமாக குமாரன் இருக்கிறார். இறுதியாக 20-ஆம் அதிகாரத்தில் (வசனம் 22) குமாரனின் சுவாசமாக ஆவியானவர் இருக்கிறார். இந்த ஒரு சுவிசேஷம் பிதா, குமாரன், ஆவியை வெளிப்படுத்துகிறது. இந்தப் புத்தகத்திலுள்ள இருபத்தோரு அதிகாரங்களையும் வாசியுங்கள். முதலாவது, "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி...நம்மிடையே வாசம்பண்ணினார்," (வசனம் 14) என்று கூறுகிறது. இந்த

வார்த்தை தேவனே. இந்த வார்த்தையே ஒருநாள் மனிதனாகி, நம்மிடையே வாசம்பண்ணினார் - நமக்குள் அல்ல, நம்மிடையே, நம் நடுவில். பின்பு அவர் பூமியில் முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்ந்தார். இறுதியாக அவர் மரித்தார்; ஆனால் மறுபடியும் எழுப்பப்பட்டார். இது பரம்புதிராகவும், அற்புதமாகவும், அதிசயமாகவும் இருக்கிறது. இதன் ஆழத்தை நாம் ஒருபோதும் அறிந்துகொள்ளமுடியாது. அவர் உயிர்த்தெழுந்த அன்றிரவு தம் உயிர்த்தெழுந்த சரீரத்துடன் சீடர்களிடத்தில் வந்தார். கதவுகளெல்லாம் பூட்டியிருந்தபோதும் சரீரத்துடன் உள்ளே நுழைந்து, தம் கைகளையும் விலாவையும் சீடர்களுக்குக் காண்பித்தார். இதை நம்மால் கிரகித்துக்கொள்ளமுடியாது. அவர் மிகவும் அற்புதமான, பரம்புதிரான வகையில் உள்ளே வந்தார். கடைசியாக, சீடர்கள்மேல் சுவாசத்தை ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்," என்று கூறினார். தர்ப்பூசணிப்பழத்தின் சாற்றைப்போல அவர் ஊதிய அந்த சுவாசமே பரிசுத்த ஆவி.

அந்நேரத்திலிருந்து யோவான் சுவிசேஷத்தில், "இயேசு எங்கே இருக்கிறார்," என்று நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். இயேசு சீடர்களிடத்தில் வந்தபிறகு, அவர் பரலோகத்துக்கு எழுந்தருளிச் சென்றதை இந்தச் சுவிசேஷம் ஒருபோதும் குறிப்பிடவில்லை. இந்தச் சுவிசேஷத்தின் இறுதியில் இந்த அதிசயமானவர் எங்கே இருக்கிறார்? வயிற்றில் இருக்கும் தர்ப்பூசணிப்பழத்தைப்போல அவர் ஆவியானவர்மூலம் சீடர்களுக்குள் சுவாசமாக இருக்கிறார்.

தேவனுடைய மூன்று நபர்களைக்கொண்டு அவரையே நமக்குள் உருவாக்கிவிடவேண்டும் என்பதுதான் தேவனுடைய பொருளாட்சி. தேவத்துவத்தின் மூன்று நபர்களும் இதற்குத் தேவைப்படுகிறார்கள். ஏனென்றால் இந்த மூன்று நபர்களும் இல்லாமல் தேவன் நமக்குள் ஒருபோதும் உருவாக்கப்படமுடியாது. இது தர்ப்பூசணிப்பழத்தின் எடுத்துக்காட்டைப்போன்றது. துண்டுதுண்டாக வெட்டப்படாமலும், சாறாகப் பெற்றுக்கொள்ளப் படாமலும், தர்ப்பூசணிப்பழம் நமக்குள் கொண்டுவரப்படமுடியாது. தேவனுடைய மூன்று வித்தியாசமான நபர்களால் மட்டுமே அவர் நமக்குள் கொண்டுவரப்பட்டு உருவாக்கப்படமுடியும்.

## மனம், இருதயம், சாயல்

நாம் இப்போது நம்மிடத்திற்குத் திரும்பி, கொள்கலங்கள் என்ற முறையில் நாம் எப்படி இருக்கிறோம் என்று பார்ப்போம். நாம் மிகச் சாதாரணமானவர்கள் என்று எண்ணவேண்டாம். மனிதனுடைய சரீரம் நுட்பமானது, சிக்கலானது என்று மருத்துவர்கள் கூறுவார்கள். பானத்தைத் தன்னுள் கொண்டுள்ள

ஒரு புட்டியைப்போல மனித ஆள்தத்துவம் ஒரு சாதாரண கொள்கலம் அல்ல. மாறாக மனிதனுக்குப் பல்வேறு பகுதிகள் இருக்கின்றன. எனவேதான் தேவனுடைய பொருளாட்சியின் குறியைச் சரியாக எய்துவதற்கு மனிதனுடைய வெவ்வேறு பகுதிகளையும், தேவனுடைய மூன்று நபர்களையும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய பொருளாட்சி அவருடைய மூன்று நபர்களுடன் சம்பந்தப்பட்டது. அவருடைய பொருளாட்சியின் குறி நம் வெவ்வேறு பகுதிகளுடன் சம்பந்தப்பட்டது.

நம்மில் பலர் கார் ஓட்டுகிறோம், ஆனால் அதின் சில பகுதிகளையாவது அறியாமல் கார் ஓட்டுவது சாத்தியமில்லை. அதை ஓட்டுவதற்கு குறைந்தது அதின் மிக அத்தியாவசியமான பகுதிகளையாவது நாம் கற்றுக்கொள்ளவேண்டும். எடுத்துக்காட்டாக பிரேக், கியர், இக்னிஷன் போன்ற பகுதிகளை அடையாளம் கண்டுகொள்வதும், அவைகள் இருக்கும் இடத்தைத் தெரிந்துகொள்வதும் நமக்கு அவசியம். காரின் பாகங்கள் நமக்குத் தெரியாவிட்டால் அதை எப்படி இயக்குவது என்றும் நமக்குத் தெரியாது. அப்படியே தேவனை நம்முள் எப்படிக் கொண்டிருக்கலாம் என்பதை உணர்ந்துகொள்ள நம் ஆள்தத்துவத்தின் வெவ்வேறு பகுதிகளை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

*2* கொரிந்தியர் *4*-ஆம் அதிகாரத்தில் எத்தனை பகுதிகள் காணப்படுகின்றன என்று பாருங்கள். *4*-ஆம் வசனத்தில் *மனம்* இருக்கிறது. ஆறாம் வசனத்தில் *இருதயம்* இருக்கிறது. குறைந்தது மனம், இருதயம் என்ற இரண்டு பகுதிகளாவது இந்தப் பத்தியில் காணப்படுகின்றன. ஒருவேளை நீங்கள் பல ஆண்டுகளாகக் கிறிஸ்தவர்களாக இருக்கலாம். ஆனால் இந்த நேரம்வரை மனதுக்கும் இருதயத்துக்குமிடையேயுள்ள வித்தியாசம் உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம், எதிரியால் மனதைக் குருடாக்க முடியும் என்றும், தேவனுடைய ஒளியால் இருதயத்தைப் பிரகாசிப்பிக்க முடியும் என்றும் நாம் வாசிக்கிறோம். இந்த யுகத்தின் தேவன் அவிசுவாசிகளுடைய மனங்களைக் குருடாக்குகிறான். ஆனால் தேவன் விசுவாசிகளுடைய இருதயங்களுக்குள் தம் ஒளியைப் பிரகாசிப்பிக்கிறார். வேதத்தின் இந்தப் பகுதியைப் புரிந்து கொண்டதாகவே நீங்கள் ஒருவேளை நினைத்திருப்பீர்கள். ஆனால் இங்கு மனித ஆள்தத்துவத்தின் இரண்டு பகுதிகள் குறிப்பிடப் பட்டுள்ளன என்பதை நீங்கள் ஒருபோதும் ஆழ்ந்து சிந்தித்திருக்க மாட்டீர்கள்.

வேதவாக்கியங்களிலிருந்து, மனதையும், இருதயத்தையும்

வரையறுப்பதற்குமுன், இதை விளக்க புகைப்படக்கருவியை (கேமரா) ஓர் எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துவோம். ஏதோவொன்றை உள்ளே எடுத்துக்கொள்ளவே புகைப்படக்கருவி உண்டாக்கப்பட்டது. படம் எடுப்பது என்றால் ஏதோவொன்றை புகைப்படக்கருவிக்குள் எடுத்துக்கொண்டு வருவதாகும். நான் டோக்கியோவுக்குச் சென்றிருந்தபோது, டோக்கியோவைப் படமெடுக்க - உள்ளே எடுத்துக்கொள்ள - என் புகைப்படக் கருவியைப் பயன்படுத்தினேன். புகைப்படக்கருவிக்கு வெளியே இருக்கிற ஒரு சாயலைப் புகைப்படக்கருவிக்கு உள்ளே கொண்டுவரவேண்டும் என்பதுதான் என் நோக்கம்.

புகைப்படக்கருவிக்குள்ளே ஒரு படத்தைக் கொண்டுவர எனக்கு என்னென்ன தேவை? மூன்று முக்கியமான காரியங்கள் தேவை; வெளியே லென்ஸ், உள்ளே படச்சுருள், வெளிச்சம். இந்த மூன்று காரியங்களை வைத்துக்கொண்டு ஒரு காட்சியைப் புகைப்படக் கருவிக்குள்ளே கொண்டுவந்துவிடலாம். பல வருடங்களுக்கு முன்பு ஒருமுறை நான் ரயிலில் பயணம்செய்துகொண்டிருந்த போது, சில காட்சிகளைப் படமெடுத்தேன். படச்சுருள்களை, உரியமுறையில் ஸ்டுடியோவில் பதப்படுத்தினபிறகு, அவைகளில் பல காலியாக இருந்தன. என்ன நடந்தது? காட்சிகளைப் படமெடுக்கவேண்டும் என்ற அவசரத்தில் லென்ஸ்சுக்கு முன்னால் இருந்த மூடியை எடுக்க மறந்துவிட்டேன். லென்ஸ் மூடியினால் குருடாக்கப்பட்டிருந்தது.

பலவேளைகளில், ஓர் அவிசுவாசி ஒரு நல்ல சுவிசேஷ செய்தியைக் கேட்க வரும்போது, "ஆ, இன்றிரவு இந்த மனிதன் நிச்சயமாக இரட்சிக்கப்பட்டுவிடுவான்," என்று நாம் நினைக்கிறோம். ஆனால் இறுதியில் அவன் இன்னும் காலியாகவே இருக்கிறான். தேவனுடைய எதிரி அவனுடைய மனதைக் குருடாக்கிவிட்டான் - மனம்தான் புரிந்துகொள்ளும் உறுப்பு; ஆனால் கேட்ட இவனுடைய புத்தியைச் சாத்தான் குருடாக்கி விட்டான். செய்தி எவ்வளவுதான் நன்றாக இருந்தாலும், அவன் எவ்வளவுதான் அதிகமாகக் கேட்டாலும், அவனுடைய புத்தி குருடாக்கப்பட்டிருக்கிறது அல்லது மூடப்பட்டிருக்கிறது. அவனுடைய மனம் இன்னும் காலியாகவே இருக்கிறது. எதுவுமே உள்ளே எடுத்துக்கொள்ளப்படவில்லை.

முப்பது ஆண்டுகளுக்குமுன் ஒருமுறை சகோதரர் வாட்ச்மேன் நீ சுவிசேஷத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது இது நடந்தது. தேவனுடைய நோக்கம் நாம் நன்மைசெய்யவேண்டும் என்பதன்று என்று அவர் மக்களுக்குக் கூறிக்கொண்டிருந்தார். நன்மை என்பது தேவனைப் பொறுத்தவரை அர்த்தமில்லாதது. இந்தக் குறிப்பை அவர் எந்த அளவுக்கு அழுத்தம் திருத்தமாகப் பேசினார் என்றால்,

அது மிகத் தெளிவாக இருந்தது. ஒரு சகோதரர் தம் நண்பரொருவரைக் கூட்டத்துக்கு அழைத்து வந்திருந்தார்; அந்தச் செய்தி கொடுக்கப்பட்டுக்கொண்டிருந்தபோது, அவ்வப்போது அவர் தம் நண்பரைப் பார்த்துக்கொண்டார். பார்க்கும்போதெல்லாம் அந்த நண்பர் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு அதை அங்கீகரிப்பதைப் போல தலையை எப்போதும் மேலும் கீழும் ஆட்டிக்கொண்டே இருந்தார். தம் நண்பர் மிகவும் கவனமாகச் செவிகொடுத்து, எல்லாவற்றையும் உட்கிரகித்துக்கொண்டிருக்கிறார் என்று நினைத்து அந்தச் சகோதரர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். என்ன நடந்தது, தெரியுமா? கூட்டத்திற்குப்பிறகு அந்தச் சகோதரர் தம் நண்பரிடம் "செய்தியைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அவர் "ஆம், மக்கள் நன்மைசெய்யவேண்டும் என்றே எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன," என்று பதிலுரைத்தார். ஆனால் மனிதன் நன்மைசெய்யவேண்டும் என்பதல்ல தேவனுடைய நோக்கம் என்று சகோதரர் *வாட்ச்மேன் நீ* தம் செய்தியில் மிகத்தெளிவாக வலியுறுத்தியிருந்தார். இந்த மனிதனுடைய புத்தி எதிரியால் குருடாக்கப்பட்டிருந்தது என்பதையே அவனுடைய பதில் சுட்டிக்காட்டியது. செய்தியின் போது தேவன்தாமே இந்த யுகத்தின் தேவனைக் கட்டும்படியாக வும், அவனுடைய குருடாக்கும் கிரியையைக் கட்டும்படியாகவும் பல நேரங்களில் நாம் ஜெபிக்கவேண்டியிருக்கிறது. லென்சின் மேலிருந்து மூடியை எடுக்கவேண்டும் என்பதுதான் இதன் பொருள்.

மூடி எடுக்கப்பட்டபின்பு, சரியான தரமுள்ள படச்சுருள் நமக்குத் தேவை. லென்ஸ் சரியாக இருந்தபோதும், நல்ல படச்சுருள் இல்லாமல் புகைப்படக்கருவி வேலைசெய்யாது. தவறான படச்சுருளைப் பயன்படுத்தினால் சரியான படத்தை நாம் பெற்றுக்கொள்ளமுடியாது. படச்சுருள் நம் இருதயத்துக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது; நம் மனம் லென்சைப்போன்றது; நம் இருதயம் படச்சுருளைப்போன்றது. ஆகையால் நம் இருதயம் சரியாகத் திருப்பப்பட்டிருக்கவேண்டும், ஒழுங்குசெய்யப்பட்டிருக்க வேண்டும். நமக்கு லென்ஸ் தேவை, படச்சுருளும் தேவை. புரிந்துகொள்ளக்கூடிய மனமும் தேவை, பெற்றுக்கொள்ளக்கூடிய இருதயமும் நமக்குத் தேவை. இருதயம் பரிசுத்தமாகவும், சுத்தமாகவும், சரியாகவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் இருக்கவேண்டும்.

நம்மிடத்தில் லென்சும், படச்சுருளும் இருந்தாலும்கூட நமக்கு வெளிச்சமும் வேண்டும். லென்சின் வழியாக படச்சுருளுக்குள் பிரகாசிக்க வெளிச்சம் தேவை. தேவனுடைய மகிமையின் தெய்வீக ஒளி கிறிஸ்துவின் சாயலையும் படத்தையும் தருவதற்கு நம்மேல்

பிரகாசிக்கிறது. கிறிஸ்துவின் இந்த மெய்யான சாயலே மண்பாண்டங்களிலுள்ள பொக்கிஷம். இந்த விளக்கத்தின்மூலம் நாம் நம் மனதுடனும், இருதயத்துடனும் எப்படி இடைப்படுவது என்று உணர்ந்துகொள்ளலாம். இது ஒரு புகைப்படக்கருவியைப் போன்றது. லென்சை எப்படி ஒழுங்குசெய்வது என்றும், படச்சுருளை எப்படிப் பயன்படுத்துவது என்றும் நாம் அறிந்துகொள்ளவேண்டும். படச்சுருளையும், லென்சையும் எப்படிக் கையாளுவது என்று நமக்குத் தெரியாவிட்டால், சரியான படத்தை நாம் ஒருபோதும் பெற்றுக்கொள்ளமுடியாது.

ஆவிக்குரிய அனுபவங்களும் காட்சிகளைப் படமெடுப்பதைப்போன்றதுதான். நாமே புகைப்படக்கருவிகள், கிறிஸ்துவிலுள்ள தேவனைப் படமாகப் பெற்றுக்கொள்வதற்கு நம் புகைப்படக்கருவியை எப்படிப் பயன்படுத்துவது என்று நாம் கற்றுக்கொள்ளவேண்டும். தங்கள் மனங்களையும், இருதயங்களையும் எப்படிக் கையாளுவது என்று அன்பான கிறிஸ்தவர்கள் அநேகருக்குத் தெரியாமலிருப்பது வருந்தத்தக்கது. உண்மையில் தாங்களே புகைப்படக்கருவிகள் என்றுகூட அவர்களுக்குத் தெரியவில்லை.

திட்டவட்டமாகப் பேசுவதானால், கிறிஸ்தவம் ‘இதைச் செய்,’ ‘அதைச் செய்,’ என்று மக்களுக்குப் போதிக்கிற ஒரு மதமல்ல. ஜீவிக்கும் கிறிஸ்து நமக்குள் உருவாக்கப்படுவதே கிறிஸ்தவம். அவரே மெய்யான படம், மெய்யான காட்சி, நாம் புகைப்படக்கருவிகள். தெய்வீக ஒளி லென்சின்மூலம் படச்சுருளில் பிரகாசிப்பதால், தேவன் படக்காட்சியாக நமக்குள் உருவாக்கப்படவேண்டும். நம் மனதால் புரிந்துகொள்ளுவதின் மூலம், கிறிஸ்துவின் சாயலை மேன்மேலும் பிரகாசிக்கிற தெய்வீக ஒளி, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் நமக்குத் தேவை. அப்போது நம் இருதயத்துக்குள் நாம் அவரைப் பெற்றுக்கொள்ள லாம். ஆகையால் நாம் நம் மனதையும் இருதயத்தையும் எப்படி ஒழுங்குபடுத்துவது என்று கற்றுக்கொள்ளவேண்டும்.

ஆவிக்குரிய அனுபவங்கள் என்றால் என்ன? கிறிஸ்துவின் படங்களை, புகைப்படக்கருவியாகிய நமக்குள் படமெடுப்பதும், நம் ஆவிக்குரிய படச்சுருளின்மேல் அவைகளை ஆழமாகப் பதியச்செய்வதுமே ஆவிக்குரிய அனுபவங்கள். சில கிறிஸ்தவர்களிடம் லென்ஸ் கிட்டத்தட்ட எப்போதும் மூடியே இருக்கிறது; படச்சுருளும் வழக்கமாகத் தவறாகவே பொருத்தப்பட்டுள்ளது. அவர்களுடைய படச்சுருளை உற்றுப்பார்த்தால் அங்கே படமே இல்லை; படச்சுருளின் ஒவ்வொரு புகைப்படமும் காலியாகவே இருக்கிறது. ஏனென்றால் கிறிஸ்துவின் அனுபவங்கள் அவர்களிடத்தில் இல்லை. ஆனால்

அப்போஸ்தலனாகிய பவுல் வருவாரானால், அவருடைய புகைப்படக்கருவியைத் திறந்து உள்ளே இருக்கும் படச்சுருளை வெளியே எடுத்தால், ஒவ்வொரு புகைப்படமும் கிறிஸ்துவின் முழுமையான சாயல் என்று நாம் காண்போம். இவையெல்லாம் லென்சை நாம் எவ்வளவாய் ஒழுங்குசெய்கிறோம் என்பதையும், படச்சுருளை நாம் எவ்வளவாய்ப் பராமரிக்கிறோம் என்பதையுமே சார்ந்திருக்கின்றன. அதாவது இது நாம் நம் மனதுடன் எவ்வளவு இடைப்படுகிறோம் என்பதையும், நம் இருதயத்தை எவ்வளவு சரியாகத் திருப்புகிறோம் என்பதையும் பொறுத்தது. இதை நாம் சரியாகச் செய்தால், தெய்வீக ஒளி நம்மேல் பிரகாசிக்கும்போதெல்லாம் *கிறிஸ்துவின் சாயல்* நமக்குள் பிரகாசிக்கும். கிறிஸ்துவின் அழகான படம் நமக்குள் கிடைக்கும். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி.

நம் வெவ்வேறு பகுதிகளைத் தெரிந்துகொள்வதின் முக்கியத்துவத்தை நாம் இப்போது அறிந்திருக்கிறோம். ஒவ்வொரு பகுதியிலும் தேவனைக் கொண்டிருப்பதற்காகவே நாம் உண்டாக்கப்பட்டோம். அவைகள் அனைத்தையும் அறிந்துகொள்ள - மனம், இருதயம் இவைகளைப்பற்றி அறிந்ததைவிட அதிகமாக அறிந்துகொள்ள - நாம் தொடர்ந்து செல்லவேண்டும். அடுத்த அதிகாரத்தில் எல்லாப் பகுதிகளையும்பற்றி நாம் விவரமாகவும், ஆழமாகவும், பார்ப்போம். அடுத்து அவை எப்படிச் செயல்படுகின்றன என்றும், அவைகளை எப்படி ஒழுங்குபடுத்துவது என்றும் விவரமாகப் பார்ப்போம்.

## அத்தியாயம் ஆறு

## உள்ளான மற்றும் மறைவான பகுதிகள்

நாம் இப்போது கர்த்தருடைய பாத்திரத்தின் விவரங்களைப் பார்ப்போம். நாம் தேவனையே நம் உள்ளடக்கமாகக் கொண்டிருக் கக்கூடிய அவருடைய கொள்கலங்களாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் சிருஷ்டிக்கப்பட்டோம். இதை முந்தைய அதிகாரத்தில் பார்த்தோம். இந்த நோக்கத்திற்காகத்தான் தேவன் நம்மைப் பல "பகுதிகளைக்" கொண்டவர்களாகச் சிருஷ்டித் திருக்கிறார். "பகுதிகள்" என்ற வார்த்தையை நான்தான் தொடங்கி வைத்தேன் என்று எண்ணவேண்டாம். எரேமியா *31:33*-ல், "நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் *உள்ளத்தில்* (உள்ளான பகுதிகளில்) (தமிழ் வேதாகமத்தில் 'உள்ளம்' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. அது மூலபாஷையில் உள்ளான பகுதிகள் என்றிருக்கிறது; ஆங்கில வேதாகமங்கள் "*inward parts*" என்றே மொழிபெயர்த்துள்ளன) வைப்பேன்..." என்று தேவன் கூறுகிறார். உள்ளான பகுதிகள் நம் ஆத்துமாவுக்குள் இருக்கின்றன; அவை நம் சரீரத்தின் புறம்பான அவயவங்கள் அல்ல. தேவன் தம் பிரமாணங்களை நம் *இருதயத்தில்* எழுதுவதாகவும் கூறுகிறார். அப்படியானால் உள்ளான பகுதிகள் எவை? இருதயம் என்றால் என்ன?

எரேமியா *31:33*-ஐ, எபிரேயர் *8:10*-ல் உள்ள "என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைப்பேன்," என்ற மேற்கோளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், ஒரு நுட்பமான, ஆனால் முக்கியமான வேறுபாட்டை நாம் பார்க்கலாம். "அவர்களுடைய உள்ளான பகுதிகளுக்குள்," என்று எரேமியா கூறுகிறார்; ஆனால் "அவர்களுடைய மனதுக்குள்," என்று எபிரேயர் குறிப்பிடுகிறது. மனம், உள்ளான பகுதிகளில் ஒன்றாகும் என்று இந்த ஒப்பிடுதல் நிரூபிக்கிறது.

"உள்ளான பகுதிகள்" என்ற வார்த்தை வேதத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு, சங்கீதம் *51:6*; "இதோ உள்ளான பகுதிகளில் உண்மையிருக்க விரும்பு கிறீர்..." உள்ளான பகுதிகளில் உண்மையிருக்கவேண்டும். இந்தச் சங்கீதத்தில் உள்ளான பகுதிகளைத்தவிர "அந்தக்கரணம்" (மறைவான பகுதி) என்றழைக்கப்படும் வேறொரு பகுதியும் இருக்கிறது. "மறைவான பகுதியில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்." உண்மை உள்ளான பகுதிகளில் இருக்கிறது.

ஞானம் மறைவான பகுதியில் இருக்கிறது. உள்ளான பகுதிகள் எவை என்றும், மறைவான பகுதிகள் எவை என்றும் நாம் கண்டுபிடிக்கவேண்டும்.

### மனிதனின் மூன்று பகுதிகள் – ஆவி, ஆத்துமா, சரீரம்

நாம் இங்கு குறிப்பிடும் சில வேத பகுதிகள் நமக்கு மிக நன்றாகத் தெரிந்தவை. நாம் முப்பகுதி அல்லது ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று பகுதிகளைக் கொண்டவர்கள் என்று 1 தெசலோனிக்கேயர் 5:23 சுட்டிக்காட்டுகிறது. பொதுமையமுள்ள மூன்று வட்டங்களைக்கொண்டு இதை நாம் விளக்கிக்காட்டலாம்:




எபிரேயர் 4:12கூட ஆவி ஆத்துமாவைப்பற்றியும், இந்த இரண்டு பகுதிகளைப் பிரிப்பதைப்பற்றியும் பேசுகிறது. நாம் கிறிஸ்துவை அறிந்து, கிறிஸ்துவாகிய நல்ல தேசத்துக்குள்ளும் இளைப்பாறுதலுக்குள்ளும் நுழையவேண்டுமானால், நாம் ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணரவேண்டும். ஆவியே, கிறிஸ்து நம்மில் வாசம்பண்ணுகிற மெய்யான இடம்; எனவே அனுபவரீதியில் நாம் கிறிஸ்துவை அறிந்துகொள்ளவேண்டுமானால், நம் ஆத்துமாவிலிருந்து நம் மனித ஆவியை நாம் பகுத்துணரவேண்டும். இந்த வசனம், ஆவிக்கும் ஆத்துமாவுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை மட்டுமின்றி, கணுக்களுக்கும் சரீரத்தின் ஊனுக்குமிடையே உள்ள வித்தியாசத்தையும், இருதயத்தின் நினைவுகளுக்கும் யோசனைகளுக்குமிடையே உள்ள வித்தியாசத்தையும்கூடக் குறிப்பிடுகிறது. தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையானது இவையனைத்தையும் பகுத்துணரக்கூடியதாக இருக்கிறது. கர்த்தரை நடைமுறையில் நாம் நிஜமாக அறிந்துகொள்ளவேண்டுமானால், இந்தப் பகுதிகளனைத்தையும் நாம் பகுத்துணரவேண்டும் என்று இந்த வசனம் நிரூபிக்கிறது. இருதயத்தின் நினைவுகள் எவை? இருதயத்தின் யோசனைகள்

எவை? இருதயத்தில் எத்தனை பகுதிகள் இருக்கின்றன?

லூக்கா 1:46-47-ஆம் வசனத்திலும் ஆத்துமாவும் ஆவியும் மீண்டும் வேறுபடுத்தப்பட்டுள்ளன.

நாம் ஒரே ஆவியையுடையவர்களாகவும் - பரிசுத்த ஆவியல்ல மாறாக மனித ஆவி - ஒரே ஆத்துமாவையுடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்று பிலிப்பியர் 1:27 கூறுகிறது. ஆவிக்கும் ஆத்துமாவுக்குமிடையே வித்தியாசமிருக்கிறது என்று இந்த வசனம் மீண்டும் காட்டுகிறது.

கடைசியாக, மாற்கு 12:30, "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக," என்று கூறுகிறது. இங்கே நான்கு வித்தியாசமான பகுதிகள் இருக்கின்றன; இருதயம், ஆத்துமா, மனம், பலம். நாம் இந்த வசனங்களையெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் சரீரத்தின் பகுதிகளைத்தவிர இன்னும் பல்வேறு பகுதிகள் நமக்குள்ளே இருக்கின்றன என்று உணர்ந்துகொள்வோம்.

நாம் ஆவி, ஆத்துமா, சரீரமாக இருக்கிறோம் என்று 1 தெசலோனிக்கேயர் 5:23 சுட்டிக்காட்டுகிறது. சங்கீதம் 51, மறைவான பகுதிகளோடுகூட, உள்ளான பகுதிகளையும் வெளிப்படுத்துகிறது. எபிரேயர் 8:11-ஐ எரேமியா 31:33-வுடன் ஒப்பிட்டால் உள்ளான பகுதிகள் ஆத்துமாவின் பகுதிகளே என்பது நிரூபணமாகும். அங்கே மனம் உள்ளான பகுதிகளில் ஒன்றாகக் காட்டப்பட்டுள்ளது. உள்ளான பகுதிகள் ஆத்துமாவின் பகுதிகளாகத்தான் இருக்கவேண்டும் என்பதைப்போல, மறைவான பகுதியும் ஆவியாகத்தான் இருக்கவேண்டும். நம் எல்லாப் பகுதிகளிலும், ஆவியே நமக்குள் இருக்கிற மிக மறைவான பகுதியாகும். மிக உள்ளான இந்தப் பகுதி சரீரத்துக்குள் மறைந்திருப்பது மட்டுமல்ல; ஆத்துமாவுக்குள்ளேயும் மறைந்திருக்கிறது. இவ்வாறு சரீரத்தின் *புறம்பான* பகுதிகளும் ஆத்துமாவின் *உள்ளான* பகுதிகளும் ஆவியின் *மறைவான* பகுதியும் இருக்கின்றன.

## ஆத்துமாவின் மூன்று பகுதிகள் – மனம், சித்தம், உணர்ச்சி

ஆத்துமாவிலும், ஆவியிலும் மும்மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஆத்துமா, ஆவி ஆகிய இரண்டின் மும்மூன்று பகுதிகள் என்னவென்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். மேலும் இருதயத்தையும் நாம் வரையறுக்கவேண்டும். நாம் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற முப்பகுதியையுடையவர்கள் என்று 1 தெசலோனிக்கேயர் 5:23 சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அது

இருதயத்தைக் குறிப்பிடவில்லை. இருதயம் என்றால் என்ன? உள்ளான பகுதிகளுடனும், மறைவான பகுதிகளுடனும் அதற்கு என்ன சம்பந்தம்?

ஆத்துமாவில் மனம், சித்தம், உணர்ச்சி என்ற மூன்று பகுதிகள் உள்ளான என்று தேவனுடைய வார்த்தை தெளிவாகவும், உறுதியாகவும் நிரூபிக்கிறது. பின்வரும் வரைபடத்தில் நிழலிடப்பட்டுள்ள பகுதி ஆத்துமாவின் பகுதிகளை விளக்கிக்காட்டுகிறது.




ஆத்துமாவுக்கு *அறிவு* தேவை என்று நீதிமொழிகள் *2:10* கூறுகிறது. நீதிமொழிகள் *19:2; 24:14*-ஐயும்கூடக் கவனியுங்கள். அறிவு மனதின் செயல்பாடாக இருப்பதால், மனம் ஆத்துமாவின் ஒரு பகுதி என்று இது நிரூபிக்கிறது. நீதிமொழிகளிலுள்ள இந்த மூன்ற வசனங்களுமே, ஆத்துமாவில் நமக்கு அறிவு வேண்டும் என்று கூறுகின்றன. "ஆத்துமாவுக்குத் *தெரியும்*" என்று சங்கீதம் *139:14* கூறுகிறது. தெரிந்துகொள்வது மனதுக்குரியது. மனம் ஆத்துமாவின் ஒரு பகுதி என்பதை இது மறுபடியும் நிரூபிக்கிறது. *ஆத்துமா ஆலோசனைபண்ணிக்கொண்டிருக்கிறது* அல்லது *சிந்தித்துக்கொண்டிருக்கிறது* என்று சங்கீதம் *13:2* கூறுகிறது. இதுவும் மனதையே குறிக்கிறது. "*நினைவு* ஆத்துமாவினுடையது" என்று புலம்பல் *3:20* சுட்டிக்காட்டுகிறது. அதாவது ஆத்துமாவால் காரியங்களை நினைத்துப்பார்க்கமுடியும். அறிகிற, ஆலோசனைசெய்கிற, நினைக்கிற ஒரு பகுதி ஆத்துமாவில் இருக்கிறது என்று இந்த வசனங்களிலிருந்து நாம் காணலாம். இந்தப் பகுதிதான் மனம் என்று அழைக்கப்படுகிறது.

ஆத்துமாவின் இரண்டாவது பகுதி சித்தம். "என் ஆத்துமா *விரும்புகிறது*," என்று யோபு *7:15* கூறுகிறது. எதையாவது தெரிந்தெடுப்பது என்பது சித்தத்தின் செயலால் மேற்கொள்ளப்பட்ட ஒரு *தீர்மானம்*. சித்தம் ஆத்துமாவின் ஒரு பகுதியாகத்தான்

இருக்கவேண்டும் என்று இது நிரூபிக்கிறது. "ஆத்துமா மறுக்கிறது," என்று யோபு 6:7 கூறுகிறது. தெரிந்தெடுப்பதும், மறுப்பதுமாகிய இரண்டுமே சித்தத்தின் செயல்கள். "தேடுவதற்கு ஆத்துமாவை நேராக்கு," என்று 1 நாளாகமம் 22:19 கூறுகிறது. நினைப்பதற்கு நம் மனங்களை நேராக்குவதுபோல, தேடுவதற்கு நம் ஆத்துமாக்களை நாம் நேராக்குகிறோம். இங்கு தீர்மானிப்பது ஆத்துமாவே என்பது நிச்சயம். சித்தம் ஆத்துமாவின் ஒரு பகுதியாகத்தான் இருக்கவேண்டும் என்று இது நிரூபிக்கிறது. பிறகு எண்ணாகமம் 30-ல், "அவனுடைய ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்து" என்று பத்து தடவை குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தை நாம் வாசிக்கும்போது ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்துவது என்பது ஒரு தீர்மானத்தைச் செய்வதாகும் என்று நாம் புரிந்துகொள்கிறோம். இது கர்த்தருக்கு நேர்ந்துகொண்ட ஒரு பொருத்தனையுடன் தொடர்புடையது. ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்த ஒரு தீர்மானம்செய்வதென்றால், கர்த்தருக்கு ஒரு பொருத்தனைசெய்வதாகும். சித்தம் ஆத்துமாவின் ஒரு பகுதியாகத்தான் இருக்கவேண்டும் என்று இவ்வாறு நிரூபிக்கப்படுகிறது. சங்கீதம் 27:12, 41:2, எசேக்கியேல் 16:27 ஆகிய வசனங்கள் "ஆத்துமா" என்ற எபிரேய வார்த்தையை "இஷ்டம்" (சித்தம்) என்றே மொழிபெயர்க்கின்றன. "என் சத்துருக்களின் இஷ்டத்துக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்," என்று சங்கீதக்காரன் ஜெபிக்கிறார். மூலநூலில் "என் சத்துருக்களின் ஆத்துமாவுக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்," என்றே உள்ளது. சித்தம் ஆத்துமாவின் ஒரு பகுதியாகத்தான் இருக்கவேண்டும் என்று இது தெளிவாக நிரூபிக்கிறது.

ஆத்துமாவின் மூன்றாவது பகுதி உணர்ச்சி, உணர்ச்சியில் பல அம்சங்கள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக அன்பு, வெறுப்பு, மகிழ்ச்சி, துக்கம்...போன்றவை. இவையனைத்தும் உணர்ச்சியின் வெளியாக்கங்களாக இருக்கின்றன. 1 சாமுவேல் 18:1, உன்னதப்பாட்டு 1:7, சங்கீதம் 42:1 ஆகிய வசனங்களில் அன்பைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அன்பு ஆத்துமாவிலுள்ள ஏதோவொன்று என்று இந்த வசனங்கள் காண்பிக்கின்றன. அதாவது ஆத்துமாவுக்குள் உணர்ச்சி என்ற உறுப்பு அல்லது செயல்பாடு இருக்கிறது என்று இவை நிரூபிக்கின்றன. வெறுப்பைப் பொறுத்தவரை, 2 சாமுவேல் 5:8, சங்கீதம் 107:18, எசேக்கியேல் 36:5 ஆகிய வசனங்களைக் கவனியுங்கள். வெறுப்பு ஆத்துமாவுக்குரியது என்று இந்த வேதபகுதிகள் சுட்டிக்காட்டுகின்றன. வெறுப்பு, உணர்ச்சியின் வெளியாக்கமாக இருப்பதால், உணர்ச்சி ஆத்துமாவின் ஒரு பகுதியாகத்தான் இருக்கவேண்டும் என்று இந்த வசனங்களும்

நிரூபிக்கின்றன. எசேக்கியேல் 36:5 American Standard Version-ல் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதில் "ஆத்துமாவின் கர்வம்" என்ற பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது ஆத்துமாவின் வெறுப்பு அல்லது பகையைக் குறிக்கிறது. ஏசாயா 61:10-லும், சங்கீதம் 86:4-லும் காணப்படுவதுபோல, உணர்ச்சியின் ஒரு மூலக்கூறான மகிழ்ச்சியும்கூட ஆத்துமாவின் ஒரு பகுதியாகும். உணர்ச்சி ஆத்துமாவின் ஒரு பகுதி என்றே இது மறுபடியும் நிரூபிக்கிறது. துக்கம் என்ற இன்னொரு காரியம் 1 சாமுவேல் 30:6-லும், நியாயாதிபதிகள் 10:16-லும் கூறப்பட்டுள்ளது. துக்கம் ஆத்துமாவின் வேறோரு வெளியாக்கம். இன்னொரு அம்சம், ஆசை (வாஞ்சை அல்லது இஷ்டம்). 1 சாமுவேல் 20:4, உபாகமம் 14:26, எசேக்கியேல் 24:25, எரேமியா 44:14 ஆகிய வசனங்களைப் பொறுத்தவரை American Standard Version-ஐ Young அல்லது Strong ஒத்தவாக்கிய அகராதியுடன் சரிபார்க்கும்போது சரியான பொருள் கிடைக்கிறது. உணர்ச்சியின் ஒரு மூலக்கூறான வாஞ்சை ஆத்துமாவின் மண்டலத்தில் இருப்பதாக இந்த வசனங்கள் காண்பிக்கின்றன.

ஆத்துமாவில் மனம், சித்தம், உணர்ச்சி என்ற மூன்று பகுதிகள் இருப்பதை நிரூபிக்க இந்த வசனங்கள் போதுமான ஆதாரத்தைத் தருகின்றன. ஆத்துமாவில் இதற்குமேல் வேறுபகுதிகளைக் கண்டுபிடிப்பது வேதத்தில் கடினம். ஏனெனில் ஆத்துமாவின் சகல செயல்பாடுகளும் இந்த மூன்று பகுதிகளில் அடங்கியுள்ளன. மனமே முக்கியமான பகுதி. அதைத் தொடர்ந்து சித்தமும், உணர்ச்சியும் வருகின்றன. ஆத்துமாவின் மூன்று பகுதிகள் எவையென்பதை இந்த வசனங்கள் மிகத் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

## ஆவியின் மூன்று பகுதிகள் - மனச்சாட்சி, ஐக்கியம், உள்ளுணர்வு

தேவத்துவத்தில் மூன்று நபர்கள்; மனிதனில் மூன்று பகுதிகள்; ஆத்துமாவில் மூன்று உள்ளான பகுதிகள்; ஆவியில் மூன்று பகுதிகள். இது சுவாரஸ்யமானது. எல்லாம் மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கின்றன. தேவனுடைய மாளிகையான ஆசரிப்புக் கூடாரத்திலும் மூன்று பகுதிகள் இருக்கின்றன என்று வேதம் வெளிப்படுத்துகிறது. மூன்றுதான் அடிப்படை எண் அல்லது இலக்கம். நோவாவின் பேழையிலும்வட மூன்று தட்டுகள் இருக்கின்றன. ஆசரிப்புக் கூடாரத்தில் மூன்று என்ற எண் பலதடவை பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக ஒரு பலகையின் அகலம் ஒன்றரை முழம். இரண்டு பலகைகள் ஒரு ஜோடியாக இணைக்கப்படும்போது மொத்த அகலம் மூன்று முழம்.

மூன்று என்ற எண் ஒரு முழுமையான அலகு என்பதே இதன் பொருள்.

ஆகையால் ஆவி என்பது மனச்சாட்சி, ஐக்கியம், உள்ளுணர்வு என்ற மூன்று பகுதிகளால் அல்லது செயல்பாடுகளால் தொகுக்கப்பட்ட ஒரு முழுமையான அலகு. கீழ்வரும் வரைபடத்தில் நிழலிடப்பட்டுள்ள பகுதி ஆவியின் பகுதிகளை விளக்கிக் காட்டுகிறது.




*மனச்சாட்சியைப்* புரிந்துகொள்வது சுலபம். நம் எல்லாருக்கும் இதில் பரிச்சயம் உண்டு. தவறிலிருந்து சரியை உணர்வது மனச்சாட்சியின் ஒரு வேலை. ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பது அல்லது நியாயப்படுத்துவது மனச்சாட்சியின் இன்னொரு வேலை. *ஐக்கியத்தைப்* புரிந்துகொள்வதும்கூட சுலபம்தான். நாம் தேவனோடு கலந்து உறவாடுவதுதான் ஐக்கியம். நம் ஆவிக்குள் தேவனோடு தொடர்புகொள்வதை இந்தச் செயல்பாடு சாத்தியமாக்குகிறது. எளிமையாய்ச் சொல்வதானால், தேவனைத் தொடுவதுதான் ஐக்கியம். ஆனால் *உள்ளுணர்வைப்* புரிந்துகொள்வது அவ்வளவு சுலபமல்ல. நேரடியான உணர்வை அல்லது அறிவைப் பெறுவதுதான் உள்ளுணர்வு. காரணகாரியங்கள், சூழ்நிலைகள், பின்புலம் ஆகியவைகளுக்கு அப்பாற்பட்ட நேரடியான ஓர் உணர்வு நம் ஆவியில் இருக்கிறது. இது "காரணகாரியங்களுக்கு உட்படாத" ஓர் உணர்வு; காரணகாரியங்களால் விவரிக்கமுடியாத ஓர் உணர்வு; இது தேவனுடைய நேரடியான உணர்வு. தேவனிடமிருந்து வரும் நேரடியான அறிவு. இந்தச் செயல்பாட்டையே நாம் ஆவியின் உள்ளுணர்வு ஆகியவைகளின் செயல்பாடுகளால் ஆவியை அறிகிறோம்.

ஆனால் மனித ஆவியிலுள்ள இந்த மூன்று பகுதிகளையும் வேதத்திலிருந்து நிரூபித்தாகவேண்டும். முதலாவது, மனச்சாட்சி - இது ரோமர் 9:2-ல் காணப்படுகிறது. "பரிசுத்த ஆவிக்குள் என் மனச்சாட்சியும் எனக்குச் சாட்சியாயிருக்கிறது." ரோமர் 9:2-ஐ ரோமர் 8:16-வுடன் ஒப்பிடும்போது, மனச்சாட்சி மனித ஆவியில் இருக்கிறது என்பதைக் காணலாம். ஒருபக்கம், பரிசுத்த ஆவி நம் ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். மறுபக்கம், நம் மனச்சாட்சி பரிசுத்த ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறது. மனச்சாட்சி நம் ஆவியின் ஒரு செயலாகத்தான் இருக்கவேண்டுமென்று இது நிரூபிக்கிறது. 1 கொரிந்தியர் 5:3-ல் அப்போஸ்தலனாகிய பவுல் தம் ஆவியில் ஒரு பாவ மனிதனைத் தீர்ப்புச் செய்ததாகக் கூறுகிறார். தீர்ப்புச்செய்வது என்பதின் பொருள், ஒன்று குற்றவாளியாகத் தீர்ப்பது அல்லது நீதிமானாகத் தீர்ப்பது. இவை மனச்சாட்சியின் செயல்கள். ஆனால் அப்போஸ்தலன், "என்னுடைய ஆவியிலே நான் தீர்ப்புச்செய்கிறேன்" என்று கூறுகிறார். குற்றவாளியாகத் தீர்க்கிற செயலோ அல்லது நியாயப்படுத்துகிற செயலோ ஆவியில்தான் இருக்கிறது என்று இது உறுதிப்படுத்துகிறது; ஆகவே மனச்சாட்சி ஆவியில் இருக்கிறது. சங்கீதம் 51:10, "உள்ளத்திலுள்ள நிலைவரமான (சரியான) ஆவியைப்"பற்றிப் பேசுகிறது. அதாவது சரியாக உள்ள ஆவி. தவறிலிருந்து சரியைத் தெரிந்துகொள்வது மனச்சாட்சியோடு தொடர்புடையது. எனவே மனச்சாட்சி ஆவியில்தான் இருக்கிறது என்று இந்த வசனமும் நிரூபிக்கிறது. சங்கீதம் 34:18, "நருங்குண்ட ஆவியைப்"பற்றிப் பேசுகிறது. நருங்குதல் என்றால் நாம் தவறுசெய்திருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்வதாகும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நம்மை நாமே குற்றப்படுத்திக் குற்றவாளியாகத் தீர்த்துக்கொள்கிறோம். இது மனச்சாட்சியின் செயல்பாடு. மனச்சாட்சி ஆவியுடன் தொடர்புடையது என்பதையே "நருங்குண்ட ஆவி" நிரூபிக்கிறது. உபாகமம் 2:30, "அவன் ஆவியைக் கடினப்படுத்தியிருந்தார்," என்று கூறுகிறது. மனச்சாட்சி கடினப்பட்டிருந்தது என்பதையே இது குறிக்கிறது. ஆவியில் கடினப்பட்டிருப்பது, மனச்சாட்சியைப்பற்றிக் கவலையற்றிருப்பதையே குறிக்கிறது. மனச்சாட்சியிலுள்ள உணர்ச்சியை உதறிப்போடும்போது, நாம் ஆவியில் கடினப்பட்டவர்களாகிவிடுகிறோம். மனச்சாட்சியின் செயல்பாடு மனித ஆவியில்தான் இருக்கிறது என்ற உண்மைக்கான மிகப் பலமான ஆதாரத்தை இந்த வசனங்கள் வழங்குகின்றன.

ஐக்கியத்துக்கான வேத ஆதாரத்தைக் கண்டுபிடிக்க நாம் தொடர்ந்துசெல்வோம். முதலாவது, நாம் தேவனை நம் ஆவியில் தொழுதுகொள்ளவேண்டும் என்று யோவான் 4:24 கூறுகிறது.

தேவனைத் தொழுதுகொள்ள நம் ஆவியில் தொழுகை தேவைப்படுகிறது. தேவனைத் தொழுதுகொள்வது என்பது தேவனைத் தொடர்புகொண்டு தேவனுடன் கலந்துறவாடுவதே யாகும். தொழுதுகொள்ளுதல் அல்லது ஐக்கியம்கொள்ளுதல் என்ற செயல்பாடு நம் ஆவியில் இருக்கிறது என்று இந்த வசனம் நிரூபிகிறது. ரோமர் 1:9-ல், "என் ஆவியோடு நாம் சேவிக்கிற தேவன்," என்று அப்போஸ்தலராகிய பவுல் கூறுகிறார். தேவனைச் சேவிப்பது என்பது ஒருவிதத்தில் தேவனோடு ஐக்கியம்கொள்வ தாகும். ஆகையால் ஐக்கியம்கொள்வதற்கான உறுப்பு நம் ஆவியில் இருக்கிறது என்று இந்த வசனம் நிரூபிக்கிறது. "ஆவியின் புதுத்தன்மையில் ஊழியம்செய்கிறோம்," என்று கூறும் ரோமர் 7:6-ஐ இதனுடன் சேர்க்கவேண்டும். வேறு வகையில் சொல்வதானால், சேவித்தல் என்பதின் சாராம்சம் கர்த்தருடன் நம் ஆவியில் ஐக்கியம்கொள்வதாகும்.

எபேசியர் 6:18-ஐ நாம் பார்ப்போம். கிரேக்க வரிபிளப்புப் பாடம் இந்த வசனத்தை, "எந்தச் சமயத்திலும்...ஆவியில் ஜெபம்பண்ணி..." என்று மொழிபெயர்க்கிறது. "ஆவி" என்ற பதத்துக்குமுன்பு சுட்டிடைச் சொல் ஏதும் இல்லை. அது பெரிய எழுத்திலும் எழுதப்படவில்லை. அது பரிசுத்த ஆவியைக் குறிக்காமல் நம் மனித ஆவியையே குறிக்கிறது. ஜெபிப்பது என்பது தேவனுடன் ஐக்கியம்கொள்வதாகும். ஆவியில் ஜெபிப்பது என்றால் தேவனுடன் ஐக்கியம்கொள்வது நம் ஆவியிலுள்ள ஒரு காரியம் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. லூக்கா 1:47, "என் ஆவி தேவனில் களிகூருகிறது," என்று கூறுகிறது. இதன் பொருள் மனித ஆவி தேவனைத் தொடர்புகொண்டுவிட்டது என்பதாகும். தேவனோடு கலந்துறவாடுவது ஆவியிலுள்ள ஒரு செயல் என்பதை இது மீண்டும் காட்டுகிறது. "ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்," என்று ரோமர் 8:16 கூறுகிறது. இந்த வசனம் மிகத் தெளிவாக இருக்கிறது. ஏனென்றால் தேவனோடு கலந்துறவாடுவது நாம் நம் ஆவியிலும், தேவனுடைய ஆவியிலும் இருக்கவேண்டுமென்று இந்த வசனம் காட்டுகிறது. 1 கொரிந்தியர் 6:17: "கர்த்தரோடு இணைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்." கர்த்தருடன் நாம் ஒரே ஆவியாக மாறிவிடுவதுதான் உண்மையான கலந்துறவாடுதலாகும். இந்தக் கலந்துறவாடுதல் ஆவியில் இருக்கிறது. கலந்துறவாடும் செயல்பாடு நம் மனித ஆவியில்தான் இருக்கிறது என்பதை நிரூபிப்பதற்கு இந்த வசனங்கள் அனைத்தும் போதும்.

உள்ளுணர்வைப்பற்றி என்ன? இந்தச் செயல்பாட்டுக்கான வேத ஆதாரத்தைக் கண்டுபிடிப்பது கடினம். இருப்பினும், சில வசனங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆத்துமாவால்

அறியமுடியாததை ஆவியால் பகுத்துணரமுடியும் என்று 1 கொரிந்தியர் 2:11 வெளிப்படுத்துகிறது. நம் ஆத்துமாவால் பகுத்துணரமுடியாததை ஆவியால் பகுத்துணரமுடியும். இது ஆவியில் ஏதோ கொஞ்சம் அதிகப்படியானது இருக்கிறது என்று நிரூபிக்கிறது. காரணகாரியங்களாலும், சூழ்நிலையிலிருந்து அனுமானிக்கிற அனுபவங்களாலும் ஆத்துமாவால் காரியங்களை அறிந்துகொள்ளமுடியும். ஆனால் இந்தக் காரியங்கள் இல்லாமலேயே மனித ஆவியால் காரியங்களைப் பகுத்துணர முடியும். உள்ளுணர்வு நம் ஆவியில் இருக்கிறது என்பதையே இந்த நேரடியான உணர்வு காட்டுகிறது. மாற்கு 2:8, "இயேசு தம்முடைய ஆவியில் பெருமூச்சுவிட்டார்," என்றும், யோவான் 11:33, "இயேசு ஆவியிலே கலங்கித் துயரமடைந்தார்," என்றும் கூறுகின்றன. ஆவியில் அறிதல், ஆவியில் பெருமூச்சுவிடுதல், ஆவியில் கலங்கித் துயரமடைதல் ஆகியவையெல்லாம் பகுத்துணர்வின் நேரடியான உணர்விலிருந்தே வருகின்றன. இது காரணகாரியங்களைச் சார்ந்திருக்கவில்லை. இதைத்தான் நாம் நம் ஆவியின் மூன்றாவது செயலான உள்ளுணர்வு என்று அழைக்கிறோம்.

ஆத்துமாவின் மூன்று பகுதிகள் மற்றும் ஆவியின் மூன்று பகுதிகள் - ஆக ஆறு பகுதிகளுக்கான வேத ஆதாரம் இப்போது நம்மிடம் இருக்கிறது.

## இருதயத்தின் நான்கு பகுதிகள் – மனம், சித்தம், உணர்ச்சி, மனச்சாட்சி

பின்வரும் வரைபடத்திலுள்ள நிழலிடப்பட்ட பகுதி இருதயத்தைத் தொகுக்கும் பகுதிகளை விளக்கிக்காட்டுகிறது.



இருதயம் என்றால் என்ன? இருதயம் என்பது ஆவி, ஆத்துமாபோல இன்னொரு தனிப்பகுதி அல்ல. மாறாக ஆத்துமாவின் எல்லாப் பகுதிகளும், ஆவியின் முதல் பகுதியும் ஒன்றுசேர்ந்த ஒரு தொகுப்புதான் இருதயம். இருதயத்தில் மனமும், சித்தமும், உணர்ச்சியும், அதோடுகூட ஆவியின் ஒரு பகுதியான மனச்சாட்சியும் அடங்கியிருக்கின்றன.

மனிதனில் மூன்று பிரதானமான பகுதிகளைத்தவிர வேறு எந்தப் பகுதியும் இல்லை. மனிதப் பிறவியாக நமக்கு ஒரு சரீரம், ஓர் ஆத்துமா, ஓர் ஆவி இருக்கிறது. இருதயம் என்ற நான்காவதும், தனிப்பட்டதுமான ஒரு பகுதி நம்மிடம் இல்லை.

ஆத்துமாவின் முதல் பகுதியான மனம், இருதயத்தின் ஒரு பகுதி என்று நாம் இப்போது உறுதிசெய்தாக வேண்டும். "உங்கள் இருதயங்களில் சிந்திக்கிறதென்ன?" என்று மத்தேயு 9:4 கூறுகிறது. ஆகையால் ஒருவனால் தன் இருதயத்தில் சிந்திக்கமுடியும். சிந்திக்கும் செயல்முறை மனதில் இருப்பதால், மனம் இருதயத்தின் ஒரு பகதி என்று இது நிரூபிக்கிறது. ஆதியாகமம் 6:5: "அவன் இருதயத்தின் வினைவுகள்." நினைவுகள் மனதுக்குரியவை. ஆனால் ஆதியாகமம் 6:5 இருதயத்தின் நினைவுகள் என்று குறிப்பிடுகிறது. எபிரேயர் 4:12-லும் "இருதயத்தின் நினைவுகள்," என்று காணப்படுகிறது. ஆத்துமாவின் ஓர் உறுப்பான மனம் இருதயத்தின் ஒரு பகுதியாகம் என்பதற்கு இந்த மூன்று வேதபகுதிகளும் போதுமான நிரூபணங்களாகும்.

அப்போஸ்தலர் நடபடிகள் 11:23-ல் சித்தம் காணப்படுகிறது: (மனநிர்ணயம்) "இருதய நிர்ணயம்," அல்லது "இருதயத்தின் நிர்ணயம்." நிர்ணயம் சித்தத்தின் ஒரு செயல்பாடு. ஆனால் அப்போஸ்தலர் நடபடிகளில், நிர்ணயம் இருதயத்திற்குரியது என்று கூறப்பட்டிருக்கிறது. சித்தமும் இருதயத்தின் ஒரு பகுதி என்று இது காண்பிக்கிறது. எபிரேயர் 4:12, "இருதயத்தின் யோசனைகளைப்"பற்றிப் பேசுகிறது. யோசனைகள் சித்தத்துக்குரிய நிர்ணயங்களுக்கு ஒத்திருக்கின்றன. எனவே சித்தம் இருதயத்தின் ஒரு பகுதியாகும் என்று மறுபடியும் இரு நிரூபிக்கிறது. அதிகமான வசனங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த இரண்டு வசனங்கள் போதுமானவை. வேதத்தின் தரத்தின்படி இரண்டே இரண்டு சாட்சிகள்தாம் தேவைப்படுகின்றன.

யோவான் 16:22-ல் உணர்ச்சி காணப்படுகிறது: "உங்கள் இருதயம் சந்தோஷப்படும்." சந்தோஷப்படுவது ஓர் உணர்ச்சி. ஆனால் இங்கே இருதயம் சந்தோஷப்படுகிறது என்று கர்த்தர் கூறுகிறார். ஆகையால் உணர்ச்சியும் இருதயத்தின் ஒரு பகுதியாகும் என்பதை இது உறுதிப்படுத்துகிறது. அதே அதிகாரத்தில் "உங்கள் இருதயம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது,"

(வசனம் 6) என்று கர்த்தர் கூறுகிறார். துக்கம் உணர்ச்சிக்குரியது. எனவே உணர்ச்சியும்கூட இருதயத்திலுள்ள ஒரு பகுதிதான் என்று இந்த இரண்டு வசனங்களும் நிரூபிக்கின்றன.

மனச்சாட்சியைப்பொறுத்தவரை, நம்முடைய இருதயம் "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்டிருக்கிறது," என்று எபிரேயர் 10:22 கூறுகிறது. எனவே மனச்சாட்சிக்கு இருதயத்தோடு அதிகத் தொடர்பு உண்டு என்று பார்க்கிறோம். நமக்கு ஒரு பரிசுத்தமான இருதயம் வேண்டுமென்றால், குற்றமற்ற மனச்சாட்சி நமக்கு வேண்டும். பரிசுத்தமான இருதயத்தைப் பெற நம் மனச்சாட்சி தெளிக்கப்படவேண்டும். இவ்வாறு மனச்சாட்சி இருதயத்தின் ஒரு பகுதிதான் என்று சந்தேகமேயில்லாமல் காண்கிறோம். 1 யோவான் 3:20, "நம்முடைய இருதயம் நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்கிறது," என்று கூறுகிறது. குற்றவாளியாகத் தீர்ப்பது மனச்சாட்சியின் வேலை. எனவே மனச்சாட்சியும்கூட இருதயத்தின் ஒரு பகுதிதான் என்று இந்த வசனம் நிரூபிக்கிறது.

இவ்வாறு ஆத்துமாவின் சகல பகுதிகளும், ஆவியின் முதல் பகுதியுமாகிய மனம், சித்தம், உணர்ச்சி, மனச்சாட்சி என்ற நான்கு பகுதிகளும் ஒருமித்துத் தொகுக்கப்பட்டால் அவை இருதயத்துக்குச் சமமாகும் என்பதை இந்த வேத ஆதாரங்கள் நிரூபிக்கின்றன.

## அத்தியாயம் ஏழு

## உள்ளான மற்றும் மறைவான பகுதிகளின் செயல்பாடு

நம் ஆள்தத்துவத்தின் உள்ளான மற்றும் மறைவான பகுதிகளை நாம் தொடர்ந்து பார்க்கவேண்டும். உள்ளான பகுதிகள், மறைவான பகுதிகள் என்ற இரண்டு பதங்களையும் நாம் நினைவில்கொள்ளவேண்டும். நம் ஆள்தத்துவத்தின் உள்ளான பகுதிகள் ஆத்துமாவின் பகுதிகளாகும்; மறைவான பகுதி நம் ஆவியாகும். நம் ஆத்துமாவிலும், ஆவியிலும் மும்மூன்று பகுதிகள் உள்ளன. ஆத்துமாவின் மூன்று பகுதிகளும், ஆவியின் முதல் பகுதியும் இணைந்து ஒன்றாகத் தொகுக்கப்பட்டிருப்பதுதான் இருதயம். இந்த பகுதிகளனைத்தின் விவரங்களையும் ஆழ்ந்து சிந்திக்க நாம் நேரம் செலவழிக்கவேண்டும். இருதயத்தின் செயல்பாடு என்னவென்றும், அதனுடன் இடைப்படுவது எப்படி என்றும், நாம் முதலாவது பார்க்கவேண்டும். பிறகு ஆவியையும், கடைசியாக ஆத்துமாவையும் நாம் பார்க்கவேண்டும். இந்தப் பகுதிகளையெல்லாம் தெளிவாகப் பார்ப்பதற்குத் தேவையான கிருபையைப் பெறவும், நம் ஆள்தத்துவத்தின் சகல பகுதிகளையும்பற்றிப் போதுமான அளவுக்குக் கற்றுக்கொள்ளவும் கர்த்தரை அனுபவிப்பதற்கு நம் ஆவியையும், இருதயத்தையும் எப்படி இயக்குவது என்று தெரிந்துகொள்ளவும் நாம் கர்த்தரை நோக்கிப் பார்ப்போமாக. இந்த அதிகாரத்தில் இருதயம், ஆவி மற்றும் ஆத்துமாவின் செயல்களைப் பார்க்கவேண்டும்.

வேதாகமத்தின்படி, முதலாவது ஆவியுடனோ, ஆத்துமாவுடனோ அல்ல; இருதயத்துடன்தான் முதலாவது இடைப்படவேண்டும். இதற்குக் காரணம் என்னவென்றால் இருதயம் ஆத்துமாவின் எல்லாப் பகுதிகளாலும், ஆவியின் மிக முக்கியமான பகுதியாகிய மனச்சாட்சியாலுமான ஒரு தொகுப்பாகும். கர்த்தருடனான நம் உறவு மனச்சாட்சியிலிருந்தான் ஆரம்பிக்கவேண்டும். நம் மனச்சாட்சி தவறாக இருந்தால் தேவனுடனும் பிறருடனும் நாம் தவறாகத்தான் இருக்கிறோம் என்று நாம் நிச்சயித்துக்கொள்ளலாம். ஆகையால் மனச்சாட்சியே இருதயத்தின் பிரதானமான பகுதியாக இருப்பதால், தேவனுடன் சரியான உறவைக் காப்புறுதி செய்வதற்கு முதலாவது இருதயத்துடன் இடைப்படவேண்டும்.

## இருதயம் - அன்புசெய்கிற உறுப்பு

"அது (இருதயம்) கர்த்தரிடத்தில் திரும்பும்போது, முக்காடு எடுபட்டுப்போம்," என்று 2 கொரிந்தியர் 3:16 கூறுகிறது. முதலாவது, இருதயம் கர்த்தரிடத்தில் திருப்பப்படவேண்டும். இதுவே மெய்யான மனந்திரும்புதல். நாம் விழுந்திருந்தபோது நம் இருதயம் கர்த்தரிடமிருந்து தூரமாகத் திரும்பியிருந்தது. ஆனால் நாம் மன்திரும்பியபோது நம் இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்டது. இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்புகிற இந்தக் காரியம் ஒரே மூச்சில், ஒரேவொரு தடவை செய்துமுடிக்கிற யாரியமில்லை. இருதயம் தினம் தினம், எல்லா நேரமும் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்படவேண்டும். ஒவ்வொருநாள் காலையிலும் நாம் நம் இதயத்தைத் திரும்பத் திரும்பக் கர்த்தருக்கு நேராய்த் திருப்பவேண்டும். காலை எழுந்தவுடன் நாம் கர்த்தரிடத்தில் சென்று, "கர்த்தாவே, இதோ அடியேன்! உம் இரக்கத்தினாலும், கிருபையினாலும் இந்த நாளிலும் என் இருதயத்தை மீண்டும் உம்மிடத்திற்குத் திருப்ப விரும்புகிறேன்," என்று கூறவேண்டும்.

நம் இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்படும்போது முக்காடு போய்விடுகிறது. திரளான மக்கள், "ஆ, எனக்கு ஏன் வழிகாட்டுதல் இல்லை? கர்த்தருடைய சித்தம் எனக்கு ஏன் தெரிவதில்லை?" என்று கேட்கிறார்கள். ஆனால் பிரச்சினை என்னவென்றால், அவர்களுடைய இருதயம் எங்கேயிருக்கிறது? அவர்களுடைய இருதயம் எந்தத் திசையில் இருக்கிறது? அவர்களுடைய இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்டு அவரோடு இசைந்திருக்க வேண்டும். நான் வாலிபனாக இருந்தபோது, "கர்த்தாவே, நான் என் இருதயத்தை உம்மிடத்திற்குத் திருப்பும்படிச்செய்யும்" என்று 2 கொரிந்தியர் 3:16-ஐ அநேகமாக ஒவ்வொருநாளும் ஜெபிக்கும் பழக்கம் எனக்கு இருந்தது. ஆ! இது வேலைசெய்கிறது. இதைச் சற்று முயற்சிசெய்து பாருங்கள். காலையில் நீங்கள் வேதத்தை வாசிப்பதற்குமுன்பு, முதன்முதலாவ உங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்புங்கள். முக்காடு போய்விடும். அங்கே வெளிச்சம் இருக்கும். உங்கள் இருதயத்தை அவரிடத்திற்குத் திருப்புவதால் உங்களுக்கும் கர்த்தருக்குமிடையே இருக்கும் திரை எடுபட்டுப்போகும். நீங்கள் வெளிச்சத்தைக் காண்பீர்கள்.

நம் இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்டவுடனே, அடுத்தபடியாக, அது விசுவாசத்தைப் பயிற்சிசெய்யவேண்டும். "இருதயத்தில் விசுவாசி," என்றும், "இருதயத்திலே விசுவாசிக்கப்படும்," என்றும் ரோமர் 10:9, 10 கூறுகிறது. விசுவாசிப்பது ஆவியின் அல்லது மனதின் அல்லது சித்தத்தின் பயிற்சி அல்ல. மாறாக அது இருதயத்தின் பயிற்சி: "இருதயத்திலே

விசுவாசிக்கப்படும்." உள்வசிக்கும் ஆவியானவருடன் ஒத்துழைக்குமாறு விசுவாசிப்பதற்கு நம் இருதயத்தை எப்படி இயக்குவது என்று கற்றுக்கொள்ளவேண்டும். நம் இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்பட்டபிறகு, நாம் நம் இருதயத்திலே உடனே விசுவாசத்தைப் பயிற்சிசெய்யவேண்டும். கர்த்தர் வேதத்தில் எதைச் சொன்னாலும், அதை விசுவாசிப்பதற்கு நம் இருதயத்தை இயக்கவேண்டும். நாம் நமக்குள் ஆழமாக எதையாகிலும் உணர்ந்தால் இருதயத்தை இயக்கி அதை நாம் விசுவாசிக்கவேண்டும். நம் சூழ்நிலையின் மத்தியில் நாம் கர்த்தரிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டும். நம் சந்தர்ப்ப சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் கர்த்தரை வசுவாசிப்பதற்கு நம் இருதயத்தை நாம் எப்போதும் இயக்கவேண்டும். கர்த்தர்பேரில் விசுவாசத்தைப் பயிற்சிசெய்வது இருதயத்தைச் சந்தேகத்திலிருந்து காப்பற்றும். கர்த்தர் நம் இருதயத்தைச் சந்தேகத்திலிருது பாதுகாத்துக்கொள்ளுமாறு நாம் ஜெபிக்கவேண்டும்.

மூன்றாவது, இருதயம் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட வேண்டும் (எபிரேயர் 10:22). இருதயமல்ல, துர்மனச்சாட்சிதான் தெளிக்கப்படவேண்டும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தம் நம் மனச்சாட்சியில் எப்போதும் தெளிப்பப்பட வேண்டியிருக்கிறது. எவ்வளவு அதிகமாக நாம் நம் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் திருப்புகிறோமோ, எவ்வளவு அதிகமாக நம் இருதயத்தை இயக்கிக் கர்த்தரை நாம் விசுவாசிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அநேகக் காரியங்களில் தவறாக இருக்கிறோம் என்று நம் மனச்சாட்சியில் உணர்வோம். நம் இருதயம் கர்த்தரிடத்திற்குத் திருப்பப்படாதபோது, நம் மனச்சாட்சி இருக்கிறது என்று நாம் ஒருபோதும் உணரமாட்டோம். நம் இருதயம் கர்த்தரிடமிருந்து தூரமாகத் திரும்பியிருக்கும்போது, நம்மிடத்தில் ஒரேவோர் உணர்வுதான் இருக்கும்: "நாங்கள் எல்லாவற்றிலும் சரியாக இருக்கிறோம், மற்றவர்களெல்லாரும் தவறாக இருக்கிறார்கள். ஆனால் நாங்கள்தாம் சரியாக இருக்கிறோம்." நம் இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்பும்போது, நம்மை மட்டுமே பார்க்கமுடியும்; மற்றவர்களைப் பார்க்கமுடியாது. எவ்வளவு அதிகமாக அவரிடத்தில் விசுவாசம்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் ஏராளமான காரியங்களில் எவ்வளவு தவறாக இருக்கிறோம் என்று உணர்ந்துகொள்வோம். நம் மனைவியுடன், நம் கணவருடன், நம் பிள்ளைகளுடன், நம் பெற்றோருடன், நம் பள்ளிமாணவர்களுடன் நாம் தவறாக இருக்கிறோம். நம் இருதயத்தில் இருக்கும் இந்தக் குற்றச்சாட்டுகளெல்லாம் என்ன? இவைதாம் நம் மனச்சாட்சியின் குற்றச்சாட்டுகள். இப்படிப்பட்ட சமயத்தில், நம்

மனச்சாட்சியின் உள்ளான குற்றச்சாட்சிடின்படி, எந்தவிதப்புறத் தூண்டுதலுமின்றி தானாகவே நாம் ஒவ்வொன்றையும் அறிக்கைசெய்வோம். எவ்வளவு அதிகமாக நாம் அறிக்கைசெய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் நம் மனச்சாட்சியில் செயல்படும். அது சுத்திகரிக்கப்படும், சுத்தமாக்கப்படும், குற்றமற நீக்கப்பட்டு பரிசுத்த மனச்சாட்சியாகிவிடும். நம் இருதயத்தில் இனிமேல் ஆக்கினைத்தீர்ப்பே இல்லை என்னும் அளவுக்கு நம் மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்டுவிட்டது என்பதே நம் இருதயத்தைத் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமாக வைத்துக்கொள்வது என்பதின் பொருளாகும். நம் இருதயம் கர்த்தருக்கும் சமாதானமாகவும், சந்தோஷம் நிறைந்ததாகவும் இருக்கிறது.

மேலும் எசேக்கியேல் *36:26*-ன்படி, இருதயம் புதுப்பிக்கப்பட வேண்டும். எசேக்கியேல் *36:25*-ல், "நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன், நான் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள்," என்று கர்த்தர் கூறுகிறார். ஆனால் இது மட்டுமல்ல, நம்மை எல்லா அசுத்தங்களிலிருந்தும், எல்லாப் பாவங்களிலிருந்தும், விக்கிரகங்களிலிருந்தும்கூட சுத்தமாக்குவது எதிர்மறையான காரியம்தான். நமக்கு நேர்மறையான ஒரு காரியம் தேவை. ஆகையால் அடுத்த வசனம், "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுப்பேன்," என்று கூறுகிறது. நவமான இருதயம் என்பது புதுப்பிக்கப்பட்ட பழைய இருதயம்.

இவ்வாறு இருதயத்தோடு இடைப்படுவதில் நான்கு படிகள் இருக்கின்றன. கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, அவரை நம் இரட்சகராகப் பெற்றுக்கொள்ளும் அந்தக் கணப்பொழுதில் இந்த நான்கு படிகளும் ஒரே சமயத்தில் மொத்தமாக நடந்துவிடுவதில்லை, கர்த்தரைத் தேடிக்கொண்டிருக்கும் நாம் நம் இருதயத்தை இந்த நான்கு படிகள்மூலம் புத்துணர்ச்சிபெறச் செய்யவேண்டும். நம் இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்பவேண்டும். கர்த்தரை விசுவாசிக்க இருதயத்தை இயக்க வேண்டும். நம் இருதயத்தைத் துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்டதாக வைத்துக்கொள்ளவேண்டும். திரும்பத் திரும்ப இதைப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். இருதயத்தைப் புதுப்பிப்பது ஒரே சமயத்தில் மொத்தமாக நடந்துமுடிகிற யாரியமல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் இன்று வாழ்ந்துகொண்டிருந்தால் அவருடைய இருதயமும் இன்னும் புதுப்பிக்கப்பட்டாக வேண்டும் என்று நான் நம்புகிறேன். இந்த நான்கு படிகளையும் நாம் உடனடியாக நடைமுறைப்பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டும். முதலாவது, நாம் காலையில் எழும்பும்

போதே, "கர்த்தாவே, நான் என் இருதயத்தை உம்மிடத்திற்குத் திருப்பப்பண்ணும்," என்று ஜெபிக்கவேண்டும். பிறகு, "கர்த்தாவே, நான் உம்மையும் உம் வார்த்தையையும் விசுவாசிக்கிறேன். எனக்குள்ளே உம் இடைப்படுதல்களையும், என் சுற்றுப்புறச் சூழ்நிலைகளில் உள்ள உமது சகல இடைப்படுதல்களையும் நான் விசுவாசிக்கிறேன்," என்று கர்த்தரை விசுவாசிப்பதற்கு நம் இருதயத்தை இயக்கவேண்டும். அப்போது நாம் எவ்வளவு தவறாக இருக்கிறோம், நாம் எத்தனை தவறுகளைச் செய்திருக்கிறோம், நம்மிடத்தில் எவ்வளவு அசுத்தம் இருக்கிறது என்று உணர்ந்துகொள்வோம். ஆகையால் சுத்தமாக்கப்படவும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்படவும் நாம் அறிக்கைசெய்ய வேண்டும். அப்போது நம் இருதயம் மறுபடியும் புதிதாக்கப்படும்.

இந்த நான்கு நடபடிகளும் இருதயத்தைப் போதுமான அளவுக்குச் செயல்படச்செய்யும். கர்த்தரை நேசிப்பதுதான் இருதயத்தின் செயல்பாடு. ஏனென்றால் இருதயம்தான் நம் ஆள்தத்துவத்தின் அன்புசெய்கிற உறுப்பு. மாற்கு *12:30* இதை நிரூபிக்கிறது: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும்...அன்புகூருவாயாக." கர்த்தரை நேசிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகத்தான் இருதயம் சிருஷ்டிக்கப்பட்டது. நம்மிடத்தில் இருதயம் இல்லையென்றால் நம்மால் அன்புசெய்யமுடியாது. கண்கள் இல்லாமல் நம்மால் பார்க்கமுடியுமா? காதுகள் இல்லாமல் நம்மால் கேட்கமுடியுமா? மனம் இல்லாமல் நம்மால் சிந்திக்கமுடியுமா? முடியாது! அப்படியே இருதயம் இல்லாமல் நம்மால் அன்புசெய்யவும் முடியாது. இருதயத்தின் செயல்பாடு என்னவென்றே அநேகக் கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது. கண்கள், காதுகள், மனம் ஆகியவைகளின் செயல் என்னவென்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இருதயத்தின் செயல்பாடு என்னவென்று அவர்களுக்குத் தெரியாது.

அன்பு இருதயத்துக்குரிய ஒரு காரியம். மக்களை நம் மூக்கை வைத்து அன்புசெய்யமுடியாது. அவர்களை நம் கைகளாலும் அன்புசெய்யமுடியாது. அன்பைப் பயிற்சிசெய்வதற்கான ஒரே உறுப்பு இருதயமே. யாருமே, "நான் எதையும் நேசிப்பதில்லை," என்று கூறமுடியாது. ஒவ்வொருவரும் ஏதோவொன்றை நேசிக்கிறோம். கர்த்தரை நேசிக்கிறோம் அல்லது வேறு ஏதோவொன்றை நேசிக்கிறோம். எவ்வளவு அதிகமாக நாம் நம் இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்புகிறோமோ, அவ்வளவு அதிகமாக கர்த்தரை விசுவாசிப்பதற்கு நாம் நம் இருதயத்தை இயக்குவோம், அவ்வளவு அதிகமாக இருதயம் துர்மநச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்படும். அப்போது கர்த்தரை

அன்புசெய்வதற்கு இருதயத்தில் அதிகமான ஆற்றல் இருக்கும். இதுவே புதிதாக்கப்பட்ட இருதயத்தின் செயல்பாடு. நாம் கர்த்தரிடத்தில் மேன்மேலும் அன்புகூருமாறு ஒவ்வொருநாள் காலையிலும் நம் இருதயத்தைப் புதிதாகவேண்டும்.

ஆவிக்குரிய அனபவங்களெல்லாம் இருதயத்திலுள்ள அன்பிலிருந்தே ஆரம்பிக்கின்றன. நாம் கர்த்தரிடத்தில் அன்புகூராவிட்டால், எந்த விதமான ஆவிக்குரிய அனுபவத்தையும் பெற்றுக்கொள்வது சாத்தியமில்லை. உண்மையில் நம் கிறிஸ்தவ வாழ்வின் முதல் அனுபவமாகிய இரட்சிப்பு, நம் இருதயம் கர்த்தராகிய இயேசுவை அன்புசெய்கிற ஒரு காரியம்தான். உண்மையாக மனந்திரும்புகிற எந்த ஒரு நபரின் இருதயத்திலும் கர்த்தர்பேரில் அன்பு இல்லாமல் இல்லை. ஒருவேளை அதை வெளியாக்குவதற்கான மொழி அவர்களிடம் இல்லாமல் போகலாம். ஆனால் அன்பின் இனிமையான உணர்பு அவர்களுக்குள் இருக்கிறது. அவரிகளிடம் அறிவு இல்லாமல் போகலாம். ஆனால் அவர்களுடைய இரட்சிப்பின் முதல் அனுபவமே கர்த்தர்பேரில் அவர்கள் இருதயத்திலுள்ள அன்பின் பிரதிபலிப்புதான், அன்பின் பிரதிகிரியைதான்.

கர்த்தரிடத்தில் நாம் மேன்மேலும் அன்புகூருவதற்காக நம் இருதயத்தை எப்படித் தொடர்ச்சியாகத் திருப்பவேண்டும் என்றம், நம் இருதயத்தை எப்படி இயக்கவேண்டும் என்றும், துர்மனச்சாட்சி நீங்க நம் இருதயத்தை எப்படிச் சுத்திகரிக்கவேண்டும் என்றும், அதை மீண்டும் எப்படிப் புதிதாக்கவேண்டும் என்றும், நாமெல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தர்பேரிலுள்ள இந்த ஆதி அன்பின், அதாவது பசுமையான அன்பின், இழப்புதான் சபையின் வீழ்ச்சிக்கும், சீரழிவுக்கும் காரணமாகும். கர்த்தரை அன்புசெய்வதில் நம் இருதயம் பசுமையாக இல்லாவிட்டால் நாம் விழுந்துவிட்டோம் என்று பொருள். மீண்டும் மீண்டும் இருதயத்தைக் கர்த்தரிடத்திற்குத் திருப்பவேண்டும். கர்த்தர்பேரில் நம் அன்பு புதிதாகவும், பசுமையாகவும் இருக்க நம் இருதயத்தை நாம் தொடர்ந்து புதிதாக்கிக்கொண்டே இருக்கவேண்டும்.

## ஆவி - பெற்றுக்கொள்ளும் உறுப்பு

நாம் இருதயத்தின் செயல்பாட்டைப் பார்த்தோம். இப்போது ஆவியின் செயல்பாட்டை நாம் ஆழ்ந்து பார்க்கவேண்டும். ஆதியில் நாம் மரித்தவர்களாக இருந்தோம் என்று வேதாகமம் கூறுகிறது. ஆனால் நாம் கர்த்தராகிய இயேசுவைப் பெற்றுக் கொண்டபோது உயிர்ப்பிக்கப்பட்டோம், ஜீவனுள்ளவர்களானோம். நாம் மரித்தவர்களாயிருந்தோம் என்றால் என்ன பொருள்? நான் வாலிபனாக இருந்தபோது இதை என்னால் புரிந்துகொள்ள

முடியவில்லை. “நான் இன்னும் உயிரோடிருக்கும்போததே நான் மரித்துப்போனவன் என்று அவர்கள் எப்படிச் சொல்லலாம்?” என்று என்னை நானே கேட்டதுண்டு. பிறகுதான், நான் மெய்யாகவே என் ஆவியில் மரித்துப்போயிருந்தேன் என்று கற்றுக்கொண்டேன். என் ஆவிதான் மரித்ததாகவும், செயலற்றதாகவும் இருந்தது. தேவனைத் தொடர்புகொள்வதும், தேவனுடன் கலந்துறவாடுவதும், தேவனைப் பெற்றுக்கொண்டு அவரை ஆராதிப்பதும் ஆவியின் செயல்பாடு. ஆனால் வீழ்ச்சியின் விளைவாக ஆவி செயல்திறன் இழந்து செயல்பட முடியாமல் போனது.

நாம் கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராகப் பெற்றுக்கொண்டபோது பரிசுத்த ஆவி நம் ஆவிக்குள் வந்து நம் ஆவியைத் தொட்டார். (“பரிசுத்த ஆவி” என்ற பட்டப்பெயர் பயன்படுத்தப்படும்போது, அது சகலத்தையும் உள்ளடக்கிய ஆவியையே குறிக்கிறது என்று நமக்கு நாமே நினைப்பூட்டிக்கொள்ளவேண்டும்). இத்தகைய தொடுதலால் நம் ஆவி உயிர்ப்பிக்கப்பட்டது. உயிர்ப்பித்தல் என்ற வார்த்தையை நாம் நம் மொழியில் போதுமான அளவுக்கு மொழிபெயர்க்க முடியாது. கிரேக்க மொழியில் இது “சாதாரண ஒரு தொடுதலால் ஜீவன் பகிர்ந்தளிக்கப்படுகிறது, உட்செலுத்தப்படுகிறது,” என்ற பொருளைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மின்சாரத்தை வைத்து இதை ஓரளவுக்குத் தெளிவாக விளக்கிக்காட்டலாம். நாம் மின்சாரத்தைத் தொடும்போது, சிறிதளவு மின்சாரம் நமக்குள்ளே கடத்தப்படுகிறது. இதுபோல பரிசுத்த ஆவி நம் ஆவியைத் தொடுவதற்கு நம் ஆவிக்குள் வந்தார். அந்தத் தொடுதலால் மெய்யாகவே ஜீவன் நமக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டது. கர்த்தரே இந்த ஜீவன் - மரித்துப்போன, செயலற்றுப்போன நம் ஆவி உடனே உயிர்பெற்றது. இது ஓர் அற்புதத்தைவிடச் சற்று அதிகமானது. மரித்துப்போன ஒருவன் உயிரோடு எழுப்பப்பட்டால் அது அதிசயமாகவும், அற்புதமாகவும் இருக்குமென்று அநேக வேளைகளில் நாம் நினைத்திருக்கிறோம். ஆனால் மரித்துப்போன நம் ஆவியை பரிசுத்த ஆவியானவர் உயிர்ப்பிக்கும்போது அது அதைவிட அதிக அற்புதமானது என்று நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். ஆயிரக்கணக்கான, சொல்லப்போனால் இலட்சக்கணக்கான மக்கள் துரிதமாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று வரலாறு கூறுகிறது. ஏனென்றால் அவர்களுடைய மரித்துப்போன ஆவி உயிரடைந்தது. ஒரேவொரு நொடியில் ஆவியில் மரித்துப்போன நபரை உயிரடையச் செய்துவிடலாம். பரிசுத்த ஆவி மின்சாரத்தைவிட அதிக வல்லமைவாய்ந்தவர், மின் வேகத்தைவிட அதிக வேகமானவர்.

ஆவி மரித்துப்போயிருந்தது என்றும், பின்னர் அது

உயிர்ப்பிக்கப்பட்டது என்றும் கொலோசெயர் 2:13-ம், எபேசியர் 2:1, 5-ம் கூறுகின்றன. நாம் பாவங்களில் மரித்தவர்களா யிருந்தோம், பின்பு கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பிக்கப்பட்டோம். ஆதியில் நாம் ஆவியில் மரித்தவர்களாயிருந்தோம், ஆனால் கர்த்தராகிய இயேசுவை நாம் இரட்சகராகப் பெற்றுக்கொண்டபோது நம் மரித்துப்போன ஆவி உயிர்ப்பிக்கப்பட்டதென்றும், உயிரடைந்ததென்றும், இந்த இரண்டு பகுதிகளும் நிரூபிக்கின்றன. நம் ஆவி உயிரூட்டப்பட்டபோது அது மறுபடிஜெநிப்பிக்கப் பட்டது. "மறுபடிஜெநிப்பிக்கப்படுதலில்" உள்ள மறுபடி என்பதற்கு "மீண்டும்" என்று பொருள். நம் ஆவி உயிர்ப்பிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, நம் ஆவிக்குள் இன்னொரு ஜீவனும் சேர்க்கப்பட்டது. இதுதான் அதன் பொருள். இந்த "வேறொரு ஜீவன்" தேவனுடைய சிருஷ்டிக்கப்படாத தெய்வீக ஜீவன். இது கிறிஸ்துவே. கிறிஸ்துவின் மீட்பின் கிரியையை ஆதாரமாகக் கொண்டு பரிசுத்த ஆவி நமக்குள் வந்தபோது, அவர் மரித்துப் போயிருந்த நம் ஆவியை உயிர்ப்பித்ததோடு மட்டுமின்றி, கிறிஸ்துவையே நம் ஆவிக்கள் கொண்டுவந்தார். நம் ஆவிக்குள் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட இந்தப் புதிய ஜீவன் தேவன் நமக்குள் சிருஷ்டிப்பில் தந்ததைவிடச் சற்று அதிகமானது.

ஆகையால் மரித்துப்போயிருந்த நம் ஆவி மீட்டுத்திருப் பப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்டது மட்டுமின்றி, நம் ஆவிக்குள் ஒரு புதிய சாராம்சமும் கூடுதலாகச் சேர்க்கப்பட்டுள்ளது. கிறிஸ்துவே இந்தக் கூடுதலான புதிய சாராம்சம் அல்லது சாரம்; இதுவே புதுப்பிறப்பு, மறுஜெநனம். "ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்," என்று யோவான் 3:6 கூறுகிறது. புதிய பிறப்பினால் அல்லது மறுஜெநனத்தினால் நம்மிடத்தல் ஆரம்பத்தில் இருந்ததைவிட வேறு ஏதோவொன்று நமக்குள் கூடுதலாவச் சேர்க்கப்பட்டிருக்கிறது. திரும்பத் திரும்ப நாம் இதைக் கூறவேண்டும். ஏதோவொன்று கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. பழையது புதுப்பிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, மரித்ததாயிருந்தது உயிர்ப்பிக்கப்பட்டதோடு மட்டுமின்றி, கிறிஸ்துதாமே தெய்வீக ஜீவனுடைய சாரமாக நமக்குள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார். இதுவே மறுஜெநனம், புதுப்பிறப்பு. இவையனைத்தினாலும் இப்போது நம்மிடம் ஒரு புதிய ஆவி இருக்கிறது (எசேக்கியேல் 36:26).

கிறிஸ்துவையே உங்கள் புதிய ஜீவனாக நீங்கள் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்று நான் உங்களைக் கேட்கலாமா? நீங்கள் "ஆம்" என்று கூறினால், பின்னர் ஏன் இன்னும் தரித்திரராக இருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். கிறிஸ்தவர்கள் இந்தக் கிறிஸ்துவை ஜீவிக்கிற நிஜமாக கட்டாயம்

அறிந்துகொண்டாக வேண்டும். அணுவல்லமை ஏதோ புறம்பான ஒன்று மட்டுமல்ல, இது சற்று உள்ளானதும்கூட. வெறும் துண்டுத் தாளுக்குள்ளும்கூட அணுவல்லமை இருக்கிறது. ஆனால் நீங்கள் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டபோது அணுவல்லமையைவிட அதிக வல்லமையான ஏதோவொன்று உங்கள் ஆவிக்குள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது. நீங்கள் இதை விசுவாசித்தால், துள்ளிக் குதித்து "அல்லேலூயா," சொல்லவேண்டும். இப்படிப்பட்ட அற்புதமான, சகலத்தையும் உள்ளடக்கிய, தீர்ந்துபோகாத, அளவிடமுடியாத கிறிஸ்து மெய்யாகவே உங்களுக்குள் கூடுதலாகச் சேர்க்கப்பட்டிருப்பதால் நீங்கள் அவருக்கு நன்றிகூறி அவரைத் துதிக்கவேண்டும். நமக்குள் வந்திருக்கும் கிறிஸ்துவை விவரிப்பதற்குப் போதுமான வார்த்தைகள் நம்மிடம் இல்லவே இல்லை; நித்தியம் மட்டுமே முழு விவரத்தையும் கூறமுடியும்.

ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், இதோடு எல்லாம் முடியவில்லை. நம் ஆவியில் *சகலத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த ஆவி வாசம்பண்ணுகிறார்.* நம் இரட்சிக்கப்பட்டபோது தேவன் நம் இருதயத்தையும, ஆவியையும் புதுப்பித்ததோடு மட்டுமின்றி, அவர் தம் சொந்த ஆவியையே நமக்குள் வைத்தார் (எசேக்கியேல் 36:26, 27; யோவான் 14:17). இந்த அற்புதமான ஆவியானவர் நம் மனித ஆவியில் (ரோமர் 8:16) வாசம்பண்ணுகிறார் (ரோமர் 8:11). நம் ஆவியே பரிசுத்த ஆவியின் மெய்யான உறைவிடம். இந்த ஆவியானவர் எவ்வளவு அற்புதமானவர் என்பதை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள். மரித்துப்போயிருந்த நம் ஆவி நாம் இரட்சிக்கப்பட்ட நேரத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியாக மாறிவிட்டது; கிறிஸ்துவைத் தெய்வீக ஜீவனாகக்கொண்டு மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டுவிட்டது; சகலத்தையும் உள்ளடக்கிய பரிசுத்த ஆவியின் வாசஸ்தலமாக ஆகிவிட்டது. நம்மிடத்தில் இப்போது இப்படிப்பட்ட ஆவி இருக்கிறது.

ஆனால் இதோடும் எல்லாம் முடியவில்லை. இப்போது நம் ஆவி கர்த்தருடன் *ஒரே ஆவியாக* இணைந்திருக்கிறது. நம் ஆவியும், ஆவியாயிருக்கிற கர்த்தரும் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே ஆவியாக இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 6:17). மனிதனுடைய எந்த வார்த்தைகளாலும் இந்தப் பரம இரகசியத்தின் எல்லா அம்சங்களையும் விளக்கிச்சொல்லமுடியாது.

ஆவியின் நோக்கமும், செயல்பாடும் என்ன? கர்த்தரைத் தொடர்புகொள்வதும், அவரைப் பெற்றுக்கொள்வதும், தேவனை ஆராதிப்பதும் (யோவான் 4:24), மூவொரு தேவனுடைய தெய்வீக நபர்களுடன் கலந்துறவாடுவதுமே ஆவியின் செயல்பாடு. இருதயம் அன்புசெய்கிற உறுப்பு. ஆனால் ஆவியோ தொடர்புகொள்கிற மற்றும் பெற்றுக்கொள்கிற உறுப்பாகும். நாம் ஆவியினால்

அன்புசெய்யமுடியாது. நம் இருதயத்தினால்தான் அன்புசெய்ய வேண்டும். ஆனால் நம் இருதயம் நேசிப்பவரை ஆவியினால் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவேண்டும்.

இதுபோன்ற செய்தியால் சங்கடத்துக்குள்ளான ஒரு சகோதரியை என்னால் ஒருபோதும் மறக்கமுடியாது. நம் இருதயம் கர்த்தரிடத்தில் அன்புகூர்ந்தால் அது போதுமானதென்றும், ஆவியைப்பற்றிப் பேசுவதற்கு அவசியம் இல்லை என்றும் அந்தச் சகோதரி நினைத்தாள். ஆவியும் இருதயமும் ஒரே பொருளைக் குறிக்கிற பதங்கள் என்று அவள் எண்ணினாள். இப்படிப்பட்ட செய்தியைக் கேட்டபிறகு அந்த இரவில் இந்தச் சகோதரி அநேகமாகச் சரியாகத் தூங்கியிருக்கமாட்டாள். ஏனென்றால் மறுநாள் காலையில் காலைச் சிற்றுண்டி சாப்பிட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அந்தச் சகோதரி, "நம் இருதயங்கள் கர்த்தரை நேசிக்கின்றன. இது போதாதா? நாம் ஆவியைப்பற்றிப் பேசுவதற்கு அவசியம் என்ன?" என்று கேட்டாள். நான், "சகோதரியே, என்னிடத்தில் இங்கே ஓர் அருமையான வேதாகமம் இருக்கிறது. நீ இதை நேசிக்கிறாயா?" என்று கேட்டேன். அவள், "நிச்சயமாக, சந்தேகமே இல்லாமல் நான் இதை நேசிக்கிறேன்," என்று பதிலளித்தாள். பின்பு நான், "இதை எடுத்துக்கொள்," என்று கூறினேன். அதை எடுப்பதற்கு அவள் தன் கையை நீட்டியபோது நான், "நீட்டாதே; உன் கையைப் பயன்படுத்தாதே. வேதத்தை உன் இருதயம்தானே நேசிக்கிறது. உன் இருதயம் வேதத்தை நேசிக்கிறவரையில், அது போதுமே. வேதத்தை எடுப்பதற்கு உன் கையை உபயோகிக்கவேண்டிய அவசியம் இல்லை," என்று கூறினேன். சொல்லவிரும்பும் காரியம் தெளிவாக இருக்கிறது. இருதயம் கர்த்தரை அன்புசெய்கிறவரையில் அது போதுமான தென்று நாம் கூறமுடியாது. கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள ஆவி அவசியம்.

நான் என் காலைச் சிற்றுண்டியை நேசிக்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். என் இருதயம் மட்டும் இறைச்சியையும், ரொட்டியையும், பாலையும், பழச்சாறையும் நேசித்தால் போதுமா? நிச்சயமாகப் போதாது. நேசிப்பது மட்டும் போதுமென்றால், கொஞ்ச நாளில் என்னை அடக்கம்பண்ண வேண்டியதுதான். நேசிப்பது இருதயத்தின் காரியம், ஆனால் ஏதாகிலும் ஒன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், நிச்சயமாக நாம் வாயைப் பயன்படுத்தவேண்டும். வண்ணக் காட்சிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் நாம் நம் கண்களைப் பயன்படுத்தவேண்டும். இப்போது நாம் கர்த்தரை நேசிப்பதால் அவரைப் பெற்றுக்கொள்ள நாம் எந்த உறுப்பைப் பயன்படுத்தவேண்டும்? கண்களையா? கர்த்தரைக் கண்களால் காண நாம் எவ்வளவாகக் காத்திருக்கி

றோமோ, அவ்வளவாக அவர் மறைந்துபோவார். அவரைப் பெற்றுக் கொள்ளவும், தொடர்புகொள்ளவும் தேவன் ஒரேவோர் உறுப்பைத் தான் பிரத்தியேகமாகச் சிருஷ்டித்திருக்கிறார். அந்த உறுப்பு ஆவியே. வயிற்றுக்கு சரீர சம்பந்தமான செயல்பாடு இருப்பது போலவே, நமக்குள் ஆவிக்கு ஆவிக்குரிய செயல்பாடு இருக்கிறது. தேவனை நமக்குள் பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற விசேஷித்த நோக்கத்திற்காகவே ஆவி சிருஷ்டிக்கப்பட்டது.

ஆனால் நாம் எதையாவது பெற்றுக்கொள்வதற்குமுன் அதன்மேல் நமக்கு விருப்பம் இருக்கவேண்டும். யாரும் எதை யாவது முதலில் விரும்பாவிட்டால் அதைப் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். நீங்கள் காலைச் சிற்றுண்டியை நேசிக்காவிட்டால் அதைப் பெற்றுக்கொள்வது உங்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும். எனவேதான் உங்களுக்கு முதலாவது நல்ல பசி இருக்க வேண்டும். நாம் கர்த்தரை நேசிக்கும்போது அவரை எடுத்துக் கொள்வோம், அவரைத் தொடர்புகொள்வோம், அவருடன் கலந்துற வாடுவோம், அவருடன் ஐக்கியம்கொள்வோம். நாம் அன்புசெய் வதற்கு, இருதயம் நம்மிடம் இருக்கிறது. நாம் பெற்றுக்கொள் வதற்கு ஆவி நம்மிடம் இருக்கிறது. நம் இருதயம் புதிதாக்கப்பட் டிருப்பதால் கர்த்தரை நேசிப்பதற்கு நம்மிடம் புதிய வாஞ்சையும், புதிய விருப்பமும் இருக்கின்றன. ஆவி புதிதாக்கப்பட்டிருப்பதால் கர்த்தரைப் பெற்றுக்கொள்வதற்கு நம்மிடம் புதிய திறனும், புதிய ஆற்றலும் இருக்கின்றன. ஆகையால் நம் ஆவி உயிர்ப்பிக்கப் பட்டபிறகு, கிறிஸ்து ஜீவனாக நம் ஆவிக்குள் சேர்க்கப்பட்டபிறகு, அது பரிசுத்த ஆவி வாசம்பண்ணும் வாசஸ்தலமாக மாறியபிறகு, கர்த்தருடன் ஒரே ஆவியாக இணைக்கப்பட்டபிறகு, கர்த்தரைப் பெற்றுக்கொள்ளவும், தொடர்புகொள்ளவும் இது மிகவும் ஆர்வமுடைய உறுப்பாக மாறிவிடுகிறது.

## ஆத்துமா - பிரதிபலிக்கும் உறுப்பு

அடுத்தபடியாக, நாம் ஆத்துமாவுடன் இடைப்பட வேண்டும். ஆத்துமாவை மறுக்கவேண்டும் என்பதுதான் ஆத்துமாவுடன் இடைப்படும்போது நாம் கற்றுக்கொள்ளவேண்டிய முதலாவது காரியம். சுயம் என்ற நம் ஆத்துமாவை நாம் வெறுக்கவேண்டியது அவசியம் என்று மத்தேயு *16:24-26*, லூக்கா *9:23-25* ஆகிய இரண்டு பகுதிகள் தெளிவாகக் கூறுகின்றன. முந்தைய அதிகாரத்தில் நம் சுயம் என்ற ஆத்துமானது மனம், சித்தம், உணர்ச்சி என்ற மூன்று பகுதிகளால் தொகுக்கப்பட்டிருக்கிறது என்று பார்த்தோம். ஆகையால் நம் ஜென்மசுபாவ மனதையும் நம் ஜென்மசுபாவ சித்தத்தையும், நம் ஜென்மசுபாவ உணர்ச்சி யையும் வெறுக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

இரண்டாவது, ஆத்துமா சுத்திகரிக்கப்படவேண்டும் (1 பேதுரு 1:22). இந்தச் சுத்திகரிப்பு, வார்த்தையைப் பெற்றுக்கொள்வதினால் நிறைவேற்றப்படுகிறது. மாம்சப்பிரகாரமான, உலகப்பிரகாரமான, ஜென்மசுபாவமான ஏராளமான காரியங்களிலிருந்து தேவனுடைய வார்த்தையினால் ஆத்துமாவைச் சுத்திகரிக்கமுடியும். நம் ஆத்துமாவே நம் சுயம், நம் நிஜமான ஆள்தத்துவம். இது மிகப் பரவலாகவும் அதிகமாகவும் மாம்சப்பிரகாரமான, உலகப் பிரகாரமான, ஜென்மசுபாவமான காரியங்களால் சேதப்படுத்தப் பட்டும், அவைகளால் ஆக்கிரமிக்கப்பட்டும் இருக்கிறது. ஆகையால் முதலாவது நாம் நம் ஆத்துமாவை வெறுக்கவேண்டும். அப்போது நாம் நம் ஆத்துமாவை அதிகமாய் வெறுக்கும்போது அது இன்னும் அதிகமாக தேவனுடைய வார்த்தையினால் சுத்தமாக்கப்படும்.

மூன்றாவது, நம் ஆத்துமா மறுரூபமாக்கப்பட வேண்டும் (2 கொரிந்தியர் 3:18; ரோமர் 12:2). நாம் மறுரூபமாக்கப்படவேண்டும் என்று 2 கொரிந்தியர் 3:18 கூறுகிறது. ஆனால் நாம் எந்தப் பகுதியில் மறுரூபமாக்கப்படவேண்டும் என்று அந்த வசனம் சுட்டிக்காட்டவில்லை. ஆனாலும் நம் மனம் புதிதாக்கப்படுவதால் நாம் மறுரூபமாக்கப்படுகிறோம் என்றும் ரோமர் 12:2 கூறுகிறது. ஆகையால் மறுரூபமாக்கப்படுதல் நம் ஆத்துமாவில்தான் நிறைவேறவேண்டும். ஏனென்றால் மனமே ஆத்துமாவின் பிரதானமான பகுதியாகும். நம் ஆவி மறுபடிஜெநிப்பிக்கப் பட்டபிறகு நம் ஆத்துமா மறுரூபமாக்கப்படவேண்டியிருக்கிறது.

ஆத்துமா மறுக்கப்படவேண்டும், சுத்திகரிக்கப்படவேண்டும், பிறகு கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்பட வேண்டும். ஆனால் என்ன நோக்கத்திற்காக? இருதயத்தின் நோக்கம் கர்த்தரை நேசிப்பது என்றும், ஆவியின் நோக்கம் கர்த்தரைப் பெற்றுக்கொண்டு அவரைத் தொடர்புகொள்வது என்றும், நாம் சுட்டிக்காட்டினோம். ஆனால் ஆத்துமாவின் நோக்கம் என்ன? கர்த்தரைப் *பிரதிபலிப்பதுதான்* அதின் நோக்கம். பெரும்பான்மை யான மொழிபெயர்ப்புகளில் பிரதிபலித்தல் என்ற சொல் 2 கொரிந்தியர் 3:18-ல் மொழிபெயர்க்கப்படவில்லை. ஆனால் மூலபாஷையில் இந்த அர்த்தம் இருக்கிறது. 'பிரதிபலித்தல்தான்' கண்ணாடியின் செயல். கண்ணாடி திறந்த முகத்துடன் கண்டு, பிரதிபலிக்கிறது. ஆத்துமா இவ்வாறு சுத்திகரிப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டிருப்பதால், ஒரு கண்ணாடியைப்போல் அது கிறிஸ்துவைப் பிரதிபலித்து வெளியாக்குகிற மெய்யான ஓர் உறுப்பாக மாறிவிடுகிறது. இவ்வாறு *இருதயத்தால்* அவரை நேசிக்கிறோம். நம் *ஆவியால்* அவரைப் பெற்றுக்கொண்டு, அவருடன் தொடர்புகொள்கிறோம். நம் மறுரூபமாக்கப்பட்ட

ஆத்துமாவால் அவரைப் பிரதிபலித்து வெளியாக்குகிறோம். இந்தக் காரியங்களையெல்லாம் நம் அனுதின வாழ்க்கையிலே நடைமுறைப்படுத்தவேண்டும். அப்போதுதான் இங்கே இதுவரை விளக்கிச்சொல்லப்பட்ட காரியங்கள் முற்றிலும் நடைமுறைக்குரியவைகள் என்றும், மெய்யாகவே அவை கிரியைசெய்கின்றன என்றும் நம் வாழ்க்கை நிரூபித்துக்காட்டும்.

## அத்தியாயம் எட்டு

# இருதயத்தோடும் ஆவியோடும் இடைப்படுதல்

இருதயம், ஆவி, ஆத்துமா ஆகியவைகளின் வரையறையையும், செயல்பாட்டையும் நாம் பார்த்தோம். கர்த்தருடனான நம் உறவை எப்போதும் இருதயமே ஆரம்பிக்கிறது, இருதயமே பராமரிக்கிறது. கர்த்தரைத் தொடர்புகொள்வது நிச்சயமாக ஆவியின் காரியமே. ஆனால் இதை இருதயம்தான் ஆரம்பிக்கிறது, இருதயம்தான் பராமரிக்கிறது. ஏனென்றால் நம் இருதயமே நம் முழு ஆள்தத்துவத்தின் நுழைவாயில். அநேக அறைகளையுடைய ஒரு மாளிகையில் எப்போதுமே உள்ளே வருவதற்கு ஒரு வழயும், வெளியே போவதற்கு ஒரு வழியும் இருக்கும். ஒரு நபர் உள்வாயில் வழியாக உள்ளே வந்து, வெளிவாயில் வழியாக வெளியே போகிறார். உள்வாயில் மூடியிருக்கும்போது மாளிகையின் உள்ளிருக்கும் அறைக்குள் நுழையமுடியாதவாறு எல்லாரும் வெளியிலேயே நிற்கவேண்டியிருக்கிறது. ஆனால் உள்வாயில் திறக்கப்பட்டவுடனே, மக்கள் மாளிகைக்குள் நுழைந்து ஒவ்வோர் அறையையும் அனுபவித்துமகிழலாம்.

இருதயம் நம் ஆள்தத்துவத்தின் ஒரு தனித்த, தனிப்பட்ட பகுதியல்ல. இது ஆத்துமாவின் எல்லாப் பகுதிகளாலும், ஆவியின் ஒரு பகுதியாலும் சேர்த்துத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இருதயம் இத்தகைய தொகுப்பாக இருப்பதால், இதுவே நம் முழு ஆள்தத்துவத்தின் நுழைவாயில் ஆகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இருதயமே நம் ஆள்தத்துவத்தின் உள்வாயிலாகவும், வெளிவாயிலாகவும் ஆகிறது. நமக்குள் நுழைவது எதுவாகிலும் இருதயத்தின் வழியாகத்தான் நுழையவேண்டும். நம்மிலிருந்து வெளிவரும் எதுவாகிலும் இருதயத்தின் வழியாகத்தான் வெளிவரவேண்டும்.

எடுத்துக்காட்டாக, நாம் ஒரு செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கும்போது நம் இருதயம் விழிப்புடன் இருக்கவில்லையென்றால், அந்தச் செய்தியின் சாராம்சத்தை நாம் பெற்றுக்கொள்ளமாட்டோம். அல்லது நாம் வாசித்துக்கொண்டிருக்கும்போது, என்ன வாசிக்கிறோம் என்பதில் நம் இருதயம் நிலைத்திருக்கவில்லையென்றால் வாசிப்பதால் நாம் எதையும் பெற்றுக்கொள்ளமாட்டோம். சாப்பிடும்போதுகூட, சாப்பிடுவதற்கு நமக்கு இருதயவிருப்பம் இல்லையென்றால் நாம்

உணவைச் சுவைக்கமாட்டோம். கட்டுப்படுத்தும் உறுப்பு இருதயமே என்பதை இது நிரூபிக்கிறது. முழு மாளிகையையும் கட்டுப்படுத்துவதற்குக் கதவை மூடவோ, திறக்கவோ நம்மால் முடியவேண்டும். இப்படியே நம் முழு ஆள்தத்துவத்தையும் மூடவோ அல்லது திறக்கவோகூடிய வல்லமை இருதயத்தில் இருக்கிறது.

இந்தக் காரணத்தினால்தான், சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் மனிதனுடைய இருதயத்தைத் தாக்குமாறு பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படவேண்டும். மனிதனின் இருதயத்தைத் தொடுமாறுப் பிரசங்கிப்பதே சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதற்கான மிக வீரியமுள்ள வழி. இருதயத்தினூடாய் உடைத்துச்செல்லமுடியு மானால், அநேகரை ஆதாயப்படுத்திக்கொள்ளலாம். இந்தக் காரணத்தினால்தான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, அவிசுவாசிகள் தங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி மூடிக்கொள்கிறார்கள். நாம் எவ்வளவுதான் பிரசங்கித்தாலும், அவர்கள் தங்கள் இருதயத்தை மூடிக்கொள்ளும்போது, நம்மால் அவர்களைத் தொடமுடியாது; நம்மால் அவர்களுக்கு எதையும் கொடுக்கவும் முடியாது. ஏனென்றால் அவர்களுடைய "உள்வாயில்" மூடப்பட்டிருக்கிறது. வீரியமாகப் பிரசங்கிக்க வேண்டுமானால், உள்வாயில் வழியாக உடைத்துச்செல்ல நாம் ஒரு வழியைக் கண்டுபிடித்தாக வேண்டும். இருதயத்தைத் திறப்பதற்கான திறவுகோலைக் கண்டுபிடிப்பவனே மிகச் சிறந்த பிரசங்கி.

கர்த்தரும்கூட நம்மை நம் இருதயத்தின்மூலமாகவே கவர்ந்திழுக்கிறார். முதலாவது அவர் நம் ஆவியைக் கிளர்ந்தெழப்பண்ணமாட்டார். உன்னதப்பாட்டின் ஆரம்பத்தில், "தேடுகிறவள்" கர்த்தரை அன்புசெய்யுமாறு அவர் அவளைத் தம் அன்பினால் கவர்ந்திழுக்கவேண்டும் என்று கர்த்தரிடம் கேட்கிறாள். கர்த்தர் நம் இருதயத்தைத் தம் அன்பினால் தொடுவதற்கு வருகிறார். இந்தக் காரணத்தினால்தான் கர்த்தர் உயிர்தெழுந்தபின்பு பேதுருவிடம், "நீ என்னிடம் அன்பாயிருக்கிறாயா?" (யோவான் 21) என்று வினவினார். கர்த்தருடைய அன்பே இருதயக் கதவைத் திறப்பதற்கான மிகச் சிறந்த வழி. ஆகையால் தேவனுடைய அன்பைப் பிரசங்கிப்பதுதான் இருதயத்தைத் திறப்பதற்கான மிக வீரியமுள்ள வழி. இருதயம் திறந்துவிட்டால் போதும், பின்னர் மனிதனுடைய ஆள்தத்துவத்தின் எல்லாப் பகுதிகளையும், அவனுடைய ஆவியையும் தொடுவது பரிசுத்த ஆவிக்குச் சுலபமாகிவிடுகிறது. இது சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதில் மட்டும் இல்லை, கிறிஸ்தவப் போதனைசெய்கிற ஊழியத்தில் உண்மை.

## இருதயத்துடன் இடைப்படுதல்

கர்த்தருடன் நாம் நேர்த்தியான உறவு வைத்துக்கொள்ள வேண்டுமானால் நாம் நம் இருதயத்துடன் இடைப்படவேண்டும். நாம் நம் இருதயத்துடன் எப்படி இடைப்படமுடியும்? இது மிகச் சுலபம். "இருதயத்தில் *தூய்மையுள்ளவர்கள்* பாக்கியவான்கள்," (மத்தேயு 5:8) என்று வேதம் கூறுகிறது. சில மொழிபெயர்ப்பாளர்கள் "தூய்மை" என்ற வார்த்தையை வெறும் "சுத்தம்" என்று மாற்றிவிட்டார்கள், அதாவது "இருதயத்தில் சுத்தம்." ஆனால் "சுத்தம்" என்ற வார்த்தை போதுமானதல்ல. இது வெறுமனே சுத்தமான இருதயத்தைப்பற்றிய ஒரு காரியமல்ல; மாறாக இது தூய்மையான இருதயத்தைப்பற்றிய காரியம். நாம் சுத்தமாக இருக்கலாம், ஆனால் அதே நேரத்தில் கலப்பாக இருக்கமுடியும். ஆகையால் தூய்மையாக இல்லாமல் இருக்கலாம். கலப்பாக இருப்பதின் பொருள் அசுத்தமாக இருக்கிறோம் என்பல்ல. மாறாக ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கும், இலட்சியமும் வைத்திருப்பதே கலப்பு.

இதுவே அநேக சகோதர சகோதரிகளுக்கும் இருக்கக்கூடிய பிரச்சினை. அவர்கள் தங்கள் இருதயத்தில் எதுவுமே தவறாக இல்லை என்று நினைக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் சுத்தமாக இருக்கிறார்கள். அவர்கள் இருதயத்தில் குற்றவாளிகளாகத் தீர்க்கிற ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. ஆனால் அவர்கள் தூய்மையானவர்கள் அல்ல. ஏனென்றால் அவர்களிடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கும், ஒன்றுக்கு மேற்பட்ட இலட்சியமும் இருக்கின்றன. ஆம், அவர்களுடைய இலட்சியம் தேவனே. இது உண்மை. ஆனால் அதே நேரத்தில் வேறு பல காரியங்களையும் இலட்சியமாகக்கொண்டு, அவைகளையும் அடையத் துடிக்கிறார்கள். தேவனையும், முனைவர் பட்டத்தையும் அவர்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கலாம். அவர்கள் இரண்டு காரியங்களைத் தங்கள் இலட்சியமாகக் கொண்டிருக்கும்போது கலப்பானவர்களாகவும் சிக்கலானவர்களாகவும் இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, நம் கண்களால் ஒரே நேரத்தில் இரண்டு காட்சிகளைக் காணமுடியாது. ஒரே நேரத்தில் இரண்டு பொருள்களைப் பார்க்க நாம் முயன்றால் இரண்டுமே மங்கலாகத்தான் தெரியும்.

கர்த்தருடைய சித்தத்தைப்பற்றிய தெளிவு இல்லையே என்று சிலர் ஏன் கூறுகிறார்கள்? அவர்களுக்கு இரண்டு இலக்குகளும், இரண்டு இலட்சியங்களும் இருக்கின்றன என்பதுதான் காரணம். அநேக சகோதர சகோதரரிகளிடத்தில் இரண்டுக்கும் மேற்பட்ட இலட்சியங்கள் இருக்கின்றன. அவர்கள் அநேகக் காரியங்களைக் குறிபார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆம், அவர்கள் கர்த்தரைத்

தேடுகிறார்கள்; ஆனால் அதே நேரத்தில் அந்தஸ்து, தொழில் போன்ற வேறு காரியங்களையும் அவர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். குழப்பமடைவதையும், கலக்கமடைவதையும் அவர்கள் எப்படித் தவிர்க்கமுடியும்? கர்த்தர் மட்டுமே அவர்களுடைய ஒரே குறிக்கோளாக இருக்குமாறு திரளான ஆசைகளிலிருந்து அவர்களுடைய இருதயம் தூய்மையாக்கப்படவேண்டும்.

பல கிறிஸ்தவ ஊழியக்காரர்களுக்கும்கூட அளவுக்கு அதிகமான இலக்குகள் இருக்கின்றன. ஒரு சகோதரர், தனக்கு ஓர் உயர்ந்த இலக்கு இருப்பதாக அறிவித்தார். அதாவது தம் ஸ்தாபனத்தில் தாம் மிகப் பெரிய பிரசங்கியாராக இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். அவருடைய இருதயம் சுத்தமாக இருந்தது. ஆனால் அவர் தூய்மையாக இல்லை. கர்த்தரே அவருடைய ஒரேவோர் இலக்காக மாறும்வரை அவருடைய இருதயம் தூய்மையாக்கப்படவேண்டும். சில கிறிஸ்தவ ஊழியக்காரர்கள் கர்த்தரையும், அவருடைய வேலையையும் தங்கள் இலக்காக வைத்திருக்கிறார்கள். அவர்களிடத்தில் இரண்டு இலக்குகள் இருக்கின்றன. தங்கள் இலக்காகக் கர்த்தரைத்தவிர வேறு எதையுமே தேடாத நிலையை எட்டும்வரை அவர்கள் தங்கள் இருதயங்களைத் தூய்மையாக்கவேண்டும். கர்த்தர் மட்டுமே அவர்களுடைய இலட்சியமாகவும், அவர்களுடைய இலக்காகவும், அவர்களுடைய ஆசையாகவும் இருக்கவேண்டும். வேறு எதையும் தேடாமல் கர்த்தரை மட்டும் முற்றிலும் தேடும்போது அவர்களுடைய இருதயம் தூய்மையாக இருக்கிறது. இப்படிப்பட்ட தூய்மையான இருதயம் அவர்களிடத்தில் இருக்குமென்றால், "ஆகாயம்" அவர்களுக்குத் திறந்ததாக மட்டுமின்றி, மிகத் தெளிவாகவும் இருக்கும். சில வேளைகளில் ஆகாயம் திறந்திருக்கிறது. ஆனால் மேகமூட்டமாக இருக்கிறது. ஆவிக்குரிய ஆகாயம் ஏன் மேகமூட்டமாக இருக்கிறது? ஏனென்றால் இருதயம் தூய்மையாக இல்லாமல் கலப்பாக இருக்கிறது. அநேக இலக்குகளிலிருந்து இருதயம் தூய்மையாக்கப்படும்போது ஆகாயம் தெளிவாக இருக்கும்.

இருதயத்தை விவரிப்பதற்கு வேதம், "ஒருநோக்கு" - "இருதயத்தின் ஒருநோக்கு" - என்ற இன்னொரு பதத்தையும் பயன்படுத்துகிறது. சில மொழிபெயர்ப்புகள் ஒருநோக்கை "எளிமை" - "இருதயத்தின் எளிமை" - என்று மொழிபெயர்த்துள்ளன. இருதயத்தின் ஒருநோக்கு என்பது எளிமையைக் குறிக்கிறது. ஒருவகையில் எளிமையாயிருப்பது முட்டாளாக இருப்பதையே குறிக்கிறது. கர்த்தரிடத்தில் மெய்யாகவே அன்புகூர்ந்து, அவரையே தங்கள் இலட்சியமாகக் கொண்டுள்ளவர்

கள் ஒருவகையான முட்டாள்கள்தான். நாம் அனைவருமே கிறிஸ்தவ முட்டாள்களாக இருக்கவேண்டும். "இயேசுவைத்தவிர எனக்கு வேறு எதையும் தெரியாது. நான் செய்வது எதுவானாலும் எனக்கு இயேசுவை மட்டுமே தெரியும். நான் எங்கே போனாலும் இயேசுவை மட்டுமே தெரியும்." இதுவே கிறிஸ்தவ முட்டாளாக இருப்பதின் பொருள். நாம் அறிவாளியாக இருக்க முயற்சிசெய்யக்கூடாது. நமக்கு ஒரேவொரு வழிதான் உண்டு. அது கிறிஸ்துவினுடைய குறுகலான வழியே! "நீ ஒரு முட்டாள்," என்று மக்கள் கூறுவார்கள். ஆனால் அப்படி முட்டாளாக இருப்பதற்கு நாம் விரும்பவேண்டும். இதுதான் எளிமை.

சங்கீதம் *73:1*, மத்தேயு *5:8*, *2* தீமோத்தேயு *2:22* ஆகியவை தூய இருதயத்தைப்பற்றிப் பேசுகிற மூன்று வேதபகுதிகளாகும். சபைகள் சீரழிந்துகொண்டிருக்கும்போது நாம் தூய இருதயத்தோடே கர்த்தரைப் பின்பற்றிச்செல்லவேண்டும் என்றும், தூய இருதயம் உள்ளவர்களுடனேகூடச் சேர்ந்து ஜெபிக்கவேண்டும் என்றும் *2* தீமோத்தேயு *2:22* கூறுகிறது. எளிய இருதயத்தைப்பற்றி குறைந்தது மூன்று வசனங்களாவது இருக்கின்றன: அப்போஸ்தலர் *2:46*, எபேசியர் *6:5*, கொலோசெயர் *3:22*. கர்த்தரைத் தேடவும், சேவிக்கவும் நாம் விரும்பினால் தூய்மை, எளிமை இந்த இரண்டு காரியங்களுடனும் இடைப்படவேண்டும்: சுத்தமானதும் சரியானதுமான இருதயம் மட்டுமின்றி, தூய்மையும் எளிமையுமான இருதயமும் உள்ளவர்களாக இருப்பதற்கு நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் இப்படியாக இருதயத்துடன் இடைப்பட்டால் நம் முழு ஆள்தத்துவமும் கர்த்தருக்குத் திறந்துவிடப்படும். ஏனென்றால் நுழைவாயில் திறந்திருக்கிறது. இது ஏதோ ஓர் உபதேசம் அல்ல. மாறாக நம் முழு ஆள்தத்துவத்தையும் வசப்படுத்திக்கொள்ளக் கர்த்தரை அனுமதிப்பதற்கு, நம் இருதயத்துடன் எப்படி இடைப்படுவது என்பதைப்பற்றிய சாதாரண புத்திமதிகளே.

## மனச்சாட்சியுடன் இடைப்படுதல்

மறுபடியும் நாம் கூறுகிறோம்: கர்த்தர் முதலாவது தம் அன்பினால்தான் நம்மைக் கவர்ந்து இழுத்துக்கொள்ளவேண்டும். நாம் நம் இருதயத்தைத் திறக்குமாறு அவர் நம் இருதயத்தைத் தம் அன்பினால் தொடுகிறார். பிறகு இருதயத்துடன் இடைப்பட்டபிறகு, மனச்சாட்சியுடன் இடைப்படவேண்டும். கர்த்தருடைய பிரசன்னத்தில், முதலாவது இருதயத்துடனும், பின்பு மனச்சாட்சியுடனும் இடைப்படுகிறோம். நாம் நம் இருதயத்தில் பரிசுத்தமாகவும், கபடில்லாமலும் இருந்தால், நம் மனச்சாட்சியின் செயல்பாடு உடனடியாக மிகத்தீவிரமாகவும் விழிப்பாகவும்

இருக்கும். நாம் இந்தப் புத்தகத்தை வாசித்துக்கொண்டிருக்கும் நேரத்தில், நாம் தவறாக இருக்கிறோம் என்றும், தவறுகள் செய்திருக்கிறோம் என்றும் ஒருவேளை நாம் உணராமல் இருக்கலாம். ஆனால் நம் இருதயத்துடன் நாம் இடைப்பட்டு அதைப் பரிசுத்தமும் கபடற்றதுமாக ஆக்கும்போது, மனச்சாட்சி முழுமூச்சுடன் செயல்படும். நம் மனச்சாட்சி நம்மைக் குற்றப்படுத்த ஆரம்பிக்கும், பாவங்களை அறிக்கைசெய்யத் தூண்டும், அதனுடன் இடைப்படச்செய்யும். இது நம் மனச்சாட்சியைக் குற்றமற்றதாக்கும். "நான் தேவனுக்கும் மனுஷருக்கும்முன்பாக குற்றமற்ற மனச்சாட்சியை உடையவனாய் இருக்கப் பிரயாசப்படுகிறேன்," (அப்போஸ்தலர் 24:16). என்று பவுல் கூறினார். குற்றமற்ற மனச்சாட்சி என்பது எல்லாவிதமான குற்றத்திலிருந்தும் அல்லது குற்றச்சாட்டியிலிருந்தும் விடுதலையாகி இருப்பதையே குறிக்கிறது.

ஆத்துமாவுக்கும் ஆவிக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை அறிந்துகொள்வதற்கு நமக்குக் கூர்மையான மனச்சாட்சி தேவை. ஆனால் நாம் நம் மனதில் காரணகாரியங்களை வைத்து விவாதிக்கும்போது, இது கஷ்டமாக இருக்கிறது. "நான் பத்து சதவீதம்தான் தவறு. ஆனால் அந்தச் சகோதரர் எனக்கு நூறு சதவீதம் தவறு செய்திருக்கிறாரே. எனவே அவர்தான் மீதித் தொண்ணூறு சதவீதம் எனக்குக் கடன்பட்டிருக்கிறார்," என்று நீ கூறுகிறாய். இது ஆத்துமாவிலுள்ள மனபிரம்மைதானேதவிர வேறொன்றுமில்லை. காரணகாரியங்களை வைத்து விவேகமாக நாம் மனதில் விவாதித்துக்கொண்டிருக்கும்போதே, "அவன் உனக்கு எவ்வளவுதான் கடன்பட்டிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. நீ அவனுக்குக் கடன்பட்டிருக்கும் பத்து சதவீதத்தைச் சரிசெய்," என்று நமக்குள்ளே சற்று ஆழமாக ஏதோவொன்று கூறிக்கொண்டிருக்கிறது.

ஆவிக்குரிய கணக்கு வங்கிக் கணக்கைப் போன்றதல்ல. வங்கிக் கணக்கில் வரவு, செலவு மற்றும் மீதியிருப்பு உண்டு. ஆனால் ஆவிக்குரிய கணக்கில் செலவு என்ற ஒரேவொரு கட்டம்தான் இருக்கிறது. நம்மிடத்தில் எவ்வளவு வரவு இருந்தாலும், அதைப்பற்றிக் கவலையில்லை. நம்மிடத்தில் செலவு இருக்கும்வரை அதைச் சரிசெய்தாக வேண்டும். நான் உங்களிடமிருந்து ஒரு கடிகாரத்தைத் திருடியதாகவும், நீங்கள் என்னிடமிருந்து ஒரு காரைத் திருடியதாகவும் வைத்துக் கொள்ளுங்கள். நாம் ஒருவரிடமிருந்து ஒருவர் எதைத் திருடியிருக்கிறோம் என்பது மிகத் தெளிவாக இருக்கிறது. ஆனால் ஒருநாள் மனச்சாட்சி செயல்பட ஆரம்பிக்கிறது. "நீ அந்தத் திருட்டுப் பொருளைத் திருப்பிக்கொடுக்கவேண்டும்." நான்

வெறும் வங்கிக் கணக்கை மட்டும் சரிபார்ப்பதாக இருந்தால், நிச்சயமாக நான் என் அறிவைப் பயன்படுத்தி, "இந்தக் கடிகாரத்தின் விலை ஆயிரம் ரூபாய், அந்தக் காரின் விலை ஒரு லட்ச ரூபாய். எனவே இந்த மனிதன்தான் எனக்கு 99,000 ரூபாய் கடன்பட்டிருக்கிறார். என் மனச்சாட்சியைச் சரிசெய்யவேண்டிய அவசியம் எனக்கு இல்லை. சரியாகச் சொல்வதென்றால், எனக்கு வரவேண்டிய பாக்கியை நான் அவரிடமிருந்து வசூல்செய்யவேண்டும்," என்று விவாதிப்பேன். ஆனால் ஆவிக்குரிய கணக்கு இந்த வகையில் கிரியைசெய்வதில்லை. அடுத்த நபர் எனக்கு எவ்வளவு கடன்பட்டிருக்கிறார் என்பதை நாம் மறந்துவிட்டு, நான் கொடுக்கவேண்டிய ஆயிரம் ரூபாயைச் சரிசெய்ய வேண்டும் என்றே ஆவிக்குரிய கணக்குக் கோருகிறது. இன்னும் சொல்லப்போனால், இந்த மனிதனிடத்தில் மன்னிப்பும் கேட்கவேண்டும். "ஐயா, நான் மிகவும் வருந்துகிறேன். நான் திருடியது பாவம். இதோ திருட்டுக் கடிகாரம் இங்கே இருக்கிறது. இதை உங்களக்குத் திருப்பித் தருகிறேன்." அந்தக் காரைப்பற்றி நான் ஒரு வார்த்தைகூடப் பேசக்கூடாது. அதை நாசூக்காகச் சொல்லிக்காட்டுவதற்குக்கூட எனக்கு எந்த உரிமையும் கிடையாது. அவரிடத்தில் ஏதாகிலும் சொல்வதற்குப் பரிசுத்த ஆவிக்கு மட்டுமே உரிமை உண்டு. பரலோகக் கணக்கில் ஒரேவொரு கட்டம்தான் இருக்கிறது, இரண்டு அல்ல.

இந்த முக்கியமான விஷயத்தை உங்களால் பார்க்கமுடிகிறதா? நீங்கள் வாக்குவாதம்பண்ணிக்கொண்டும், அறிவைப் பயன்படுத்தி விவாதித்துக்கொண்டும் இருந்தால் நீங்கள் வெறுமனே மனதில்தான் இருக்கிறீர்கள், ஆவியில் இல்லை.

இதை மேலும் விளக்கிக்காட்டலாம். பரிசுத்த ஆவி உங்கள் ஆவியில் கிரியைசெய்துகொண்டிருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்களை அழைக்கிறார். அவருடைய அழைப்புக்கு நீங்கள் பதில்கொடுக்கவேண்டும் என்று பரிசுத்த ஆவி உங்களிடத்தில் கோருகிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். என்ன நடக்கிறது? ஏராளமான காரணகாரியங்கள் உங்கள் மனதில் வெள்ளம்போல் பெருக்கெடுத்துவருகின்றன: என் மனைவியைப்பற்றி எப்படி? என் குழந்தைகளைப்பற்றி எப்படி? அவர்களுடைய படிப்பைப்பற்றி எப்படி? எண்பது வயதான தாயார் இன்னும் என்னோடு இருக்கிறார்களே! இன்னும் சிறிது காலம் காத்திருப்பது நலமாயிருக்கும். அவர்கள் மரித்தபிறகு, கர்த்தரின் அழைப்புக்குப் பதில்கொடுத்து அவர் பின்னே போவதற்கு அதுதான் சரியான தருணமாயிருக்கும். இது ஆத்தும மனநிலையில் உள்ள விவாதங்களும், தர்க்கங்களும், விவேகத்துடன்கூடிய

விளக்கங்களுமேயன்றி வேறொன்றுமல்ல. விவாதங்கள் முற்றிலும் நியாயமானவை, மிகவும் விவேகமானவை, முற்றும் சரியானவை. ஆனால் உங்கள் ஆவியின் ஆழத்திலே கர்த்தருடைய அழைப்பின் சத்தம் இன்னும் இருக்கிறது.

ஆத்துமாவுக்கும் ஆவிக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்துகொள்வது சுலபம்தான். ஆனால் நம் பிரச்சினை என்னவென்றால், நம் முழு ஆள்தத்துவமும் இன்னும் பூட்டியே இருக்கிறது. ஏனென்றால் நம் இருதயம் இன்னும் திறக்கப்பட வில்லை. நாம் மறுபடியும் இதைக் கூறியாகவேண்டும். நம் இருதயத்தை நாம் திறக்கவேண்டும். நம் இருதயம் பரிசுத்தமாகவும், கபடில்லாமலும் இருக்குமாறு நாம் நம் இருதயத் தோடு இடைப்படும்போது, நம்மேலுள்ள அநேகக் குற்றச்சாட்டு களையும், குற்றங்களையும் வெளியரங்கமாக்குவதற்கு நம் மனச்சாட்சி மிகவும் கூர்மையுள்ளதாகிவிடும். பின்பு அறிக்கை செய்வதினாலும், கர்த்தருடைய இரத்தத்தைத் தெளித்துச் சுத்தமாக்கப்படுவதினாலும்தான் (எபிரேயர் *9:14*) நம் மனச்சாட்சி சரிசெய்யப்படமுடியும்.

நம் மனச்சாட்சி சுத்திகரிக்கப்படும்போது, நாம் ஜீவிக்கிற தேவனுக்கு ஊழியம்செய்யலாம். தேவன் ஜீவிக்கிற தேவன். ஆனால் நம் மனச்சாட்சி குற்றங்களால் நிறைந்திருக்கும்போது அவர் நமக்கு ஜீவிக்கிற தேவனாக இருப்பதில்லை. நிலைமை இப்படி இருக்குமென்றால், பெயரளவில்தான் அவர் நமக்குத் தேவன்; ஆனால் நம் மனச்சாட்சி இரத்தத்தினால் சுத்திகரிக்கப் படும்போது, தேவன் உண்மையிலேயே ஜீவிக்கிறார் என்று நாம் உணர்கிறோம், அறிகிறோம். சிலநேரங்களில் தேவன் அவ்வளவு நிஜமானவராக, ஜீவிக்கிறவராக நமக்கு இல்லை என்பதுபோல் தோன்றுகிறது, வெறும் பெயரளவில்தான் அவர் தேவன். அவ்வளவுதான். அப்போது நம் மனச்சாட்சி மழுங்கியும், குற்றங்களால் நிறைந்தும் இருக்கிறது. அறிக்கையினாலும் சுத்திகரிப்பினாலும்தான் இது சரிசெய்யப்படவேண்டும்.

அப்போதுதான் நம்மிடம் தூய்மையான மனச்சாட்சி இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல், தேவனைத் தூய மனச்சாட்சியோடு ஆராதித்ததாக தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். சுத்தமாக்கப்பட்ட மனச்சாட்சி மாத்திரமல்ல. எந்தவிதமான கலப்பும், நிழலும் இல்லாத மனச்சாட்சி (*2* தீமோத்தேயு *1:4*). நம் மனச்சாட்சி யிலுள்ள குற்றச்சாட்டு அதை அசுத்தமாகவும், ஒளி ஊடுருவிச் செல்ல முடியாதவாறு இருட்டாகவும் மாற்றிவிடுகிறது. இதனால் கர்த்தருடனான நம் ஐக்கியம் தடைசெய்யப்படுகிறது.

தூய மனச்சாட்சி நல்ல மனச்சாட்சியும்கூட (*1* தீமோத்தேயு *1:5, 19; 1* பேதுரு *3:16, 21*). சுத்தமாக்கப்பட்டு, தூய்மையாக்கப்

பட்ட மனச்சாட்சியே நல்ல மனச்சாட்சி. இது சரியாகவும், எந்த நிழலும் இல்லாமலும், தெள்ளத்தெளிவாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட நல்ல நிலைமையில் இருக்கும் மனச்சாட்சிதான் நம்மைக் கர்த்தருடைய பிரசன்னத்துக்குள் கொண்டுவந்து சேர்க்கும். அங்கே கர்த்தருக்கும் நமக்குமிடையே எந்தத் தடையும் இருக்காது. ஏனென்றால் மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்டு, தூய்மையாக்கப் பட்டிருக்கிறது.

## ஐக்கியத்துடன் இடைப்படுதல்

மனச்சாட்சியுடன் இடைப்பட்டதைத் தொடர்ந்து, 1 யோவான் 1:1-7-ல் பார்ப்பதுபோல, நம் ஆவியிலுள்ள ஐக்கியம் என்னும் புலனுடன், இடைப்படவேண்டும். தேவனக்கும் நமக்குமிடையே யுள்ள ஐக்கியம் நல்மனச்சாட்சியால்தான் பராமரிக்கப்படுகிறது. மனச்சாட்சி பங்கப்படுத்தப்படும்போது அது ஒரு தடையாக மாறி தேவனுடனான நம் ஐக்கியத்தைச் சேதப்படுத்துகிறது; ஆகையால் 1 யோவான் 1:9-ன்படி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம் மனச்சாட்சியைச் சுத்திகரிக்குமாறு நாம் நம் தவறுகளையும், தோல்விகளையும், பாவங்களையும் அறிக்கைசெய்யவேண்டும். அப்போது கர்த்தருடனான நம் ஐக்கியத்தைத் தடைசெய்கிற எந்தவிதமான ஆக்கினைத்தீர்ப்பும் நம் மனச்சாட்சியில் இருக்காது. திட்டவட்டமாகப் பேசுவதென்றால், நம் ஐக்கியம் நம் மனச்சாட்சியைச் சரிசெய்வதைப் பொறுத்தே இருக்கிறது. நல்மனச்சாட்சிதான் ஐக்கியத்தைப் பராமரிக்கிறது. ஆகையால் இந்த இரண்டு விவகாரங்களும் மெய்யாகவே ஒன்றுதான். ஏனென்றால் நம் மனச்சாட்சியுடன் இடைப்படுவதென்றால் நம் ஐக்கியத்துடன் இடைப்படுவதாகும். நம் மனச்சாட்சியில் தவறு ஒன்றும் இல்லையென்றால், நம் ஐக்கியம் பராமரிக்கப்படும். கர்த்தருடனான நம் ஐக்கியத்தில் ஏதாவது தடை இருக்குமென்றால், நம் மனச்சாட்சி தவறாக இருக்கிறது என்று பொருள். நம் மனச்சாட்சி தூய்மையாகவும், தெள்ளத்தெளிவாகவும் இல்லையென்றால், ஐக்கியம் போய்விட்டது. மனச்சாட்சி குணமடையும்போதுதான் இழந்த ஐக்கியத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளலாம்.

## உள்ளுணர்வுடன் இடைப்படுதல்

நாம் இப்போது உள்ளுணர்வுக்கு வருகிறோம். ஐக்கியம் மனச்சாட்சியைப் பின்தொடர்ந்து வருவதைப்போலவே, உள்ளுணர்வும் ஐக்கியத்தைப் பின்தொடர்ந்து வருகிறது. நாம் மனச்சாட்சியில் தவறாக இருந்தால், ஐக்கியம் உடைந்துவிடுகிறது. ஐக்கியம் உடைந்திருக்கும்போது, உள்ளுணர்வு செயல்படுவ

தில்லை. ஆகவே மனச்சாட்சியுடன் இடைப்படுவதுதான் மிக அடிப்படையானது. தெள்ளத்தெளிவான மனச்சாட்சி நம்மைக் கர்த்தருடைய பிரசன்னத்துக்குள் கொண்டுவரும். இதன் விளைவாக நமக்குக் கர்த்தருடன் ஜீவிக்கிற ஐக்கியம் ஏற்படுகிறது. இந்த ஜீவிக்கிற ஐக்கியத்தின்மூலம் தேவனுடைய சித்தத்தை நேரடியாக உணர்வது நம் ஆவிக்குச் சுலபமாகிவிடுகிறது. இதுவே உள்ளுணர்வின் செயல். இந்தச் செயல் பரிபூரணமான ஐக்கியத்தையே முற்றிலும் சார்ந்திருக்கிறது. நம் ஐக்கியம் பரிபூரணமாக இருக்கும்போது, உள்ளுணர்வு நேர்த்தியாகச் செயல்படுகிறது. கர்த்தருடனான நம் ஐக்கியம் உடைந்துபோகும் போது, உள்ளுணர்வு தானாகவே செயலிழந்துவிடுகிறது. பழைய நிலைமைக்குக் கொண்டுவரப்பட்ட ஐக்கியத்தின்மூலமே இழந்ததைத் திரும்பப் பெற்றுக்கொள்ளமுடியும்.

*1 யோவான் 2:27* மிக முக்கியமான வசனம். ஆனால் இதை நம்மில் பெரும்பாலோர் அசட்டைசெய்கிறோம். அபிஷேகம் நமக்குள் நிலைத்திருக்கிறது என்று இந்த வசனம் கூறுகிறது. அபிஷேகம் என்பது நம் ஆவிக்குள் பரிசுத்த ஆவி செய்கிற கிரியை. இந்தக் கிரியை - அபிஷேகம் - தேவனிடமிருந்து நமக்கு நேரடியான உணர்வைத் தருகிறது. இந்த நேரடியான உணர்வே உள்ளுணர்வு. இரத்தத்தினால்தான் ஐக்கியம் பாதுகாக்கப்படுகிறது அல்லது பராமரிக்கப்படுகிறது என்று *1* யோவான் முதல் அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. பரிசுத்த ஆவியின் உள்ளான அபிஷேகத்தினால்தான் உள்ளுணர்வு செயல்படுகிறது என்று இரண்டாம் அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. பரிசுத்த ஆவி நம் ஆவியில் அசைவாடி, நம்மை அபிஷேகிக்கும்போது நாம் உள்ளுணர்வின் நேரடியான உணர்வைப் பெற்றுக்கொள்கிறோம்.

நம் ஆவியிலுள்ள உள்ளுணர்வின்மூலம் நாம் மனதிற்குரிய அறிவை அனுபவிக்காமல், உள்ளான அறிவை அனுபவிக்கிறோம். புரிந்துகொள்ளுதல் நம் மனதில் இருக்கிறது. ஆனால் உள்ளான அறிவு நம் ஆவியில் இருக்கிறது. நம் ஆவியின் உள்ளான அறிவு எப்போதுமே நம் மனதின் புரிந்துகொள்ளுதலுக்கு முன்னால் வருகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பரிசுத்த ஆவி நம் ஆவியை அபிஷேகிக்கும்போது நாம் நம் உள்ளுணர்வில் நேரடியான உணர்வைப் பெறுகிறோம். நம் ஆவிக்குள் இருக்கும் உள்ளுணர்வின்மூலம் தேவனுக்கரிய ஏதோவொன்றை உணரக்கூடிய ஓர் உள்ளான அறவி அனுபவிக்கிறோம். ஆனால் நாம் ஆவியில் அறிந்துகொண்டதைப் புரிந்துகொள்ள நமக்கு இன்னும் மனம் தேவைப்படுகிறது. சில நேரங்களில் ஆவியில் மட்டுமே நாம் ஏதாகிலும் ஒன்றை அறிந்துகொள்ளமுடியும். ஆனால் அதை நம்மால் மனதில் புரிந்துகொள்ளமுடியாது. இது

பரலோக பாஷையைப்போல் ஒலிக்கிறது. நாம் எதைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம் என்று உலகத்துக்குத் தெரியாது. நம் ஆவி உள்ளான அறிவாக எதை உணர்கிறதோ அதை விளங்கிக்கொள்ள மட்டுமே மனதிலுள்ள புரிந்துகொள்ளுதல் செயல்படுகிறது. பிரகாசிப்பிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்ட நம் மனம், நம் ஆவியின் உள்ளுணர்வில் நாம் உணர்வதை விளக்கிச்சொல்லும்.

இதை நாம் இப்படிக் கூறலாம். சில வேளைகளில் காலையில் நாம் வேதத்தை வாசித்துக்கொண்டும், ஜெபித்துக்கொண்டும் இருக்கும்போது, எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே, ஒருவகையான பாரத்தை நம் ஆவிக்குள் நாம் ஆழமாக உணர்கிறோம். என்னவென்று நாம் புரிந்துகொள்ளமுடியாத அளவுக்கு இந்தப் பாரம் கனமாகவும், ஆழமாகவும் இருக்கிறது. இந்தப் பாரத்தைப் புரிந்துகொள்வதற்கு நாம் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். அந்த நாளில் நாம் ஆவியில் என்ன இருக்கிறது என்பதை நம் மனதால் படிப்படியாக புரிந்துகொள்ள ஆரம்பிக்கிறோம். காலையில், பாரத்தை அல்லது உள்ளான அறிவை நம் ஆவியிலுள்ள உள்ளுணர்வால் நாம் உணர்ந்தோம். ஆனால் அந்த நாளில் தானே படிப்படியாக அதின் விளக்கத்தை நம் மனதில் நாம் பெறுகிறோம்.

சுருங்கக் கூறினால், ஐக்கியம் பராமரிக்கப்படவேண்டும் என்று *1* யோவான் *1* வெளிப்படுத்துகிறது. உள்ளுணர்வு பரிசுத்த ஆவியால் கிளர்ந்தெழுப்பப்படவேண்டும் அல்லது அபிஷேகிக்கப்படவேண்டும் என்று *1* யோவான் *2*, குறிப்பாக வசனம் *27*, காண்பிக்கிறது. ஆனால் ஐக்கியம், உள்ளுணர்வு ஆகிய இரண்டுமே மனச்சாட்சியுடன் இடைப்படுவதையே முற்றிலும் சார்ந்திருக்கின்றன. இத்தகைய இடைப்படுதல்மூலம் கர்த்தருடன் நமக்குப் பரிபூரணமான ஐக்கியத்தைத் தருகிற தெள்ளத்தெளிவானதும் தூய்மையுமான மனச்சாட்சியை நாம் பெற்றுக்கொள்ளலாம். அப்போது பரிசுத்த ஆவி அசைவாடி நம் ஆவியை அபிஷேகிப்பதற்கான ஆதாரம் அவருக்குக் கிடைக்கும். இதன் விளைவாக நம் உள்ளுணர்வு செயல்படும். இந்தக் காரியங்களனைத்தும் நம் அனுதின வாழ்வில் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று நாம் மறுபடியும் கூறுகிறோம். நித்தம் நித்தம் நாம் நம் இருதயத்துடனும், ஐக்கியத்துடனும், உள்ளுணர்வுடனும் இடைப்படவேண்டும்.

## அத்தியாயம் ஒன்பது

# ஆத்துமாவுடன் இடைப்படுதல்

கர்த்தருடனான நம் இடைப்படுதல்களின் வரிசைகளில், முதலாவது நாம் இருதயத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். ஏனென்றால் இருதயமே நம் முழு ஆள்தத்துவத்தின் உள்வாயிலாகவும், வெளிவாயிலாகவும் இருக்கிறது. இரண்டாவது, நாம் மனச்சாட்சியுடன் இடைப்படவேண்டும். மூன்றாவது கர்த்தருடனான நம் ஐக்கியத்துடன் இடைப்படவேண்டும். பரிசுத்தமான மனச்சாட்சி, அதாவது குற்றமற்ற மனச்சாட்சி, இருக்கும்போது, நாம் கர்த்தருடன் தெள்ளத்தெளிவான ஐக்கியம்கொண்டிருப்போம். வரிசையில் அடுத்து வருவது உள்ளுணர்வு அல்லது அபிஷேகம். இது எப்போதுமே இரத்தம் தெளிக்கப்படுவதையே சார்ந்திருக்கிறது. பழைய ஏற்பாட்டு முன்னடையாளங்களும்கூட இந்தக் கோட்பாட்டை முன்னிறுத்துகின்றன. இரத்தம் எப்போதுமே அபிஷேகத்துக்கு முன்னால் வருகிறது; இரத்தம் தெளிக்கப்படுதல் எதிர்மறையான காரியங்களைச் சரிசெய்கிறது. பரிசுத்த ஆவியின் அபிஷேகம் தேவனுடைய மூலப்பொருளை, சாரத்தை, சாராம்சத்தை, நமக்குள் கொண்டுவந்து, நம்மில் நேர்மறையான காரியங்களைக் கொண்டுவருகிறது. எதிர்மறையான அனைத்தையும் இரத்தம் கழுவுகிறது. தேவன் என்னவாக இருக்கிறாரோ அவையனைத்தையும் அபிஷேகம் கொண்டுவருகிறது. அபிஷேகத்தால் தேவனைப்பற்றிய நேரடியான அறிவை உள்ளுணர்வின் செயல்பாட்டின்மூலம் நாம் பெற்றுக்கொள்கிறோம். நம் கிறிஸ்தவ அனுபவத்தின்படி இதுவே சரியான வரிசை; இருதயம், மனச்சாட்சி, ஐக்கியம், உள்ளுணர்வு. எல்லா இடைப்படுதல்களும் நம் இருதயத்திலிருந்து ஆரம்பித்து, நம் ஆவிவரைக்கும் தொடர்ந்துசெல்கிறது. இப்போது ஆத்துமாவுடன் இடைப்படுவது எப்படி என்று தொடர்ந்து பார்ப்போம்.

### மனதுடன் இடைப்படுதல்

நம் ஆவியிலுள்ள உள்ளுணர்வோடுகூட, நமக்கு மனமும் தேவை. உள்ளுணர்வு உள்ளான அறிவின் உணர்வைத் தருகிறது. ஆனால் ஆவிக்குரிய காரியங்களை உணர்வது என்பது ஒரு காரியம், அவைகளைப் புரிந்துகொள்வது என்பது இன்னொரு காரியம்! தேவனுடைய காரியங்களை ஆவியில்தான் அறிகிறோம்.

ஆனால் அவைகளை மனதில்தான் புரிந்துகொள்ளவேண்டும். பலவேளைகளில் தேவனைப்பற்றி ஏதாகிலும் ஒன்றை நம் ஆவிக்குள் நாம் அறிகிறோம். ஆனால் நம் மனதின் பிரச்சினையினால், அதை நாம் புரிந்துகொள்வதில்லை. சில நேரங்களில் நாம் நம் ஆவியில் உணர்வைப் புரிந்துகொள்ள, இரண்டு அல்லது மூன்று வாரங்கள் அல்லது மாதங்கள்கூட ஆகலாம். ஏதோவொன்றை நாம் உணர்கிறோம். ஆனால் நம்மால் அதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. நம் ஆவியில் இருப்பதை விளங்கிக்கொள்ள, நம் மனதில் புரிந்துகொள்ளுதல் தேவைப்படுகிறது. தேவனுடைய காரியங்களை உள்ளுணர்வின் செயலால் நம் ஆவியில் அறிகிறோம். ஆனால் அவைகளை நம் மன அமைப்பிலுள்ள புரிந்துகொள்ளும் செயல்பாட்டினால்தான் புரிந்துகொள்கிறோம்.

இந்தக் காரணத்தினால்தான் மனம் புதிதாக்கப்படவேண்டும் என்று ரோமர் 12:2 கூறுகிறது. ஆனால் இந்த வசனம், முதலாவது, நாம் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது என்று கூறுகிறது. "பிரபஞ்சம்" என்ற வார்த்தை கிரேக்க பாடத்தில் "யுகம்" என்பதையே குறிக்கிறது. கிரேக்க பாடத்திலுள்ள "யுகம்" என்ற சொல் தமிழிலுள்ள "நவீன" என்ற வார்த்தைக்கு இணையாக இருக்கிறது. இந்த உலகத்தின் தற்கால, புதுமாதிரியான, நவீனப் போக்குதான் யுகம். உலகத்தின் வரலாறு, முதல் நூற்றாண்டு, இரண்டாம் நூற்றாண்டு என்று அடுத்தடுத்து வருகிற யுகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நூற்றாண்டையும் ஒரு யுகம் என்று நாம் கூறலாம். யுகங்கள் இல்லாமல் உலகம் நிலைத்திருக்காது. தற்போது நம்மைச் சுற்றிச் சூழ்ந்திருக்கும் உலக முறைமையின் பகுதியே இன்றைய யுகம்; எனவே காலத்திற்கேற்ற கோலம் என்பதன் பொருள், நாம் உலகத்தின் தற்காலப் போக்கைப் பின்பற்றி, நவீனமாகவும், புதுமாதிரியாகவும் இருக்கிறோம் என்பதே. "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்," என்று அந்த வசனம் தொடர்ந்து கூறுகிறது. இந்த நவீன யுகத்தின் காரியங்களால் நாம் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தால், நம் மனம் ஒருபோதும் புதிதாக்கப்படமுடியாது. எனவேதான் மெய்யாகவே இரட்சிக்கப்பட்டிருக்கும் அநேகக் கிறிஸ்தவர்களால் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளமுடிவதில்லை. அவர்கள் அளவுக்கதிகமாக நவீனமாகிவிட்டார்கள். நாம் இந்த நவீன யுகத்தைக் கைவிட்டாகவேண்டும். இந்த யுகத்திற்கு ஒத்த வேஷத்தை நாம் தரித்துக்கொண்டால், மனம் புதிதாகாது, நாம் ஒருபோதும் மறுரூபமாகவும் முடியாது.

மனம் ஆத்துமாவின் ஒரு பகுதியாக இருப்பதால், மறுரூபமாக்கப்படுதல் ஆத்துமாவில்தான் நடைபெறுகிறது. நாம்

ஆவியில் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்போது பிரச்சினையே ஆத்துமாதான். நம் மறுஜெநனத்தைப்பற்றி எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஏனென்றால் கர்த்தர் நம் நித்திய ஜீவனாக நமக்குள் இருக்கிறார். மேலும் பரிசுத்த ஆவி நம் ஆவியில் வாசம்பண்ணுகிறார். நம் ஆவி பரிசுத்த ஆவியால் உயிர்ப்பிக்கப்பட்டு, கிறிஸ்துவையே ஜீவனாகக்கொண்டு மறுபடிஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நம் ஆத்துமாவின் நிலை என்ன? நம் மனம், சித்தம், உணர்ச்சி ஆகியவைகளின் நிலை என்ன? நம் ஆவியில் நாம் உலகத்தின் மக்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டிருக்கிறோம். ஆனால் நம் மனதில், சித்தத்தில், உணர்ச்சியில் நாம் இன்னும் அப்படியே உலகத்தாரைப்போலவே இருக்கிறோமோ என்று நான் பயப்படுகிறேன். மறுஜெநனம் நம் ஆவியில் நிகழ்ந்துவிட்டது. ஆனால் மறுஜெநனத்திற்குப்பின், ஆத்துமாவில் நமக்கு இன்னும் மறுரூபமாகுதல் தேவைப்படுகிறது.

இதை நாம் ஒரு சில எடுத்துக்காட்டுகளால் விளக்கிக்கூறலாம். நாம் துணி உடுத்துகிற விதம் எப்படி இருக்கிறது? இரட்சிக்கப்பட்டிருக்கும் அநேகர், நாகரிகம் - நடை, உடை, பாவனைகள் - பற்றிய எண்ணத்தில் அப்படியே உலகத்தின் மக்களைப்போலவே இருக்கிறார்கள். இந்த நவீன யுகத்திற்கு ஒத்தே அவர்கள் உடுத்துகிறார்கள். பாவம் இல்லாதவரைக்கும் இவைகளெல்லாம் முற்றிலும் சரிதான் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் இது வெறும் மனித எண்ணம்தான்; வெறும் ஜென்மசுபாவமான கருத்துதான். அவர்களுடைய மனம் புதிதாக்கப்படுவதினால் அவர்கள் மறுரூபமாக்கப்படுவார்களானால் உடுத்துகிற விதத்தைக்குறித்தும் அவர்களுடைய எண்ணங்கள் மாறிவிடும்.

மேலும் நம் பணத்தைச் செலவழிப்பதில் நாம் எப்படி இருக்கிறோம்? நாம் நம் பணத்தைச் செலவழிக்கும் விதம் மாறியிருக்கிறதா? அநேகக் கிறிஸ்தவர்களின் கதை எனக்குத் தெரியும். அவர்கள் இரட்சிக்கப்பட்ட பின்னரும்கூட தொடர்ந்து தங்கள் பணத்தை, உலகத்திலுள்ளவர்களைப்போலவே செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை இன்னும் அதிகமாக நேசிக்கும்போதுதான், அதாவது கர்த்தர் அவர்களுக்குள் கிரியைசெய்வதற்கு இன்னும் அதிகமான இடத்தைக் கொடுக்கும்போதுதான், அவர்கள் பணத்தைச் செலவழிக்கும் விதத்தில் மறுரூபமாக்கப்படுவார்கள். அதுவரை மாற்றம் ஏற்படாது.

அதுபோல பல வாலிப சகோதரர்கள் கல்லூரிகளில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். படிப்பைப்பற்றியும், பட்டத்தைப்பற்றியும், உலகத்திலுள்ள மற்ற வாலிபர்கள் என்ன எண்ணுகிறார்களோ அப்படித்தான் இவர்களுடைய எண்ணமும்

இருக்கிறது. ஆனால் அவர்கள் கர்த்தருக்கு இடத்தை விட்டுக்கொடுத்தால், அவர்களுடைய மனம் புதிதாக்கப்பட்டு, ஆத்துமாவில் மறுரூபமாக்கப்பட்டால், இந்தக் காரியங்களைப்பற்றிய விஷயத்தில் அவர்களுடைய மனம் மாறிவிடும். அவர்கள் படிப்பை விட்டுவிடவேண்டும் என்பதன்று இதன் பொருள். ஆனால் படிப்பைப்பற்றிய அவர்களுடைய எண்ணங்களும், கருத்துக்களும் முற்றிலும் வேறுபட்டிருக்கும். அவர்களுடைய படிப்பையும், பட்டத்தையும் மதிப்பீடுசெய்வதற்கு அவர்களிடத்தில் வேறொரு கண்ணோட்டம் இருக்கும்.

கிட்டத்தட்ட எல்லாவற்றையும்பற்றிய நம் எண்ணங்கள் மாறவேண்டும். நம் எண்ணங்களில் ஏற்படுகிற இந்த மாற்றம் என்ன? நம் மனம் புதிதாக்கப்படுவதினால் நம் ஆத்துமா மறுரூபமாக்கப்படுவதே இந்த மாற்றம். நம் ஆவிக்குள் கிறிஸ்துவை ஜீவனாகக் கொண்டிருக்கிறோம். ஆனால் இப்போது கிறிஸ்து ஆத்துமாவின் உள்ளான பகுதிகளுக்குள் பரந்துவிரிந்து வந்து அவைகளைத் தம்மைக்கொண்டு பூர்த்தியாக நிரப்பவேண்டும். இந்தச் செயல் நம் ஆத்துமாவை அவருடைய சாயலுக்கொப்பாய் மறுரூபமாக்கும். அப்போதுதான் கிறிஸ்துவின் சாயல் நம் எண்ணங்களில் பிரதிபலிக்கும். நாம் நினைப்பதோ, பரிசீலிப்பதோ எதுவாக இருந்தாலும், புதுப்பிக்கப்பட்ட நம் மனம் கிறிஸ்துவின் மகிமையான சாயலை அதில் வெளிப்படுத்தும். அப்போதுதான் நம் மனதின் "புரிந்துகொள்ளுதல்" ஆவிக்குரியதாக இருக்கும். நம் ஆவியில் நாம் உணரும் காரியங்களைப் புரிந்துகொள்வது மனதுக்கு மிக எளிதாக இருக்கும்.

ரோமர் 8:6-ன் சரியான மொழிபெயர்ப்பு: "மனதை ஆவியின்மேல் வைப்பது, ஜீவனும் சமாதானமுமாம்," அல்லது "ஆவியின்மேல் வைக்கப்பட்ட மனம் ஜீவனும் சமாதானமுமாம்." ரோமர் 7-ல், மனம் தன் சொந்த சுயாதீன முயற்சியினால் காரியங்களைச் செய்வதற்கு முற்படுகிறது. இப்படிச் செய்யும்போது இது எப்போதுமே தோல்வியடைகிறது. ஆனால் ரோமர் 8-ல் மனம் ஆவியுடன் ஒத்துழைக்கிறது, ஆவியின்மேல் வைக்கப்படுகிறது. ரோமர் 7-ல் கூறப்பட்டுள்ள பாவப்பிரமாணத்தைவிட அதிக வல்லமையுள்ளதும் பலமுள்ளதுமான வேறொரு பிரமாணத்தை மனம் கண்டுபிடித்துவிடுகிறது. இந்தப் புதிய பிரமாணம் நம் ஆவியினுள் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவின் ஜீவப்பிரமாணமாகும். மனம் காரியங்களைச் சுயேச்சையாகவே செய்வதற்கு மறுபடியும் ஒருபோதும் முயல்வதில்லை. மாறாக பரிசுத்த ஆவி வாசம்பண்ணுகிற நம் ஆவியில் அது தன்னை வைக்கிறது. மனம் மாம்சத்தின்மேல் அல்ல, ஆவியின்மேல் வைக்கப்படுகிறது. மனதைப் புதிதாக்குவது என்பது ஒரு காரியம்,

ஆனால் மனதை ஆவியின்மேல் வைத்து, நிறுத்தி, ஆவியுடன் ஒத்துழைப்பது என்பது இன்னொரு காரியம். நம் மனம் நம் ஆவியுடன் எவ்வளவு அதிகமாகச் சேர்ந்து நிற்கிறதோ, அவ்வளவு அதிகமாக அது நம் ஆவியின் ஆளுகையின்கீழ் வந்தடையும்.

நம் மனம் ஆவியுடன் சேர்ந்து நிற்பதால், ஆவி மனதின்மேல் ஆளுகைசெய்து, அதைப் பூர்த்தியாய் நிரப்பி இறுதியில் "மனதின் ஆவி"யாகிவிடும். ரோமர் 8:6 "ஆவியின் மனம்" என்று கூறுகிறது. ஆனால் எபேசியர் 4:23 "மனதின் ஆவி" என்று கூறுகிறது (தமிழில், 'உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி' என்றிருக்கிறது. 'உங்கள் மனதின் ஆவியிலே புதிதாகுங்கள்' என்பதுதான் சரியான மொழிபெயர்ப்பு). ஆவி மனதை ஆளுகைசெய்து அதைப் பூர்த்தியாய் நிரப்பும்போது, ஆவி மனதின் ஆவியாகிவிடுகிறது. நாம் பழைய மனிதனைக் களைந்துபோடவேண்டும் என்று 22-ஆம் வசனமும், புதிய மனிதனைத் தரித்துக்கொள்ளவேண்டும் என்று 24-ஆம் வசனமும் கூறுகின்றன. இது சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலின் கிரியையாகும். பழைய மனிதனைக் களைந்துபோடுவது சிலுவையின் கிரியையாகவும், புதிய மனிதனைத் தரித்துக்கொள்வது உயிர்த்தெழுதலின் கிரியையாகவும் இருக்கின்றன. சிலுவையின் கிரியைக்கும், உயிர்த்தெழுதலின் கிரியைக்கும் இடையேதான் "உங்கள் மனதின் ஆவியிலே புதிதாகுங்கள்," என்ற 23-ஆம் வசனம் இருக்கிறது: மனதைப் புதிதாக்குவதில் சிலுவையின் கிரியையும், உயிர்த்தெழுதலின் கிரியையும் அடங்கியிருக்கின்றன. நம் ஜென்மசுபாவ மனம் சிலுவையினால் கிறுக்கித்தள்ளப்பட்டு, உயிர்த்தெழுதலில் புதிதாக்கப்படவேண்டும் என்பதுதான் இதன் பொருள். சிலுவைமரணம் ஒரு முடிவல்ல. அது முடிவுக்கு நடத்துகிற ஒரு வழிமுறை. உயிர்த்தெழுதல்தான் முடிவு. எவ்வளவு அதிகமாக நாம் சிலுவையில் மரிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் உயிர்ப்பிக்கப்படுவோம். எதிர்மறையான காரியங்கள் முடிவுக்குக் கொண்டுவரப்படுவது மாத்திரமல்ல, நேர்மறையான காரியங்களுக்கான வழியும் திறக்கப்படும். ஜென்மசுபாவமான மனதுக்கு ஏற்படும் மரணம், உயிர்த்தெழுந்த மனதுக்கு நடத்துகிறது. அப்போது உயிர்த்தெழுதலில் புதிதாக்கப்பட்ட மனதுடையவர்களாக இருப்போம். புதிதாக்கப்பட்ட இந்த மனம் ஆவியிலும், ஆவியின் ஆதிக்கத்தின்கீழும் இருக்கிறது. இது ஆவியால் நிரப்பப்பட்டும், ஆவியால் நிரம்பியும் இருக்கிறது. இதுமுதற்கொண்டு ஆவி மனதின் ஆவியாக மாறிவிடுகிறது. பின்பு நம் மனம் புதிதாக்கப்பட்ட மனமாக மட்டுமின்றி, ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதல் நிறைந்த ஆவிக்குரிய

மனமாகவும் மாறிவிடும். நம் உள்ளுணர்வால் நாம் உணர்கிற ஆவிக்குரிய காரியங்களை விளங்கிக்கொள்வது இப்படிப்பட்ட ஆவிக்குரிய மனதிற்கு எளிதாக இருக்கும்.

## சித்தத்துடன் இடைப்படுதல்

உள்ளுணர்வால் நாம் உணர்வதை புதிதாக்கப்பட்ட மனம் புரிந்துகொள்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அதன்பின் நாம் புரிந்துகொண்டதற்குக் கீழ்ப்படிய சித்தம் இருக்கிறதா என்பதுதான் பிரச்சினை. நாம் புரிந்துகொள்ளலாம். ஆனால் புரிந்துகொண்டதற்கு "முடியாது" என்றும் நாம் சொல்லக்கூடும். விருப்பத்தோடு கீழ்ப்படிவது என்பதுதான் பிரச்சினை. உண்மையாகவே நம்மிடத்தில் கீழ்ப்படிதலுள்ள சித்தம் இல்லையென்றால், உள்ளுணர்வில் இருப்பதைப் புரிந்துகொள்வது கடினம். கர்த்தர் மிகவும் ஞானமுள்ளவர். அவர் எதையும் ஒருபோதும் வீணாகச் செய்வதில்லை. கீழ்ப்படிவதற்கான விருப்பம் நம்மிடத்தில் இல்லை என்று அவருக்குத் தெரியுமென்றால், புரிந்துகொள்ளுதலையும் அவர் தருவதில்லை. அவர் நம்மை அப்படியே இருளிலேயே விட்டுவிடுவார். நாம் கீழ்ப்படியமாட்டோம் என்றால், புரிந்துகொள்ள அவர் ஏன் நம்மை அனுமதிக்கவேண்டும்? கர்த்தருக்குக் கீழ்ப்படிய ஆயத்தமாயிருக்கிற கீழ்ப்படிதலுள்ள சித்தத்தின் ஆதரவு புரிந்துகொள்ளுவதற்கு அவசியம் (*யோவான் 7:17*). நாம் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமாயிருக்கும்போதுதான், புரிந்துகொள்ளமுடியும்.

எடுத்துக்காட்டாக சிலர் செவிகொடுப்பதற்கும், புரிந்துகொள்வதற்கும் இருதயமில்லாமல், வெறும கேள்விகளுடன் மட்டும் என்னிடத்தில் வந்திருக்கிறார்கள். அவர்களுடன் பேசுவது நேரத்தை வீணாக்குவதாகும் என்று நான் உணர்நிதிருக்கிறேன். "உண்மையான நோக்கம் உங்களிடத்தில் இருக்கிறதா? உங்கள் கேள்விக்குப் பதில் சொன்னால் நீங்கள் கீழ்ப்படிவீர்களா?" என்று சில நேரங்களில் நான் கட்டிருக்கிறேன். "ஒருவேளை நான் கீழ்ப்படியலாம். ஆனால் கீழ்ப்படிவதற்கு எனக்கு விருப்பமில்லாமலும் போகலாம். எது எது என்ன என்ன என்று சும்மா படிக்கவும், கண்டுபிடிக்கவும்தான் நான் விரும்புகிறேன்," என்பதுதான் அவர்களுடைய வழக்கமான பதிலாக இருக்கும். சித்தம் முழுவதும் கீழ்ப்படிதலுள்ளதாக இருக்கவேண்டும். கீழ்ப்படிதலுள்ளதாக மட்டுமின்றி, தேவனுடைய சித்தத்துடன் இசைந்திருக்கவும் வேண்டும் (*லூக்கா 22:42; யாக்கோபு 4:7; பிலிப்பியர் 2:13*).

தேவன் நம்மைச் சுயாதீன சித்தத்துடன் சிருஷ்டித்தார். நாம்

எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் அவர் நம்மை ஒருபோதும் கட்டாயப்படுத்துவதில்லை, மாறாக தெரிந்தெடுக்கும் உரிமையை எப்போதும் அவர் நமக்குத் தருகிறார். அவர் உயர்ந்தவர், ஞானமுள்ளவர்; இருந்தபோதும் அவர் நம்மை ஒருபோதும் பலவந்தப்படுத்தமாட்டார். பலாத்காரத்தைப் பயன்படுத்தினால், அவர் மெய்யாகவே சிறியவர் என்பதுதான் அதன் பொருள். சாத்தான் மக்களைப் பலவந்தம்பண்ணுவதோடு மட்டுமின்றி, அவர்களை வஞ்சித்தும்விடுகிறான். ஆனால் தேவன் அதை ஒருபோதும் செய்யமாட்டார். "உனக்கு விருப்பமென்றால் அதைச் செய். நீ என்னை நேசிக்காவிட்டால் அதை மறந்துவிடு, நீ உன் சொந்த வழியில் போகலாம்." தேவன் சொல்வதின் பொருளடக்கம் இதுதான். இவ்வாறு நம் சித்தத்தைப் பயிற்சிசெய்வது அவசியமாக இருக்கிறது. இல்லையென்றால் தேவன் எதையாவது செய்வது கஷ்டம்தான். நம் சித்தத்தைப் பயிற்சிசெய்வதற்கு அதைக் கீழ்ப்படிதலுள்ளதாகவும், எல்லா நேரமும் கீழ்ப்படிவதற்கு ஆயத்தமுள்ளதாகவும் ஆக்கவேண்டும். நாம் நம்மைத் தேவனுடைய சித்தத்துக்கு பணிந்துஅடக்கினால் மட்டும் போதாது. நம் சித்தத்தைத் தேவனுடைய சித்தத்தோடு இசையப்பண்ணவும்வேண்டும்.

நம் சித்தம் இந்த அளவுக்குச் சரிசெய்யப்படும்போது அது மறுரூபமாக்கப்படும். அது பரிசுத்த ஆவியின் பரவுதலால். கிறிஸ்துவாகிய ஜீவனைக்கொண்டு பூர்த்தியாய் நிரப்பப்படும். நம் சித்தத்திலுள்ள கிறிஸ்துவின் வாசனையையும், சாயலையும் மற்றவர்கள் உணர்வார்கள். நாம் எடுக்கும் ஒவ்வொரு தீர்மானமும் கிறிஸ்துவின் வெளியாக்கமாக இருக்கும். இது அனுமானமோ வெறும் உபதேசமோ அல்ல. சில வேளைகளில் கர்த்தருக்குப் பிரியமான சிலரைச் சந்திக்கும்போது, அவர்கள் என்ன பேசினாலும், எதைத் தெரிந்தெடுத்தாலும், என்ன தீர்மானம் எடுத்தாலும், அவை எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் வாசனையை நாம் நுகர்கிறோம். அவர்கள் தங்களுடைய சித்தத்திலும், மனதிலும் மறுரூபமாக்கப்பட்டிருப்பதால் கிறிஸ்துவால் பூர்த்தியாய் நிரப்பப்பட்டிருக்கிறார்கள் என்பதையே இது தெளிவாக நிரூபிக்கிறது.

## உணர்ச்சியுடன் இடைப்படுதல்

பிரச்சினைக்குரிய நம் உணர்ச்சியுடன் இடைப்படுவதுதான் ஆத்துமாவோடு கடைசியாக இடைப்படுவதாகும். நம் எல்லாருக்கும் தெரிந்திருக்கிறபடி, நம் எல்லாப் பிரச்சினைகளும் அநேகமாக உணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன. உணர்ச்சி பரிசுத்த ஆவியின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கவேண்டும்.

எனவேதான் மத்தேயு *10:37-39* எல்லாவற்றுக்கும்மேலாகக் கர்த்தரை நேசிக்கவேண்டும் என்று அறிவுறுத்துகிறது. கர்த்தர் எதை அனுமதிக்கவில்லையோ, அதை நாம் நேசிக்கக்கூடாது. கர்த்தருடைய கட்டுப்பாட்டின்கீழ் நாம் அன்பை ஒழுங்குபடுத்துவது என்பது எதிர்மறையான பக்கமாகும். ஆனால் நேர்மறையான பக்கத்தையும்கூட நாம் அறிந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய பிரியத்தின்படியே நம் உணர்ச்சியைப் பயிற்சிசெய்ய எப்போதும் ஆயத்தமாயிருப்பதுதான் நேர்மறையான பக்கம். பெரும்பாலான நேரங்களில் நம் உணர்ச்சிகளுக்குக் கர்த்தருடைய அனுமதி இருக்கும். ஆனால் அவருடைய பிரியம் இருக்காது. ஏதோவொன்றை நேசிக்க அவர் நம்மை அனுமதிக்கிறார். ஆனால் அவருக்கு அதில் பிரியமில்லை.

ஒருமுறை ஒரு சகோதரி தான் இத்தகைய சூழ்நிலையில் இருப்பதைக் கண்டுபிடித்தாள். சில காரியங்களைச் செய்வதற்குக் கர்த்தர் அவளுடைய உணர்ச்சியை அனுமதித்தார் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. ஆனால் கர்த்தர் அதில் பிரியப்பட வில்லை என்றும் அவள் உணர்ந்துகொண்டாள். அவள் கர்த்தரிடத் தில் திரும்பிச்சென்று, "கர்த்தாவே நீர் இதை அனுமதித்தபோதும் நான் இதைச் செய்யமாட்டேன். நீர் சந்தோஷமாக இல்லை என்று நான் உணர்க்கிறேன்," என்று கூறினாள். இது மிகவும் நல்லது. அவள் இனிமையான ஐக்கியத்தைப் பெற்றுக்கொண்டு சமாதானத்தினாலும் மகிழ்ச்சியினாலும நிறைந்தாள். அவளுடைய உணர்ச்சியை முற்றிலுமாகக் கர்த்தருடைய கட்டுப்பாட்டின்கீழும், அவருடைய பிரியத்தின்கீழும் கொண்டுவரக்கூடிய பாடத்தைக் கற்றுக்கொண்டாள். சில வேளைகளில் ஏதாவது ஒன்றை நேசிப்பதற்கு நாம் கர்த்தருடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ளக் கூடும். ஆனால் அவருடைய மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ள முடியாது. நாம் அதை எவ்வளவு அதிகமாக நேசிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நம்மிடம் மகிழ்ச்சி குறைவுபடும். கடைசியாக அது அனுபவமகிழ்ச்சியாக மாறாமல் துன்பமாகவே மாறிவிடுகிறது. நாம் நம் உணர்ச்சியில் தவறாக இருக்கிறோம் என்பதையே இது நிரூபிக்கிறது. கர்த்தருடைய பிரியத்தின்படியும், மகிழ்ச்சியின்படியும், நம் உணர்ச்சியுடன் இடைப்பட நாமெல்லாரும் கற்றுக்கொள்ளவேண்டும் நாம் எதைத் தேடிக்கொண்டிருக்கிறோமோ, அதில் கர்த்தருடைய மகிழ்ச்சியை உணராவிட்டால் நாம் அதை நேசிக்கக்கூடாது.

பெற்றோர்களையோ, சகோதர்களையோ, தங்களையோகூட கர்த்தரைவிட அதிகமாக நேசிக்கக்கூடாது என்று அறிவுறுத்துகிற மத்தேயு *10:37-39*-லிருந்து அநேதகர் செய்திகளைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இதன் பொருள் என்னவென்று

அவர்களால் புரிந்துகொள்ளமுடிவதில்லை. கர்த்தருடைய பிரியத்துடன், அவருடைய கட்டுப்பாட்டின்கீழ்தான் அவர்கள் எல்லாவற்றையும் நேசிக்கவேண்டும் என்பதே இதன் பொருள். கர்த்தர் மிகச் சிறியவருமல்லர், மிகக் கொடுமையானவருமல்லர். ஆனால் நாம் எதை மறுத்தாலும் அலலது நேசித்தாலும், எதை விரும்பினாலும் அல்லது வெறுத்தாலும் அவையெல்லாவற்றையும் கர்த்தருடைய மகிழ்ச்சியுடன்கூடிய அனுமதியுடன்தான் செய்யவேண்டும் என்று நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கர்த்தருடைய உணர்ச்சியின்படியே நாம் நம் உணர்ச்சியைப் பயிற்சிசெய்யவேண்டும். நம் உணர்ச்சி கர்த்தருடைய உணர்ச்சியின்கீழ் இல்லையென்றால் நாம் தவறாக இருக்கிறோம். மேலும் அவருடைய பிரியத்தை நாம் ஒருபோதும் பெறமுடியாது. நாம் எவ்வளவு அதிகமாக நம் சொந்த வழியில் போகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் நம் மகிழ்ச்சியை இழந்துவிடுகிறோம். கர்த்தருடன் நாம் இனிமையான, அன்பான, ஆழமான ஐக்கியத்தைக் கொண்டிருக்கமுடியாது. நாம் தவறாக இருக்கிறோம் என்று யாரும் நம்மை ஆக்கினைக்கேதுவாகத் தீர்க்காவிட்டாலும், கர்த்தருடைய அனுமதியை நாம் பெற்றிருக்கிறோம் என்று மற்றவர்களுக்குமுன்பு நாம் கோரினாலும், அதில் அவருடைய பிரியம் இல்லை என்று நாம் உணர்கிறோம்.

கர்த்தருடைய பிரியமும், மகிழ்ச்சியும் இருக்குமாறு நம் உணர்ச்சியை அவருடைய ஆளுகையின்கீழ் காக்கும்போது, அது ஆவியால் பூர்த்தியாய் நிரப்பப்படும். அப்போது நாம் மகிமையின்மேல் மகிமையடைந்து கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படுவோம்.

இருதயம், மனச்சாட்சி, ஐக்கியம், உள்ளுணர்வு, மனம், சித்தம், உணர்ச்சி ஆகியவைகளுடன் இடைப்படுவதால் நாம் தேறினவர்களாகவும், முழுவளர்ச்சி அடைந்தவர்களாகவும் ஆகிவிடுவோம். கர்த்தருடைய வளர்ச்சி நம்மிடத்தில் இருக்கும். இதற்குப்பின் நாம் செய்யவேண்டியதெல்லாம் கர்த்தருடைய வருகைக்காகக் காத்திருப்பதுதான். அப்போதுதான் அவர் நம் சரீரத்தை உருமாற்றுவார். நம் ஆத்துமா மறுரூபமாக்கப் பட்டிருந்தால், தேவையான தருணத்தில் பலவீனமானதும், சாவுக் கேதுவானதுமான நம் சரீரத்தை ஆவிக்குரிய பலமும், வல்லமையும் பூர்த்தியாய் நிரப்பிவிடும். நாம் நம் ஆவியில் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, ஆத்துமாவில் மறுரூபமாக்கப்பட்டிருப்பது மட்டுமின்றி, சாவுக்கேதுவான நம் சரீரமும் அதின் பெலவீன வேளைகளில் தெய்வீக ஜீவனால் பூர்த்தியாய் நிரப்பப்படும். கடைசியாக, கர்த்தருடைய வருகையில் சரீரம் உருமாற்றம் அடையும். ஆவி, ஆத்துமா, சரீரமான நம்

முழு ஆள்தத்துவமும் கர்த்தருடைய மகிமையான சாயலில் இருக்கும். இதுவே கர்த்தருடைய மீட்பின் இறுதி செயலாக்கமாக இருக்கும். இந்த மீட்பு மூன்று படிகளில் செயல்படுத்தப்படுகிறது: *1)* ஆவியின் மறுஜெனனம் *2)* ஆத்துமாவின் மறுரூபம் *3)* சரீரத்தின் உருமாற்றம். தற்போது நாம் மறுரூபமாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஆத்துமாவுக்கு இந்த இடைப்படுதல்கள் அனைத்தும் தேவைப் படுகின்றன: மனதுடன் இடைப்படுதல், சித்தத்துடன் இடைப் படுதல், உணர்ச்சியுடன் இடைப்படுதல். இவைகளை நடைமுறைப் படுத்துவதற்குக் கர்த்தர்தாமே நமக்க உதவிசெய்வாராக. இதுதான் கர்த்தருடைய பிள்ளைகளின் இன்றைய தேவை. எல்லாப் போதனைகளும் வரங்களும் இந்த நோக்கத்திற்காகவே கர்த்தரால் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இந்தச் செய்முறையினால் மட்டுமே சபையைக் கட்டுவதற்கேதுவான சரியான கட்டுமானப்பொருள் களாக நாம் ஆகலாம்.

## அத்தியாயம் பத்து

## உள்ளான மறைவான பகுதிகளைத் தோண்டுதல்

நம் உள்ளான பகுதிகளுக்குள், ஆவியானவரின் ஓட்டத்தைக் கொண்டிருப்பது எப்படி என்று நாம் இந்த அத்தியாயத்தில் கற்றுக்கொள்வோம். எண்ணாகமம் 20-ஆம் அதிகாரத்தில், அடிக்கப்பட்ட கன்மலை (இந்தக் கன்மலை, அடிக்கப்பட்டு பிளக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முன்னடையாளம்) ஜீவத்தண்ணீரால் நிரம்பி ஓடியது (1 கொரி. 10:4). பின்பு 21-ஆம் அதிகாரத்தில் தேவமக்கள் தோண்டிய கிணற்றில் ஊற்றுத்தண்ணீர் பொங்கிவந்தது. ஆகையால் ஒரே புத்தகத்திலுள்ள இந்த இரண்டு அதிகாரங்களில், முதலாவது ஜீவத்தண்ணீர் ஓடுவதற்காக அடிக்கப்படவேண்டிய கன்மலை இருக்கிறது. பின்பு தண்ணீர் பொங்கிவருவதற்காகத் தோண்டப்படவேண்டிய நீரூற்று இருக்கிறது.

வேதவசனங்களை நாம் கவனமாக வாசிப்போமென்றால், இந்தக் கன்மலை இந்த ஊற்று ஆகிய இரண்டுமே இரண்டு வித்தியாசமான கோணங்களில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிற அவருடைய முன்னடையாளங்கள் என்று நாம் உணர்ந்துகொள்வோம். கன்மலை சிலுவையில் தொங்கும் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம். ஜீவ ஆவியாகிய ஜீவத்தண்ணீர் நமக்குள் பாய்ந்துவருவதற்காக அங்கே அவர் தேவனால் அடிக்கப்பட்டார். நீரூற்று வேறொரு வித்தியாசமான காரியத்தைக் குறிக்கிறது. கன்மலை, சிலுவையில் தொங்கும் கிறிஸ்து. நீரூற்று, நமக்குள் இருக்கும் கிறிஸ்து (யோவான் 4:14). கன்மலையல்ல, நீரூற்றுதான் இன்று விசுவாசிகளின் காரியம். கிறிஸ்து கன்மலையாகத் தம் கிரியைச் சிலுவையில் ஏற்கெனவே நிறைவேற்றிவிட்டார். அதிலிருந்துதான் ஜீவத்தண்ணீர் நமக்குள் பாய்ந்தோடி வந்தது. ஆனால் இன்று கிறிஸ்து, ஜீவத்தண்ணீருள்ள நீரூற்றாக, நமக்குள் தொடர்ந்து பொங்கிக்கொண்டேயிருப்பது வேறொரு காரியம். நீரூற்றாகிய கிறிஸ்து தொடர்ந்து பொங்குவது நாம் தோண்டப்படுவதைப் பொறுத்திருக்கிறது.

இன்னும் அதிகமான போதனையைத் தருவதன்று, மாறாகத் தோண்டப்படுவதற்காகக் கர்த்தரிடம் செல்லுமாறு நம்மை உற்சாகப்படுத்துவதுதான் இந்த அத்தியாயத்தின் நோக்கம். உபதேசங்களைப்பற்றியோ, சுற்றுப்புறச் சூழ்நிலைகளைப் பற்றியோ, எதிர்காலத் திட்டங்களைப்பற்றியோ கர்த்தருடைய

சித்தத்தை அறிவதற்கான வழிகாட்டுதலைப்பற்றியோ நாம் அளவுக்கு அதிகமாகப் பேசக்கூடாது. நாம் - நாமே - தோண்டப்படவேண்டும். ஏன்? ஏனென்றால் நம்மில் பெரும்பாலானவர்களிடத்தில் இந்த நேரம்வரை ஜீவத்தண்ணீரின் விடுதலையான ஓட்டம் இல்லை. நம் ஜெபங்கள் அவ்வளவு விடுதலையாக இல்லை. நம் சாட்சிகள் அவ்வளவு பலமாக இல்லை. மேலும் அநேக வழிகளில் நாம் தோற்றுப்போகிறோம்; அநேக நேரங்களில் நாம் அவ்வளவு வெற்றிகரமாக இல்லை. இதற்கெல்லாம் ஒரேவொரு காரணம்தான் உண்டு: ஆவிக்குரிய ஜீவனின் ஓட்டம் இல்லை அல்லது ஜீவத்தண்ணீராகிய நீரூற்று நமக்குள் விடுதலையாக ஓடவில்லை. தோண்டி எடுக்கப்பட வேண்டிய அழுக்கு நமக்குள் அதிகமாக இருக்கிறது. "இது என்ன அழுக்கு," என்று நீங்கள் கேட்கலாம். இது நம் மனச்சாட்சியில், உணர்ச்சியில், சித்தத்தில், மனதில் இருக்கிற அழுக்கு. தோண்டி எடுக்கப்படவேண்டிய அழுக்கு நம் இருதயத்தில் அதிகமாக இருக்கிறது. நம் ஆவியிலும்கூட களையப்படவேண்டிய அழுக்கு கொஞ்சம் இருக்கிறது.

## மனச்சாட்சியைத் தோண்டுதல்

"அழுக்கு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதின் பொருள் என்ன? நம் *மனச்சாட்சி* தூய்மையாக இல்லை என்பதே இதன் பொருள். ஒருவேளை இதோ இந்த நேரத்திலும்கூட கர்த்தரிடத்தில் இன்னும் அறிக்கைசெய்யப்படாத சில குற்றச்சாட்டுகள் நம் மனச்சாட்சியில் இருக்கலாம். இந்தக் குற்றச்சாட்டுகள்தாம் தோண்டித் தூரயெறியப்பட வேண்டிய அழுக்கு. நம் மனச்சாட்சியில் இருக்கும் குற்றச்சாட்டுகளால்தாம் அதிகமான விடுதலையை நமக்குள் உணரமுடியவில்லை. இந்தக் குற்றச்சாட்டுகள் என்ன? உங்களை நீங்களே கேட்கவேண்டும். உங்களுக்கு மட்டுமே தெரியும். நீங்கள் எந்தக் காரியத்தில் பிறருடன் தவறாக இருக்கிறீர்கள் என்றும், அப்படிப்பட்ட என்ன காரியம் உங்களுக்குள் இருக்கிறது என்றும் உங்களுக்குத் தெரியும். பிறருடன் நீங்கள் சரியாக இல்லையென்றால், குற்றச்சாட்டுகள் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கும். கர்த்தர் கோருவது எதுவோ, அதைச் செய்ய நீங்கள் மறுக்கும்போது உங்கள் மனச்சாட்சியில் இது ஒரு குற்றச்சாட்டாக மாறிவிடுகிறது. பின்பு நீங்கள் ஏன் கட்டப்பட்டிருக்கிறீர்கள் என்றும், ஏன் விடுதலையில்லாமல் இருக்கிறீர்கள் என்றும் ஆச்சரியப்படுகிறீர்கள். நீங்கள் இன்னும் பதிலளிக்காத கர்த்தருடைய ஒரு கோரிக்கை உண்டு என்பதே காரணம். எனவே இது உங்கள் மனச்சாட்சியில் உடனடியாக ஒரு குற்றச்சாட்டாக மாறிவிட்டது. உங்கள்

மனச்சாட்சி குற்றமற்றதுமல்ல, குற்றச்சாட்டுகளிலிருந்து நீங்கி தூய்மையானதுமல்ல.

ஆவியானவரின் விடுதலையான, உள்ளான ஓட்டத்தை நாம் அனுபவிக்க விரும்பினால், முதலாவது நம் மனச்சாட்சி சரிசெய்யப்பட்டு, தூய்மையாக்கப்படவேண்டும். ஒரு நாளில் பல தடவை கர்த்தரிடத்தில் செல்லும்போது மட்டுமே அழுக்கைத் தோண்டமுடியும். இந்த வாரத்தில் நாம் திரும்பத் திரும்பக் கர்த்தரிடத்தில் செல்லவேண்டும் என்று நான் ஆலோசனை சொல்கிறேன். தெருவோரமாக நடந்துகொண்டிருக்கும்போதுகூடக் கர்ததரிடத்தில் திரும்பலாம். நாம் நம் ஆவியில் கர்த்தரிடத்திற்குப் போகவேண்டும். அவருடைய சமுகத்தில் தோண்டப்படவேண்டும். பரிசுத்த ஆவியின் உதவியால் எல்லா அழுக்கையும் நாம் தோண்டி எடுக்கவேண்டும்.

## இருதயத்தைத் தோண்டுதல்

கர்த்தரால் ஆக்கினைக்கேதுவாகத் தீர்க்கப்படுகிற நம் மனச்சாட்சியிலுள்ள குற்றச்சாட்டுகளைச் சரிசெய்தபின்பு, நம் இருதயத்திலிருக்கிற அநேகக் காரியங்களையும் நாம் தோண்டியெறியவேண்டும். கர்த்தரை மட்டுமே தேடுகிற தூய இருதயம் அநேக சகோதர சகோதரிகளிடத்தில் இல்லை. அநேகர் ஒருபக்கம் கர்த்தரையும் அவருடைய வழிகளையும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்னொரு பக்கம் கர்த்தரைத்தவிர வேறு பல காரியங்களை இன்னும் அதிகமாகத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது இருதயம் சிக்கலாகவும், குழப்பமாகவும் மாறிவிடுகிறது. இருதயம் விடுதலையாகவும், தூய்மையாகவும் இல்லை. நம் இருதயத்திலிருந்து கிறிஸ்துவைத் தவிர வேறு எல்லாக் காரியங்களையும் தோண்டியெறிய நாம் திரும்பவும் கர்த்தரிடத்தில் செல்லவேண்டும்.

"என்ன காரியங்கள் தோண்டி எடுக்கப்படவேண்டும்?" என்று நீங்கள் கேட்கலாம். எதிர்காலத்தைப்பற்றியும், கர்த்தருடைய வழிநடத்துதலைப்பற்றியும் உங்கள் கவலைதான், அநேகமாக, நீங்கள் தோண்டவேண்டிய முதல் காரியமாக இருக்கலாம். இதைப்பற்றி நீங்கள் கவலைப்படக்கூடாது. எதிர்காலம் உங்கள் கைகளில் இல்லை, மாறாக அது கர்த்தருடைய கைகளில் இருக்கிறது. நிச்சயமாகச் சொல்லப்போனால், உங்களுக்கு எந்த எதிர்காலமும் இருக்கக்கூடாது. கர்த்தரே நம் ஒரே எதிர்காலம். நம் இருதயம் எவ்வளவு "பசையுள்ளது" என்று நமக்குத் தெரியாது. பல வருடங்களுக்குமுன் ஈக்களைப் பிடிப்பதற்கு 'ஈ-தாள்' பயன்படுத்தப்பட்டது (விளக்கு வெளிச்சத்தில் வருகிற பூச்சிகளைப் பிடிக்க நாம் எண்ணெயில் தோய்த்த தாளைத் தொங்கவிடுகிறோம்.

இதுதான் ‘ஈ-தாள்’). அது மிகவும் பசையுள்ளது. அதைத் தொட்ட எதுவானாலும் அதனுடன் ஒட்டிக்கொள்ளும். நம் இருதயம் இந்த ‘ஈ-தாளைப்’போல மிகவும் பசையுள்ளது. இருதயத்தைத் தொடுகிற எதுவானாலும் அதனுடன் ஒட்டிக்கொள்கிறது. இந்தக் காரியங்களெல்லாம் வெட்டப்படவேண்டும். நாமெல்லாரும் கர்த்தரைத் தேடிக்கொண்டிருக்கிறோம் என்றுதான் தோன்றுகிறது. நம்மில் அநேகர் கர்த்தருக்காக மட்டுமே வாழ்ந்துகொண்டிருக்கிறோம். நம் வீடுகளையும் வேலைகளையும்கூட நாம் விட்டுவிட்டோம். அனுதினமும் நாம் கர்த்தருடைய வழிநடத்துதலை தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனால் எத்தனை காரியங்கள் நம் இருதயத்தைச் சிக்கலாக்குகின்றன என்று நமக்குத் தெரியாது. இந்தக் காரியங்களை நாம் மறந்துவிடலாமா? மனச்சாட்சியிலிருந்து அழுக்கைத் தோண்டி எடுப்பது எளிது ஆனால் இருதயத்திலிருந்து அழுக்கைத் தோண்டி எடுப்பது அவ்வளவு எளிதன்று. திரளான காரியங்களில் நமக்கு நாமே இரக்கம் காட்டுகிறோம். நம் இருதயத்தை நாம் கடுமையாகத் தோண்டி எடுக்க விரும்புவதில்லை. நம் மனச்சாட்சியிலிருந்து குற்றச்சாட்டுகளைத் தோண்டி எடுப்பது சுலபமாக இருக்கிறது. ஆனால் நாம் விரும்புகிற காரியங்களை, நம் இருதயத்திலிருந்து தோண்டி எடுப்பது அவ்வளவு சுலபமல்ல. நாம் பிரியமாக நேசிக்கிற காரியங்களுடன் நாம் ஒட்டப்பட்டிருக்கிறோம். எனவேதான் நமக்கு நல்மனச்சாட்சியும் தூய்மையான இருதயமும் தேவை என்று வேதம் கூறுகிறது. “இருதயத்தில் தூய்மை உள்ளவர்கள் பாக்கியவான்கள், ஏனெனில் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்” (மத்தேயு 5:8).

நாம் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறோம். அவரைத் தேடுகிறோம். இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. ஆனால் சிக்கலான இருதயத்துடன்தான் நாம் கர்த்தரை நேசிக்கிறோம், அவரைத் தேடுகிறோம். நம் இருதயத்தின் இலட்சியமும், இலக்கும் அவ்வளவு தூய்மையாக இல்லை. நம் இருதயத்துக்குள் எத்தனை இலக்குகள் இருக்கின்றன என்று நமக்கே தெரியாது. நம் குடும்பம், வேலை, பட்டம் ஆகியவைகளைப்பற்றி என்ன? இந்த வருடத்தைப்பற்றியும், அடுத்த வருடத்தைப்பற்றியும் என்ன? அநேகக் காரியங்கள் இன்னும் நம் இருதயத்தில் இருக்கின்றன. சகோதர சகோதரிகளே! இந்த அழுக்கெல்லாம் நமக்குள் ஜீவத்தண்ணீரின் ஓட்டத்தைத் தடுத்துக்கொண்டிருக்கின்றன என்றும், அவை தோண்டி எறியப்படவேண்டும் என்றும் நான் உங்களுக்குக் கூறுகிறேன். கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாளிலிருந்து அவர் ஜீவத்தண்ணீர் ஊறுகிற நீரூற்றாக நமக்குள் வந்துவிட்டார். ஆனால் நம் மனச்சாட்சியிலும்,

இருதயத்திலும் அதிகமான அழுக்கு இருக்கிறது. இதுவே இன்றைய பிரச்சினை.

## மனதைத் தோண்டுதல்

ஒருவன் ஓர் ஆழ்கிணறைத் தோண்டும்போது, பூமி பல்வேறு அடுக்குகளாலானது என்று பலவேளைகளில் கண்டுபிடிப்பான். ஓர் அடுக்கு மிருதுவான மணலாகவும், அடுத்த அடுக்கு கடினமான மணலாகவும், இன்னொரு அடுக்கு கல்லாதகவும் இருக்கிறது. கல்லான அடுக்கைத் தோண்டுவது கஷ்டம். நாம் தோண்டவேண்டிய, நம்மில் உள்ள பல அடுக்குகளை இது விளக்கிக்காட்டுகிறது. நம்மிடத்தில் மனச்சாட்சி என்ற அடுக்கும், இருதயம் என்ற அடுக்கும் இருக்கின்றன. மேலும் அதிக அழுக்கு நிறைந்த மனம் என்ற அடுக்கும் இருக்கிறது. தினம்தினம் நம்மிடத்தில் எத்தனை கற்பனைகள் இருக்கின்றன என்று நமக்கே தெரியாது. இரவில் உறங்கும்போது மட்டுமின்றி, பகலில் விழித்திருக்கும்போதுகூட, நாம் கனவு காண்கிறோம். நம் கற்பனைகளெல்லாம் வித்தியாசமான கனவுகளாக இருக்கின்றன. சாத்தான் நம் மனங்களைக் குருடாக்குவதைப்பற்றி நாம் ஏற்கெனவே பேசியிருக்கிறோம். வெறும் கற்பனைகளினாலேயே அவன் இதைச் செய்துவிடுகிறான். சில வேளைகளில் நீங்கள் ஒரு செய்தியைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதுகூட உங்கள் மனம் வேறு எங்கேயோ இருக்கிற்து. ஒருவேளை அது நிலாவுக்கேகூடப் புறப்பட்டுப் போயிருக்கும்! வெளியரங்கமாக நீங்கள் உங்கள் தலையை மேலும் கீழும் அசைத்துக்கொண்டிருக்கி றீர்கள். ஆனால் அந்தரங்கமாக உங்கள் மனம் ஆகாயத்தில் ஏதோவொன்றை கற்பனைசெய்துகொண்டிருக்கிறது. செய்தியின் போது நீங்கள் சத்தத்தைக் கேட்கிறீர்கள்; ஆனால் நீங்கள் எதையுமே பெற்றுக்கொள்வதில்லை. உங்கள் மனம் கற்பனைகளால் குருடாக்கப்பட்டிருக்கிறது.

பலநேரங்களில், மக்கள் தங்கள் கற்பனைகளில் உலகம் முழுவதையுமே சுற்றிவந்துவிடுகிறார்கள். நொடிப்பொழுதுக்குள், மக்கள் அகில உலகத்தையும் சுற்றிப் பயணம்செய்துவிடலாம். தூர கிழக்கு நாடுகளுக்குக்கூட மிகச் சிறந்த ஜெட்விமானத்தைவிட அவர்கள் வேகமாகச் சென்றுவிடுவார்கள். ஆ! மனதில் எத்தனை கற்பனைகள் இருக்கின்றன. உங்கள் மனதில் அதிகமான அழுக்கு இருக்கும்போது ஜீவத்தண்ணீரின் ஓட்டம் உங்களுக்குள் எப்படி விடுதலையோடு ஓடும்? உங்கள் மனம் அடைக்கப்பட்டிருப்பதால் ஜீவத்தண்ணீரும் உங்கள் மனதில் அடைபட்டிருக்கிறது. ஜீவத்தண்ணீர் தங்குதடையில்லாமல் பாய்ந்தோடுவதற்காகத் தோண்டி எறியப்படவேண்டிய அநேக எண்ணங்களும்,

கற்பனைகளும், கனவுகளுமே இந்த அழுக்குக் குவியல்.

## சித்தத்தைத் தோண்டுதல்

சித்தத்திலும் அதிகமான அழுக்கு இருக்கிறது. நிபந்தனையின்றியும், பரிபூரணமாகவும், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அநேகர் இல்லை. நம் சித்தங்களில் நாம் அதிகமாகக் கீழ்ப்படிந்து அடங்கவேண்டியது அவசியம். ஆ! எத்தனைமுறை கர்த்தருடைய இறையாண்மையுள்ள ஏற்பாட்டுக்கு நாம் கீழ்ப்படிந்து அடங்காமல் இருக்கிறோம். நாம் கர்த்தருக்கு பரிபூரணமாகக் கீழ்ப்படிந்து அடங்கியிருக்கிறோம் என்று சிலவேளைகளில் நினைக்கிறோம். ஆனால் அவர் நம்மைச் சில குறிப்பிட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்குள் வைக்கும்போது நாம் அம்பலப்படுத்தப்படுகிறோம். நம் உண்மைநிலை வெளிவருகிறது. காணமுடியாத கர்த்தருக்குக் கீழ்ப்படிவது சுலபம். ஆனால் காணக்கூடிய நபர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குவது சற்று கடினம். "ஆ, நான் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அடங்குகிறேன். கர்த்தருடன் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால்..." என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆம், ஒரு பெரிய "ஆனால்!" "கர்த்தருக்குமுன்பாக எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் சபையுடன்...ஆ, என்னால் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்கமுடியாது." உங்கள் சித்தத்தை உடைக்கவேண்டும் என்பதற்காகவே கர்த்தர் உங்களைப் பிரத்தியேகமாக உங்கள் உள்ளூர் சபையில் வைத்திருக்கிறார்.

"என் கணவர் மட்டும் இப்படிப்பட்ட ஒரு நல்ல சகோதரராக இருந்திருந்தால், நான் அவருக்குச் சந்தோஷமாகக் கீழ்ப்படிந்து அடங்கியிருப்பேன்." சகோதரிகளே, நீங்கள் எத்தனை தடவை இப்படி நினைத்திருக்கிறீர்கள்! ஆனால் உண்மை என்னவென்றால், உங்கள் கணவர் அப்படிப்பட்ட நபராக இருக்கமுடியாது. கர்த்தர் உங்களுக்குப் பொருத்தமான கணவரையே கொடுத்திருக்கிறார். உங்களுக்குத் தேவையான, ஏற்ற கணவர் அவர்தான். உங்கள் கனவுகளுக்கேற்ற கணவரை நீங்கள் பெற்றிருந்தால் நீங்கள் ஒருபோதும் அம்பலமாக்கப்பட்டிருக்கமாட்டீர்கள். தேவனுடைய இறையாண்மையின்கீழ் ஒழுங்குசெய்யப்பட்டுள்ள அநேக அனுபவங்களும், சூழ்நிலைகளும், நம்மை அப்படியே வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து அம்பலமாக்குகின்றன. அப்போதுதான் நம் சித்தம் எவ்வளவு பிடிவாதமானது என்று நாம் அறிந்துகொள்கிறோம். பிடிவாதமாக இருக்கிற ஒரு சகோதரரை நீங்கள் சுட்டிக்காட்டலாம். ஆனால் நாம் எல்லாருமே பிடிவாதமாகத்தான் இருக்கிறோம். ஒருவேளை நாமே அதிகப் பிடிவாதமான சகோதரர்களாக இருக்கக்கூடும். நாம்

ஒவ்வொருவரும் நம் சித்தத்தைத் தோண்டவேண்டும். நம் வாழ்க்கை, சுபாவம், பிறவிக்குணம் ஆகியவை ஒருபோதும் மாறாமலிருக்கும்போதே, மேன்மேலும் ஆவிக்குரிய அறிவைப் பெறுவது எவ்வளவு சுலபம்! இது படுதோல்வி! ஜீவத்தண்ணீர் நம்மில் பாய்ந்தோடவேண்டும் என்றால், நாம் தோண்டப்படவேண்டும். பாய்ந்தோடச்செய்ய வேண்டியது கர்த்தருடைய வேலை, ஆனால் தோண்டவேண்டியது நம் வேலை. நம்மை நாமே தோண்டவேண்டும்.

## உணர்ச்சியைத் தோண்டுதல்

சித்தத்திலிருந்து அழுக்கைத் தோண்டி எடுத்தபிறகு, நாம் நம் *உணர்ச்சியுடன்* இடைப்படவேண்டும். நம் உணர்ச்சி எவ்வளவு பிரச்சினைக்குரியது என்று எப்படி விளக்குவது என்று எனக்குத் தெரியாது. உணர்ச்சியைப் பொறுத்த பிரச்சினை சகோதரிகளிடத்தில் மட்டுமின்றி, சகோதரர்களிடத்திலும் இருக்கிறது. நாம் உணர்ச்சிவசப்படும்போது நம்மாலேயே நாம் ஆக்கிரமிக்கப்படுகிறோம். நாம் கர்த்தருடன் சிறிது நேரம் செலவழித்து நம்மை அவருக்குத் திறந்துகொடுப்போமென்றால், முதலாவது நம் மனச்சாட்சி, பின்பு நம் இருதயம், அடுத்து நம் மனம், அதற்கடுத்து நம் சித்தம் ஆகியவைகளைத் தோண்ட ஆரம்பித்துவிடுவோம். கடைசியாக நாம் எவ்வளவாக இன்னும் நம் உணர்ச்சிகளிலேயே இருக்கிறோம் என்பதைக் கண்டுகொள்கிற இடத்துக்கு வந்துவிடுவோம். ஒரு காரியத்தை விரும்புவதும், இன்னொரு காரியத்தை வெறுப்பதும் நமக்கு மிகச் சுலபம். ஒரு சகோதரனை நண்பனாக்கிக்கொள்வதும், அடுத்த நாள் காலையிலேயே அவனை எதிரியாக நடத்துவதும் நமக்கு மிகச் சுலபம். நம் சித்தத்தை மாற்றுவது அவ்வளவு எளிதன்று. ஆனால் நம் உணர்ச்சிகள் பலவிதமாக மாறுவது எளிது. நம் உணர்ச்சிகள் தட்பவெப்ப நிலையைவிட அதிகமாக மாறுகின்றன, ஏறி இறங்குகின்றன.

இது ஏனோதானோவென்ற ஒரு செய்தியன்று! நீங்கள் கர்த்தரிடத்தில் செல்லுமாறு உங்களுக்குக் கொஞ்சம் புத்திமதி கொடுக்கவேண்டும் என்பதே என் ஆழ்ந்த அக்கறை. உங்கள் தேவைகள், உங்கள் உத்தியோகங்கள், உங்கள் எதிர்காலம், உங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் ஆகிய எல்லவற்றையும் மறந்துவிடுங்கள். கர்த்தருடைய சமுகத்தை மட்டும் தேடுங்கள். அவருடைய வெளிச்சத்துக்கு உங்களைக் கொண்டுவருமாறு அவரிடம் கேளுங்கள். பின்னர் உங்களுடைய மனச்சாட்சி, இருதயம், மனம், சித்தம், உணர்ச்சி ஆகியவைகளிலுள்ள அழுக்கைத் தோண்டி எறிய, அவருடைய வெளிச்சத்தைப்

பின்பற்றிச் செல்லுங்கள். எவ்வளவு அதிகமாக நீங்கள் அழுக்கைத் தோண்டியெடுத்து எறிகிறீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் பிழைப்பீர்கள். நீங்கள் ஜீவிக்கிறவராக இருப்பீர்கள், நீங்கள் பலப்படுத்தப்படுவீர்கள், நீங்கள் ஜெயமுள்ளவர்களாய் இருப்பீர்கள். உங்களுடைய அநேகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இதுவே திறவுகோல். ஜீவத்தண்ணீரின் ஓட்டத்தை நீங்கள் பராமரிக்கவேண்டும். ஜீவத்தண்ணீர் உங்களுக்குள் விடுதலையாகப் பாய்ந்தோடும்போது, அங்கே வெற்றி உண்டு. சகல பிரச்சினைகளும் எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே, நாம் உணராமலே, தீர்ந்துபோகும். அவைகளை எப்படித் தீர்ப்பது என்று உங்களுக்குத் தெரியாவிட்டாலும்கூட ஜீவனின் ஐக்கியமாகிய ஜீவத்தண்ணீரின் ஓட்டத்தினால் அவை தீர்ந்துபோகும். ஜீவத்தண்ணீரின் இந்த ஓட்டம் உங்களுடைய தோண்டுதலையே முற்றிலும் சார்ந்திருக்கிறது.

இந்தத் தோண்டுதல் ஜெபத்தினால் மட்டுமே நிறைவேறுகிறது. நாம் கர்த்தருடன் அதிகமதிகமாக நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அவருடைய உள்ளான நடத்துதலின்படி ஜெபிக்க வேண்டும். அந்த நடத்துதலின்படி நாம் அறிக்கைசெய்து, நமக்குள் இருக்கும் எல்லா அழுக்கையும் தோண்டியெடுக்கவேண்டும். இந்தப் புத்திமதிகள் தெளிவாக இருக்கின்றன என்று நாம் நம்புகிறோம். நாம் இப்போது இவைகளை நடைமுறைப்படுத்தியாக வேண்டும். சில நேரங்களில், நாம் பிறருடன் சேர்ந்து ஜெபிக்கவேண்டும். ஆனால் தோண்டுகிற ஜெபம் தனிமையில்தான் அதிக வெற்றியுள்ளதாக இருக்கும். நாம் கர்த்தருடன் தனியாக அதிக நேரம் செலவழிக்கவேண்டியது மிகவும் அவசியம். மனச்சாட்சி, இருதயம், மனம், சித்தம், உணர்ச்சி ஆகிய எல்லாவற்றுக்குள்ளும் இருக்கக்கூடிய அழுக்குகளெல்லாம் ஜெபங்களால் தோண்டியெறியப்படவேண்டும். "எனக்கு எப்போதுமே வேலை இருக்கிறது," என்று நீங்கள் சொல்லக்கூடும். ஆனால் அன்றாடக் கடமைகளில் எப்போதும் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் நாம் கர்த்தரைத் தொடமுடியும், அழுக்கைத் தோண்டியெறியமுடியும். பல நேரங்களில் நான் வேலைசெய்து கொண்டிருக்கும்போதே, தோண்டுகிற இந்தப் பயிற்சிக்கு என்னை நான் உட்படுத்துகிறேன். ஜெபிக்கவும் கர்த்தரைத் தொடர்புகொள்ளவும், அந்தரங்க அழுக்கையெல்லாம் தோண்டி எறியவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

ஊற்று நீரே, பொங்கி வா,
கர்த்தா, முற்றும் தோண்டும்;
ஓடை என்னில் பாய
தடை எல்லாம் தோண்டும்.

பாறைக் கிறிஸ்து பிளக்க
ஜீவத்தண்ணீர் பாயும்;
என் நெஞ்சத்தில் தடை
ஓட்டம் நிறுத்துதே.

ஜெபத்தால் அழுக்கை
முற்றிலும் தோண்டுவேன்,
ஆவி விடுவிப்பேன்,
ஓடை வேகம் பாயும்.

பாறைக் கிறிஸ்து மீண்டும்
பிளந்திட வேண்டாம்;
தோண்டிட, தூர்வார
என்னைத் தரவேண்டும்.

என் உள்ளத்தினின்று
ஜீவநீர் பொங்கிட,
ஆவியின் நிரப்புதல்
வாஞ்சித்துக் கதறுவேன்.

நீர் ஓட்டம் தடுக்கும்
தடை முற்றும் நீக்கும்;
ஜீவ வார்த்தையுடன்
ஓடை வேகம் பாயும்.

ஊற்று நீரே, பொங்கி வா,
கர்த்தா, முற்றும் தோண்டும்;
ஓடை என்னில் பாய
தடை எல்லாம் தோண்டும்.

## அத்தியாயம் பதினொன்று

# ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணர்தல்

*"ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றப்பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்" (1 கொரி. 2:14).*

இங்கே உள்ள "ஜென்மசுபாவமான" என்ற வார்த்தை, கிரேக்க மூலபாடத்தில் "ஆத்துமாவுக்குரிய" என்ற பொருளுடைய ஒரு முக்கியமான வார்த்தையாகும்; ஆகையால் "ஜென்மசுபாவமான மனிதன்" என்பது உண்மையில் "ஆத்தும மனிதனையே" குறிக்கிறது. வேதத்தின் இந்தப் பகுதியிலுள்ள பின்வரும் வசனம் இன்னொரு வகையான மனிதனை வெளிப்படுத்துகிறது: *"ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்" (1 கொரி. 2:15).* ஆத்தும மனிதனை 14-ஆம் வசனத்திலும், ஆவிக்குரிய மனிதனை 15-ஆம் வசனத்திலும் பார்க்கிறோம். ஆத்தும மனிதன், தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களை பெற்றுக்கொள்ளமாட்டான் என்று இந்த வசனங்கள் மிகத் தெளிவாகக் கூறுகின்றன. ஆவிக்குரிய மனிதனால் மட்டுமே அவைகளைப் பகுத்துணரமுடியும்.

*"அப்பொழுது இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றிவர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?" (மத். 16:24-26).*

24-ஆம் வசனத்தில் மூன்று காரியங்கள் வலியுறுத்தப்படுகின்றன: முதலாவது, "உன்னை வெறு"; அடுத்து, "சிலுவையை எடு"; கடைசியாக, "என்னைப் பின்பற்று." "என்னை" என்பது இப்போது நமக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியிலுள்ள கிறிஸ்துவைக் குறிக்கிறது. "ஆத்துமாவைக்" குறிக்கப் பயன்படுத்தப்படும் அதே கிரேக்க வார்த்தைதான் 25-ஆம் வசனத்தில் "ஜீவனைக்" குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இநதக் காரணத்தினால், *"தன் ஆத்துமாவை இரட்சிக்க*

விரும்புகிறவன் அதை இழந்துபோவான். என்னிமித்தமாகத் தன் *ஆத்துமாவை* இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான். மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும் தன் *ஆத்துமாவை* நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? மனுஷன் தன் *ஆத்துமாவுக்கு* ஈடாக என்னத்தைக் கொடுப்பான்," என்றும் மொழிபெயர்க்கலாம். நாம் நம் ஆத்துமாவை இழக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் சுயத்தை வெறுக்கவேண்டும்.

*"பின்பு அவன் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்ளுவான். மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன?" (லூக். 9:23-25).*

மத்தேயு *16:24-26*-ல் கொடுக்கப்படாத "*அநுதினமும்*" என்ற வார்த்தையை லூக்கா இங்கே சேர்க்கிறார். அதாவது, "ஒருவன் தன் சிலுவையை *அநுதினமும்* எடுத்துக்கொள்ளவேண்டும்." "ஆத்துமாவை இழ" என்பதற்குப் பதிலாக இந்த வசனங்ள் "தன்னைத்தானே (தன் சொந்த சுயத்தைத்தானே) இழ" என்றும் கூறுகின்றன. ஆகையால் மத்தேயுவில் உள்ள "ஆத்துமாவும்" லூக்காவிலுள்ள "சுயமும்" ஒன்றேதான் என்று இது நிரூபிக்கிறது.

*"சகோதரரே, ஒருவன் யாதோரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள்; நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு" (கலா. 6:1).*

*"சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்" (கலா. 6:18).*

*"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனேகூட இருப்பதாக. ஆமென்." (பிலே. 25)*

இந்த வசனங்களில் "உங்கள் ஆவி" என்று சொல்லப்பட்டிருக்கிறது; ஆகையால் இது மனித ஆவிதான்.

*"மேலும் கிறிஸ்து உங்களிலிருந்தால் சரீரமானது பாவத்தினிமித்தம் மரித்ததாகயிருந்தாலும், ஆவியானது நீதியினிமித்தம் ஜீவனுள்ளதாயும் இருக்கும்." (ரோமர் 8:10)*

*"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச்செய்தார்." (ரோமர் 8:4)*

*"பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை*

நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டு மென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது." *(கலா. 5:16, 17)*

இந்த வசனங்களில் வரும் "ஆவி" கிரேக்க வரிபிளப்புப் பாடத்தின்படி மனித ஆவியையே குறிக்கிறது.

## தேவனுடைய பொருளாட்சியைத் திரும்பிப்பார்த்தல்

தேவனுடைய பொருளாட்சியையும், அதின் குறியையும், நான் மறுபடியும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தம்மையே நமக்குள் பகிர்ந்துகொடுப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி என்று நாம் கடந்த சில அத்தியாயங்களில் தெளிவாகப் பார்த்தோம். பிதா குமாரனில் ஊனுருக்கொண்டதின்மூலமாகவும், குமாரன் ஆவியானவரில் உணர்ந்துகொள்ளப்படுவதின்மூலமாகவுமே தேவன் தம்மை நமக்குள் பகிர்ந்தளிக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், பிதா குமாரனில் இருக்கிறார், குமாரன் ஆவியானவரில் இருக்கிறார். குமாரன் என்ற நபர் மாத்திரமல்ல, குமாரன் செய்துமுடித்த கிரியையும்கூட பரிசுத்த ஆவியில் இருக்கிறது. ஆகையால் பிதாவாகிய தேவன், குமாரனாகிய தேவன், தெய்வீக மற்றும் மனித சுபாவங்கள், பூமிக்குரிய பாடுகளைச் சகிக்கும் வல்லமையோடுகூடியக் கிறிஸ்துவின் மனித வாழ்க்கை, கிறிஸ்துவின் மரணத்தின் வீரியம், உயிர்த்தெழுதலின் வல்லமை, பரமேறுதல், சிங்காசனத்தில் அமர்தல் ஆகிய அனைத்தையும் பரிசுத்த ஆவியானவர் தம்முள் கொண்டுள்ளார். இந்த மூலப்பொருட்களெல்லாம், "சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளை-மருந்தாக" பரிசுத்த ஆவியில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சகலத்துக்கும் போதுமான இந்தப் பரிசுத்த ஆவியின்மூலமாகத்தான் மூவொரு தேவனின் பரிபூரணமும் நமக்குள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

சகலத்தையும் உள்ளடக்கிய ஆவியானவர் இப்போது நம் மனித ஆவியில் இருக்கிறார். முன்னடையாளமான ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். பழைய ஏற்பாட்டின் இந்த உருவகத்தில், தேவனுடைய ஷெக்கினா மகிமையும், உடன்படிக்கைப் பெட்டியும், மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருப்பதாகத் தெளிவாகக் காட்டப்படுகின்றன. ஆகையால் தேவ பிரசன்னமும், கிறிஸ்துவும் வெளிப் பிரகாரத்திலும் இல்லை, பரிசுத்த ஸ்தலத்திலும் இல்லை, மாறாக மகா பரிசுத்த ஸ்தலத்தில்தான் இருக்கின்றனர். தேவாலயத்தில் மூன்று பகுதிகளும் மனிதனின் மூன்று பகுதிகளாகிய சரீரம்,

ஆத்துமா, ஆவி ஆகியவைகளுக்கு ஒத்திருக்கின்றன. நாம் தேவனுடைய ஆலயமாக இருக்கிறோம் என்றும், கிறிஸ்து நம் ஆவியுடனே இருக்கிறார் என்றும் புதிய ஏற்பாடு தெரிவிக்கிறது. "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக" (2 தீமோ. 4:22). இன்று பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியுடனேகூடக் கிரியைசெய்துகொண்டிருக்கிறார் என்று பின்வரும் வசனங்கள் நிரூபிக்கின்றன. "நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்" (ரோமர் 8:16). "அப்படியே கர்த்தரோடிணைந்திருக்கிறவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான்" (1 கொரி. 6:17). கர்த்தர்தாமே ஆவியாயிருக்கிறார். நம் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆவி உண்டு. இந்த இரண்டு ஆவிகளும் ஒரே ஆவியாகக் கலந்திணைந்திருக்கின்றனர். இன்று கர்த்தர் நம் ஆவியில் வாசம்பண்ணுகிறார் என்பதை இது நிரூபிக்கிறது. நாம் கிறிஸ்துவைப் பூரணமாக அனுபவித்துமகிழ விரும்பினால், நம் ஆவியை எப்படிப் பகுத்துணர்வது என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும். இந்தக் காரணத்தினால்தான் நம் ஆவி நம் ஆத்துமாவிலிருந்து பிரிக்கப்படவேண்டும் என்று எபிரேயர் 4:12 கூறுகிறது. நம் மனித ஆவியாகிய மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நாம் நுழையுமாறும் எபிரேயர் கூறுகிறது. நம் தெய்வீகப் பங்காகக் கிறிஸ்துவை அனுபவிக்கவேண்டுமானால் நம் மனித ஆவியாகிய மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் எப்படி நுழைவது என்று நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

கடந்த நூற்றாண்டுகளில் எபிரேயர் நிருபத்தைப்பற்றி அதிகமான புத்தகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுள் மிகச் சிறந்த புத்தகம் ஆண்ட்ரூ முர்ரே என்பவரால் எழுதப்பட்டது என்று நாம் நம்புகிறோம். அவருடைய புத்தகத்துக்கு "மகா பரிசுத்த ஸ்தலம்" என்று அவர் பெயரிட்டார். இந்தத் தலைப்பு சரியானதுதான். ஏனென்றால் கிறிஸ்து வாசம்பண்ணுகிற மனித ஆவியாகிய மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையலாம் என்று எபிரேயர் புத்தகம் வெளிப்படுத்துகிறது. ஆவியில்தான் கிறிஸ்து எல்லாமுமாக இருக்கிறார்.

நாம் கிறிஸ்துவில் பங்குபெற விரும்பினால் அவர் இருக்கும் சரியான இடத்தைக் கண்டுபிடித்தாக வேண்டும். அவர் பரலோகத்தில் இருக்கிறார் என்று நீங்கள் ஒருவேளை சொல்லக்கூடும். எந்தச் சந்தேகமும் இல்லாமல் அது சரிதான். ஆனால் அவர் பரலோகத்தில் மட்டும்தான் இருக்கிறாரென்றால், இங்கே பூமியில் அவரை எப்படி அனுபவித்துமகிழமுடியும்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம், அவர் பரலோகத்தில் மட்டும் இல்லை.

பரலோகத்தில் இருக்கும் அதே நேரத்தில் அவர் நமக்குள்ளும் இருக்கிறார். எடுத்துக்காட்டாக, நம் வீட்டிலிருந்து கொஞ்சத் தூரத்தில் இருக்கிற ஜெனரேட்டரிலுள்ள (மின்சாரத்தை உற்பத்திசெய்யும் இயந்திரத்திலுள்ள) அதே மின்சாரம்தான் நம் வீட்டிலும் இருக்கிறது. கிறிஸ்து பரலோகத்தில் தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறார் என்று ரோமர் 8:34 கூறுகிறது. ஆனால் கிறிஸ்து நம்மில் இருக்கிறார் (வசனம் 10) என்றும் அதே அதிகாரம் சொல்கிறது. ஒரே அதிகாரத்தில் பரலோகத்தில் இருக்கும் அதே கிறிஸ்து நம்மிலும் இருக்கிறார் என்று பார்க்கிறோம். அவர் பரலோகத்தில் மட்டும் இருந்துவிட்டு நம்மில் இல்லாவிட்டால், நாம் அவரை எப்படி அனுபவிக்கவும், இரசிக்கவும்முடியும்? கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இன்று கிறிஸ்து பரலோகத்தில் மட்டுமல்ல, நம் ஆவியிலும் இருக்கிறார்.

நம் ஆவியில் இருக்கும் கிறிஸ்துவே தேவனுடைய பொருளாட்சியின் குறி: சகலத்தையும் உள்ளடக்கிய தேவனாகத் தம்மையே மனிதனுக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி. மேலும் நம் ஆவிக்குள் வாசம்பண்ணுகிற கிறிஸ்துதாம் அவருடைய பொருளாட்சியின் குறி. நாம் நம் ஆவிக்குத் திரும்பும்போதெல்லாம், அங்கே கிறிஸ்துவைச் சந்திப்போம். எடுத்துக்காட்டாக என் வீட்டில் மின்சார வசதி இருக்கிறது. நான் அதைப் பயன்படுத்த விரும்பினால் என்ன செய்வேன்? ஸ்விட்சைப் போடவேண்டும். மனித ஆவியே நம் ஸ்விட்ச். யோவான் 3:16-ஐ அநேகக் கிறிஸ்தவர்களால் மனப்பாடமாக ஒப்பிக்கமுடியும். ஆனால் யோவான் 3:16-ஐப்போல முக்கியத்துவம்வாய்ந்த "கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக" என்ற 2 தீமோத்தேயு 4:22-ஐப்பற்றி அவர்கள் அறிவற்றவர்களாகவே இருக்கிறார்கள். தேவன் நம்மை இவ்வளவாக அன்புசெய்ததால் அவர் தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளினார். நாமும் அவரைப் பெற்றிருக்கிறோம் (யோவான் 1:12). நாம் அவரை விசுவாசித்திருக்கிறோம், பெற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அவர் எங்கேயிருக்கிறார்? நம் எந்த பகுதிக்குள் அவர் வந்திருக்கிறார்? நாம் இந்தப் பொக்கிஷத்தை பல வருடங்களாக நமக்குள் வைத்துக்கொண்டிருந்திருக்கிறோம். ஆனால் அவர் நம் ஆவிக்குள்தான் இருக்கிறார் என்ற உண்மையை அறியாதவர்களாக இருந்திருக்கிறோம். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆனால் இப்போது நமக்குத் தெரியும். தேவனுடைய ஒரேபேறான குமாரனாகிய கிறிஸ்து நம் ஆவிக்குள் இருக்கிறார்.

## ஆத்துமாவை வெறுத்தல்

கர்த்தர் நம் ஆவியில் இருந்தபோதும், நம் ஆவி நம் ஆத்துமாவுடன் அதிகமாக ஒட்டிக்கொண்டிருக்கிறது. இந்தக் காரணத்தினால்தான், நம் ஆவி நம் ஆத்துமாவிலிருந்து தேவனுடைய வார்த்தையினால் பிரிக்கப்படவேண்டுமென்று எபிரேயர் நிருபத்தின் ஆசிரியர் கூறுகிறார். ஊன், எலும்புக்குள் மூடிப்பொதிந்துவைக்கப்பட்டிருப்பதுபோல, கிறிஸ்து வாசம்பண்ணுகிற நம் ஆவியும், ஆத்துமாவுக்குள் மூடிவைக்கப் பட்டிருக்கிறது. மேலும், ஊனைப் பார்ப்பதற்குமுன் எலும்பை உடைக்கவேண்டியிருப்பதுபோல, ஆவி வெளிப்படுத்தப் படுவதற்குமுன் நம் ஆத்துமா உடைக்கப்படவேண்டும். இந்தக் காரணத்தினால்தான் நாம் நம் ஆத்துமாவை இழக்கவேண்டியதும், நம் சுயத்தை வெறுக்கவேண்டியதும் அவசியம் என்று கர்த்தர் நமக்குப் பல தடவை சொன்னார். நான்கு சுவிசேஷங்களிலும் ஆத்துமாவை இழக்குமாறும், ஆத்துமாவை விட்டுக்கொடுக்கு மாறும், சுயத்தை வெறுக்குமாறும் கர்த்தராகிய இயேசு நம்மை அறிவுறுத்துகிறார். ஆத்துமாவை வெறுக்க வேண்டும். ஏனெனில் அது ஆவியை மூடிவைத்திருக்கிறது. ஊனைப் பெறுவதற்கு ஒரேவொரு வழிதான் உண்டு. எலும்புகளையும் மூட்டுகளையும் உடைப்பதும், நொறுக்குவதும்தான் வழி. கர்த்தர் நம் ஆவியில் இருக்கிறார். அவருடைய கிருபை நம் ஆவியில் இருக்கிறது. ஆனா᾿அவரை அடையும் வழி தினம்தினம் ஆத்துமாவை நொறுக்குவதே.

ஆத்துமா என்றால் என்ன? நாம் முன்பே சுட்டிக்காட்டியது போல, ஆத்துமா என்பது சுயமே. சுயமே மனித ஆள்தத்துவத்தின் வையம், சுயமே மனித ஆள்தத்துவம். சுயம்தான் சிலுவையிலறையப்படவேண்டும், பிறரை சிலுவையில் அறையக்கூடாது, பிறரை கிறுக்கித்தள்ளக்கூடாது. மாறாக நம் சொந்த ஆத்துமாவையே சிலுவையில் அறையவேண்டும். எவனாகிலும் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால் அவன் தன் ஆத்தும ஜீவனை வெறுத்து, தன் சிலுவையை அனுதினம் எடுத்துக்கொள்ளவேண்டும். வெறுமனே நேற்றும் இன்றும் மட்டும் இல்லை, மாறாகத் தினம்தினம் சிலுவையை ஆத்துமாவின்மேல் பிரயோகிக்கவேண்டும். பெரும்பாலான கிறிஸ்தவர்களிடத்தில் “நான்” என்பதைத்தவிர வேறொன்றும் இல்லை. முதல் வார்த்தையிலிருந்து கடைசி வார்த்தைவரை, எப்போதுமே “நான்”...“நான்”...“நான்”. ஆனால் இனி நானல்ல கிறிஸ்துவே என்னில் வாழ்கிறார்” என்பதுதான் கிறிஸ்தவ வாழ்க்கை. “இனி நானல்ல கிறிஸ்துவே,” என்று மாறுவது எப்படி? “நான்” என்பதைச் சிலுவையில் அறைவதால்தான், நான் சிலுவையில் கிடத்தப்பட்டிருக்கிறேன். மேலும் சிலுவை இப்போது என்மேல்

இருக்கிறது. நான் சிலுவையில் அறையப்பட்டுவிட்டேன். எனவே இனி நான் என்பது இல்லை. ஆரம்பக் கிறிஸ்தவனாக இருந்தபோது நான் உரையாடும்போதெல்லாம் "நான்" என்னும் வார்த்தையைப் பயன்படுத்தும் பழக்கம் என்னிடம் இருந்தது. ஆனால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இந்த நாட்களில் "நான்" என்ற வார்த்தையையே பயன்படுத்தத் துணியமாட்டேன். மாறாக எப்போதும் "நாம்" என்ற வார்த்தையையே பயன்படுத்துகிறேன். நான் மட்டும் அல்ல, கிறிஸ்து உட்பட வேறு பலரையும் சேர்த்து.

எவனாகிலும் கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்பினால் அவன் மூன்று காரியங்களைச் செய்யவேண்டும்: "நான்" என்பதை வெறு, அனுதினமும் சிலுவையை எடு, இப்போது பரலோகத்தில் மட்டுமின்றி, நம்மிலும் இருக்கிற கிறிஸ்துவைப் பின்பற்று. நாம் முதலாவது சுயத்தை வெறுத்து, சிலுவையை பிரயோகிக்கும்போது அவரைப் பின்பற்றுவது எளிதாயிருக்கிறது. ஆத்துமாவை வெறுப்பது என்பதின் பொருள், நம்மிலிருந்து ஆவிக்குத் திரும்புவதே. அப்போது ஆவியில் நாம் கிறிஸ்துவைச் சந்திப்போம். ஆத்துமாவை வெறுக்கவேண்டும் என்று நான்கு சுவிசேஷங்களும் எதிர்மறையாகச் சொல்கின்றன? ஆனால் ஆவியில் வாழவேண்டும் என்றும், ஆவியில் காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் வேதத்தில் பின்னால் வரும் நிருபங்களனைத்தும் நேர்மறையாகச் சொல்கின்றன; ஏனென்றால் இன்று கர்த்தராகிய இயேசு ஆவியில் இருக்கிறர். அவருடைய கிருபை ஆவியில் இருக்கிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுவது ஆவியுடன் இடைப்படக்கூடிய ஒரு காரியம். இதுதான் தேவனுடைய பொருளாட்சியின குறி. ஆ! தேவனடைய பொருளாட்சியின் இந்தக் குறியை நாம் மீண்டும் அழுத்திச்சொல்லவேண்டியது அவசியம். தேவன் தம்மையே நம் ஆவிக்குள் பகிர்ந்தளிக்கவேண்டும் என்பதுதான் அவருடைய நித்தியத் திட்டம் என்பதைப்பற்றி நாம் தெளிவாக இருக்கவேண்டும். அவர் ஏற்கெனவே இதைச் செய்துமுடித்துவிட்டார். ஏனென்றால் அவர் இப்போது நம் ஜீவனாகவும், எல்லாமுமாகவும் நம் ஆவியில் இருக்கிறார். நம் ஆவியில் இருக்கிற இந்த அதிசயமான ஆவியானவரில் நம் தேவைகளனைத்தும சந்திக்கப்படுகின்றன.

## ஆவியில் நிலைத்திருத்தல்

நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, நமக்கு அளவுக்கதிகமான மதபோதனைகள் கொடுக்கப்பட்டன. அநேகக் காரியங்களை நமக்குக் கற்றுத்தந்தார்கள். தேவன்தாம் சிருஷ்டிகர், நாம் சிருஷ்டிகள், நாம் தேவனுக்குப் பயப்படவேண்டும், அவரைச்

சேவிக்கவேண்டும், அவரைப் பிரியப்படுத்தவேண்டும், நன்மைசெய்ய நம்மால் முடிந்த அளவுக்கு நாம் முயற்சிசெய்ய வேண்டும், அவருடைய நாமத்தை மகிமைப்படுத்த நாம் எதையாகிலும் செய்யவேண்டும். இப்படிப்பட்ட போதனைகளைத்தான் நாம் பெற்றுக்கொண்டோம். இந்த மதபோதனைகளில் எதுவும் தவறில்லைதான். ஒரு வகையில் அவைகள் நல்லவைதாம். ஆனால் அவை தேவனுடைய பொருளாட்சியின் குறியுடன் தொடர்புடையவையல்ல.

நம்மில் பலர் அறநெறி போதனைகளைக்கூடப் பெற்றிருக்கிறோம். நாம் நல்லவர்களாக, தாழ்மையானவர்களாக, பொறுமையுள்ளவர்களாக, இனிமையானவர்களாக அன்பானவர்களாக இருக்கவேண்டும்; கோபப்படக்கூடாது, பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும்; கணவர்கள் தங்கள் மனைவிளை நேசிக்கவேண்டும். மனைவிகள் தங்கள் கணவக்ளுக்குக் கீழ்ப்படியவேண்டும். இவைகளே நன்மையான அறநெறிப் போதனைகள்.

ஆனால் கவனியுங்கள்: "என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். நானே திராட்சைச்செடி, நீங்கள் கொடிகள்." நாம் செய்யவேண்டும் என்று கர்த்தர் நமக்குச் சொன்னது இதுதான். "கொடிகளைப்போல நீங்கள் என்னில் நிலைத்திருக்கவேண்டும்." மதபோதனைகளையும், அறநெறிப் போதனைகளையும் மறந்துவிடுங்கள். ஒரேவொரு காரியத்தை மட்டும் நினைவில்கொள்ளுங்கள். நீங்கள் கிறிஸ்துவினுடைய ஒரு கிளை, அவரில் நிலைத்திருங்கள், அவர் உங்களில் நிலைத்திருக்கட்டும். ஆனால் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்க விரும்பினால், அவர் எங்கே இருக்கிறார் என்று நாம் அறியவேண்டும். நாம் ஒரு வீட்டில் வாசம்பண்ண விம்பினால், முதலாவது அந்த வீடு இருக்கும் இடத்தை நாம் அறியவேண்டும். மனதிலோ அல்லது உணர்ச்சியிலோ நிலைத்திருப்பதால் நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கமுடியுமா? முடியாது. ஆவியில் நிலைத்திருந்தால் மட்டுமே நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கமுடியும். கர்த்தர்தாமே நம் ஆவியில் இருக்கிறார், அவருடைய கிருபையும் நம் ஆவியில் இருக்கிறது. இவ்வாறு கிறிஸ்துவில் நிலைத்திருப்பதற்கு நாம் நம் ஆவியைப் பகுத்துணரவேண்டும். நாம் ஆவியில அவரில் நிலைத்திருக்கும்போது, அவர் நம்மை ஆக்கிரமித்துக்கொள்ள அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும். அப்போது நம்மை நிரப்பவும், நம்மில் குடியிருக்கவும் தேவையான ஆதாரம் அவருக்குக் கிடைக்கும், நம் ஆவியின்மூலம் அவருடைய ஐசுவரியங்களனைத்தும் உருவாக்கப்பட்டு வெளிவரும். அவரை மகிமைப்படுத்துமாறு நாம் கனிகொடுப்போம். இது மத அல்லது

அறநெறிப் போதனையல்ல, இது கிறிஸ்துவிலுள்ள ஜீவன்.

போதனைகளைக் கொடுப்பதோ, நம்மை இன்னும் அதிக பக்தியுள்ளவர்களாகவும், அறநெறி உள்ளவர்களாகவும் ஆக்குவதோ இந்தப் புத்தகத்தின் நோக்கமல்ல! இல்லை! நம் ஒரே பங்காகவும், நம் ஜீவனாகவும், நமக்கு எல்லாமுமாகவும் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய நித்திய நோக்கம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள உதவிசெய்வதுதான் இந்தப் புத்தகத்தின் நோக்கம். இதுமுதற்கொண்டு நாம் அவரால் வாழ்வோமாக; அவரையே நமக்கு எல்லாமுமாக அனுபவிப் போமாக. திறவுகோல், அதாவது குறி, எங்கே இருக்கிறது? அது நம் ஆவியில் இருக்கிறது. இப்பேர்ப்பட்ட அதிசயமான, சகலத்தையும் உள்ளடக்கிய, வரம்பில்லாத தேவன், நம் ஆவியில் வாசம்பண்ணுவதற்காகத் தம்மையே ஒரு வரம்புக்குட்படுத்திக் கொண்டார். நாம் எவ்வளவு சிறியவர்கள், எவ்வளவு குறுகியவர்கள்! எனினும் தேவன் நமக்குள் இருக்கிறார். நம் ஆவியில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறார். இது ஒருவனை மதபக்தியுள்ளவனாகவோ அல்லது அறநெறி உள்ளவனாகவோ இருக்குமாறுப் போதிக்கக்கூடிய காரியமல்ல. இது மூவொரு தேவன், நம் ஆவியில் நமக்கு எல்லாமுமாக மாறிவிடுவதாகும். ஆகையால் நாம் நம் ஆவியைப் பகுத்துணரவும், எல்லா நேரமும் நம் ஆத்துமாவை வெறுக்கவும், நம் ஆவிக்குத் தொடர்ந்து திரும்பிக்கொண்டே இருக்கவும் நாம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் நம் சுற்றுச்சூழல்களை மறந்து, அவரில் நிலைத்திருக்க வேண்டும். அவர் நம்மில் நிலைத்திருக்கட்டும். அப்போது நாம் கொடுக்கும் கனி நம் ஆவியில் இருக்கிற கிறிஸ்துவாகிய உள்ளான ஜீவன் வெளியரங்கமான கிரியையாக இருக்கும்.

நாம் கிறிஸ்தவர்களாக இருக்க மதபக்திக்குரிய வழி என்னவென் றால், அதிகாலையில் எழுந்து; "கர்த்தாவே, இந்தப் புதிய நாளுக்காக நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன். எது சரியோ அதைச் செய்வதற்கும், தவறான எதையும் செய்யாமலிருக்கவும் நீர் இன்று எனக்கு உதவிசெய்யும். உம் நாமத்தை மகிமைப் படுத்தவும், உம் சித்தத்தைச் செய்யவும், நீர் இன்று எனக்கு உதவிசெய்யும். கர்த்தாவே, என் சுபாவம் நல்ல சுபாவம் இல்லை என்று உமக்குத் தெரியும். நான் கோபப்படாமலிருக்க எனக்கு உதவிசெய்யும். கர்த்தாவே, மிகப் பொறுமையாகவும், தாழ்மையாகவும் இருப்பது எவ்வளவு அருமையானது! கர்த்தாவே, பொறுமையாகவும், தாழ்மையாகவும் இருக்க எனக்கு உதவிசெய்யும்," என்று ஜெபிக்கவேண்டும். ஒருவேளை, வார்த் தைக்கு வார்த்தை நாம் இப்படி ஜெபிக்காமலிருந்திருக்கலாம். ஆனால், கொள்கையளவில் இப்படித்தான் நாம் ஜெபிக்கிறோம்.

இது ஆவிக்குரிய ஜெபம் அன்று. மாறாக மதபக்தியான, அறநெறி ஜெபம். "அப்படியானால் காலையில் நான் எப்படித்தான் ஜெபிக்க வேண்டும்?" என்று நீங்கள் கேட்கலாம். "கர்த்தாவே, நான் உம்மைத் துதிக்கிறேன். நீரே பிதாவுடன் ஆவியானவரில் இருக்கிற அதிகயமானவர். உம் ஆவி என் ஆவியில் இருப்பது எவ்வளவு மகிமையானது! கர்த்தாவே, நான் உம்மை நோக்கிப் பார்க்கிறேன்! நான் உம்மை உற்றுப்பார்க்கிறேன்! உம்மை ஆராதிக்கிறேன்! உமக்கு நன்றிசெலுத்துகிறேன்! உம்மைத் துதிக்கிறேன்! உம்முடன் ஐக்கியம்கொள்கிறேன்." இப்படிச் சொல்லுமாறு நான் உங்களுக்கு ஆலோசனைகொடுப்பேன். மதபக்தியுள்ளவனாக இருப்பதைப்பற்றியும், நன்மைசெய்வதைப்பற்றியும் மறந்துவிடுங்கள். நாள்முழுவதும் நீங்கள் பரலோகத்தில் இருப்பீர்கள், "ஜாக்கிரதையாயிரு, அவசரப்படாதே, கோபப்படாதே," என்று நீங்கள் யோசிக்கத் தேவையில்லை. ஆனால் இப்படி ஜெபியுங்கள்: "கர்த்தாவே, எனக்கு எந்தச் சுபாவமோ, எந்தத் தாழ்மையோ, எந்தப் பொறுமையோ, எந்த இதுவோ அதுவோ தெரியாது. மகிமையான கிறிஸ்துவே, சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவே, உம்மை மட்டுமே எனக்குத் தெரியும்." அவருடன் ஐக்கியம்கொள், அவரைத் துதி, அல்லேலூயா பாடு! அப்போது நீ வெற்றியைப் பார்ப்பாய். மாலையில் நீ சபைக் கூட்டத்துக்கு வரும்போது, நீ பரலோகத்திலிருப்பாய். உன் ஆவியை விடுவிப்பதும், பிறருடைய ஆவியை விடுவிப்பதும் உனக்கு மிக எளிதாக இருக்கும். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி.

இந்தக் குறியைத் தவறவிடக்கூடாது என்பதை உங்கள் பொறுப்பாக்கிக்கொள்ளுங்கள். தெளிவான புத்திமதிகளுடன்கூடிய ஒரு வரைபடம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் வழியைத் தவறவிடவேண்டிய தேவை இல்லை. இன்று உங்களிடம் ஜெட்விமானம் இருக்கும்போது, ஏன் இன்னும் மாட்டுவண்டியைக் கட்டிக்கொண்டு அழவேண்டும்? ஜெட் மட்டுமின்றி, ராக்கெட்டே இருக்கிறது. இந்த ராக்கெட் எங்கே இருக்கிறது என்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இது உங்கள் ஆவியில் இருக்கிறது. நீங்கள் ஆவிக்குத் திரும்பும்போது ஒரு புத்தம் புதிய காரில் இருப்பதைவிட மேலாக உணர்வீர்கள். அது ஒரு ஜெட்விமானத்தில் இருப்பதைப்போன்றது. சில வேளைகளில் காலையில், அது ராக்கெட்டைப்போல் இருக்கும். நீங்கள் எல்லாவற்றையும் கடந்து மூன்றாம் வானத்தில் இருப்பதைப்போல உணர்வீர்கள். இது தமாஷ் அல்ல. ஒரு மெய்யான கிறிஸ்தவனிடத்தில், கிறிஸ்துவினுடைய இப்படிப்பட்ட அனுபவங்கள் அதிகமாக இருக்கவேண்டும்.

உன்னால் ஒரு கஷ்டமான சூழ்நிலையைச் சகிக்கமுடியாதபோதும், உன் பலத்துக்கு மிஞ்சி ஒடுக்கப்படும்போதும், உன் ஆவிக்குத் திரும்பி இயேசுவை நோக்கிப் பார். அதற்குமேலே உயரமாக, எல்லாவற்றையும் கடந்தவனாகவும், வெற்றிபெற்றவனாகவும் எழும்புவாய்; எல்லாமே உன் பாதத்துக்குக்கீழே இருக்கும்.

அநேக நேரங்களில், என்ன செய்வது, என்ன தீர்மானம் எடுப்பது என்று தெரியாமல், நான் பிரச்சினையில் இருந்திருக்கிறேன். எவ்வளவு அதிகமாக சூழ்நிலையை அலசிப்பார்த்தேனோ, அவ்வளவு அதிகமாக நான் குழப்பமடைந்திருக்கிறேன். அப்போது நான், “கர்த்தாவே, நான் இவையனைத்தையும் மறக்கும்படிச் செய்யும். என்னை ஆவிக்குத் திரும்பச்செய்து, உம்மை நோக்கிப் பார்க்கச்செய்யும்,” என்று சொன்னேன். ஆ! நாம் இதைச் செய்யும்போது பெறும் மனப்பிரகாசம் மிக மகிமையானது! சகலத்தையும் உள்ளடக்கியவர், இதோ, இங்கே இப்போது நம் ஆவியில் இருக்கிறார்! *என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருக்கிறேன்.* இதுவே இரகசிய ˙நம் ஆவியைப் பகுத்துணரும்போது, அவரில் நிலைத்திருக்கமுடியும். மேலும் அவரே சகலத்தையும் உள்ளடக்கிய மூவொரு தேவன் என்றும் நாம் கண்டுகொள்ளலாம். அவரே நம் ஆவிக்குள் வாசம்பண்ணுகிற, அதிசயமான, சகலத்தையும் உள்ளடக்கிய, சகலத்துக்கும் போதுமான ஆவியானவர். தேவனைத் தொடர்புகொள்ள நாம் நம் ஆவிக்குத் திரும்பும்போதெல்லாம், நாம் வெளிச்சத்தில் இருக்கிறோம், நாம் ஜீவனில் இருக்கிறோம், நாம் வல்லமையில் இருக்கிறோம், நாம் பரலோகத்தில் இருக்கிறோம், நாம் மூவொரு தேவனுடன் இருக்கிறோம். மூவொரு தேவன் நம்முள் இருக்கிறார். எவ்வளவு மகிமையானது! இது வெறும் போதனையன்று, மாறாக எல்லா நேரமும் நாம் அனுபவித்துமகிழ்கிற உண்மையான சாட்சியாகும். தேவனுடைய பொருளாட்சியின் இலக்கையே குறிபார்க்கக் கற்றுக்கொள், அதிலிருந்து பிசகாதே. தினம்தினம் ஆத்துமாவை வெறுத்து, ஆவியை இயக்குவதின்மூலம் அவருடன் ஐக்கியம்கொண்டு, அவரை நோக்கிப் பார்த்து, அவரை உற்றுநோக்கிப் பிரதிபலிக்கவேண்டும் இந்தக் குறியை எப்போதும் பின்பற்று.

# அத்தியாயம் பன்னிரண்டு

# மனிதனும் இரண்டு விருட்சங்களும்

வேதத்தின் அறுபத்தாறு புத்தகங்கள்மூலம், தேவனுடைய நித்தியத் திட்டமாகிய அவருடைய பொருளாட்சி நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. வேதத்தின் ஆரம்பத்திலேயே தேவன் தம்மை வெளியாக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே மனிதனைச் சிருஷ்டிப்பதைப் பார்க்கிறோம். மனிதனே முழுச் சிருஷ்டிப்பின் மையம். தேவனுடைய பிரபஞ்சத்தின் மையமாக மனிதன் தேவனையே வெளியாக்கவேண்டும் என்று அவர் தம் பொருளாட்சியில் திட்டமிட்டார்.

## இரண்டு விருட்சங்களுக்கிடையே நடுநிலையில் மனிதன்

வேதத்தின் ஆரம்பத்தில் இரண்டு பிருட்சங்கள் காட்டப்படுகின்றன: ஜீவவிருட்சம், நன்மை தீமை அறியத்தக்க அறிவுவிருட்சம் (ஆதி. 2). வேதத்தில், தேவனுடைய திட்டத்தைப் புரிந்துகொள்வதற்கு இந்த இரண்டு விருட்சங்களைப்பற்றியும், அவை எதற்கு அடையாளமாக இருக்கின்றன என்பதைப்பற்றியும் நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். தேவன் மனிதனைச் சிருஷ்டித்து அவனை இந்த இரண்டு விருட்சங்களுக்குமுன்பாக நிறுத்தினார். மனிதனுடைய முழு வாழ்க்கையும், நடையும் இந்த இரண்டு விருட்சங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து சாப்பிடுகிற காரியமாகச் சித்திரிக்கப்படுகிறது. இந்த இரண்டு விருட்சங்களில் புசிப்பதைப்பற்றி சர்வ ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று தேவன் மனிதனுக்கு அறிவுறுத்தினார்; மனிதன் அவைகளுடன் சரியான முறையில் நடந்துகொள்ண்டால், அவனுக்கு ஜீவன் கிடைக்கும்; இல்லையென்றால் அவனுக்கு மரணம் கிடைக்கும். ஜீவனா? மரணமா? இதுவே காரியம். சிருஷ்டிக்கப்பட்டபின் மனிதன் எப்படி வாழவான், எப்படி நடப்பான் என்பது அவன் இந்த இரண்டு விருட்சங்களுடன் எப்படி நடந்துகொள்வான் என்பதையே முற்றிலும் சார்ந்திருந்தது. தேவன் மனிதனுக்குத் தெளிவாக அறிவுறுத்தினார்: அவன் இரண்டாவது விருட்சமாகிய நன்மை தீமை அறியத்தக்க அறிவுவிருட்சத்தின் கனியைப் புசித்தால், அவனுக்கு மரணம் கிடைக்கும், ஆனால் முதலாவது மரமாகிய ஜீவவிருட்சத்தின் கனியைப் புசித்தால், அவனுக்கு ஜீவன் கிடைக்கும்.

இந்த இரண்டு விருட்சங்கள் எதைக் குறிக்கின்றன? முழு

வேதாகமத்தின் வெளிப்பாட்டின்படி, ஜீவவிருட்சம், நம் ஜீவனாகக் கிறிஸ்துவிலுள்ள தேவனைக் குறிக்கிறது. ஜீவவிருட்சம் கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய ஜீவனுக்கு அடையாளமாக நிற்கிறது. பழைய, புதிய ஏற்பாடுகள் பல இடங்களில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஒரு "விருட்சமாகவோ" அல்லது ஒரு மரத்தின் "கிளையாகவோ" காட்டுகின்றன. ஏசாயா, எரேமியா, சகரியா புத்தகங்களில் கர்த்தருக்குக் "கிளை" என்ற பட்டப்பெயர் உண்டு. கிறிஸ்துவே நம் பங்கு, நம் இன்பம், என்று சுட்டிக்காட்டுவற்கு விசேஷமான பல விருட்சங்களும்கூட வேதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக உன்னதப்பாட்டின் இரண்டாம் அதிகாரத்தில் கர்த்தராகிய இயேசு கிச்சிலி மரத்திற்கு ஒப்பிடப்படுகிறார். "காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலி மரம் எப்படியிருக்கிறதோ அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார். அதின் (கிச்சிலி மரத்தின்) நிழலிலே வாஞ்சையாய் உட்கார்ந்தேன் (வசனம் 3). நிழலில் உட்காருவதுபோல நாம் அவரின்கீழ், அதாவது அவருடைய மறைவின்கீழும், நிழலின்கீழும் உட்கார்ந்து அந்த மரத்தின் கனியாகிய சகல ஐசுவரியங்களையும் அனுபவித்துமகழலாம். கிறிஸ்துவை மரமாகக் காட்டுகிற இன்னொரு எடுத்துக்காட்டு யோவான் 15-இலுள்ள திராட்சைச் செடி! "நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்" (யோவான் 15:5).

இரண்டாவது விருட்சமாகிய நன்மை தீமை அறியத்தக்க அறிவுவிருட்சம் எதைக் குறிக்கிறது? இந்த விருட்சம் மரணத்தின் ஊற்றாகிய சாத்தானைத்தவிர வேறொன்றையும் குறிக்கவில்லை. இரண்டாவது விருட்சம் மரணத்தின் ஊற்றாக இருப்பதால் மரணத்தைக் கொண்டுவருகிறது. முதல் விருட்சம் ஜீவனின் ஊற்று; இரண்டாவது விருட்சமோ மரணத்தின் ஊற்று. முழுப் பிரபஞ்சத்திலும் தேவன் மட்டுமே ஜீவனின் ஊற்று, சாத்தான் மட்டுமே மரணத்தின் ஊற்று. தேவன்தாமே ஜீவனின் ஊற்றாக இருக்கிறார் என்பதைக் காண்பிக்கிற ஒரு வசனம் சங்கீதம் 36:9: "ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது." சாத்தான்தான் மரணத்தின் ஊற்று என்று காண்பிக்கிற ஒரு வசனம் எபிரேயர் 2:14: "...மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசு." மரணத்தின் வல்லமை பிசாசின் கையில் இருக்கிறது. இவ்வாறு தொன்றுதொட்டு இந்த இரண்டு விருட்சங்களுமே இரண்டு ஊற்றுகளை உருவகப்படுத்திக் காட்டுகின்றன. ஒன்று ஜீவனின் ஊற்று; மற்றொன்று மரணத்தின் ஊற்று.

ஆதியில் மூன்று சாரார் இருந்தனர் - தேவன், மனிதன், சாத்தான். தேவனால் மாசற்றவனாக சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் ஜீவனையும் மரணத்தையும் பொறுத்தவரை நடுநிலையில்

இருந்தான். ஜீவனையோ அல்லது மரணத்தையோ பெறுவது மனிதனுக்குச் சாத்தியமாக இருந்ததால், அவன் நடுநிலையான இடத்தில் நின்றுகொண்டிருந்தான்: தேவன் ஜீவன் என்னும் இடத்தில் நின்றுகொண்டிருந்தார்; சாத்தான் மரணம் என்னும் இடத்தில் நின்றுகொண்டிருந்தான். தேவனையும் சாத்தானையும் பொறுத்தவரை மனிதன் நடுநிலையானவனாக சிருஷ்டிக்கப்பட்டான். இந்த நடுநிலையான, மாசற்ற மனிதன் தேவனைத் தன்னுள்ளே எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதும், இப்படி தேவனும் மனிதனும், மனிதனும் தேவனும் கலந்திணைந்துவிடவேண்டும் என்பதுமே தேவனுடைய நோக்கமாக இருந்தது. அப்போது மனிதன் தேவனைத் தன் ஜீவனாகக்கொண்டு, தேவனையே எல்லாமுமாக வெளியாக்குவான். முழுப் பிரபஞ்சத்தின் மையமாகச் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் அப்போது தேவனை முழுமையாக வெளியாக்குகிற நோக்கத்தை நிறைவேற்றுவான். இருந்தபோதும் மரணத்தின் ஊற்றாகிய இரண்டாம் விருட்சத்தை எடுக்குமாறு மனிதன் தூண்டப்படக்கூடிய வேறொரு சாத்தியக்கூறும் இருந்தது. அதன் விளைவாக மனிதன் இரண்டாம் விருட்சத்துடன் கலந்திணைந்துவிடுவான். ஆ! முழுப் பிரபஞ்சத்திலும் இது அறநெறிகளையும் நன்மைசெய்வதையும்பற்றிய காரியமன்று, மாறாக இது தேவனை ஜீவனாகவோ அல்லது சாத்தானை மரணமாகவோ பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு காரியம். இதைக் காண நம் கண்கள் திறக்கப்படுவதாக! நாம் நீதிநெறிகள் மற்றும் ஒழுக்கம்பற்றிய புத்தியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். இது நன்மையோ அல்லது தீமையோ செய்யக்கூடிய ஒரு காரியமன்று. மாறாக தேவனை ஜீவனாகவோ அல்லது சாத்தானை மரணமாகவோ பெற்றுக்கொள்ளக்கூடிய காரியம். இந்த மூன்று சாராரையும் நாம் தெளிவாகப் பார்க்கவேண்டியது முக்கியம். ஒருபக்கம் நிற்கிற தேவன், ஜீவவிருட்சம் உருவகப்படுத்துகிற ஜீவனின் ஊற்றாக இருக்கிறார். இன்னொரு பக்கம் நிற்கிற சாத்தான், அறிவுவிருட்சம் உருவகப்படுத்துகிற மரணத்தின் ஊற்றாக இருக்கிறான். நடுவில் நிற்கிற ஆதாம் பெற்றுக்கொள்வதற்கான இரண்டு கைகளுடன் நடுநிலையில் இருக்கிறான். வலப்புறத்தில் இருக்கும் தேவனையோ, அல்லது இடப்புறத்தில் இருக்கும் சாத்தானையோ அவன் எடுத்துக்கொள்ளலாம்.

## மனிதன் மரணவிருட்சத்தினால் கெடுக்கப்படுதல்

ஆனால் அறிவுவிருட்சமாகிய இரண்டாவது ஊற்றைத் தன்னுள் எடுத்துக்கொள்வதற்கு ஆதாம் தூண்டப்பட்டான் என்று நமக்குத் தெரியும். இது வெறுமனே தவறான ஒரு காரியத்தைச் செய்கிற

விஷயமன்று. இது தேவனுடைய சட்டங்களையும், கட்டளைகளையும் மீறுவதைவிட அதிகக் கடுமையானது. அறிவுவிருட்சத்தின் கனியை ஆதாம் சாப்பிட்டதின் உட்கருத்து என்னவென்றால், அவன் சாத்தானையே தன்னுள் எடுத்துக்கொண்டான். ஆதாம் அந்த விருட்சத்தின் கிளையைச் சாப்பிடவில்லை. அந்த விருட்சத்தின் கனியைச் சாப்பிட்டான். கனியிலே இனவிருத்திச்செய்யக்கூடிய உயிரின் வல்லமை அடங்கியிருக்கிறது. எடுத்துக்காட்டாக ஒரு மாங்கனியை நிலத்தில் நட்டால், சீக்கிரமாக வேறொரு சிறிய மாங்கன்று முளைத்துவரும். ஆதாம்தான் "நிலம்." ஆதாம் நிலத்தைப்போல அறிவுவிருட்சத்தின் கனியைப் புசித்துத் தன்னுள் எடுத்துக்கொண்டபோது, அவன் சாத்தானையே எடுத்துக்கொண்டான். பின்பு சாத்தான் அவனில் வளர ஆரம்பித்தான். ஆ, இது ஓர் அற்ப காரியமன்று! அநேகக் கிறிஸ்தவர்கள் ஆதாமின் வீழ்ச்சியை இந்த வகையில் இன்னும் உணர்ந்துகொள்ளவில்லை. விதையை நிலத்தில் விதைப்பதைப் போல சாத்தானின் கனி ஆதாமில் விதைக்கப்பட்டது. இவ்வாறு சாத்தான் ஆதாமில் வளர்ந்து அவனுடைய ஒரு பகுதியாகவே மாறிவிட்டான்.

ஆதாமின் எந்தப் பகுதிக்குள் சாத்தான் எடுத்துக்கொள்ளப் பட்டான் என்று நாம் இப்போது கண்டுபிடிக்கவேண்டும். ஆதாம் தோட்டத்தில் வீழ்ந்தபோது, சாத்தான் ஆதாமுக்குள் வந்தது மட்டுமல்ல, அவன் மனித இனத்தில் இன்னும் தொடர்ந்து தங்கியிருக்கிறான். அவன் இருப்பிடம் மனித இனத்தில் எங்கே இருக்கிறது? முந்தைய அதிகாரங்களில் பார்த்ததுபோல, நாம் ஆவி, ஆத்துமா, சரீரம் உடைய முப்பகுதி மனிதர்கள். படத்தை உற்றுக்கவனியுங்கள். ஆதாம் விருட்சத்தின் கனியைச் சாப்பிட்டபோது, அவனுடைய ஆள்தத்துவத்தின் எந்தப் பகுதிக்குள் அது வந்தது? நிச்சயமாக அவனுடைய சரீரத்துக்குள்தான் அது வந்தது. ஏனென்றால் அவன் அதைச் சாப்பிட்டான். இது பகுத்தறிவுக்குப் பொறுத்தமானதாகவும், நியாயமானதாகவும் இருந்தாலும், சாத்தானுக்குரிய ஏதோவொன்று சரீரத்தில் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்த நமக்கு வேத ஆதாரம் தேவை. ரோமர் 7:23-ஐ வாசியுங்கள், "...ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாகப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்..." "இன்னொரு" என்ற வார்த்தை நல்ல மொழியாக்கம் அல்ல. இது வேறொரு பிரமாணம். அதாவது "வேறு வகையான ஒரு பிரமாணம்" என்றுதான் இருக்கவேண்டும். ஒரே வகையான மூன்று பிரமாணங்கள் உங்களிடத்தில் இருக்கலாம். எடுத்துக்காட்டாக, முதலாவது பிரமாணம் மற்றும் "இன்னும்" இரண்டு

பிரமாணங்கள். ஆனால் இங்கே வரும் கிரேக்க பதத்தின் பொருள் முற்றிலும் மாறுபட்ட வகையான ஒரு பிரமாணம் என்பதே. "ஆகிலும் ஒரு மாறுபட்ட பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன் (அவயவங்கள் சரீரத்தின் பாகங்கள்). என் மனத்தின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற அது, என் அவயவங்களில், அதாவது சரீரத்தின் அவயவங்களில் இருக்கிற பாவப்பிரமாணத்திற்கு என்னை சிறையாக்கிக்கொள்கிறது."

பாவப்பிரமாணம் என்றால் என்ன? "...நான் அல்ல, எனக்குள்ளே வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது" (ரோமர் 7:20) என்றும், "...இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்" (கலா. 2:20) என்றும் பவுல் சொன்னார். இங்கே, "இனி நான் அல்ல, பாவமே," என்பதற்கும் "இனி நான் அல்ல, கிறிஸ்துவே," என்பதற்கும் இடையே உள்ள மாறுபட்ட தன்மையைப் பார்க்கிறோம். கிறிஸ்து தேவனுடைய ஊனுரு. ஆனால் பாவம் சாத்தானுடைய ஊனுரு. ரோமர் 7-ல் உள்ள "பாவம்" என்ற வார்த்தை ஆங்கிலத்தில் பெரிய எழுத்தில் இருக்கவேண்டும். ஏனெனில் அது ஓர் ஆளாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அது ஒரு நபரைப்போன்றது. ஏனெனில் பாவம் நம்மில் வாசம்பண்ணி நம் விருப்பத்திற்கு விரோதமாகக் காரியங்களைச் செய்வதற்கு நம்மைப் பலவந்தப்படுத்தமுடியும் (ரோமர் 7:17, 20). அது நம்மைவிட பலமுள்ளதாக இருக்கிறது. "பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என்று ரோமர் 6:14 கூறுகிறது. "பாவம் உங்கள்மேல் ஆட்சியுரிமைகொண்டிருக்காது" என்றோ, "பாவம் உங்களுக்கு ஆண்டவனாக இருக்காது," என்றோ மொழிபெயர்த்தால் சிறப்பாக இருக்கும். ஏனென்றால் பாவம் நமக்கு ஆண்டவனாக இருக்கமுடியும். ஆகவே பாவம் சாத்தானாகிய பொல்லாங்கனாகத்தானிருக்கவேண்டும். வீழ்ச்சியின்மூலம், சாத்தான் மனிதனுக்குள் பாவமாக நுழைந்தான், அவனை ஆண்டுகொண்டிருக்கிறான், சேதப்படுத்திக் கொண்டிருக்கிறான், கெடுத்துக்கொண்டிருக்கிறான், அடக்கி ஆளுகைசெய்துகொண்டிருக்கிறான். எந்தப் பகுதியில்? சாத்தான் மனிதனுடைய சரீர அவயவங்களில் இருக்கிறான்.

ஆதியில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபோது மனிதனுடைய சரீரம் மிக நன்றாகவே இருந்தது. ஆகிலும் அது இப்போது மாம்சமாக மாறிவிட்டது. சரீரம் நல்லதாகவே சிருஷ்டிக்கப் பட்டதால், அது பரிசுத்தமாக இருந்தது. ஆனால் சரீரம் சாத்தானால் கெடுக்கப்பட்டபோது அது மாம்சமாக மாறினது. "...என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று

நான் அறிந்திருக்கிறேன்," என்று (ரோமர் 7:18) பவுல் சொன்னார். வீழ்ச்சியின்மூலம் சாத்தான் நம் சரீரத்தல் வாசம்பண்ணுமாறு நுழைந்து, நம் சரீரத்தை மாம்சமாக, அதாவது சேதப்படுத்தப்பட்ட, பாழ்படுத்தப்பட்ட சரீரமாக, ஆக்கிவிட்டான்.

"பாவசரீரம்" (6:6) மற்றும் "மரணசரீரம்" (7:24) என்ற இரண்டு சொற்களை ரோமர் புத்தகம் பயன்படுத்துகிறது. சரீரம் "பாவசரீரம்" என்று அழைக்கப்படுகிறது. ஏனென்றால் பாவம் சரீரத்தில் இருக்கிறது. சரீரம் சாத்தான் ஊனுருவாகிய பாவத்தின் உறைவிடாக மாறிவிட்டது. அப்படியானால் "மரணசரீரம்" என்றால் என்ன? சாத்தானே மரணத்தின் ஊற்றாகவும், மரணத்தின் அதிகாரியாகவும் இருக்கிறான். பாவம் சாத்தானின் ஊனுரு. மரணம் சாத்தானின் வெளிப்போக்கு அல்லது விளைவு. கெடுக்கப்பட்ட, நிலையும் தரமும் மாற்றப்பட்ட இந்த சரீரம் "பாவசரீரம்" என்றும், "மரணசரீரம்" என்றும் அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இந்த சரீரம் சாத்தானின் குடியிருப்பாகவே மாறிவிட்டது. பாவம், மரணம் ஆகிய இரண்டும் சாத்தானுடன் தொடர்புடையவை. சரீரம் பாவத்தால் நிறைந்து, கெடுக்கப்பட்டு, பாவத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் "பாவசரீரம்" குறிக்கிறது. சரீரம் பலவீனப்படுத்தப்பட்டதும், மரணத்தால் நிறைந்ததுமாக இருக்கிறது என்பதை "மரணசரீரம்" குறிக்கிறது. சரீரம் ஒருவகையில் சாத்தானுக்கடுத்ததும், பேய்த்தனத்துக் குரியதுமாக இருக்கிறது. ஏனென்றால் சாத்தான் சரீரத்தில் வாசம்பண்ணுகிறான். எல்லா இச்சைகளும் மாம்சம் என்றழைக்கப்படும் இந்தக் கெடுக்கப்பட்ட சரீரத்தில்தான் இருக்கின்றன. இச்சையை "மாம்சத்தின் இச்சை" (கலா. 5:16) என்றே வேதம் வெளிப்படுத்துகிறது. இச்சைகள் நிறைந்த, சாத்தான் வாசம்பண்ணுகிற, கெடுக்கப்பட்ட சரீரம்தான் மாம்சம். இப்போது பாருங்கள்! மனிதனுடைய வீழ்ச்சி என்பது மனிதன் தேவனுக்கு விரோதமாக ஏதோ ஒரு குற்றத்தைச் செய்தான் என்பது மட்டுமலல. மாறாக மனிதன் சாத்தானையே தன் சரீரத்துக்குள் எடுத்துக்கொண்டான். மனிதன் விழுந்ததுமுதல் சாத்தான் மனிதனில் வாசம்பண்ணுகிறான். மனிதன் இரண்டாவது விருட்சத்தின் கனியைப் புசித்தபோது நடந்தது இதுவே.

இரண்டாவது விருட்சத்தின்மூலம், சாத்தானும் மனிதனும் ஒன்றாகிவிட்டதால், சாத்தான் இப்போது மனிதனுக்கு வெளியே இல்லை. மாறாக மனிதனுக்குள் இருக்கிறான். ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தான்தானே கீழ்ப்படியாமையின் பிள்ளைகளி டத்தில் கிரியைசெய்துகொண்டிருக்கிறான் (எபே. 2:2). மனிதனைத் தன்கீழ் கொண்டுவருவதில் வெற்றிபெற்றுவிட்டதாகச் சாத்தான் தற்பெருமை பாராட்டு, மகிழ்ச்சியாக இருந்தான், ஆனால் இன்னும்

மனிதனுக்கு வெளியேயிருந்த தேவன், "நானும்கூட மனுருவெடுப்பேன். சாத்தான் தன்னை மனிதனுக்குள் பிணைத்து உருவாக்கமுடியுமானால், நானும் மனிதனுக்குள் நுழைந்து, மனிதனை என்மேல் தரித்துக்கொள்வேன்," என்று சொல்வதுபோல் தோன்றியது. இந்தச் சிக்கலான சூழ்நிலையை நீங்கள் பார்க்கிறீர்களா? தேவன் மனிதனாக மனுவுருவானதின்மூலம் சாத்தனை உள்ளே வைத்திருக்கும் மனிதனைத் தம்மேல் தரித்துக்கொண்டார். தேவன் மனிதனாக மனுவுருவெடுத்தபோது, அவர் சாத்தானால் கெடுக்கப்பட்ட மனிதனையே தம்மேல் தரித்துக்கொண்டார். அவர் மனிதனாக மனுவுருவெடுத்த நேரத்தில் மனிதன் பரிசுத்தமான மனிதன் அல்ல, மாறாக சாத்தானால் பாழ்படுத்தப்பட்ட, கெடுக்கப்பட்ட மனிதன். ரோமர் *8:3*-ஐ நாம் வாசிப்போம்: "தேவன் தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் *சாயலாக*...அனுப்பினார்." பாவம் நிறைந்த மாம்சமல்ல, பாவமாம்சம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துதாமே மாம்சத்தில் மனுவுருவெடுத்தபோது, அவர் "பாவமாம்சத்தின் *சாயலில்*" இருந்தார். அவருக்குள் எந்தப் பாவமும் இல்லை. ஆனால், "பாவமாம்சத்தின் *சாயல்*" இருந்தது. கெடுக்கப்பட்ட மனிதனுக்கள் பாவம் இருந்தது. ஆனால் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் ஒரு பாவமும் இருந்ததில்லை. "பாவமாம்சத்தின் *சாயல்*" மாத்திரமே இருந்தது. கம்பத்தில்மேல் உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தின் மாதிரியின்மூலம், பழைய ஏற்பாடு இதை விளக்கிக்காட்டுகிறது. வெண்கல சர்ப்பம் கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் (யோவான் *3:14*). கிறிஸ்து சிலுவையில் தொங்கியபோது அவர் "சர்ப்பத்தின் *சாயலில்*" இருந்த ஒரு மனிதர். சர்ப்பம் என்பது சாத்தான், சத்துரு, தேவனுடைய எதிரி. ஆனால் கிறிஸ்து மனதனாக மனுவுருவெடுத்தபோது, சாத்தானின் *சாயலாகிய* பாவமாம்சத்தின் சாயலைக்கூடக் கொண்டிருந்தார். இதை அவ்வளவு சுலபமாகப் புரிந்துகொள்வது யாருக்குமே கடினம்தான். இது உண்மையிலேயே மிகச் சிக்கலானது. நான் மீண்டும் சொல்கிறேன்: மனிதன் பரிசுத்தமாகச் சிருஷ்டிக்கப் பட்டான். ஆனால் அவனை ஆக்கிரமித்துக்கொள்வதற்காக, சாத்தான் அவனுக்குள் புகுந்தான். மனிதனைத் தன் அதிகாரத்தின் கீழ கொண்டுவந்து வெற்றிபெற்றுவிட்டதாக நினைத்து சாத்தான் மகிழ்ச்சியாக இருந்தான். அப்போது சாத்தானைத் தன்னுள் வைத்திருந்த மனிதனைத் தேவன் தம்மேல் தரித்துக்கொண்டார்.

## மனிதன் மரணவிருட்சத்திலிருந்து விடுதலையாக்கப்படுதல்

தேவன் மனிதனானபின், அதாவது சாத்தானை உள்ளே கொண்டிருந்த மனிதனைத் தம்மேல் தரித்துக்கொண்டபின், அவர்

அந்த மனிதனைச் சிலுவைக்குக் கொண்டுவந்தார். சாத்தான் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணினான். ஆனால் அவன் செய்கையின்மூலம் அவனைக் கொலைசெய்யும்படிக்கு, அவன் கர்த்தருக்கு ஒரு சுலபமான வழியை உண்டாக்கிவிட்டான். எடுத்துக்காட்டாக, ஓர் எலி ஒரு வீட்டில் கட்டுக்கடங்காமல் ஓடுகிறதென்றால், அதைப் பிடிப்பது வீட்டுச் சொந்தக்காரருக்குச் சற்றுச் சிரமம். ஆனால் அவர் ஒரு சின்ன இரையை மாட்டி ஒரு பொறியை வைத்தால், இரையைக் கடிப்பதற்கு அழ எலியைக் கவர்ந்திழுக்கும். இரையைப் பெறுவதில் தான் வெற்றி பெற்றுவிட்டதாக எலி முதலில் நினைக்கும், ஆனால் தான் பொறியில் சிக்கிவிட்டதை உணர அதிக நேரம் ஆகும். அது இப்போது பொறியில் சிக்கியிருப்பதால் வீட்டுச் சொந்தக்காரர் வந்து அதைச் சாகடிப்பது மிக எளிது. அதுபோல சாத்தானைப் பிடிக்க ஆதாம் ஒரு பொறியாக மாறினான். சாத்தான்தான் இப்பிரபஞ்சத்திலே கட்டுக்கடங்காமல் ஓடிக்கெண்டிருந்த "குறும்புக்கார" எலி. சாத்தான் மனிதனை ஆக்கிரமிக்க வந்தபோது தான் மாபெரும் வெற்றிபெற்றுவிட்டதாக எண்ணினான். ஆனால் தான் பொறியிலே சிக்கியதை உணரவில்லை. மனிதன் தன் வீடு என்று சாத்தான் எண்ணினான். அனால் மனிதன் ஒரு பொறி என்று அவன் அறியவில்லை. மனின் தன் உணவு என்று சாத்தான் நினைத்தான். ஆனால் மனிதன் வெறும் இரை மட்டுமே. மனிதனை ஆட்கொண்டதால் அவன் மனிதனுக்குள் பிடிபட்டான், சிறைப்படுத்தப்பட்டான். அதையடுத்து கர்த்தர் வந்து, மனிதனைத் தம்மேல் தரித்துக்கொண்டு, அவனைச் சிலுவைக்குக் கொண்டுசென்று அதன்மூலம் "மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினால் அழித்தார்" (எபி. 2:14). மனிதன் ஒரு பொறி. பிசாசு மனிதனுக்குள் சிக்கிக்கொண்டான். தேவன் மனிதமாம்சமானதின்மூலம், கெட்டுப்போன மனிதனைத் தம்மேல் தரித்துக்கொண்டு, இந்த மனிதனைச் சிலவையில் கொன்றார். அதே நேரததில், விழுந்துபோன இந்த மனிதனுக்கள் இருந்த சாத்தானும்கூடச் சாகடிக்கப்பட்டான். இவ்வாறு சிலுவை மரணத்தினால் கிறிஸ்து பிசாசை அழித்தார். இதனால்தான், சாத்தான ்சிலுவைக்குப் பயப்படுகிறான். மேலும் இதனால்தான் நாமும் சிலுவையை எடுக்கவேண்டும் என்று கர்த்தர் சொன்னார். சாத்தானை மேற்கொள்ள நமக்கிருக்கும் ஒரே ஆயுதம் சிலுவைதான்.

சாத்தான் எங்கே இருக்கிறான்? சாத்தான் என்னில் - என் மாம்சத்தில் - இருக்கிறான். ஆனால் என் மாம்சம் இப்போது எங்கே இருக்கிறது? கலாத்தியர் 5:24-ஐப் பாருங்கள்: "தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்." சாத்தான் இருக்கும் என் மாம்சம்

சிலுவையில் இருக்கிறது. இவ்வாறு சாத்தான் சிலுவையில் சாகடிக்கப்படுகிறான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஆனால் இதுதான் முடிவா? இல்லை. மரணத்தைத் தொடர்ந்து அடக்கம் வருகிறது. ஆனால் கல்லறையும்கூட மடிவன்று! அடக்கத்திற்குப்பின் உயிர்த்தெழுதல் உண்டு. இஸ்ரவேல் மக்கள், பார்வோனோடும், அவனுடைய சேனைகளோடும், சிவந்த சமுத்திரத்துக்குள் சென்றார்கள். ஆனால் பார்வோனும், அவனுடைய சேனைகளும் இல்லாமல் மரணத்தண்ணீரிலிருந்து அவர்கள் உயிரோடு எழுப்பப்பட்டார்கள். பார்வோனும் அவனுடைய சேனைகளும் மரணத்திதண்ணீரில் அடக்கப்பண்ணப்பட்டார்கள். கிறிஸ்து சாத்தானோடுகூட மனிதனை மரணத்துக்கும், கல்லறைக்கும் கொண்டுசென்றார். ஆனால் மரணத்தையும், கல்லறையையும்விட்டு வெளியே வந்தபோது சாத்தான் இல்லாமல் மனிதனை மட்டுமே வெளியே கொண்டுவந்தார். அவர், சாத்தானைக் கல்லறையில் அடக்கம்பண்ணிவிட்டார். இப்போது, உயிரோடு எழுப்பப்பட்ட இந்த மனிதன் கிறிஸ்துவுடன் ஒன்றாக இருக்கிறான்.

## மனிதன் ஜீவவிருட்சத்தினால் உயிரோடெழுப்பப்படுதல்

நீங்கள் எப்போது மறுபடிஜெநிப்பிக்கப்பட்டீர்கள் என்று நான் உங்களைக் கேட்கட்டுமா? 1958-லா? இல்லை! நீங்கள், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலல் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டீர்கள் (1 பேதுரு 1:4). கிறிஸ்து உயிர்த்தெழுத்நபோது, அவரில் விசுவாசம் கொண்டுள்ள நாமும் அவரோடுகூட உயிரோடு எழுப்பப்பட்டோம். எபேசியர் 2:5 இதை நிரூபிக்கிறது. தேவன் "நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்...நம்மை அவரோடுகூட எழுப்பினார்." கிறிஸ்து உயிர்த்தெழுந்த சமயத்தில், அவரோடுகூட நாமும் உயிரோடு எழுப்பப்பட்டோம். ஆ, இது நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும்! சாத்தான் மனிதனுக்குள் வந்தபோது, மனிதன் சாத்தானால் பாழப்டுத்தப்பட்டான். ஆனால் தேவன் மனிதமாம்சமானதால், சாத்தானை உள்ளே வைத்திருந்த இந்த மனிதனை அவர் தம்மேல் தரித்துக்கொண்டார்; இந்த மனிதனை சிலுவைக்குக் கொண்டுசென்றார்; சாத்தானோடு சேர்த்து இந்த மனிதனைச் சாகடித்தார்; இந்த மனிதனைக் கல்லறையிலே அடக்கம்செய்தார். பின்பு அவர் மனிதனை உயிரோடு எழுப்பினார். இந்த உயிர்த்தெழுதலின்மூலம் மனிதன் தேவனுடன் ஒன்றாகிவிட்டான். மனிதமாம்சமாகுதல்மூலம், தேவன் மனிதனுக்குள் வந்தார். உயிர்த்தெழுதல்மூலம், மனிதன் தேவனுடன் ஒன்றாகிவிட்டான். இப்போது தேவன் மனிதனுடைய ஆவியில் இருக்கிறார்.

நாம் மனிழ்ச்சியாயிருக்கவேண்டும். ஆனால் அளவுக்குமீறி

மகிழ்ச்சியாயிருக்கக்கூடாது. ஏன்? ஏனென்றால் நாம் சிலுவையை அனுதினமும், எப்போதும் சுமக்கவேண்டும். நம் மாம்சம் சிலுவையைவிட்டுத் தூரமாக இருக்கும்போதெல்லாம் சாத்தான் மறுபடியும் பிழைத்திருக்கிறான் என்பதை நாம் காண்போம். நாம், "அல்லேலூயா" சொல்லவேண்டும். ஏனென்றால் கர்த்தராகிய இயேசு நம் ஆவியில் இருக்கிறார்; ஆனால் நாம் விழிப்பாகவும் இருக்கவேண். ஏனென்றால் நாம் இன்றும் மாம்சத்தில்தான் இருக்கிறோம். மாம்சம் சிலுவையிலிருந்து இறங்குகிறபோது, பிசாசு மீண்டும் உயிர்பெற்றுவிடுவான். இதனால்தான் நாம் எல்லா நேரமும் அவியில் வாழவேண்டும். மேலும் மாம்சத்தின்மேல் சிலுவையைப் பிரயோகிக்கவேண்டும். மனிதனுடைய வீழ்ச்சியினால் சாத்தான் அவனுக்குள் நுழைந்தபோதும், கர்த்தர் சாத்தானோடு இடைப்பட்டிருக்கிறார். இப்போது உயிர்த்தெழுதல் மூலம் கர்த்தர் நமக்குள் இருக்கிறார். இதுமுதல் நம் பொறுப்பும், வேலையும் ஏதாவது நன்மையானதைச் செய்ய முயற்சிசெய்வ தல்ல. நன்ம நம்மை வஞ்சிக்கவும், குருடாக்கவுமே செய்யும். நாம் செய்யவேண்டியதெல்லாம் கர்த்தரை ஆவியிலே பின்பற்றி, சிலுவையை மாம்சத்தின்மேல் செலுத்தவேண்டியதுதான். இது எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றித் தானாகவே சாத்தானைச் சாகடித்துவிடும். இருரண்டு அம்சங்களையுடைய இந்த ஒரு காரியத்தை மட்டும் பயிற்சிசெய்யக் கற்றுக்கொள்ளுங்கள்: ஒன்று கர்த்தரை ஆவியில் பின்பற்றுங்கள், இரண்டு சாத்தானையுடைய உங்கள் மாம்சத்தைச் சிலுஐவயில் சாகடியுங்கள்.

இறுதி விளைவு என்ன? இதுதான் - ஒருபக்கம் புதிய எருசலேம், மறுபக்கம் அக்கினிக் கடல மூவொரு தேவன் உயிரோடு எழுப்பப்பட்ட மனிதனுடன் கலந்திணைந்ததுதான் புதிய எருசலேம். சாத்தானின் இறுதி அழிவுதான் அக்கினிக் கடல். அக்கினிக் கடல் சாத்தானுடைய இடம். மூவொரு தேவனுடனும்,உயிரோடு எழுப்பப்பட்ட மனிதனுடனும் தொடர்பில்லாத அனைத்துமே, சாத்தானுடன்கூட அக்கினிக் கடலுக்குள் போடப்படும். புதிய எருசலேமில், ஜீவவிருட்சம் என்ற ஒரேவொரு விருட்சம்தான் இருக்கும். வேறொரு விருட்சம் அக்கினிக் கடலில் இருக்கும். இதுவே முழு வேதாகமத்தின் இறுதி முடிவாகும். வேதம் மூன்று சாராருடன் ஆரம்பித்தது. ஆனால் இறுதி நிறைவேற்றம் புதிய எருசலேம். ஜீவவிருட்சம் மட்டும் இந்தப் புதிய எருசலேமின் மையத்தில் இருக்கும்; அங்கு உயிரோடு எழுப்பப்பட்ட மனிதன் மூவொரு தேவனின் வெளியாக்கமாக இருப்பான். இரண்டாவது விருட்சம் அக்கினிக் கடலுக்குள் எறியப்படும். இரண்டாவது விருட்சத்துடன் தொடர்புடைய சகல காரியங்களும், சகல மக்களும் சாத்தான்

போய்ச்சேரும் அதே இடத்துக்கு, அதாவது அக்கினிக் கடலுக்கு, போய்ச்சேருவார்கள்.

முடிவாக, இன்று நமக்கு இந்தச் சித்திரத்தின் பொருள் என்ன? நேர்த்தியான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது நன்மை செய்வதில் இல்லை. எளிமையாகச் சொல்வதானால், நேர்த்தியான கிறிஸ்தவ வாழ்க்கை என்பது எல்லா நேரமும் கிறிஸ்துவை எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவால் பிழைத்து, சாத்தானோடுகூடிய மாம்சத்தைச் சாகடிப்பதுதான். இது, கிறிஸ்துவை நம் ஆவியில் பின்பற்றுவதும், மாம்சத்தைச் சாகடிப்பதுமாகும். அப்போது மூவொரு தேவனும், உயிர்த்தெழுந்த மனிதனும் ஒரே வெளியாக்கமாக, ஜீவிருட்சத்தை மையத்தில்கொண்ட புதிய எருசலேமாக இருக்கும் நாள் வரும்!

# அத்தியாயம் பதின்மூன்று

# சிலுவையும் ஆத்தும வாழ்வும்

இந்த அதிகாரங்கள் தேவனுடைய பொருளாட்சியைப்பற்றியும் அதின் குறியைப்பற்றியும் பேசுகின்றன. நாம் இங்கே முக்கியமில்லாத சில போதனைகளை அல்ல, மாறாக தேவனுடைய பொருளாட்சியின் அடிப்படைக் காரியங்களையே பேசிக்கொண்டிருக்கிறோம் - அதுவும் வெறுமனே உபதேசரீதியில் அல்ல, மாறாக *அனுபவரீதியில்*. தேவன் தம் பொருளாட்சியில் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிக்கத் ததிட்டமிட்டுள்ளார். மனித ஆவியில் இதை ஏற்கெனவே செய்துமுடித்துள்ளார். மூவொரு தேவன் நமக்குள்ளே பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறார். இந்தக் குறிக்கோளுக்காகவே தேவன் நம்மை சரீரம், ஆத்துமா, ஆவி என்ற மூன்று பகுதிகளையுடையவர்களாகச் சிருஷ்டித்தார்: இந்த முப்பகுதி மனிதன் தேவனுடைய ஆலயம். தேவனுடைய ஆலயம் மூன்று பகுதிகளைக் கொண்டது: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், தேவனுடைய ஷெக்கினா மகிமையும் தேவனுடைய கிறிஸ்துவும் வாசம்பண்ணுகிற இடமாகிய மகா பரிசுத்த ஸ்தலம். நம் ஆள்தத்துவத்தின் மூன்று பகுதிகளும், தேவாலயத்தின மூன்று பகுதிகளுடன் துல்லியமாக ஒத்திருக்கின்றன - சரீரம் வெளிப் பிரகாரத்துக்கும், ஆத்துமா பரிசுத்த ஸ்தலத்துக்கும், ஆவி மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஒத்திருக்கின்றன. இன்று கிறிஸ்துவில் தேவன் மகா பரிசுத்த ஸ்தலமாகிய நம் ஆவியில் வாசம்பண்ணிக் கொண்டிருகிறார்.

## மூவொரு தேவன் மனிதனுக்குள் பரவுதல்

தேவன் நம் ஆவியைத் தம் இல்லமாகக் கொண்டு அதற்குள் தம்மையே பகிர்ந்துகொடுப்பதும், நம் முழு ஆள்தத்துவத்துக்கள்ளும் தம்மையே பரவச்செய்வதற்கு நம் ஆவியைத் தம் உறைவிடமாகக் கொள்வதும்தான் தேவனுடைய பொருளாட்சி. நம் ஆவியே அவருடைய வீடு, அவருடைய வாசஸ்தலம், அவருடைய குடியிருப்பு. இந்த இடத்திலிருந்துதான் அவர் தம்மை நம் முழு ஆள்தத்துவத்துக்குள்ளும் பரவச்செய்கிறார தம்மை நம்மூடாகப் பரவச்செய்வதால், அவர் தம்மைக்கொண்டு நம் ஆள்தத்துவத்தின் எல்லாப் பகுதியையும் இடமில்லை என்னும் அளவுக்குப் பூர்த்தியாய் நிரப்புகிறார். முதலாவது அவர் நம் ஆவியுடனும், பின்பு ஆத்துமாவுடனும், கடைசியாக சரீரத்துடனும்

கலந்திணைத்துவிடுகிறார். அவர் நம் ஆவிக்குள் வந்து நம் ஆவியை மறுபடிஜெநிப்பித்து, இந்தக் கலந்திணைதலைத் தொடங்குகிறார். தேவன்தாமே நம் ஆயுடன் கலந்திணைவதுதான் மறுஜெநனம். மறுஜெநனத்திற்குப்பிறகு, நாம் நம்மை அவருக்க ஒப்புக்கொடுத்து, அவருக்கு வாய்ப்புக் கொடுத்து, அவருடன் ஒத்துழைத்தால், நம் ஆத்துமாவின் சகல பகுதிகளையும் புதிதாக்க, அவர் நம் வியிலிருந்து நம் ஆத்துமாவிற்குப் பரவுவார். இதுதான் அவருடைய மறுரூபமாக்கும் செயல். மறுரூபமாக்கப்படுவதின் மூலம் மூவொரு தேவனின் அதே சாரம் நம் ஆத்துமாவுடன், அதாவது நம்முடன், கலந்திணைந்துவிடுகிறது. நம் ஆத்துமா கர்த்தருடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படும்போது நம் நினைவுகளும், நம் ஆசைகளும், நம தீர்மானங்களும் எப்போதும் கர்த்தரையே வெளியாக்கும்.

ஆகையால் தேவனுடைய முதல் படி, நம் ஆவியை மறபடிஜெநிப்பிப்பதே; அவருடைய இரண்டாவது படி, நம் ஆத்துமாவை மறுரூபமாக்குவது; இறுதியாகக் கடைசிப் படி, கர்த்தருடைய இரண்டாவது வருகையின்போது, சரீரத்தை மாற்றம் அல்லது உருமாற்றம்செய்வதாகும். அப்போது கர்த்தர் நம் சரீரத்திலும் ஊடுருவிப் பரவுவார். கர்த்தருடைய மகிமை நம் முழு ஆள்தத்துவத்தையும் இடமில்லாத அளவுக்குப் பூர்த்தியாய் நிரப்பிடுவிடும். தேவன் நம் ஆத்துத்துவத்துடன் முற்றுமுடிய கலந்திணைந்துவிடுகிற இந்த முழுநிறைவேற்றமே உருமாற்றம். அந்த நேரத்தில், தம்மை நமக்குள் பகிர்ந்துகொடுக்கிற தேவனுடைய பொருளாட்சி முழுமையாக நிறைவேறிவிடும். தேவன் தம்மை நம்முடன் கலந்திணைக்கிற இந்த மூன்று படிகளையும் நினைவில்கொள்ளுங்கள். பின்வரும் பாடல் முழுநிறைவேற்றத் வெளியாக்குகிறது.

கிறிஸ்து மகிமை நம்பிக்கை, அவர் என் ஜீவன்,
மீண்டும் ஜெநிப்பித்தென்னைப் பூர்த்தியாய் நிரப்பினார்;
மேலோங்கும் தம் ஆற்றலால் தம் மகிமை தேகம்போல்
என் தேகம் மாமகிமையாக்க வருகிறார்!

வாரும், வாரும், மகிமைப்படுத்திட!
என் தேகத்தை உம் தேகம்போல் உருமாற்றுவீர்.
வாரும், வாரும் மீட்பை நிறைவேற்ற!
மகிமையின் நம்பிக்கையாய், மகிமைப்படுத்தி.

கிறிஸ்து மகிமை நம்பிக்கை, தேவ இரகசியம்;
அவர் பூரணம் பகிர்ந்து, அவரை என்னுள் கொணர்கிறார்.
அவர் மகிமையில் பங்கடைந்து அவருடன்,
என்னை முற்றும் ஒன்றாகப பிணைக்க வாரும்.

கிறிஸ்து மகிமை நம்பிக்கை, பூரண மீட்பு;
மீட்பார் சரீரம், இல்லை மரணம், எனக்கு விடுதலை.
அற்பமான என் தேகம் மகிமையாக்குவார்,
மரணத்தை ஜெயமாய் விழுங்க வாரும்.

கிறிஸ்து மகிமை நம்பிக்கை, என் சரித்திரம்;
என்னோடவர் ஒன்று, அவர் வாழ்வு என் அனுபவம்.
அவரோடென்றும் முற்றும் ஒன்றாக வாழ்ந்திட,
மகிமையின் விடுதலை கொண்டு வாரும்.

## ஆத்துமாவுக்காக சண்டைபோடுகிற இரண்டு சாரார்

நம்மெல்லாருக்கும் அந்தச் சோகக் கதை தெரியும். மகிமையான தேவன் ஆவிக்குள் வருவதற்குமுன்பே தேவனுடைய எதிரியாகிய சாத்தான் முதலாவது நமக்குள் வந்துவிட்டான். ஆதாம் அறிவுவிருட்சத்தின் கனியைச் சாப்பிட்டபோது, அவன்மூலம் பிசாசு மனித சரீரத்துக்குள் வந்தான். அதன் விளைவாக பாவம் ஓர் ஆளைப்போல நம் சரீரத்தின் அவயவங்களில் வாசம்பண்ணிக்கொண்டிருக்கிறது. மேலும் அது நாம் விரும்பாத காரியங்களைச் செய்வதற்கு நம்மைப் பலவந்தப்படுத்தி, சட்டவிரோதமான எஜமானைப்போல ஆளுகைசெய்கிறத. ரோமர் 6, 7, 8-ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பாவம் இதுவே. இது, மழுப் பிரபஞ்சத்திலும் மகா தீயவனும், பாவம் நிறைந்தவனுமாகிய சாத்தானேதவிர வேறு யாருமல்ல. அவன் தேவனடைய எதிரி. அவன் நம் சரீரத்துக்குள் வந்தபோது, நம் சரீரத்தின் நிலையும், தரணமமு மாற்றப்பட்டது அல்லது சுாாவம் மாற்றப்பட்டது. இவ்வாறு அது மாம்சமாக மாறினது. மாம்சம் என்பது பொல்லாங்கன் வாசம்பண்ணிக்கொண்டிருகிற கெடுக்கப்பட்ட, பாழாக்கப்பட்ட, சேதப்படுத்தப்பட்ட சரீரமே. இந்த மாம்சம் ஆத்துமாவின்மேல் ஆதிக்கம்செலுத்த முற்படுகிறது.

தேவன் தம்மையே பரவச்செய்வதற்கு மனித ஆவி ஓர் அடித்தளமாக மாறியிருக்கிறது. அதே கோட்பாடு கெடுக்கப்பட்ட இந்தச் சரீரத்துக்கும் பொருந்தும். சாத்தான் தன் பேய்த்தனமான வேலையைச் செய்வதற்கு, அவனால் ஆக்கிரமிக்கப்பட்ட மாம்சம் ஓர் அடித்தளமாக மாறியிருக்கிறது. ஆத்துமாவின்மேல் ஆதிக்கம்செலுத்துவதற்கு, சாத்தான் மாம்சத்தில் தன் இடத்தை எடுத்துக்கொள்கிறான்: பின்பு ஆத்துமாவின்மூலம், ஆவியை உயிரிழக்கச்செய்கிறான். சாத்தானின் எல்லாக் கிரியைகளும் எப்போதுமே வெளியே தொடங்கி உள்நோக்கிச் செல்கிறது; ஆனால் தெய்வீகக் கிரியை, எப்போதுமே மையத்திலிருந்து தொடங்கி சுற்றுவட்டத்தைநோக்கிப் பரவிச்செல்கிறது. இதை நாம் பின்வருமாறு விளக்கிக்காட்டலாம்.




சாத்தான் ஆத்துமாவைவிட அதிகப் பலமுள்ளவன். எனவ ஆத்துமாவால் சாத்தானை எதிர்த்துநிற்க இயலாது. சாத்தான் மாம்சத்தின்மூலம் நம் ஆத்துமாவுக்கு விஷமூட்டியிருந்தான். இரட்சிக்கப்படுவதற்குமுன்பு நம் நிலைமை இதுவே. நாம் சுவிசேஷத்தைக் கேட்டு, மனதிலும் மனச்சாட்சியிலும் பிரகாசிப்பிக்கப்பட்டபோது, நாம் ஆவியில் நொறுங்குண்டவர் களும், நருங்குண்டவர்களுமானோம்; மனந்திரும்பினோம்; நம்மைக் கர்த்தருக்குத் திறந்துகொடுத்தோம். அப்பாது அவர் பரிசுத்த ஆவியில் நம் ஜீவனாக இருப்பதற்கு மகிமையோடு நம் ஆவிக்குள் வந்தார். சாத்தான் ஆவிக்கு விரோதமாக உள்நோக்கி யுத்தம்பண்ண மாம்சத்தை ஓர் அடித்தளமாக எடுத்துக்கொண்ட போதும், மகிமையான கர்த்தர் மாம்சத்துக்கு விரோதமாக வெளி நோக்கி யுத்தம்பண்ண ஆவியை ஓர் அடித்தளமாகப் பயன் படுத்துகிறார்.

நாம் மிகச் சிக்கலானவர்கள். ஏனென்றால் நாம் ஒரு யுத்தகளமாகிவிட்டோம். உலகளாவிய யுத்தத்துக்கு, நாம் உலகளாவிய யுத்தகளமாக இருக்கிறோம். சாத்தானும் தேவனும், தேவனும் சாத்தானும் ஒருவரோடு ஒருவர் நமக்குள்ளே தினம்தினம் யுத்தம்செய்துகொண்டிருக்கிறார்கள். சாத்தான் மையத்தைநோக்கி யுத்தம்செய்யும்போது, தேவன் சுற்றுவட்டத்தைநோக்கி யுத்தம்செய்கிறார். நம் மனப்பாங்கு என்ன? நாம் நடுநிலை வகிக்கமுடியாது; நாம் ஏதாவது ஒரு பக்கத்தைச் சார்ந்தாகவேண்டும். மனிதனுடைய புறம்பான பகுதியில் தேவனுடைய எதிரி இருக்கிறான். உள்ளான பகுதியில் தேவனே இருக்கிறார். இரண்டுக்கும் இடையே நடுவில் ஆத்துமா இருக்கிறது. சாத்தான் கெடுக்கப்பட்ட சரீரத்தில் இருக்கிறான். தேவன் மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட ஆவியில் இருக்கிறார். நாம் இடையில் மனித ஆத்துமாவில் இருக்கிறாம். நாம் ஒரு மிக

முக்கியமான ஆள். முழு நிலைமையையும் நம்மால் மாற்றமுடியும். நாம் சாத்தான் பக்கமாகச் சாய்ந்தால், தேவன் ஒருவகையில் தோற்கடிக்கப்பட்டுவிடுவார், நிச்சயமாகத் தேவனை ஒருபோதும் தோற்கடிக்கமுடியாது. ஆனால் நாம் சாத்தான் பக்கம் சாயும்போது, தேவன் தற்காலிகமாகத் தோற்கடிக்கப்பட்டவர்போலத் தோன்றுகிறது. ஆனால் நாம் தேவன் பக்கமாய்ச் சாயும்போது, அது மகிமையாகயிருக்கும்; சாத்தான் முற்றுமுடியத் தோற்கடிக்கப்பட்டுவிடுவான்.

நீங்கள் நீங்கள் யாருடைய பக்கம் சாயப்போகிறீர்கள்? இதுதான் பிரச்சினை. கர்த்தருக்குச் செவிகொடுங்கள்: "ஒருவன் என்பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தானே வெறுக்கட்டும்." சுயத்தை வெறு! வேறு வார்த்தைகளில் சொல்வதானால், ஆத்துமாவை சிலுவையில் கொல். ஏனென்றால் ஆத்துமாதான் சுயம். நாம் எப்போதும் சுயத்தை வெறுக்கவேண்டும்; எப்போதும் சுயத்தக் கொல்லவேண்டும்; எப்போதும் சுயத்தைக் கிறுக்கித்தள்ளவேண்டும். ஆத்துமாவை கிறுக்கித்தள்ளியபின்பு, என்ன நடக்கும்? ஆத்துமா கொல்லப்பட்டபின்பு, தேவனும் சாத்தானுமே மீதியிருக்கிறார்கள். ஆத்துமாவைக் கிறுக்கித்தள்ளிப்போடுவதால், எதிரிக்கான பாலத்தை நாம் எரித்துவிடுகிறோம்.

சாத்தான் மாம்சத்தில் இருக்கிறான். ஏனென்றால் அவன் மாம்சத்தில் மனுவுருவெடுத்த பாவம். சுயம் ஆத்துமாவையில் இருக்கிறது. பாவம், சுயம் ஆகிய இரண்டுமே ஒருவரையொருவர் சட்டவிரோதமாகத் திருமணம்செய்திருக்கிறார்கள். உண்மையில் வெகு காலத்திற்குமுன்பே அவர்களுடைய திருமணம் நடந்தது. சுயத்துக்குப் பாவத்துடன் திருமணமாகிவிட்டது. அவை ஒன்றாகிவிட்டன. இதுவே நமக்குள் இருக்கும் பிரச்சினைகளுக் கெல்லாம் காரணம். ஆனால நாம் இரட்சிக்கப்பட்டபோது தேவனும், கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியும், தெய்வீக ஜீவனாக நம் ஆவிக்குள் வந்தார்கள். கெடுக்கப்பட்ட சரீரமாகிய மாம்சத்தில் பாவம் இருக்கிறது. பயமுறுத்தப்பட்ட ஆத்துமாவில் சுயம் இருக்கிறது. அதே நேரத்தில் மறுபடிஜெநிப்பிக்கப்பட்ட மனித ஆவியில் நித்திய ஜீவன், தெய்வீக ஜீவன், இருக்கிறது. இதுவே நம்மைச் சீராக்கி நடத்தும் ஜீவன், வல்லமை. ஆத்தும ஜீவனின்படி பிழைக்கிறோம், நடக்கிறோம் என்றால், நாம் நம்மால்தான் பிழைக்கிறாம், நடக்கிறோம் என்று பொருள். இது நம்மைச் சாத்தானுடன் திருமண சம்பந்தப்படுத்துகிறது. நாம் சுதந்தரமான நபரல்லர்! மாறாக பாவம் என்னும் பொல்லாங்கனின் அடிமைத்தனத்தின்கீழ் இருக்கிறோம் என்பதையே இந்தத் திருமணம் குறிக்கிறது. மாம்சத்தில் இருக்கும் பொல்லாங்கன்

எழும்பி, நம்மை மிக நிர்ப்பந்தமான நபராக ஆக்கிவிடுவான். இருந்தபோதும் நாம் ஆத்துமாவையும் சுயத்தையும் வெறுத்து, ஆவியினால் பிழைத்தால், நடந்தால், கிறிஸ்து நம் ஜீவனாக நம் முழு ஆள்தத்துவத்தையும் சீராக்கி நடத்தி, பூரிதமாக நிரப்பிவிடுவார்.

## ஆத்துமாவுடன் சிலுவை இடைப்படுதல்

நாம் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டபின்பு, ஒருபோதும் நாமாகவே பிழைக்கவும், நடக்கவும், காரியங்களைச் செய்யவும்கூடாது. நாம் நம்மால் பிழைக்கும்வரை, சாத்தானின் அடிமைத்தனத்தின்கீழ்தான் இருந்துகொண்டிருப்போம். "நான் என்னால் வாழவதாகவோ, என்னால் காரியங்களைச் செய்வதாகவோ எண்ணவில்லை," என்று ஒருவேளை நீங்கள் சொல்லலாம். ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணரவேண்டிய அவசியம் இங்கே இருக்கிறது. அப்போதுதான் நீங்கள் எவ்வளவாக ஆத்துமாவில் இருக்கிறீர்கள் என்று உங்களால் பார்க்கமுடியும். நீங்கள் உங்களால் வாழவும் இல்லை, உங்களால் காரியங்களைச் செய்யவும் இல்லை என்று சொல்ல'கிறீர்கள். அப்படியானால் நீங்கள் எதனால் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? மாம்சத்தினாலா? "இல்லை, இல்லை, நான் மாம்சத்தினால் வாழவில்லை," என்று நீங்கள் ஒருவேளை பதில்சொல்வீர்கள். அப்படியானால், நீங்கள் ஆவியினாலா வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? "அதுவும் சந்தேகமாயிருக்கிறது," என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் மாம்சத்தின்படியும் வாழவில்லை, ஆவியின்படியும் வாழவில்லை என்றால், பின்பு எதன்படி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் வெறுமனே ஆத்துமாவின்படி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் பதில். "ஆ! நான் எந்தப் பாவமும் செய்யவில்லை, நான் மாம்சத்துக்குரியவனாக இருக்க விரும்பவில்லை, நான் சாத்தானுடன் ஒத்துழைக்க விரும்பவில்லை, நான் தேவனை நேசிக்கிறேன். நான் கர்த்தரைப் பின்பற்றவும், கர்த்தரின் வழியில் நடக்கவும் விரும்புகிறேன், நான் விரும்புகிறேன், நான் விரும்புகிறேன், நான் விரும்புகிறேன்..." என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் இன்னும் ஆத்துமாவில்தான் இருக்கிறீர்கள்! நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்று கர்த்தரிடம் சொல்லுங்கள். நீங்கள் ஆவியில் இருக்கிறீர்கள் என்பதை நீங்களே அதிகமாகச் சந்தேகிக்கிறீர்கள். நீங்கள் மாம்சத்திலும் இல்லை, ஆவியிலும் இல்லை, ஏனென்றால் நீங்கள் ஆத்துமாவில் இருக்கிறீர்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நீங்கள் எகிப்தில் இல்லை; ஏனென்றால் நீங்கள் பஸ்காவை அனுபவித்திருக்கிறீர்கள். நீங்கள் எகிப்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் இன்னும் நல்ல

தேசமாகிய கானானுக்குள் நுழையவில்லை. நீங்கள் ஆத்துமாவாகிய வனாந்தரத்தில்தான் இன்னும் அலைந்து கொண்டிருக்கிறீர்கள்.

## (1) மனித அன்பு

நாம் இப்போது விஷயத்துக்கு வருகிறோம்; ஆத்துமாவிலிருந்து ஆவியை நாம் எப்படிப் பகுத்துணரலாம்? நாம் எப்போது ஆவியில் இருக்கிறோம், எப்போது ஆத்துமாவில் இருக்கிறோம் என்பதை நாம் எப்படி அறியலாம்? ஆத்துமாவிலிருந்து ஆவியை நாம் எப்படிப் பிரிக்கலாம்? கர்த்தருடைய வார்த்தையை நோக்குங்கள். *"தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல; மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல. தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்" (மத்தேயு 10:37-39).*

"ஆத்துமாவுக்குப்" பயன்படுத்தப்படும் அதே வார்த்தைதான் இங்கே கிரேக்க பாடத்தில் "ஜீவனுக்கும்" பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசனங்களிலுள்ள சிலுவையை எடுத்தல் என்பது நமக்குப் பிரியமானவர்கள்மேலுள்ள நம் மனித அன்பைக் குறிக்கிறது. மனித அன்பு நம் ஆத்துமாவிலுள்ள ஒன்று. இது சிலுவையினால் கையாளப்படவேண்டும். நாம் நமக்குப் பிரியமானவர்களை எவ்வளவாக நேசிக்கிறோம்! ஆத்துமாவையும் ஆவியையும் எப்படிப் பகுத்துணர்வது என்று நாம் அறிந்துகொள்ள விரும்பினால், நாம் நம் அன்பைப் பரிசோதிக்கவேண்டும். நாம் நம் பெற்றோரை, நம் பிள்ளைகளை, நம் தாயை அல்லது தகப்பனை எப்படி நேசிக்கிறோம்? நாம் நம் சகோதரனை அல்லது சகோதரியை எப்படி நேசிக்கிறோம்? இது மனிதனின் வார்த்தையல்ல; மாறாகக் கர்த்தருடைய வார்த்தை. நாம் நம் மனித அன்பை, சுபாவ அன்பைப் பரிசோதித்தபின்னரே, ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணர்வதை அடையமுடியும். நம் சுபாவ அன்பு சிலுவையினால் கையாளப்படவேண்டும். கணவர்கள் தங்கள் மனைவிகளில் அன்புகூரவேண்டும் என்றும், மனைவிகள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படியவேண்டும் என்றும், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பராமரிக்கவேண்டும் என்றும், பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களைக் கனப்படுத்தி, மரியாதைசெலுத்தவேண்டும் என்றும், புதிய ஏற்பாட்டு நிருபங்களில் பரிசுத்த ஆவி நமக்குக் கூறுகிறார். ஆனால் இவையனைத்தும் உயிர்த்தெழுந்த ஜீவனில் இருக்கவேண்டும். இயற்கையான பாசம், இயற்கையான அன்பு,

இயற்கையான உறவுகள் ஆகியவை சிலுவையில் வெட்டப்படவேண்டும்; சிலுவையினால் கையாளப்பட்டபின்பு, நாம் ஆவியில் இருப்போம், நாம் உயிர்த்தெழுந்த ஜீவனில் இருப்போம் என்பதே இதன் பொருள். நாம் உயிர்த்தெழுந்த ஜீவனில் வாழ்வோம் - சுபாவ ஜீவனில் வாழாமல், ஆவிக்குரிய ஜீவனில் வாழ்வோம். சிலுவை நம் இயற்கையான அன்புடனும், பாசத்துடனும் எவ்வளவாக இடைப்பட்டிருக்கிறது என்பதுதான் நம் ஆத்துமா எவ்வளவாக உடைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான பரீட்சை. இயற்கையான அன்பு சிலுவையினால் வெட்டப்படும்போது, நாம் நம் ஆத்துமாவை இழப்போம்.

அன்றியும் நம் இயற்கையான அன்புடன் இடைப்பட்டு நம் ஆத்துமாவை இழக்க விரும்பினால், ஆத்துமாவை எப்படி வெறுப்பது என்றும் நான் கற்றுக்கொள்ளவேண்டும்.

*"யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும், தாயையும், மனைவியையும், பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான்" (லூக்கா 14:26, 27).*

"ஆத்துமாவைக்" குறிக்கும் அதே வார்த்தைதான் மறுபடியும், இங்கே கிரேக்க மூலபாடத்தில் "ஜீவனைக்" குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நமக்குப் பிரியமானவர்கள்மேல் நமக்கிருக்கும் அன்பு உட்பட, நம்மிடத்தில் சுய அன்பும் இருக்கிறது. அதாவது சுயத்தின்மேலும், நம் ஆத்துமாவின்மேலுமுள்ள அன்பு. சிலுவையை எடுப்பதற்கும், இந்தச் சுய அன்பிற்கும் அதிகத் தொடர்பு உண்டு. "யாதொருவன் என்னிடத்தில் வந்து...வெறுக்காவிட்டால்." யாரை வெறுக்கவேண்டும்? நம் எரிரிகளையா? நம் எதிரிகளை நாம் நேசிக்கவேண்டும். ஆனால் நம்மை, நம் ஆத்துமாவை, நாம் வெறுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். நம்மை வெறுப்பது நம் ஆத்துமாவை இழப்பதுடன் தொடர்புடைய ஒன்று. நம்மை நாம் வெறுப்பதால் நம் ஆத்துமாவிலுள்ள சுயத்தை கிறுக்கித்தள்ளிவிடலாம்.

## (2) உலகத்தின் அன்பு

*"பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வரவிரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன். தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்வான். மனுஷன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன்னைத்தான் கெடுத்து*

நஷ்டப்படுத்தினால் அவனுக்கு இலாபம் என்ன? (லூக்கா 9:23-25).

*"லோகத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள். தன் ஜீவனை இரட்சிக்க வகைத்தேடுகிறவன் அதை இழந்துபோவான்; இழந்துபோகிறவன் அதை உயிர்ப்பித்துக்கொள்ளுவான்" (லூக்கா 17:32, 33).*

இந்த வசனங்களிலெல்லாம், "ஆத்துமாவுக்குப்" பயன்படுத்தப்படுகிற அதே வார்த்தைதான் மறுபடியும், கிரேக்க மூலபாடத்தில் "ஜீவனுக்கும்" பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆத்துமா உலகத்தின்மேலுள்ள அன்புடன் அதிகமாகச் சம்பந்தப்பட்டிருக்கிறது என்று இந்தப் பகுதிகள் காட்டுகின்றன. உலகத்தின் மேலும், உலகக் காரியங்கள்மேலும் உள்ள அன்பை விட்டுவிடுவது என்பதின் பொருள், நாம் நம் ஆத்துமாவுடன் இடைப்படவேண்டும் என்பதே. ஆத்துமா வெட்டப்படும்போது, உலகத்தின்மேலுள்ள அன்பு, ஆத்துமா கைவிடப்படுகிறது. ஆகையால் உலகத்தின்மேலுள்ள அன்பு, ஆத்துமா ஆகிய இந்த இரண்டு காரியங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை.

"லோத்தின் மனைவியி நினைத்துக்கொள்ளுங்கள்." இது மனைவி; கணவனல்ல! இது உலகக் காரியங்களை நேசித்த ஒரு மனைவியின் கதை, ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்று கர்த்தர் சொல்கிறார். நீங்கள் உலகத்தை நேசித்தால், உங்கள் ஆத்துமாவை இழந்துவிடுவீர்கள். நாம் உலகக் காரியங்களை நேசித்தால், நம் ஆத்துமாவை இழந்துவிடுவோம். இது தீமையான இழப்பு. ஆனால் நாம் உலகத்தின்மேலுள்ள அன்பை விட்டுவிடுவோமானால், அப்போது நம் ஆத்துமாவை இழந்துவிடுவோம். இது நன்மையான இழப்பு. சகோதர சகோதரிகளே, உலகத்தின்மேலுள்ள அன்புதான் நம் ஆத்துமா எங்கு இருக்கிறது என்பதற்கான நிரூபணம்.

## (3) ஜென்மசுபாவமான ஜீவன்

*"மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும். செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். தன் ஜீவனை சிநேகிக்கிறவன் அதை இழந்துபோவான்; இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அதை நித்திய ஜீவகாலமாய்க் காத்துக்கொள்ளுவான்" (யோவான் 12:24, 25).*

இங்கு மீண்டும் "ஜீவன்" என்பது "ஆத்துமாவையே" குறிக்கிறது. இந்த இரண்டு வசனங்களையும் கவனமாகவும், ஆழமாகவும் வாசிப்பதாலும், ஆழ்ந்து சிந்திப்பதாலும், ஆத்துமா சுபாவ ஜீவனுடனும், சுபாவ பலத்துடனும் அதிகத் தொடர்புடையது என்று நாம் கண்டுகொள்வோம். ஆத்துமாவை இழப்பதின்மூலம் நம் சுபாவ ஜீவனுடனும், சுபாவ பலத்துடனும்

இடைப்படவேண்டும். நம் சுபாவ ஜீவனும், சுபாவ பலமும் கொல்லப்படும்போதுதான் நம் ஆத்துமா உடைக்கப்படும். ஒருவன் ஆத்துமாவிலிருந்து ஆவியை எப்படிப் பகுத்துணர்கிறான்? எளிமையாகச் சொல்வதானால், ஜீவன்மேல் சிலுவையைப் பிரயோகிப்பதாலும், நம்மையே மரணத்துக்கு உட்படுத்துவதாலுமே. ஆத்துமா வஞ்சிக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அது பாவம் நிறைந்ததுபோலத் தோன்றவில்லை. ஆகையால் சிலுவையைச் சுயத்தின்மேல் வைத்து, ஆத்துமாவைப் பரிசோதித்துப் பார்க்க நாம் எப்போதும் கற்றுக்கொள்ளவேண்டும்.

நாம் ஒரு சகோதரனுடன் ஐக்கியம்கொள்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். நம் ஐக்கியம் ஆவிக்குரியதா அல்லது ஆத்துமாவுக்குரியதா என்று நாம் எப்படிப் பகுத்துணரலாம்? சிலுவையை நம்மேல் வைப்பதால் நாம் ஆவியில் இருக்கிறோமா அல்லது ஆத்துமாவில் இருக்கிறோமா என்று தெளிவாகத் தெரிந்துகொள்வோம். "நான் தீமையான எதையும் செய்யவில்லை. நாம் ஒரு சகோதரனுடன் ஐக்கியம்கொள்ளும்போது, அது நல்லதுதானே! நான் நல்லதைத்தானே செய்கிறேன்," என்று நான் சொல்லக்கூடாது. ஐக்கியம் நல்லதுதான். ஆனால் இப்படிப்பட்ட ஐக்கியம் முழுக்கமுழுக்க ஆத்துமாவில் இருக்கலாம்! சிலுவையை நம்மேல் பிரயோகிக்கும்போது, நம் ஐக்கியம் ஆவியில் இருக்கிறதா அல்லது ஆத்துமாவில் இருக்கிறதா என்று உடனே நமக்குத் தெளிவாகிவிடும். நன்மையா தீமையா என்று பகுத்துணர்வதின்மூலம், ஆத்துமாவா அல்லது ஆவியா என்று ஒருபோதும் பரிசோதிக்காதீர்கள். இப்படிப்பட்ட பரிசோதனை நம்மை இருளுக்குள்தான் கொண்டுபோகும். ஆத்துமாவையும் ஆவியையும் பரிசோதித்துப் பார்க்க சிலுவையைத்தவிர வேறொரு வழி இல்லை. நாம் இப்போது சிலுவையின்மேல் இருக்கிறோமா அல்லது ஆவியில் இருக்கிறோமா என்பதை உறுதிசெய்வதற்கான ஒரே வழி. என் சொந்த விருப்பத்தின் மூலக்கூறு ஏதாவது என்னிடம் இருக்கிறதா? அல்லது என் நடவடிக்கைகளில் சுயமே மையமாக இருக்கிறதா? என் சுய விருப்பம், சுய மையக்காரியங்கள் ஆகியவைகளின்மேல் சிலுவை வைக்கப்பட்டுள்ளதா? இந்த முறையில் உங்களைப் பரிசோதித்துப் பாருங்கள். நன்மை தீமை என்ற அளவுகோலின்படி அல்ல, சிலுவையினால்தான் எல்லாத் தீர்மானங்களும், எல்லா நடவடிக்கைகளும் பரிசோதிக்கப்படவேண்டும். உரையாடுவதற்கு எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு தலைப்பிலும் சுயம் கிறுக்கித்தள்ளப்பட்டிருக்கிறதா? "நான் ஆவியில் இருக்கிறேனா? அல்லது ஆத்துமாவில் இருக்கிறேனா? என் உணர்ச்சி எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காக நான் ஒருகணம்

ஆழ்ந்து சிந்திப்போன். அது அவ்வளவு ஆழமாக இல்லையென்றால், நான் ஆத்துமாவில்தான் இருக்கிறேன். ஆனால் அது ஆழமாக இருப்பதுபோல் தோன்றினால், நான் ஆவியில் இருக்கக்கூடும்," என்று அலசி ஆராய்ந்துகொண்டிருந்தால், மெய்யாகவே கலக்கமடைந்துவிடுவோம். எளிமையாக, ஒரேவொரு பரிசோதனையில், இது நமக்கு மிகத் தெளிவாகிவிடும். நாம் சிலுவையில் கிடத்தப்பட்டிருக்கிறோமா என்பதே பரீட்சை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் சுயத்தை வெறுத்திருக்கிறோமா, சிலுவையை எடுத்திருக்கிறோமா, கர்த்தரை ஆவியில் பின்பற்றியிருக்கிறோமா? சிலுவையை எடுப்பதின்மூலம் நாம் நம் சுயத்தை வெறுக்கும்போது, கர்த்தராகிய கிறிஸ்துவுக்கு நம்மில் முழு இடம் இருக்கும். மேலும் அவருடன் இணைந்து செல்வது எளிதாக இருக்கும்.

புதிய ஏற்பாட்டுப் போதனையில் சிட்சைக்குக் கொஞ்சம் இடம் உண்டு. ஆனால் சிலுவை அதைவிட மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. பல சமயங்களில் தேவனுடைய சிட்சை சிலுவையுடன் சேர்ந்தே கிரியைசெய்கிறது. ஆனால் தேவனுடைய சிட்சைக்காகக் காத்திருக்காதீர்கள். நாம் கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறோம் என்று அறிந்திருப்பதால், நாம் எல்லா நேரமும் சிலுவையை எடுக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். சுயத்தை வெறுக்கவும், சிலுவையை எடுக்கவும், ஆத்துமாவுக்கு இடம்கொடுக்காமலிருக்கவும் நாம் தினம்தினம் கற்றுக்கொள்ளவேண்டும். நாம் இதைச் செய்தால் உண்மையாகவே கர்த்தருடன் ஆவியில் ஒன்றாயிருப்போம். மேலும் நம்மை ஆட்கொண்டு, தம்மால் நம்மைப் பூர்த்தியாய் நிரப்புவதற்கான இடத்தைக் கர்த்தர் எடுத்துக்கொள்வார்.

## அத்தியாயம் பதிநான்கு

# சிலுவையின் கோட்பாடு

அநேகக் கிறிஸ்தவர்களுக்கு சிலுவையைப்பற்றி ஏதோ கொஞ்சம் தெரியும். ஆனால் சிலுவையின் *கோட்பாட்டைப்பற்றி* அவர்களுக்குத் தெளிவில்லை. சிலுவையின் கோட்பாடு என்ன? வேதத்தின்படி, பிரபஞ்சத்தில் தேவனுக்கு இரண்டு சிருஷ்டிப்புகள் உள்ளன: முதல் சிருஷ்டிப்பு பழைய சிருஷ்டிப்பு என்றும், இரண்டாம் சிருஷ்டிப்பு புதிய சிருஷ்டிப்பு என்றும் அழைக்கப்படுகின்றன. பழைய சிருஷ்டிப்பை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து, புதிதான ஒன்றை ஆரம்பித்ததால் புதிய சிருஷ்டிப்பு உருவானது. பழைய சிருஷ்டிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதால் மட்டுமே, புதிய சிருஷ்டிப்பு உருவாக முடியும். சிலுவையின் கிரியையினால்தான் பழைய சிருஷ்டிப்பு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. சிலுவையின் மூலமாகத்தான், புதிய சிருஷ்டிப்பு உயிர்த்தெழுதலில் ஆரம்பமானது.

### பழைய சிருஷ்டிப்பின் காரியங்கள்

பழைய சிருஷ்டிப்பின் மூலக்கூறுகள் எவை? தேவதூதனுக்குரிய ஜீவனைக்கொண்ட *தேவதூதர்கள்*, பழைய சிருஷ்டிப்பிலுள்ள முதல் காரியம். இரண்டாம் காரியம், மனித ஜீவனைக்கொண்ட இரண்டு வகையான பிறவிகள். தேவதூதர்களின் தலைவனாகிய பிரதான தூதன் தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்து சாத்தானாக மாறினான். சாத்தான் என்றால் "தேவனுடைய எதிரி" என்று பொருள். சாத்தான் மட்டும் கலகம்செய்யவில்லை, ஒரு கூட்டம் தேவதூதர்களும் இந்தக் கலகத்தில் அவனைப் பின்பற்றினார்கள். தேவனுக்கு விரோதமான இந்தக் கலகத்தை அவன் முன்னின்று நடத்தினான். வெளிப்படுத்தின விசேஷம் 12-ஆம் அதிகாரத்தின்படி, வானத்து நட்சத்திரங்களாகிய தேவதூதர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சாத்தானைப் பின்பற்றினார்கள். இந்த முரட்டாட்டமுள்ள தேவதூதர்களே, எபேசியர் 1, 2, 6-ஆம் அதிகாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள துரைத்தனங்கள், கர்த்தத்துவங்கள், அதிகாரங்கள், வல்லமைகள் என்ற சக்திகளானார்கள். தேவதூதர்களின் முரட்டாட்டம் பழைய சிருஷ்டிப்பின் மூன்றாவது காரியமான *சாத்தானையும்*, நான்காவது காரியமான *சாத்தானின் இராஜ்ஜியத்தையும்* உற்பத்திசெய்தது.

பழைய சிருஷ்டிப்பின் மற்ற காரியங்களை நாம் இப்போது

சுருக்கமாகத் தொடர்ந்து பார்ப்போம். மனித ஜீவன் சிருஷ்டிக்கப்பட்டபின் மனிதன் தேவனுக்கு விரோதமாகச் செயல்படுவதற்கு தேவனுடைய எதிரி மனிதனைத் தூண்டிவிட்டான். மருந்தை ஊசிமூலம் உட்செலுத்துவதைப்போல, ஏதோவொன்றை மனித ஜீவனுக்குள் செலுத்த இந்தச் செயல் காரணமாயிற்று. அதுதான் பாவம் - ஆளாக உருவகப்படுத்தப்படுகின்ற, ஒருமையில் குறிப்பிடப்படுகின்றன பாவம். சாத்தானின் அப்பட்டமான பாவ சுபாவமும், பாவ நினைவும் மனித ஜீவனுக்குள் ஊசிமூலம் ஏற்றுவதுபோல் ஏற்றப்பட்டன. விழுந்துபோன தேவதூதனின் ஜீவன் மனித ஜீவனுக்குள் செலுத்தப்பட்டதின்மூலம் இப்பிரபஞ்சத்தில் பாவம் உண்டாக்கப்பட்டது. பாவம் தேவனால் சிருஷ்டிக்கப்படவில்லை. மாறாக சாத்தானின் ஜீவன், மனித ஜீவனோடு முறைகேடாய் சேர்ந்ததால்தான் பாவம் உண்டாக்கப்பட்டது. எனவே பழைய சிருஷ்டிப்பின் காரியங்களின் பட்டியலிலுள்ள ஐந்தாவது காரியம் *பாவம்*. ஒருமையில் குறிப்பிடப்படும் பாவம் மட்டும் உருவாகவில்லை. மாறாக அது தன்னோடுகூட இன்னும் அநேகப் பாவங்களைக் கொண்டுவந்தது. ஆகையால் பட்டியலிலுள்ள ஆறாவது காரியம் பாவத்தின் கனிகளாகிய *பாவங்கள்*. அதாவது பொய், கொலை, பெருமை, காமவிகாரம் போன்ற பல காரியங்கள். இந்தப் பாவங்களெல்லாம் பாவத்திலிருந்தே உற்பத்தியாயின.

ஏழாவது காரியம், *உலகம்*. உலகம் தேவனால் சிருஷ்டிக்கப்படவில்லை. தேவன் பூமியைச் சிருஷ்டித்தார். ஆனால் உலகம் சாத்தானின் கண்டுபிடிப்பு. பாவம் ஆதியாகமம் 3-ல் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஆதியாகமம் 4-ல்தான் பாவத்துடன் இன்னொரு காரியம் சேர்க்கப்பட்டது. அதுதான் சாத்தானின் கண்டுபிடிப்பாகிய உலகம். உலகம் என்றால் என்ன? சாத்தானின் கீழிருக்கும் எல்லா மனித வாழ்க்கையின் முறைமையே உலகம். உலகத்தைக் குறிக்கும் கிரேக்க வார்த்தை “கோஸ்மோஸ்,” இதன் பொருள் “அமைப்புமுறை.” தேவன் மனிதனைத் தமக்கென்று சிருஷ்டித்தார். ஆனால் சாத்தான் இப்போது மனுக்குலத்தை முறைப்படுத்திவிட்டான். மனிதன் இப்போது தேவனுக்காக வாழவில்லை. மாறாக சாத்தானால் முறைப்படுத்தப்பட்டுவிட்டான், சாத்தானுக்காகவே வாழ்கிறான்.

இவைகளைத்தவிர, பழைய சிருஷ்டிப்பிலுள்ள இன்னொரு காரியம் *மரணம்*. இது பாவம் மற்றும் பாவங்களின் விளைவு. சாத்தானால் விஷமிடப்பட்டு, பாழழக்கப்பட்டு, நிலையும் தரமும் மாற்றப்பட்ட சரீரமாகிய *மாம்சமும்* பழைய சிருஷ்டிப்பினுடையதே. சாத்தான் பாவமாகச் சரீரத்தை சீரழித்ததால் சரீரம் மாம்சமானது. இன்னொரு காரியம் *பழைய மனிதன்*.

அதாவது முழு மனிதனும் சாத்தானால் பாழாக்கப்பட்டான். ஆதியில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் இப்போது பாவத்தால் பாழாக்கப்பட்டுவிட்டான்.

அடுத்தது *சுயம்.* ஆத்துமா தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் அது மாம்சத்தால் பயமுறுத்தப்பட்டு, கெடுக்கப்பட்டு சுயமாகிவிட்டது. அது சரீரத்தைப்போன்றதே. ஆதியிலே தேவன் சரீரத்தை நல்லதாகவும், பரிசுத்தமாகவுமே சிருஷ்டித்தார். ஆனால் அது சாத்தானின் பாவ சுபாவத்தால் கெடுக்கப்பட்டு மாம்சமானது. அதே கேட்பாடு ஆத்துமாவுக்கும் பொருந்தும். ஆத்துமா பரிசுத்தமாகவும், நல்லதாகவுமே சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் பின்பு அது மாம்சத்தின் ஆதிககத்தினால் பாதிக்கப்பட்டது. அது மாம்சத்தால் பயமுறுத்தப்பட்டு, பின்பு கட்டுப்படுத்தப்பட்டது. அதன் விளைவாக அது சுயமாக மாறிற்று. எவ்வாறு பாவம் சரீரத்தைக் கெடுத்தபோது அது மாம்சமானதோ, அவ்வாறே மாம்சம் ஆத்துமாவின்மேல் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி அதைக் கட்டுப்படுத்தியபோது அது சுயமானது.

கடைசியாக 12-வது காரியம், *சர்வ சிருஷ்டிப்பு.* சர்வ சிருஷ்டிப்பும் தூதர்களின் முரட்டாட்டத்தாலும் மனிதனின் மீறுதலினாலும் சேதப்படுத்தப்பட்டது, கெடுக்கப்பட்டது. இப்படிச் சீர்கேட்டுக்கு அடிமையானதால் சர்வ சிருஷ்டிப்பும் ஒரு வகையான தவிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டது (ரோமர் 8).

## பழைய சிருஷ்டிப்பின் மையம்

இந்தப் பன்னிரண்டு காரியங்களும் ஒன்றாகச் சேர்ந்ததுதான் பழைய சிருஷ்டிப்பு. பழைய சிருஷ்டிப்பில் அநேகக் காரியங்கள் அடங்கியிருக்கின்றன. ஆனால் விழ்ந்துபோன மனிதன்தான் பழைய சிருஷ்டிப்பின் *மையமாக* மாறினான் என்பதைப்பற்றி நாம் இந்த நேரத்தில் தெளிவாக இருக்கவேண்டும். பழைய சிருஷ்டிப்பின் பன்னிரண்டு காரியங்களில் ஒவ்வொன்றுடனும் அவனுக்குத் தொடர்பு உண்டு. முதலாவது சாத்தான் மனிதனுக்குள் புகுத்து அவனுடன் ஒன்றாகிவிட்டான். சாத்தானுடன் சாத்தானின் இராஜ்ஜியமும் அடங்கியிருக்கிறது. ஆனால் சாத்தான் மனிதனில் இருப்பதால், சாத்தானின் இராஜ்ஜியமும்கூட மனிதனில் இருக்கிறது. சாத்தான் உலகத்தின் அதிபதி. எனவே சாத்தானில் உலகம்கூட அடங்கியிருக்கிறது. அதனால் உலகமும் மனிதனில் இருக்கிறது. நிச்சயமாகப் பாவமும், பாவங்களும் மனிதனில் ஊனுருக்கொண்டுள்ளன. அவை மரணத்தை விளைவிக்கின்றன. மாம்சமும், பழைய மனிதனும், சுயமும்கூட மனிதனில் இருக்கின்றன. மனிதனே சர்வ சிருஷ்டிப்பின் தலையாக இருந்தான், இன்னும் இருக்கிறான் (ஆதியாகமம் முதல்

அதிகாரத்தின்படி, மனிதன் முழு சிருண்டிப்பின் தலையாக நியமிக்கப்பட்டான்). இவ்வாறு மனிதனுக்கு சர்வ சிருஷ்டிப்புடனும் தொடர்பு உண்டு. முழு சிருஷ்டிப்புக்கும் மனிதனுடன் தொடர்பு உண்டு. முழு சிருஷ்டிப்பும் மனிதனில் மையங்கொண்டிருக்கிறது. எல்லா வகையிலும் மனிதன்தான் பழைய சிரஷ்டிப்பின் உண்மையான மையம். அவன் சற்றேறக்குறைய சகலத்தையும் உள்ளடக்கியவனாகிவிடுகிறான். ஆனதால் நல்ல அர்த்ததில் இல்லை. ஒருவன் சாத்தானைச் சந்திக்க விரும்பினால், அவன் விசேஷமான ஓர் இடத்துக்குப் போகவேண்டிய அவசியமில்லை. அவன் மனிதனைப் பார்த்தாலே போதும், அவனில் சாத்தானைச் சந்திக்கலாம். ஒருவன் சாத்தானின் இராஜ்ஜியத்தைச் சந்திக்க ஆசைப்பட்டால், அவன் நிலாவுக்குப் போகவேண்டிய அவசியமில்லை. அமனிதனைப் பார்த்தாலே போதும், அவனில் சாத்தானின் இராஜ்ஜியத்தைப் பார்க்கலாம். உலகத்தைப் பொறுத்தவரையிலும் அப்படித்தான். பழைய சிருஷ்டிப்பின் பிரதிநிதியாகிய மனிதனுக்குள், சாத்தான், சாத்தானின் இராஜ்ஜியம், உலகம், பாவம், பாவங்கள், மரணம், மாம்சம், பழைய மனிதன் போன்ற பல இருக்கின்றன. நாம் ஓர் அற்பமான மனிதன் அல்ல! மாறாக மோசமான கருத்தில், சகலத்தையும் உள்ளடக்கிய ஒரு பெரிய மனிதன். இப்போது சர்வ சிருஷ்டிப்புக்கும் மனிதனே மையமாக இருக்கிறான்.

## பழைய சிருஷ்டிப்பு முடிவுறுதல்

கர்த்தருக்கு ஸ்தோத்திரம், ஒருநாள் ஒரு காரியம் நிகழ்ந்தது. அது என்னவென்றால், தேவனே இந்த மனிதனில் மனுவுருவானார். இதன் பொருள் என்னவென்றால், தேவன் சர்வ சிருஷ்டிப்பையும் தம்மேல் தரித்துக்கொண்டார். தேவன் மனிதனைத் தம்மேல் தரித்துக்கொண்டபோது, அவர் பழைய சிருஷ்டிப்பின் சகல காரியங்களையும் தம்மேல் தரித்துக்கொண்டார். எடுத்துக்காட்டாக, தேவன் கிறிஸ்துவைப் பாவமாக்கினார் - பன்மையில் குறிப்பிடப்படும் பாவங்கள் அல்ல, மாறாக ஒருமையில் குறிப்பிடப்படும் "பாவம்" *(2 கொரி. 5:21)* - என்று வேதம் கூறுகிறது. தேவன் நம் சகல அக்கிரமங்களையும்கூடக் கிறிஸ்துவின்மேல் விழப்பண்ணினார் *(ஏசாயா 53:6)*. அவர்தாமே தம் சரீரத்தில் நம் பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார் *(1 பேதுரு 2:24)*. அவர் "பாவ மாம்சத்தின் சாயலில் இருந்தார்" *(ரோமர் 8:3)*. சாயல், மாம்சத்தின் சாயல்; இந்த மனித மாம்சம், பாவத்தின் மாம்சம். "அந்த வார்த்தை மாம்சமானது," அதாவது அவர் ஒரு மனித நபரானார் என்று யோவான் *1:14* கூறுகிறது. அவர் மாம்சத்தில் ஒரு மனித நபரானபோது, அவர் பாவ

மாம்சத்தில்தான் ஒரு மனித நபரானார். ஏனென்றால் அந்நேரத்தில், பாவம் மனித மாம்சத்துக்குள் இருந்தது. மாம்சம் பாவ மாம்சமாக மாறியிருந்தது. கர்த்தர் இந்த மாம்சத்தில் மனுவுருவானார். இருந்தபோதும் இதில் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஏனென்றால் நம் மாம்சத்தில் பாவ சுபாவம் இருக்கிறது. எனவே நம் மாம்சத்தைப்போன்ற அதே மாம்சமாக அவர் ஆனார் என்று நாம் சொல்வோமென்றால் நாம் தவறுசெய்கிறோம். எனவே அவர் பாவ மாம்சத்தின் வெறும் *சாயலாகத்தான்* மாறினார் என்றும், பாவ மாம்சத்தின் *பாவ சுபாவமாக மாறவில்லை* என்றும் ரோமர் *8:3* கூறுகிறது.

கம்பத்தில் தொங்கிக்கொண்டிருந்த வெண்கல சர்ப்பம் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்னடையாளம் என்று யோவான் *3:14*-ல் அவரே கூறுகிறார். கம்பம் - சிலுவை. வெண்கல சர்ப்பத்துக்கு சர்ப்பத்தின் *சாயல் மட்டும்* இருந்தது. சர்ப்பத்தின் *விஷம் நிறைந்த சுபாவம்* இருக்கவில்லை. பாவ மாம்சத்தின் சாயலை உடையவராயிருக்குமாறு கர்த்தராகிய இயேசு கன்னியிடம் பிறந்தார். ஆனால் மாம்சத்தின் பாவ சுபாவத்தைப் பொறுத்தவரை, அவருக்கும் மனிதனுக்கும் எந்தவிதச் சம்பந்தமும் கிடையாது. இந்த விஷயத்தைப்பற்றி நாம் மிக ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கர்த்தர் பாவமாக்கப்பட்டபோது, பாவத்தின் *சாயலில்* ஆக்கப்பட்டார்.

அவர் மனிதனை மட்டும் தம்மேல் தரித்துக்கொள்ளவில்லை. மாறாக சாத்தான், சாத்தானின் இராஜ்ஜியம், உலகம், பாவம், பாவங்கள், மாம்சம் போன்ற பலவற்றையும் அவர் தம்மேல் தரித்துக்கொண்டார். இங்கே மீண்டும் நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். கர்த்தர் சர்ப்பமாக அல்ல, மனிதனாகத்தான் மனுவுருவெடுத்தார். ஆனால் அவர் சிலுவையில் அறையப்பட்டார். ஏன்? ஏனென்றால் அந்தக் கட்டத்தில் மனிதனும் சர்ப்பமாகிய சாத்தானும் ஒன்றாயிருந்தார்கள். எனவேதான் கர்த்தராகிய இயேசுவும், யோவான் ஸ்நானகனும்கூடப் பரிசேயர்களைப் பார்த்து சர்ப்பத்தின் வித்து என்றும், விரியன்பாம்புக் குட்டிகள் என்றும் சொன்னார்கள். அவர்களே சர்ப்பத்தின் வித்து. ஏனென்றால் அவர்களிடம் சர்ப்பத்தின் ஜீவன் இருந்தது. அவர்களிடம் சர்ப்பத்தின் விஷமுள்ள சுபாவம் இருந்தது. தேவனுடைய பார்வையில், அவர்கள் பாவ மக்களாக, சர்ப்பமாக மாறியிருந்தார்கள். ஆனால் கர்த்தர் மனிதனாக மனுவுருவெடுத்தபோது, அவரிடத்தில் பாவ மாம்சத்தின் சாயல் மட்டுமே இருந்தது; அந்தப் பாவ மக்களிடம் இருந்த பாவ சுபாவம் அவரிடம் இருக்கவில்லை. கம்பத்திலே உயர்த்தப்பட்ட வெண்கல சர்ப்பத்தைப்போல, கர்த்தரிடம் சர்ப்பத்தின் சாயல்

மட்டுமே இருந்தது; சர்ப்பத்தின் சுபாவமே, விஷமோ இல்லை.

நாம் இப்போது சிலுவைக்கு வருகிறோம். பழைய சிருஷ்டிப்பின் சகல காரியங்களையும் தன்னுள் கொண்டிருந்த இப்பேர்ப்பட்ட மனிதனை, முதலாவது, அவர் தம்மேல் தரித்துக்கொண்டார். பின்பு இந்த மனிதனைச் சிலுவைக்குக் கொண்டுவந்தார். அங்கு சிலுவையில் சகலத்தையும் உள்ளடக்கிய இந்த மனிதன் அறையப்பட்டான். இதன் பொருள் என்னவென்றால், சகல காரியங்களுக்கும் ஒரு முடிவு கட்டப்பட்டது. இதுவே சிலுவையின் கோட்பாடு. இத்தகைய மரணத்தினால் கிறிஸ்து மனிதனைச் சிலுவைக்குக் கொண்டு வந்தார். அதனால் எல்லாவற்றுக்கும் ஒரு முடிவுகட்டினார். கிறிஸ்து மட்டும் அங்கு சிலுவையில் அறையப்படவில்லை. மனிதன், உலகம், சாத்தான், சாத்தானின் இராஜ்ஜியம், பாவம், பாவங்கள், பழைய மனிதன் போன்ற பல காரியங்களும்கூட அங்கு சிலுவையில் அறையப்பட்டன. கிறிஸ்துவின் சிலுவையினால் பழைய சிருஷ்டிப்பின் சகல காரியங்களும் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. சகலத்தையும் உள்ளடக்கிய இந்த மரணம் நம் அனுபவமாக மாறவேண்டும்.

பழைய சிருஷ்டிப்பின் சகல காரியங்களுக்கும் முடிவுகட்டுகிற சிலுவையின் கோட்பாட்டைப் பின்வரும் வசனங்கள் வெளிப்படுத்துகின்றன:

1) தூதனின் ஜீவன்: கொலோசெயர் 1:20;
2) மனிதன் ஜீவன்: கலாத்தியர் 2:20;
3) சாத்தான்: எபிரேயர் 2:14, யோவான் 12:31;
4) சாத்தானின் இராஜ்ஜியம்: கொலோசெயர் 2:15, யோவான் 12:31;
5) பாவம்: 2 கொரிந்தியர் 5:21, ரோமர் 8:3;
6) பாவங்கள்: 1 பேதுரு 2:24, ஏசாயா 53:6;
7) உலகம்: கலாத்தியர் 6:14, யோவான் 12:31;
8) மரணம்: எபிரேயர் 2:14;
9) மாம்சம்: கலாத்தியர் 5:24;
10) பழைய மனிதன்: ரோமர் 6:6;
11) சுயம்: கலாத்தியர் 2:20;
12) சகல காரியங்கள் அல்லது சிருஷ்டிப்பு: கொலோசெயர் 1:20.

உலகமும், உலகத்தின் அதிபதியாகிய சாத்தானும் நியாயந்தீர்க்கப்பட்டுப் புறம்பாகத் தள்ளப்படுவார்கள் என்று யோவான் 12:31 கூறுகிறது. இது எப்போது நிகழ்ந்தது? 24-ஆம் வசனத்தின்படி கிறிஸ்துவின் சிலுவைமரணத்தின்போதுதான் இது நிகழ்ந்தது. அவருடைய மரணத்தினால், உலகம் நியாயந்தீர்க்கப்

பட்டு, உலகத்தின் அதிபதி புறம்பாகத் தள்ளப்பட்டான். மரணத் துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தம் மரணத்தினாலே அழிக்குமாறு அல்லது ஒழிக்குமாறு கிறிஸ்து மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார் என்று எபிரேயர் *2:14* தெரிவிக்கிறது. கிறிஸ்து மாம்சத்திலும், இரத்தத்திலும் அடைந்த, தம் மரணத்தினால் மரணத்துக்கு அதிகாரியாகிய சாத்தானை அழித்தார் அல்லது ஒழித்தார் என்று இந்த வசனம் வெளிப்படுத்துகிறது. அவர் "சகல காரியங்களையும்" தம்மோடு தாமே ஒப்புரவாக்கிக்கொண்டார் என்று கொலோசெயர் *1:20* கூறுகிறது. எனவே மனிதன் மட்டுமின்றி, சகல காரியங்களும் தேவனுடன் தவறான நிலையில்தான் இருந்தன என்று இது நிரூபிக்கிறது. இல்லையென்றால் ஒப்புரவாவதற்கு அங்கு அவசிய மில்லை. இந்தப் பத்தியின் அமைப்பின்படி, சகல சிருஷ்டிப்பும் சிலுவையினால் முடிவுகட்டப்பட்டது.

கிறிஸ்து சிலுவையிலடைந்த இப்பேர்ப்பட்ட மரணம் நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். அந்த மரணம் சகலத்தையும் உள்ளடக்கிய மரணம் - இதனால்தான் நாம் இதை அனுபவிக்க வேண்டும். நம்மிடத்தில் இருப்பவையெல்லாம், நாம் என்னவாக வெல்லாம் இருக்கிறோமோ அவைகளெல்லாம், நாம் செய்வதெல் லாம், நமக்கு எவைகளுடனெல்லாம் தொடர்பு உண்டோ அவைகளெல்லாம் சிலுவைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. *சிலுவையே நம்முடன் தொடர்புடைய சகல காரியங்களுக்கும் முடிவு.* எல்லாம் சிலுவையில் கையாளப்பட்டுள்ளன, ஏற்கெனவே அறையப்பட்டுவிட்டன. நாம் என்னவாகவெல்லாம் இருக்கிறோ மோ, நம்மிடம் என்னவெல்லாம் இருக்கிறதோ, அவை எல்லாவற் றிற்கும் ஒரே ஆதாரம் சிலுவையே. நம் அறிவு, நம் ஞானம், நம் திறமை போன்ற சகல காரியங்களையும் நாம் சிலுவையில் கிடத்திவிடவேண்டும். இதுதான் சிலுவையின் கோட்பாடு. வேறு ஆதாரம் இல்லை. நாம் எவ்வளவு நல்லவர்கள் என்று நாம் நினைக்கக்கூடும். குறிப்பாக வாலிபர்கள் தாங்கள் மிகவும் நல்லவர்கள் என்றே எப்போதும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். "நாங்கள் வாலிபர்கள், நாங்கள் நல்லவர்கள், நாங்கள் வயதான கிழவர்களைப் போன்றவர்களல்ல..." நாம் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும், நாம் சிலுவைக்கு வந்தாகவேண்டும், நாம் சிலுவையிலறையப்படவேண்டும், கிறுக்கித்தள்ளப்பட வேண்டும். எவ்வளவு அதிகமாக நாம் நல்லவர்களாக இருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் கிறுக்கித்தள்ளப்பட வேண்டும். நீங்கள் நல்லவர்கள் என்று ஒருபோதும் பெருமைப்படாதீர்கள். நாம் நல்லவர்களா, கெட்டவர்களா என்பது ஒரு பொருட்டல்ல. நாமெல்லாரும் சிலுவையினூடாய்க்

கடந்துசெல்லவேண்டும். நாம் நம்மைத் தவறாக மதிப்படக்கூடாது. ஒரேவொரு மதிப்பீடுதான் உண்டு, அதாவது நாம் நம்மை சாகக்கொடுக்கவேண்டும்.

பழைய சிருஷ்டிப்புக்குரிய எதுவும் சபையில் இல்லை. சபை புதிய மனிதன், புதிய சிருஷ்டிப்பு. பழைய காரியங்களனைத்தும் ஒழிந்துபோயின; எல்லாம் புதிதாயின. சகல காரியங்களும் மரணத்தில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, எல்லாம் உயிர்த்தெழுதலில் புதிதாக இருக்கின்றன என்பதுதான் இதன் பொருள். நாம் இப்போது சிலுவையின் கோட்பாட்டைப் பார்த்திருக்கிறோம். அடுத்த அதிகாரத்தில் உயிர்த்தெழுதலின் கோட்பாட்டைப் பார்ப்போம். நம்முடன் தொடர்புடைய சகல காரியங்களும், அவை நல்லவைகளோ பொல்லாதவைகளோ, எதுவானாலும் சரி அவையெல்லாம் அடியோடு கொல்லப்படவேண்டும் என்பதைப் பார்ப்பதற்கு நம் மனங்கள் திறந்திருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அப்போதுதான் உயிர்த்தெழுதலுக்கும், புதிய சிருஷ்டிப்புக்கும் வருவதற்கு நமக்கு வழியுண்டாயிருக்கும்.

## அத்தியாயம் பதினைந்து

# உயிர்த்தெழுதலின் கோட்பாடு

கடந்த அதிகாரத்தில், பழைய சிருஷ்டிப்பின் பன்னிரண்டு காரியங்களை நாம் பரிசீலித்தோம்; அதில் முதலாவது காரியம் தேவதூதனின் ஜீவன். ஆனால் விழுந்துபோகாத தூதர்கள் பழைய சிருஷ்டிப்பில் சேர்க்கப்படவில்லை என்று நாம் இங்கே சுட்டிக்காட்டியாகவேண்டும். ஒரு காலத்தில் அவர்கள், "சகல தூதர்களின் முன்னாள் தலைவனாகிய" சாத்தானின் தலைமையின்கீழ் இருந்தபோதும், அவனுடைய முரட்டாட்டத்தில் அவர்கள் அவனை ஒருபோதும் பின்பற்றவில்லை. ஆகையால் அவர்கள் பழைய சிருஷ்டிப்பிலிருந்து வேறுபட்டவர்கள். சாத்தானைப் பின்பற்றிப்போய் கலகம்பண்ணின தூதர்கள் மட்டுமே பழைய சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாக மாறினார்கள். இவ்வாறு பழைய சிருஷ்டிப்பின் எதிர்மறையான பன்னிரண்டு காரியங்களில் முதல் காரியமான தூதர்களின் ஜீவனில் அந்த நல்ல தூதர்கள் சேர்க்கப்படவில்லை. விழுந்துபோன தூதர்கள் கலகம்பண்ணினபிறகு துரைத்தனங்களாகவும், அதிகாரங்களாக வும், ஆட்சியாளர்களாகவும், வானமண்டலங்களிலுள்ள கர்த்தத்துவங்களாகவும் மாறினார்கள் (எபே. 1, 2, 6; கொலோ. 2). எபேசியர் 6-ல் குறிப்பிடப்பட்டுள்ள பொல்லாத ஆவிகள் விழுந்துபோன தூதர்கள். கிறிஸ்துவின் சிலுவைமரணத்தால் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பழைய சிருஷ்டிப்பின் கணக்கில் கலகம்பண்ணாத பெரும்பான்மையான தூதர்கள் சேரமாட்டார்கள்.

இருப்பினும், மனித இனத்தில் யாருக்குமே இப்படிப்பட்ட விதிவிலக்குக் கிடையாது. ஏனென்றால் முழு மனுக்குலமும் எதிரியின் முரட்டாட்டத்துக்குள் விழுந்தது. மனித இனத்தின் முரட்டாட்டம் முதல் மனிதனாகிய ஆதாமிடம் ஆரம்பித்தது: அவனுடைய எல்லாச் சந்ததிக்கும் இந்த முரட்டாட்டத்தில் பங்குண்டு. கலகம்செய்த தூதர்களென்றும், ஒருபோதும் கலகம்செய்யாத தூதர்களென்றும் தூதர்களுக்குள் இரண்டு குழுக்கள் இருக்கின்றன. ஆனால் மனித இனத்தைப் பொறுத்தவரை ஒரேவொரு குழுதான் உண்டு. விழுந்துபோன மனித இனத்துக்கு ஆதாம் பிரதிநிதியாக இருக்கிறான்; அது ஆதாமின் தலைமையின்கீழ் இருக்கிறது. எனவே ஆதாமின்மூலம் முழு மனித இனமும் விழுந்துபோன பழைய சிருஷ்டிப்பில் சேர்க்கப்பட்டிருக் கிறது.

மெய்யாகவே, கலகக்காரத் தூதர்களின் தலைவனாகிய சாத்தான் பழைய சிருஷ்டிப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறான். சாத்தான் தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தித் தன் இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினான் (மத். 12:26). ஏசாயா 14:12-14, எசேக்கியேல் 28:13, 14, லூக்கா 4:5-7-ன்படி ஆதியில் சாத்தான் தூதர்களின் தலைவனாகத் தேவனால் நியமிக்கப்பட்டான். எனவே அவன் தேவனிடமிருந்து கொஞ்சம் அதிகாரத்தைப் பெற்றிருந்தான். கர்த்தராகிய இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபோது சாத்தானுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப் பதை ஒப்புக்கொண்டார். தங்கள் வல்லமையையும் அதிகாரத் தையும் தவறாகப் பயன்படுத்தின ஒரு கூட்டம் தூதர்களைக் கொண்டு சாத்தான் தன் ஆட்சியின்கீழ் தன் இராஜ்ஜியத்தை ஏற்படுத்தினான்.

மனிதன் சிருஷ்டிக்கப்பட்டபின்பு அவனைப் பாவம்செய்யத் தூண்டுவதற்குச் சாத்தான் வந்தான்; மனிதனில் பாவம் இருந்ததால், பாவங்கள் என்றழைக்கப்படும் அநேகக் கனிகள் உற்பத்திசெய்யப்பட்டன. மனிதனின் வீழ்ச்சியைத் தொடர்ந்து அவனுடைய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான சாப்பிடுதல், உடுத்துதல், திருமணம், வீடு போன்ற பல காரியங்களைச் சாத்தான் பயன்படுத்திக்கொண்டான். இந்த அத்தியாவசியத் தேவைகளெல்லாம் மனிதன் வாழ்வதற்காகத் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவை, நியமிக்கப்பட்டவை. ஆனால் முழு மனித இனத்தையும் 'அமைப்புமுறைப்படுத்த' சாத்தான் அவைகளைப் பயன்படுத்தினான். சாத்தானுக்குரிய 'அமைப்புமுறைதான்' உலகம் என்றழைக்கப்படுகிறது.

பாவம், பாவங்கள், உலகம் ஆகியவைகளின் விளைவாக மனித இனத்துக்குள் மரணம் வந்தது; மனிதனுடைய வீழ்ச்சியால் சாத்தான் தன் சொந்த சுபாவத்துக்குரிய ஒன்றை ஊசிமூலம் செலுத்துவதைப்போல் மனித சரீரத்துக்குள் செலுத்தினான். இப்படி மனித சரீரத்தைக் கெடுத்து அதின் நிலையையும் தரத்தையும் மாற்றி, இதை மாம்சமாக்கிவிட்டான். வீழ்ச்சியின் இன்னொரு விளைவு என்னவென்றால் மனிதன் முழுவதும் மாற்றப்பட்டு, பழைய மனிதனாகிவிட்டான். அது மட்டுமின்றி, மனிதனின் ஆத்துமா மாம்சத்தின் பயமுறுத்துதலாலும் ஆதிக்கத்தாலும் சுயமாக மாறினது. ஆதியில் ஆத்துமா நல்லதாகத்தான் சிருஷ்டிக்கப்பட்டது. ஆனால் வீழ்ச்சியின் விளைவால் ஆத்துமா சுயமாக மாறிற்று.

சாத்தான் தூதர்களின் தலைவனாக இருந்தான்; ஆதாம் மீதிச் சிருஷ்டிப்பின் தலைவனாக இருந்தான். ஆனால் இரண்டு பிதிநிதிகளுமே கலகம்பண்ணினார்கள். இதன் விளைவாக, சர்வ

சிருஷ்டிப்பும் பாதிக்கப்பட்டது (ரோமர் 8:20-22, கொலோ. 1:20). எனவே அது கிறிஸ்துவின் மீட்பினால் ஒப்புரவாக்கப்பட வேண்டியிருந்தது.

## நித்திய ஆவியில் சகலத்தையும் உள்ளடக்கிய மரணம்

இந்தக் காரியங்களைனைத்தும் ஒன்றுசேர்ந்ததுதான் பழைய சிருஷ்டிப்பு. நாம் ஏற்கெனவே பார்த்தபடி விழுந்துபோன மனிதன் பழைய சிருஷ்டிப்பின் மையமாகவே மாறினான். முழுப் பிரபஞ்சத்தின் எல்லா எதிர்மறையான காரியங்களும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு மனிதனில் குவிக்கப்பட்டன. சாத்தான் தன் இராஜ்ஜியம், உலக அமைப்புமுறை, பாவம், பாவங்கள், மரணம், சுயம், மாம்சம், பழைய மனிதன் ஆகியவைகளோடு மனிதனில் வாசமாயிருந்தான். பிரபஞ்சத்தின் எதிர்மறையான எல்லாக் காரியங்கள் உட்பட, பழைய சிருஷ்டிப்பின் எல்லாக் காரியங்களும் விழுந்துபோன இந்த மனிதனில் மையங் கொண்டிருந்தன.

அப்போது கிறிஸ்து மனிதனாக மனுவுருவானார், கிறிஸ்து மனிதனை - அற்பமான, சாதாரணமான மனிதனை அல்ல, மாறாகப் பழைய சிருஷ்டிப்பின் சகல காரியங்களையும் உள்ளடக்கிய மனிதனை - தம்மேல் தரித்துக்கொண்டார். எனவேதான் கிறிஸ்து மனிதனாக மனுவுருவெடுத்தார். அவர் மனிதனாகச் சர்ப்பத்தின் சாயலில் சிலுவையிலறையப்பட்டார். சிலுவைக்குச் செல்வதற்குமுன்பு கிறிஸ்து வெறும் மனிதர். ஆனால் சிலுவையின்மேல் அவர் சர்ப்பத்தின் *சாயலில்* இருந்த மனிதர். மேலும் கிறிஸ்து சிலுவையின்மேல் பாவமாக்கப்பட்டார் (2 கொரி. 5:21). அவர் சிலுவையில் தொங்கியபோது தேவன் அவர்மேல் நமது பாவங்களைச் சுமத்தினார். அது மட்டுமல்ல. தேவன் அவரைப் பாவமும் ஆக்கினார். மனித இனத்தின் சகல அக்கிரமங்களையும், சகல பாவங்களையும் தேவன் கிறிஸ்துவின்மேல் சுமத்தினார். அதே வேளையில் கிறிஸ்துவை அவர் சாத்தானின் சாயலில் பாவமும் ஆக்கினார். பிரபஞ்சத்தின் எதிர்மறையான எல்லாக் காரியங்களும் விழுந்துபோன மனிதனில் குவிக்கப்பட்டு, மையங்கொண்டிருந்ததால், கிறிஸ்து இந்த மனிதனுக்கள் வந்து, இந்த மனிதனைச் சிலுவைக்குக் கொண்டுசென்றார். அவர் இந்த மனிதனைச் சிலுவைக்குக் கொண்டுசென்றபோது பிரபஞ்சத்தின் எல்லா எதிர்மறையான காரியங்களையும் அவர் சிலுவைக்குக் கொண்டுசென்றார். அவர் இந்த மனிதனுக்கு ஒரு முடிவுகட்டியபோது, பழைய சிருஷ்டிப்புக்கும்கூட ஒரு முடிவுகட்டினார். பழைய சிருஷ்டிப்பின் பன்னிரண்டு காரியங்களும் சிலுவையில், கிறிஸ்துவின்

சகலத்தையும் உள்ளடக்கிய மரணத்தினால், முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. பரலோகப் பார்வையும், ஆவிக்குரிய வெளிச்சமும் இருக்குமானால் நாம் குதித்தெழுந்து, "அல்லேலூயா" சொல்வோம்.

எசேக்கியேல் புத்தகத்தின் கடைசி அதிகாரங்கள் தேவாலய மாகிய தேவனுடைய வீடு கட்டப்படுவதைக் காட்டுகின்றன. முழுப் படத்தையும் ஒரு தாளில் வரைந்தால், சரியாக முழுக் கட்டிடத்தின் மையத்தில் சிலுவையின் முன்னடையாளமாகிய பலிபீடம் அமைக்கப்பட்டிருப்பதை நாம் காணலாம். கட்டிடத்தின் செங்குத்தான மற்றும் கிடைமட்டமான இரண்டு அளவுகளும் பலிபீடம் தேவாலயத்தின் மையத்திலிருப்பதாகவே கட்டிக்காட்டு கின்றன. இது மிக சுவாரஸ்யமானது. ஏனென்றால் இது சிலுவையின்மூலம் பழைய சிருஷ்டிப்பு முழுவதையும் முடிவுக்குக் கொண்டுவந்த கிறிஸ்துவின் சகலத்தையும் உள்ளடக்கிய மரணத்தைச் சித்திரிக்கிறது.

சகலத்தையும் உள்ளடக்கிய இந்த மரணம் *நித்திய ஆவியினால்* நிறைவேற்றப்பட்டது. எபிரேயர் 9:14-ல், "நித்திய ஆவியினாலே தம்மைத் தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்து..." என்று நாம் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் சகலத்தையும் உள்ளடக்கிய மரணம் நித்திய ஆவியில் நிகழ்ந்தது. நித்திய ஆவி என்ற இந்தச் சொற்றொடர் வேதத்தில் ஒரேவொருமுறைதான் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்து மனிதனில் மனுவுருவெடுத்தபோது, பிரபஞ்சத்தின் சகல எதிர்மறையான காரியங்களையும்கொண்ட சர்வ சிருஷ்டிப்பின் மையமாகவே அவர் மாறினார். விழுந்துபோன இந்த மனிதனைக் கிறிஸ்து சிலுவையில் மரணத்துக்குக் கொண்டுவந்தபோது அவர் இதை நித்திய ஆவியில் செய்தார். தொடக்கமும், ஒருபோதும் முடிவுமில்லாத நித்தியமான ஆவியில், அவர் சகலத்தையும் உள்ளடக்கிய இந்த மனிதனை முடித்துவிட்டார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கிறிஸ்துவின் மரணம் நித்திய ஆவியைத்தவிர மற்றெல்லாவற்றையும் முடித்துவிட்டது. எதிர்மறையான காரியங்கள் எல்லாவற்றையும் கிறிஸ்து தம்முடன் சிலுவைக்குக் கொண்டுவந்து அவைகளைப் பரிகரித்தார். ஆனால் அவரோ மாறாதவராகவே இருக்கிறார். ஏனென்றால் அவர் நித்திய ஆவியில் இருக்கிறார். எல்லாக் காரியங்களும் சிலுவையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோதும் அவருடைய ஆவியை ஒருபோதும் முடிக்கமுடியவில்லை. ஆகையால் இந்த ஆவியினால்தான் கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார். எதிர்மறையான எல்லாக் காரியங்களையும், கிறிஸ்து மனிதனாக மரணத்துக்குக் கொண்டுவந்தார். எல்லாக் காரியங்களும்

*மரணத்துக்குள் கடந்துசென்றன; அவை முடிவுக்குக்* கொண்டுவரப்பட்டன. நித்திய ஆவி மட்டுமே *மரணத்தினூடாய்க்* கடந்துசென்றார்; அழியாது நிலைத்திருக்கிறார். இந்த ஆவியிலும், இந்த ஆவியாலுமே கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார்.

"கிறிஸ்து பரிசுத்தத்தின் ஆவியின்படி தேவனுடைய சுதனென்று மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவ குமாரனுமாயிருக்கிறார்," என்று ரோமர் 1:5 கூறுகிறது. பரிசுத்தம் எதைக் குறிக்கிறது? பரிசுத்த ஆவி என்பதற்குப் பதிலாகப் பரிசுத்தத்தின் ஆவி என்று ஏன் சொல்லப்பட்டிருக்கிறது? பரிசுத்தம் என்பது வெறுமனே பிரிக்கப்படுவதைத்தான் குறிக்கிறது. இந்த நித்திய ஆவி மரணத்துக்குள் சென்றபோதும் அவர் பிரிக்கப்பட்ட ஆவியாக இருந்தார், இன்னும் இருக்கிறார். மரணத்தால் மற்றெல்லாவற்றையும் அழிக்கமுடிந்தது. ஆனால் மரணத்தால் நித்திய ஆவியை அழிக்க முடியவில்லை. அவர் எல்லாக் காரியங்களிலிருந்தும் வேறுபட்டவர், பிரிக்கப்பட்டவர். மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினால் அவர் பரிசுத்தத்தின் ஆவி என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறார். சில புத்தகங்களையும் வேறு சில காரியங்களையும் வேண்டாம் என்று நான் குப்பைத்தொட்டியில் எறிந்துவிடலாம். ஆனால் ஒரு மனிதனை நான் குப்பைத்தொட்டியில் போட்டால், அவன் குதிதெழுந்துவிடுவான். அவனை ஒரு முடிவுக்குக்கொண்டுவருவதை அவன் விரும்ப மாட்டான்; அவன் புத்தகங்களிலிருந்து வித்தியாசமானவன். வெளியே குதித்துவருவதின்மூலம் மற்ற காரியங்களிலிருந்து அவன் தன்னைப் பிரித்துக்கொள்கிறான். அவன் பிரிக்கப்பட்ட மனிதனாக மாறிவிடுகிறான். அந்தப்படியே மனிதன், சாத்தான், மற்ற எல்லாக் காரியங்களும் சிலுவைக்குச் சென்றன; ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன, ஆனால் கிறிஸ்துவுடனேகூடச் சிலுவைக்கும், மரணத்துக்கும் சென்ற நித்திய ஆவியை மாத்திரமே ஒருபோதும் முடிவுக்குக்கொண்டுவர முடியவில்லை. அவர் பிரிக்கப்பட்ட ஆவி. மரணம் தன்னால் இயன்ற எல்லாவற்றையும் செய்தது. ஆனால் மரணத்தால் இந்த ஆவியானவரைத் தன் பிடியில் வைத்துக்கொள்ளமுடியவில்லை. பிரிக்கப்பட்ட இந்த ஆவியால்தான், வித்தியாசமான இந்த ஆவியால்தான், கிறிஸ்து உயிரோடு எழுப்பப்பட்டார்.

## நித்திய ஆவியில் உயிர்த்தெழுதலின் நிஜம்

"அன்றியும் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற

தம்முடைய ஆவியானலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்," என்று ரோமர் 8:11 கூறுகிறது. இயேசுவை மரித்தோரிலிருந்து உயிரோடு எழுப்பினவர் யார்? நம்மில் வாசமாயிருக்கிற உயிர்த்தெழுந்த ஆவியானவரே. சாவுக்கேதுவான நம் சரீரங்களை எந்த ஆவியானவர் உயிர்ப்பித்தார்? பிரிக்கப்பட்ட அதே ஆவியானவரே. இதன் பொருள் என்னவென்றால் உயிர்த்தெழுதலின் நிஜமும், உயிர்த்தெழுதலின் கோட்பாடும் நம்மில் வாசமாயிருக்கின்றன. நித்திய ஆவியை மரணத்தால் ஒருபோதும் முடிவுக்குக்கொண்டுவரமுடியவில்லை, முடியாது. இந்த நித்திய ஆவியினால் நிறைவேற்றப்பட்ட பிரித்தல்தான் உயிர்த்தெழுதலின் கோட்பாடு.

உயிர்த்தெழுதலின் கோட்பாடு பிரிக்கப்பட்ட நித்திய ஆவியில் இருக்கிறது என்பதைப் பார்க்கும்போது இந்த ஆவியானவர் இன்று எங்கே இருக்கிறார் என்று நாம் கேட்கவேண்டும்? "அல்லேலூயா, அவர் என்னில் இருக்கிறார்," என்று நாம் சொல்லவேண்டும். ஆகையால் உயிர்த்தெழுதலின் இந்தக் கோட்பாடும் நம்மில் இருக்கிறது. எல்லாம் மரணத்தினால் அழிக்கப்பட்டன; ஆகையால் இப்போது நித்திய ஆவி நம்மில் வாசமாயிருக்கிறார் என்ற சிலுவையின் கோட்பாட்டையும், உயிர்த்தெழுதலின் கோட்பாட்டையும் பார்ப்பதற்குக் கர்த்தர்தாமே நம் கண்களைத் திறப்பாராக. நாம் இதைப் பார்ப்போமானால், மனித வரம்பைக் கடந்தவர்களாகி விடுவோம். நாம் "அல்லேலூயா" என்று சொல்வோம். பிச்சைகேட்கவோ, வேண்டவோ, கதறவோ வேண்டிய தேவையில்லை. எல்லா நேரமும் நாம் "அல்லேலூயா" மாத்திரமே சொல்லவேண்டியிருக்கும்.

கிறிஸ்துவே உயிர்த்தெழுதல் என்று யோவான் 11:25 கூறுகிறது. கர்த்தர் மிகவும் தாமதமாக வந்தார் என்று மரித்த லாசருவின் சகோதரி மார்த்தாள் முறையிட்டாள். உயிர்த்தெழுதலும், ஜீவனும் நேரத்தைப்பொறுத்த ஒரு காரியம் என்று அவள் நினைத்தாள். கர்த்தர் நேரத்தோடே வந்திருந்தாள் அவளுடைய சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்று அவள் வாதாடினாள். மாறாக உண்மையில், அது நேரத்தையோ அல்லது இடத்தையோபற்றிய காரியமன்று; அது கிறிஸ்துவைப்பற்றிய காரியம் என்று கர்த்தர் அவளிடத்தில் சொன்னார். "நானே உயிர்த்தெழுதல்" என்று அவர் சொன்னார். நேரத்தையும், இடத்தையும் மறந்துவிடுங்கள். *கிறிஸ்து எங்கெல்லாம் இருக்கிறாரோ, கிறிஸ்து எப்போதெல்லாம் இருக்கிறாரோ,* அங்கே எப்போதுமே உயிர்த்தெழுதல் உண்டு.

கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளில் சீடர்களிடத்தில் வந்தபோது, அவர்கள்மேல் சுவாசத்தை ஊதி, "பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்," என்றார். அவர்கள் பெற்றுக்கொண்ட இந்த

ஆவியானவரில்தான் உயிர்த்தெழுதலின் கோட்பாடும், நிஜமும் அடங்கியிருந்தன. இந்த ஆவியானவர் இல்லாமல் அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் சீடர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இருக்கமுடியாது. இந்த ஆவியானவரில்தான் கிறிஸ்துவின் உயிர்த் தெழுதல் இருக்கிறது. இந்த ஆவியானவர் நம்மிடம் இருந்தால், உயிர்த்தெழுதலின் நிஜம் நம்மிடத்தில் இருக்கிறது என்று பொருள். இந்த ஆவியானவர் நம்மிடம் இல்லையென்றால், உயிர்த் தெழுதலுக்கும் நமக்கும் எந்தச் சம்பந்தமும் கிடையாது. கிறிஸ்துவே உயிர்த்தெழுதல், ஒருபோதும் அழிக்கமுடியாத நித்திய ஆவியே கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் கோட்பாடும், நிஜமுமாவார். தொடக்கமும் முடிவும் இல்லாத இந்த நித்திய ஆவியே உயிர்த்தெழுதலின் மெய்யான கோட்பாடும், மெய்யான நிஜமுமாவார். மரணத்துக்குள்ளாக்கப்படும் வேறெதுவானாலும் அழிந்துபோகும். நித்திய ஆவி மட்டுமே மரணத்தினால் பிடித்துவைக்கப்படவோ, அழிக்கப்படவோ முடியாதவர். எனவேதான் உயிர்த்தெழுந்தபின்பு, கிறிஸ்துவே உயிர்த் தெழுதலாகத் தம் சீடர்களிடத்தில் வந்து, அவர்கள்மேல் ஊதி, தம் சுவாசத்தை, பிரிக்கப்பட்ட ஆவியாகிய நித்திய ஆவியாகப் பெற்றுக்கொள்ளுமாறு அவர்களுக்குச் சொன்னார். இந்த நித்திய ஆவியானவரே உயிர்த்தெழுதலின் கோட்பாடாகவும், உயிர்த்தெழுதலின் நிஜமாகவும் சீடர்களுக்குள் வந்தார். இந்தக் கோட்பாடும், இந்த நிஜமும் இப்போது நம்மில் இருக்கின்றன.

நாம் இதைப் புரிந்துகொள்வதற்கு இன்னும் இரண்டு வசனங்கள் உதவுகின்றன. பிலிப்பியர் *1:19*-ல் பவுல், "இயேசுகிறிஸ்துவினுடைய ஆவியின் உதவியைப்" பற்றிப் பேசுகிறார். "நான் சிறையில் இருக்கிறேன். ஆனால் பயப்பட வில்லை. ஏனென்றால் உயிர்த்தெழுதலின் கோட்பாடும், நிஜமும் எனக்குள்ளே இருக்கின்றன. எனக்குள் இருக்கும் இந்த உயிர்த்தெழுதல் என்ன? இது உதாரத்துவமான, சகலத்தையும் உள்ளடக்கிய, சகலத்துக்கும் போதுமான நிரப்பீட்டைக்கொண்ட இயேசுவின் ஆவியே," என்று அவர் சொல்வதுபோல் தோன்றுகிறது. பின்னர் பிலிப்பியர் *3:10*-ல் "நான் அவரையும், அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும்...அறிகிறதற்கும்," என்று அவர் கூறுகிறார். அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை என்றால் என்ன? இயேசுவின் ஆவியினுடைய நிரப்பீடே அது. உதாரத்துமான, சகலத்தையும் உள்ளடக்கிய, சகலத்துக்கும் போதுமான இயேசுவின் ஆவியினுடைய நிரப்பீடே அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமை. இந்த வல்லமையும், இந்த நிரப்பீடும் பிரிக்கப்பட்ட ஆவியாகிய நித்திய ஆவியேதவிர வேறொன்று மல்ல. இருந்தபோதும் இந்த ஆவியானவர் இன்று நமக்குள்

இருக்கிறார்! இது போதாதா? இதைவிட நமக்கு வேறென்ன வேண்டும்? நாம் "அல்லேலூயா" சொல்லவேண்டும். அவருடைய சிலுவைக்காக நாம் அவருக்கு நன்றிசொல்லவேண்டும். அவருடைய ஆவிக்காகவும் நாம் அவரைத் துதிக்கவேண்டும். அவருடைய சிலுவை எதிர்மறையான யாவற்றையும் அழித்துவிட்டது. இப்போது அவருடைய நித்திய ஆவி, உயிர்த்தெழுதலின் வல்லமையாக நமக்குள்ளே வாசம்பண்ணுகிறார்.

சுருங்கச்சொன்னால், நாம் நித்திய ஆவியில் இல்லையென்றால், சிலுவையில் நிஜமான அனுபவத்தை நம்மால் ஒருபோதும் பெறமுடியாது. நாம் எவ்வளவுதான் அதைப்பற்றி அறிந்திருந் தாலும், எவ்வளவுதான் அதைப்பற்றிப் பேசினாலும், நாம் நித்திய ஆவியில் இல்லையென்றால், சிலுவையின் வல்லமையை நம்மால் ஒருபோதும் அனுபவிக்கமுடியாது. எவ்வளவு அதிகமாகப் பிரிக்கப்பட்ட நித்திய ஆவியில் நாம் வாழ்கிறோமோ, நடக்கிறோமோ அவ்வளவு அதிகமாக சிலுவையின் கொல்லும் வல்லமையை நாம் உணர்ந்துகொள்வோம். நம்மை மரித்தவர் களாக எண்ணிக்கொள்ளவேண்டிய அவசியம் இனிமேல் இல்லை. இது ஆவிக்குரிய தற்கொலை செய்வதாகும். கர்த்தருக்கு ஸ்தோத் திரம்! அநேகக் கிறிஸ்தவர்கள் தினந்தோறும் ஆவிக்குரிய தற்கொலைசெய்ய முயன்றாலும்கூட அவர்களால் ஒருபோதும் வெற்றிபெறமுடியாது! நாம் நமக்குள் இருக்கும் 'ஒரேவேளை மருந்தாகிய' ஆவியில் பிழைத்து, ஆவியில் நடந்தாலேபோதும். சிலுவையின் கொல்லும் வல்லமையை நாம் அனுபவிப்போம். அவருடைய உயிர்த்தெழுதல் மற்றும் அவருடைய மரணம் ஆகியவைகளின் கோட்பாடும், நிஜமும் நித்திய ஆவியில் இருப்பதால், உயிர்த்தெழுதலில் அவருடைய மரணத்தின் வீரியமும்கூட அடங்கியிருக்கிறது. உயிர்த்தெழுதலின் நித்திய ஆவியில் சிலுவையின் கொல்லும் வல்லமை, அதாவது கொல்லும் காரணி இருக்கிறது.

எனவே நாம் மீண்டும் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" சொல்வோம், நாம் சகலத்தையும் உள்ளடக்கிய ஆவியில் இருக்கும்வரை சிலுவையின் அனுபவம் நம்முடையது; உயிர்த்தெழுதலின் நிஜமும் நமக்குள் இருக்கிறது. ஜீவிக்கும் விசுவாசத்தினால் நாம் இதை எடுத்துக்கொண்டால்போதும். வேறெதுவும் செய்யதேவையில்லை. இதை நம்மால் பார்க்கமுடியுமானால், "அல்லேலூயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்," என்று சொல்வோம். நம்மிடம் ஜீவிக்கும் விசுவாசம் இருக்கிறது; விசுவாசத்தினாலேயே அதை எடுத்துக்கொண்டு, உரிமையாக்கிக்கொள்கிறோம். அப்போது சிலுவையின் கோட்பாடும், உயிர்த்தெழுதலின் கோட்பாடும் உள்வசிக்கும்

ஆவியில் நமக்கு நிஜமாகிவிடும். ஏற்கெனவே நாம் அவரை நமக்குள் கொண்டிருக்கிறோம். இனிமேலும் நாம் கேட்கவேண்டிய தேவையில்லை. அவரை எடுத்துக்கொண்டு, அனுபவித்து மகிழ்ந்தாலேபோதும். அப்போது நாம் ஜீவனில் ஒரு மெய்யான வளர்ச்சியை அனுபவிப்போம். இதை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும். இது நாம் விசுவாசத்தால் கண்டு எடுத்துக் கொள்ளவேண்டிய ஒரு தரிசனம்.

## அத்தியாயம் பதினாறு

# உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்கள்

"அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்போன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதற்கொண்டு பெரியவன்வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை...என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எபி. 8:10-11).

"நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" (யோவான் 2:27).

இன்று, புதிய ஏற்பாட்டில் எந்தவிதப் புறம்பான மனித போதனையும் தேவையில்லை என்று எபிரேயர் 8, 1 யோவான் 2 ஆகியவை தெரிவிக்கின்றன. *பிரமாணம்* நமக்குள் எழுதப்பட்டிருக்கிறது என்று எபிரேயர் 8:10 கூறுகிறது. இப்படியிருக்க, கர்த்தரை அறிந்துகொள்வதற்கு எந்தச் சகோதரனும் நமக்குப் போதிக்கவேண்டியதில்லை. *அபிஷேகம்* நம்மில் நிலைத்திருக்கிறது என்று 1 யோவான் 2:27 கூறுகிறது. எனவே மனித போதனை எதுவும் தேவையில்லை. "பிரமாணம்" நம்மில் எழுதப்பட்டிருக்கிறது என்று எபிரேயர் 8:10 கூறுகிறது. "அபிஷேகம்" நம்மில் நிலைத்திருக்கிறது 1 யோவான் 2:27 கூறுகிறது. இந்த இரண்டு காரியங்களும் என்ன? நாம் வருடக்கணக்காகக் கிறிஸ்தவர்களாக இருந்தாலும், அதிசயமான இந்த இரண்டு காரியங்கள் நமக்குள் இருப்பதை நாம் அறியாமல் இருப்பது சாத்தியமே. ஓர் அற்புதமான பிரமாணம் நம்மில் எழுதப்பட்டிருக்கிறது; ஒரு பரம்புதிரான அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறது. இது எவ்வளவு ஆச்சரியமானது! எனினும் இதை நாம் உணராவிட்டால் எவ்வளவு பரிதாபம்! இந்த உள்ளான பிரமாணமும், உள்ளான அபிஷேகமும் இருப்பதால், நமக்கு எந்தவிதப் புறம்பான மனித போதனைகளும் தேவையில்லை.

## சிலுவையும், உயிர்த்தெழுதலும்

உள்ளான பிரமாணமும், உள்ளான அபிஷேகமும் உயிர்த்தெழுதலோடு தொடர்புடையவை. நாம் சிலுவையின் கோட்பாட்டைப் பார்த்தோம்; அதாவது பிரபஞ்சத்திலுள்ள எதிர்மறையான காரிங்களின் சகலத்தையும் உள்ளடக்கிய முடிவைப் பார்த்தோம். நாம் உயிர்த்தெழுதலையும் கோட்பாட்டையும், நிஜத்தையும்கூடப் பார்த்திருக்கிறோம். சிலுவை பழைய சிருஷ்டிப்பை முடிவுக்குக்கொண்டுவருகிறது. அதே சமயம், உயிர்த்தெழுதல் புதிய சிருஷ்டிப்பை ஐசுவரியங்களை உற்பத்திசெய்கிறது. சிலுவையின்மூலம் பழைய சிருஷ்டிப்பின் கதை முடிந்தது. கர்த்தருடைய மரணத்தினால் பழைய சிருஷ்டிப்பின் பன்னிரண்டு காரியங்களும் சிலுவைக்குக் கொண்டுவரப்பட்டு, முழுவதும் கிறுக்கித்தள்ளப்பட்டன. ஆனால் கதை இங்கு முடியவில்லை. ஏனென்றால் மரணத்துக்குப் பின்பு உயிர்த்தெழுதல் வந்தது. எது உயிரோடு எழுப்பட்டது? சாத்தானா? சாத்தானின் இராஜ்ஜியமா? பாவமா? மாம்சமா? "இல்லை" என்று ஆயிரம்தடவை சொல்வேன். தேவன் தம் குறிக்கோளுக்காக ஆதியிலே எதைச் சிருஷ்டித்தாரோ, அதின் சாராம்சத்தை மட்டுமே நித்திய ஆவி உயிரோடு எழுப்பினார்.

மனித சுபாவம் தேவனுடைய ஆதி சிருஷ்டிப்பின் ஒரு பகுதியாக இருந்தது. தேவன் மனித சுபாவத்தைத் தம் குறிக்கோளுக்காகச் சிருஷ்டித்தார். ஆனால் சாத்தான் அதைச் சேதப்படுத்தினான். ஆகையால் கர்த்தர் தம் மரணத்தினால், சாத்தானால் சேதப்படுத்தப்பட்ட சுபாவத்தை மரணத்துக்குள் கொண்டுவந்தார்; ஆனால் கர்த்தர் தம் உயிர்த்தெழுதலினால் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட சுபாவத்தை உயிர்த்தெழுதலுக்குள் கொண்டுவந்தார். கர்த்தர் மனித சுபாவத்தை மீட்டுக்கொண்டதோடு மட்டுமின்றி இந்த மனித சுபாவத்தை ஒரு மேலான தரத்துக்கு உயர்த்தினார். எனவே புதிய சிருஷ்டிப்பு நித்திய ஆவியிலுள்ள கிறிஸ்துவினாலும், உயிர்த்தெழுதலிலுள்ள மீட்கப்பட்டுத் தரம்உயர்த்தப்பட்ட மனித சுபாவத்தினாலும் ஆக்கப்பட்டிருக்கிறது.

உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்கள் எவை? முதலாவது மூவொரு தேவன். பழைய ஏற்பாட்டின் அர்த்தத்தில் அல்ல, மாறாகப் புதிய ஏற்பாட்டின் அர்த்தத்தில். அடுத்தது தெய்வீக, நித்திய ஜீவன். இது தேவன் நம் ஜீவனாக இருப்பதே. (மின்சாரத்துக்கும் வெளிச்சத்துக்கும் என்ன வித்தியாசம் உண்டோ, அதே வித்தியாசம்தான் தேவனுக்கும் தெய்வீக ஜீவனுக்கும் உண்டு. திட்டவட்டமாகச் சொல்வதானால், மின்சாரம்தான் வெளிச்சம், வெளிச்சம்தான் மின்சாரம். எனினும் வித்தியாசம் உண்டு. எடுத்துக்காட்டாக, மின்சாரம் வெளிச்சமாக மட்டுமின்றி

சக்தியாகவும், வெட்பமாகவும், வேறு பல காரியங்களாகவும்கூடப் பயன்படுத்தப்படுகிறது. இதுபோல தேவன்தாமே நம் ஜீவனாகவும், இன்னும் அநேகக் காரியங்களாகவும்கூட இருக்கிறார்.) மூன்றாவது காரியம் தெய்வீக சுபாவம் (2 பேதுரு 1:4). நான்காவது, ஜீவப் பிரமாணம் (ரோமர் 8:2; எபி. 8:10). ஐந்தாவது, அபிஷேகம் (1 யோவான் 2:27). இந்த ஐந்து காரியங்களே உயிர்த்தெழுதலின் சகலத்தையும் உள்ளடக்கிய ஐசுவரியங்கள். மற்ற காரியங்களெல்லாம் இவைகளில் அடங்கும். புதிய சிருஷ்டிப்பு உயிர்த்தெழுதலில் உள்ள இந்தக் காரியங்களையெல்லாம் சுதந்தரித்துக்கொள்கிறது.

சுருங்கச்சொன்னால், உயிர்த்தெழுதலின் சகல ஐசுவரியங்களும் தேவனே. தெய்வீக சுபாவம் நிச்சயமாக தேவனே. ஜீவப் பிரமாணமும் அபிஷேகமும்கூட தேவனுக்கும், தேவனுடைய அசைவுக்கும் உரியவைகளே. ஆயினும் மனிதன் உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்களுள் ஒன்றல்ல. ஆனால் அவன் இந்த ஐசுவரியங்களால் மீட்டுத்திருப்பப்பட்டுத் தரம்உயர்த்தப்பட்டவன். மூவொரு தேவனுடனும், தெய்வீக ஜீவனுடனும், தெய்வீக சுபாவத்துடனும் நமக்கு ஓரளவுக்குப் பரிச்சயம் உண்டு. ஆனால் பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு ஜீவப் பிரமாணத்துடனும், உள்ளான அபிஷேகத்துடனும் பரிச்சயம் இல்லை. இன்றைய கிறிஸ்தவத்தில் இவைகள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் உள்ளான பிரமாணமும், உள்ளான அபிஷேகமுமே உயிர்த்தெழுதலின் நடைமுறைக்குரிய ஐசுவரியங்கள். இவைகளை நாம் அறிந்துகொள்ளாவிட்டால், உயிர்த்தெழுதலை நடைமுறை அனுபவத்தில் நம்மால் அறிந்துகொள்ளமுடியாது. ஜீவப் பிரமாணத்தையும், உள்ளான அபிஷேகத்தையும் நாம் அறியாதவரை உயிர்த்தெழுதலை அனுபவத்திற்கு அப்பாற்பட்ட உண்மையாக மட்டுமே அறிந்திருப்போம். அவைகளை அறியும்போதுதான் உயிர்த்தெழுதலை அனுபவத்திற்குரிய நிஜமாக அனுபவிப்போம்.

## பிரமாணமும், தீர்க்கதரிசிகளும்

நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும் அடங்கிய பழைய ஏற்பாட்டை நாம் எடுத்துக்கொள்வோம். ஒருவகையில் பழைய ஏற்பாடு "நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசனங்களும்" என்றுகூட அழைக்கப்பட்டது (மத். 7:12; 22:40). இந்த இரண்டுக்கும் இடையேயுள்ள வித்தியாசம் என்ன? மாற்றமுடியாத, நிலையான சட்டங்களின் தொகுப்பே நியாயப்பிரமாணம். எடுத்துக்காட்டாக எல்லாரும் தங்கள் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டும் என்பது நியாயப்பிரமாணத்தின் ஒரு சட்டம். இது மாறாத ஒரு சட்டம்.

எல்லாரும் இதைக் கடைபிடிக்கவேண்டும். ஒருவன் தன் பெற்றோரைக் கனப்படுத்துவதைப்பற்றி அறிவுரை தேடத் தேவையில்லை. இந்தப் பிரமாணம் நிலையானது. "களவு செய்யாதிருப்பாயாக," என்பது இன்னொரு சட்டம். இதுவும்கூட நிலைநிறுத்தப்பட்ட, அசையாத சட்டம். "கர்த்தாவே, களவுசெய்வத உம் சித்தமா, இல்லையா என்று எனக்குச் சொல்லும்; களவுசெய்வதைப்பற்றி உம் வழிநடத்துதலை எனக்குத் தாரும்," என்று ஜெபிக்கத் தேவையில்லை. இப்படிப்பட்ட வழிநடத்துதலைத் தேடவேண்டியதே இல்லை. இதே கோட்பாடு பத்துக் கட்டளைகளில் ஒவ்வொன்றுக்கும் பொருந்தும். இவ்வாறு எல்லாரும் கடைபிடிக்கவேண்டிய நிலையான சட்டங்களின் தொகுப்பே நியாயப்பிரமாணம். இது ஆளுக்கு ஆள் மாறுவதில்லை. ஆணா பெண்ணா, வயோதிபரா வாலிபரா, பணக்காரரா ஏழையா என்ற பாரபட்சமின்றி, எல்லாரும் சட்டங்களைக் கட்டாயமாகக் கடைபிடிக்கவேண்டும்.

அப்படியானால், தீர்க்கதரிசனங்களைப்பற்றிய காரியம் என்ன? தீர்க்கதரிசிகள் தனிப்பட்ட சூழ்நிலைக்குப் பேசுகிறார்கள். ஒருவர் எரேமியாவிடம் வந்து, "நான் எருசலேமுக்குப் போவது சரிதானா?" என்று கேட்கிறார் என்று வைத்துக்கொள்ளுங்கள். "நீ போகலாம்," என்று இந்தத் தடவை தீர்க்கதரிசி சொல்லலாம். இன்னொரு தடவை, "நீ போகவேண்டாம்," என்று அவர் சொல்லக்கூடும். தீர்க்கதரிசிகள் வித்தியாசமான தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கேற்ப கர்த்தருடைய ஜீவனுள்ள வழிநடத்துதலைக் கொடுக்கிறார்கள். பிரமாணத்துக்கு எந்த மாற்றங்களும் இல்லை. ஆனால் சம்பந்தப்பட்ட நபர்களின் சூழ்நிலையைப்பொறுத்து தீர்க்கதரிசனங்களுக்கு அநேக மாற்றங்கள் ஏற்படுகின்றன. பிரமாணம் ஒருமுறை நமக்குக் கொடுக்கப்பட்டதென்றால் அது கொடுக்கப்பட்டதுதான். ஏனென்றால் கட்டளைகள் நிரந்தரமானவை. ஆனால் தீர்க்கதரிசிகள் தரும் வழிநடத்துதல் அந்தக் குறிப்பிட்ட சந்தர்ப்பத்துக்கு மட்டுமே எற்றதாக இருக்கிறது. ஆகையால் தீர்க்கதரிசியைத் தொடர்ச்சியாகத் தொடர்புகொள்ள வேண்டும். எரேமியாவைத் தேடிப்போன ஒருவன், "நான் எருசலேமுக்குப் போவது சரிதான் என்று ஒரு மாதத்துக்குமுன்பே தீர்க்கதரிசி சொல்லிவிட்டார்; ஆகையால் அவரைக் கலந்தாலோசிக்காமலேயே இப்போது நான் எருசலேமுக்குப் போக விரும்பினால், இன்னொரு தடவை அவன் தீர்க்கதரிசியின் வழிநடத்துதலைத் தேடவேண்டும். அவன் தன் பெற்றோரைக் கனம்பண்ணவேண்டுமா அல்லது வேண்டாமா என்பதற்கு வழிநடத்துதல் தேவையில்லை. ஏனென்றால் இது நியாயப் பிரமாணத்தின் நிலையான கோட்பாடு; ஆனால் அவன் தன்

பெற்றோரை எப்படிக் கனம்பண்ணவேண்டும் என்பது நிச்சயமாக வழிநடத்துதலைப்பற்றிய ஒரு காரியம். அவன் தன் பெற்றோரை ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில், இந்த வகையிலா அல்லது அந்த வகையிலா, எந்த வகையில் கனம்பண்ணவேண்டும் என்பதில் வழிநடத்துதல் தேவை. ஆகையால் அவன் தீர்க்கதரிசியைத் தொடர்புகொள்ளவேண்டும்.

பெண்கள் ஆண்களுடைய உடையையும், ஆண்கள் பெண்களுடைய உடையையும் தரிப்பதைப் பழைய ஏற்பாடு தடைசெய்கிறது. இது கர்த்தரால் தெளிவாக நிலைநிறுத்தப்பட்ட, முடிவுசெய்யப்பட்ட சட்டம், மாறாத பிரமாணம். ஆனால் துணி எடுக்க நாம் கடைக்குச் செல்லும்போது, ஒரு துணி ரூ.200ஆகவும், இன்னொரு துணி ரூ.20ஆகவும் இருக்கலாம். இது கர்த்தருடைய வழிநடத்துதலைத் தேடக்கூடிய காரியம், அவருடைய பிரமாணத்தைத் தேடக்கூடிய காரியமன்று. இதுவே பிரமாணத்துக்கும் தீர்க்கதரிசனங்களுக்குமிடையேயுள்ள வித்தியாசம். நியாயப்பிரமாணத்தின் நிலையான கோட்பாடு யாராயிருந்தாலும் மாறுவதில்லை. மாறாகத் தீர்க்கதரிசிகளின் வழிநடத்துதலோ ஒவ்வொருவருக்கும் மாறுபடுகிறது. சிலசமயங்களில் ஒரே நபருக்குக்கூட தீர்க்கதரிசிகளின் வழிநடத்துதல் சமயசந்தர்ப்பத்துக்கேற்ப மாறுபடலாம்.

## உள்ளான பிரமாணமும், உள்ளான அபிஷேகமும்

அப்படியானால் புதிய ஏற்பாட்டில் ஏதாவது பிரமாணம் உண்டா? உண்டு. ஆனால் அது எழுத்துக்குரிய பிரமாணமல்ல. புதிய ஏற்பாட்டில் ஜீவப்பிரமாணம் மட்டுமே உண்டு. இது புறம்பான பிரமாணமல்ல. மாறாக உள்ளான நியாயப்பிரமாணம். கற்பலகையில் எழுதப்பட்ட பிரமாணமல்ல. மாறாக இருதயத்தில் எழுதப்பட்ட பிரமாணம். புதிய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளின் நிலை என்ன? ஜீவப்பிரமாணம் எழுத்தின் பிரமாணத்தின் இடத்தை எடுத்துக்கொள்வதைப்போலவே, உள்ளான அபிஷேகம் தீர்க்கதரிசிகளின் இடத்தை எடுத்துக்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, நான் முடிவெட்டிக்கொள்ள வேண்டுமானால், "கர்த்தாவே நான் என் முடியை, கௌபாய்போலவா அல்லது சினிமா நட்சத்திரத் தைப்போலவா, யாரைப்போல வெட்டிக்கொள்ளவேண்டும் என்று எனக்குக் காட்டும்," என்று ஜெபித்துக் கர்த்தருடைய வழிநடத்து தலைக் தேடவேண்டுமா? இப்படிப்பட்ட காரியத்தில் வழிநடத்து தலைத் தேடவேண்டியதில்லை. ஏனென்றால் சினிமா நட்சத்திரம் அல்லது பௌபாய் பாணியில் முடிவெட்டுவதை தடைசெய்யக் கூடிய ஒரு பிரமாணம் எனக்குள் இருக்கிறது. இத்தகைய காரியங்களில் உள்ளான ஜீவப்பிரமாணம் என்னை

ஒழுங்குபடுத்துகிறது. நீ கர்த்தருக்குள்ளான ஒரு சகோதரி; நீ சினிமா நடிகையின் பாணியில் முடிவெட்டிக்கொள்ள முயற்சிசெய்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். உனக்குள்ளே ஆழமாக ஏதோவொன்று உன்னை ஒழுங்குபடுத்தித் தடுக்கும். இதுவே ஜீவப்பிரமாணத்தின் உள்ளான ஒழுங்குபடுத்துதல். சினிமா நடிகைகளின் நாகரிகத்தின்படி முடிவெட்டுவதைத் தடைசெய்யக் கூடிய ஒரு வார்த்தைகூட வேதாகமத்திலுள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட அதிகாரங்களில் இல்லவே இல்லை. வேதாகமத்தில் சினிமா நட்சத்திரங்கள் என்ற பெயர்கூட குறிப்பிடப்படவில்லை. ஆனால் சினிமா நட்சத்திரங்களை மாதிரியாகக்கொண்டு அவர்களைப் பின்பற்றிச் செல்வதிலிருந்து உங்களைக் கட்டுப்படுத் தக்கூடிய ஓர் உள்ளான பிரமாணம் உங்களுக்குள் இருக்கிறது.

ஒரு சகோதரன் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொள்ளப்போகிறான் என்று வைத்துக்கொள்வோம். "கர்த்தாவே, கௌபாய் போடுகிறதுபோல் நான் பேண்ட்ஸ் போட்டுக்கொள்ளட்டுமா?" என்று அவன் கேட்கவேண்டியதில்லை. அவன் இப்படி உடுத்த முயன்றால் உள்ளான ஒழுங்குபடுத்தும் பிரமாணம் அவனைக் கட்டுப்படுத்தித் தடைசெய்யம். இது அவனுக்குள் இருக்கிற ஒரு பிரமாணத்தின் நிலையான கோட்பாடு. கௌபாய்போல முடிவெட்டிக்கொள்ளலாமா என்று வழநடத்துதலைத் தேடவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் *எப்போது, எங்கே* அவன் முடிவெட்டிக்கொள்ளவேண்டும் என்பது கர்த்தருடைய வழிநடத்துதலைப்பொறுத்த காரியம். ஆகையால், "கர்த்தாவே, இன்று நான் முடீவெட்டிக்கொள்வது உம் சித்தமா? நான் எங்கே முடிவெட்டிக்கொள்ளவேண்டும். முடிவெட்டும் கடையிலா அல்லது ஒரு சகோதரனுடைய வீட்டிலா?" என்று ஜெபிக்கவேண்டும். இது உள்ளான பிரமாணத்தைப்பொறுத்த காரியமன்று. மாறாக உள்ளான அபிஷேகத்தைப் பொறுத்தது. உள்ளிருக்கும் அபிஷேகமே அவனுக்கு வழிநடத்துதலைக் கொடுக்கிற அவனுடைய உள்வசிக்கும் "தீர்க்கதரிசி." அவன் அஜாக்கிரதையாயிருந்து உள்ளிருக்கும் "தீர்க்கதரிசியின்" வழிநடத்துதலைத் தேடாமல் பதறிப்பதறி ஒரு சகோதரன் வீட்டுக்கு ஓடிப்போய் முடிவெட்டிக்கொண்டால், அவன் பிரச்சினையை வரவழைத்துக்கொள்ளக்கூடும். உள்ளிருக்கும் அபிஷேகத்தைப் பற்றிய அவனுடைய அக்கறையின்மையினால் அவன் துன்பப்பட வேண்டும். உங்களால் இந்தக் காரியத்தைப் புரிந்துகொள்ள முடிகிறதா?

பெரும்பாலான இல்லத்தலைவிகள் பொருள்களை வாங்க விரும்புவார்கள். அவர்கள் ஒரு பெரிய கடைக்குள் நுழையும்போது தங்கள் கணக்கை மட்டும் சரிபார்த்தால் போதும்; வேறெந்தக்

கட்டுப்பாடோ, வரைமுறையோ அவர்களுக்குக் கிடையாது. ஆனால் கர்த்தரை நேசித்து, கர்த்தரால் பிழைத்து, கர்த்தரால் நடக்கிற பிரிய சகோதரிகளுக்கு வித்தியாசமான ஓர் அனுபவம் உண்டு. அவர்கள் கடைக்குள் நுழைந்து ஒரு பொருளைக் கையிலெடுக்கும்போதே அவர்களை ஒழுங்குபடுத்தி, "அதைக் கீழேபோடு," என்று சொல்கிற ஏதோவொன்று அவர்களுக்குள்ளே இருக்கிறது. அவர்கள் அதைப் போட்டுவிடுகிறார்கள். இன்னொரு பொருளை அவர்கள் கையிலெடுக்கும்போது மீண்டும் "அதைத் தொடாதே. கீழே போடு." இந்த உள்ளான எதிர்ப்பு என்ன? இதுதான் உள்ளான பிரமாணம், ஜீவப்பிரமாணம். உலகப்பிரகாரமான சீமாட்டிகள் தாங்கள் ஆசைப்படுகிற எதை போண்டுமானாலும் (அதன் வடிவமைப்பு, நிறம், உருவம் எதைப்பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை) வாங்கலாம். அவர்கள் அதை விரும்புகிறார்கள், எனவே வாங்குகிறார்கள். ஆனால் கர்த்தரை நேசிக்கிற சகோதரிகள், இந்தப் பொருளை அல்லது அந்தப் பொருளை எடுக்கும்போது, அவர்களிடத்தில் ஓர் எதிர்மறையான உள்ளான உணர்ச்சி இருக்கிறது. இதுவே உள்ளான பிரமாணத்தின் ஒழுங்குபடுத்துதல்.

மாறாக ஒரு குறிப்பிட்ட பொருளை வாங்கவேண்டுமானால், நீ அந்தப் பொருளுக்காக எவ்வளவு பணம் செலவுசெய்யலாம் என்பதையறிய உள்ளான அபிஷேகத்தின் வழிநடத்துதலைத் தேடவேண்டும். நீ கர்த்தருடன் கலந்துறவாடி உள்ளான அபிஷேகத்தின்மூலம் அவருடைய வழிநடத்துதலைத் தேடவேண்டும். வேறு யாரும் உனக்குச் சொல்லமுடியாது. பிரச்சினையை நீ என்னிடத்தில் கொண்டுவந்தால், "என்னைக் கேட்காதே; உள்ளிருப்பவரைக் கேள்; நீ எவ்வளவு பணம் செலவுசெய்யவேண்டும் என்று உனக்குள்ளிருக்கும் அபிஷேகத்தினால் உனக்குத் தெரியும்," என்றுதான் நான் சொல்வேன். "கர்த்தாவே, 150 ரூபாயா?" என்று சும்மா சொல். உள்ளான அபிஷேகம், "இல்லை," என்று சொல்லலாம். "95 ரூபாயா?" "இல்லை." "65 ரூபாயா?" "பரவாயில்லை." "50 ரூபாயா?" "சரி." உனக்குள் ஏதோவொன்று "சரி" என்று சொல்லும்.

ஒரு கணவன் தன் மனைவியிடம்கூட அவள் என்ன செய்யவேண்டும் என்று சொல்லமுடியாது. மனைவி தன் கணவனிடம் 30 ரூபாய் பொருளைப்பற்றிக் கேட்கும்போது, அவன் "பிரியமே, நீ கர்த்தரிடம் சென்று உள்ளான அபிஷேகத்தினால் அவருடைய வழிநடத்துதலைத் தேடு," என்று சொல்வதுதான் சிறந்தது. உள்ளான அபிஷேகம் அவளுக்குச் சொல்லும். ஆனால் ஜெபிப்பதற்கும், கர்த்தரைத் தொடர்புகொள்வதற்கும் அவளுக்கு நேரம் தேவை. "கர்த்தாவே,

நான் உம்மை ஆராதிக்கிறேன். நீரே என் ஜீவன்! நீரே என் கர்த்தர். நீர் எனக்குள் வாசமாயிருக்கிறீர். கர்த்தாவே, இந்தப் பொருளுக்காக நான் எவ்வளவு பணம் செலவுபண்ணவேண்டும் என்பதற்கான சரியான உணர்ச்சியை எனக்குத் தாரும்." அப்போது அவள் கர்த்தரை உள்ளாக உணர்ந்துகொள்வாள்: "*30 ரூபாயா?*" "*இல்லை;*" "*25 ரூபாயா?*" "*இல்லை;*" "*20 ரூபாயா?*" "*இல்லை;*" "*15 ரூபாயா?*" "*இல்லை;*" "*12 ரூபாயா?*" "*சரி.*" கடைசியாக, உள்ளான அபிஷேகம் அவளுக்குச் சரியான உள்ளான உணர்வைக் கொடுக்கும்.

இப்படிப்பட்ட அனுபவம் உனக்கு இல்லையென்றால் நீ தேவனுடைய பிள்ளை இல்லையோ என்று நான் பயப்படுகிறேன். "எவர்கள் தேவனுயைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்" (ரோமர் 8:14). தேவனுடைய ஆவி எப்படி நம்மை நடத்துகிறார்? உள்ளான அபிஷேகத்தினால்தான். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். நாமே உயிர்த்தெழுதலின் புதிய சிருஷ்டியாக இருக்கிறோம். உயிர்த்தெழுதலில் மூவொரு தேவனையே நாம் கொண்டிருக்கிறோம். நாம் அவரை நம் ஜீவனாகவும், நம் சுபாவமாகயும் கொண்டிருக்கிறோம். நாம் உள்ளான ஜீவப்பிரமாணத்தையும், தைலமாக நமக்குள் கிரியைசெய்கிற அவருடைய ஆவியையும் கொண்டிருக்கிறோம். இந்தத் தைலம் நமக்குள் தொடர்ந்து அசைவாடி, தேவனாலேயே நம்மை அபிஷேகிக்கிறது. எவ்வளவு அதிகமாக இந்த நடைமுறை வழியில் நாம் அபிஷேகிக்கப் படுகிறோமோ, அவ்வளவு அதிகமாக நமக்குள்ளே தேவனுடைய சாராம்சத்தைப் பெறுவோம். இது, ஒரு பெயிண்டர் ஒரு மேஜைக்குப் பெயிண்ட் பூசுவதைப்போன்றது. எவ்வளவு அதிகமாக அவர் மேஜைக்குப் பெயிண்ட் பூசுகிறாரோ, அவ்வளவு அதிகமாக பெயிண்ட் மேஜையோடு சேர்க்கப்படுகிறது. எவ்வளவு அதிகமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகித்தல் நமக்குள் இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக நாம் தேவனுடைய சாராம்சத்தைப் பெற்றுக்கொள்வோம். நாம் நமக்குள் பரிசுத்த ஆவியால் தொடர்ந்து அபிஷேகிக்கப்பட வேண்டும் என்று விரும்பினால், ஒரு குறிப்பிட்ட காலம் கடந்தபின் நாம் தேவனுடைய சாராம்சத்தை அல்லது சாரத்தை அதிகமாகப் பெற்றிருப்போம். தேவனே பெயிண்ட், பரிசுத்த ஆவியே பெயிண்டர், அபிஷேகமே பெயிண்ட் பூசுதல். பரிசுத்த ஆவி நமக்குள்ளாக தேவனையே பெயிண்டாகப் பூசிக்கொண்டிருக்கிறார். இந்தப் பெயிண்ட் பூசுதல் கர்த்தருடைய சித்தத்தின் உள்ளான உணர்வை நமக்குத் தரும்.

உள்ளான சீராக்குதலும், உள்ளான அபிஷேகமும் நமக்கு இருக்கவேண்டும். கர்த்தருடைய வழியில் காக்கப்படுவதற்கு

உள்ளான பிரமாணம் நம்மை சீராக்குகிறது. எல்லாவற்றிலும் கர்த்தருடைய சித்தத்தை அறிவதற்கு உள்ளான அபிஷேகம் நம்மை அபிஷேகிக்கிறது. இப்படியாக தேவனடைய மெய்யான சாராம்சம் நமக்குள்ளே எல்லா நேரமும் பெருகுகிறது. பரிசுத்த ஆவி எவ்வளவு அதிகமாகத் தேவனைப் பெயிண்டாக நமக்குள் பூசுகிறாரோ, அவ்வளவு அதிகமாகத் தேவனுடைய சாரம் நமக்குள் சேர்க்கப்படும். இவையே உள்ளான நடைமுறை அனுபவத்தில் உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்கள்.

## அத்தியாயம் பதினேழு

# ஜீவனின் ஐக்கியமும் ஜீவனின் உணர்வும்

"ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது. உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு எழுதுகிறோம். தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விஷேமாயிருக்கிறது. நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்கள் என்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம். அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவான் 1:1-7).

இந்தச் சுருக்கமான பகுதியில், முதலாவது நித்திய ஜீவனைப் பார்க்கிறோம். இந்த நித்திய ஜீவனிலிருந்து தெய்வீக ஐக்கியம் வருகிறது. இந்தத் தெய்வீக ஐக்கியம் ஒளியைக் கொண்டுவருகிறது. தேவனே அந்த ஒளி. எனவே இங்கு ஜீவன், ஐக்கியம், ஒளி ஆகியவைகளைப் பார்க்கிறோம்.

"மாம்சத்தின்மேல் பொருத்தப்பட்ட மனம் மரணம். ஆனால் ஆவியின்மேல் பொருத்தப்பட்ட மனமோ ஜீவனும் சமாதானமுமாம்," என்று ரோமர் 8:6 கூறுகிறது. இந்த வசனம் மரணத்தைப்பற்றியும், ஜீவன் மற்றும் சமாதானத்தைப்பற்றியும் பேசுகிறது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ளதைப்போல, மரணமோ அல்லது ஜீவனும் சமாதானமுமோ நமக்குள்ளே ஆழமாக நாம் உணரக்கூடிய ஒன்று என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். இல்லையென்றால், நம்மிடத்தில் மரணம் இருக்கிறதா அல்லது ஜீவனும் சமாதானமும் இருக்கிறதா என்று நமக்கு எப்படித் தெரியும்? நாம் மரணத்தையா அல்லது ஜீவனையும்

சமாதானத்தையுமா - எதைக் கொண்டிருக்கிறோம் என்று நமக்குள் இருக்கும் உணர்வினால் நாம் அறிகிறோம். "உணர்வு" என்ற வார்த்தை இந்த வசனத்தில் இல்லை. ஆனால் நாம் நம் மனதை மாம்சத்தின்மேல் பொருத்தும்போது மரணத்தை உணர்வதால்தான் அதை நாம் அறிகிறோம் என்பது தெளிவு. மாறாக நாம் நம் மனதை ஆவியின்மேல் பொருத்தும்போது ஜீவனையும் சமாதானத்தையும் உணர்வதால்தான் நாம் இவைகளை அறிகிறோம். ஆகையால் இந்த வசனத்தில் ஜீவனின் உள்ளான உணர்வைப் பார்க்கிறோம். இந்த வசனத்துக்கும், 1 யோவானுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லாததுபோலத் தோன்றுகிறது. ஆனால் ஆவியின் நிஜத்தில் 1 யோவான் முதல் அதிகாரத்துக்கும் இதற்கும் அதிகத் தொடர்பு உண்டு. 1 யோவான் முதல் அதிகாரத்தில் ஜீவனின் ஐக்கியத்தைக் காண்கிறோம். ரோமர் 8:6-ல் ஜீவனின் உணர்வைக் காண்கிறோம்.

ஜீவப்பிரமாணமும், அபிஷேகமும் உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்கள் என்று கடந்த அதிகாரத்தில் பார்த்தோம். தேவனையும், தெய்வீக ஜீவனையும், அதாவது ஆவியிலுள்ள கிறிஸ்துவையும், தெய்வீக சுபாவத்தையும்கூட நம் ஐசுவரியங் களாக நாம் பெற்றிருக்கிறோம். இவையே உயிர்த்தெழுதலின் ஐசுவரியங்களுடைய ஐந்து பிரதானமான காரியங்கள். புது சிருஷ்டிப்பில் உள்ளவர்களாகிய நமக்கு இவைகளை அனுபவித்துமகிழ்வதற்கு முழுத் தகுதியும் உரிமையும் உண்டு. புதிய சிருஷ்டிப்பை ஆதாரமாகக்கொண்டு தேவனை நம் பங்காகவும், கிறிஸ்துவை நம் ஜீவனாகவும், தெய்வீக சுபாவத் தையும் ஜீவப்பிரமாணத்தையும் உள்ளான அபிஷேகத்தையும் கொண்ட உயிர்த்தெழுதலை நாம் அனுபவிக்கலாம். இந்தக் காரியங்கள் எவ்வளவு பெரிய ஐசுவரியங்கள் என்று ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! நாம் உணர்ந்துகொள்கிறோமோ இல்லையோ, உயிர்த்தெழுதலில் உள்ள ஐசுவரிகங்களின் இந்த ஐந்து காரியங்களையும் நாம் தினம்தினம் அனுபவித்து மகிழ்கிறோம். தேவனால் புதிதாய்ப் பிறந்த பிள்ளையாக இருக்கும்போதுகூட ஒவ்வொருநாளும் நாம் இந்த ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்ந்து, இந்த ஐசுவரியங்களால் வாழ்கிறோம்.

## ஜீவனின் ஐக்கியம்

தேவன், தெய்வீக ஜீவன், தெய்வீக சுபாவம், ஜீவப் பிரமாணம், உள்ளான அபிஷேகம் என்ற ஐசுவரியங்களைத்தவிர வேறு இரண்டு காரியங்களும்வட இருக்கின்றன. அவைகள் ஜீவனின் ஐக்கியமும் ஜீவனின் உணர்வும். இவைகளே உயிர்த்தெழுதலின் ஐசுவரியத்தின் விளைபொருள்கள். நித்திய

ஜீவன் தெய்வீக ஐக்கியத்தைக் கொண்டுவருகிறது. நாம் கிறிஸ்துவை ஆவியானவரில் ஜீவனாகக் கொண்டிருக்கும்போது, அந்த ஜீவனுடன் நாம் ஐக்கியம் கொண்டிருக்கிறோம். ஜீவனின் ஐக்கியம் என்பது இரத்த ஓட்டத்தைப்போன்றது. நம் சரீரத்திலுள்ள இரத்தமே நம் சரீரத்தின் ஜீவன்; நம் சரீரத்தில் இரத்தம் இல்லையென்றால் அதில் ஜீவன் இல்லை; ஏனென்றால் ஜீவன் இரத்தத்தில் இருக்கிறது. சரீரத்தில் இரத்த ஓட்டமும் இருக்கிறது. இரத்த ஓட்டத்தின்மூலம் எதிர்மறையான மூலப்பொருள்களெல்லாம் சரீரத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, சரீரத்தின் எல்லாப் பாகங்களுக்கும் போஷாக்குக் கொண்டுசெல்லப்படுகிறது. இரத்த ஓட்டம் வீணான விளைபொருள்களைத் தினம்தினம் வெளியேற்றுகிறது, போஷாக்கின் நிரப்பீட்டை சரீரத்தின் எல்லா அவயவங்களுக்கும் கொண்டுசெல்கிறது. இரத்த ஓட்டம் இந்த இரண்டு வேலைகளையும் மீண்டும் மீண்டும் தொடர்ச்சியாக நிறைவேற்றிக்கொண்டேயிருக்கிறது. எதிர்மறையாக, சரீரத்தின் அவயவங்களைக் கழுவி, கழிவுப்பொருட்களை வெளியேற்றுகிறது. நேர்மறையாக, அது சரீரத்துக்கு ஆரோக்கியத்தை அளிக்கிறது.

அப்படியானால் ஜீவனின் ஐக்கியம் என்றால் என்ன? இரத்தம் உயிராக இருப்பதைப்போலவே, நம் ஆவிக்குரிய இரத்தம் நம் ஜீவனாக ஆவியானவரில் இருக்கும் கிறிஸ்துவே. நம் ஆவிக்குரிய இரத்தாமாகிய கிறிஸ்துவை நம் ஜீவனாகக்கொண்ட ஒரு ஜீவ ஓட்டம் இருக்கிறது. இரத்த ஓட்டம் சரீரத்தில் தொடர்ச்சியாகப் பாய்ந்தோடிக்கொண்டிருப்பதைப்போலவே, கிறிஸ்துவும் நம் ஜீவனாக நமக்குள் எல்லா நேரமும் பாய்ந்தோடிக் கொண்டிருக்கிறார். இந்த ஜீவனின் ஓட்டமே ஜீவனின் ஐக்கியமாகும். இந்த ஜீவனின் ஓட்டத்தினால், அதாவது ஜீவனின் ஐக்கியத்தினால், கிறிஸ்துவின் ஐசுவரியங்களனைத்தும் நமக்குள் கொண்டுவரப்படுகின்றன. கிறிஸ்துவினுடைய ஐசுவரியங்களின் தொடர்ச்சியான ஓட்டம், நேர்மறையான பக்கத்தில், நமக்குப் போஷாக்கைத் தந்து, எதிர்மறையான பக்கத்தில், தேவையான கழுவுதலையும், கழிவுப்பொருளை வெளியேற்றுதலையும் செய்துமுடிக்கிறது. இரத்த ஓட்டத்தினால் எவ்வளவு போஷாக்கும், வெளியேற்றமும் அனுதினமும் நடைபெறுகின்றன என்று மருத்துவத் தொழிலால் மட்டுமே கூறமுடியும். இவ்வாறு, ஜீவனின் ஐக்கியம் என்பது கிறிஸ்துவாகிய நித்திய ஜீவனின் இடைவிடாத ஓட்டமே.

எடுத்துக்காட்டாக ஒளிவிளக்கைக் கவனியுங்கள். மின்சார விளக்குக்குச் செல்லும் மின்சாரத்தின் ஓட்டம் மீட்டரில் பதிவுசெய்யப்படுகிறது. மீட்டரில் மின்சார ஓட்டம் நின்றுவிட்டால் மின்சார விளக்கிலிருந்து வெளிச்சம் வராது. மின்சாரத்தின்

செயல்பாடுகளெல்லாம் மின்சார ஓட்டத்தையே சார்ந்திருக்கின்றன. மின்சார ஓட்டத்தை அணைத்துவிடும்போது மின்சார விளக்கின் செயல் நின்றுவிடுகிறது. அது வெளிச்சம் தராது.

நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன்பு அவிசுவாசிகளாக இருந்தபோது பாய்ந்தோடும் இந்த ஓட்டம் நம்மிடம் இருக்கவில்லை. என் சொந்த அனுபவம் எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. நான் இரட்சிக்கப்படுவதற்குமுன்பு பாய்ந்தோடுகிற இந்த ஜீவனுள்ள உணர்ச்சி என்னிடத்தில் இல்லை. ஆனால் நான் இரட்சிக்கப்பட்டதிலிருந்து, எவ்வளவு அதிகமாக நான் கர்த்தரை நேகிக்கிறேனோ, எவ்வளவு அதிகமாக அவரைத் தொடர்புகொள்கிறேனோ, எவ்வளவு அதிகமாக அவருக்காகவே வாழ்கிறேனோ, அவ்வளவு அதிகமாக எனக்குள் ஏதோவொன்று எப்போதும் பாய்ந்தோடிக்கொண்டிருப்பதை... பாய்ந்தோடிக் கொண்டிருப்பதை... பாய்ந்தோடிக்கொண்டிருப்பதை... நான் உணர்ந்திருக்கிறேன். இதுதான் ஜீவனின் ஓட்டம் அல்லது ஜீவனின் ஐக்கியம். நித்திய ஜீவன், அதாவது தேவ குமாரன், மிக நிஜமானவர், தொட்டனுபவிக்கத்தக்கவர். இதைக் கேட்கமுடியும்; இதைத் தொடவும், கைகளால் கையாளவும்முடியும்; இதை அறிவிக்கவும், பிரசங்கிக்கவும் முடியும் *(1 யோவான் 1:1-3)*. நாம் இந்த ஜீவனைப் பெற்றிருப்பதால் ஜீவனின் ஓட்டத்தை, அதாவது ஜீவனின் ஐக்கியத்தை, கொண்டிருக்கிறோம். இந்த ஜீவனின் ஐக்கியத்தின்மூலம் நாம் தேவ பிரசன்னத்துக்குள் வருவது மிக எளிது.

## ஜீவனின் உணர்வு

நாம் தேவ பிரசன்னத்தில் இருக்கிறோம் என்பதை எப்படி அறிந்துகொள்ளலாம்? தேவன் ஒளியாயிருக்கிறார். நாம் தேவ பிரசன்னத்தில் இருக்கும்போது நம்மால் ஒளியை உணரமுடியும். உள்ளான பாய்ந்தோடுதலை மட்டுமின்றி, ஜீவனின் ஐக்கியத்தினால் மட்டுமே வருகிற உள்ளான பிரகாசத்தையும்கூட நாம் உணர்கிறோம். இது ஓர் உபதேசமன்று. இது எங்கள் அனுபவத்தின் விளக்கம். இந்த அனுபவங்களுக்கு நம்மால் "ஆமென்" சொல்லமுடியவில்லையென்றால் நம்மிடத்தில் ஏதோ தவறு இருக்கிறது என்று எண்ணுகிறேன். நாம் இரட்சிக்கப்பட்ட நாளிலிருந்து இதைத்தான் நாம் அனுபவித்திருக்கவேண்டும். ஒருவேளை நம்மால் இதை விளக்கிச்சொல்லமுடியாமல் இருக்கலாம். இதை நான் மீண்டும் சொல்ல விரும்புகிறேன்; நமக்குள் ஏதோவொன்று அசைவாடுகிறது; ஏதோவொன்று பாய்ந்தோடிக்கொண்டிருக்கிறது. நாம் இந்த ஓட்டத்தில் இருக்கும்போது தேவ பிரசன்னத்தில் இருக்கிறோம். அப்போது

நமக்குள் ஒளி வீசுகிறது. எல்லாம் ஒளியில் இருக்கிறது. இது சரியா தவறா, இது தேவ சித்தமா இல்லையா, இது மரணத்துக்குரியதா ஜீவனுக்குரியதா என்ற எல்லாக் காரியங்களும் நமக்குத் தெளிவாகிவிடுகின்றன; எல்லாக் காரியங்களும் உள்ளான உணர்வினால் தெளிவாக்கப்படுகின்றன.

ஆகையால் ஜீவனின் உணர்வுக்கு ஜீவனின் ஐக்கியத்துடன் அதிகத் தொடர்பு உண்டு. ஜீவனின் ஐக்கியம் நம்மைத் தேவ பிரசன்னத்துக்குள் கொண்டுவருவதின்மூலம் ஜீவனின் உணர்வை உணர்ந்துகொள்ள நமக்கு உதவுகிறது. தேவ பிரசன்னத்தில் தேவன் ஒளியாகப் பிரகாசிப்பதை நாம் அனுபவித்துமகிழலாம். இந்தப் பிரகாசம் எல்லாவற்றையும் நமக்குத் தெளிவாக்குகிறது. அது நம் ஆள்தத்துவத்தின் மூலைமுடிக்கெல்லாம் ஊடுருவிப்பாய்ந்துசென்று, மிக மென்மையானதும், கூர்மையானது மான உணர்வை நமக்குக் கொண்டுவருகிறது. மிக அற்பமான தவறைக்கூட இந்த உணர்வு உடனடியாகக் கண்டுபிடித்து விடுகிறது. எவ்வளவு அதிகமாக ஜீவன் நமக்குள் பாய்ந்தோடு கிறதோ, அவ்வளவு அதிகமாக நாம் தேவ பிரசன்னத்தில் இருக்கிறோம், அவ்வளவு அதிகமாக பிரகாசத்தை அனுபவிப்போம். எவ்வளவு அதிகமாக நாம் இந்தப் பிரகாசத்தை அனுபவிக்கி றோமோ, அவ்வளவு அதிகமாக நாம் ஒரு மென்மையான, கூர்மை யான உணர்வை அறிந்துகொள்வோம். இந்த உணர்வினால்தான் தேவனையும், அவருடைய சித்தத்தையும், அவருடைய வழியையும் நாம் அறிந்துகொள்ளலாம். இந்த உணர்வு எல்லாவற்றையும் ஆராய்ந்துபார்க்கிறது, பரீட்சித்துப்பார்க்கிறது.

அன்றியும் ஜீவனின் இந்த உள்ளான உணர்வு எப்போதும் கர்த்தருடன் நமக்கிருக்கும் நம் உள்ளான உறவின் அளவைச் சார்ந்திருக்கிறது. ரோமர் 8:6 சுட்டிக்காட்டுவதுபோல நாம் நம் மனதை மாம்சத்தின்மேல் பொருத்தும்போது, நாம் நம் சுயத்தை மாம்சத்தின்மேல் பொருத்துகிறோம். மனதை மாம்சத்தின்மேல் பொருத்துவது என்றால், நம் சுயம் மாம்சத்துடன் ஒத்துழைக்கிறது என்று அர்த்தம். நாம் மாம்சத்துடன் ஒத்துழைத்தால் தேவனுடனான நம் உறவில் நிச்சயமாகத் தவறு இருக்கும். மனிதனின் மூன்று பகுதிகளைச் சித்திரிக்கிற, பொது மையங்கொண்ட மூன்று வட்டங்களை நினைவில்கொள்ளுங்கள். சாத்தான் சீரழித்ததினால் சுபாவத்தில் மாறிப்போன சரீரமே (வெளிவட்டம்) மாம்சம். நம் மனித ஆள்தத்துவத்தைக் குறிக்கும் சுயத்தில், அதாவது ஆத்துமாவில் (நடுவட்டம்), மனம் இருக்கிறது. மூவொரு தேவன் ஆவியில் (உள்வட்டம்) வாசம்பண்ணுகிறார். மாம்சத்துக்கும், ஆவிக்குமிடையே இருக்கும் மனம் ஏதேனும் ஒரு திசையில், அதாவது மாம்சத்தை நோக்கி அல்லது ஆவியை நோக்கி,

நகரக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது. ரோமர் 8:6-ஐ ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். வேதத்திலுள்ள மிக முக்கியமான வசனங்களில் இதுவும் ஒன்று. ஒரு வகையில் யோவான் 3:16-ஐவிட இது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். நாம் யோவான் 3:16-ஐ மட்டும் நினைவில் வைத்துக்கொண்டு, ரோமர் 8:6-ஐ மறந்துவிட்டால், அரைகுறையாக இரட்சிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாக இருப்போம், நாம் ஒருபோதும் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக இருக்கமுடியாது. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கு யோவான் 3:16 நமக்குப் போதும். ஆனால் வெற்றியுள்ள கிறிஸ்தவனாக இருப்பது எப்படி என்பதை ரோமர் 8:6 சுட்டிக்காட்டுகிறது.

நம் மனதை, அதாவது சுயத்தை மாம்சத்தின்மேல் பொருத்துவது மரணம். நம் மனதை அல்லது சுயத்தை ஆவியின்மேல் பொருத்துவது ஜீவனும், சமாதானமும் ஆகும். மரணத்துக்கான அல்லது ஜீவனுக்கான திறவுகோல் இங்கே இருக்கிறது. உண்மையில் மனம் நடுநிலையிலிருக்கிறது. இது மதில்மேல் இருக்கிறது. இது மாம்சத்துக்கு நேராகவோ அல்லது ஆவிக்கு நேராகவோ திரும்பலாம். ஏதேன் தோட்டத்தின் கதையை மீண்டும் சொல்லவேண்டும். சுயாதீனமான சித்தம் இந்த இரண்டில் ஏதாவது ஒன்றைத் தெரிந்தெடுக்கலாம். அறிவுவிருட்சத்தைத் தெரிந்தெடுப்பது மரணத்தைக் குறிக்கிறது. ஆனால் ஜீவவிருட்சத்தைத் தெரிந்தெடுப்பது ஜீவனைக் குறிக்கிறது. நாம் இந்த இரண்டுக்குமிடையில் இருக்கிறோம். முடிவு நாம் எதைத் தெரிந்தெடுப்போம் என்பதையும், நம் மனப்பாங்கையும் பொறுத்திருக்கிறது. சாத்தானின் பிரதிநிதியான, ஆளாக உருவகப்படுத்தப்பட்ட பாவம், மாம்சத்தில் இருக்கிறது; நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, மூவொரு தேவன் ஆவியில் இருக்கிறார்; சுயம் மனதில் இருக்கிறது. ஜீவனா அல்லது மரணமா என்பதின் இரசகியம் நாம் ஆவியுடனா அல்லது மாம்சத்துடனா எதனுடன் ஒத்துழைக்கிறோம் என்பதையே சார்ந்திருக்கிறது. நாம் மாம்சத்துடன் ஒத்துழைக்கும்போது மரணத்தைக் கொண்டிருக்கிறோம்; நாம் ஆவியுடன் ஒத்துழைக்கும்போது ஜீவனாகிய தேவனில் நாம் பங்குகொள்கிறோம்.

### (1) மரணத்தின் சுவையை உணர்தல்

நாம் மரணத்தைக் கொண்டிருக்கிறோம் என்று நமக்கு எப்படித் தெரியும்? அதை உணர்வதின்மூலம் நாம் அறிகிறோம். மரணம் ஒருவகையான உள்ளான உணர்வை நமக்குத் தருகிறது. வெறுமை இப்படிப்பட்ட ஓர் உணர்வாகும். நமக்குள் நாம் வெறுமையாய் உணரும்போது மரணத்தை உணர்கிறோம். மரணம் நமக்குத்

தருகிற இன்னோர் உணர்வு இருள். நாம் நமக்குள் இருளை உணரும்போது நாம் மரணத்தைக் கொண்டிருக்கிறோம். இளைப்பாறுதலின்மையும், அமைதியின்மையும் சேர்ந்த *பதற்றத்தையும்* மரணம் நமக்குத் தருகிறது. இது ஆறுதலான எதுவும் நமக்குள் இல்லை என்ற ஓர் உணர்வு; எல்லாமே நமக்குள் ஒருவகையான உராய்வில்தான் இருக்கின்றன என்ற ஓர் உணர்வு - சமாதானம் இல்லை, இளைப்பாறுதல் இல்லை, ஆறுதல் இல்லை, அமைதி இல்லை. மரணத்தின் இன்னோர் உணர்வு *பலவீனம்*. "இதை இனிமேல் என்னால் பொறுக்கமுடியாது," என்று நாம் அடிக்கடிக் கூறுகிறோம். நாம் மிகவும் பலவீனமானவர்கள் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. நம் ஏமாற்றங்களையும், தோல்விகளையும் தாங்க நம்மிடம் பலம் இல்லை, வலிமை இல்லை, சக்தி இல்லை. கடைசியாக *மனச்சோர்வு, மனத்துயரம், மனநசுக்கம்* போன்ற உணர்வையும் மரணம் நமக்குத் தருகிறது. நாம் பலவீனர், எனவே சோர்ந்துபோவது சுலபம். ஏன்? ஏனென்றால் நம் மனம் மாம்சத்தின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது. எனவே இது மரணத்தை விளைவிக்கிறது. வெறுமை, இருள், இளைப்பாறுதலின்மை, பலவீனம், மனச்சோர்வு ஆகியவையெல்லாம் மரண உணர்வின் சுவைகள். வெறுமை, இருள், இளைப்பாறுதலின்மை, பலவீனம், மனச்சோர்வு ஆகியவைகளை உணரும்போது நாம் நமக்குள் மரணத்தை அறிகிறோம். இப்படிப்பட்ட உணர்வு நாம் மாம்சத்தில் இருக்கிறோம் என்றும், மாம்சத்துடன் சேர்ந்து நிற்கிறோம் என்றும் நிரூபிக்கிறது.

ஆனால் மரணத்தின் இந்த உணர்வு மெய்யாகவே ஜீவனின் உணர்விலிருந்தே வருகிறது. ஒரு ஆள் மெய்யாகவே செத்துப்போனான், அவன் ஒரு பிணம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியானால் வெறுமை, இருள், இளைப்பாறுதலின்மை, பலவீனம் போன்ற எந்த உணர்வும் அவனுக்கு இருக்காது. ஏனென்றால் அவனுக்கு ஜீவன் இல்லை. ஆனால் அவனுக்குள் ஜீவன் இருக்குமானால், அந்த ஜீவன் சுகவீனமாகவும், பலவீனமாகவும் இருந்தபோதும், வெறுமை, இருள் போன்ற உணர்வுகள் கொஞ்சமாவது அவனுக்கு இருக்கும். அவனால் இந்தக் காரியங்கள் அனைத்தையும் உணரமுடியும். ஏனென்றால் அவன் இன்னும் உயிரோடு இருக்கிறான். உயிருள்ள மனிதன் என்ற வகையில் அவன் மரணத்தைத் தொடர்புகொள்கிறான்; அவனுக்குள்ளிருக்கும் ஜீவன்தான் அவனுக்கு மரண உணர்வைக் கொடுக்கிறது. மரணத்தின் சுவையை உணர்வது, ஜீவ உணர்வின் ஒரு செயல்பாடு, நோக்கம்.

### (2) ஜீவன் மற்றும் சமாதானத்தின் சுவையை உணர்தல்

ஆயினும் மரணத்தின் உணர்வு எதிர்மறையான காரியம்தான். நேர்மறையான பக்கத்தில் ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு இருக்கிறது. ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு, சுவை, என்றால் என்ன? முதலாவது வெறுமைக்கு மாறான *திருப்தியும், நிறைவும்*. கர்த்தரிடத்தில் நாம் திருப்தியாயிருக்கிறோம் என்று நாம் உணர்கிறோம். அவருடைய பிரசன்னத்தில் நாம் பரிபூரணமாக இருக்கிறோம். நமக்குத் தாகமுமில்லை, பசியுமில்லை. இரண்டாவது, இருளுக்கு எதிரான *வெளிச்சத்தை* உணர்கிறோம். உள்ளான திருப்தியோடு நமக்குள்ளே பிரகாசிக்கும் வெளிச்சமும் இருக்கிறது. நம் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு மூலைமுடுக்கும் வெளிச்சத்தினால் நிறைந்திருக்கிறது. எல்லாப் பகுதியும் தெள்ளத்தெளிவாக இருக்கிறது. தெள்ளத்தெளிவாகத் தெரியாதது ஒன்றுமே இல்லை. பிறகு இளைப்பாறுதலின்மைக்கு மாறான *சமாதானம்* நமக்கு இருக்கிறது. இது நம் எல்லாக் குழப்பங்களையும் அமைதிப்படுத்துகிறது. இளைப்பாறுதலுடன் கூடிய சமாதானம், ஆளுதலுடன்கூடிய சமாதானம், ஓய்வுடன் கூடிய சமாதானம் - இதுவே நமக்குள் இருக்கும் உணர்வு. உராய்வின் உணர்ச்சியோ அல்லது தர்க்கத்தின் உணர்ச்சியோ இல்லை. பலவீனத்திற்கு எதிரான *பலம்* ஜீவ உணர்வின் இன்னொரு சுவை. ஜீவனின் முழு பலத்தையும், வல்லமையையும் நாம் உணர்கிறோம். நமக்குள்ளே ஒரு ஜீவனுள்ள டைனமோ இருக்கிறது. ஒரேவோர் இயந்திரம் மட்டுமல்ல, மாறாக நான்கு இயந்திரங்கள் இருப்பதைப்போலத் தோன்றுகிறது. சிலசமயங்களில் பத்து இலட்சம் குதிரைகளின் திறனை நாம் உணர்கிறோம். ஆ! நம் பலவீனங்கள் அனைத்தையும் மேற்கொள்ளக்கூடிய ஒரு நிஜமான பலப்படுத்துதல் நமக்குள்ளே இருக்கிறது! நம் மனைவிகளின் நீண்ட முகங்களைப்பற்றி நமக்குத் கவலையில்லை. நம் மனைவிகள் நம்மேல் பாய்ந்தால் "அல்லேலூயா" சொல்வோம். அவைகள் நம்மை நிலைகுலையச் செய்யமுடியாது; நம்மைக் கோபப்படச்செய்யமுடியாது. ஏனென்றால் நாம் பலவான்கள். நாம் இலேசானவர்களோ, பலவீனமானவர்களோ இல்லை; நாம் கனமுள்ளவர்கள், வல்லமை நிறைந்தவர்கள். எதுவும் நம்மைத் தலைகீழாக்கிவிட முடியாது! கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! இதுவே ஜீவன் மற்றும் சமாதானத்தின் உள்ளான உணர்வு. இறுதியாக மனச்சோர்வுக்கு மாறான *விடுதலை* நமக்கு இருக்கும். ஜீவன் பாய்ந்தோடுவதின்மூலம் நாம் விடுவிக்கப்படுவதோடு மட்டுமின்றி, மனத்துயரங்களை யெல்லாம் கடந்து மனித வரம்புக்கு அப்பாற்பட்ட உன்னத நிலையிலிருப்போம். எதுவுமே நம்மை ஒடுக்கமுடியாது. எவ்வளவு

அதிகமாக மனத்துயரம் வருகிறதோ, அவ்வளவு அதிகமாக நாம் உன்னதங்களில் இருப்போம்.

இவ்வாறு நாம் ஜீவனையும், சமாதானத்தையும் உணர்ந்து கொள்கிறோம். எளிமையாகச் சொல்வதானால், அவைகளை உணர்வதின்மூலம் நாம் புரிந்துகொள்கிறோம். அவைகளை நாம் உணர்கிறோம்; ஏனென்றால் நமக்கு ஜீவன் இருக்கிறது. நமக்குள் இருக்கும் இந்த ஜீவன் பாய்ந்தோடுகிற ஜீவன். ஜீவன் பாய்ந்தோடு வதால் நாம் ஜீவிக்கிறோம்; தேவ பிரசன்னத்தில் இருக்கிறோம். ஆகையால் நாம் திருப்தியடைகிறோம், பிரகாசிக்கப்படுகிறோம், பலப்படுத்தப்படுகிறோம், ஆற்றப்படுகிறோம், தூக்கிவிடப்படு கிறோம், விடுதலையாக்கப்படுகிறோம், மனித வரம்பைக்கடந்த உன்னத நிலையிலிருக்கிறோம் என்ற ஆழமான உள்ளான உணர்வு நமக்கு இருக்கிறது. எவ்வளவு அதிகமாக நாம் ஜீவனின் ஐக்கியத்தில் இருக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் ஜீவனை உணர்வோம். எவ்வளவு அதிகமாக நாம் ஜீவனை உணர்கிறோமோ அவ்வளவு அதிகமாக ஜீவனின் பெருகின ஐக்கியத்தை அனுபவித்துமகிழ்வோம். நாம் இந்த இரண்டையும் எப்போதும் சுழற்சியாகவே அனுபவிக்கிறோம். அதாவது, ஜீவனின் ஐக்கியம் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, ஜீவனின் உணர்வும் அவ்வளவு அதிகமாக இருக்கும்; ஜீவனின் உணர்வு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ, ஜீவனின் ஐக்கியமும் அவ்வளவு அதிகமாக இருக்கும். இது அற்புதமானது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! ஜீவனின் ஐக்கியமும், ஜீவனின் உணர்வும் உயிர்த்தெழுதலின் துணைப்பயன்கள். தேவன், ஜீவனாகக் கிறிஸ்து, தெய்வீக சுபாவம், ஜீவப்பிரமாணம், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ஆகியவைகளே உயிர்த்தெழுதலின் பிரதானமான ஐசுவரியங்கள். இந்த ஐசுவரியங்களிலிருந்து இரண்டாவதான, ஆனால் நடைமுறைக்குரிய, இரண்டு காரியங்கள் வெளிப்படுகின்றன: அவை ஜீவனின் ஐக்கியமும், ஜீவனின் உணர்வுமாகும்.

## அத்தியாயம் பதினெட்டு

# ஆவியை இயக்குவதும் ஆவிக்குள் நுழைவதும்

நாம் பெற்றிருக்கிற தெய்வீக ஜீவன் ஜீவனின் ஐக்கியமாக அல்லது ஜீவனின் ஓட்டமாக வெளியாகிறது என்றும், இந்த ஜீவனின் ஓட்டம் ஜீவனின் ஆழமான உணர்வையும், உள்ளான உணர்ச்சியையும் உற்பத்திசெய்கிறது என்றும் பதினேழாம் அதிகாரத்தில் நாம் பார்த்தோம். இப்போது நாம் ஆத்துமாவுக்கும் ஆவிக்குமிடையேயுள்ள வித்தியாசத்தைப் பார்ப்போம்.

ஆசரிப்புக் கூடாரத்தில் அல்லது தேவாலயத்தில் மூன்று பகுதிகள் இருக்கின்றன என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். நாமே தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்று புதிய ஏற்பாடு ஊதியாகத் தெரிவிக்கிறது என்பதை நினைவில்கொள்ளுங்கள். ஆகையால் ஆசரிப்புக் கூடாரம் அல்லது தேவாலயம் கிறிஸ்துவுக்கு மட்டுமின்றி, கிறிஸ்தவர்களுக்கும் முன்னடையாளமாக இருக்கிறது. மனித ஆள்தத்துவம் சரீரம், ஆத்துமா, ஆவி (1 தெச. 5:23) என்னும் மூன்று பகுதிகளாகலானது. இந்த மூன்று பகுதிகளும் ஆசரிப்புக் கூடாரத்தின் மூன்று பகதிகளுடன் ஒத்திருக்கின்றன; சரீரம் வெளிப்பிரகாரத்துக்கும், ஆத்துமா பரிசுத்த ஸ்தலத்துக்கும், ஆவி மகா பரிசுத்த ஸ்தலத்துக்கும் ஒத்திருக்கின்றன.

முன்னடையாளமாகிய ஆசரிப்புக் கூடாரத்தில் தேவ பிரசன்னமாகிய தேவனுடைய ஷெக்கினா மகிமையும், கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாகிய பெட்டியும் மகா பரிசுத்த ஸ்தலத்தில்தான் இருந்தன. நம் ஆவியிலுள்ள கிறிஸ்துவே இந்த முன்னடையாளத்தின் புதிய ஏற்பாட்டுச் செயலாக்கமும், நிறைவேற்றமுமாக இருக்கிறார். இன்று இவர் நம் ஆள்தத்துவத்தின் மிக உள்ளான பகதியில் இருக்கிறார். அதுவே இப்போதைய மகா பரிசுத்த ஸ்தலம்.

எனவேதான் எபிரேயர் நிருபம் இந்தக் காரியத்தைப்பற்றிப் பேசுகிறது. நாம் பார்த்ததுபோல், எபிரேயர் 4-ஆம் அதிகாரம் 12-ஆம் வசனம் ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பிரிக்கவேண்டிய அவசியத்தைத் தெளிவுபடுத்துகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நம் ஆவியில் வாசம்பண்ணுகிற ஜீவிக்கிற கிறிஸ்துவை நம் அனுபவத்தில் அறிந்துகொள்வதற்கு நாம் ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பகுத்துணர வேண்டியது அவசியம். இது முழுப் புதிய ஏற்பாட்டின் போதனைகளுக்கு

ஒத்திருக்கிறது. நாம் நம் ஆத்துமாவை வெறுக்குமாறும், மறுக்குமாறும் நான்கு சுவிசேஷங்களும் நமக்கு அறிவுறுத்து கின்றன. நாம் ஆவிக்கேற்றபடி நடக்குமாறும், மனித ஆவியில் வாழுமாறும் நிருபங்கள் நம்மை உற்சாகப்படுத்துகின்றன. இந்த ஆவியில்தான் கர்த்தராகிய இயேசு தெய்வீக ஆவியாக வாசம்பண்ணுகிறார் (2 தீமோ. 4:22). ஆகையால் ஆத்துமாவை வெறுத்து நம் ஆவியில் கர்த்தரைப் பின்பற்றுவதின்மூலம் ஆத்துமாவிலிருந்து மனித ஆவியை நாம் பகுத்துணர்கிறோம்.

## பலிபீடத்தின் அனுபவம்

இந்தக் கோட்பாட்டைச் செயல்படுத்துவதில் ஒரு பிரச்சினை இருக்கிறது. அதை இப்போது பார்ப்போம். ஒருமுறை ஒரு சகோதரி என்னடத்தில் வந்து, "நாம் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இல்லையென்றால், நாம் இன்னும் சரீரத்தில் அல்லது ஆத்துமாவில் இருக்கிறோம் என்றுதான் அர்த்தம். அப்படியானால் நம் ஆவியை நாம் எப்படி இயக்கமுடியும்?" என்று கேட்டாள். இது முற்றிலும் விவேகமான கேள்வியாகவே தோன்றுகிறது. நாம் இன்னும் சரீரத்தில் அல்லது ஆத்துமாவில் இருப்போமானால், ஆவிக்குள் இன்னும் நுழையவில்லையென்றால், நம் ஆவியை நாம் எப்படி இயக்கமுடியும்? இந்தக் கேள்விக்கு மனத்துக்குரிய எந்தவிதமான வழிமுறையிலும் நாம் பதில்சொல்லமுடியாது. ஆயினும், நாம் இன்னும் சரீரத்தில் அல்லது ஆத்துமாவில் வாழ்ந்துகொண்டிருக்கும்போது, நாம் ஆவியிலிருந்து முற்றிலும் வெட்டப்பட்டிருக்கிறோம் என்பதல்ல இதன் பொருள். நாம் நம் கைகளையோ அல்லது கால்களையோ இயக்கும்போது, நம் கைகள் அல்லது கால்கள் தலையிலிருந்து வெட்டப்பட்டிருக்கின்றன என்பதா அர்த்தம்? நாம் சரீரம், ஆத்துமா, ஆவி என்ற பகுதிகளையுடைய ஒரு முழுமையான ஆள்தத்துவம். நாம் இந்த ஆள்தத்துவத்தை மூன்று பகுதிகளாக வெட்டமுடியாது. அந்தச் சகோதரி மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்தபோது, அவளுடைய மனந்திரும்புதல்கூட ஆவியை இயக்குவதுதான் என்று அவளிடம் சொன்னேன். நிஜமான மனந்திரும்புதலுக்கு நொறுங்குண்ட ஆவி தேவை. மனந்திரும்புதல் வெறுமனே நம் மனநிலையில் மட்டும் இருக்குமானால் இது ஆழமான, நிஜமான மனந்திரும்புதல் இல்லை. இதை நம் ஆவிக்குள் ஆழமாக உணர்ந்துகொள்ளவேண்டும். நாம் கர்த்தராகிய இயேசுவைப் பெற்றுக்கொண்டபோது ஆவி என்ற பதத்தைப்பற்றிய உணர்வோ, அறிவோ நமக்கு இல்லாவிட்டாலும், நம் ஆவியை நாம் இயக்கினோம். கர்த்தரைப்பற்றிய நம் அனுபவத்தின் ஒவ்வொரு கட்டமும் நம் ஆவியிலுள்ள ஏதோவொன்றுதான்.

கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராகப் பெற்றபோது நாம் சிலுவைக்கு வந்தோம். அங்கே நாம் மீட்கப்பட்டோம். ஆசரிப்புக் கூடாரமாகிய முன்னடையாளத்தில், வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருந்த பலிபீடம் சிலுவைக்கு மாதிரியாயிருக்கிறது. நாம் மனந்திரும்பி, சிலுவையருகில் கர்த்தராகிய இயேசுவைப் பெற்றுக்கொண்டோம். நாம் இரட்சிக்கப்பட்ட அந்தக் கணத்தில், மெய்யாகவே நம் ஆவியை இயக்கினோம். நாம் நம் ஆவியை இயக்கினதால், நாம் தேவனைத் தொட்டோம். தேவனை உணர்ந்தோம், தேவனோடு ஜீவனுள்ள தொடர்புகொண்டோம்.

ஆனால் ஒருவேளை அதற்குப்பின்பு நாம் ஆவியினால் வாழவில்லை; சொல்லப்போனால் ஆத்துமாவினால்கூட வாழவில்லை. மாறாக உலகத்தின் வழிகளிலேயே வாழ்ந்தோம். ஆம், நாம் சிலுவையில் இரட்சிக்கப்பட்டோம், நாம் வெளிப்பிரகாத்திலுள்ள பலிபீடத்தைக் கடந்துசென்றோம் என்பதையே இது குறிக்கிறது. ஆனால் அதையடுத்து நாம் ஆவியினால் வாழவில்லை, ஆத்துமாவினால்கூட வாழவில்லை. மாறாக உலக வழிகளுக்கேற்றபடியே வாழ்ந்தோம்.

உலக வழிகள் என்றால் என்னவென்று நீங்கள் கேட்கக்கூடும். "சன்" என்ற ஒரு சகோதரரை எடுத்துக்காட்டாகக் கொள்வோம். இவர் ஒரு நீதிபதியாக இருந்தார். ஒருநாள் நான் பிரசங்கித்துக்கொண்டிருந்த சுவிசேஷக் கூட்டத்திற்கு இவரைக் கூட்டிக்கொண்டு வந்தார்கள். கூட்டத்திற்குப்பின்பு இந்த அவிசுவாசி உலகப்பிரகாரமான ஒரு கேள்வியுடன் என்னிடம் வந்தார், "ஆ! திரு. லீ, தேவன் ஆணா? பெண்ணா? தயவுசெய்து எனக்குச் சொல்லுங்கள்," என்று அவர் கேட்டார். தேவனையும், கிறிஸ்துவையும்பற்றி நான் அவருக்குக் கொஞ்சம் சொன்னேன். என் பிரசங்கம் அவரை மெய்யாகவே தொட்டது என்றும், ஆனால் எப்படி விசுவாசிப்பது என்று தெரியவில்லை என்றும் சொன்னார். கிறிஸ்து ஆவியாயிருக்கிறார்; அவர் எங்கும் இருக்கிறார்; எனவே கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ள அவர் தன்னைச் சாதாரணமாகத் திறந்துகொடுக்குமாறு நான் அவரிடம் சொன்னேன். "வீட்டுக்குப் போங்கள், கதவைச் சாத்துங்கள், முழங்கால்படியிடுங்கள், உங்கள் பாவங்களை அறிக்கைசெய்யுங்கள், கிறிஸ்துவுக்கு உங்களைத் திறந்துகொடுங்கள். அவர் உங்களுக்காக மரித்தார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்கள் என்றும், அவரை உங்கள் இரட்சகராக நீங்கள் பெற்றுக்கொள்கிறீர்கள் என்றும் அவரிடம் சொல்லுங்கள்," என்று நான் சொன்னேன். அவர் இவ்வாறு செய்வதாக வாக்குறுதிசெய்தார்.

அன்று இரவு, கிறிஸ்தவத்தைப்பற்றி ஒன்றுமே அறியாத அவருடைய குடும்பத்தாருடன் சேர்ந்து இருக்கும்போது, திடீரென்று அவர் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தினார்.

அவர் என்ன செய்யப்போகிறார் என்று அவருடைய மனைவியும், மகனும் கேட்டபோது, கொஞ்சம் விசேஷமான வேலை இருப்பதாகவும், எனவே கதவைச் சாத்தவேண்டியிருக்கிறது என்றும் அவர் அதற்குப் பதிலுரைத்தார். அவர் முழங்கால்படியிட்டு ஜெபித்தார். அவருடைய மனைவியும், மகனும் ஜன்னல் வழயாக வேவுபார்த்து, அவர் ஏன் முழங்கால்படியிட்டிருக்கிறார் என்று ஆச்சரியப்பட்டு, அவரைப் பார்த்து நகைத்தார்கள். அவர் ஜெபித்து முடித்தபின்பு, ஏதாவதொன்று அவருக்குத் திடீரென்று சம்பவிக்கும் என்று நினைத்தார். ஆனால் எதுவுமே நிகழவில்லை. அடுத்தநாள் காலையில், சிற்றுண்டிக்குப்பின்பு, ஒரு வழக்கின் காரணமாக அவர் நீதிமன்றத்திற்குப் போகவேண்டியதிருந்தது. போகும் வழியில், திடுதிடுப்பென்று ஒரு காரியம் சம்பவித்தது. முழுப் பிரபஞ்சமும் மாறிவிட்டதாக அவர் என்னிடம் சொன்னார். வானமும், பூமியும் அற்புதமாகத் தோன்றின. அவர் முன்பெல்லாம் அருவருத்த சின்ன நாய்க்குட்டியும், பூனைக்குட்டியும்கூட இப்போது அவருக்கு மிக இனிமையாகத் தோன்றின. அவர் மிக மகிழ்ச்சியாக இருந்ததால் சிரிக்க ஆரம்பித்தார். “இது என்ன?” என்று அவர் ஆச்சரியப்பட்டார். அவர் நீதிமன்றத்துக்குள் நுழைந்து வழக்கை ஆரம்பித்தபின்பும்கூட, அவரால் சிரிப்பதை அடக்கமுடியவில்லை. வழக்கு முடிந்தபின்பு அவர் இன்னும் அதிகமதிகமாகச் சிரித்துக்கொண்டே வீடு வந்துசேர்ந்தார். “உங்களுக்கு என்ன ஆனது? உங்களுக்கு நிறையப் பணம் கிடைத்ததா? என்ன, இவ்வளவு சந்தோஷமாகவும் மகிழச்சியாகவும் இருக்கிறீர்கள்?” என்று அவருடைய மனைவி கேட்டாள். “எனக்குத் தெரியாது. நான் சும்மா மகிழ்ச்சியாயிருக்கிறேன். இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாமே மாறிவிட்டன,” என்று அவர் பதிலுரைத்தார். அடுத்த நாள், அவர் ஒரு வாலிப சகோதரரைச் சந்தித்தார். அவர் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டுவிட்டார் என்பதை உணர்ந்துகொள்ள இந்த வாலிப சகோதரர் அவருக்கு உதவிசெய்தார்.

அவர் இரட்சிக்கப்பட்டிருந்தாலும்கூட, அதற்குப் பின்னும் தொடர்ந்து உலகப்பிரகாரமான வழியிலேயே நடந்துகொண்டும், வாழ்ந்துகொண்டும், உலகப்பிரகாரமான மக்கள் காரியங்களைப் பார்ப்பதுபோலவே பார்த்துக்கொண்டும் இருந்தார். அவர் இன்னும் சூரியனுக்குக் கீழேயிருந்த வெளிப்பிரகாரத்திலேயே இருந்தார். அவருடைய எல்லா உணர்வுகளும் அப்படியே முன்பு இருந்ததைப்போலவே இருந்தன. மூன்றாம் நாளில், அவரை மறுபடியும் சபைக் கூட்டத்திற்கு கூட்டிக்கொண்டு வந்தார்கள். நான் அவரை அங்கே பார்த்தபோது சந்தோஷப்பட்டேன். கூட்டம் முடிந்தபிறகு, “திரு. லீ, நீங்கள் ஒரு நல்ல பேச்சாளர், மிகவும்

நாவன்மைகொண்டவர். எந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து நீங்கள் பட்டம்பெற்றீர்கள்?" என்று அவர் கேட்டார். அவருடைய கருத்துகள் அவர் காரியங்களை உலகப்பிரகாரமான வழியிலேயே பார்த்துக்கொண்டிருக்கிறார் என்பதையே வெளிப்படுத்தின. பின்பு அவர் சபையைக்குறித்த பல காரியங்களைப்பற்றி என்னோடு உரையாடினார்: "இவ்வளவு அதிகமான மக்களை எப்படிக் கொண்டுவந்தீர்கள்? என்ன வழிமுறைகளைப் பயன்படுத்தினீர்கள்? விளம்பரம்செய்தீர்களா அல்லது ஓர் அரசியல் கட்சியைப்போல ஏதாவது கொள்கைப் பிரச்சாரம் செய்தீர்களா?" என்று அவர் கேட்டார். இது காரியங்களை முழுக்க முழுக்க உலகப்பிரகாரமான வழியிலேயே பார்ப்பதுதான். பின்பு அவர் என்னிடம், "திரு. லீ, நான் ஒரு கிறிஸ்தவனாக இருக்க விரும்புகிறேன். தயவுசெய்து எனக்கு வழிமுறையைச் சொல்லித்தாருங்கள். நான் ஏதாவது படிவங்களை நிரப்பவேண்டுமா அல்லது ஏதாவது தாள்களில் கையொப்பம் போடவேண்டுமா?" என்று கேட்டார். அவர் சரியாகப் புரிந்துகொள்வதற்கு நான் அவருக்கு உதவினேன். ஆனால் அதன்பிறகும் அவர் என்னிடம், "நான் உங்கள் சபையின் ஓர் உறுப்பினராகிவிடுகிறேன் என்ற வைத்துக்கொள்ளுங்கள். வருடந்தோறும் நான் எவ்வளவு பணம்கொடுக்கவேண்டும்? என் குடும்பத்தை நான் என்ன செய்யவேண்டும்? என் மனைவிக்கும், குழந்தைக்கும், நீங்கள் அநேக சட்டதிட்டங்களைக் கொடுப்பீர்களா?" என்று கேட்டார். இது என்ன? இதுதான் உலக வழி. அவர் இரட்சிக்கப்பட்டிருந்தார். ஆனால் இவையனைத்தும் அவர் வெளிப்பிரகாரத்திலேயே, அதாவது எகிப்திலேயே, இருந்தார் என்பதை நிரூபித்தன. அவர் பஸ்காவை அனுபவித்தார். ஆனால் அவர் இன்னும் சிவந்த சமுத்திரத்தைக் கடக்கவில்லை. அவர் இன்னும் பௌதீக உலகத்திலேயே இருந்தார்.

## முதல் திரையின் அனுபவம்

இந்தச் சகோதரரையே தொடர்ந்து ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்துவோம். அவர் 1938-ல் இரட்சிக்கப்பட்டார். அடுத்த வருடம் ஒன்றுமே நிகழவில்லை. அவர் நிஜமாகவே இரட்சிக்கப்பட்டார். ஆனால் அவர் இன்னும் முற்றிலும் உலகத்திலேயே இருந்தார். மூன்று வருடங்களாக எதுவுமே சம்பவிக்கவில்லை. பின்பு 1941-ல் அவர் மீண்டும் புத்துயிர்பெற்றார். ஏதோவொன்று அவரை முற்றிலும் மாற்றியமைத்தது. ஒருநாள் அவர் ஜெபித்துக்கொண்டிருந்தபோது உலகப்பிரகாரமான அனைத்தையும் அவர் கைவிட்டுவிட்டார். "கர்த்தாவே, என் அறிவை, என் நீதிபதி வேலையை, என் குடும்பத்தை, உலகத்துக்குரிய எல்லாவற்றையும் நான்

விட்டுவிடுகிறேன். ஆ! கர்த்தாவே, இப்போதிலிருந்து நான் உம்மை நேசிக்கிறேன். நான் மூன்றாண்டுகளுக்குமுன்பே இரட்சிக்கப்பட்டேன், ஆனால் உலகப்பிரகாரமான அனைத்தையும் விட்டுவிடவேண்டும் என்று நான் இப்போதுதான் அறிகிறேன்," என்று அவர் சொன்னார். அவர் உலகத்தை விட்டுவிட்டார்.

இப்படிச் செய்ததால், இந்தச் சகோதரர் வெளிப்பிரகாரத்திலிருந்து, முதல் திரையின் வழியாகக் கடந்துசென்று, பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்துவிட்டார். அந்த நாளிலிருந்துதானே, வேதத்தை வாசிப்பதின்மூலம் கிறிஸ்துவுடன் எப்படி ஐக்கியம்கொள்வது என்றும், கிறிஸ்துவைத் தன் அனுதின மன்னாவாக எப்படி எடுத்துக்கொள்வது என்றும் அவர் கண்டுகொண்டார். அவருடைய வேதாகமம் அவருக்கு மிகவும் விலையேறப்பெற்றதாகவும், இனிமையானதாகவும் ஆகிவிட்டது. ஒவ்வொரு நாளும், வேதாகமத்திலிருந்து ஏதாவது கொஞ்சத்தை உணவாக அனுபவித்துமகிழ்ந்தார். அந்நாளிலிருந்து, அவர் மேஜையின்மேலுள்ள தேவ சமுகத்து அப்பத்தை மட்டும் அனுபவித்துமகிழவில்லை, மாறாக உள்ளேயும் வெளிச்சத்தினால் பிரகாசிப்பிக்கப்பட்டார். அதன்பின் ஜெபிக்கிற மகிழ்ச்சியையும் பெற்றார். அவர் என்னிடம், "ஆ, சகோதரர் லீ (அதன் பின்பு அவர் என்னை ஒருபோதும் திரு. லீ என்று அழைக்கவில்லை), நான் என் கண்களை மூடி ஜெபிக்கும்போதெல்லாம், பரலோகத்தில் இருப்பதைப்போன்ற உணர்ச்சியே என்னிடம் இருக்கிறது," என்று சொன்னார். இது என்ன? இதுவே எரியும் தூபத்தின் சுகந்த வாசனை. அவர் தேவ பிரசன்னத்தை உணர்ந்தார். ஏனென்றால் கிறிஸ்துவைத் தன் அனுதின மன்னாவாகவும், உள்ளான வெளிச்சமாகவும், உயிர்த்தெழுதலின் சுகந்த வாசனையாகவும் அவர் அனுபவித்துக்கொண்டிருந்தார்.

இந்த இடத்தில், அவர் இதை எங்கே அனுபவித்தார் என்பதைப்பற்றி நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும். அவர் முதல் திரையைக் கடந்ததால் வெளிப்பிரகாரத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்தார். அவர் இரண்டாம் திரையைக் கடக்கவில்லை. முதலாவது அவருடைய பாவங்களனைத்தும் சிலுவையாகிய பலிபீடத்தில் தீர்க்கப்பட்டன; ஆனால் உலகமும், உலகப்பிரகாரமான காரியங்களும் இன்னும் அவரிடம் இருந்தன. மூன்றாண்டுகளுக்குப்பின்னர், முதல் திரையின் வழியாகக் கடந்துசென்றதால், அவர் உலகத்தையும், உலகப்பிரகாரமான காரியங்களையும் விட்டுவிட்டு பரிசுத்த ஸ்தலத்துக்கள் நுழைந்தார். தினம்தினம் கிறிஸ்துவைத் தன் ஜீவனாகவும், தன் உணவாகவும் தன் ஒளியாகவும், உயிர்த்தெழுதலின் சுகந்த வாசனையாகவும் அனுபவிக்க ஆரம்பித்தார்.

## இரண்டாம் திரையின் அனுபவம்

ஆனால் இன்னும் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இல்லை. பாவங்களும், உலகப்பிரகாரமான காரியங்களும் போய்விட்டன. ஆனால் ஒரு காரியம் இன்னும் இருந்தது - மாம்சம். ஆகவே வேறுபிரிக்கும் இன்னொரு திரை இருந்தது. இந்தச் சகோதரர் தன் புறம்பான மனிதன் உடைக்கப்படுவதைக் கடந்த சில வருடங்களாக அனுபவித்துக்கொண்டிருக்கிறார் என்று தூர கிழக்கிலிருந்து அண்மையில் வந்த கடிதங்களிலிருந்து அறிந்தேன். புறம்பான மனிதன் உடைக்கப்படுவதே இரண்டாவது திரை கிழிக்கப்படுவதாகும். இது மாம்சம் கிழிக்கப்படுவது அல்லது உடைக்கப்படுவது ஆகும். இந்த அனுபவத்திலிருந்து அவர் ஆவியை மெய்யாகப் பகுத்துணர்கிற அனுபவத்தைப் பெற்றுக்கொண்டிருக்கிறார் என்று இந்தக் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன. அவரால் தன் சொந்த ஆவியை மட்டுமின்றி, மற்றவர்களுடைய ஆவியையும்கூடப் பகுத்துணரமுடிகிறது. ஏனென்றால் அவர் இப்போது அதிகமாக ஆவியில் இருக்கிறார்.

இரட்சிப்பின்மூலம் நாம் வெளிப்பிரகாரத்துக்குள் நுழைந்தபோது நம் பாவங்கள் தீர்க்கப்பட்டன; பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்தபோது உலகம் மரணத்துக்குள்ளாக்கப்பட்டது. ஆயினும், நாம் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையவில்லை என்றால், சுயம் இன்னும் மிஞ்சியிருக்கிறது. கிறிஸ்துவை அற்புதமான மன்னவாகவும், பரலோக ஒளியாகவும், உயிர்த்தெழுதலின் சுகந்த வாசனையாகவும், நாம் தினம்தினம் அனுபவித்துமகிழலாம்; ஆனால் இதுகூட அவ்வளவு ஆழமில்லை. ஏனென்றால் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள எல்லாமுமே வெளிப்படையாகக் காண்பிக்கப்படுகிறது. தேவ சமுகத்து அப்பம் *மறைவான* மன்னா அல்ல, வெளிச்சம் *மறைவான* பிரமாணம் அல்ல, தூபமும்கூட உயிர்த்தெழுதலின் *மறைவான* கோல் அல்ல. நாம் கூட்டத்துக்கு வரும்போது மன்னவைக் காண்பிக்கிறோம், வெளிச்சம் வீசுகிறோம், தூபத்தின் சுகந்த வாசனையைப் பரப்புகிறோம் என்பதை எல்லாரும் காணமுடிகிறது. இதுதான் நம் நிலைமை என்றால், நாம் மிக ஆழமானவர்கள் என்று நினைக்கக்கூடாது. அநேக வேளைகளில் எரியும் தூபத்தின் சுகந்த வாசனையோடு நாம் கூட்டத்துக்கு வரும்போது, "ஆ, எவ்வளவு அன்பான சகோதரர்! எவ்வளவு இனிமையான சகோதரி! அவர்கள் வாயைத் திறக்கும்போதெல்லாம் கிறிஸ்துவின் சுகந்த வாசனையை எல்லாரும் உணர்கிறார்கள்," என்று சிலர் அபிப்பிராயம் சொல்லக்கூடும்.

ஆனால் இது மறைவான மன்னவோ, மறைவான பிரமாணமோ,

மறைவான தளிர்த்த கோலோ அல்ல. ஆயினும், பரிசுத்த ஸ்தலத்தின் இந்த நல்ல அனுபவங்களை உதறித்தள்ளிவிடக்கூடாது. மாறாக அவைகளை நாம் மதிக்கவேண்டும். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்! அநேகர் கிறிஸ்துவைத் தங்கள் அனுதின மன்னவாக அனுபவித்துமகிழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அநேக்ர கிறிஸ்துவைத் தங்கள் வெளிச்சமாகவும், உயிர்த்தெழுதலின் சுகந்த வாசனையாகவும்கூடத் தினம்தினம் அனுபவித்துமகிழகிறார்கள். ஆனால் இலக்கு இதுவல்ல என்பதை நாம் உணரவேண்டும். இது கானான் தேசம் அல்ல, இது வனாந்தரமே; இங்கு ஜீவத்தண்ணீர் பாய்ந்தோடும் ஜீவிக்கிற கன்மலையும், அனுதின மன்னாவை நமக்கு விநியோகிக்கும் கிறிஸ்துவும் இருக்கிறார். வானத்திலிருந்து வந்த மன்னாவிலும், கன்மலையிலிருந்து பாய்ந்தோடும் தண்ணீரிலும் பங்குகொள்வதால் நாம் தேவனுடைய இலக்கில் இருக்கிறோம் என்று நிரூபிக்கமுடியாது. இது நாம் எகிப்தில், அதாவது உலகத்தில், இல்லை என்பதை மட்டுமே நிரூபிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறோம், ஆனால் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இல்லை. அது பரிசுத்தமானது, ஆனால் அது மகா பரிசுத்தமானதல்ல. மிகச் சிறந்ததையே அனுபவித்துமகிழுமாறு நாம் மனைந்துசெல்ல வேண்டும். வெறுமனே எகிப்தைவிட்டு வெளியே வந்தால் போதாது - இது எதிர்மறையான அம்சம்தான். இதைவிட மேலான, நேர்மறையான ஒன்று இருக்கிறது. நம் ஆவியிலுள்ள, சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான, நல்ல தேசத்துக்குள் நுழையவேண்டும். எகிப்திலுள்ள பஸ்கா ஆட்டுக்குட்டியையோ, வனாந்தரத்திலுள்ள அனுதின மன்னாவையோ, நல்ல தேசமாகிய கானானோடு ஒப்பிடவே முடியாது. நல்ல தேசமாகிய கானான் கிறிஸ்துவின் ஒரேவோர் அம்சத்தையோ அல்லது ஒரேவொரு பகுதியையோ மட்டும் கொண்டிராமல், சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவையே கொண்டிருக்கிறது.

நாம் இரட்சிக்கப்பட்டபோது, இன்னது என்று உணராமல் நம் ஆவியை இயக்கினோம் என்று மீண்டும் நாம் சுட்டிக்காட்டு கிறோம். இதில் எந்தச் சந்தேகமுமில்லை. இப்போது பரிசுத்த ஸ்தலத்தில் தினம்தினம் நாம் வேதத்தை வாசிக்கிறோம், கிறிஸ்துவைச் சந்திக்கிறோம், பிரகாசிக்கும் ஒளியை அனுபவிக்கிறோம். நாம் ஆவியிலே இல்லாமல், ஆத்துமாவிலேயே இருக்கக்கூடிய நபராக இருந்தபோதும், இவையெல்லாவற்றையும் நம் ஆவியை இயக்குவதால் மட்டுமே அனுபவிக்கமுடியும். ஒருவேளை நம் ஆவியை இயக்கி, காலையில் நாம் வேதத்தை

வாசிக்கக்கூடும். அதன் விளைவாக நம் அனுதின மன்னாவாகக் கிறிஸ்துவை உண்கிறோம். ஆனால் நம்மைப்பொறுத்தவரை, நாம் இன்னும் ஆவியில் இல்லை, இன்னும் ஆத்துமாவில்தான் இருக்கிறோம். கடைசியாக சுயம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, உடைக்கப்படவேண்டும் என்று ஒருநாள் நாம் உணர்வோம். நாம் ஏற்கெனவே சிலுவையில் அறையப்பட்டுவிட்டோம் என்று உணரும்போது சிலுவையை நம்மேல் பிரயயோகிப்போம். சுயம் அடக்கம்பண்ணப்பட்டுவிட்டது என்பதை நாம் அனுபவத்தில் உணரும்போது, நாம் ஒரு நபர் என்ற முறையில் ஆவிக்கும் இடமாற்றப்படுவோம். அப்போது கர்த்தரைத் தொடர்புகொள்ள மட்டும் நம் ஆவியை இயக்கமாட்டோம். மாறாக நம் முழு ஆள்தத்துவமும் ஆவியில்தான் இருக்கும். எனவே நாம் கடக்கவேண்டிய மிக முக்கியமான மூன்று கட்டங்கள் இருக்கின்றன: பலிபீடம், முதல் திரை, இரண்டாவது திரை; பலிபீடத்தில் நம் பாவங்கள் தீர்க்கப்படுகின்றன; முதல் திரையில் உலகம் முடிக்கப்படுகிறது; இரண்டாம் திரையில் நாமே கையாளப்படுகிறோம். அதாவது நம் ஆத்மீக ஜீவன், ஜென்மசுபாவ மனிதன், புறம்பான மனிதன், மாம்சம், சுயம் கையாளப்படுகின்றன. அப்போது நாம் ஆவியில் இருக்கிற நபராக ஆகிறோம். இது கர்த்தருக்குரிய ஏதோவொன்றை மட்டும் அனுபவிக்க நம் ஆவியை இயக்குவதைவிட மேலான ஒரு காரியம்.

## சிவந்த சமுத்திரம் மற்றும் யோர்தான் நதியின் அனுபவம்

இஸ்ரவேல் மக்களின் புவியியல் மற்றும் வரலாற்றை நாம் இன்னும் அதிகமாகப் பார்ப்போம். எகிப்தில் இஸ்ரவேல் மக்கள் தங்கள் பாவத்துக்கு முடிவுகட்டிய பஸ்காவை உட்கொண்டார்கள். அவர்களுடைய பாவங்களனைத்தும் பஸ்கா ஆட்டுக்குட்டியினால் பரிகரிக்கப்பட்டபோது, அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால் எகிப்தியப் படை, பார்வோம், அவனுடைய சேனை ஆகியவைகள் இன்னும் அவர்களை அடிமைப்படுத்தியிருந்தன. எனவே அவர்கள் சிவந்த சமுத்திரத்தின் வழியாகக் கடந்துசெல்லவேண்டியிருந்தது. சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரின்கீழே உலகப்பிரகாரமான படைகள் அடக்கம்பண்ணப்பட்டன. பார்வோனின் சேனை, பெருங்கூட்டமான மக்களையும், உலகப்பிரகாரமான எல்லாக் காரியங்களையும் உள்ளடக்கியிருக்கிறது. சில மக்களுக்கு ஒரு ஜோடி மூக்குக்கண்ணாடியேகூட எகிப்தியப் படையின் ஒரு போர்வீரனாக இருக்கிறது. ஏனெனில் அது அவர்களுக்கு உலகப்பிரகாரமான ஒரு பொருளாக இருக்கிறது. வேறு பலருக்கு உடையைப்பற்றிய காரியம் ஒரு தனிப் போர்வீரனாக மட்டுமல்ல,

எகிப்திய சேனையின் ஒரு படைப்பிரிவாகவே இருக்கிறது! உலகப்பிரகாரமான அநேகக் காரியங்கள் நம்மை அவைகளின் கொடுமையான அடக்குமுறையின்கீழ் கட்டிவைத்து, அடக்கியிருக்கின்றன. ஆனால் இஸ்ரவேல் மக்கள் சிவந்த சமுத்திரத்தைக் கடந்தபோது, முழு உலகமும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. எகிப்திய சேனையனைத்தும் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டது. சிவந்த சமுத்திரத்தின் தண்ணீர், கிறிஸ்துவின் மரணத்தினுடைய வீரியத்தின் முதல் அம்சத்துக்கு முன்னடையாளம். உலகப்பிரகாரமான காரியங்களெல்லாம் கிறிஸ்துவின் மரணத்தில் பரிகரிக்கப்பட்டு, அடக்கம்பண்ணப்பட்டுவிட்டன.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தைவிட்டுச் சென்றபின்பு, வனாந்தரத்தில அலைந்துதிரிந்து, பரலோகக் கிறிஸ்துவுக்கு எடுத்துக்காட்டாயிருக்கிற மன்னாவை அனுபவித்துமகிழ ஆரம்பித்தார்கள். அவர்கள் தாங்கள் கிறிஸ்துவை எப்படி அனுபவித்துமகிழ்ந்தார்கள் என்று எப்போதுமே மற்றவர்களுக்குச் சாட்சிகொடுக்கமுடியும். ஆனால் அதே நேரத்தில் அவர்கள் வனாந்தரத்தில் அலைந்துகொண்டிருந்தார்கள். ஒரு நாள் அவர்கள் யோர்தான் நதியினூடாய்க் கடந்துசென்றார்கள். யோர்தானின் தண்ணீரில் பழைய இஸ்ரவேல் மக்களின் பிரதிநிதியாகப் பன்னிரண்டு கற்கள் அடக்கம்பண்ணப்பட்டன. ஆனால் யோர்தானின் தண்ணீரின்கீழ இஸ்ரவேல் மக்களின் சுயமும், பழைய மனிதனும் அடக்கம்பண்ணப்பட்டார்கள். இதன்பின்பு, அவர்கள் மூன்றாவது இடமான கானான் தேசத்துக்குள் நுழைந்து, சகலத்தையும் உள்ளடக்கிய ஐசுவரியங்களை அனுபவித்துமகிழ்ந்தார்கள்.

இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் இருந்தபோது, அவர்கள் வெளிப்பிரகாரத்தில் இருந்தார்கள். அவர்கள் வனாந்தரத்திற்கு வந்தபோது, பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார்கள். இறுதியாகக் கானானுக்குள் நுழைந்தபோது அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தார்கள். சிவந்த சமுத்திரம் முதல் திரைக்கு ஒத்திருக்கிறது. யோர்தான் நதி இரண்டாவது திரைக்கு ஒத்திருக்கிறது. இந்த இரண்டு நீர்நிலைகளும் கிறிஸ்துவினுடைய சிலுவையின் இரண்டு அம்சங்களுக்கு முன்னடையாளமாக இருக்கின்றன என்பது மிகத் தெளிவு. சிலுவையின் முதல் அம்சம் உலகப்பிரகாரமான நம் எல்லா காரியங்களோடும் இடைப்படுகிறது. இரண்டாவது அம்சம் நம் ஆத்துமாவிலுள்ள சுயத்துடன் இடைப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சிலுவையே இரண்டு திரைகளையும் கிழிக்கிறது. இஸ்ரவேல் மக்கள் இரண்டு நீர்நிலைகள் வழியாகக் கடந்துசெல்லவேண்டியதிருந்ததைப்

போலவே, நாமும் இரண்டும் திரைகள் வழியாகக் கடந்துசெல்லவேண்டும்.

இப்போது நம்மை நாமே பரிசோதித்துப் பார்த்து, நாம் எங்கே இருக்கிறோம் என்பதை முடிவுசெய்யவேண்டும். எகிப்திலா? வானாந்தரத்திலா? கானானிலா? எங்கே இருக்கிறோம்? வேறு வார்த்தைகளில் சொல்வதானால், வெளிப்பிரகாரத்திலா? பரிசுத்த ஸ்தலத்திலா? அல்லது மகா பரிசுத்த ஸ்தலத்திலா? எங்கே இருக்கிறோம்? எல்லாம் சூரியனுக்குக்கீழேயே உள்ள உலகப்பிரகாரமான சூழ்நிலையிலா நாம் இருக்கிறோம்? வெளிப்பிரகாரத்தில் இருக்கிறவர்களுக்குப் பரிசுத்த ஸ்தலத்தின் வெளிச்சம் கிடையாது. அவர்களுக்கு சூரியன் மட்டுமே உண்டு. உலகப்பிரகாரமான காரியங்களனைத்தும் சூரியனுக்குக்கீழேதான் இருக்கின்றன. நாம் கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்து, அவரை நம் இரட்சகராக ஏற்றுக்கொண்டு, அவர் நம் பாவங்களுக்காகச் சிலுவையில் மரித்தார் என்று விசுவாசித்தாலும், இன்னும் உலகப்பிரகாரமான சூழ்நிலையிலேயே வாழந்துகொண்டிருக்கிற இத்தகைய கிறிஸ்தவர்களாக இருக்கிறோமா? அல்லது கிறிஸ்துவை நம் மன்னவாக, நம் பரலோக வெளிச்சமாக, உயிர்த்தெழுதலின் சுகந்த வாசனையாகத் தினம்தினம் அனுபவித்துமகிழ்ந்துகொண்டு பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறோமா?

அல்லது இதைவிட இன்னும் ஆழமாக இருக்கிறோமா? மகா பரிசுத்த ஸ்தலத்தில் கிறிஸ்துவை மறைவான மன்னாவாக நாம் அனுபவிக்கலாம் - ஆரோன் வெளிப்பிரகாரத்தில் அனுபவித்ததைப் போலன்று, மாறாக மெல்கிசேதேக்கு பரலோக மகா பரிசுத்த ஸ்தலத்தில் அனுபவித்ததைப்போல. இங்கே நாம் கிறிஸ்துவை மறைவான மன்னாவாக, மறைவான பிரமாணமாக, சகலத்தையும் ஆளுமாறு உயிர்த்தெழுதலின் மறைவான அதிகாரமாகவும்கூட அனுபவித்துமகிழலாம். இங்கே எல்லாமே மறைவாக இருக்கிறது. ஏனென்றால் இப்போது கிறிஸ்துவை உள்ளே மிக ஆழத்தில் அனுபவிக்கிறோம். நாம் எங்கே இருக்கிறோம் என்றும், எங்கே போகவேண்டும் என்றும் நாம் அறிவுமாறு கர்த்தர்தாமே நமக்குக் கிருபை அருள்வாராக.

## அத்தியாயம் பத்தொன்பது

## நம் ஆவியில் உள்ள மறைவான கிறிஸ்து

நாம் பார்த்ததுபோல, ஆசரிப்புக் கூடாரம் அல்லது தேவாலயம் மூன்று பகுதிகளாலானது: வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம். வெளிப்பிரகாரம் தவிர மீதமுள்ள பகுதி பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்று இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள காரியங்களைப் பார்ப்பதற்குமுன்பு வெளிப்பிரகாரத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலுமுள்ள காரியங்களை முதலாவது நாம் பார்க்கவேண்டும்.

### வெளிப்பிரகாரம்

வெளிப்பிரகாரத்தில் பலிபீடம், கழுவும்தொட்டி என்ற இரண்டு காரியங்கள் இருக்கின்றன. பலிபீடம் கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்னடையாளம் என்றும், கழுவும்தொட்டி பரிசுத்த ஆவியின் கிரியைக்கு முன்னடையாளம் என்றும் வேதாகம மாணவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். பலிபீடத்தையும், கழுவும் தொட்டியையும் நாம் அனுபவித்திருக்கிறோமா? சிலுவையில் கிறிஸ்து பாவநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டார். அவர் நம் பாவங்களுக்காக மரித்தார். அவர் நமக்காகச் சிலுவையில் பாவமாகவும் ஆக்கப்பட்டார்; எனவே அவரே நம் பஸ்கா. தேவனுடைய ஆட்டுக்குட்டியாகிய அவர் நம் பாவங்களைச் சுமந்து சிலுவையில் மரித்தார் என்பதுதான் பஸ்காவின் அர்த்தம். கிறிஸ்துவே நம் பஸ்கா என்று 1 கொரிந்தியர் 5:7 தெளிவாகக் கூறுகிறது. நம் பாவங்களுக்காக அவர் மரித்தார் என்று நாம் விசுவாசித்த அந்த நாள்தான் நம் பஸ்கா நாள். அந்த நாளில்தான் நாம் கிறிஸ்துவை நம் பஸ்கா ஆட்டுக்குட்டியாக அனுபவித்துமகிழ்ந்தோம்.

சிலுவையாகிய பலிபீடத்தை நாம் அனுபவித்தபின்பு, கழுவும் தொட்டி குறிக்கிறபடி பரிசுத்த ஆவி உடனடியாக கிரியைசெய்ய ஆரம்பித்தார். தொட்டி மக்கள் கழுவப்படுவதற்கும், சுத்தமாக்கப்படுவதற்குமான இடம். கிறிஸ்துவை நம் பஸ்காவாகப் பெற்றபின்பு, பரிசுத்த ஆவி உள்ளேயும், வெளியேயும் சுத்தமாக்கும் தம் வேலையை ஆரம்பிக்கிறார். இரவேல் மக்கள் ஆசரிப்புக் கூடாரத்துக்குள் நுழைந்தபோது, பாவநிவாரண பலிகளோடும், குற்ற நிவாரணபலிகளோடும்தான் அவர்கள்

பலிபீடத்தைக் கடந்துபோகவேண்டியிருந்தது; அவர்கள் கால்களிலும், கைகளிலும் இருந்த பூமிக்குரிய எல்லா அழுக்கையும் தொட்டியில் கழுவவேண்டியிருந்தது. நாம் இரட்சிக்கப்பட் நாள் தொடங்கி நம் அனுதின நடையில் ஏற்படும் பூமிக்குரிய எல்லா அழுக்கிலிருந்தும் பரிசுத்த ஆவி நம்மைச் சுத்திகரிக்கிறார். இந்த அனுபவங்கள் நமக்கு இருக்குமானால், நாம் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்றும், நாம் இப்போது வெளிப்பிரகாரத்துக்கு வெளியே இல்லை என்றும் அர்த்தம். நாம் வெளிப்பிரகாரத்துக்கு உள்ளே வந்தவுடன் தேவனுடைய எல்லைக்குள்ளும், தேவனுடைய மண்டலத்துக்குள்ளும் இருக்கிறோம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நாம் தேவனுடைய இராஜ்ஜியத்தில் இருக்கிறோம். ஏனென்றால் நாம் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறோம், மீட்கப்பட்டிருக்கிறோம், மன்னிக்கப்பட்டிருக்கிறோம், பரிசுத்த ஆவியின் கிரியையினால் இப்போது சுத்திகரிக்கப்பட்டிருக்கிறோம். பலிபீடம், கழுவும்தொட்டி ஆகிய இரண்டும் நம் அனுபவமாகவில்லையென்றால், நாம் தேவனுடைய உண்மையான பிள்ளையாக இருக்கவே முடியாது. ஒருவேளை தோற்றத்தில் கிறிஸ்தவத்துக்குள் நாம் நுழைந்திருந்தாலும், இந்த இரண்டு காரிங்களும் நம் அனுபவமாக இல்லையென்றால், நாம் இன்னும் தேவனுடைய இராஜ்ஜியத்துக்குப் புறம்பேதான் இருக்கிறோம்.

## பரிசுத்த ஸ்தலம்

இது மட்டுமல்ல, இது கிறிஸ்தவ வாழ்க்கையின் வெறும் அரிச்சுவடிதான். நாம் இன்னும் முனைந்து செல்லவேண்டும். ஆசரிப்புச் கூடாரத்தின் பிரதான வாசலுக்குள் நுழைந்துவிட்டோம். ஆனால் நாம் நுழைந்துசெல்லவேண்டிய திரை அல்லது வாசல் இன்னும் ஒன்று இருக்கிறது. கர்த்தரிடத்தில் விசுவாசம் வைத்ததின்மூலம் நாம் வெளிப்பிரகாரத்துக்கு வந்தோம். அங்கிருந்து பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையவேண்டும்.

பரிசுத்த ஸ்தலத்திலுள்ள முதல் பொருள், *சமுகத்து அப்பங்களைக்கொண்ட மேஜை*. இந்த மேஜையில் அப்பம் வைக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவே நம் உணவு என்பதற்கு அப்பம் ஒரு முன்னடையாளம். ஏனென்றால் அவரே ஜீவ அப்பம் (யோவான் 6:35). கிறிஸ்துவே நம் ஜீவனுக்கான நிரப்பீடு. அவரே நாம் தேவனுக்கு முன்பாக வாழுமாறு நம்மைப் போஷிக்கிற நம் அனுதின மன்னா. சமுகத்து அப்ப மேஜையில் இருந்தது ஒரேவோர் அப்பத்துண்டு மட்டுமல்ல. மாறாக அது அதிக அளவிலான அப்பத்தைக்கொண்ட மேஜை. வானத்திலிருந்து விழுந்த

மன்னாவைப்போலவே, உதாரத்துவமான ஜீவ நிரப்பீட்டை நாம் அனுபவிக்கமுடியும் என்பதே இதன் பொருள். ஒவ்வொருநாள் காலையிலும் மன்னா தாராளமாக வழங்கப்பட்டது. நம் பஸ்காவாகக் கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியின் சுத்திகரிக்கும் கிரியையும் அனுபவித்தபின்பு, கிறிஸ்துவை நம் அனுதின மன்னாவாக தொடர்ந்து அனுபவித்திருக்கிறோமா? நாம் அப்படி அனுபவித்தால், சமுகத்து அப்பமேஜையை ஜீவனுள்ள முறையில் நாம் அனுபவித்திருக்கிறோம் என்று பொருள்.

சமுகத்து அப்பமேஜையைத் தொடர்ந்து, இரண்டாவதாக குத்துவிளக்கு வருகிறது. கிறிஸ்துவே ஒளி மற்றும் ஜீவன் என்பதே இதன் பொருள். ஜீவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறது என்றும், இந்த ஜீவன்தான் மனிதனுக்கு ஒளியாயிருக்கிறதென்றும் யோவான் *1:4* சொல்கிறது. இந்த ஒளிதான் ஜீவ ஒளி என்றும் யோவான் *8:12* அறிவிக்கிறது. நாம் கிறிஸ்துவை ஜீவனாக அனுபவித்துமகிழவும், அனுபவமாக்கவும் முடியுமானால் அவர் நிச்சயமாக நம் ஒளியாகிவிடுவார். கிறிஸ்துவை உணவாக நாம் உட்கொள்ளும்போது, நம்மைப் பிரகாசிப்பிக்கிற வெளிச்சத்தை நாம் நம்முள் உணரமுடியும். கிறிஸ்துவை நம் பஸ்காவாக நாம் பெற்றுக்கொண்டு, பரிசுத்த ஆவியின் கிரியையினால் நாம் சுத்திகரிக்கப்பட்டு, கிறிஸ்துவை நம் அனுதின ஜீவ மன்னவாக எப்படி உண்பது என்று அறிந்தபின்பு, நாம் உள்ளான வெளிச்சத்தை உணரலாம்.

சமுகத்து அப்பங்களைக்கொண்ட மேஜையையும், குத்துவிளக்கையும் தொடர்ந்து மூன்றாவதாக தூபபீடம் வருகிறது. நாம் ஒரு வாசனையை, சுகந்த வாசனையை, உணரும்போது இதை அனுபவிக்கிறோம். உயிர்த்தெழுதலிலுள்ள கிறிஸ்துவே இந்தச் சுகந்த வாசனை; இது தேவனை நோக்கிப் பரவி, மேலெழும்புகிறது. நாம் கிறிஸ்துவை நம் உணவாக அனுபவித்துமகிழ்ந்து, அவருடைய ஜீவ ஒளியில் இருக்கும்போது நாம் உயிர்த்தெழுதலில் இருக்கிறோம். நமக்குள்ளே நறுமணமான ஏதோவொன்று தேவனை நோக்கிப் பரவி மேல்நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. இதை ஒருபோதும் அறிவினாலோ அல்லது உபதேசத்தினாலோ உறுதிப்படுத்தமுடியாது. இதை நம் அனுபவத்தில்தான் சரிபார்க்கமுடியும். நமக்கு இப்பேர்ப்பட்ட அனுபவங்கள் உண்டா? ஒருவேளை போதுமான அளவுக்கு இந்த அனுபவங்கள் நமக்கு இல்லாமலிருக்கலாம்; ஆனாலும் தற்போது முக்கியமான விஷயம் என்னவென்றால், இத்தகைய அனுபவங்கள் நமக்க இருக்கத்தான் செய்கின்றன. இது அற்புதமான என்று என்னால் சாட்சிகூரமுடியும். முப்பத்து மூன்று ஆண்டுகளுக்குமுன்பு, அனுதினமும், சொல்லப்போனால்,

ஒவ்வொரு மணிநேரமும்கூட நான் இந்தப் பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தேன். ஆ! கிறிஸ்துவே என் அனுதின மன்னவாக இருந்தார். நான் முழுவதும் அவராலும், ஒளியாலும் நிரம்பியிருந்தேன், நான் தேவனிடத்தில் மிகவும் பிரியமாயிருந்தேன். தேவனும் என்னிடத்தில் மிகவும் பிரியமாயிருந்தார். கிறிஸ்துவினுடைய ஏதோவொன்று சுகந்த வாசனையாக எனக்குள்ளேயே பரவி தேவனை நோக்கி மேலெழுந்து சென்றுகொண்டிருந்தது.

## மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள உடன்படிக்கைப்பெட்டி

இதுதான் முடிவா? இது பரிசுத்தமான ஒன்று, ஆனால் இது மகா பரிசுத்தமானதல்ல. இது நல்லது, ஆனால் இது மிகச் சிறந்ததல்ல. ஆகையால் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழையுமாறு, நாம் மறுபடியும் முனைந்துசெல்லவேண்டியதிருக் கிறது. முதல் திரையின் வழயாகக் கடந்துசெல்லவேண்டும். ஆனால் இரண்டாவது திரை கிழிக்கப்படவேண்டும். இந்தத் திரை மாம்சமே (எபி. 10:20). நாம் மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைவதற்குமுன்பு மாம்சம் உடைக்கப்படவேண்டும்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஒரேவொரு காரியம்தான் இருக்கிறது - அதுதான் பெட்டி. இந்தப் பெட்டி கிறிஸ்துவுக்கு முன்னடையாளம் என்று வேதாகம மாணவர்கள் அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். கிறிஸ்துவை நம் உணவாகவும், நம் ஒளியாகவும், தேவனுக்கு நேரே எழும்பும் நம் சுகந்த வாசனையாகவும் நாம் அனுபவித்துமகிழமுடியும்; என்றாலும் *கிறிஸ்துவோ* மகா பரிசுத்த ஸ்தலத்தில்தான் இருக்கிறார். கிறிஸ்து உணவாகவும், ஒளியாகவும், சுகந்த வாசனையாகவும் இருக்கிறார். இந்த மூன்று காரியங்கள்தான் பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கின்றன. ஆனால் இப்போது நாம் *கிறிஸ்துவையே* தொட்டுவிடவேண்டும். கிறிஸ்துவை வெறுமனே ஒருசில காரியங்களாக மட்டும் நாம் தொடக்கூடாது. மாறாகக் *கிறிஸ்துவையே* தொட்டுவிடவேண்டும். இது அதிக ஆழமானது. நாம் கிறிஸ்துவுடன் அதிகமான பரிச்சயம்கொள்ளவேண்டும். நாம் நம் பஸ்காவாகக் கிறிஸ்துவையும், பரிசுத்த ஆவியின் கழுவுதலையும் அனுபவித்திருக்கிறோம். அதன்பின்பு கிறிஸ்துவை ஜீவனாகவும், ஒளியாகவும், சுகந்த வாசனையாகவும் அனுபவித்திருக்கிறோம். நாம் இப்போது கிறிஸ்துவையே தொட்டுவிடவேண்டும். வெகுசில கிறிஸ்தவர்கள் மட்டுமே கிறிஸ்துவாகிய பெட்டியைத் தொடுவதற்காக மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள்.

நாம் இப்போது பெட்டியின் உட்பொருளைப் பார்ப்போம். பெட்டியில் *மன்னா* இருக்கிறது. இதற்கு ஆழமான அர்த்தம் உண்டு. இது வெளிப்படையான மன்னா அல்ல, மாறாக

மறைவான மன்னா. காட்சிக்காகத் திறந்துவைக்கப்பட்ட மன்னா அல்ல, மாறாக இரகசியமான இடத்திலுள்ள மன்னா, மறைவான மன்னா, சந்தேகமேயில்லாமல், சமுகத்து அப்பத்துக்கு ஒத்திருக்கிறது. ஆயினும் இரண்டுக்குமிடையேயுள்ள வித்தியாசம் இதுதான்: அதாவது சமுகத்து அப்பம் வெளியரங்கமாகக் காட்டப்பட்டுள்ளது; ஆனால் பெட்டியிலுள்ள மன்னா மறைந்திருக்கிறது. சமுகத்து அப்பம் மேஜையின்மேல் பிறருக்குக் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது; ஆனால் பெட்டியிலுள்ள மன்னா பொன்பாத்திரத்தில் மறைவாக வைக்கப்பட்டிருக்கிறது. மன்னா பொன்பாத்திரத்தில் மறைத்துவைக்கப்பட்டிருப்பது மட்டுமல்ல; மேலும் பாத்திரமும்கூட பெட்டிக்குள் மறைத்துவைக்கப்பட்டுள்ளது. அது இரட்டிப்பாய் மறைந்திருக்கிறது. இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் மன்னாவை அனுபவித்துமகிழ்ந்தார்கள். ஆனால் அவர்கள் அனுபவித்துமகிழ்ந்த மன்னா பகிரங்கமான மன்னா; அது பூமியில் விழுந்த மன்னா, பரலோகத்தில் மறைந்திருக்கிற மன்னா அல்ல. கிறிஸ்துவே மறைவான மன்னாவாக இருக்கிறார்.

நாம் இப்பேர்ப்பட்ட ஆழமான கிறிஸ்துவை, இரகசியமான இடத்திலுள்ள கிறிஸ்துவை, உன்னதங்களில் இருக்கும் கிறிஸ்துவை அனுபவிக்கவேண்டும். இவர்தான் எபிரேயர் 7-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கிறிஸ்து. இவர் ஆரோனின் முறைமையின்படியானவர் அல்லர், மாறாக மெல்கிசெதேக்கின் முறைமையின்படியானவர். ஆரோன் வெளிப்பிரகாரத்தில் பலிபீடத்தில் பலிகளைச் செலுத்திக்கொண்டிருக்கிறார். மெல்கிசெதேக்கு உன்னதங்களிலுள்ள கிருபாசனத்தில் இருக்கிறார். நாம் கிறிஸ்துவை நம் உணவாக அனுபவிக்கலாம். ஆனால் இந்த இன்பம் பரிசுத்த ஸ்தலத்திற்குரியதுதான். நாம் அனுபவித்தாலும் அது உடனே அநேக மக்களுக்குத் தெரிந்துவிடுகிறது. சில வேளைகளில் நம் மகிமையான அனுபவத்தைப்பற்றிய செய்தி தேசம் முழுவதும் பரவிவிடுகிறது. இது வெளிப்படையான சமுகத்து அப்பத்தின் அனுபவமே அல்லாமல் வேறொன்றுமில்லை. பரலோகக் கிறிஸ்துவையே தொட்டுவிடுமாறு, சர்வவல்லவருடைய இரகசிய இடத்துக்கு நாம் இன்னும் ஆழமாக முறைந்துசெல்லவேண்டும்.

பெட்டியில் *பிரமாணமும்* இருக்கிறது - சீராக்குகிறதும் பிரகாசிப்பிக்கிறதுமான பிரமாணம். இந்தப் பிரமாணம் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள குத்துவிளக்குக்கு ஒத்திருக்கிறது. பிரமாணமே தேவனுடைய சாட்சி. பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிலும் குத்துவிளக்கு தேவனுடைய சாட்சியாக இருக்கிறது. பிரமாணம் குத்துவிளக்குடன் ஒத்திருந்தாலும்கூட, அடிப்படைக் கோட்பாடு இன்னும் ஒன்றேதான்; அதாவது குத்துவிளக்கு

பகிரங்கமாகப் பிரகாசிக்கிறது. ஆனால் இந்தப் பிரமாணம் மறைவான, உள்ளான மிக ஆழமான ஒளி. அநேக வேளைகளில், சகோதர சகோதரிகளிடம் குத்துவிளக்கின் வெளிச்சம் மட்டுமே இருக்கிறது. ஆ! அவர்கள் வெளிச்சம் எவ்வளவாய்ப் பிரகாசிக் கிறது! ஒருவகையில் அது நல்லதுதான், ஆனால் இன்னொரு வகையில், அவர்கள் இன்னும் ஆழமற்றவர்களாகவே இருக்கிறார் கள். எல்லாமே மேற்பலப்பில் பகிரங்கமாகக் காணப்படுகிறது. கிறிஸ்து அவர்களுடைய உள்ளான பிரமாணமாக ஆகவேண்டிய திருக்கிறது. கிறிஸ்துவைத் தங்கள் ஜீவனுள்ள பிரமாணமாகத் தங்களுக்குள் மறைவாகக் கொண்டிருக்கிறவர்கள் அதிகமாய் வெளிப்படையாய்க் காட்டுகிறதில்லை. ஆனால் அவர்கள் கிறிஸ்துவை மிக ஆழமான முறையில் உள்ளாக அறிந்திருக்கிறார்கள்.

மூன்றாவதாக, பெட்டியில் *தளிர்த்த கோல்* இருக்கிறது. முளைத் அரும்புகளைக்கொண்ட இந்தக் கோல், உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது. இது தூபத்தின் நறுமணத்துக்கு ஒத்திருக்கிறது. இரண்டுமே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைக் குறிக்கின்றன. ஆனால் மீண்டும் வித்தியாசம் என்னவென்றால், தூபம் வெளியரங்கமாகக் காட்டப்பட்டுள்ளது. ஆனால் தளிர்த்த கோல் மறைவான, இன்னும் அதிக ஆழமான முறையில் அனுபவிக்கப்படுகிறது.

பரிசுத்த ஸ்தலத்தில் மூன்று காரியங்களைப் பார்க்கிறோம்: கிறிஸ்து உணவாகவும், கிறிஸ்து ஜீவனாகவும், கிறிஸ்து சுகந்த வாசனையாகவும் இருக்கிறார். ஆனால் மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள பெட்டியிலுள்ள மூன்று காரியங்கள் அதைவிட ஆழமானவை. சமுகத்து அப்பம் வெளியிலே காட்டப்படுகிறது. குத்துவிளக்கு வெளியில் பிரகாசிக்கிறது. தூபம் வெளியில் பரவகிறது. எல்லாமே வெளிப்படையாய்ப் பிறருக்குக் காட்சியாகத் திறந்துவைக்கப்பட்டுள்ளன. ஆனால் பெட்டியிலுள்ள மூன்று காரியங்களும் அதைவிட ஆழமாகவும், உள்ளாகவும் மறைந்திருக்கின்றன.

## கிறிஸ்துவுக்குள் ஆழமாக முனைந்துசெல்லுதல்

ஒருபக்கம், பரிசுத்த ஸ்தலம் வனாந்தரத்துக்கும், மறுபக்கம் ஆத்துமாவுக்கும் அடையாளமாக இருக்கிறது. இதில் நாம் இப்போது தெளிவாக இருக்கிறோம். பண்டைய காலங்களில், இஸ்ரவேலர்கள் முதலாவது எகிப்தில் இருந்தார்கள். இந்த எகிப்தில் அவர்கள் பஸ்காவை அனுபவித்ததால், எகிப்துதான் அவர்களுடைய வெளிப்பிரகாரம். பஸ்காவுக்குப்பின்பு அவர்கள் எகிப்தைவிட்டு வனாந்தரத்துக்குக் கொண்டுவரப்பட்டார்கள். வேறு வார்த்தைகளில்

சொல்வதானால், அவர்கள் வெளிப்பிரகாரத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்துக்குள் முன்னேறிச் சென்றார்கள்.

இரவேலர்களைப் பொறுத்தவரை பரிசுத்த ஸ்தலம் வனாந்தரத்துக்கு ஒத்திருப்பதைப்போலவே, கொரிந்திய மற்றும் எபிரேய விசுவாசிகளைப் பொறுத்தவரை, அது மனித ஆத்துமாவுக்கு ஒத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக, கொரிந்திய விசுவாசிகள் கிறிஸ்துவைத் தங்கள் பஸ்காவாக (1 கொரி. 5:7) அனுபவித்திருந்தார்கள். அதன்பின்பு, அவர்கள் தங்கள் அனுபவத்திலே வனாந்தரத்துக்கள் கடந்துசென்றார்கள். அங்கே அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் மன்னாவாகவும், தங்கள் ஜீவத்தண்ணீராகவும் அனபவித்துமகிழ்ந்தார்கள் (1 கொரி. 10:1-5). பழைய இஸ்ரவேலர்களைப்போலவே, அவர்களும் வனாந்தரத்தில்தான் இருந்தார்கள். ஆனால் கொரிந்தியர்களின் வனாந்தரம் அவர்களுடைய ஆத்துமாவே. 1 கொரிந்தியரைக் கவனமாக வாசிக்கும்போது அவர்கள் ஜென்மசுபாவமுள்ளவர் களும், மாம்சத்துக்குரியவர்களுமாயிருந்தார்கள் என்று நாம் பார்க்கிறோம். ஆம், அவர்கள் கிறிஸ்துவைத் தங்கள் உணவாகவும், தங்கள் ஒளியாகவும் அனுபவித்துமகிழ்ந்தார்கள். மேலும் கிறிஸ்துவினுடைய அநேக அற்புதமான அனுபவங் களையும் பெற்றிருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் ஆத்துமாக் களில்தான் கிறிஸ்துவை அனுபவித்துமகிழ்ந்தார்கள். பரிசுத்த ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பிரிக்கிற திரையாகிய அவர்களுடைய மாம்சம் உடைக்கப்படவில்லை. அவர்களுடைய ஆத்துமாக்கள் இன்னும் கையாளப்படவில்லை. எனவே அவர்கள் மகா பரிசுத்த ஸ்தலமாகிய ஆவியில் இருக்கவில்லை. அவர்கள் கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை அனுபவித்துமகிழ்ந்தார்கள்; ஆனால் அவர்கள் கிறிஸ்துவை அனுபவித்துமகிழவில்லை.

வனாந்தரத்திலிருந்த இஸ்ரவேலர்கள் எபிரேயக் கிறிஸ்தவர் களுக்கும்கூட முன்னடையாளமாக இருக்கின்றனர் (எபி. 3:6-8). இஸ்ரவேல் மக்கள்தான் எபிரேய மற்றும் கொரிந்திய கிறிஸ்தவர் களுடைய நிலையைச் சித்திரிக்கிற வரைபடம் என்று அப்போஸ்தல ராகிய பவுல் அவர்களுக்குச் சுட்டிக்காட்டினார். இளைப்பாறு தலுக்குள் பிரவேசிப்பதற்கு, மகா கரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைந்து நம் பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து இன்று இருக்கிற கிருபாசனத் தைத் தொட்டுவிட வேண்டும் என்று எபிரேயர் நான்காம் அதிகாரம் சுட்டிக்காட்டுகிறது. எபிரேயக் கிறிஸ்தவர்கள் போதனைகளால் கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை அனுபவித்துமகிழ்ந்தார்கள். 1 கொரிந்தியர் நிருபம் வரங்களைப்பற்றிப் பேசுகிறது. எபிரேயர் நிருபமோ உபதேசங்களைப்பற்றிப் பேசுகிறது. கொரிந்திய விசுவாசிகள் வரங்களை அனுபவித்துமகிழ்ந்துகொண்டு,

ஆத்துமாவில் இருந்தார்கள். எபிரேயக் கிறிஸ்தவர்கள் உபதேசங்களை அனுபவித்துமகிழ்ந்துகொண்டு ஆத்துமாவில் இருந்தார்கள். ஆகையால் அதைவிட ஆழமான காரியங்களை அவர்களால் புரிந்துகொள்ளமுடியவில்லை. கொரிந்தியர்கள், எபிரேயர்கள் என்ற இருசாராருமே, ஒன்று அவர்களுடைய வரஙகளுக்கு, அல்லது மூலஉபதேசங்களுக்கு மயங்கி அடிமைகளாயிருந்ததால், அவர்கள் தங்கள் ஆத்துமாவிலிருந்த வனாந்தரத்தைச் சகித்துக்கொள்ளவேண்டியதிருந்தது.

இதனால்தான் ஆவியை அறிந்து, ஆத்மீக மனிதனாக இருப்பதற்குப்பதிலாக ஆவிக்குரிய மனிதனாக இருக்கவேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய விசுவாசிகளிடம் மன்றாடினார் (1 கொரி. 2:11-15). மேலும் எபிரேயர் 4:12-லும், அவர்கள் ஆத்துமாவிலிருந்து ஆவியைப் பிரிக்கவேண்டும் அல்லது பகுத்துணரவேண்டும் என்று அதே காரியத்தைத்தான் அவர் சொன்னார். இந்த இரண்டு புத்தகங்களிலும் இருக்கிற மூலக்கோட்பாடு ஒன்றுதான். புதிய ஏற்பாட்டில் இந்த இரண்டு புத்தகங்கள் மட்டுமே இஸ்ரவேலரின் வனாந்தர வரலாற்றைப்பற்றிப் பேசுகின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால், கொரிந்தியர்கள் தங்கள் வரங்களில் ஆத்மீகமாக இருந்தார்கள். எபிரேயர்கள் தங்கள் உபதேசங்களில் ஆத்மீகமாக இருந்தார்கள். உபதேசங்கள் எபிரேயக் கிறிஸ்தவர்களுக்கும், வரங்கள் கொரிந்தியர்களுக்கும் உதவின என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அவர்கள் எல்லாரும் பரிசுத்த ஸ்தலமாகிய ஆத்துமாவில் இருந்தார்கள்; கிறிஸ்துவையே தொட்டு அனுபவிக்கக்கூடிய மகா பரிசுத்த ஸ்தலமாகிய ஆவியில் இல்லை. நாம் நம் ஆவியில் அவரைத் தொடவேண்டும் என்றால், நாம் நம் ஆத்துமாவைக் கைவிட்டுவிடவேண்டும். நாம் ஆத்துமாவிலேயே தங்கி நிலைத்திருக்கக்கூடாது. நாம் ஆத்துமாவிலேயே தங்கியிருப்போமானால் நாம் வனாந்தரத்திலேயே அலைத்துகொண்டிருக்கிறோம்.

"நல்லது! இது என் இவ்வளவு முக்கியமானது? நான் கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை இப்போதும்கூட அனுபவித்துமகிழ்கிறேனே. இவைகள் எல்லாம் வெறும் ஆரம்ப உபதேசங்களே என்று ஏன் சொல்கிறீர்கள்? இவைகளால் கிறிஸ்துவைப்பற்றிய ஏதோவொன்றை நான் அறிகிறேன்; அவருக்குரிய ஏதோவொன்றை நான் அனுபவித்துமகிழ்கிறேன். இந்த வரங்களையெல்லாம் அளவுக்குள் அதிகமாக முக்கியப்படுத்துவதாக நீங்கள் சொல்கிறீர்கள். அப்படியானால் வரங்களால் கிறிஸ்துவுக்குரிய ஏதோவொன்றை நான் ஏன் இன்னும் அனுபவித்துமகிழ்கிறேன்?" என்ற நீங்கள் சொல்லக்கூடும். வனாந்தரக் காட்சியை எண்ணிப்பாருங்கள். முப்பத்தெட்டு

வருடங்களுக்கும்மேலாக, இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில் அலைந்துதிரிந்தார்கள். அந்நாட்களில், தினம்தினம் அவர்கள் மன்னாவை உட்கொண்டார்கள். தேவன் மிகவும் இரக்கமுள்ளவர்! அவர் ஓர் அற்பமான தேவனல்ல, அவர் அளவிடமுடியாத பெருந்தன்மையுள்ள தேவன். அவர்கள் தவறாக இருந்தபோதும்கூட அவர் அவர்களுக்கு ஏதோ கொஞ்சம் வழங்கத்தான் செய்தார். ஆனால் வானத்திலிருந்து அனுதினமும் மன்னா விழுந்ததே என்பதால் இஸ்ரவேல் மக்கள் வனாந்தரத்தில் அலைந்துகொண்டிருந்தது சரிதான் என்று நியாயப்படுத்தமுடியாது. மாறாக, முப்பத்தெட்டு வருடங்களாக மன்னாவைத்தவிர வேறொன்றையும் அனுபவித்துமகிழாமல் எவ்வளவு குழந்தைத்தனமுள்ளவர்களாகவும், மாம்சத்துக்குரியவர்களாகவும் அவர்கள் இருந்தார்கள் என்பதையே அது நிரூபித்தது. ஒரு குறுகிய காலத்துக்கு மன்னா சரிதான். ஆனால் கானானின் கனிகளை அனுபவித்துமகிழ்வதற்காக அவர்கள் சீக்கிரமாக மன்னாவை விட்டுவிட்டு முன்னேறிச்சென்றிருக்கவேண்டும்.

இதுவே நமக்குரிய தெளிவான பாடம்: ஒரு குறுகிய காலத்துக்கு வரங்களை வைத்திருப்பதை அனுமதிக்கலாம். ஆனால் காலமெல்லாம் வரங்களை விடாப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டிருப்பது நாம் குழந்தைத்தனமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதையே நிரூபிக்கிறது. நாம் முன்னேறிச்செல்லவேண்டும், முனைந்துசெல்லவேண்டும். நம் பங்கு வரங்களல்ல, தேவன் நமக்குப் பகிர்ந்துகொடுத்திருக்கும் பங்கு கிறிஸ்துவே. அப்போஸ்தலராகிய பவுல், 1 கொரிந்தியரில், வரங்களைப்பற்றிப் பேசுவதற்குமுன்பு கிறிஸ்துவே நம் பங்கு என்று சுட்டிக்காட்டினார். நாம் வரங்களுடன் ஐக்கியமாக இருப்பதற்கு அழைக்கப்படவில்லை. மாறாகக் கிறிஸ்துவுடன் ஐக்கியமாக இருப்பதற்கே அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 கொரி. 1:9). தேவன் வரங்களை நம் ஞானமாக்கவில்லை. மாறாகக் கிறிஸ்துவையே அவர் நம் ஞானமாக்கினார், கிறிஸ்துவின்மூலமாகவே நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம், பரிசுத்தமாக்கப்படுகிறோம், மீட்கப்படுகிறோம் (1 கொரி. 1:31). தேவனுடைய வரங்களுக்காக நாம் அவருக்கு நன்றிசொல்லவேண்டும். ஆனால் அவை ஒரு குறுகியகால உதவிதான். இஸ்ரவேலர் தங்கள் அனுதின மன்னாவுக்காக, நிச்சயமாக தேவனுக்கு நன்றிசெலுத்தியிருக்கலாம்; ஆனால் மன்னா, அவர்கள் தேசத்தை வந்தடையும்வரை செய்யப்பட்ட ஒரு தற்காலிகமான ஏற்பாடுதான். ஒவ்வொருநாளும் மன்னாவைச் சாப்பிட்டுக்கொண்டு முப்பத்தெட்டு ஆண்டுகளாக அவர்கள் வனாந்தரத்திலே தங்கியிருந்திருக்கக்கூடாது. அவருடைய

ஞானத்துக்காகவும், இரக்கத்திற்காகவும் தேவனுக்காக ஸ்தோத்திரம். அவருடைய வரங்களுக்காகத் தேவனுக்கு நன்றி. ஏனென்றால் நாம் வனாந்தரத்தில் அலைந்துகொண்டிருக்கும்போது நமக்கு உதவ அனுதின மன்னாவும், வரங்களும் கண்டிப்பாகத் தேவைதான். ஆனால் அதினாலேயே இத்தகைய போக்கு நீண்டகாலமாய்த் தொடர்வது நியாயமாகிவிடாது. மாறாக நாம் இன்னும் பிள்ளைகளாகவும், குழந்தைகளாகவும் இருக்கிறோம் என்பதையே இது நிரூபிக்கக்கூடும். நாம் முனைந்துசெல்வோமென்றால் மன்னாவை அனுபவித்துமகிழவேண்டிய தேவை நமக்கு இனிமேல் இருக்காது. நல்ல தேசமாகிய கானானின் கனிகளை நாம் உடனே அனுபவித்துமகிழ ஆரம்பித்துவிடலாம். நல்ல தேசத்தின் கனிகளை நாம் அனுபவித்துமகிழும்போது நாம் இளைப்பாறுதலிலும் ஆவியிலும் இருக்கிறோம் என்று அது நிரூபிக்கிறது. இல்லையென்றால், நாம் நம் ஆத்துமாவாகிய வனாந்தரத்திலேயே அலைந்துதிரிந்த இஸ்ரவேலர்களைப்போலவே இருக்கிறோம். நாம் ஆவியில் இல்லையென்றால், சிலுவை நம் மாம்சத்துடனும் ஆத்துமாவுடனும் இடைப்படவேண்டும்.

நாம் முனைந்துசெல்லவேண்டும் என்று எபிரேயர் 4, 5, 6-ஆம் அதிகாரங்கள் நமக்கு அறிவுறுத்துகின்றன. ஓட்டத்தை ஓடவேண்டும் என்று 1 கொரிந்தியர் 9-ஆம் அதிகாரம் நமக்கு அறிவுறுத்துகிறது. கிறிஸ்துவையே தொடுவதற்காகவும், மிக ஆழமான கிறிஸ்துவை மறைவான மன்னாவாகவும், உள்ளான பிரமாணமாகவும், இரகசியமான தளிர்த்த கோலாகவும் அனுபவிப்பதற்காகவும் ஆவிக்குள் நுழைய நாம் முனைந்துசெல்லவேண்டும். கொரிந்திய விசுவாசிகள் வரங்களைப்பற்றிய காரியத்தில் தங்களைச் சீராக்கி, கட்டுப்படுத்திக்கொள்ளுமாறு 1 கொரிந்தியர் நூலாசிரியர் அவர்களுக்கு அறிவுரை கூறினார். வரங்களை நேர்த்தியான முறையில் எப்படிப் பயன்படுத்தவேண்டும் என்று அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும் (1 கொரி. 14). 1 கொரிந்தியரை நாம் கவனமாகவும், பாரபட்சமின்றியும் வாசித்தால் வரங்களைப் பயன்படுத்தும் பழக்கத்தில் விசுவாசிகளை உற்சாகப்படுத்துவதல்ல, மாறாக அவர்களைச் சீராக்குவதே நூலாசிரியரின் நோக்கம் என்பதை நாம் பார்க்கமுடியும். ஓட்டத்தை நேர்த்தியான வழியில் ஓடுவதற்கு, கிறிஸ்துவுக்குரிய மிக ஆழமான காரியங்களை நாம் ஆவியில் அறியவேண்டும்.

நாம் எங்கே இருக்கிறோம் என்று இப்போது நாமெல்லாரும் சோதித்துப்பார்க்கவேண்டும். நாம் பலிபீடத்திலா, அல்லது கழுவும் தொட்டியிலா... எங்கு இருக்கிறோம்? ஒருவேளை நாம் பிரதான வாசலுக்கு வெளியேகூட இருக்கிறோமோ! வெளிப்பிரகாரத்தி

லுள்ள இந்த இரண்டு காரியங்களையும் நாம் அனுபவித்தபிறகு, மேஜையிலுள்ள சமுகத்து அப்பத்தையும், வெளிச்சத்தையும், சுகந்த வாசனையையும் தொடர்ந்து அனுபவித்திருக்கிறோமா? அல்லது நாம் பரிசுத்த ஸ்தலத்தின் வழியாகக் கடந்துசென்று இப்போது மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருக்கிறோமா? அப்படியானால் கிறிஸ்துவையே மிக ஆழமான முறையில் தொட்டுக்கொண்டும், அனுபவித்துக்கொண்டும் நாம் ஆவியில் இருக்கிறோம். நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நாம் அறியுமாறுக் கர்த்தர்தாமே நமக்கு இரக்கம்பாராட்டுவாராக.

## அத்தியாயம் இருபது

# முப்பகுதி மனிதனும் சபையும்

தேவன் தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய பொருளாட்சி என்றும், தேவனுடைய பொருளாட்சியின் குறி என்றும் நாம் நினைவில்கொள்ளவேண்டும். நாம் மூன்று பகுதிகளையுடையவர்களாக சிருஷ்டிக்கப்பட்டோம்; வெளியே சரீரம், உள்ளே ஆவி, இடையில் ஆத்துமா. மனிதனுடைய ஆவிக்குள் தம்மையே பகிர்ந்துகொடுத்து, பின்னர் மனிதனுடைய ஆத்துமாவுக்குள் தம்மை உருவாக்கவேண்டும் என்பதுதான் தேவனுடைய நோக்கம்.

## மூன்று நபர்களால் சிக்கலாக்கப்பட்ட முப்பகுதி மனிதன்

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குமுன்பு, அவருடைய எதிரியான சாத்தான் தன்னை மனிதனுடைய சரீரத்துக்குள் திணித்தான். இவ்வாறு சரீரத்தின் அவயவங்களில் பாவம் இருக்கிறது, ஆளுருவான பாவம். இது சட்டவிரோதமான ஓர் அரசனைப்போல நம்மை மேற்கொண்டு, நம் விருப்பத்துக்கு விரோதமாகக் காரியங்களைச் செய்ய நம்மைப் பலவந்தப்படுத்தமுடியும். நம் சரீரத்தைச் சீரழிப்பதற்கு, சாத்தானே தீய சுபாவமாகவும், பாவப்பிரமாணமாகவும் நம்தில் வாசம்பண்ணுகிறான். சாத்தானால் விஷமிடப்பட்ட சரீரமே மாம்சம். நம்மில், அதாவது நம் மாம்சத்தில் நன்மை வாசமாயிருக்கிறதில்லை (ரோமர் 7:18). நம் மாம்சம் நம் மனதுக்கு விரோதமாகவும், நம் சித்தத்துக்கு விரோதமாகவும், பாவப் பிரமாணத்துக்கு ஊழியம்செய்கிறது (ரோமர் 7:15, 23).

சாத்தான் பாவப்பிரமாணமாக நம் சரீரத்துக்குள் வந்தான். ஆனால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் இரட்சிக்கப்பட்டபோது மூவொரு தேவன் நம் ஆவியில் நம் ஜீவனாக வாசம்பண்ணுவதற்கு வந்தார். கிறிஸ்து நம் ஜீவனாக நம் ஆவியில் இருக்கிறார். அப்படியானால் நம் ஆத்துமாவில் என்ன இருக்கிறது? சுயம் இருக்கிறது. நம் சுயம் நம் ஆத்துமாவில் இருக்கிறது. மூன்று ஆட்களுமே - ஆதாம், சாத்தான், தேவன் - இன்று நம்மில் இருக்கின்றனர் என்ற காரியம் நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். நாம் மிகவும் சிக்கலானவர்கள். ஆதாமாகிய மனிதன் நம்மில் இருக்கிறான், சாத்தானாகிய பிசாசு நம்மில் இருக்கிறான், ஜீவனின் கர்த்தராகிய தேவனும் நம்மில்

இருக்கிறார். இதனால் நாம் ஒரு சிறிய ஏதேன் தோட்டமாகிவிட்டோம். மனுக்குலத்தின் பிரதிநிதியாக ஆதாம், தேவனின் பிரதிநிதியாக ஜீவவிருட்சம், சாத்தானின் பிரதிநிதியாக அறிவின் விருட்சம் - இவர்களே ஏதேன் தோட்டத்திலுள்ள மூன்று சாரார். இப்போது அவர்கள் நம்மில் இருக்கிறார்கள். சுயமாகிய ஆதாம் நம் *ஆத்துமாவில்* இருக்கிறான்; பிசாசாகிய சாத்தான் நம் *சரீரத்தில்* இருக்கிறான்; மூவொரு தேவனாகிய தேவன் நம் *ஆவியில்* இருக்கிறார். ஆனால் ஒரு சிறிய தோட்டத்தைவிட நாம் சற்றுக் கூடுதலானவர்கள்: நாம் ஒரு பெரிய யுத்தகளம். நம்மில் சாத்தான் தேவனுக்கு விரோதமாக யுத்தம்செய்துகொண் டிருக்கிறான்; நம்மில் தேவனும் சாத்தானுக்கு விரோதமாக யுத்தம்செய்துகொண்டிருக்கிறார். சாத்தான் மாம்சமாகிய நம் சரீரத்தைத் தன் போர்களுக்கான அடித்தளமாக எடுத்துக்கொள்கி றான்; தேவன் நம் ஆவியைத் தம் யுத்தத்துக்கான அடித்தளமாக எடுத்துக்கொள்கிறார்.

"மாம்சம் ஆவிக்கு விரோதமாக இச்சிக்கிறது," என்று கலாத்தியர் 5:17 கூறுகிறது. நம் மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், நம் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது என்பதுதான் இதன் பொருள். இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று எதிராக இருக்கின்றன. எனவே நாம் விரும்புகிற காரியங்களை நம்மால் செய்யமுடியாது. சீரழிக்கப்பட்ட மாம்சம் ஆவிக்கு விரோத மாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணு கின்றன. இந்த இரண்டு சாராரும் எப்போதுமே ஒருவரோடொருவர் போரிட்டுக்கொண்டிருக்கிறார்கள். சாத்தான் பாவமாக நம் மாம்சத்தில் இருக்கிறான்; மூவொரு தேவன் ஜீவனாக நம் ஆவியில் இருக்கிறார். இந்த இருவருக்குமிடையே ஓர் ஆவிக்குரிய யுத்தம் தினம்தினம் நம் ஆத்துமாவாகிய யுத்தகளத்தில் மும்முரமாக நடந்துகொண்டிருக்கிறது.

## முப்பகுதி மனிதனின் பிரதிநிதி மனம்

நாம் பார்த்ததுபோல ஆத்துமாவில் மனம், உணர்ச்சி, சித்தம் என்ற மூன்று பகுதிகள் இருக்கின்றன. ஆத்துமாவின் சிந்திக்கும் உறுப்பாகிய மனம் சுயத்தின் பிரதிநிதி. நாம் எதையாவது செய்வதற்குமுன்பு எப்போதும் அதைப்பற்றிச் சிந்திக்கிறோம், யோசிக்கிறோம். ஆகையால் நம் மனமே நம் "சுயத்"தின் பிரதிநிதி. இதனால்தான் ரோமர் 7, 8, 12-ஆம் அதிகாரங்கள் மனதைப்பற்றிப் பேசுகின்றன. மனம் தேவனுடைய பிரமாணத்தின் பக்கம் நிற்கிறதென்று ரோமர் 7 கூறுகிறது. என் மனம் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைப்பிடிப்பதற்கும், அனால் தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கும் விரும்புகிறது (ரோமர்

7:25). ஆனால் என் பிரதிநிதியான என் மனம் மிகவும் பலவீனமானது. நானும் மிகவும் பலவீனமானவன். நான் எப்போதெல்லாம் நன்மைசெய்யவேண்டும் என்று முடிவுசெய்கிறேனோ, அப்போதெல்லாம் என்னைவிடப் பலமான, என் மனதைவிடப் பலமான வேறொன்று அங்கு வருகிறது. அதுதான் மாம்சத்திலுள்ள பாவப் பிரமாணம். தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கும், தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிப்பதற்கும், நான் என் மனதைப் பயன்படுத்தும் போதெல்லாம், என் அவயவங்களில் இருக்கிற தீமையான ஒன்று எனக்கு விரோதமாய் எழும்பி, என்னைத் தோற்கடித்து, என்னை சிறையாக்கிக்கொள்கிறது (ரோமர் 7:23). என் பிரதிநிதியான என் மனதால் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க முடியாது. என் மனம் தேவனுடைய சித்தத்தைத் தன்னிச்சையாகச் செய்ய முயற்சிசெய்கிறபோதெல்லாம், அது எப்போதுமே தோற்றுப் போகிறது.

ரோமர் 7-ல் உள்ள மனம், அதுவாகவே நன்மையைச் செய்ய முயல்கிற சுயேச்சையான மனம். எனவே அப்போஸ்தலர் நம்மை 8-ஆம் அதிகாரத்துக்குக் கொண்டுவந்து மனம் எப்படி, எதைச் சார்ந்திருக்கவேண்டும் என்று கூறுகிறார். தன் சொந்த பலத்தால் காரியங்களைச் செய்ய முயற்சிசெய்யும் சுயேச்சையான மனம் தோற்றுப்போகும். அப்படியானால் மனம் எதைச் சார்ந்திருக்க வேண்டும்? "மனதை மாம்சத்தின்மேல் பொருத்துவது, மரணம்; ஆனால் மனதை ஆவியின்மேல் பொருத்துவது ஜீவனும், சமாதான முமாம்," என்று ரோமர் 8:6 கூறுகிறது. மனம் இரண்டு காரியங்களைச் செய்யும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன; ஒன்று, அது மாம்சத்தைச் சார்ந்திருக்கலாம், அல்லது ஆவியைச் சார்ந்திருக் கலாம். அது மாம்சத்தைச் சார்ந்திருந்தால் விளைவு மரணமாக இருக்கும்; ஆனால் ஆவியைச் சார்ந்திருந்தால் அங்கு ஜீவனும், சமாதானமும் இருக்கும். 7-ஆம் அதிகாரத்திலுள்ள சுயேச்சையான மனதுக்கும், 8-ஆம் அதிகாரத்திலுள்ள சார்ந்திருக்கிற மனதுக்கு மிடையேயுள்ள வித்தியாசத்தை நம்மால் பார்க்கமுடிகிறதா? சுயேச்சையான மனம் தோற்றுப்போகும். ஆனால் ஆவியைச் சார்ந்திருக்கிற மனம் வெற்றிபெறும். சாத்தான் நம் அவயவங் களில் இருக்கிறான்; நம் ஆவியில் மூவொரு தேவன் இருக்கிறார்; நமக்குள் இப்படி இரண்டு சாரார் இருப்பதால் நாம் இனி உண்மையாகவே சுயேட்சையாக இருக்கமுடியாது. எனவே நாம் முயற்சிசெய்யக்கூடாது. நாம் முயற்சிசெய்வோமானால் நிச்சயமாகத் தோற்றுப்போவோம். நாம் எதிரியைச் தோற்கடிக்க முயன்றால் கடைசியில் அவன் நம்மைத் தோற்கடித்துவிடுவான். ஆகையால் நாம் இன்னொருவரை, நம் ஆவிக்குள் இருக்கும்

மூவொரு தேவனைச் சார்ந்திருக்கும்படித் திரும்பவேண்டும். நம் மனதை எப்போதும் ஆவியில் பொருத்துவதே வெற்றியின் திறவுகோல்.

சாத்தான் நம்மில் இருக்கிறான், கிறிஸ்து நம்மில் இருக்கிறார், சுயம் நடுவில் நிற்கிறது. இந்தத் தெளிவான சித்திரம் நம்மெல்லார் மனதிலும் ஆழமாகப் பதியவேண்டும். நம் சொந்த முயற்சிகளால் நன்மைசெய்வதற்கு எதிரி நம்மைத் தூண்டுகிறான். நம் வழக்கமான பதில் என்னவென்றால், "நான் கர்த்தரை நேசிக்கிறேன். நான் கர்த்தருக்குத்தான் சொந்தம். எனவே அவரைப் பிரியப்படுத்துவதற்காக நான் நன்மைசெய்ய விரும்புகிறேன்." இதுவே சோதனை! நாம் தன்னிச்சையாக, நம் சொந்த பலத்தினால் நன்மைசெய்யத் தீர்மானிக்கும்போது நாம் சோதிக்கப்படுகிறோம். நாம் நிச்சயமாகத் தோற்றுவிடுவோம். இன்றைக்கும், நாளைக்கும், ஒருவேளை இன்னும் மூன்று நாள்களுக்கும்கூட நாம் நன்மைசெய்யக்கூடும். ஆனால் நிச்சயமாக மூன்றரை நாள்களுக்குமேல் நம்மால் அதைத் தொடர்ந்து செய்யமுடியாது. ஒருபோதும் தன்னிச்சையாக நம் பலத்தால் காரியங்களைச் செய்ய முயற்சிசெய்யக்கூடாது என்பதும், மாறாக எப்போதும் கர்த்தரையே சார்ந்திருக்கவேண்டும் என்பதுமே நாம் கற்றுக்கொள்ளவேண்டிய பாடம். நம் சொந்த முயற்சியினால் நன்மைசெய்ய நாம் சோதிக்கப்படும்போதெல்லாம், "இல்லை, சாத்தானே! இல்லை! இந்த வழியில் என்னால் போகமுடியாது; நான் போகமாட்டேன். நன்மைசெய்வதைப்பற்றி எனக்கு எதுவுமே தெரியாது. எனக்கு ஒன்றே ஒன்றுதான் தெரியும் - அது என் கர்த்தரையே சார்ந்திருப்பதுதான். அவரைச் சார்ந்திருப்பதிலிருந்து நான் விலகமாட்டேன்," என்று எதிரியிடம் நாம் சொல்வது சாலச்சிறந்தது. அப்போது நாம் வெற்றியையும், ஜீவனையும், சமாதானத்தையும் பெறுவோம். இது உண்மையிலேயே சுலபமானது. மூவொரு தேவன் தம்மைத்தாமே நம் ஜீவனாகவும், நமக்கு எல்லாமுமாகவும் நம் ஆவிக்குள் பகிர்ந்திருத்திருக்கிறார்; ஆகையால் எதையும் தன்னிச்சையாகவோ, நம் சொந்த பலத்தினாலோ ஒருபோதும் செய்யமலிருக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

ரோமர் நிருபத்தின் இந்த இரண்டு அதிகாரங்களையும் கடந்து மேற்கொண்டு பார்ப்பதற்குமுன்பு, பிரமாணங்களைப்பற்றிக் கொஞ்சம் பார்க்கவேண்டும். பாலம் மாம்சத்தில் இருக்கிறதென்று நாம் பார்த்தோம். பாவத்ததோடு, தீமையான பாவப் பிரமாணம் என்ற பிரமாணமும் அங்கு இருக்கிறது. பிரமாணம் என்றால் என்ன என்று நம் எல்லாருக்கும் தெரியும். நான் ஒரு புத்தகத்தை எடுத்து ஆகாயத்தில் தூக்கி எறிந்தால் அது நிச்சயமாகத்

தரையில்தான் வந்து விழும். இதுவே புவி ஈர்ப்புப் பிரமாணம். ஆனால் இந்தப் பிரமாணத்தை எதிர்த்து ஏதாவதொன்றைச் செய்கிறேன் என்று வைத்துக்கொள்வோம். எடுத்துக்காட்டாக, ஒரு புத்தகத்தை என் கையினால் தூக்கி எடுத்து, அதை ஒரே நிலையிலேயே இரண்டு அல்லது மூன்று மணி நேரங்களுக்குத் தாங்கிப்பிடிக்கிறேன். கொஞ்ச நேரம் அதைக் கீழே விழாமல் தாங்கிப் பிடிக்கலாம். ஆனால் கடைசியில் நான் அதைக் கைவிட்டுத்தான் ஆகவேண்டும். ஏன்? ஏனென்றால் என் சொந்த முயற்சியால் புவி ஈர்ப்புப் பிரமாணத்துக்கு எதிராகத் தாக்குப்பிடிக்கமுடியாது. நம் சொந்த முயற்சியால் இயற்கைப் பிரமாணத்தை எதிர்க்கமுடியாது. காலையில், "நான் பொறுமையாக இருக்கவேண்டும். நான் கோபப்படக்கூடாது. நாள்முழுவதும் நான் பொறுமையுடன் தாங்கிக்கொள்ளவேண்டும்," என்று நமக்கு நாமே சொல்லிக்கொள்ளலாம். ஒருவேளை இரண்டு நாள்களுக்குக்கூட நாம் பொறுமையாக இருக்கக்கூடும். ஆனால் மூன்றாம் நாளில் நாம் "அதிகமாகக்" கோபப்படுவோம். கோபப்படுவது பாவப் பிரமாணம்; கோபப்படாமல் இருப்பது நம் சொந்த முயற்சி. பெருமைப்படுவதும்கூட நமக்குள்ளே இயங்கிக்கொண்டிருக்கிற ஒரு பிரமாணம்தான். நம்மில் யாரும் பெருமையைப் பள்ளிக்கூடத்திற்குப்போய்க் கற்றுக்கொள்ளவில்லை. எப்படி பெருமையுள்ளவனாக இருப்பது என்று ஒரு சிறுபிள்ளைக்குக்கூடத் தெரியும். தங்கள் பிள்ளைகள் பெருமையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று பெற்றோர்கள் ஒருபோதும் கற்றுக்கொடுப்பதில்லை. அப்படியானால் அவர்கள் எப்படி பெருமையுள்ளவர்களாக இருக்கமுடியும்? இது "சுபாவமாகவே" வந்துவிடுகிறது. அந்த பாவ "சுபாவம்" தான் பிரமாணம், நமக்குள்ளிருக்கும் பாவப் பிரமாணம்.

ஆகாயத்தில் புத்தகத்தைத் தாங்கிப்பிடிக்கிற அந்த எடுத்துக்காட்டைத் திரும்பவும் பார்ப்போம். என் முன்னால் ஒரு மேஜை இருக்கும்போது, புத்தகம் கீழே விழாதபடிக்கு அதை ஆகாயத்தில் என் கைகளால் தாங்கிப்பிடித்துக்கொள்ளப் பிரயத்தனம்செய்வது முட்டாள்தனம். மேஜை இன்னொரு பிரமாணத்தின் பிரதிநிதி. புவி ஈர்ப்புப் பிரமாணத்துக்கு எதிரான உறுதியான ஆதாரத்தின் பிரமாணம். புத்தகத்தை மேஜையின்மேல் போட்டுவிட்டு "அல்லேலூயா" என்று ஆர்ப்பரிக்கலாம். நான் அதை அங்கே வைத்துவிட்டுச் சமாதானத்தோடு இருக்கலாம். புத்தகம் மேஜையின்மீது பத்திரமாக இருக்கிறது; ஏனென்றால் உறுதியான ஆதாரத்தின் பிரமாணம், புவி ஈர்ப்புப் பிரமாணத்தை மேற்கொள்கிறது. உண்மையான ஆதாரம் யார்? *கன்மலையாகிய* கிறிஸ்துவே அந்த ஆதாரம். அவர் எங்கே இருக்கிறார்? அவர்

நம் ஆவியில் இருக்கிறார். ஆகையால் நாம் புத்தகத்தை மேஜையின்மேல் வைப்பதைப்போல நம் மனதை ஆவியின்மேல் வைத்துவிடலாம். உங்கள் முயற்சிகளை மறந்துவிடுங்கள். நன்மைசெய்யவேண்டும் என்று நீங்கள் ஒருபோதும் தீர்மானிக்கவேண்டாம். "ஆ, முன்பெல்லாம், நான் என் கணவனிடத்தில் (அல்லது மனைவியிடத்தில் அல்லது வேறு யாராவது ஒருவரிடத்தில்) மிகக் கொடூரமாயிருந்தேன்; இப்போது இன்று பாசமுள்ளவளாக இருக்க முடிவுசெய்கிறேன்," என்று ஒருபோதும் சொல்லவேண்டாம். ஒரு நாள் அல்லது இரண்டு நாள் நாம் பாசமுள்ளவர்களாக இருக்கலாம். ஆனால் அதற்குமேல் நம்மால் தாக்குப்பிடிக்கமுடியாது. எந்தத் தீர்மானங்களும் எடுப்பதற்கு ஒருபோதும் முயற்சிசெய்யவேண்டாம். இது வேலைசெய்யாது. என்றென்றும் நிலைத்திருக்கிற கன்மலையாகிய கிறிஸ்து நமக்குள் இருக்கிறார். அவர் மேஜையாக, நம் கன்மலையாக, நம்மில் இருக்கிறார். நாம் எல்லா நேரமும் நம் மனங்களை அவர்மேல் வைத்துவிட்டு, நம்மைக் கன்மலையின்மேல் வைத்துவிட்டு, உறங்கச்சென்றுவிடவேண்டும். அவ்வளவே! இதுவே வெற்றியின் வழி, விடுதலையின் வழி! நாம் நம் மனதை ஆவியின்மேல் வைக்கும்போது, நாம் நம்மையே முற்றிலும் கிறிஸ்துவுக்குக் கையளித்துவிடுகிறோம். நாம் அவரைச் சார்ந்திருக்கும்போது, "கர்த்தாவே, இதோ நான் நம்பிக்கையற்ற வனும், உதவியற்றவனுமாய் இருக்கிறேன். இப்போதிலிருந்து எதையாவது செய்வதற்குத் தீர்மானிக்க நான் ஒருபோதும் முயற்சிசெய்யமாட்டேன், என் மனதை நான் உமக்குத் தருகிறேன். என் மனதை நான் உம்மேல் பொருத்துகிறேன்," என்றே நாம் அவரிடம் சொல்கிறோம். இதைச் செய்வதின்மூலம் நாம் நம்மையே கர்த்தரிடத்தில் ஒப்படைக்கிறோம். அப்போது கர்த்தர் நம்மூலம் தம்மைப் பரவச்செய்து, நம்மைத் தம்மால் பூர்த்தியாய் நிரப்புவதற்கு அவருக்கு ஆதாரமும், வாய்ப்பும் கிடைக்கும். இது எவ்வளவு அற்புதமானது!

## முப்பகுதி மனிதன் சரீர (சபை) வாழ்க்கையை மெய்யாக்குதல்

நாம் இப்போது ரோமர் 8-லிருந்து ரோமர் 12-க்குச் செல்கிறோம். 9, 10, 11-ஆம் அதிகாரங்கள் அடைப்புக் குறிக்குள் இருக்கவேண்டிய அதிகாரங்கள். எனவே ரோமர் 12-ஆம் அதிகாரம்தான் 8-ஆம் அதிகாரத்தின் தொடர்ச்சி. 7-ஆம் அதிகாரத்தில் மனம் சுயேட்சையாக இருந்தது. ஆனால் 8-ஆம் அதிகாரத்தில் மனம் சார்ந்திருக்கிறது. ஆவியைச் சார்ந்திருக்கிறது. 7-ஆம் அதிகாரத்திலுள்ள மனம் தன் சொந்த முயற்சியினால்

கஷ்டப்பட்டுப் போராடிக்கொண்டிருக்கிற தன்னிச்சையான சுயத்தின் பிரதிநிதி. அது எப்போதுமே தோல்வியில்தான் முடிவடைகிறது. 8-ஆம் அதிகாரத்திலுள்ள மனம், கர்த்தராகிய இயேசுவின்மேல் இளைப்பாறுகிற, சார்ந்திருக்கும் சுயத்தின் பிரதிநிதி. கர்த்தர் நம் முழு ஆள்தத்துவத்தையும் தம்மைக் கொண்டுப் பூர்த்தியாய் நிரப்பி நம்மை அவருடைய சரீரத்தின் ஜீவிக்கும் அவயவமாக்க இது அவருக்கு ஒரு வாய்ப்பளிக்கிறது. நாம் பின்னர் 12-ஆம் அதிகாரம் பேசுகிறது: சரீரம், ஆத்துமாவின் பிரதான பகுதியான மனம், ஆவி.

### (1) சபை வாழ்க்கைக்காக சரீரம் ஒப்புக்கொடுக்கப்படுதல்

நாம் கிறிஸ்துவைச் சார்ந்திருக்கும்போது அவர் நம் முழு ஆள்தத்துவத்தையும் தமக்குச் சொந்தமாக்கிக்கொள்கிறார். அப்போது சட்டவிரோதமாகப் பிடுங்கிவைத்திருக்கும் எதிரியின் கரத்திலிருந்து நம் சரீரம் விடுதலையாக்கப்படுகிறது. நாம் சுயேச்சையாக வாழ்ந்தபோது சாத்தான் நம் சரீரத்தை அவனுக்குச் சொந்தமாக்கிக்கொண்டு நம் விருப்பத்திற்கு எதிராகக் காரியங்களைச் செய்வதற்கு நம்மைப் பலவந்தப்படுத்த முடிந்தது. இப்போது நாம் மிகப்பெரிய பலவானாகிய கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதால், நம் சரீரத்தைச் சட்டவிரோதமாகப் பிடுங்கிவைத்திருக்கும் எதிரியின் கரத்திலிருந்து அவர் விடுதலையாக்குகிறார். அடுத்த படி என்ன? நாம் நம் சரீரத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1). அன்பான அநேகக் கிறிஸ்தவ சகோதர, சகோதரிகள் இதைத்தான் இதுவரை செய்யவில்லை. "கர்த்தாவே, முன்பு பாவ சரீரமாகவும், மரணத்தின்கீழுமிருந்த என் சரீரம் இப்போது உயிர்ப்பிக்கப்பட்டு விடுதலையாக்கப்பட்டிருக்கிறது. நான் உமக்கு நன்றிசெலுத்து கிறேன். நான் இந்தச் சரீரத்தை உம் சரீரமாகிய சபைக்காக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் என் சரீரத்தை என் கரங்களிலேயே வைத்துக்கொண்டால், உம் சரீரம் கைகூடாதே," என்று சொல்லி நாம் நம் சரீரத்தைத் திட்டவட்டமாக அவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். நாம் கிறிஸ்துவின் சரீரத்தை மெய்யாகவேண்டு மென்றால், நடைமுறையில், திட்டவட்டமாக நாம் நம் சரீரத்தைக் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இந்த நாட்களில், ஒரு கரையிலிருந்து இன்னொரு கரைக்குப் பயணம்செய்யும்போது, சரீர (சபை) வாழ்க்கையைப்பற்றிப் பேசுகிற அநேகக் கிறிஸ்தவர்களை நான் சந்தித்திருக்கிறேன். ஆனால் நம் சரீரத்தின் நிலை என்ன? நாம் கிறிஸ்துவின் சரீரத்தைப்பற்றி அதிகமாகப் பேசுகிறோம். ஆனால் நம் சரீரத்தை வைத்து நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? அதை நாம்

இன்னும் நம் கைகளிலேயேதான் வைத்துக்கொண்டிருக்கிறோமா? நம் சரீரத்தை நம் கைகளிலேயே வைத்திருக்கும்வரை கிறிஸ்துவின் சரீரத்தை மெய்யாக்குகிற சாத்தியமே இல்லை. சபை வாழ்க்கையை நாம் மெய்யாக்க விரும்பினால் முதலாவது, விடுதலையாக்கப்பட்ட நம் சரீரத்தை நாம் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று ரோமர் 12 கூறுகிறது. அது இனிமேல் நம் சரீரமாக இல்லாததால், அதை ஜீவிக்கும் பலியாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

சகோதரர்களே, நாம் கூட்டங்களுக்கு வரும்போது எப்படி வருகிறோம்? நம் இருதயத்துடனா அல்லது நம் சரீரதுடனா? பெரும்பாலா கிறிஸ்தவர்கள், "ஆ, சபை வாழ்க்கையை நாடுகிற இருதயம் என்னிடத்தில் இருக்கத்தான் செய்கிறது," என்கிறார்கள். ஆம் சபை வாழ்க்கையை நாடுகிற இருதயம் அவர்களிடம் இருக்கக்கூடும். ஆனால் அவர்களுடைய சரீரம் சபை வாழ்க்கைக்காக இல்லையே. அவர்களுடைய சரீரத்தை வீட்டிலேயே விட்டுவிடுகிறார்கள். "சபை வாழ்க்கையை நாடுகிற இருதயம் மட்டும் இல்லை, சபை வாழ்க்கையைச் செயலாக்குகிற ஒரு சரீரமும் என்னிடத்தில் இருக்கிறது," என்று நம்மால் சொல்லமுடியவேண்டும். நம் இருதயம் சபை வாழ்க்கைக்காகவும், நம் சரீரமோ நம் தனிப்பட்ட வாழ்க்கைக்காகவுமா? அப்படியானால் நாம் எப்படி சபை வாழ்க்கையை மெய்யாக்கமுடியும்? சபை வாழ்க்கையைப்பற்றி மிக அழகாகப் பேசலாம். எல்லாமே "அல்லேலூயா"தான், எல்லாரும் "உன்னதங்களில்"தான் இருக்கிறார்கள். ஆனால் உண்மையில், எல்லாமே வெறுமனே "ஆகாயத்திலும்," இருதயத்திலும்தான் இருக்கிறது. கிறிஸ்துவின் சரீர வாழக்கையை நாம் மெய்யாக்க வேண்டுமென்றால், நாம் நம் சரீரத்தைத் திட்டவட்டமாகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். "கர்த்தாவே, முன்பு என் சரீரம் எதிரியின் ஆக்கிரமிக்கும் கரத்தின்கீழ் இருந்தது. இப்போது இந்தச் சரீரத்தை நீர் விடுவித்திருக்கிறீர். நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன். இதோ! இதை நான் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். இது இனிமேல் என் சரீரமல்ல, மாறாக உம்முடைய பலி." இவ்வாறு ஒப்புக்கொடுக்கும்போதுதான் சபை வாழ்க்கையை நாம் மெய்யாக்கமுடியும்.

### (2) நம் மனம் சபை வாழ்க்கைக்காகப் புதிதாக்கப்படுதல்

நாம் நம் சரீரத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தபின்பு, சபை வாழ்க்கையை மெய்யாக்குவதற்கான இரண்டாவது காரியமும் காலதாமதமின்றி நடக்கவேண்டும். நம் மனம் புதிதாக்கப்படுவதால் நாம் மறுரூபமாக்கப்படவேண்டும் (ரோமர் 12:2). முன்பெல்லாம் தேவனுக்காக எதையாவது செய்யவேண்டும் என்று நம் மனம்

தானாகவே எப்போதும் முயன்றது; இப்போது அது கிறிஸ்துவைச் சார்ந்திருக்கிறது. கர்த்தரைச் சார்ந்திருக்கிற இந்த மனம் புதிதாக்கப்படவேண்டும், பிரகாசிப்பிக்கப்படவேண்டும், மீண்டும் கற்பிக்கப்படவேண்டும்.

இதோ ஓர் உண்மையான எடுத்துக்காட்டு. கர்த்தரையும் சபை வாழ்க்கையையும் மெய்யாகவே நேசிக்கிற ஒரு சகோதரர் கர்த்தருக்கும் சபைக்கும் தம் சரீரத்தைத் திட்டவட்டமாகப் பலியாகச் செலுத்தினார். ஆனால் அவர் தம்மையே ஒப்புக்கொடுத்த பின்பு, சபைக்கு ஒரு பெரிய பிரச்சினையாகிவிட்டார். சபை வாழ்க்கையில் அவர் அக்கறையில்லாமல் இருந்தபோது சபை சமாதானமாக இருந்தது. ஆனால் இப்போது அவருடைய சரீரம் சபைக்கு வரும்போது அவருடைய மனமும் கூடவே வருகிறது. ஆனால் அவருடைய மனம் இன்னும் புதிதாக்கப்படவில்லை. கிறிஸ்தவத்தின் பழைய காரியங்கள் இன்னும் கிறுக்கித்தள்ளப் பட்டுச் சுத்திகரிக்கப்படவில்லை. அவர் தம் சரத்தை ஒப்புக்கொடுக்காதபோது சபையைப்பற்றி நிர்விசாரமாக இருந்தார். "எனக்கு நேரம் இருந்தால், விருப்பம் இருந்தால், நான் கூட்டங்களுக்கு வருவேன். நேரம் இல்லையென்றால், விருப்பம் இல்லையென்றால், நான் வரமாட்டேன்." அவர் இப்படித்தான் சொன்னார். ஆனால் இப்போது அவர் கர்த்தரை அதிகமாக நேசிக்கிறார். எனவே அவர் தன்னைக் கர்த்தருக்கும், சபைக்கும், ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவர் தன்னை முற்றிலும் சபைக்குள் வைத்துவிட்டார். ஆனால் அவருடைய சரீரம் வரும்போது பிரச்சினைக்குரிய அவருடைய மனம் அநேக அபிப்பிராயங் களையும், போதனைகளையும், எண்ணங்களையும், பரிசீலனை களையும் கூடவே கொண்டுவருகிறது. இவைகள் சபை வாழ்க்கைக் குப் பெரிய பிரச்சினையை உண்டாக்குகின்றன.

*சரீரத்தை ஒப்புக்கொடுத்தபின்பு, மனம் புதிதாக்கப்பட வேண்டும்.* நடைமுறைக்குரிய சபை வாழ்க்கையில் நாம் முழுப் பங்கையும் வகிக்கும்போது, நம் மனம் சுத்திகரிக்கப்பட்டு புதிதாக்கப்பட்டு, திரும்பவும் கற்பிக்கப்பட்டிருக்கவேண்டும். நம் மனம் எண்ணங்களையும், ஜென்மசுபாவக் கருத்துகளையும், பாரம்பரியக் கிறிஸ்தவகத்தின் எல்லாப் போதனைகளையும், பரிசீலனைகளையும் கைவிட்டுவிடவேண்டும். இதுவே மனம் புதிதாக்கப்படுவதால் மறுரூபமாக்கப்படுதல் என்பதன் பொருளாகும். அதன்பின்பு சபை வாழ்க்கை சாத்தியமாகும். இல்லையென்றால் சபையில் மனமே மிகப்பெரிய பிரச்சினையாகவும், குழப்பத்தின் மிகப்பெரிய ஊற்றாகவும் இருக்கும். பிரியமான சிலர் சபைக்குள் வந்ததிலிருந்து ஏராளமான பிரச்சினைகளைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அவர்கள்

வருவதற்குமுன்பு, சபை மிகவும் சமாதானமாகவும், ஒற்றுமை யாகவும் இருந்தது. ஆனால் அவர்கள் உள்ளே வந்ததிலிருந்து, அவர்கள் மனங்கள் சபைக்கு குழப்பத்தை உருவாக்கியிருக்கின்றன. என் இருதயம் நன்றாகத்தான் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களுடைய மனங்கள் பயங்கரமாக இருக்கின்றன. அவர்களுடைய மனங்கள் மறுரூபமாக்கப்படுவதற்காக ஏராளமான பழைய காரியங்கள் கழற்றி எறியப்படவேண்டும்.

### (3) சபை வாழ்க்கைக்காக நம் ஆவி அனலாயிருத்தல்

முதலாவது சரீரம் ஒப்புக்கொடுக்கப்படவேண்டும்; பின்னர், ஆத்துமாவின் பிரதிநிதியான மனம் புதிதாக்கப்படவேண்டும்; இறுதியாக ஆவி அனலாக எரியவேண்டும். நாம் ஆவியில் அனலாக இருக்கவேண்டும் (*ரோமர் 12:11*). ஒரு பிரிய சகோதரர் தன் சரீரத்தைக் கர்த்தருக்கும், சபைக்கும் ஒப்புக்கொடுத்திருக்கலாம். அவருடைய மனம் முற்றிலும் புதிதாக்கப்பட்டிருக்கலாம். ஏனென்றால் பழைய காரியங்களெல்லாம் கைவிடப்பட்டுவிட்டன. ஆனால் அவர் ஆவியில் குளிராக இருக்கக்கூடும். அவர் இனிமேல் ஒரு பிரச்சினையல்ல, ஆனால் அவர் ஒரு சுமையாகிவிடுகிறார். ஒவ்வொரு முறையும் அவர் கூட்டத்துக்கு வரும்போது, கல்லறையைப்போலக் குளிர்ந்தவராக அங்கே உட்காருகிறார். அவர் எப்போதுமே அமைதியாக இருக்கிறார். ஒருபோதும் பிரச்சினைக்குரியவரல்ல. ஆனால் சபை அவரை ஒரு சுமையாகக் சுமக்கவேண்டும். மூப்பர்கள் அல்லது உதவிக்காரர்கள் கூட்டத்தில் பொறுப்பு பகிர்ந்துகொள்ளப்படும்போது, அவர் அங்கே சும்மா உட்கார்ந்திருக்கிறார். அவருடைய மனப்பான்மை, "நான் முழுக்க முழுக்க உங்களோடுதான் இருக்கிறேன். நான் சபைக்காகத்தானி ருக்கிறேன். எனக்குப் பிரச்சினையே இல்லை. சகோதரர்களே, நீங்கள் என்ன சொன்னாலும் எனக்குச் சரிதான்." பொறுப்புள்ள சகோதரர்கள் ஒன்றாகக் கூடிவரும்போது எல்லாருமே இப்படி இருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். பாரத்தை யார் சுமப்பது? அந்தச் சகோதரர்கள் எல்லாருமே பாரமாகிவிடுகிறார்கள். ஒருவர்கூட சபையின் பாரத்தில் அவர்களுடைய பங்கைச் சுமப்பதில்லை. ஒருபக்கம், நாம் பிரச்சினைக்குரியவராக இருக்கக்கூடாது. ஆனால் மறுபக்கம், நாம் நேர்மறையாக பிரச்சினையை உருவாக்குபவராக இருக்கவேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், சகோதரர்களுடன் நமக்கு எந்த முரண்பாடும், குறுக்கு ஓட்டமும் இருக்கக்கூடாது. ஆனால் நாம் நெருப்பாக இருக்கவேண்டும்; நாம் எரிக்கப்படவேண்டும், எரிந்துகொண்டிருக்கவேண்டும்; நாம் *நம் ஆவியில் அனலாக*

இருக்கவேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை தனிப்பட்டதாகவும், அந்தரங்கமானதாகவும் தோன்றக்கூடும். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல; அது ஒரு கூட்டு வாழ்க்கை, சரீர வாழ்க்கை. நீ மட்டும் தனியாகச் சரீரமாகிவிடமுடியாது; நீ ஓர் அவயவம்; சபை வாழ்க்கையை மெய்யாக்குவதற்கு மற்றவர்களும் அவயவங்களாக உனக்குத் தேவை. நாமாகவே நன்மைசெய்ய முயல்வதை நிறுத்திவிட்டுக் கிறிஸ்துவையே சார்ந்து அவரால் வாழ நாம் கற்றுக்கொள்ளும்போது, நாம் ஜீவனுள்ள நபராக இருக்கிறோம். மேலும் அவருடைய சரீரத்தில் செயல்படக்கூடிய ஓர் அவயவமாக நாம் ஆயத்தமாகிவிடுகிறோம். பின்பு திட்டவட்டமாக நம் சரீரத்தைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதாலும், நம் மனம் புதிதாக்கப்படுவதாலும், நம் ஆவியை அனலாக்கிக்கொள்வதாலும், சபை வாழ்க்கையை நாம் மெய்யாக்கவேண்டும். சரீரம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, ஆத்துமா மறுரூபமாக்கப்பட்டு, ஆவி அனலாயிருக்கும்போது, அங்கு சபை வாழ்க்கை இருக்கும். நாம் பிரச்சினைக்குரிய, குளிர்ந்த, அல்லது செத்த அவயவமாக அல்ல, மாறாக ஜீவிக்கும், செயல்படக்கூடிய அவயவமாக இருப்போம். நாம் செயலிழந்த ஓர் அவயவமாக அல்ல, மாறாக செயலில் மேலோங்கிநிற்கிற, முனைப்பான ஓர் அவயவமாக இருப்போம். அப்போது நாம் சபை வாழ்க்கையின் நிஜத்தைக் காண்போம்.

## அத்தியாயம் இருபத்தொன்று

## தேவனுடைய வாசஸ்தலம் கட்டப்படுதல்

ஆவியையும், ஆத்துமாவையும்பற்றிப் பார்க்கவேண்டிய இன்னும் அநேக முக்கியமான விவரங்கள் இருக்கின்றன. ஆனால் தேவனுடைய வாசஸ்தலம் கட்டப்படுவதற்கு இப்போது நம் கவனத்தைச் செலுத்தவேண்டும். தேவனுடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக் கூடாரத்தைப்பற்றி அதிகமாக வலியுறுத்தியிருக்கிறோம். அது வெளிப்பிரகாரம், கூடாரத்தின் இரண்டு பகுதிகளாகிய பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலம் ஆகியவைகளால் ஆனது என்று நாம் பார்த்தோம். இந்த மூன்று பகுதிகளின் உள்ளடக்கத்தையும் நாம் மீண்டும் ஒருமுறை சுருக்கமாகப் பார்ப்போம்.

வெளிப்பிரகாரத்தில் கிறிஸ்துவின் சிலுவைக்கு முன்னடையாளமான பலிபீடமும், பரிசுத்த ஆவியின் சுத்திகரிக்கும் கிரியைக்கு முன்னடையாளமான தொட்டியும் இருக்கின்றன.

பரிசுத்த ஸ்தலத்தில் சமுகத்து அப்பமேஜையும், குத்துவிளக்கும், தூபபீடமும் இருக்கின்றன. இந்த மூன்று காரியங்களும் கிறிஸ்து நம் ஜீவனாக இருப்பதிலுள்ள அவருடைய வெவ்வேறு அம்சங்களுக்கு முன்னடையாளங்களாகும். சமுகத்து அப்பமேஜை, கிறிஸ்து நம் அனுதின ஜீவ நிரப்பீடு என்பதற்கு முன்னடையாளம். அவரே நம் மெய்யான ஜீவ அப்பம். குத்துவிளக்கு கிறிஸ்துவை ஜீவ ஒளியாக வெளிப்படுத்துகிறது. நாம் அனுபவித்துமகிழ்கிற ஜீவ நிரப்பீடு நமக்குள் பிரகாசிக்கிற ஒளியாகிறது. அடுத்து தூபபீடம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த நறுமணத்துக்கு முன்னடையாளம்.

மகா பரிசுத்த ஸ்தலத்தில் ஒரேவொரு காரியம்தான் இருக்கிறது; அது கிறிஸ்துவுக்கு அடையாளமான பெட்டி. பெட்டிக்குள் மூன்று காரியங்கள் இருக்கின்றன: மறைவான மன்னா - இது உள்ளான ஜீவனும், உள்ளான ஜீவ நிரப்பீடுமாகும்; மறைவான பிரமாணம் - இது நமக்குள் இருக்கும் உள்ளான பிரகாசம்; தளிர்த்த மொட்டுகளைக்கொண்ட மறைவான கோல் - இது உயிர்த்தெழுதலின் உள்ளான வல்லமையும், அதிகாரமும் ஆகும். மறைவான மன்னா, மறைவான பிரமாணம், மறைவான அதிகாரம் ஆகியவைகளெல்லாம் உயிர்த்தெழுதலில்தான் இருக்கின்றன. இவைகள் பரிசுத்த ஸ்தலத்திலுள்ள இவைகளுக்கொத்த மூன்று காரியங்களையும்விட அதிக ஆழமானவை.

## கூடாரத்தின் உள்ளடக்கங்கள்

இவையனைத்தும் தேவனுடைய வாசஸ்தலமாகிய ஆசரிப்புக் கூடாரத்தின் உள்ளடக்கங்கள். வெளிப்பிரகாரத்திலும், பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் உள்ள இந்த எட்டு காரியங்களின் அனுபவங்கள்தான் தேவனுடைய மெய்யான மாளிகையாகிய சபையின் நிஜமான உள்ளடக்கங்கள். நாம் தேவனுடைய வாசஸ்தலமாகிய மாளிகையாக இருக்க விரும்பினால், கிறிஸ்து தம் சிலுவையினால் நிறைவேற்றி முடித்ததையும், பரிசுத்த ஆவியின் சுத்திகரித்தலையும் நாம் அனுபவிக்கவேண்டும். கிறிஸ்துவை நம் ஜீவனாகவும், நம் ஒளியாகவும், நம் உயிர்த்தெழுதலின் வாசனையாகவும் போதுமான அளவுக்கு நாம் அனுபவிக்கவேண்டும். மேலும் *கிறிஸ்துவையே* மறைவான மன்னாவாகவும், மறைவான பிரமாணமாகவும், மறைவான அதிகாரமாகவும் அனுபவித்த நிஜமான அனுபவங்கள் நமக்கு வேண்டும். கிறிஸ்துவை இந்த அம்சங்களிலெல்லாம் அனுபவிக்கும்போது, அந்த அனுபவமே தேவனுடைய மாளிகையின் உண்மையான உள்ளடக்கத்தை உருவாக்கி, மாளிகையைக் கட்டுவதற்கான கட்டுமானப் பொருள்களையும் வழங்குகிறது.

கடந்த சில ஆண்டுகளில், மக்கள் புதிய ஏற்பாட்டு சபையைப்பற்றி அதிகமாகப் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் புதிய ஏற்பாட்டு சபை என்பது ஏதோ ஒரு குறிப்பிட்ட மாதிரியில் அமைக்கப்படுகிற சபை அல்ல. மாறாக கிறிஸ்துவின் ஜீவனாலும், கிறிஸ்துவின் அனுபவங்களாலும் ஆன ஒன்று. "அதோ, அந்த மனிதனைப்போலவே ஒரு மனிதனைச் செய்வோம்," என்று நாம் சொல்வதாக வைத்துக்கொள்ளுங்கள். எனவே புயத்தை மெழுகினாலும், தலையைப் பளிங்குக் கல்லினாலும், மார்புப் பகுதியை மரத்தினாலும், கால்களையும் பாதங்களையும் களிமண்ணினாலும் செய்கிறோம். இவைகளை அளவிலும், உருவத்திலும் துல்லியமாக, சற்றும் பிசகாமல் ஒன்றாகச் சேர்த்து அதே நிறத்தில் வண்ணந்தீட்டிவிட்டால் அந்த மனிதனின் உண்மையான *மாதிரியை* நாம் பெற்றுவிடலாம். ஆனால் அந்த மனிதனின் நிஜம் அதில் இல்லை. நிஜமான மனிதன் மாதிரியின்படி *உற்பத்திசெய்யப்படுவதில்லை*. மாறாக அவன் *பிறக்கிறான்*; ஜீவனின் வளர்ச்சியால் *முதிர்ச்சி அடைகிறான்*. முதலாவது இந்த மனிதன் ஜீவனுள்ள ஒரு தாயிடம் பிறந்தான்; பின்னர் அனுதின போஷாக்கைப் பெற்று வளர்ந்தான். கடைசியாக ஒரு குறிப்பிட்ட மாதிரியின்படி இத்தகைய மனிதனானான். மற்றபடி அங்கு மாதிரி இருக்கலாம்; ஆனால் மனிதன் இருக்கமாட்டான்.

ஒரு சமயம் நாங்கள் பிட்ஸ்பர்க்கில் இருந்தபோது, ஒரு நண்பரிடத்தில் நான் இப்படிச் சொன்னேன். "மாதிரியை நாம் மறந்துவிட்டு, முழுக் கவனத்தையும் ஜீவனுக்குச் செலுத்துவோம்." எடுத்துக்காட்டாக, உங்களுக்கு ஓர் அழகான சிறு பையன் இருக்கிறான். நீங்கள் அவனுடைய மாதிரிக்குக் கவனம்செலுத்துவதில்லை. அவனுக்கு ஒரு குறிப்பிட்ட உருவங்கொடுக்க நீங்கள் தினம்தினம் முயற்சிசெய்வதில்லை. முதலில் அவன் தன் தாயினிடத்தில் பிறக்கிறான்; அதன்பின் பாலையும், குழந்தை உணவையும் கொடுத்து அவனை போஷிக்கிறீர்கள். குழந்தை வளர்கிறது, ஒரு குறிப்பிட்ட உருவத்திலும், மாதிரியிலும் வளர்ந்துகொண்டே வருகிறது. அந்த மாதிரி அவனுடைய பிறப்பிலிருந்தும், ஜீவனின் வளர்ச்சியிலுமிருந்து வெளிவருகிறது. உங்கள் குழந்தையை நாம் உருவாக்கமுடியாததைப்போலவே புதிய ஏற்பாட்டு சபையையும் நாம் உருவாக்க முடியாது. அதை நாம் உருவாக்க முயன்றால் ஜீவனே இல்லாத ஒரு மாதிரிதான் நம்மிடம் இருக்கும். ஒரு மாதிரியின்படி ஒரு சபையை உருவாக்க நம்மால் கூடும். ஆனால் ஜீவனுள்ள ஒரு சபையை உருவாக்க நம்மால் முடியாது.

*"எதையும் உருவாக்காதீர்கள்!"* என்று கடந்த சில ஆண்டுகளாக நான் மக்களிடம் வலியுறுத்திக்கொண்டும் மக்களிடத்தில் மன்றாடிக்கொண்டும் இருக்கிறேன். நாம் உருவாக்கும் எதுவும் நிஜமான சபையாக இருக்கமுடியாது. கடந்த ஆறாயிரம் ஆண்டுகளில் இந்த பூமியில் ஜீவனுள்ள ஒரு நபர்கூட உருவாக்கப்பட்டதில்லை; எல்லாருமே பிறந்தார்கள், பின்பு ஜீவனில் வளர்ந்தார்கள். சபை கிறிஸ்துவின் சரீரமாகும். எந்த மனிதனுடைய கரமும் அதை உருவாக்கமுடியாது. நாம் அநேகக் காரியங்களை உருவாக்கலாம். ஆனால் ஜீவிக்கும் அவயவங்களைக்கொண்ட ஜீவனுள்ள சரீரமாகிய சபையை நம்மால் உருவாக்கமுடியாது. சபையை உருவாக்குமாறு புதிய ஏற்பாடு நமக்கு ஒருபோதும் கட்டளையிடவுமில்லை, கற்பிக்கவுமில்லை. மாறாக கிறிஸ்துவை அனுபவிக்குமாறும், கிறிஸ்துவைப் பிறருக்குப் பகிர்ந்தளிகுமாறும், ஆவிக்குரிய பிறப்பினால் அநேகப் பிள்ளைகளைப் பெற்றெடுக்குமாறும், புதிய ஏற்பாடு நமக்கு அறிவுறுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை மெய்யான பிறப்பினாலும், ஜீவனின் வளர்ச்சியினாலும் மட்டுமே வெளிவருகிறது. எனவேதான் *ஆசரிப்புக் கூடாரம் அதிலுள்ள உள்ளடக்கங்களை அனுபவிக்கும் அனுபவத்திலிருந்தே உருவாகிறது* என்ற கோட்பாட்டை நாம் வலியுறுத்துகிறோம்.

## வெளிப்பிரகாரம் வேறுபிரிக்கப்படுதல்

இந்தக் கோட்பாட்டை ஆதாரமாகக்கொண்டு கூடாரத்தின் முக்கியமான கட்டுமனப் பொருள்கள் எவை என்று நாம் பார்ப்போம். முதலாவதாக வெளிப்பிரகாரம் “வேறுபிரிக்கப் படுகிறது” (யாத். 27:9-19; 38:9-20). இது “வேறுபிரித்தல்” என அழைக்கப்படுகிறது. ஏனென்றால் இது உங்கள் சொத்துக்களை வெளியேயுள்ள எல்லாவற்றிலிருந்தும் பிரித்து, அதைப் பாதுகாக்கிற வேலியைப் போன்றது. வெளிப்பிரகாரம் மூன்று முக்கியமான காரியங்களால் வேறுபிரிக்கப்பட்டுள்ளது. 1) வெண்கலப் பாதங்கள், 2) தூண்கள், 3) திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட தொங்கு திரைகள். வேறுபிரிக்கும் சுவர்களின் அடிப்பாகம் வெண்கலப் பாதங்களால் ஆனது. வடக்குப் பக்கத்தில் இருபது பாதங்களும், தெற்குப் பக்கத்தில் இன்னும் இருபதும், பின்புறமாகிய மேற்குப் பக்கத்தில் பத்தும், முன்புறத்தில் பத்துமாக மொத்தம் அறுபது வெண்கலப் பாதங்கள் இருக்கின்றன (யாத். 27). இந்தப் பாதங்கள் ஒவ்வொன்றின்மேலும் ஒரு தூண் நிற்கிறது; எல்லாத் தூக்களும் கொக்கிகளால் சேர்க்கப்பட்டு, ஒன்றோடொன்று இணைக்கப்பட்டுள்ளன. தூண்களின்மேலுள்ள தொங்கு திரைகள் இரண்டு நூல்களைக்கொண்டு திரித்த மெல்லிய பஞ்சு நூலால் ஆனது. ஆகையால் வெண்கலப் பாதங்கள், தூண்கள், திரித்த மெல்லிய நூலால் செய்யப்பட்டத் தொங்கு திரைகள் ஆகியவைகளே மூன்று முக்கியமான காரியங்களாகும்.

இந்த வேறுபிரிப்பின் அடித்தளத்தை உருவாக்குகிற அதே வெண்கலம்தான் வெளிப்பிரகாரத்தில் இருக்கிற இரண்டு காரியங்களாகிய வெண்கல பலிபீடம் மற்றும் வெண்கலத் தொட்டியின் மூலப்பொருளாகவும் இருக்கிறது. பலிபீடம், கழுவும்தொட்டி ஆகியவைகளை அனுபவிப்பதிலிருந்து வெண்கலப் பாதங்கள் வருகின்றன என்பதே இதின் ஆவிக்குரிய அர்த்தம். பலிபீடம், தொட்டி ஆகிய இரண்டுமே வெண்கலத்தால் செய்யப்பட்டிருக்கின்றன. ஆகையால் வேறுபிரிப்பின் எல்லாப் பாதங்களும் வெண்கலத்தால்தான் செய்யப்பட்டிருக்கின்றன. வெளிப்பிரகாரத்துக்குள் வெண்கலப் பலிபீடம், வெண்கலத் தொட்டி, வெண்கலப் பாதங்கள் இருக்கின்றன. பலிபீடமும், தொட்டியும் செய்யப்பட்டுள்ள மூலப்பொருளான வெண்கலத்தா லேயே வேறுபிரிப்பின் அடித்தளமும் செய்யப்பட்டிருக்கிறது. இதுவே மக்கள் வெளிப்பிரகாரத்துக்குள் நுழைந்தவுடன் அவர்கள் மனதில் ஆழமாகப் பதிகிறது. சிலுவையின் அனுபவமும், பரிசுத்த ஆவியின் சுத்திகரிக்கும் அனுபவமுமே கர்த்தருடைய மாளிகையை வேறுபிரிப்பதற்கான மெய்யான அடித்தளம் என்பது இதன்

பொருள்.

முன்னடையாளத்தின்படி, வெண்கலம் தேவனுடைய தெய்வீக நியாயத்தீர்ப்பு என்று நமக்குத் தெரியும். நம்மிடத்தில் என்ன இருக்கிறதோ, நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்கிறோமோ அவையெல்லாம் நியாயத்தீர்க்கப்படுமாறு பலிபீடத்தில் வைக்கப்படவேண்டும். பலிபீடம் அல்லது சிலுவைதான் நியாயத்தீர்ப்பின் முதல் இடம். தேவன் எல்லாவற்றையும் சிலுவையின் நியாயந்தீர்த்தார். எண்ணாகமம் 16-ஆம் அதிகாரத்தின்படி, இந்தப் பலிபீடத்தை மூடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட வெண்கலம், கலகம்செய்த இருநூற்று ஐம்பது பேர்களுடைய வெண்கலத் தூப கலசங்களிலிருந்து எடுக்கப் பட்டது. இந்த மக்கள் தேவனுக்கும், மோசேக்கும் விரோதமாகக் கலகம்செய்தபோது அக்கினியால் நியாயந்தீர்க்கப்பட்டார்கள். அதற்கு ஒரு நினைவுச்சின்னமாக அவர்களுடைய வெண்கலத் தூபகலசங்களை எடுத்துப் பலிபீடத்தை மூடுவதற்கு ஒரு தகடு உண்டாக்குமாறு தேவன் மோசேயிடம் சொன்னார். இது கலகக்காரர்கள்மேல் தேவன் செலுத்திய நியாயத்தீர்ப்பின் நினைவுச் சின்னமாகும் (எண். 16:38). சபை மெய்யாய்க் கட்டப்பட, நம்மிடத்தில் இருக்கும் அனைத்தும், நாம் செய்யக்கூடிய அனைத்தும், நாம் என்னவாக இருக்கிறோமோ அவையனைத்தும், கிறிஸ்துவின் சிலுவையினால் நியாயந்தீர்க்கப் படவேண்டும். இதுவே தேவனுடைய கட்டிடத்திற்கான வேறுபிரிக்கிற பாதங்களின் அடித்தளம்.

ஒருவேளை வேறுபிரிப்பின் கோட்பாட்டைப்பற்றி நாம் தெளிவாக இருக்கலாம். ஆனால் நம்மால் இதைச் செயல்படுத்த முடியவில்லை. நான் இன்றையக் கிறிஸ்தவத்தில் இரட்சிக்கப்பட்ட ஒரு சகோதரன் என்று வைத்துக்கொள்ளுங்கள். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதின்மூலம், நான் ஒரு பாவி என்றும், கிறிஸ்து என்னை நேசித்தார் என்றும், அவர் சிலுவையில் மரித்தார் என்றும், நான் கேள்விப்பட்டேன். அதன் விளைவாக, நான் ஒரு பாவி என்று ஒப்புக்கொண்டேன். "தேவனே, என்னை மன்னியும், ஏனென்றால் நான் பாவம்நிறைந்தவன். நீர் உம் குமாரனாகிய கர்த்தராகிய இயேசுவை எனக்காகச் சிலுவையில் மரிக்குமாறுக் கொடுத்ததற்காக நான் உமக்கு நன்றிசெலுத்துகிறேன். அவர் என் இரட்சகர், என் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இதற்காக நான் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். அல்லேலூயா! எனக்குள்ளே மகிழ்ச்சியும், சமாதானமும் உள்ளன," என்று நான் ஜெபித்தேன். பின்பு எனக்கு நல்ல நண்பரான ஒரு பாஸ்டரிடம் சென்று ஞானஸ்நானம் எடுக்க ஒத்துக்கொண்டேன். ஞானஸ்நானம் பெற்றபின்பு, நான் அவருடைய சபையின் ஓர் "உறுப்பினர்"

ஆனேன். கர்த்தர் ஏன் என்னை இரட்சித்தார் என்று நான் காணுமாறு அவர் ஒருநாள் என் கண்களைத் திறந்தார். பிறருடன் ஒன்றுசேர்ந்து கூட்டிக்கட்டப்பட்டு தேவனடைய வாசஸ்தலமாக வேண்டும் என்ற குறிக்கோளுக்காகவே அவர் என்னை இரட்சித்தார். என் வட்டாரத்திலுள்ள ஒரு கூட்டம் விசுவாசிகள் சரீர வாழ்க்கையைப்பற்றியும்,சபை கட்டப்படுவதைப்பற்றியும் பேசுவதைக் கேள்விப்பட்டபின்பு, நானும் அவர்களுடன் சேர்ந்து, சரீர வாழ்க்கையில் கட்டப்பட விரும்பினேன். இறுதியாக பரிசுத்த ஆவி என்னிடம், "நீ கூட்டிக்கட்டப்பட வருகிறாயா? சபை வாழ்க்கையை நீ மொய்யக்க வருகிறாயா? அப்படியானால் நீ முதலாவது சிலுவைக்குச் செல்லவேண்டும். உன்னால் செய்யமுடிந்ததெல்லாம், நீ என்னவாக இருக்கிறாயோ அவையெல்லாம், உன்னிடத்தில் இருப்பவையெல்லாம் சிலுவையிலே நியாயந்தீர்க்கப்படவேண்டும்," என்றார். பின்பு நான் அறிக்கைசெய்து, மனந்திரும்பி, "கர்த்தாவே, எனக்குரிய எதுவுமே உமக்கு ஏற்புடையதல்ல. ஒன்றுமே உம் கட்டிடத்துக்கு உகந்ததல்ல. எல்லாமே நியாயந்தீர்க்கப்படவேண்டும்," என்று சொன்னேன். சிலுவையின் நியாயத்தீர்ப்பைப் பின்தொடர்ந்து செல்லாவிட்டால் நான் பிறருடன் கூட்டிக்கட்டப்படுவது சாத்தியமல்ல. ஏனென்றால் அங்கு அடித்தளம் இல்லை, அஸ்திபாரம் இல்லை. நான் இறுமாப்புடன் சபைக்குள் வந்தால், நான் ஒழுங்குமுறைக்குள் வருவது சாத்தியம்தான். ஆனால் நான் சபையில் கட்டப்படுவது சாத்தியம் இல்லை. தேவனுடைய கட்டிடத்தில் வேறுபிரிக்கும் பாதங்களில் பார்ப்பதுபோல, வெண்கலப் பலிபீடத்தின் அனுபவத்திலிருந்தே அஸ்திபாரம் வருகிறது. தேவனுடைய வாசஸ்தலமாகிய கட்டிடத்தின் உறுதியான அஸ்திபாரம் சிலுவையின் அனுபவத்திலிருந்தே வருகிறது. வேறு வழியே இல்லை. சகலமும் பலிபீடத்தில் வைக்கப்பட்டு, எரிக்கப்பட்டு, நியாயந்தீர்க்கப்படவேண்டும். சபையின் பிரதானமான நுழைவாயிலில் சிலுவை இருக்கிறது. நாம் சபைக்குள் நுழையவேண்டுமென்றால், சிலுவையென்னும் பலிபீடத்தின்மேல் நம்மையே நாம் கிடத்தவேண்டும்.

நம் முழு ஆள்தத்துவத்தையும் நம் செயல்களனைத்தையும் சிலுவையில் வைத்தபின்பு, நாம் எவ்வளவு ஆழுக்கானவர்களாகவும், எவ்வளவு உலகப்பிரகாரமானவர்களாகவும், எவ்வளவு பாவம்நிறைந்தவர்களாகவும் இருக்கிறோம் என்று நம்மால் சாட்சிகூரமுடியும். நமக்குக் கிறிஸ்துவின் மீட்பு மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் சுத்திகரிப்பும் தேவைப்படுகிறது என்று நாம் உணர்கிறோம். ஒருநாள் என் உள்ளான உணர்வின்படி கழுவும் தொட்டிக்குள் குதிக்கவேண்டும் என்று தோன்றினது. "கர்த்தாவே,

என்னைச் சுத்தமாக்கும். நான் பாவம் நிறைந்தவன்! நான் உலகத்தான்! என் ஒவ்வொரு பாகமும் அழுக்காக இருக்கிறது! எனக்குள் பரிசுத்த ஆவியின் சுத்திகரிப்பு தேவை!" என்று நான் ஜெபித்தேன். ஜெபிக்கும்போது இருந்த இந்தப் பாரத்தால் நான் சிலுவையையும் கழுவும் தொட்டியையும் அனுபவித்தேன். சிலுவையிலே நமக்குரிய எல்லாவற்றையும் மரணத்துக்கு ஒப்புக்கொடுத்தோம். கழுவும் தொட்டியிலே நமக்குரிய எல்லாவற்றையும் பரிசுத்த ஆவியின் சுத்திகரிக்கும் வல்லமைக்கு ஒப்புக்கொடுத்தோம். இது நம்மைத் தூய்மையாக்குவது மட்டுமல்ல, சுத்திகரிக்கவும் செய்கிறது. அதன்பின்பு நாம் அவருடைய இரக்கத்தாலும் அவருடைய மீட்பினாலும், அவருடைய சுத்திகரிப்பாலும் சபைக்கு வரும்போது தாழ்மையாக வருவோம். ஒரு சகோதரன் பலிபீடத்தையும், கழுவும் தொட்டியையும் அனுபவித்தபின்பு, அதாவது எல்லாப் பெருமையிலிருந்தும், சுய-நீதியிலிருந்தும் சுத்திகரிக்கப்பட்டபின்பு, தூணை நிறுத்துவதற்கான வெண்கலப் பாதங்களான அடித்தளம் அவனிடம் இருக்கும்.

தூண்கள் எந்த உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன என்று வேதம் கூறவில்லை. ஆனால் தூண்களை ஒன்றாக இணைக்கும் கொக்கிகளும், பூண்களும், தூண்களின் மேற்பரப்பை மூடுகிற குமிழும் வெள்ளியினால் செய்யப்பட்டிருந்தன என்று வேதம் கூறுகிறது. வெள்ளி மீட்பைக் குறிக்கிறது. தேவனுடைய கட்டிடத்திற்காக நாமெல்லாரும் ஒன்றாகச் சேர்க்கப்பட்டிருப்பதும், ஒன்றாக இணைக்கப்பட்டிருப்பதும், மூடப்பட்டிருப்பதும், கர்த்தருடைய மீட்பினாலேயேயன்றி வேறொன்றினாலும் அல்ல என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. சபை வாழ்க்கையை நாம் நடைமுறைப்படுத்தவேண்டுமென்றால், கர்த்தருடைய மீட்பினால்தான் நாம் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறோம் என்று நாம் உணரவேண்டும். மேலும், நாம் தேவனுடைய கட்டித்திற்காக வேறுபிரிக்கப்படுமாறு இந்த மீட்பினால் நாம் மூடப்பட்டிருக்கிறோம்.

திரித்த மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட தொங்குதிரைகளும்கூடத் தூண்களின்மேல் இருக்கின்றன. இது சபை நடத்தையிலும், நடக்கையிலும் மிகவும் தூய்மையாகவும், சுத்தமாகவும் இருக்கிறது என்று மக்களுக்கு சாட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறது. இதுவே வேறுபிரிக்கிற கோடு. சுற்றியுள்ள வேறுபிரிக்கும் கோட்டுக்குள்ளே கூடாரம் கட்டப்பட்டால், ஒருவன் தூரத்திலிருந்தே அதன் எல்லையை வரையறுக்கிற வெள்ளைத் துணியைப் பார்க்கமுடியும். இதுவே இருளில் இருக்கிற உலகத்துக்கு சபையின் சாட்சியாகும். முழு உலகமும் கருப்பாக இருக்கிறது. ஆனால் சபை சுத்தமாகவும்,

தூய்மையாகவும், வெள்ளையாகவும் இருக்கிறது என்று சாட்சிபகர்கிற ஒன்று இங்கே கட்டப்பட்டுள்ளது. இத்தகைய சாட்சி, பீடத்தின் நியாயத்தீர்ப்பிலிருந்தும், தொட்டியின் கழுவுதலிலிருந்தும் மட்டுமே வரமுடியும். இதன் விளைவு உலகத்துக்கு முன்பாகத் தூய்மையான நடக்கையும், கறைபடாத நடத்தையும். இதுதான், வெண்கலப் பாதங்கள்மேல் நிறுவப்பட்டுள்ள ஆதாரத் தூண்களின்மேல் தொங்கிக்கொண்டிருக்கிற திரித்த மெல்லிய பஞ்சுநூல். இதுதான் சபை உலகத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டுள்ளது என்று சாட்சிபகர்கின்ற வேறுபிரிக்கும் கோடு. இந்தக் கோட்டுக்கு வெளியே எல்லாமே கருப்பாக இருக்கிறது. ஆனால் இநத்க் கோட்டுக்குள்ளே எல்லாமே வெள்ளையாக இருக்கிறது.

## ஆசரிப்புக் கூடாரத்தின் பலகைகள்

முந்தைய அனுபவம் நல்லதாக இருந்தபோதும், இது வெறுமனே வெளிப்பிரகாரத்தின ்அனுபவம்தான். வெளிப்பிரகாரத்தில் வெண்கலம், வெள்ளி, வெள்ளைத் துணிபோன்ற அநேக நல்ல காரியங்கள் இருக்கின்றன. ஆனால் அங்கு தெய்வீக சுபாவத்துக்கு முன்னடையாளமான பொன் இல்லவே இல்லை. நாம் வெளிப்பிரகாரத்தில் இருக்கும்போது, வெளியாக்கத்தக்க தெய்வீக சுபாவம் எதுவுமே நமக்குள் இன்னும் உருவாக்கப்படவில்லை என்பதுதான் இதன் பொருள். அங்கு எதிர்மறையான காரியங்கள் மட்டுமே நியாயந்தீர்க்கப்பட்டு, சுத்திக்கப்பட்டிருக்கின்றன. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், முதலில் நம்மிடம் வந்தபோது பெருமையுள்ளவனாய் இருந்த ஒரு சகோதரன் இப்போது மிகவும் தாழமையாக இருக்கிறான்; அவனிடத்தில் எந்தவிதமான சுய-நீதியோ, சுய-மனிமையோ, சுய-பெருமையோ இருப்பதுபோலத் தோன்றவில்லை. இது வெறுமனே மனித நடத்தை என்னும் மண்டலத்தில் உள்ள ஒரு காரியமும், அந்த மனித நடத்தையைச் சுத்தமாக்குவதுமே. வெளியாக்கும்படியாக தேவனுக்குரிய எதுவுமே அவனுக்குள் இன்னும் உருவாக்கப்படவில்லை. எந்தப் பொன்னும் வெளியாக்கப்படவில்லை. இது வெளிப்புறத்தில் நன்றாக இருக்கிறது; ஆனால் இது வெளிப்பிரகாரம் மட்டுமே, கட்டிடம் அல்ல. இது இன்னும் எந்தப் பாதுகாப்பும், எந்த மேல்விரிப்பும், எந்தக் கட்டிடமுமில்லாமல், திறந்த வெளியில்தான் இருக்கிறது. நம் சுபாவத்துடன் கலந்திணைவதற்கு தெய்வீகமான ஏதோவொன்று நமக்குத் தேவை; தெய்வீகம் மனுஷிகத்துடன் கலந்திணைவது நமக்குத் தேவை. ஆகையால் வெளிப்பிரகாரத்திலிருந்து பரிசுத்த ஸ்தலத்திற்கும், பரிசுத்த

ஸ்தலத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும்கூட நாம் முனைந்துசெல்லவேண்டும்.

கர்த்தருடைய இரக்கத்தினாலும், கிருபையினாலும் பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும் நாம் நுழைந்துவிட்டால், அநேகமாக அங்கு எல்லா இடங்களிலும் பொன்னைத்தான் பார்ப்போம் - பொன் மேஜை, பொன் குத்துவிளக்கு, பொன் தூபபீடம், பொன் பெட்டி, பொன் பலகைகள், சுற்று எங்கு பார்த்தாலும் பொன். உள்ளடக்கங்களும் பொன், எல்லாப் பாத்திரங்களும் பொன், இதன் அர்த்தம் என்ன? கர்த்தருக்கு ஸ்தோத்திரம், பலகைகளின் மரணம் (யாத். 26:15) மனுஷிகத்தை, அதாவது மகித சுபாவத்தைக் குறிக்கிறது; பலகைகளை மூடியிருக்கும் பொன் தெய்வீகத்தை, அதாவது தெய்வீக சுபாவத்தைக் குறிக்கிறது. இப்போது தெய்வீகமும் மனுஷிகமும் ஒன்றாகிவிட்டன! ஒரு வகையில் இது மரம், இன்னொரு வகையில் இது பொன். இங்கு பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும், தெய்வீகம் மனுஷிகத்துடன் கலந்திணைந்துவிட்டது. எனவேதான் அவை பரிசுத்த ஸ்தலமென்றும், மகா பரிசுத்த ஸ்தலமென்றும் அழைக்கப்படுகின்றன. ஏனென்றால் பரிசுத்தமான எதுவும் தேவனுக்குரியதாகத்தான் இருக்கவேண்டும். வெளிப்பிரகாரத்தில் நாம் நீதிமான்களாக இருக்கிறோம், ஆனால் பரிசுத்தமாக இல்லை; வெளிப்பிரகாரத்தில் நம் நடத்தை மற்றும் நடக்கையின் ஒவ்வொரு அம்சமும் சரியாக இருக்கிறது; ஏனென்றால் அது சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டு, கழுவும் தொட்டியில் சுத்திகரிக்கப்படுகிறது. அங்கு நீதி இருக்கிறது. ஆனால் பரிசுத்தம் இல்லை. தெய்வீக சுபாவம் மனிதனுக்குள் உருவாக்கப்படுவதுதான் பரிசுத்தம். பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும் நுழைந்தபிறகுதான் எல்லாமுமே பொன்னால் மூடப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். அநேகமாக எல்லாவற்றிலும், எல்லாப் பகுதிகளிலும், மரத்தின் மூலக்கூறு இருக்கிறது. ஆனால் அது பொன்னால் மூடப்பட்டிருக்கிறது. மனுஷிகம் இருக்கிறது; ஆனால் அது தெய்வீக சுபாவத்துடன் கலந்திணைந்துவிட்டது.

நாம் பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும், மகா பரிசுத்த ஸ்தலத்துக்குள்ளும் நுழையவில்லையென்றால், தெய்வீகமான ஏதோ ஒன்று நமக்குள் உருவாக்கப்படவில்லையென்றால், நாம் தேவனுடைய வாசஸ்தலமாகச் சேர்த்துக் கட்டப்படுவதற்கான பலகைகளாக மாறுவது சாத்தியமேயில்லை. தேவன் மனிதனுடன் கலந்திணைவதின்மூலமே சபை கட்டப்படுகிறது. தேவனே நம்முடன் கலந்திணைவதுதான் கிறிஸ்துவின் சரீரமான கட்டிடத்தைக் கட்டுவதற்கான மெய்யான கட்டுமானப்

பொருளாகிறது. நாம் எவ்வளவுதான் சுத்திகரிக்கப்பட்டிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை. நாம் வெறும் வெள்ளைத் துணியாக மட்டுமே இருக்கமுடியும்; ஆசரிப்புக் கூடாரத்தின் கட்டிடத்திற்கான பலகைகளாக இருக்கமுடியாது. ஆனால் எவ்வளவு அதிகமாக நாம் பொன்னால் மூடப்படுகிறோமோ அவ்வளவு அதிகமாக நாம் தேவனுடைய கட்டிடத்திற்கான கட்டுமானப் பொருள்களாகிறோம்; எனவேதான் நாம் ஆவிக்குள் நுழையவேண்டும்; ஆவியை இயக்கவேண்டும்; ஆவிக்கேற்றபடி நடக்கவேண்டும்; எப்போதும் ஆவியில் கர்த்தருடன் கலந்திணைந்திருக்கவேண்டும். இவ்வாறு தெய்வீகம் மனுஷிகத்துடன் கலந்திணைகிற இந்த இணைப்பினால்தான் நாம் தேவனுடைய வீடாகிய கட்டிடத்திற்கான கட்டுமானப் பொருளாகிறோம்.

பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலுமுள்ள பொன்னால் மூடப்பட்ட பலகைகள், வெள்ளிப் பாதங்கள்மேல் பொருத்தப்பட்டுள்ளன. கிறிஸ்துவின் மீட்புதான், தேவனுடைய வீட்டைக் கட்டுவதற்கான அடித்தளமும், அஸ்திபாரமுமாக இருக்கிறது என்பதே இதன் பொருள். ஆனால் பலகைகளுக்கான பொன் எங்கிருந்து வருகிறது? இது பொன் மேஜை, பொன் குத்துவிளக்கு, பொன் தூபபீடம், பொன் பெட்டி ஆகியவைகளை அனுபவிப்பதிலிருந்தே வருகிறது. எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவை நம் ஜீவனாகவும், நம் ஒளியாகவும், நம் உயிர்த்தெழுந்த நறுமணமாகவும் அனுபவிக்கிறோமோ, எவ்வளவு அதிகமாக நாம் கிறிஸ்துவையே மிக ஆழமான முறையில் அனுபவிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக தெய்வீக சுபாவம் நமக்குள் உருவாக்கப்படுகிறது. பலகைகளை மூடியிருக்கும் பொன் பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலுமுள்ள பொருள்களை நாம் அனுபவிக்கும் அனுபவத்திலிருந்தே வருகிறது. நம் மனுஷிகத்துடன் கலந்திணைந்த தெய்வீகம், கிறிஸ்துவை நம் ஜீவனாகவும் நம் ஒளியாகவும், நம் உயிர்த்தெழுதலின் நறுமணமாகவும் அனுபவிக்கிற அனுபவத்திலிருந்தும், கிறிஸ்துவை மிக ஆழமான முறையில் அனுபவிக்கும் அனுபவத்திலிருந்துமே வருகிறது. இதுவே தேவனுடைய கட்டிடத்திற்கான கட்டுமானப் பொருள்களை உருவாக்குகிறது. நாம் கிறிஸ்துவை நம் மன்னாவாக, நம் ஒளியாக, உயிர்த்தெழுதலின் நறுமணமாகத் தினமும் அனுபவிக்கவேண்டும். தெய்வீகம் மனுஷிகத்தோடு கலந்திணைவதை அதிகமாகப் பெற்றுக்கொள்ள நாம் அவரையே மிக ஆழமான முறையில் அனுபவிக்கவேண்டும்.

கூட்டிக் கட்டப்படுவதற்கு குறைந்தது இன்னும் மூன்று காரியங்களைப்பற்றி நாம் மிகத் தெளிவாக இருக்கவேண்டும்.

முதலாவது, ஒவ்வொரு பலகையும் ஒன்றரை முழ அகலமுடையது (யாத். 26:16). நாம் வெறும் ஒன்றரை முழந்தான்; அதற்கு அதிகமில்லை என்று உணர்ந்துகொள்ளவேண்டும். கூடாரத்தில் நாற்பத்தெட்டு பலகைகள் இருக்கின்றன. அவைகள் ஜோடி ஜோடியாக இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஜோடி பலகையும் மூன்று முழ அகலமுடையது. ஒவ்வொரு பலகையும் முழு அளவில் பாதிதான், அதாவது ஒவ்வொரு பலகையும் ஒன்றரை முழ அகலம்தான். இதற்குக் காரணம் அது இன்னொரு பலகையுடன் பொருத்தப்படவேண்டும் என்பதே. நாம் வெறும் பாதி மட்டுமே என்று உணர்ந்துகொள்ளவேண்டும். கர்த்தராகிய இயேசு தம் சீடர்களை அனுப்பியபோது, அவர்களை எப்போதுமே இரண்டிரண்டு பேராகவே அனுப்பினார். பேதுருவுக்கு யோவான் தேவைப்பட்டார்; யோவானுக்கும் பேதுரு தேவைப்பட்டார். நாம் வெறும் பாதி மட்டுமே. எனவே நம்மை முழுமையாக்க நமக்கு இன்னொரு பாதி தேவை. நாம் ஒருபோதும் தன்னிச்சையாகவோ அல்லது தனிப்பட்ட நபராகவோ செயல்படவோ, வேலைசெய்யவோ கூடாது. சபையில் நம் பணிவிடையும், செயல்பாடும் கூட்டுமுறையில்தான் நிறைவேற்றப்படவேண்டும். இரண்டு பலகைகள் ஒன்றாக இணைக்கப்படவேண்டும். நாம் நிறைவான முழுமையானவர்கள் அல்ல. நமக்கு இன்னொரு பாதி தேவை. உங்களுடைய வேறொரு பாதி யார்? நாம் எவருமே மூன்று முழம் இல்லையென்றும், நாம் எல்லாருமே வெறுமனே ஒன்றரை முழம்தான் என்றும் உணர்ந்துகொள்ளவேண்டும். நாம் தனியாகப்போகமுடியாது. நாம் தனிப்பட்ட நபராக பணிவிடைசெய்யமுடியாது, நாம் தன்னிச்சையாகச் செயல்படவோ, வேலைசெய்யவோ முடியாது. தேவனுடைய கட்டிடத்தில் ஒருங்கிணைந்து செயல்படுகிற ஓர் அவயவமாக நாம் இருக்கவேண்டும்.

அன்றியும் ஒவ்வொரு பலகைக்கும் பாதங்களுக்குள் நீட்டிக்கொண்டிருக்கிற கூடுதலான இரண்டு பாகங்களாகிய இரண்டு கழுந்துகள் இருக்கின்றன (யாத். 26:19). ஒவ்வொரு பலகைக்கும் ஒன்றிற்குப் பதிலாக ஏன் இரண்டு கழுந்துகள் இருக்கின்றன? இது தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஒரேவொரு கழுந்து இருக்குமானால், பலகை வேகமாகச் சுற்றிச் சுழல்வதற்கு இடமளிக்கக்கூடும். ஆனால் இரண்டு கழுந்துகள் இருந்தால் அதை அதின் இடத்தில் உறுதியாகச் சிக்கப் பிடித்துக்கொள்ளும். இரண்டு என்றால் உறுதிப்படுத்துதல் என்று பொருள். இது இரண்டு பாதங்களையுடைய ஒரு நபரைப்போன்றது. ஒரு மனிதன் ஒற்றைக் காலில் நிற்கும்போது, அவன் திரும்புவதோ அல்லது வீழ்வதோ எளிது. ஆனால் இரண்டு கால்களில் நிற்கும்போது வீழ்வது

அவ்வளவு எளிதல்ல. மேலும் சுற்றித் திரும்புவது அலங்கோலமாக இருக்கும். "சுற்றிச்சுற்றி சுழன்றுகொண்டேயிருக்கும்" அநேக சகோதரர்களை வைத்துக்கொள்ள நாம் விரும்பவில்லை. ஒருவன் காலையில் ஒரு திசையை நோக்கிக்கொண்டிருக்கிறான்; மத்தியானம் நேர் எதிர்த்திசையை நோக்கிக்கொண்டிருக்கிறான். அடுத்த நாள் காலைக்குள், இன்னொரு திசைக்குத் திரும்பி விடுகிறான். எப்போதும் சுற்றிச்சுற்றித் திரும்பிக்கொண்டே யிருக்கிறான். அவன் எங்கே இருக்கிறான் என்று நமக்குத் தெரியாவிட்டால் அவனை ஒருபோதும் பிடிக்கவே முடியாது. அவன் எப்போதுமே ஒரே ஒரு கழுந்தில் சுற்றிச் சுழன்றுகொண்டே இருக்கிறான்! இப்படி ஊசலாடுகிற சகோதர சகோதரரிகளை வைத்துக்கொண்டு கட்டிடம் கட்டமுடியாது. அவர்கள் அசையாதவர்களாக இருக்கவேண்டும். என்ன நடந்தாலும் சரி அதைப்பற்றிக் கவலைப்படாமல், மரணபரியந்தம் அங்கே நிற்கவேண்டும். ஒரு நபர் தன் ஜீவனைப் பலியாகக் கொடுக்க ஆயத்தமாகவும், விருப்பத்தோடும் இருக்கும்போதுதான், சபையைக் கட்டுவது சாத்தியமாகும். நம்முடன் பொருந்துவதற்கு மற்றவர்கள் தேவை. அவர்களுடைய உறுதிப்படுத்துதல் தொடர்ந்து நமக்குத் தேவை.

இதைத் தவிர எல்லாப் பலகைகளையும் ஒன்றாக இணைத்துச் சேர்க்கிற பொன் தாழபாள்களும், பொன் வளையங்களும் அங்கு இருக்கின்றன. வளையங்கள் பரிசுத்த ஆவிக்கு பிரதிநிதியாய் இருக்கின்றன. நாம் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டபோது (லூக். 15:22; ஆதி. 24:47) நம் கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்பத்திலே, நாம் பரிசுத்த ஆவியை வைளயங்களாகப் பெற்றுக்கொண்டோம். வளையங்கள் தாழப்பாள்களை உறுதியாகப் பிடித்து வைத்துக்கொள்கின்றன. தாழ்ப்பாளும் பரிசுத்த ஆவிக்கே முன்னடையாளம்; ஆனால் மனித சுபாம் கொண்ட பரிசுத்த ஆவியே! ஏனென்றால் பொன் தாழ்ப்பாள்களுக்குள் சீத்திம் மரம் இருக்கிறது. நாம் ஏற்கெனவே பார்த்ததுபோல, கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப்பின்பு, பரிசுத்த ஆவி தெய்வீக சுபாவத்துடனும் மனுஷீக சுபாவத்துடனும் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தார்; இவ்வாறு அவர் இப்போது இயேசுவின் ஆவியாக இருக்கிறார். தெய்வீக மற்றும் மனுஷீக சுபாவங்களைக்கொண்ட இந்த அற்புதமான பரிசுத்த ஆவியே நம்மை ஒன்றாக இணைத்துச் சேர்க்கிறார். அதற்குப்பின் எல்லாப் பலகைகளும் ஒன்றாகிவிடுகின்றன. பலகைகளிலிருந்தும், வளையங்களிலிருந்தும், தாழ்ப்பாள்களிலிருந்தும் எல்லாப் பொன்னையும் எடுத்துவிடுகிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது எல்லாப் பொன்னும் உரிந்துகொள்ளப்பட்ட நிலையில்

எல்லாப் பலகைகளும் பிரிந்து தனித்தனி துண்டுகளாகிவிடும். ஒருமை தரத்தில் இல்லை. பொன்னில்தான் இருக்கிறது. பொன்னை எடுத்துவிட்டால் சேர்க்கும் மூலக்கூறு போய்விடுகிறது. அப்போது பலகைகள் பிரிந்து தனித்தனி துண்டுகளாகிவிடுகின்றன. ஒற்றுமை, ஒருமை, கட்டுமானம் ஆகியவை மரத்தில் இல்லை, மாறாக முற்றிலும் பொன்னில்தான் இருக்கிறது என்று இந்தச் சித்திரத்தின்மூலம் நாம் தெளிவாகப் பார்க்கிறோம். சபையைக் கட்டுவது மனித சுபாவத்தில் இல்லை, மாறாகத் தெய்வீக சுபாவத்தில்தான் இருக்கிறது என்பதே இதன் பொருள். தெய்வீக சுபாவத்தில்தான் நாமெல்லாரும் ஒன்றாகக் கூட்டிக் கட்டப்படுகிறோம். தெய்வீக சுபாவமே நம்மை ஒன்றாகச் சேர்த்து இணைத்து உறுதியாய்ப் பிடிக்கிறது.

முதலாவது நாம் வெறும் பாதிதான் என்பதை நீங்களும் நானும் கற்றுக்கொள்ளவேண்டும். இரண்டாவது, மற்றவர்களுடைய உறுதிப்படுத்துதல் இல்லாமல் நாம் ஒருபோதும் தன்னிச்சையாகவோ, தனிப்பட்ட நபராகவோ செயல்படக்கூடாது. இறுதியாக தெய்வீக சுபாவத்தில்தான் நாம் செயல்பட்டு, வாழந்து, பணிவிடைசெய்யவேண்டும். தெய்வீக சுபாவத்தில்தான் நாம் பலகைகளாக ஒன்றாகச் சேர்த்து இணைக்கப்படுகிறோம். அப்போதுதான், தேவனடைய மாளிகை உண்டாகும். இவையனைத்தும், கிறிஸ்துவை சமுகத்து அப்போமாகவும், குத்துவிளக்காகவும், உயிர்த்தெழுதலின் நறுமணமாகவும், மறைவான மன்னா, மறைவான பிரமாணம் மற்றும் மறைவான கோல் இவைகளைக்கொண்ட பெட்டியாகவும் அனுபவிக்கிற அனுபவத்திலிருந்தே வருகின்றன. இது எவ்வளவு அர்த்தமுள்ளது! கர்த்தர்தாமே இந்தச் சித்திரத்தை நம் மனதில், முழுமையாக, ஆழமாக, முற்றிலும் பதியச்செய்வாராக. தேவனுடைய வாசஸ்தலமாக நாம் ஒன்றாகக் கூட்டிக் கட்டப்படுவதற்கு இதுவே சரியான வழி. சபை ஒரு மாதிரியைப்பற்றிய காரியமல்ல; மாறாக கிறிஸ்துவை நம் ஜீவனாகவும் எல்லாமுமாகவும் நாம் அனுபவிக்கிற மெய்யான அனுபவத்தைப்பற்றிய காரியம். ஆகையால் கிறிஸ்துவை நம் ஆவியில் அனுபவிப்பதே நம்மிடையே சபையைக் கட்டுவதற்கான ஒரே வழியாகும்.

## அத்தியாயம் இருபத்திரண்டு

# தேவனுடைய கட்டிடத்தின் மூடுதிரை

*"மேலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலினாலும், இளநீல நூலினாலும், இரத்தாம்பர நூலினாலும், சிவப்பு நூலினாலும் நெய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் வாசஸ்தலத்தை உண்டுபண்ணுவாயாக; அவைகளில் விசித்திர வேலையாய்க் கேருபீன்களைச் செய்யக்கடவாய்."*

*"வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாகப் போடும்படி ஆட்டுமயிரால் பதினொரு மூடுதிரைகளை உண்டுபண்ணுவாயாக. சிவப்புத்தீர்ந்த ஆட்டுக்கடாத் தோலினால் கூடாத்திற்கு ஒரு மூடியையும், அதின்மேல் தகசுத்தோலால் ஒரு மூடியையும் உண்டுபண்ணுவாயாக" (யாத். 26:1, 7, 14).*

கூடாரத்திற்கு நான்கு அடுக்குகளாலான மூடுதிரைகள் இருக்கின்றன என்று இந்த மேற்கோள்களிலிருந்து நாம் அறிகிறோம். முதல் அடுக்கு, மெல்லிய பஞ்சுநூலினால் செய்யப்பட்ட பத்து மூடுதிரைகளால் ஆனது; இரண்டாவது அடுக்கு, வெள்ளாட்டு உரோமத்தால் செய்யப்பட்ட மூடுதிரைகளால் ஆனது; மூன்றாவது அடுக்கு, செம்மறி ஆட்டுக்கடாத் தோல்களால் செய்யப்பட்ட மூடுதிரை; நான்காவது அடுக்கு, தகசுத் தோலால் செய்யப்பட்ட வெளிப்புற மூடுதிரை. இந்த நான்கு அடுக்கு மூடுதிரைகள் கூடாரத்தின் கூரையாக உள்ளன. கூடாரத்தைப்பற்றியும், அதன் மூடுதிரைகளைப்பற்றியும் மற்றவர்கள் அதிகமாய் எழுதியிருக்கிறார்கள். ஆனால் இந்த மூடுதிரைகளுக்கும், தேவனுடைய கட்டிடத்துக்கும் என்ன தொடர்பு என்பதைச் சுட்டிக்காட்டுவதுதான் என் பாரம்.

## கிறிஸ்துவை ஜீவனாகக்கொண்டு சபை கட்டப்படுதல்

தேவனுடைய கட்டிடம் என்பது வெறுமனே ஒரு மாதிரி அல்ல என்றும், மாறாக அது கிறிஸ்து மனுஷீகத்துக்குள் உருவாக்கப்படக்கூடிய ஒரு காரியம் என்றும் முந்தைய அதிகாரத்தில் நாம் பார்த்தோம். ஒரு மாதிரியைப் பார்த்து அதை அப்படியே பின்பற்றுவதாலோ அல்லது ஓர் அமைப்பை நிறுவுவதாலோ, மனிதனுடைய கரங்களால் சபையைக் கட்டமுடியாது. நிச்சயமாக, ஒரு மனிதனுடைய பிறப்பினாலும், அவன் ஜீவனில் வளர்வதினாலும் படிப்படியாக அவனுடைய அளவும், உருவமும், தோன்றுவதைப்போலவே, பிறப்பினாலும் ஜீவனின் வளர்ச்சியினாலும் ஒரு குறிப்பிட்ட மாதிரி எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே வெளிவரும். ஒரு மனிதனை

அவன் தற்போது என்ன உருவத்தில் இருக்கிறானோ அந்த உருவத்துக்கு உற்பத்திசெய்யவோ அல்லது வடிவமைக்கவோ யாராலும் முடியாது. அதைப்போலவே, சபை என்னும் கட்டிடம் மனிதனுடைய கைவண்ணத்தினாலான மாதிரியுமல்ல, அவனுடைய தொழில் திறமையால் உற்பத்திசெய்யப்பட்ட போலிப்பொருளுமல்ல; மாறாகக் கிறிஸ்து நம் ஜீவனாக எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றித் தானாகவே வளர்வதாகும்.

கூடாரத்தின் ஒவ்வொரு பகுதியும், ஒவ்வோர் அம்சமும் கிறிஸ்துவின் வேலையை அல்லது கிறிஸ்து என்ற நபரைத் திருஷ்டாந்தப்படுத்துகிறது. இது ஒரு மாதிரியைவிட மிக மேலானது. கிறிஸ்து தம் மீட்பின் கிரியையின்மூலம் நமக்குள் எல்லாமாக உருவாக்கப்படவேண்டும் என்பதையே கூடாரம் காண்பிக்கிறது. வெளிப்பிரகாரத்திலுள்ள பலிபீடம் கிறிஸ்துவின் சகலத்தையும் உள்ளடக்கிய சிலுவைமரணத்துக்கு முன்னடையாளமாக இருக்கிறது. இது தேவனுடன் நமக்கு ஒரு சரியான உறவை ஏற்படுத்தியிருக்கிறது. நாம் பாவிகள் என்றும், அவருடைய மரணத்தால் நாம் ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டோம் என்றும் அறிக்கைசெய்யும்போது அவரை நம் ஜீவனாகப் பெற்றுக்கொள்கிறோம். பின்னர் அவர் நமக்குள் உருவாக்கப்படுவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களும், ஏற்றவர்களும் ஆக்குமாறு பரிசுத்த ஆவியின் கழுவிச் சுத்திகரிக்கிற கிரியை உலகத்தின் அழுப்பிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கிறது. கழுவும்தொட்டி இதையே திருஷ்டாந்தப் படுத்துகிறது.

இந்த இரண்டு காரியங்களுக்குப்பிறகு, நாம் இப்போது கட்டிடத்திற்குள்ளே பார்ப்போம். உடனடியாக நாம் எதைப் பார்க்கிறோம்? நமக்குள்ளே உருவாக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவையே எல்லாம் வெளியரங்கமாக்குகின்றன. பரிசுத்த ஸ்தலத்திலும், மகா பரிசுத்த ஸ்தலத்திலும் அநேகமாக எல்லா இடங்களிலும் மரம் பொன்னால் மூடப்பட்டிருக்கிறது. மனிதசுபாவம் தெய்வீக சுபாவத்தினால் மூடப்பட்டிருக்கிறது என்றும், தெய்வீகம் மனுஷீகத்துக்குள்ளும், மனுஷீகத்தின்மேலும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்றும் இது சுட்டிக்காட்டுகிறது. சமுகத்து அப்பமேஜை, குத்துவிளக்கு, தூபபீடம், பெட்டி, வாசஸ்தலத்தின் கட்டமைப்பை உருவாக்கும் பலகைகள், நான்கு அடுக்கு மூடுதிரைகள் ஆகியவைகளெல்லாம் ஒரேவொரு காரியத்தையே வெளிப்படுத்துகின்றன, வலியுறுத்துகின்றன. அது என்னவென்றால் கிறிஸ்துவை ஜீவனாகவும், எல்லாமுமாகவும் நாம் அனுபவிக்குமாறு தேவனின் ஊனுருவான அவர் நமக்குள்ளே உருவாக்கப்பட்டிருக்கிறார்.

கர்த்தர் நம் கண்களைத் திறக்கவேண்டும். இந்தக் காரியங்களெல்லாம் நம் மனதில் ஆழமாகப் பதியவேண்டும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலிருந்து வெறுமனே ஒரு மாதிரியைக் கண்டுபிடித்து, அந்த மாதிரியின்படி மூப்பர்களையும் உதவிக்காரர்களையும் ஏற்படுத்தி, இதுதான் சபை என்று அழைக்கமுடியாது. இது சபையல்ல, இது சபையின் போலி. நாம் யாராவது ஒருவனிடம், "நீ எப்படி வந்தாய்? எப்படி இவ்வளவு உயரமான ஆளாக வளர்ந்தாய்?" என்று கேட்டால், அவன், "நான் என் தாயிடம் பிறந்தேன்; நிறையச் சத்தான ஆகாரத்தைச் சாப்பிட்டேன்; இப்போது இவ்வளவு உயரத்துக்கு வளர்ந்திருக்கிறேன்," என்று கூறுவான். ஒரு பொம்மையை அல்லது ஒரு விளையாட்டுப்பொருளை நம்மால் உற்பத்திசெய்யமுடியும். ஆனால் ஒரு மனிதனை உற்பத்திசெய்வதற்கு வழியே இல்லை. சபை ஒரு நிஜமான மனிதன்; யாருமே ஒரு சபையை உண்டாக்கமுடியாது! இது ஆவியானவரில் புதிதாய்ப் பிறப்பதையும், கிறிஸ்துவுக்குள் ஜீவனில் வளர்வதையும் பொறுத்தது. "சகோதரர்களே, தொடாதீர்கள்! தள்ளி நில்லுங்கள்! நாம் எதையும் உருவாக்கவோ அல்லது ஒழுங்கமைக்கவோ முயற்சிசெய்யக்கூடாது," என்று நாம் மீண்டும் சொல்லியாகவேண்டும்.

கடந்த சில ஆண்டுகளில், அநேக இடங்களில் இப்படி நான் மன்றாடியிருக்கிறேன். ஆனாலும் பெரும்பாலான சகோதரர்கள் நான் என்ன சொல்கிறேன் என்பதை உணரவில்லை. "சரி, நாம் ஒரு சபையை உருவாக்கவேண்டாம், நாம் எதையுமே நிறுவவேண்டாம்; அப்படியென்றால் வேறு என்னதான் செய்யவேண்டும்?" என்று அவர்கள் கேட்கிறார்கள். நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும்; அதாவது, கிறிஸ்துவைப் புசி, கிறிஸ்துவைக் குடி. மேலும் நாம் கிறிஸ்துவால் முற்றிலுமாய் விழுங்கப்பட்டுவிடவேண்டும். நாம் கிறிஸ்துவை எவ்வளவு அதிகமாக விருந்தாக உண்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவரால் விழுங்கப்படுவோம். நாம் மட்டுமே அவரை புசித்துக்கொண்டிருப்பதாகவும், அனுபவித்துமகிழ்ந்துகொண்டிருப்பதாகவும் நினைக்கிறோம். ஆனால் உண்மையில் எவ்வளவு அதிகமாக நாம் அவரைப் புசிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் அவரால் விழுங்கப்பட்டுக்கொண்டிருக்கிறோம். சபையை முறைப்படுத்தவோ, இணைத்து உருவாக்கவோமுடியாது. மாறாக இது ஆவியானவரில் கிறிஸ்துவால் பிறக்கவேண்டும்; அது கிறிஸ்துவின் ஜீவனைக்கொண்டு வளர்ந்தேறிய, கிறிஸ்துவின் ஜீவிக்கும் சரீரமாக இருக்கவேண்டும். அதன் விளைவாக, அது

எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றித் தானாகவே ஒரு குறிப்பிட்ட உருவத்தை அடையும்; அப்போது ஒரு மாதிரியைக் காணலாம். அது கிறிஸ்துவைக்கொண்டு, கிறிஸ்துவால், கிறிஸ்துவில் வளர்கிறது.

வெளிப்பிரகாரத்தில், கிறிஸ்துவினால் செய்துமுடிக்கப்பட்ட கிரியையை நாம் அனுபவிக்கிறோம். இதுதான் நாம் பரிசுத்த ஸ்தலத்துக்குள் நுழைவதற்கான வழிவகை. பரிசுத்த ஸ்தலமும், மகா பரிசுத்த ஸ்தலமும் கிறிஸ்துவின் கிரியையை அனுபவிக்கிற ஒரு விஷயமல்ல; மாறாக அது கிறிஸ்துவையே அனுபவிக்கிற விஷயம். இங்கு கிறஸ்துவையே ஜீவ நிரப்பீட்டிற்கான உணவாகவும், ஜீவ ஒளியாகவும், உயிர்த்தெழுதலின் நறுமணமாகவும், சகலத்தையும் உள்ளடக்கியவராகவும் அனுபவிக்கிறோம். கிறிஸ்து நமக்குள் உருவாக்கப்பட்டுவிட்டால், சபையைக் கட்டுவதற்கான கட்டுமானப்பொருள்கள் இப்போது இருக்கின்றன என்று அர்த்தம். இதன்பின், நம்மை மறுபடியும் ஜெநிப்பித்து, முதிர்ச்சியடையச் செய்கிற பரிசுத்த ஆவியின்மூலம் நாம் சேர்த்திணைக்கப்பட்டு, ஒன்றாய்க் கூட்டிச் கட்டப்படுவோம் (பொன் வளையங்களும், பொன் தாழப்பாள்களும் இதைச் சித்திரிக்கின்றன). இதுவே கிறிஸ்துவின் சரீரம். இதுவே தேவனடைய வாசஸ்தலம். நாம் மீண்டும் சொல்கிறோம்; சபை கட்டப்படுவது வளர்ச்சியைப் பொறுத்த விஷயம். கிறிஸ்து நமக்கு எல்லாமுமாக, நமக்குள் படிப்படியாக உருவாக்கப்படுவதே வளர்ச்சி. இது மட்டுமே சபையைக் கட்டுவதற்கான பொருள்களை உற்பத்திசெய்கிறது. இந்தப் பொருள்களெல்லாம் ஆவியானவரா லேயே கிரியையாகிய மறுஜெநனம் மற்றும் முதிர்ச்சி என்ற வழமுறையின்மூலம் இந்தப் பொருள்களெல்லாம் ஒன்றோடொன்று பொருத்திக் கட்டியமைக்கப்பட்டு முழுமையானதாகச் சேர்த்திணைக்கப்படும். ஒருமைப்பட்டிலுள்ள இந்தக் கட்டிடமே கிறிஸ்துவின் சரீரம், தேவனுடைய வாசஸ்தலம்.

## கிறிஸ்துவை வெளியாக்குமாறு அவரால் மூடப்பட்ட சபை

இந்தக் கட்டம்வரைகூட, வாசஸ்தலத்தை மூடுவதற்கு இன்னும் மேற்கூரை இல்லை என்பதை நாம் உணரவேண்டும். கிறிஸ்துவுக்குள் நாமும், நமக்குள் கறிஸ்துவும், எவ்வளவு அதிகமாக உருவாக்கப்பட்டிருந்தாலும் அதைப்பற்றிக் கவலையில்லை, நாம் வெறும் பலகைகள் மட்டுமே. நாம் யாருமே மூடுதிரையாக முடியாது. நாம்தான் மூடுதிரை என்றால் சபை மனிதனின் வெளியாக்கமாயிவிடும். கிறஸ்து மட்டுமே மூடுதிரையாக இருக்கமுடியும். ஏனென்றால் சபை கிறிஸ்துவின் வெளியாக்கமாக மட்டுமே இருக்கவேண்டும். முன்னடையாள

மாகிய வாசஸ்தலத்தில் நாம் பார்த்ததுபோல, மேற்கூரை நான்கு அடுக்குகளாலானது. ஒவ்வோர் அடுக்கும் கிறிஸ்துவின் ஓர் அம்சமாகும். கிறிஸ்து மட்டுமே மூடுதிரை என்பதையே முழு மேற்கூரையும் வெளிப்படுத்துகிறது. மூடுதிரை வாசஸ்தலத்தை முழுவதும் மூடியிருக்கிறது. இதனால் வாசஸ்தலம் கிறிஸ்துவின் வெளியாக்கமாகிறது. வாசஸ்தலம் மூடுதிரையினால் மூடப்பட்டபின்பு வெளியேயிருந்து மூடுதிரையைத்தவிர வேறொன்றையும் பார்க்கமுடியாது. பலகைகளும் பாத்திரங்களும்கூட மூடுதிரைக்குள்தான் இருக்கின்றன. இந்த மூடுதிரை கூடாரத்திலிருந்த பலகைகளையும், பாத்திரங்களையும் பாதுகாத்ததோடு மட்டுமின்றி கூடாரம் முழுதையும்கூட வெளியாக்கியது. உண்மையில் இந்த வெளியாக்கமே பலகைகளையும், பாத்திரங்களையும் பாதுகாத்தது. நாம் கிறிஸ்துவை நம் வெளியாக்கமாகக் கொண்டிராவிட்டால், நமக்கு அவருடைய பாதுகாப்பு கிடையாது என்பதுதான் இதன் பொருள். கிறிஸ்து சபையைப் பாதுகாக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்த்தால், அவர் நம் வெளியாக்கமாக இருக்கவேண்டும்.

சில இடங்களில் சபை கிறிஸ்துவால் மூடப்பட்டதுபோல் தெரியவில்லை. மாறாக சில வகையான உபதேசத்தால் மூடப்பட்டிருக்கிறது. வேறு சில இடங்களில் சில வகையான வரங்களை வெளியரங்கமாக்கிக் காட்டுவதுதான் மூடுதிரையாக இருக்கிறது. வரங்களே மேற்கூரையாகிவிட்டன. விசுவாசிகளின் குழுக்கள் போதனைகள் என்னும் மூடுதிரையின்கீழ் அல்லது வரங்கள் என்னும் மூடுதிரையின்கீழ இருக்கின்றன. கிறிஸ்துவாகிய மூடுதிரையின்கீழ இல்லை. ஆனால் வரங்களும், போதனைகளும் நம்மை ஒருபோதும் பாதுகாக்கமுடியாது. எந்த வரங்களும், எந்தப் போதனைகளும், எந்த உபதேசங்களும், ஒரு கூட்டம் விசுவாசிகளை மூடிமறைப்பதற்குப் போதுமானவையல்ல. நம்மை மூடிமறைக்கிற மேற்கூரையாக, கிறிஸ்துவை மட்டுமே நாம் மேன்மைப்படுத்தவேண்டும்; கிறிஸ்துவை மட்டுமே உயர்த்தவேண்டும்; கிறிஸ்துவை மட்டுமே வெளியாக்கவேண்டும்.

கூடாரத்தின் அளவுகளை நாம் வாசிப்போமானால், மூடுதிரை மேற்கூரையை மட்டுமின்றி, இரண்டு பக்கங்களையும்கூட மறைக்கிறது என்று நாம் காணலாம். வெளியேயிருந்து மூடுதிரையைத் தவிர வேறு எதையும் பார்க்கமுடியாது. பாதங்கள், பலகைகள், உள்ளிருக்கும் மற்றப் பொருள்கள் ஆகியவைகளைப் பார்க்கமுடியாது. வெளியே இருப்பவர்கள் கிறிஸ்துவை மட்டும் சபையின் மூடுதிரையாகப் பார்க்கவேண்டும் என்பதுதான் இதன் பொருள். மக்கள் வாசஸ்தலத்துக்குள் வரும்போது, கிறிஸ்து மனிதனுடன் கலந்திணைந்திருப்பதைத்தவிர வேறொன்றையும்

பார்ப்பதில்லை. வெளியேயும், கிறிஸ்துவைத்தவிர வேறெதுவும் இல்லை; உள்ளேயும் கிறிஸ்து மனுஷிகத்துக்குள் உருவாக்கப்பட்டு, மனுஷிகத்துடன் கலந்திணைந்திருப்பதைத்தவிர வேறெதுவுமில்லை. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், நான் வெளியேயிருந்து சபையைப் பார்க்கும்போது, கிறிஸ்துவை மட்டுமே பார்க்கிறேன். சபைக்கு உள்ளே வந்து, மக்களைப் பார்க்கும்போதும், எல்லாருடனும் கிறிஸ்து கலந்திணைந்திருப்பதையே பார்க்கிறேன். இதுவே மெய்யான சபை. வெளியேயிருந்து மக்கள் கிறிஸ்துவைத்தவிர வேறெதையும் பார்க்கமுடியாது. உள்ளே யிருந்தும் கிறிஸ்து அநேகருக்குள் உருவாக்கப்பட்டிருப்பதைத்தவிர வேறெதையும் பார்க்கமுடியாது.

இது ஓர் அற்புதமான சித்திரம். ரோமர் நிருபத்தைப்போல பத்து நிருபங்களும், கொரிந்தியர் நிருபத்தைப்போல பன்னிரண்டும், எபேசியர் நிருபத்தைப்போல அறுபது நிருபங்களும் என்னிடத்தில் இருந்தாலும், இந்தச் சித்திரம் இல்லையென்றால், நான் இவ்வளவு தெளிவாகப் பார்க்கமுடியாது. நான் ஒரு சாதாரணச் சிறுபிள்ளை. வண்ணச் சித்திரங்களும், வரைபடங்களும் இன்னும் எனக்குத் தேவைப்படுகின்றன. நாம் பாலர் பள்ளியில் பாடம் சொல்லிக்கொடுக்கும்போது நமக்கு வரைபடங்கள் தேவைப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, அ-ணி-ல் என்று இந்தக் குழந்தைகளுக்கு எழுத்துக்கூட்டிச் சொல்லிக்கொடுத்தால், அது அவர்களுக்கு விளங்காது. ஓர் அணில் படத்தைக் கொண்டுவந்து அவர்களுக்குக் காட்டவேண்டும். அதுபோல கூடாரத்தின் வரைபடத்தை உற்றுநோக்கும்போது, சபையாகிய மெய்யான கட்டிடத்தை நம்மால் புரிந்துகொள்ளமுடியும். இது ஒரு மாதிரியையோ அல்லது நிறுவனத்தையோபற்றிய காரியம் அல்ல, இது மனிதனுடைய கரங்களால் உருவாக்கப்படும் எந்த விதமான அமைப்பும் அல்ல. மாறாக கிறிஸ்துவே அநேகருக்குள் உருவாக்கப்படுகிற ஒரு காரியம். அவர்கள் தங்களை மூடிப் பாதுகாத்துக்கொள்வதற்காக, இப்போது கிறிஸ்துவை மேன்மைப்படுத்துகிறார்கள், கிறிஸ்துவை உயர்த்துகிறார்கள், கிறிஸ்துவையே தங்கள் வெளியாக்கமாகத் தரித்துக்கொள்கிறார்கள்.

நாம் இப்போது நான்கு அடுக்குகளாலான மூடுதிரையைப் பார்ப்போம். உள்ளேயுள்ள முதல் அடுக்கு, மிகச் சிறந்த பொருளாலான மூடுதிரை. இது திரித்த மெல்லிய பஞ்சுநூலால் ஆனது. இதில் சித்திரத் தையல்வேலைப்பாடாகக் கேருபீன்களும், நீலம், கருஞ்சிவப்பு, சிவப்பு ஆகிய அழகான வண்ணநூல்களும் பின்னி இழைக்கப்பட்டிருக்கின்றன. நீலம் பரலோகத்துக்குரிய தையும், கருஞ்சிவப்பு அரசபதவியையும், சிவப்பு மீட்பையும்

குறிக்கின்றன. ஆயினும் மென்மையான நூல்தான் அடிப்படைப் பொருள். இது மென்மையான சிறப்புக் குணநலன்களையும், நடத்தையையும் கொண்ட கிறிஸ்துவின் மனுஷிகத்துக்கு அடையாளம். மென்மையான நூலைப்போல மனித சுபாவமும், மனித நடத்தையும் கொண்ட ஒரு மனிதனின் சரித்திரத்தையே நான்கு சுவிசேஷங்களும் வழங்குகின்றன. இது மிகவும் மென்மையானது; எனினும் மிகுந்த பலம் வாய்ந்தது. இது திரித்த நூலினால் நெய்யப்பட்டிருப்பதால் இருமடங்கு பலமுள்ளதாயிருக்கிறது. கர்த்தராகிய இயேசு மிகவும் மென்மையானவர்; எனினும் அவர் மிகுந்த பலமுள்ளவர். பக்குவமற்ற அல்லது பலவீனமான எதுவும் அவரிடத்தில் இல்லை.

கேருபீன்களின் சித்திரத் தையல் வேலை, தேவனுடைய மகிமை அவருடைய சிருஷ்டிப்பிலே வெளியரங்கமாக்கப்படுகிறது என்பதையே குறிக்கிறது. கேருபீன் தேவனுடைய மகிமைக்கு முன்னடையாளம். மென்மையான நூலால் செய்யப்பட்டக் கேருபீன்களின் சித்திரத்தையல் வேலைப்பாடு, தேவனுடைய மகிமை மனுஷிகத்துக்குள்ளும், அவருடைய சிருஷ்டிப்புக்குள்ளும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிக்கிறது. இயேசு இந்தப் பூமியில் வாழ்ந்தபோது, மென்மையான மனித சுபாவமும், குணநலன்களும் நிறைந்தவராயிருந்தார். இந்த மனிதனில், தேவனுடைய தெய்வீக மகிமை அவருடைய சிருஷ்டிப்புக்குள் உருவாக்கப்பட்டது. அவர் மென்மையான மனித சுபாவமும், மனித நடத்தையும் கொண்ட ஒரு மெய்யான மனிதர். ஆனால் அவர் தேவனுடைய மகிமை அவருடைய சிருஷ்டிப்புக்குள் உருவாக்கப்பட்டதின் ஊனுரு. மனிதனாகிய அவர் தேவனுடைய மகிமையின் பிரகாசம். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், அவர்மேல்தான் சித்திரத்தையல்வேலையான கேருபீன் இருக்கிறது. இப்படிப்பட்ட மொழிநடையை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? அவர் மனிதத்தன்மையுள்ளவர் மட்டுமல்ல; தெய்வத்தன்மையுள்ளவருங்கூட. அவருடைய மனிதசுபாவம் தெய்வீக மகிமையைக் கொண்டிருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றிச் சொல்லவேண்டியதை எல்லாம் சொல்லித் தீர்த்துவிட முடியாது. ஆனால் நாம் தொடர்ந்து செல்லவேண்டிய திருக்கிறது.

இரண்டாவது அடுக்கு, வெள்ளாட்டு உரோமத்தால் ஆனது. வேதத்தின் முன்னடையாளங்களின்படி, வெள்ளாடுகள் பாவ மனிதர்களுக்கு உருவாகங்களாக இருக்கின்றன. மத்தேயு *25:31-46* செம்மறியாடுகளுக்கும் வெள்ளாடுகளுக்குமிடையே உள்ள பிரிவினையையும், வித்தியாசத்தையும்பற்றிப் பேசுகிறது. வெள்ளாடுகள் பாவமக்கள் என்று காட்டப்பட்டிருக்கிறது. இது மிகத்துல்லியமாக *2* கொரிந்தியர் *5:21*-உடன் ஒத்திருக்கிறது;

தேவன் எந்தப் பாவமும் அறியாதவரை நமக்காகப் பாவமாக்கினார். ஆகையால் வெள்ளாட்டு உரோமத்தால் செய்யப்பட்ட மூடுதிரைகளாலான அடுக்கு, நமக்காகப் பாவமாக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முன்னடையாளமாக இருக்கிறது. அவர் மென்மையான பஞ்சுநூலாக இருந்தபோதும், வெள்ளாட்டு உரோமமாக ஆக்கப்பட்டார். அவரிடத்தில் பாவமுமில்லை, அவர் பாவமும் அறியாதவர். ஆனால் அவர் நமக்காகப் பாவமாக்கப் பட்டார்.

வெள்ளாட்டு உரோமத்தினாலான அடுக்குக்குமேலே, சிவப்புச்சாயம் ஏற்றின செம்மறியாட்டுக் கடாத் தோலினாலான அடுக்கு இருக்கிறது. சிவப்பு நிறம், கிறிஸ்து தம் மீட்புப் பணியில் இரத்தம் சிந்தினதைக் குறிக்கிறது. அவரே நம் பாவங்களைச் சுமப்பதற்காக நமக்காகப் பாவமாக்கப்பட்ட பாவமில்லாதவர். இந்தச் சாதாரண வாக்கியம் முதல் மூன்று அடுக்குகளை விளக்குகிறது. முதல் அடுக்கு, அவர் பாவமில்லாதவர் என்பதற்கு முன்னடையாளம். இரண்டாவது அடுக்கு அவர் நமக்காகப் பாவமாக்கப்பட்டார் என்பதற்கும், மூன்றாவது அடுக்கு அவர் நம் பாவங்களைச் சுமந்து நம்மை மீட்கும்பொருட்டுத் தம் இரத்தத்தைச் சிந்தினார் என்பதற்கும் முன்டையாளமாக இருக்கின்றன.

சிவப்புச்சாயம் ஏற்றின செம்மறியாட்டுக் கடாத் தோல்களினாலான மூடுதிரைக்குமேலே நான்காவது அடுக்கு இருக்கிறது. இதுவே மிகப் புறம்பான அடுக்கு. இந்த மூடுதிரை மிகவும் பலமுள்ள தகசுத்தோலால் செய்யப்பட்டுள்ளது; இது எப்படிப்பட்ட தட்பவெப்ப நிலைக்கும், எப்படிப்பட்ட தாக்குதலுக்கும் தாக்குப்பிடிக்கும். மிகப் புறம்பான இந்த மூடுதிரை தோற்றத்தில் அவ்வளவு கவர்ச்சியாக இல்லை; மாறாகச் சற்றுக் கரடுமுரடாகவே இருக்கிறது. இன்று கிறிஸ்து உலகப்பிரகாரமான மக்களுக்குத் தோற்றத்தில் கவர்ச்சியானவராக இல்லை. புறம்பான தோற்றத்தில் அவர் முரட்டுத் தகசுத்தோலைப்போலக் கவர்ச்சியற்றவராக இருக்கிறார். அவர் வெளியே அவ்வளவு இனிய தோற்றம் இல்லாதவராக இருந்தபோதும் உள்ளே அழகானவராகவும், அற்புதமானவராகவும், பரலோகத்திற்குரியவராகவும் இருக்கிறார். அவர் பிரமாண்டமான அழகான கட்டிடங்களைக்கொண்ட இன்றைய கிறிஸ்தவத்தைப் போன்றவரல்லர். அது வெளிப்புறத்தில் போலியான பகட்டாகவும், உட்புறத்திலும் ஆவிக்குரிய காரியத்திலுமோ அருவருப்பாகவும், வெறுமையாகவும், சிலவேளைகளில், சீர்கெட்டும் இருக்கிறது. உலகப்பிரகாரமான கிறிஸ்தவ நிறுவனங்கள் உண்மையாகவே அருவருப்பாக இருக்கின்றன. தேவனுடைய கட்டிடமாகிய நேர்த்தியான சபைக்குள் பரத்துக்குரியதும், அழகானதுமான ஏதோ ஒன்று

இருக்கிறது. எனினும் வெளியே எந்தப் பகட்டும், அழகும் இல்லை; அது எளிமையாகவும், கரடுமுரடாகவும் இருக்கிறது.

நாமெல்லாரும் நம்மை மறைத்துக்கொள்ளவேண்டும் என்று இந்தத் தருணத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். நம் படத்தை ஒருபோதும் செய்தித்தாளில் போடவேகூடாது. இது சபைக்குரியதல்ல. மாறாக முழுக்கமுழுக்க, விழுந்துபோன உலகப்பிரகாரமான கிறிஸ்தவ மதத்திற்குரியது. சகோதரர்களே! முடிந்தால் உங்கள் பெயரைக்கூட செய்தித்தாள்களில் விளம்பரப்படுத்த அனுமதிக்காதீர்கள். கர்த்தராகிய இயேசு தம்மை ஒருபோதும் விளம்பரப்படுத்தவில்லை. அவர் தம்மை மறைத்துக்கொள்ளவும் முடியுமானால் தம்மை மறைவாக வைத்துக்கொள்ளவும், எப்போதும் முயன்றார் என்ற நான்கு சுவிசேஷங்களிலும் நாம் வாசிக்கிறோம். அழகும், இனிய தோற்றமும் நம் ஆவிக்குள்ளிருக்கும் கிறிஸ்துவின் அனுபவமாக இருக்கவேண்டும். இதுவே தேவனுக்கு முன்பாக மெய்யான அழகு.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி கூட்டம் நடக்கும் இடங்கள் எப்படிக் கட்டப்படவேண்டும் என்பதைப்பற்றி மேலும் ஒரு வார்த்தை சொல்ல நான் ஆசைப்படுகிறேன். சகோதரர்களே! முடிந்தால் கூடுமிடம் தோற்றத்தில் மிகவும் சாதாரணமாகவும், எளிமையாகவும் இருக்கவேண்டும். ஆடம்பரமான, பகட்டான, பெரிய அரங்குகளைக் கட்டாதீர்கள். புறம்பான, அழகான கட்டிடங்களால் நாம் மக்களைக் கர்த்தரிடத்திற்கு கவர்ந்திழுக்கமுடியாது. ஒருமுறை நான் ரோமாபுரியில் இருந்தபோது பேதுருவின் கதீட்ரல் என்ற பேர்பெற்ற கத்தீட்ரலைப் பார்த்தேன். அந்தக் கட்டிடம் எத்தனை கோடி ரூபாய் பெறும் என்றோ, அல்லது எவ்வளவு மக்கள் தினமும் அங்கே கவர்ந்திழுக்கப்படுகிறார்களென்றோ என்னால் சொல்லமுடியாது. நான் அங்கே இருந்தபோது பெரிய கும்பல் இருந்தது. ஆனால் அவர்களில் ஆயிரத்தில் ஒருவராவது இரட்சிக்கப்பட்டிருப்பாரா என்பது சந்தேகம்தான். இத்தகைய வழமுறைகளினால் மக்களைக் கவர்ந்திழுப்பதில் என்ன இலாபம்! முடிந்தால் இப்படிப்பட்ட கட்டிடங்களையெல்லாம் நம்மை விட்டு அகற்றிவிடவேண்டும் என்றே நான் சொல்வேன். இந்தப் பகட்டான கட்டிடங்கள் கர்த்தருக்குப் பிரியமாக அல்ல, மாறாக அவரைக் காயப்படுத்துவதற்காக இருக்கின்றன.

ஆயினும் இப்படிப்பட்ட விஷயங்களுக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாக உள்ளே அழகு நிறைந்த, வெளியே மிக எளிமையும் சாந்தமுமான கிறிஸ்துவுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறோம். இத்தகைய கிறிஸ்துதான் நம் சாட்சியின் வெளியாக்கமாகவும், சபையின் மூடுதிரையாகவும்

இருக்கவேண்டும். இது மனிதனுடைய அபிப்பிராயமோ அல்லது எண்ணமோ அல்ல. இதுவே தேவனுடைய வார்த்தை நமக்குக் காட்டுகிற சித்திரம். நாம் வேறெதையும் வெளியாக்குவதற்காகக் காட்சிகாட்டக்கூடாது. இந்த அற்புதமான கிறிஸ்துவைமட்டுமே தேவனுடைய வாசஸ்தலத்தின் மூடுதிரையாக நாம் மேன்மைப்படுத்தி உயர்த்தவேண்டும். உள்ளே தெய்வீக அழகால் நிறைந்த கிறிஸ்து, வெளியே உலகத்தின் பார்வையில் மிக எளிமையும் தாழ்மையுமான கிறிஸ்து. இத்தகைய சபையே எந்தத் தாக்குதலையும் தாங்கி, எந்தச் சோதனையையும் எதிர்த்துத் தாக்குப்பிடிக்கும். எதிரியின் தாக்குதல் வரும்போது கிறிஸ்தவ சபைகள் என்றுற பேர்பெற்ற அழகான கட்டிடங்களில் இருப்பவர்களே முதலாவது விழுபவர்களாக இருப்பார்கள். எந்தவிதமான புறம்பான பகட்டும் இல்லாத, ஆனால் தங்களுக்குள் பரலோக அழகையும், தெய்வீக இலட்சணத்தையும் உடையவர்களே முடிவுபரியந்தம் நிலைத்திருப்பார்கள். கிறிஸ்துவே அவர்களுடைய உள்ளடக்கம், அவர்களுடைய மூடுதிரை. இப்பேர்ப்பட்ட கிறிஸ்துவால் மூடப்பட்ட சபையாகிய மெய்யான கட்டிடத்தை எதுவும் சேதப்படுத்தவோ அல்லது மேற்கொள்ளவோ முடியாது.

இந்தக் காரியங்களை நடைமுறைப்படுத்தவும், அவரை ஆவியில் தேடவும் நாம் கற்றுக்கொள்வோமாக. நம் ஆவியைப் பகுத்துணரவும், அவரையே நமக்கு எல்லாமுமாக அனுபவிக்கவும் நாம் கற்றுக்கொள்வோமாக. அப்போது நாம் கிறிஸ்துவின் பரிரணத்தின் அளவைக் கொண்டிருப்போம்; கிறிஸ்துவால் மூடப்பட்டு, அவரை வெளியாக்குகிற தேவனுடைய கட்டிடமாக பிறருடன் சேர்த்துக் கூட்டிக்கட்டப்படுவதற்கான கட்டுமானப் பொருளாக மாறுவோம். அப்போதுதான் நேர்த்தியான, பலமான சபை உருவாகும். அது தேவனுடைய இறுதி மகிமைக்காக, எந்தத் தாக்குதலையும் எதிர்த்து நிற்கும், எந்த உபத்திரவத்தையும் சகிக்கும், எந்தச் சோதனையையும் மேற்கொள்ளும்.

## அத்தியாயம் இருபத்துமூன்று

## சபை_ மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்

*"தாமதிப்பேனாகில், தேவனுடைய வீட்டிலே நடக்கவேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்; அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கிறது. அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகா மேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்" (1 தீமோ. 3:15-16).*

15-ஆம் வசனத்தில் சபையைப்பற்றி மூன்று அம்சங்கள் கூறப்பட்டுள்ளன: 1) "தேவனுடைய வீடு" 2) "ஜீவனுள்ள தேவனுடைய சபை" 3) "சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமும்." 16-ஆம் வசனம், தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்ற தேவபக்தியின் மகாமேன்மையான பரமஇரகசியத்தைக் கூறுகிறது. இந்த இரண்டு வசனங்களுக்கும் என்ன தொடர்பு? 15-ஆம் வசனத்தின் முடிவில் முற்றுப்புள்ளி வைப்பதற்குப் பதிலாக அரைப்புள்ளி வைப்பது சற்று நலமாக இருக்கும் என்று சிலர் வலியுறுத்துவது சரிதான். "சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமும்: யாவரும் ஒப்புக்கொள்ளுகிற படியே, தேவபக்திக்குரிய இரகசியமானது மகா மேன்மையுள்ளது; தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்..."

### சபை - தேவனுடைய வீடு

சபை மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனோடு ஏன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது? ஏனென்றால் சபையே தேவனுடைய வீடாகும். "தேவனுடைய வீடு" என்ற பதத்தின் பொருள் என்ன? "உங்கள் வீடு" என்று நீங்கள் சொல்லும்போது, நீங்கள் எங்கே வசிக்கிறீர்களோ, எங்கே வாழ்கிறீர்களோ, எங்கே உங்கள் வாழவைக் கழிக்கிறீர்களோ, அந்த இடத்தையே "உங்கள் வீடு" என்று சொல்கிறீர்கள்; தேவனுடைய வீடு என்பதன் அர்த்தமும் அதுவே. இது ஓர் இலேசான அல்லது ஏனோதானோவென்ற வார்த்தையன்று. "தேவனுடைய வீடு" என்றால், தேவன் வசிக்கிற, அவர் வாழ்கிற, அவர் தம் வாழ்வைக் கழிக்கிற இடம்.

இந்த வீடு ஜீவிக்கும் தேவனுடைய சபையேயல்லாமல் வேறொன்றுமல்ல. வெறுமனே "தேவன்" என்ற வார்த்தையல்ல,

மாறாக "ஜீவனுள்ள தேவன்" என்ற வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளதைக் கவனியுங்கள். அவர் மெய்யாகவே ஜீவக்கிறார்; அவர் இப்போது சபையில் வசிக்கிறார், சபையில் அசைகிறார், சபையில் வாழ்கிறார். தம் முழு வாழ்க்கையையும் சபையில் நிறைவேற்றுகிறார். சபை தேவனுடைய வீடு என்று நாம் கூறும்போது, தேவன் இந்த வீட்டிலே வசிக்கிறார், வாழ்கிறார், தம் வாழ்க்கையை நிறைவேற்றுகிறார் என்ற மிக ஆழமான உணர்வு நமக்கு இருக்கவேண்டும். தேவனுடைய வீட்டைப்பற்றிய இப்படிப்பட்ட ஆழமான அறிவு நம்மிடம் இருக்கிறதா?

## சபை - சத்தியத்தின் தூணும், ஆதாரமும்

இந்தச் சபை தேவன் வசிக்கிற, வாழ்கிற, தம் வாழ்வை நிறைவேற்றுகிற தேவனடைய வீடு மட்டுமல்ல; அது சத்தியத்துக்குத் தூணாகவும், ஆதாரவாகவும்கூட இருக்கிறது. சத்தியம் என்றால் என்ன? சத்தியம் என்றால் உபதேசம் என்று எண்ணிவிடாதீர்கள். இந்தப் பகுதியில் வரும் "சத்தியம்" என்ற வார்த்தைக்கு *நிஜம்* என்றுதான் அர்த்தம்; இந்த முழுப் பிரபஞ்சத்திலும், எதுவுமே நிஜமல்ல, எதுவுமே சத்தியமல்ல. எல்லாமே வெளும் நிழல்தான். காணக்கூடியவையெல்லாம், தொடக்கூடியவையெல்லாம், சொந்தமாக்கி அனுபவித்துமகிழக் கூடியவையெல்லாம் நிஜமே அல்ல; அவை அதிகபட்சம் வெறும் நிழல்தான். இந்தப் பிரபஞ்சத்தில் இருப்பது எதுவானாலும், அது வெறும் நிழல்தானேதவிர நிஜமான காரியமல்ல.

நிஜமான காரியம் எது? *கிறிஸ்துவே* எல்லாவற்றின் நிஜம். நீங்கள் சாப்பிடும் உணவு மெய்யான உணவல்ல. அது மெய்யான உணவின் வெறும் நிழல்தான். கிறிஸ்துவே மெய்யான உணவு. உங்களிடம் கிறஸ்து இல்லையென்றால், உங்களிடம் உணவைப்பற்றிய நிஜமும் இல்லை. உங்களிடம் இருக்கும் மனித ஜீவன் நிஜமான ஜீவன் என்று ஒருவேளை நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் அது நிஜமல்ல; அதுவும் வெறும் நிழல்தான். கிறிஸ்துவே மெய்யான ஜீவன். நீங்கள் தேவனுடைய குமாரனை உடையவராக இருந்தால் ஜீவனைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் தேவனுடைய குமாரனைக் கொண்டிராவிடில் உங்களிடத்தில் ஜீவன் இல்லை (1 யோவான் 5:12).

ஒரு சகோதரன் தன் புகைப்படத்தை உங்களுக்கு அனுப்பினால், அந்தப் புகைப்படத்தில் இருக்கும் சகோதரன் யார் என்று உங்களால் சொல்லமுடியும். ஆனால் உண்மையில், அது அந்த சகோதரன் அல்ல. அது வெறும் படம்தான். அதுவும் போலியான படம். சொல்லப்போனால் எல்லாப் படங்களும் பொய்யானவைதாம். ஏனென்றால் நிஜமான காரியங்கள் படங்களிலே காணப்படுவதில்லை. இந்த முழுப் பிரபஞ்சமும்

ஒரு படமேதவிர வேறொன்றுமல்ல. பழைய ஏற்பாட்டிலுள்ள எல்லா முன்னடையாளங்களும், எல்லா உருவகங்களும், எல்லா நிழல்களும் வரப்போகிற நிஜத்தின் படங்களே. இந்த நிஜம் கிறிஸ்துவே. கிறிஸ்துவே சத்தியம், கிறிஸ்துவே முழுப் பிரபஞ்சத்தின் நிஜம், கிறிஸ்துவே பழைய ஏற்பாட்டின் நிஜம், கிறிஸ்துவே புதிய ஏற்பாட்டின் நிஜம். உங்களிடம் கிறிஸ்துவைப்பற்றி வெறும் உபதேசம் மட்டுமே இருந்தால் உங்களிடம் கிறிஸ்துவின் நிஜம் இல்லை. கிறிஸ்துவே சத்தியம்; அவருடைய ஆவி சத்தியத்தின் ஆவி (யோவான் 14:17; 15:26; 16:13; 1 யோவான் 5:7). அவரே நிஜம், அவருடைய ஆவி நிஜத்தின் ஆவி.

இந்த ஜீவிக்கும் தேவன் வசிக்கிற, வாழ்கிற, அசைவாடுகிற சபையே இந்த நிஜம் நிற்பதற்கான தூணும், ஆதாரமுமாக இருக்கிறது. அது நிஜத்தைத் தாங்கி நிற்கிறது. இந்தச் சபைக்குள்ளே ஜீவனுள்ள தேவன் வாசம்பண்ணுகிறார். இந்தச் சபையின்மேல் சத்தியம், அதாவது நிஜம், நிற்கிறது. நாம் உபதேசத்திற்காக நிற்கவில்லை. மாறாக கிறிஸ்துவுக்காக, நிஜத்துக்காக, சத்தியத்துக்காக நிற்கிறோம். "நண்பர்களே! வந்து பாருங்கள், சபைக்கு வாருங்கள், வந்து இப்பிரபஞ்சத்தின் நிஜத்தைப் பாருங்கள், வாழ்வின் நிஜத்தை, அன்பின் நிஜத்தை, பொறுமையின் நிஜத்தை இன்னும் பல காரியங்களின் நிஜத்தை வந்து பாருங்கள்," என்று நம்மால் கூறமுடியவேண்டும்.

1933-ல் ஒரு மதிய வேளையில், நான் சகோதரர் வாட்ச்மேன் நீயைச் சந்தித்தபோது, அவர் திடீரென்று என்னிடம், "சகோதரனே, பொறுமை என்றால் என்ன?" என்று கேட்டார். முதலில் இது ஒரு சிறு பிள்ளைத்தனமான கேள்வி என்று நான் நினைத்தேன். நான் ஒரு சிறு பிள்ளையாக இருந்தபோது பொறுமை என்றால் என்னவென்று கற்பிக்கப்பட்டிருந்தேன். ஆனால் இந்தக் கேள்வி அவருடைய வாயிலிருந்து வந்ததால், இதை நான் இலேசாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, "பொறுமை என்றால் என்ன? இவர் என்ன கேட்கிறார்?" என்று நான் இன்னும் கொஞ்சம் ஆழ்ந்து சிந்திக்கலானேன். பதில் சொல்ல எனக்குத் தைரியமில்லை. அசைந்தாடும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு அவர் முன்னும் பின்னும் அசைந்தாடிக்கொண்டிருந்தார். "மற்றவர்கள் ஒருவனை மோசமாக நடத்தும்போது, அவன் அதைச் சகிப்பதும், தாங்குவதும்தான் பொறுமை," என்று இறுதியாக நான் துணிந்து சொன்னேன். அவர், "இல்லை," என்றார். "சரி, சகோதரரே, பொறுமை என்பது சகிப்புத்தன்மை இல்லையென்றால், அது வேறு என்ன? தயவுசெய்து சொல்லுங்கள்," என்று அவரை வினவினேன். "நல்லது, பொறுமை என்றால் என்ன? பொறுமை என்றால் என்ன?" என்று நாற்காலியில் தொடர்ந்து ஆடியபடி அவர் கேட்டுக் கொண்டேயிருந்தார்.

ஒரு பெரிய இடைவெளிக்குப்பின்பு திடீரென்று, "*கிறிஸ்துவே பொறுமை,*" என்று அவர் பதிலுரைத்தார். அது மிகச் சுருக்கமாகவும், மிகச் சுலபமாகவும் இருந்தது. "கிறிஸ்துவே பொறுமை." இத்தகைய "அந்நிய" பாஷையை என்னால் எளிதில் புரிந்துகொள்ள முடியவில்லை. நான், "சகோதரரே, நீங்கள் கூறுவது எனக்கு விநோதமாகத் தோன்றுகிறது. எனக்குப் புரியவில்லை. நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்? தயவுசெய்து அதை எனக்குச் சொல்லுங்கள்," என்று சொன்னேன். "கிறிஸ்துவே பொறுமை, கிறிஸ்துவே பொறுமை" என்று திரும்பத்திரும்பக் கூறினாரே தவிர வேறொன்றும் அவர் கூறவில்லை. அந்தப் பிற்பகல் முழுவதும் வேறெதைப்பற்றியும் நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. நான் மிகவும் திகைத்துப்போயிருந்தேன்.

மூன்று அல்லது நான்கு மணிநேரத்துக்குப்பின் மிகுந்த ஏமாற்றத்தோடு அவரைவிட்டுச் சென்றேன். என் அறைக்குத் திரும் பியவுடன் முழங்கால்படியிட்டு, "கர்த்தாவே, கிறிஸ்துவே பொறு மை என்பதன் அர்த்தம் என்ன? என்னால் புரிந்துகொள்ளமுடிய வில்லை. 'கிறிஸ்துவே பொறுமை' என்பதன் அர்த்தத்தை எனக்குச் சொல்லும்," என்று ஜெபித்தேன். கிறிஸ்துவே நம் பொறுமையாக இருக்கவேண்டும் என்று இறுதியில் கர்த்தர் எனக்குக் காண்பித்தார். கிறிஸ்து எனக்குள்ளும், என்மூலமாகவும் வாழ்வதுதான் பொறுமை. ஆ! இதை நான் கண்டபோது இது எனக்கு மெய்யாகவே ஒரு வெளிப்பாடாக இருந்தது. நான் மிகுந்த சந்தோஷப்பட்டேன்.

நம் சொந்த முயற்சியினால் பெறக்கூடிய மனிதப் பொறுமை நிஜமான பொறுமையல்ல என்று நாம் உணரவேண்டும். மனிதப் பொறுமை வெறும் வேஷம், நிழல்; கிறிஸ்துவே நிஜமான பொறுமை. நமக்குத் தேவையான அனைத்தையும்- பொறுமை, தாழ்மை, தயவு, பிறர்மேல் அன்பு, தேவன்பேரில் அன்பு-எல்லாவற் றையும் கிறிஸ்துவிலேயே நாம் கண்டடைய வேண்டும். பத்துக் கட்டளைகள்கூட வெறும் நிழல்தான். கிறிஸ்துவே நிஜம். கிறிஸ்து நம்மூலமாக வாழ்கிறவராக நம்மில் இருந்தால், பத்துக் கற்பனைகளின் நிஜமும், நிறைவேறுதலும் நம்மிடம் இருக்கும்.

சபை சத்தியத்தை, அதாவது நிஜத்தை, தாங்கி நிற்கவேண்டும். சபை உலகளாவிய இந்த நிஜமாகிய கிறிஸ்துவுக்குத் தூணும், ஆதாரமுமாயிருக்கவேண்டும். மற்றவர்களிடத்தில், "சபைக்கு வாருங்கள், மெய்யான பொறுமையையும், மெய்யான தாழ்மையையும் பாருங்கள். எங்களிடத்தில் வாருங்கள். நிஜமான உத்தமத்தையும், நேர்மையின் நிஜத்தையும் பாருங்கள்," என்று நம்மால் சொல்லமுடியவேண்டும்.

சபையில் தேவன் வசிக்கிறார், ஏனென்றால் சபையே தேவனுடைய வீடு. *சபையில்தான்* தேவன் வாழ்கிறார், தேவன் அசைவாடுகிறார். தம் வாழ்வை நிறைவேற்றுகிறார்; சாட்சியும்

நிஜமும் சபையின்மேல் நிற்கின்றன. இந்த இரண்டு அம்சங்களையும் நாம் ஆழமாகப் பார்க்கவேண்டும். உள்ளே தேவன் சபையில் வாசமாயிருக்கிறார்; வெளியே சபை சாட்சியையும் நிஜத்தையும் தாங்கிநிற்கிறது. இந்த இரண்டு அம்சங்களும் தேவன் மனிதனுடன் நிஜமாகவே கலந்திணைந்து விட்டதைக் காட்டுகின்றன. சபைக்கு உள்ளே, அதாவது மீட்கப்பட்டு, மறுபடிஜெநிப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்ட மக்களுக்குள்ளே, தேவன் வசிக்கிறார்; இப்படிப்பட்ட மக்கள்மேல்தான் இப்பிரபஞ்சத்தின் நிஜம் இருக்கிறது. இப்பிரபஞ்சத்தின் நிஜமெல்லாம் இந்தக் கூட்டத்தில்தான் மையம்கொண்டிருக்கிறது. ஜீவன் என்றால் என்னவென்று யாராவது ஒருவன் அறிந்துகொள்ள விரும்பினால், அவன் சபைக்கு வந்து பார்க்கவேண்டும். அன்பு என்றால் என்னவென்று ஒருவன் அறிந்துகொள்ள விரும்பினால் அவர்களும் வந்து பார்க்கவேண்டும். தாழ்மையின் நிஜத்தையும், தயவின் நிஜத்தையும் அறியவேண்டு மானால், அதைப் பார்ப்பதற்கான இடமும் சபைதான். இப்படிப் பட்ட மக்கள்கூட்டத்தின்மீதுதான் சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்துவின் நிஜம் காணப்படுகிறது. சபையின் சாட்சி உபதேசத்தில் அல்ல; மாறாக கிறிஸ்துவை நிஜாமகத் தாங்கிநிற்பதில்தான் இருக்கிறது. நாம் கிறிஸ்துவை எவ்வளவுதான் அதிகமாகச் சத்தமிட்டுக் கூறினாலும், உள்ளான நிஜம் நம்மிடத்தில் இல்லையென்றால், கிறிஸ்து நம்மைவிட்டுத் தூரமாகவே போயிருப்பார். வெறுமனே கூக்குரலிடுவதிலும், பேசுவதிலும், போதிப்பதிலும் மட்டும்தான் கிறிஸ்துவை வைத்திருக்கிறோம். நம் உள்ளான ஜீவனிலும் கிறிஸ்து நம்மிடம் இல்லை; நம் அனுதின நடையான புறம்பான வாழ்க்கையிலும் அவரை நாம் அனுபவிக்கவில்லை. சபை கிறிஸ்துவை எல்லா வற்றின் நிஜமாகக் தாங்கிநிற்கிற தூணும், ஆதாரமுமாயிருக்க வேண்டும். ஜீவனின் மெய்யான பொருள் என்னவென்று தெரியா விட்டால், அதைக் கண்டுபிடிக்க நாம் சபைக்கு வரவேண்டும்.

## சபை - மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன்

இதுவே "தேவனுடைய வீடு" என்பதற்கும், "சத்தியத்தின் தூணும், ஆதாரமும்" என்பதற்கும் சரியான பொருள். சபையே "மாம்சத்தில் வெளிப்பட்ட தேவனின்" தொடர்ச்சியும், பெருக்கமும் ஆகும். இந்தக் காரணத்தினால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த இரண்டு வசனங்களையும் ஒன்றாகச் சேர்த்து எழுதியிருக்கிறார். தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார் என்பதற்கும், சபை தேவனடைய வீடாகவும், சத்தியத்துக்குத் தூணும், ஆதாரமுமாகவும் இருக்கிறது என்பதற்கம் அதிகத் தொடர்பு உண்டு. நாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கிறிஸ்துவின்

ஜீவனுள்ள சரீரமாக இருக்கும்போது, நாமே உண்மையில் தேவனுடைய வீடாகவும், நிஜத்துக்குத் தூணும் ஆதாரமுமாகவும் இருக்கிறோம். அப்போது நாம் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டதின் *பெருக்கமாகவும், பெரிதாக்கமாகவும்* இருக்கிறோம். தேவன் தம்மை மறுபடியும் மாம்சத்தில் வெளிப்படுத்துகிறார்; ஆனால் ஒரு *விசாலமான* முறையில் தம்மை வெளிப்படுத்துகிறார். மனிதமாம்சமாகுதல் என்ற கோட்பாடுதான் புதிய ஏற்பாட்டின் கோட்பாடாகும். அது என்னவென்றால் தேவனே மாம்சத்தில் வெளிப்படுகிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் தேவன் மனிதர்களுடன் கலந்திணைந்துவிடுகிறார் - புறம்பான வகையில் அல்ல, உள்ளான வகையில். சபை தேவனின் வெளியரங்கம்; உபதேசம் அல்லது வரங்களின் வெளியரங்கம் அல்ல. சபை உபதேசங்களையோ அல்லது வரங்களையோ வெளிக்காட்டுவதற்குப் பதிலாக கிறிஸ்துவிலுள்ள தேவனை ஆவியானவர்மூலம் வெளியரங்கமாக்கவேண்டும்.

## புறம்பான மாற்றத்தால் கட்டப்படுவதில்லை

நாம் ஏதோவொரு புதிய இயக்கத்தை உருவாக்கப்போகிறோம் என்றோ, அல்லது சபைக்கான ஒரு புதிய மாதிரியை உருவமைக்க மக்களுக்குப் பயிற்சியளிக்கப்போகிறோம் என்றோ, அநேக சகோதர சகோதரிகள் தங்களக்குத் தெரியாமலேயே நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்று நாம் அஞ்சுகிறோம். இது எங்களுக்குப் பாரமாயிருக்கிறது. இதுவே எங்கள் மெய்யான அக்கறை. இப்படிப்பட்ட எண்ணத்தையும், அறிவையும் முழுவதும் கைவிட நாமெல்லாரும் கர்த்தரை நோக்கிப் பார்க்கவேண்டும். இது நம் இரத்தத்திலிருந்து நூறு சதவீதம் வெளியேற்றப் படவேண்டும். ஒரு புதிய இயக்கத்தை உருவாக்கவேண்டும் என்ற நோக்கம் நமக்கு இல்லை, இல்லவே இல்லை. நூறு தடவை சொல்வேன் - இல்லை, நாம் ஒரு புதிய இயக்கத்தை உருவாக்கவோ மென்றால், நமக்குத் தேவனுடைய பொருளாட்சி தெரியவில்லை என்பதையே அது நிரூபிக்கிறது. சபை என்பது ஒரு குறிப்பிட்ட மாதிரியின்படி உருவாக்கப்படக்கூடிய ஒரு காரியமல்ல என்பதை நாம் திரும்பத் திரும்ப அழுத்திக்கூறவேண்டும். ஜீவிக்கும் தேவன் நம்மில் வாசமாயிருப்பது, உபதேசத்தைப்பற்றிய ஒரு காரியம் அல்ல. இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் அனுதின நடக்கையில் உள்ளான ஜீவனின் வழியையும், கிறஸ்துவைத் தங்கள் ஜீவனாகவும் அறியாமலிருக்கிறார்கள். இது மெய்யாகவே எங்களுக்கு வருத்தத்தைத் தருகிறது; பாரமாகவும் இருக்கிறது. மக்கள் ஒரு குறிப்பிட்ட வகையான உணர்வைப் பெற்றுக் கொள்ளும்போது, அல்லது குறிப்பிட்ட சில வழிமுறைகளைக் கற்றுக்கொள்ளும்போது, தாங்கள் பாழும் இடத்தில் புதிான ஒன்றை

ஆரம்பிக்க முயற்சிசெய்கிறார்கள். இது கர்த்தருடைய வழி அல்ல.

நம் இன்றைய தேவை, துணியில் மாற்றம் அல்ல, மாறாக இரத்தத்தில் மாற்றம். இயக்கையான இரத்தம் மாற்றப்படவேண்டும். நாம் புறம்பான வழியை மட்டுமல்ல, உள்ளான ஜீவனையும்கூட மாற்றவேண்டும். முன்பு ஒரு நபர் "ரெவரெண்ட்" பட்டத்துடன் பாஸ்டராக இருந்தார் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒருவேளை அவ்ர கழுத்துப் பட்டை பின்புறமாகத் திருப்பிவிடப்பட்ட பாதிரிமாருக்குரிய அங்கியையும் அணிந்திருக்கலாம். ஒருநாள் இவையெல்லாம் தவறு என்ற வெளிச்சத்தை அவர் பெற்றுக் கொண்டார். "பாஸ்டர்," "ரெவரெண்ட்" என்ற பட்டங்களெல்லாம் தவறு; பின்புறமாகத் திருப்பிவிடப்பட்ட இந்தக் கழுத்துப்பட்டை தவறு; அங்கி அணிதலும் தவறு. எனவே இவையனைத்தையும் விட்டொழித்தார்; அவர் பாதிரியாரின் பட்டதைக் கிறுக்கித்தள்ளி விட்டார். சாதாரணத் துணிகளை அணிய ஆரம்பித்தார். இதன்பின் இந்தப் பட்டமும், இந்த அங்கயிம் இல்லாமல் இன்னொரு இடத்திற்குப்போய் இன்னொரு வகையில் கர்த்தருக்கு ஊழியஞ்செய்தார்.

இது சரியா, தவறா என்று நான் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒரு காரியத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட நபருக்குள் மெய்யான மாற்றம் நடைபெற்றிருக்கிறதா என்று நாம் கண்டுபிடிக்கவேண்டும். அந்த முந்தைய காரியங்களை யெல்லாம் அவர் கைவிட்டுவிட்டார். இதில் சந்தேகமேயில்லை. ஆனால் இந்த மாற்றம் மிகவும் புறம்பானது. முன்பெல்லாம் இந்த நபர் தன்னால்தானே தன் ஜென்மசுபாவ ஜீவனால் ஊழியம்செய்தார். இப்போது அவரிடத்தில் புறம்பான காரியங்களில் ஒரு மாற்றம் இருக்கிறது. ஆனால் அவருடைய உள்ளான ஜீவனில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா? அவர் பட்டத்தைப் பயன்படுத்தியபோது அவரிடம் இருந்த அதே ஜீவனைக்கொண்டு அவர் இன்னும் கர்த்தருக்காக உழைத்துக்கொண்டிருப்பதும், ஊழியம்செய்துகொண்டிருப்பதும் முற்றிலும் சாத்தியமே. புறம்பாக அவரிடத்தில் ஓர் உண்மையான மாற்றம் ஏற்பட்டபோதும், உள்ளாக அவர் இன்னும் மாறாமலேயே இருக்கிறார். இப்படிப்பட்ட மாற்றம் வெறுமனே ஒரு புறம்பான இயக்கமாகத்தான் மாறுகிறது. முன்பெல்லாம் வோட்டுப் போடுவது, செயற்குழுவைக் கூட்டுவது போன்ற காரியங்கள்மூலம் சபையை நடத்தினார். இப்போது அவர் இதை விட்டுவிட்டார். மாறாக மூப்பர்களின் கூட்டத்தைக் கூட்டுகிறார். உண்மையாக, இது ஒரு மாற்றமாக இருந்தபோதும், உள்ளான ஜீவனில் எந்த மாற்றமும் இல்லை. அவருடைய புறம்பான மாற்றம் ஜீவனின் உள்ளான மாற்றத்தின் விளைவு அல்ல. எனவே இது வெறுமனே இன்னொரு புதிய பக்திமார்க்க இயக்கமாகிறது.

மேலும் உள்ளான ஜீவனில் ஏற்படும் மாற்றத்தைத் தொடர்ந்துசென்று, சபையை மெய்யாக்க வேண்டும். *தேவன் மனிதனுடன் கலந்திணைவதே சபை.* ஆத்துமா, ஆவி, இருதயம் ஆகியவைகளைப்பற்றி இவ்வளவு அதிகமாகப் பேசக் காரணம் என்னவென்றால், தேவன் நம் உள்ளடக்கம் என்றும், நாம் அவருடைய கொள்கலங்கள் என்றும் உணர்ந்துகொள்ள இது நமக்கு உதவுகிறது. நம் இருதயத்தைத் திறந்துகொடுத்து தேவனை உளே வரவிடுமாறு நம் இருதயத்தைச் சரிசெய்வது எப்படி என்று நாம் அறியவேண்டும். தேவனோடு தொடர்புகொள்ளவும், அவரை உள்ளடக்கியிருக்கவும், அவரை ஜீரணிக்கவும் நம் ஆவியை எப்படி இயக்கவேண்டும் என்றும் நாம் அறியவேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு விருந்திலே நீங்கள் வறுத்தகறியையோ, மீனையோ சாப்பிடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். இந்த வறுத்தகறி நான்கு மணிநேரம் உங்கள் வயிற்றில் இருந்தால், அது ஜீரணமாகி உங்கள் சரீரத்தோடு சரீரமாக ஆகிவிடுகிறது. இதுதான் சபையின் உண்மையான படம். ஆனால் தற்போதைய கிறிஸ்தவம், ஜீவனின் நிஜமாக இருப்பதைவிட ஒரு மதமாகவே இருக்கிறது. இன்றைய பிரச்சினை புறம்பாகத் தோற்றம் மாறுவதல்ல, மாறாக உள்ளாக ஜீவன் மாறுவது.

## வெறும் போதனைகளால் கட்டப்படுவதில்லை

மேலும் நாம் போதனைகளுக்க மட்டும் கவனத்தைச் செலுத்தக் கூடாது. நமக்கு உதவிசெய்ய ஒரு எளிய உதாரணத்தைப் பயன்படுத்துகிறேன். நான் சிறு பையனாக இருந்தபோது, நானும் வேறுபலரும் ஒரு கிறிஸ்தவப் பள்ளியில் பயின்றோம். கிறிஸ்தவக் கல்வியைப் பெற்றுக்கொண்டோம். வேதத்திலுள்ள கதைகளையெல்லாம் எங்களுக்குக் கற்றுத்தந்தார்கள். நாங்கள் இரட்சிக்கப் படாமலிருந்தாலும், எங்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவத்துக்குள் கொண்டுவரப்பட்டோம். உபதேசங்களையும் கற்றுக்கொண்டோம். சரியான மதம் என்று பலவேளைகளில் மக்களுடன் வாக்குவாதம் பண்ணினோம். மிஷனரிமார்கள் சகல உபதேசங்களையும், போதனைகளையும் எங்களுக்குக் கற்றுத்தந்தார்கள். தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்னும் மூன்று நபர்களாலான ஒரு தேவன் என்று நாங்கள் கற்றுக்கொண்டோம். கிறிஸ்து ஒரு கன்னியிடத்தில் பிறந்து இந்தப் பூமியில் வாழ்ந்தார், நடந்தார், வேலைசெய்தார் என்றும் கற்றுக்கொண்டோம். அவர் உயிரோடு எழுப்பப்பட்டார் என்றுகூட நாங்கள் விசுவாசித்தோம். ஆனால், "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?" என்று நீங்கள் எங்களிடம் கேட்டிருந்தால், அது எங்களுக்குத் தெரியாது. எங்களைப் பொறுத்தவரை, தேவனும் கிறிஸ்துவும் வெறும் வார்த்தைகளே. அந்தக் காலகட்டத்தில் அந்தச் சபையில் இருந்த நூற்றுக்கணக்கான

உறுப்பினர்களில் ஒருவர்கூட இரட்சிப்பைக்குறித்துத் தெளிவாக அறிந்திருக்கமாட்டார் என்று என்னால் சாட்சிசொல்லமுடியும். ஆனாலும் அவர்களைக் கிறிஸ்தவர்கள் என்றுதான் சொன்னார்கள். சிலவேளைகளில் அந்தச் சபையில் இருந்த எல்லா உறுப்பினர்களும் சிலுவைகளை உயரத் தூக்கிப் பிடித்துக்கொண்டும், "கிறிஸ்தவப் போர்வீரர்களே, முன்னேறுங்கள்," என்று பாடிக்கொண்டும் தெருக்களில் ஊர்வலமாகச் சென்றார்கள். வெறும் போதனைகள் எவ்வளவு வெறுமையானவகள் என்பதைத் தெளிவாக விளக்குவதற் காகவே நான் இதைப் பகிர்ந்துகொள்கிறேன்.

முன்குறிக்கப்படுதல், சுயாதீன சித்தம், பரிபூரண கிருபை, நித்தியப் பாதுகாப்பு போன்ற சில குறிப்பிட்ட போதனைகளைப் போதிப்பதையே இன்று சிலர் வலியுறுத்துகிறார்கள். இந்தப் போதனைகளையெல்லாம் நீங்கள் கொடுக்கலாம். ஆனால் மக்களுக்குள் இருக்கும் ஜீவனையும், ஆவியையும் உங்களால் ஒருபோதும் தொடமுடியாது. என் சாட்சியை நான் தொடர்கிறேன். ஒருநாள் என் குடும்பத்திலுள்ள ஒருவர் இரட்சிக்கப்பட்டார். அதன் பின் நான் இரட்சிக்கப்பட்டேன். இறுதியாக நாங்கள் உண்மை யாகவே தேவனைத் தொட்டோம். ஜீவன் எங்களுக்குள், எங்களை ஆழமாகத் தொட்டு ஒரு மெய்யான மாற்றத்தை உண்டாக்கியது. புறம்பான வாழ்க்கையும், புறம்பான நடத்தையும்கூட மாறின. எங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட மெய்யான மாற்றம் மற்றவர்க ளுடைய இரட்பிப்புக்கேதுவாக அவர்களையும் பாதித்தது. போதனைகளைவிட மேலான ஒன்று நமக்கு வேண்டும் என்று அதன்பின் நாங்கள் அறிந்துகொண்டோம். வேதாகமத்திலுள்ள சகல போதனைகளும் கிறிஸ்துவை நமக்குள் கடத்திக் கொண்டுவருகிற வெறும் வாகனமாத்தான் இருக்க வேண்டும். இந்த நோக்கத்தை அவைகள் நிறைவேற்றாவிட்டால் நாம் ஏதோவொன்றில் மிகக்கடுமையாகக் குறைவுபட்டிருக்கிறோம்.

## வெறும் வரங்களால் கட்டப்படுவதில்லை

அதே கோட்பாடு வரங்களைப்பற்றிய விஷயத்துக்கும் பொருந்தும். அநேகக் கிறிஸ்தவர்கள் தங்களிடம் வரங்கள் இருப்பதால், தாங்கள் முழுக்கமுழுக்க ஆவிக்குரியவர்களாக இருப்பதாக நினைக்கிறார்கள். ஆனால் உண்மையில் அது அப்படியல்ல. 1 கொரிந்தியர் நிருபத்தை நீங்கள் வாசித்துப் பார்த்தால், கொரிந்திய விசுவாசிகள் நிலையை நீங்கள் காணலாம். அப்போஸ்தலனைவிட அதிகமாகவே அவர்கள் வரங்களைப் பயன்படுத்தினார்கள் (1 கொரி. 14:18-20). ஆனால் அவர்களிடம் ஜீவனின் மெய்யான வளர்ச்சி இருந்ததா? இல்லை. அவர்கள் மாம்சத்துக்குரியவர்களாகவும், குழந்தைத்தனமுள்ளவர்களாகவும்

இருந்தார்கள் (1 கொரி. 3:1-3). எப்படி போதனைகள் கிறிஸ்துவைப் பிறருக்குக் கொண்டுசெல்கிற கருவிகளாக இருக்கவேண்டுமோ, அப்படியே வரங்களும் கிறிஸ்துவைக் கொண்டுசெல்கிற வெறும் கருவிகளாகவே இருக்கவேண்டும். நமக்கு ஏராளமான போதனைகளையும், வரங்களையும் கொடுப்பதல்ல தேவனுடைய இன்றைய நோக்கம். கிறிஸ்துவையே நமக்குள் பகிர்ந்தளிப்பதும், உட்செலுத்துவதும்தான் இன்று தேவனுடைய நோக்கம்.

இதோ ஓர் உண்மைச் சம்பவம். வேத அறிவுநிறைந்த ஒருவரை நான் சந்தித்தேன். ஆனால் அவர் வேதத்தைப்பற்றிப் பேசும்போதே புகைத்துக்கொண்டிருந்தார். மத்தேயுவின் புத்தகத்தைப்பற்றியும், பத்துக் கன்னிகைகளைப்பற்றியும் அரைமணி நேரம் பேசினபின்பு, அவர் என்னிடம், "என்னை மன்னியுங்கள். நான் கொஞ்சம் புகைபிடிக்கவேண்டும். இது தவறு என்று எனக்குத் தெரியும். ஆனால் நான் பலவீனமானவன்," என்று சொன்னார். பின்னர் அவர் தொடர்ந்து வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தைப்பற்றிப் பேச ஆரம்பித்தார்; பத்துக் கொம்புகளைப்பற்றியும், ஏழு தலைகளைப்பற்றியும், நாற்பத்திரண்டு மாதங்களைப்பற்றியும் பேசினார். போதிக்கக்கூடிய பலம் அவரிடம் இருந்தது. ஆனால் கடைசியில் அவர், "என்னை மன்னியுங்கள். நான் இன்னும் கொஞ்சம் புகைபிடிக்க வேண்டும்," என்று சொல்லவேண்டிய திருந்தது. அவர் வேதத்தைப் போதிப்பதில் மிகப் பலமுள்ளவராக இருந்தபோதும், ஆவிக்குரிய வாழ்க்கையில் மிகவும் பலவீன மாகவே இருந்தார்.

அநேக மக்கள் பாஷைகளில் பேசுவதையும்கூட நான் பார்த்தேன். இந்தக் கண்காட்சிக்குப்பின்பு நான் பார்த்தது என்னவென்றால் அவர்கள் தங்கள் அனுதின வாழ்க்கையில் மிகவும் அஜாக்கிரதையாயிருந்தார்கள். சிலர் அவிசுவாசிகளைவிட அதிகமாக அஜாக்கிரதையாக இருந்தார்கள். வீட்டிலே கோபப்படுவது அவர் களுக்கு மிக எளிதாக இருந்தது. வரங்களையோ, போதனை களையோ நமக்குக் கொடுப்பதல்ல, மாறாக கிறிஸ்துவை, ஜீவக்கிற அவரை, நமக்குக் கொடுப்பதே தேவனுடைய நோக்கம் என்ற ஒரேவொரு காரியத்தைத்தான் இவையனைத்தும் நிரூபிக்கின்றன. போதனைகள் சரியான முறையில் கொடுக்கப்படும்போது, அவைகள் கிறிஸ்துவை நமக்குள் எடுத்துக்கொண்டு வருவதற்கு அவர் அவைகளைப் பயன்படுத்துகிறார். கிறிஸ்துவை நமக்குப் பகிர்ந்தளிப்பதற்கான வழிமுறையாகவும், மக்கள் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ள அவர்களைத் தூண்டவும் சிலவேளைகளில் அவர் சில வரங்களைப் பயன்படுத்துகிறார். ஜீவிக்கும் அவரை, மூவொரு தேவனை நாம் அறிவதும், கிறிஸ்துவை பரிசுத்த ஆவியில் அனுபவிப்பதுமே தேவனுடைய நோக்கம் என்பதை நாமெல்லாரும்

உணரவேண்டும்.

பழைய ஏற்பாட்டில் மனித பாஷையைப் பேசின கழுதையின் கதை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அது உண்மையான அந்நியபாஷை! இன்று பேசப்படும் பாஷைகளெல்லாம் அதைப்போல நம்பத்தக்கவைதானா என்று நான் சந்தேகிக்கிறேன். நான் சமீபத்தில் ஒரு கட்டுரை படித்தேன். அதை எழுதியவர், அந்நிய பாஷைகளில் பேசுகிற நூற்றுக்கும் அதிகமான நபர்களைத் தொடர்புகொண்டதாக அறிவித்திருந்தார். விதிவிலக்கேயில்லாமல் ஒவ்வொருவரும் தான் பேசிய பாஷை உண்மையானதுதானா என்று சந்தேகிப்பதாக அவர் கூறினார். இருந்தபோதும் அந்த ஆசிரியர் மக்கள் இப்படிச் சந்தேகிக்கக் கூடாதென்றும், தங்கள் அனுபவத்தைத் தொடரவேண்டும் என்றும் உற்சாகப்படுத்தி யிருந்தார். அதை வாசித்தபின்பு, “பெந்தெகொஸ்தே நாளில், பேதுரு தாம் பேசிய பாஷை உண்மையானதுதானா என்று சந்தேகப்பட்டாரா? இப்படிப்பட்ட சந்தேகம் அங்கிருந்த யாருக்காவது இருந்ததா?” என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். ஆனால் இன்று ஏன் அநேக மக்கள் தங்கள் பாஷை உண்மையானதுதானா என்று கேள்வி எழுப்புகிறார்கள். பெரும்பாலான பாஷைகள் இன்று உண்மையானவையல்ல என்பதுதான் மிகச் சுலபமான பதில்.

நீங்கள் ஓர் உண்மையான பாஷையைப் பேசிக்கொண்டிருந் தாலும்கூட அது ஜீவனல்ல என்று நான் கூறுவேன். சவுல் இராஜாவும்கூட பரிசுத்த ஆவியின் பொழிவைப் பெற்றுக்கொண்டான் (1 சாமு. 19:22-24). ஆனால் அவன் ஜீவனை அனுபவித்தான் என்று எண்ணாதீர்கள். மாறாக அது அவனைப் பகிரங்கமாக்கியது. பரிசுத்த ஆவியின் பொழிவைப் பெற்றுக்கொண்டபின்பு, அவன் தன்னைத்தானே நிர்வாணமாக்கிக் கொண்டான்! பரிசுத்த ஆவியின் பொழிவு ஜீவனிலிருந்து வித்தியாசமானது என்றே இது விளக்கிக் காட்டுகிறது. பொழிவு ஜீவன் அல்ல. ஆவியானவரிலுள்ள கிறிஸ்து மட்டுமே ஜீவன்.

சகோதர சகோதரிகளே! நான் விமரிசிக்க முயலவில்லையென்று நீங்கள் புரிந்துகொள்ளுமாறு உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். மாறாக என் பாரத்தால் மெய்யாகவே நான் கலக்கமடைந் திருக்கிறேன். கர்த்தருடைய மக்களின் பரிதாபமான நிலையைப் பார்க்கும்போது என்ன சொல்வதென்றோ, என்ன செய்வதென்றோ எனக்குத் தெரியவில்லை. போதனைகளைப் போதிக்கும்போது மக்கள் மிக விரைவாகவும், எளிதாகவும் பதில்கொடுக்கிறார்கள். வரங்களைச் சொன்னாலே போதும், அநேகர் கிளர்ந்தெழுந்து விடுகிறார்கள். ஆனால் உள்ளான ஜீவனையும், உள்வசிக்கும் கிறிஸ்துவையும் பகிர்ந்தளிக்கும்போது ஓர் உள்ளான வெளிப்

பாட்டைப் பெறவேண்டிய தேவை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! உபதேசங்களும், வரங்களும் புறம்பானவை. ஆனால் கிறிஸ்து உள்ளே மறைந்திருக்கிறார். ஆ! உள்வசிக்கும் இவரை - நம்மை மாற்றிக்கொண்டும், சீராக்கிக்கொண்டும், பலப்படுத்திக்கொண்டும், இளைப்பாற்றிக்கொண்டும், எப்போதும் மறுரூபமாக்கிக்கொண்டும், பூர்த்தியாய் நிரப்பிக்கொண்டும் இருக்கிற இவரை, ஜீவிக்கிற இவரை, மிகுந்த பலமுள்ள இவரை - கர்த்தருடைய மக்கள் அறிய வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது!

## பதவியினால் கட்டப்படுவதில்லை

சபையைக் கட்டுவது என்பது பதவியையோ அல்லது பொறுப்பையோ பற்றிய விஷயமல்ல; மாறாக அது உள்ளான ஆள்தத்துவத்தில் உள்ள ஜீவனைப்பற்றிய விஷயம் என்று நாமெல்லாரும் காணவேண்டும். இது யாரோ ஒருவரை ஒரு பதவியில் ஏற்றி வைக்கிற விஷயமல்ல; மாறாக இது உள்ளான ஜீவனின் தேறின வளர்ச்சியாகும். உள்ளான ஆள்தத்துவம் தேவனுடைய உள்ளான கிரியையின்மூலம், அவரால் உருவாக்கப்படவேண்டும். நாம் எவ்வளவாய் மக்களைப் பதவியில் ஏற்றி வைக்கிறோமோ, அவ்வளவாய் நம்மிடம் ஒன்றுமிருக்காது. ஆனால் ஜீவனின் வளர்ச்சியை உணர்ந்துகொள்ள நாம் மக்களுக்கு எவ்வளவு அதிகமாக உதவுகிறோமோ, அவ்வளவு அதிகமாக ஜீவன் பெருகும். உள்ளான ஜீவனின் வளர்ச்சியே சபையைக் கட்டுவதற்கான நிச்சயமான வழி. பின்பு தேறின ஜீவனின்மூலம், பொறுப்புடன் செயல்பட, எந்தவிதப் புறத்தூண்டுதலுமின்றி தானாகவே தகுதியுடையவர்களாகிவிடுவோம்.

நாங்கள் மீண்டும் சொல்கிறோம்; கிறிஸ்துவை நமக்குள் உட்செலுத்தி, அவரையே நமக்குள் எல்லாமுமாக ஆக்குவதே தேவனுடைய நோக்கம். சிலருக்கு உதவ அவர் போதனைகளைப் பயன்படுத்துகிறார்; இன்னும் சிலருக்கு உதவ அவர் வரங்களைப் பயன்படுத்துகிறார். ஆனால் இவையல்ல முக்கியமான காரியம். நமக்குள் வாசம்பண்ணுகிற, ஜீவிக்கிற கிறிஸ்துவாகிய இலக்கைக் காண்பதற்கு உள்ளான வெளிப்பாடு நமக்குத் தேவை. அப்போது நாம் எங்கே ஒன்றாகக் கூடினாலும் சரி, நாமே ஜீவனுள்ள தேவனுடைய ஜீவனுள்ள வீடாக இருப்போம். ஜீவனுள்ள தேவன் நம்மில் வசிக்கிறார், வாழ்கிறார், கிரியைசெய்கிறார். முழுப் பிரபஞ்சத்தின் நிஜமாகிய இயேசுவின் சாட்சியை நாம் தாங்கிநிற்கிறோம். அப்போது ஜீவிக்கும் தேவனின் மெய்யான வெளியரங்கம் மாம்சத்தில் உண்டாயிருக்கும். இதுவே இன்று தேவனுடைய மீட்டுத்திருப்புதலின் வழி. சபையின் நிஜம் நம்மிடம் இருக்குமாறு உள்ளான கிருபையைப் பெற நாம் கர்த்தரை நோக்கிப் பார்ப்போமாக.

## அத்தியாயம் இருபத்துநான்கு

# தேவனுடைய பொருளாட்சியின் குறியைப்பற்றிய தரிசனம்

இந்தப் புத்தகத்தின் ஆரம்பத்திலேயே தேவனுடைய பொருளாட்சியையும், அதன் குறியையும் பார்த்தோம். ஆனால் இந்த அதிகாரங்களையெல்லாம் வாசித்தபிறகும்கூட அந்தக் குறியைத் தவறவிடுவது சாத்தியமே. எளிமையாகச் சொல்வதானால், தம்மையே நமக்குள் உருவாக்குவதுதான் தேவனுடைய பொருளாட்சி. இதைச் செய்துமுடிக்க வேண்டுமென்றால் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று நபர்களில்தான் அவர் இதைச் செய்யவேண்டும். இந்தப் பொருளாட்சிக்கே அதிக நேரத்தை நாம் செலவழித்திருக்கிறோம். திரியேத்துவம் என்ற உபதேசத்தை நமக்குத் தருவதல்ல தேவனுடைய நோக்கம். உபதேசம் பல மாறுபட்ட கருத்துகளில் மட்டுமே நம்மைச் சிக்கவைக்கிறது. ஆனால் தேவன் மூன்று வெவ்வேறு நபர்களில் தம் தெய்வீகப் பொருளாட்சியை எப்படிச் செய்துமுடித்தார் என்றே வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

கிரேக்க மொழியில் "பொருளாட்சி" என்ற வார்த்தை ஆட்சிமுறை, உக்கிரணத்துவம், அரசாங்கம், ஏற்பாடு, பகிர்ந்தளித்தல் என்பதையே குறிக்கிறது என்று நாம் சுட்டிக்காட்டினோம். Dispensation என்ற காலகட்டத்தைக் குறிக்கும் எண்ணத்துடன் பயன்படுத்தப்படவில்லை. மாறாக தேவனை நமக்குள் பகிர்ந்துகொடுக்கும் அர்த்தத்தில்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. நாம் மீண்டும் சொல்கிறோம்: தம்மையே நமக்குள் பகிர்ந்தளிப்பதுதான் தேவனுடைய நோக்கம். இந்தத் திட்டமே அவருடைய சிருஷ்டிப்பின் மையம், மீட்பின் மையம். மனிதன் ஒரு கொள்கலமாக இருக்கவேண்டும்; இந்தக் கொள்கலத்துக்குள் தம்மையே பகிர்ந்தளிக்கவேண்டும் என்ற நோக்கத்திற்காகவே தேவன் மனிதனைச் சிருஷ்டித்தார், மீட்டார். முழுப் பிரபஞ்சத்திலும் - எல்லாக் காலத்திலும், எல்லா இடத்திலும், சொல்லப்போனால் நித்தியத்திலும்கூட - தம்மையே மனுஷிகத்துக்குள் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதுதான் தேவனுடைய பொருளாட்சியின் மையம்.

இறுதியில் தேவனும் மனிதனும் எல்லா நிலைகளிலும், எங்கும் கலந்திணைவதுதான் தேவனுடைய சிருஷ்டிப்பு, மீட்பு,

மறுரூபமாக்குதல் போன்ற எல்லாக் கிரியைகளின் இறுதி முழுநிறைவேற்றமாக இருக்கிறது. வேதாகமத்தின் அறுபத்தாறு புத்தகங்களிலும் கூறப்பட்டுள்ளதைப்போல, தேவனுடைய எல்லாக் கிரியைகளின் இறுதி வெளியாகுதலாகப் புதிய எருசலேம் உருவாகிறது. இந்த வெளியாகுதல், தேவன் மனிதனுடன் எல்லா நிலைகளிலும், எங்கும் கலந்திணைவதைத்தவிர வேறொன்றுமல்ல. தேவன் கூட்டு-சரீரமான ஒரு மக்கள் கூட்டத்துடன் கலந்திணைவதுதான் புதிய எருசலேம். அப்போது அவர்கள் ஜென்மசுபாவத்தாராக இருக்கமாட்டார்கள். மாறாக எல்லாப் பகுதியும், எல்லா அம்சமும் தேவனாலும், தேவனைக்கொண்டும் மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டு, மறுரூபமாக்கப்பட்டு, அவருடைய சாயலுக்கு ஒப்பாக்கப்பட்டிருக்கும். அவர்கள் சுபாவத்தில் தேவனுக்கேற்றபடி மறுரூபமாக்கப்பட்டிருப்பார்கள். தோற்றத்தில் தேவனுடைய சாயலுக்கு ஒப்பாக்கப்பட்டிருப்பார்கள். நாம் சரியான வழியில் தேவனுக்குப் பணிவிடைசெய்ய விரும்பினால் நமக்கு இந்தத் தரிசனம் தேவை. இது ஏதோ புதிய தரிசனம் அல்ல; இதுவே சபை தொடங்கின காலத்திலிருந்த ஆதி தரிசனம். ஆனால் இது இன்று புதிதாக இருந்து, தினம்தினம் நம்மில் புதுப்பிக்கப்படவேண்டும். இதுவே நம் வேலை, வாழ்க்கை, நடவடிக்கை ஆகியவைகளைக் கட்டுப்படுத்தும் தரிசனமாக இருக்கவேண்டும்.

## நான்கு படிகள்மூலமாகச் செய்துமுடிக்கப்பட்ட குறி

இந்தப் பொருளாட்சியின் ஒரு குறி என்ன? முதலாவது, ஊற்றாகிய பிதா குமாரனில் வைக்கப்பட்டிருக்கிறார். பிதா, தம் சகல பரிபூரணத்தோடும், குமாரனில் வெளிப்பட்டிருக்கிறார். குமாரன், பிதாவில் ஊனுருவாகவும், வெளியாக்கமாகவும் இருக்கிறார்; குமாரனைத்தவிர வேறெவரும் பிதாவாகிய தேவனைக் கண்டதில்லை. குமாரனில் தேவன் தாம் திட்டமிட்ட அனைத்தையும் மனிதமாம்சமாகுதல், சிலுவைமரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் என்ற நான்கு முக்கியமான படிகள்மூலம் செய்துமுடித்திருக்கிறார். தேவன் நித்தியத்தில் திட்டமிட்ட எல்லாவற்றையும் இந்த நான்கு படிகளும் நிறைவேற்றியிருக்கின்றன.

மனிதமாம்சமாகுதல்மூலமாக தேவன் மனிதனுக்குள் கொண்டுவரப்பட்டார். தேவன் மனித சுபாவத்துக்குள் கொண்டுவரப்பட்டு, முப்பத்துமூன்றரை ஆண்டுகள் அந்த சுபாவத்தில் இந்தப் பூமியில் வாழ்ந்திருக்கிறார். இந்தப் பூமியில் மனிதனுக்கு என்னென்ன பாடுகள் இருந்தனவோ, அவையனைத்தையும் அவர் அனுபவித்திருக்கிறார். இந்தப் பாடுகளை அனுபவித்தவர் இயேசு என்ற பெயரில் வந்த வெறும் சாதாரண மனிதர் அல்ல. மாறாக

அவருக்குள் இருந்த தேவனே இந்தப் பாடுகளை அனுபவித்தார்.

அடுத்தது சிலுவைமரணம். சாத்தான், வீழ்ந்துபோன மனிதன், பாவம், உலகம், மரணம் போன்ற எதிர்மறையான பன்னிரண்டு காரியங்களும் சிலுவைக்குக் கொண்டுவரப்பட்டு, அங்கு அவை களுக்கு முடிவுகட்டப்பட்டது. எதிர்மறையான காரியங்களனைத்தும் சிலுவையில் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

சிலுவைமரணத்தைத் தொடர்ந்து உயிர்த்தெழுதல். இந்த உயிர்த்தெழுதல் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷிகத்தின் தரத்தை மீட்டுத்திருப்பி, உயர்த்தி, மனித சுபாவத்தைத் தேவனுக்குள் கொண்டுவந்தது. மனிதனாக மாம்சமானதின்மூலம் தெய்வீக சுபாவம் மனிதனுக்குள் கொண்டுவரப்பட்டது; உயிர்த்தெழுதல்மூலம் மனித சுபாவம் தேவனுக்குள் கொண்டுவரப்பட்டது. இப்போது, சிருஷ்டிக்கப்பட்ட மனித சுபாவத்தைவிடக் கூடுதலாக ஒன்றைக் கொண்டிருப்பது மனிதனுக்கு சாத்தியமே. ஏனென்றால் அவனுடைய சுபாவம் மறுபடிஜெநிப்பிக்கப்பட்டு, உயர்த்தப்பட்டு, தேவனுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உயிர்த்தெழுதலுக்குபின்பு, கிறிஸ்து முழுப் பிரபஞ்சத்துக்கும் ஒரு முன்மாதிரியாகக் காட்சியாக்கப் பட்டார். இந்த முன்மாதிரியில் தேவன் மனிதனில் இருக்கிறார்; மனிதன் தேவனில் இருக்கிறான். எதிர்மறையான காரியங்கள னைத்தும் சிலுவையினால் பரிகரிக்கப்பட்டு, சிலுவையில் முடிவுக்குக்கொண்டுவரப்பட்டதால், இந்த முன்மாதிரியில் எதிர்மறையான எதுவுமே இல்லை.

பின்னர் இந்த முன்மாதிரி பரலோகத்துக்கு எழுந்தருளிச் சென்று மகிமையோடும், அதிகாரத்தோடும் சிங்காசனத்தில் அமர்த்தப் பட்டார். மனிதனுடைய மனதால் இந்தச் சித்திரத்தின் பொருளைக் கிரகித்துக்கொள்ளமுடியாது. இந்தத் தருணத்தில் எல்லாமுமே செய்துமுடிக்கப்பட்டுவிட்டன; செய்துமுடிக்கப்படாதது ஒன்றுமேயில்லை. தேவன் மனிதனோடும், மனிதன் தேவனோடும் கலந்திணைந்திருக்கிற இந்த முன்மாதிரி நேரத்திலும், இடத்திலுமுள்ள எல்லாக் காரியங்களுக்கும் மேலாக எழுந்தருளிச் சென்றார். இப்பிரபஞ்சத்திலுள்ள மிக உயர்ந்த இடத்திற்கு அவர் எழுந்தருளிச் சென்று மகிமையோடும், அதிகாரத்தோடும் சிங்காசனத்தில் அமர்த்தப்பட்டார்.

அநேக மூலக்கூறுகளாலான திரவம் பாய்ந்தோடி வருவதைப்போல, இந்த மகிமையடைந்தவரிலிருந்து பரிசுத்த ஆவி பாய்ந்து வந்தார். தெய்வீக சுபாவம், மனித சுபாவம், மனித வாழ்க்கை, மனிதப் பாடுகள், சிலுவைமரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல், சிங்காசனத்திலமர்தல் - இவையே பரிசுத்த ஆவியில் அடங்கியுள்ள மூலக்கூறுகளாகும். நாம் முன்பே பார்த்ததுபோல,

இந்த அற்புதமான வழிந்தோடுதல்தான் சகலத்தையும் உள்ளடக்கிய ஒரேவேளை மருந்தாக இருக்கிறது. இந்த வழிந்தோடுதலாக பரிசுத்த ஆவி நமக்குள் ஊற்றப்பட்டிருக்கிறார். இயேசுவின் பரிசுத்த ஆவி, அதாவது எல்லா மூலக்கூறுகளையும் சேர்த்தடக்கிய ஆவியானவர், உயிர்த்தெழுதந்த நாளில் *ஆதிக்கிறிஸ்தவர்களுக்குள்ளும்*, பெந்தெகொஸ்தே நாளில் *அவர்கள்மேலும்* வந்தார். ஒருபக்கம் அவர் நமக்குள் வருகிறார்; மறுபக்கம் அவர் நம்மேல் வருகிறார். தேவன் தம் மூன்று நபர்களில் தம்மையே நம்முடன் கலந்திணைக்கிறார்.

## மனித ஆவியில் இயங்கிக்கொண்டிருக்கும் குறி

தேவன் தம் மூன்று நபர்களில் நமக்குள் வந்திருக்கிறார். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி. *நம்மேல்* வருகிறார் என்ற உண்மையைவிட தேவன் *ஆவியில் நமக்குள்ளே* வந்திருக்கிறார் என்ற உண்மையைப்பற்றியே புதிய ஏற்பாடு அதிகமாகப் பேசுகிறது. ‘இல்’ என்ற சிறிய வார்த்தை புதிய ஏற்பாட்டில் அநேக இடங்களில் வருகிறது. கிறிஸ்து “என்னில்,” கிறிஸ்து “என்னில் வாழ்கிறார்,” கிறிஸ்து “என்னில் உருவாகிறார்,” கிறிஸ்து “தம் வீட்டை என்னில் அமைக்கிறார்,” “என்னில் நிலைத்திருங்கள், நான் உங்களில் நிலைத்திருப்பேன்” - இப்படிப் பல. உங்களுக்கு நேரமிருந்தால் புதிய ஏற்பாட்டில் இந்தச் சிறிய வார்த்தை எத்தனை தடவை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று எண்ணிப்பாருங்கள். தேவன் மனிதனுக்குள் வரவேண்டும் என்பதற்காகவும், மனிதன் அவருடைய நோக்கத்தை நிறைவேற்றவேண்டும் என்பதற்காகவுமே, தேவன் மனிதனை மூன்று பகுதிகளை உடையவனாக உண்டாக்கினார். நாம் முன்பே பார்த்ததுபோல மனிதன் கூடாரத்திலுள்ள வெளிப்பிரகாரம், பரிசுத்த ஸ்தலம், மகா பரிசுத்த ஸ்தலம் என்ற மூன்று பகுதிகளுடன் ஒத்திக்கிற சரீரம், ஆத்தமா, ஆவி என்ற மூன்று பகுதிகளையுடைய ஒரு முப்பகுதி மனிதன். மிக உள்ளான பகுதி மட்டுமே தேவனுடைய ஷெக்கினா மகிமை வாசமாயிருக்கிற இடம். அதுவே கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான உடன்படிக்கைப் பெட்டி இருக்கிற இடம். தேவனும், கிறிஸ்துவும் நம் ஆவியில் வாசம்பண்ண வந்திருக்கிறார் என்பதையே இது தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. நம் ஆவியே மகா பரிசுத்த ஸ்தலமாகிய உள்ளான பகுதி.

வேதவாக்கியங்களிலிருந்து இதை நாம் மிகத் தெளிவாகக் கண்டுகொள்ளலாம். குறிப்பாக 2 தீமோத்தேயு 4:22-ல்: கர்த்தர் உன் ஆவியுடனேகூட இருப்பாராக. எபேசியர் 4:6-லும்கூட, பிதாவாகிய நம்மில் இருக்கிறார்; 2 கொரிந்தியர் 13:5-ல், குமாரனாகிய தேவன் நம்மில் இருக்கிறார்; ரோமர் 8:11-ல்,

ஆவியாகிய தேவன் நம்மில் இருக்கிறார். பிதா, குமாரன், ஆவியென்ற நபர்களில் மூவொரு தேவன் இப்போது நம் ஆவியில் இருக்கிறார். தேவனுடைய பாருளாட்சயின் குறி இதுவே: நம் ஜீவனாகவும், எல்லாமுமாகவும் இருப்பதற்கு மூவொரு தேவன் நம் ஆவியில் இருப்பதே அந்தக் குறி. ஓ! கடந்த நூற்றாண்டுகளில், தேவனுடைய பொருளாட்சியை அவருடைய பிள்ளைகள் எவ்வளவாய்ப் புறக்கணித்திருக்கிறார்கள்! தேவன் நம் ஆவியில் இருக்கிறார் என்ற குறியை நாம் மீட்டுத்திருப்பவேண்டும்.

தேவன் நம் ஆவியைத் தம் மையமாகக்கொண்டு தம்மையே நமக்குள் உருவாக்கி நம்மூலமாக வெளிக்கொண்டுவருகிறார். மூவொரு தேவன் நம் ஆள்தத்துவத்தின் மையத்தில் இருக்கிறார். இது மிக அற்புதமானது! தேவன் மனிதன் சுபாவத்துக்குள் வந்தார்; மனித சுபாவத்தைத் தெய்வீக சுபாவத்துக்குள் கொண்டுவந்தார்; எதிர்மறையான காரியங்களுக்கெல்லாம் முடிவுகட்டினார்; இப்போது மூவொரு தேவனும், அவர் செய்முடித்தவைகளும், நம் ஜீவனாகவும், எல்லாமுமாகவும் நம் ஆவியில் இருக்கின்றன. மூவொரு தேவன் தம்மைக்கொண்டு நம் ஆள்தத்துவத்தின் உள்ளான பகுதிகளைப் பூர்த்தியாய் நிரப்புமாறு, இந்த மையப்புள்ளியிலிருந்து வெளியே பரவுகிறார். மனித ஆவியே தேவனுடைய பொருளாட்சியின் குறியின் மையப்புள்ளி. இந்தப் புள்ளியை நாம் தவறவிடுவோமானால் நாம் தேவனுடைய பொருளாட்சியின் குறியையே தவறவிட்டுவிடுகிறோம். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் *இலக்கு* என்று நான் சொல்ல வில்லை. மாறாகக் *குறி*. இந்தக் குறியை இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறக்கணித்துவிட்டார்கள். நாம் வேதத்துக்கடுத்த அநேகக் காரியங்களைப்பற்றிப் பேசிவிட்டு, இந்தப் புள்ளியை எட்டாமல் போகமுடியும்! உண்மையில் வேதாகமத்தின் அறுபத் தாறு புத்தகங்களிலுள்ள போதனைகளனைத்தும் இந்தக் குறிக்காகவே என்று நாம் உணரவேண்டும். வித்தியாசமான எல்லா வரங்களும், வித்தியாசமான எல்லா செயல்பாடுகளும் இந்தக் குறிக்காகவே. அவையனைத்தும் இந்தக் குறியின் மேலேயே மையம் கொண்டிருக்கவேண்டும்.

நம் ஆவியில் வாசம்பண்ணுகிற மூவொரு தேவனை நாம் எப்படி உணரலாம்? நம் ஆவியில் வாசம்பண்ணுகிற இந்த ஆவியானவரை நாம் எப்படி அனுபவிக்கலாம்? மூவொரு தேவன் எப்போதுமே *நமக்குள்ளே* கிரியைசெய்துகொண்டிருக்கிறார் என்று நாம் உணரவேண்டும் (பிலி. 2:13). அவர் நமக்கு வெளியே அல்ல, நமக்கு உள்ளேயே கிரியைசெய்துகொண்டிருக்கிறார்; அவர் வெளியே கிரியைசெய்வதைப்பார்க்கிலும், *நமக்குள்ளே* அதிகமாகக் கிரியைசெய்துகொண்டிருக்கிறார். கிரியைசெய்தல் என்பதற்குப்

பயன்படுத்தப்படும் கிரேக்க வார்த்தை சக்தியூட்டுதல் என்ற தமிழ் வார்த்தைக்குச் சமமாகும். நம்முள் வாசமாயிருக்கிற தேவன் எல்லா நேரமும் உள்ளே சக்தியூட்டிக்கொண்டிருக்கிறார். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மூவொரு தேதன் இன்று நம் ஜீவனாக நமக்குள் இருக்கிறார். இந்த ஜீவனில் உள்ளான பிரமாணமும் இருக்கிறது; ஜீவனுள்ள பிரமாணம் எழுத்துக்களாலான பிரமாணமல்ல, மாறாக ஜீவப்பிரமாணம். இந்தத் தெய்வீக ஜீவப்பிரமாணம் உள்ளிருந்து எப்போதும் நம்மை *ஒழுங்குபடுத்திக்கொண்டிருக்கிறது* (எபி. 8:10). உள்ளுறையும் மூவொரு தேவன் உள்ளே நம்மை ஒழுங்குபடுத்துவதுமின்றி, எல்லா நேரமும் நமக்குள்ளே நம்மை *அபிஷேகித்துக்கொண்டும்* இருக்கிறார் (1 யோவான் 2:27).

இந்த நான்கு வார்த்தைகளை நாம் மேலும் ஆழ்ந்து பார்ப்போம்: கிரியைசெய்தல், வாழ்தல், ஒழுங்குபடுத்துதல், அபிஷேகித்தல். இந்த நான்கு காரியங்களைப்பற்றிய உள்ளான வெளிப்பாடும், அனுபவக்ளும் சபைக்கு எவ்வளவாய்த் தேவைப்படுகின்றன! இவைகளை நாம் வெறும் போதனைகளாகக் கருதக்கூடாது. மாறாக மூவொரு தேவன் ஒவ்வொரு நாளும் நம்மில் கிரியைசெய்வதை, நம்மில் வாழ்வதை, நம்மை ஒழுங்குபடுத்துவதை, நம்மை அபிஷேகிப்பதை நாம் அனுபவிக்கவேண்டும். நம் நினைவுகளில், நம் எண்ணங்களில், நம் வார்த்தைகளில், நம் நடத்தைகளில், மற்றவர்களோடு நம் உறவுகளில் இந்த அற்புதமான மூவொரு தேவன் நம்மைத் தொடர்ச்சியாய் ஒழுங்குசெய்ய அவரை நாம் அனுமதிக்கவேண்டும். நாம் சாப்பிடுவதையும், உடுத்துவதையும் அவர் ஒழுங்குபடுத்தவேண்டும். இந்த அளவுக்கு இப்படிப்பட்ட நடைமுறையில் நாம் அவரை அனுபவிக்கவேண்டும். இதை வெறும் உபதேசமாக தரக்குறைவாக்கக்கூடாது; உபதேசம் வேலைசெய்யாது; இதை நடைமுறையில் பயிற்சிசெய்யும்போது, இது புரட்சியை உண்டாக்கும். இப்பேர்ப்பட்ட அற்புதமான கிறிஸ்து நம்மில் கிரியைசெய்வதற்கும், வாழ்வதற்கும், நம்மை ஒழுங்குசெய்வதற்கும், அபிஷேகிப்பதற்கும் நம் ஆவியில் வாசம்பண்ணுகிறார் என்று நாம் உணரவேண்டும்.

## குறி, சபையைக் கட்டுதல்

இப்படி நடைமுறையில் நாம் அவரை அனுபவிக்கவில்லையென்றால், சபையைக் கட்டுவது என்பது நிச்சயமாகச் சாத்தியமே இல்லை. இது ஏவாளின் முன்னடையாளத்தில் விவரமாக விளக்கப்பட்டிருக்கிறது. ஏவாள் *ஆதாமிலிருந்து வெளியே* கொண்டுவரப்பட்டாள் (ஆதி. 2:21-24; எபே. 5:30-32). ஏவாள் ஆதாமின் ஒரு பகதி, ஆதாமிலிருந்து

வெளியே வந்தவள். ஆதாமிலிருந்து வெளியே வந்ததுதான் ஆதாமின் மனைவியாக இருக்கமுடியும். ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு அம்சமும் ஆதாமுக்குரியதாகவே இருந்தது. கிறிஸ்துவிடமிருந்து வெளியே வரக்கூடியதை வைத்துத்தான் சபை கட்டப்படமுடியும் என்பதையே இது உறுதிசெய்கிறது. உபதேசங்களும், வரங்களும் சபையைக்கட்டாது. பரிசுத்தவான்களிலுள்ள கிறிஸ்து மட்டுமே கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதற்கான கட்டுமானப்பொருள். நடைமுறையில் கிறிஸ்துவால் பிழைக்கிற அனுபவங்கள் நம்மிடத்தில் குறைவுபடுமேயானால், நாம் ஒரு வகையான பக்திமார்க்க சபையாகத்தான் இருப்போம்.

மேலும் கிறிஸ்துவை நம் ஜீவனாகமட்டும் அல்ல, ஜீவ அப்பமாகவும், நம் போஜனமாகவும் நாம் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அவரே நமக்குள் இருக்கும் உணவு-நிரப்பீடு. தினம்தினம் நாம் கிறிஸ்துவைப் புசித்து, அவரால் போஷிக்கப்பட வேண்டும். இது நமக்கு வெறும் போதனையாக மட்டும் இருக்காமல், நாள்தோறும், கணம்தோறும் நம் அனுபவமாகவும் இருக்கவேண்டும். யோவான் 6:57-ல் அவரைப் புசிக்கிறவன் அவரால் பிழைப்பான் என்று கர்த்தர் சொல்கிறார். நாம் கிறிஸ்துவால் பிழைக்க விரும்புவோமானால், நாம் அவரைப் புசிக்கவேண்டும்; அப்போது அவர் நமக்கு மிக நிஜமாகனவராக இருப்பார். அநேகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைத் தினமும் புசிப்பதில்லை என்பது வருந்தத்தக்கது.

இதை இப்படி விளக்கிச்சொல்லலாம். நீ பிறந்தபோது, ஒருவேளை ஆறிலிருந்து எட்டு பவுண்டு எடை இருந்திருக்கலாம். ஆனால் இப்போது 100 பவுண்டுக்கும் மேலாக இருக்கிறாய். உன் சரீரம் வளர்ந்திருக்கிறது, அது கட்டப்பட்டிருக்கிறது, ஆனால் அது எதனால் கட்டப்பட்டிருக்கிறது என்று தயவுசெய்து எனக்குச் சொல். உணவு விடுதிக்குச் சென்று, உணவு வகைப் பட்டியலை வெறுமனே உற்றுநோக்குவதாலா? நிச்சயமாக இல்லை. நீ சாப்பிட்ட பொருள்களாலேயே உன் சரீரம் கட்டப்பட்டது. எவ்வளவு முட்டைகள், கோழிகள், உருளைக்கிழங்குகள், ஆப்பிள்கள், வாழைப்பழங்கள்! அப்படியானால் கிறிஸ்துவின் சரீரம் எப்படிக் கட்டப்படமுடியும்? வெறும் போதனையினால் அல்ல. ஏனென்றால், எப்படிச் சாப்பிடுவது என்று நீ எவ்வளவு அதிகமாகக் கற்றுக்கொள்கிறாயோ, அவ்வளவு அதிகமாக நீ தேய்ந்துபோவாய். உண்மையில் சாப்பிடும் கலையை மட்டுமே நீ கற்றுக்கொள்வாயானால், சீக்கிரமாக உனக்கு அடக்க ஆராதனை நடத்தவேண்டியிருக்கும். நீ அநேகக் காரியங்களைக் கற்றுக்கொள்ளலாம். நீ ஒருவேளை உணவுமுறை வல்லுநராககூட இருக்கலாம். ஆனாலும் நீ சீக்கிரம் செத்துப்போவாய்! அப்படியே,

நீ நம்மையான, வேதாகம, ஆவிக்குரிய போதனைகளை அறிந்திருந்தாலும்கூட, உணவுப் பற்றாக்குறையினால் பட்டினிகிடக்கக்கூடும். இளம் விசுவாசிகளைப் பராமரிக்க இன்று சபைகளில் தாய்மார்கள் தேவைப்படுகிறார்கள். அவர்களுக்குப் போதனைகளைக் கொடுக்க அல்ல. மாறாகப் புசிக்கவும், குடிக்கவும் கிறிஸ்துவுக்குரியதைக் கொடுப்பதற்கு.

இந்நாட்களில் எவை எனக்கு மனவேதனையைக் கொடுக்கின்றன என்று நீங்கள் என்னைக் கேட்டால், இரண்டே இரண்டு காரியங்களைத்தான் சொல்வேன்: ஒன்று, அன்பான அநேக சகோதர சகோதரிகள் கிறிஸ்தவத்தின் எதிர்மறையான காரிங்களையும், சபையைப்பற்றிக் கர்த்தருடைய வழிகளையும் உண்மையாகவே கண்டிருக்கிறார்கள். எனினும் புறம்பான முறைகளால் மட்டுமே அவர்கள் சபை வாழ்க்கையை நடைமுறையில் வாழ்வார்களோ என்று நான் பயப்படுகிறேன். “முன்பெல்லாம் நான் சபையை ஒரு குறிப்பிட்ட முறையில் மேய்த்தேன். ஆனால் இப்போது அது தவறென்று நான் காண்கிறேன். எனவே நான் அந்த முறையைக் கைவிட்டுவிட்டு, இன்னொரு முறையைப் பயன்படுத்துவேன்,” என்று நீங்கள் சொல்கிறீர்கள். இது இன்னும் வெறும் சமயச் சடங்காச்சாரமே தவிர, கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டுவதல்ல. கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்பும் காரியம் உள்ளிருந்து வரக்கூடிய ஒரு காரியம். கிறிஸ்துவைக்கொண்டு போஷிக்கப்படும்படி நீங்கள் கிறிஸ்துவை உட்கொள்ளவேண்டும், கிறிஸ்துவைப் புசிக்கவேண்டும். கிறிஸ்துவைக் குடிக்கவேண்டும். நீங்கள் கிறிஸ்துவால் நிரம்பியிருக்கும்போது, அவருக்குரிய ஏதோவொன்றைப் பிறருக்கும் உணவாகக் கொடுப்பீர்கள். அப்போது கிறிஸ்துவின் சரீரம் கட்டப்படும்.

இது ஒரு முறையைப்பற்றிய விஷயமல்ல. புதிய ஏற்பாடு முழுவதையும் நீங்கள் வாசித்தாலும் ஒரு முறையைக்கூட உங்களால் கண்டுபிடிக்கமுடியாது. என்னிடத்தில் ஏதாவது முறை இருக்குமானால் அது இதுதான்: முதலாவது நீங்கள் சிலுவையில் வைக்கப்படவேண்டும்; இரண்டாவது தினம்தினம் ஆவியில் கிறிஸ்துவை நீங்கள் உட்கொள்ளவேண்டும்; மூன்றாவது நீங்கள் கிறிஸ்துவால் போஷிக்கப்பட்டு, அவரால் நிறைந்திருக்கும்போது, பிறருக்கும் கிறிஸ்துவைக் கொடுத்து போஷிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. அப்போது சபை உருவாகும். சிலுவைக்குச் செல்வதும், கிறிஸ்துவை உண்பதும், கிறிஸ்துவைக்கொண்டுப் பிறரைப் போஷிப்பதுமே ஒரே வழி.

எனக்கு மனவேதனையைக் கொடுக்கிற இன்னொரு காரியம்: கிறிஸ்து நம் ஜீவன் என்று நாம் அதிகமாக பேசிக்கொண்டிருந்

தாலும், இதை வெறும் செய்தியாகவும், சொற்றொடராகவும், தலைப்பாகவும் மட்டுமே நாம் அறிந்திருக்கிறோமோ என்று நான் பயப்படுகிறேன். நாள்தோறும், மணிதோறும் அனுபவிக்கிற அனுபவங்கள் நம்மிடத்தில் இல்லை. நாம் அவரால் தொடர்ந்து ஒழுங்குசெய்யப்படவும், அபிஷேகிக்கப்படவும் வேண்டும். நாள்தோறும், மணிதோறும் நாம் அவரை உண்டு, களித்து, அவருடன் மிக நெருக்கமான ஐக்கியம்கொண்டிருக்கவேண்டும். நாம் நம்மை மறந்துவிட்டு, எல்லாநேரமும் அவரைத் தொடர்புகொண்டு, அவரை அனுபவித்துமகிழ்ந்து, அவரால் ஒழுங்குபடுத்தப்பட்டு, அவரால் அபிஷேகிக்கப்படவேண்டும். இதுவே உள்ளான ஜீவன், உள்வசிக்கும் கிறிஸ்துவின் உள்ளான அனுபவம். ஆண்ட்ரூ முர்ரே என்பவரால் எழுதப்பட்ட *கிறிஸ்துவின் ஆவி* என்ற புத்தகத்தை நான் உங்களுக்குப் பரிந்துரைக்க விரும்புகிறேன். அறிவைப் பெறுவதற்கல்ல, உள்வசிக்கும் கிறஸ்துவை உங்கள் அனுதின வாழ்க்கையில் அனுபவிப்பதற்கு அது பேருதவியாக இருக்கும். கிறிஸ்துவை உங்கள் அனுதின உணவாக நீங்கள் கொள்ளும்போது நீங்கள், "நான் தினம்தினம் கிறிஸ்துவை சுவைக்கிறேன். ஒவ்வொரு மணிநேரமும், நான் அவருடன் இப்படிப்பட் நெருக்கமான, ஜீவனுள்ள ஐக்கியம்கொண்டிருக்கிறேன். நான் எல்லா நேரமும் அவருடைய சீடராக்குதலின்கீழும், அவருடைய அபிஷேகத்தின்கீழும் இருக்கிறேன்," என்று அகில உலகத்துக்கும் சாட்சிகூறமுடியும். நாமெல்லாரும் இந்த விஷயத்துக்கு நம் முழுக் கவனத்தையும் செலுத்தவேண்டும். இதுவே தேவனுடைய பொருளாட்சியின் குறி. தேவனுடைய பொருளாட்சியின் இந்தக் குறியை நாம் நம் ஆவியில் தவறவிடுவோமானால், அவருடைய பொருளாட்சி சபையில் எப்படி நிறைவேற்றப்படமுடியும்? நீங்கள் உங்கள் காரை ஓட்டும்போது, எங்கே பெட்ரோல் ஊற்றவேண்டும் என்றும், எப்படி காரை ஓடவிடவேண்டும் என்றும் உங்களுக்குத் தெரியும். இதுதான் காரை ஓட்டுவதின் குறி. அந்தக் குறியை நீங்கள் இழந்துவிட்டால், உங்களிடத்தில் இருக்கும் கார் மிக அழகாக இருந்தாலும் அது ஓடாது.

எனவேதான் எபிரேயர் *4:12* போன்ற வசனங்கள் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையானது ஜீவிக்கிறதாயும், ஊடுருவக்குத்துகிறதாயும் இருப்பதால், அது ஆத்துமாவிலிருந்து நம் ஆவியைப் பிரிக்கிறது. எபிரேயர் புத்தகத்தில் கற்பிக்கப்படும் அனுபவங்களெல்லாம், ஆவியைப் பகுத்துணர்வதின்லம் உணர்ந்துகொள்ளப்படவேண்டும். சகலத்தையும் உள்ளடக்கிய கிறிஸ்து, நல்ல தேசமாக, ஆவியில் இருக்கிறார். மகா பரிசுத்த ஸ்தலத்தில் அவருடைய

வாசஸ்தலமும்கூட நம் ஆவியில்தான் இருக்கிறது. ஆத்துமா விலிருந்து ஆவியை எப்படிப் பகுத்துணர்வது என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், நீங்கள் குறியைத் தவறவிட்டுவிட்டீர்கள். உங்களால் கிறிஸ்துவை அனுபவித்துமகிழமுடியாது. ஒவ்வொரு நாளும், உங்கள் அனுபவத்தில் அறியத்தக்க ஜீவனுள்ள கிறிஸ்துவுடன் நீங்கள் இடைப்படவேண்டும். கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார். அவர் எவ்வளவாய் வாழ்கிறார்! எவ்வளவு நிஜமானவர்! எவ்வளவாய் நடைமுறைக்குரியவர்! நீங்கள் உங்கள் அன்றாடப் போஷாக்காக அவரைப் புசிக்கும்போதும், அவரைக் குடிக்கும்போதும், அவரை விருந்தாய் உண்ணும்போதும், நீங்கள் அவராலும், அவரோடும் பிழைப்பீர்கள். அவரால் தொடர்ச்சியாகச் சீராக்கப்படுவீர்கள், அபிஷேகிக்கப்படுவீர்கள். கிறிஸ்துவை உணவாகப் பிறருக்கு ஊட்ட விரும்பினால், நாம் எல்லா நேரமும் அனுபவிக்கவேண்டியது இதுதான். நாம் கிறிஸ்துவை மக்களுக்கு உணவாய் ஊட்டும்போது, அவர் அவர்களில் கட்டுமானப்பொளாகிவிடுவார். அப்போது கிறிஸ்துவின் சரீரம் படிப்படியாக வளர்ந்து கட்டப்படும். நம் ஆவியில் ஜீவிக்கிற, உள்வசிக்கிற, அனுபவித்து அறியத்தக்க கிறிஸ்துவே தேவனுடைய பொருளாட்சியின் குறி - இந்தப் பரம தரிசனத்தையும், உள்ளான வெளிப்பாட்டையும் காண நம் கண்களைத் திறக்குமாறு கர்த்தரை நோக்கிப்பார்க்கிறேன்.

## கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்க ளுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக் கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

### வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதய முள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி யெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

### விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தென்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலி∴போர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

# விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.